
உ

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்

சதாபிஷேக வரலாறு



லா ஜர்னல் அச்சுக்கூடம்

சென்னை

1936

உ

கணபதி துணை

பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள்

சதாபிஷேக வரலாறு

வெளியிட்டோர்:

வே. சுந்தர ஐயர்

சென்னை: லா ஜர்னல் அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பெற்றது.

1936

பொருளடக்கம்

		பக்கம்
	முகவுரை	iii
1.	நிர்வாக சபையின் அறிக்கை	1
2.	பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்	3
3.	அபிமானிகள் எழுதிய கட்டுரைகள்	21
4.	அபிமானிகள் எழுதிய கடிதப் பகுதிகள்	69
5.	சதாபிஷேகக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள்	81
6.	கொண்டாட்டத்தைப் பற்றி வெளிவந்த பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.	109
7.	கொண்டாட்டத்திற்குப்பின் அபிமானிகள் எழுதிய கட்டுரைகள் ..	116
8.	வாழ்த்துப் பாடல்கள்	171
9.	வாழ்த்துரை	192
10.	பத்திரிகைகள்	194
11.	கடிதம் கட்டுரை முதலியவை எழுதிய அன்பர்கள்	195

முகவுரை

சென்ற வருஷம் மார்ச்சுமீ 6-ஆம் தேதி என்னுடைய தமையனார் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் ஐயரவர்களுடைய சதாபிஷேகக் கொண்டாட்டம் நடைபெற்றதை ஆங்காங்குள்ள தமிழன்பர் பலரும் அறிந்திருப்பர்.

இவர்களுடைய அறுபதாம் ஆண்டு நிறைவடைந்தபோது பல அன்பர்களும் உறவினர்களும் அதனைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்று விரும்பினர்கள். ஆடம்பரமான செயல்களிற் சிறிதும் விருப்பமில்லாத ஐயரவர்கள் அதற்குச் சிறிதும் உடம்படாத தோடு, தம் இல்லத்திலும் ஒன்றும் செய்ய அநுமதிக்கவில்லை. ஸ்ரீகாளஹஸ்திக்குப் போய் இறைவனுக்கு அபிஷேக முதலியன செய்வித்துத் தரிசனம் செய்து மீளும் அளவில் அறுபதாம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டத்தை அவர்கள் நிறுத்திக்கொண்டார்கள்.

அறுபதாம் ஆண்டு நிறைவைத் தக்கவாறு கொண்டாடவில்லையென்ற குறை பல அன்பர்களுக்கு இருந்துவந்தது. இறைவன் திருவருளால் எண்பதாம் ஆண்டுநிறைவைக் கொண்டாடும் சந்தர்ப்பம் வாய்த்தது குறித்து அவர்கள் மகிழ்ந்து தம் விருப்பத்தை ஐயரவர்களிடம் தெரிவித்துக்கொண்டார்கள். இவர்கள் அதற்கும் உடம்படவில்லை. ஆயினும் அன்பு வென்றது. கொண்டாட்ட நிர்வாகசபை ஒன்று ஏற்பட்டது. எண்பதாம் ஆண்டுநிறைவு முதற்கொண்டே சதாபிஷேகம் நடத்தலாமென்று வைதிக முறைகளில் தேர்ந்த பெரியார் பலர் கூறிய வண்ணம் முறைப்படி சதாபிஷேகமும் வீட்டில் நிறைவேறியது.

இக்கொண்டாட்டத்தில் தமிழன்பர்கள் பலவகையாக ஈடுபட்டனர்; பத்திரிகைகளிற் கட்டுரைகள் எழுதியும், ஸ்ரீமத் ஐயரவர்களுக்கும் இக்கொண்டாட்ட சம்பந்தமான பிறருக்கும் வாழ்த்துரைகள் விடுத்தும், அங்கங்கே இக்கொண்டாட்டத்தை நிகழ்த்தியும், வாழ்த்துச் செய்யுட்களைப் படித்தும், பொருளுதவி புரிந்தும், அன்புக்கு அறிகுறியாக நன்கொடைப் பொருள்கள் வழங்கியும், பிறவாறும் தங்கள் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்; பத்திரிகை ஆசிரியர்களும் கொண்டாட்டத்திற்கு முன்பும் பின்பும் தலையங்கங்கள் எழுதிப் பாராட்டினர்கள்.

தமிழ்நாட்டினர் ஒருமுகப்பட்டு ஆதரித்துக் கொண்டாடிய இவ் வைபவத்தைப் பற்றி ஒரு வெளியீடு வெளிவரின் நலமாக இருக்குமென்று பல அன்பர்கள் விரும்பியபடி இது வெளியிடலாயிற்று. இதன்கண், எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாட்ட நிர்வாக சபையாரின் அறிக்கையும், பத்திரிகாசிரியர்களின் அன்புரைகளும், அபிமானிகளின் கட்டுரைகளும், அன்பர்கள் கடிதங்களுள் முக்கியமான சிலவற்றின் பகுதிகளும், தமிழ் நாட்டிலும் பிறநாட்டிலும் கொண்டாட்ட தினத்தன்று நிகழ்ந்த நிகழ்ச்சிகளின் சுருக்கமும், வாழ்த்துச் செய்யுட்களும் அடங்கியுள்ளன. இயன்றவரையில் ஆராய்ந்து தொகுத்தவை இதில் உள்ளன; இதன்கண் சேர்க்கப்படாமல்போன கட்டுரைகளும் செய்யுட்கள் முதலியனவும் சில இருத்தல் கூடும்.

கொண்டாட்ட தினத்தன்று சென்னையில் ஸ்ரீமத் ஐயரவர்களுக்குப் படித்துக் கொடுக்கப்பட்ட உபசாரப்பத்திரங்கள் தனியே புத்தக உருவத்தில் அச்சிடப் பெற்றிருத்தலின் அவை இதிற் சேர்க்கப்படவில்லை.

இது பல அன்பர்களுடைய உள்ளத்தைத் தொகுத்துக் காட்டும் ஒரு கண்ணாடி; தமிழன்பு தமிழ்நாட்டில் ஒருமுகப்பட்டு இருப்பதற்கு அடையாள மலர்; 'உழைப்பின் பெருமையை உலகமறிந்து பாராட்டுவதற்கையமில்லை' என்ற உண்மையை வெளியிடும் நூல்.

இம் மலரில் வெளிவந்துள்ள கட்டுரைகளையும் கடிதங்களையும் வாழ்த்துச் செய்யுட்களையும் எழுதிய அன்பர்களுக்கும், கட்டுரை முதலியவற்றை வெளியிட்டும் தாமே தலையங்கம் எழுதியும் உதவிய பத்திரிகாசிரியர்களுக்கும், ஆங்காங்கே கொண்டாட்டத்தை நடத்திய அபிமானிகளுக்கும் எங்கள் குடும்பத்தாரின் மனமார்ந்த நன்றியறிவு உரியதாகும்.

இவ்வளவுக்கும் காரணமாக இருந்தது இக்கொண்டாட்ட நிர்வாக சபையாரின் பெருமுயற்சியேயாகும். அவர்களுடைய ஊக்கமும் உள்ளன்பும் தமிழ்நாடு முழுவதும் இக்கொண்டாட்டத்தை நடத்திக் களிக்கச் செய்தன. அவர்களுடைய பேரன்பைப் பாராட்டி எங்கள் நன்றியறிவைத் தெரிவிக்கும் கடமையை யன்றி வேறு யாது செய்ய வல்லேம்!

சென்னையில் நடந்த கொண்டாட்டத்தில், ஐயரவர்கள் நன்றியுரை கூறியபொழுது,

> " இப்போழுது என்னுடைய மனம் சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. இறைவன் தரிசனம் அளித்ததைச் சொல்லும்போது, 'சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி' என்று சேக்கிழார் கூறியது நினைவுக்கு வருகின்றது. மீண்டும் இளமை வந்தாற்போன்ற ஊக்கம் உண்டாகின்றது. இன்னும் நான் செய்ய எண்ணியிருக்கும் பல தமிழ்ப்பணிகளும் இடையூறின்றி நிறைவேறும், தமிழர் ஆதரவுகிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்படுகிறது"

என்று மகிழ்ச்சியுற்றுப் பேசினார்கள். அவர்களுடைய விருப்பம் நிறைவேறும்படியும், தமிழன்பர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்துதற்குரிய இத்தகைய கொண்டாட்டங்கள் பல நிகழும்படியும் இறைவன் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

திருவேட்டீசுவரன் பேட்டை,
'தியாகராஜ விலாசம்',
25—5—1936.

இங்ஙனம்,
வே. சுந்தர ஐயர்.

நிர்வாக சபையின் அறிக்கை

ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா.

தலைவர்: கனம். பி.டி. ராஜன்.
காரியதரிசிகள்: தி. சிவராமசேதுப்பிள்ளை.
பெ. நா. அப்புஸ்வாமி.
எஸ். வையாபுரிப்பிள்ளை.
போக்கிஷதார்: ராவ் பஹதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்.

சென்னை.

1935-ஆம் ஹூ பிப்பிரவரி மீ 6உ

அன்பார்ந்த ஐயா,

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு 1935-ஆம் ஹூ மார்ச்சுமாதம் 6-ஆம் தேதி எண்பதாவது ஆண்டு பூர்த்தியாகின்றது.

நம்முடைய தமிழ்மொழியும் தமிழ் இலக்கியமும் அபிவிருத்தி யாவதற்கு அறுபது ஆண்டுகளாக ஐயரவர்கள் மதிப்பரிய தொண்டுகளைச் செய்துவந்திருப்பதை யாவரும் நன்கறிவர். தம்முடைய மெய்வருத்தங்களை ஒரு சிறிதும் பொருட்படுத்தாமல், தனியாகவே இருந்து சங்ககாலத்து அரிய பெரிய நூல்களைப் பாதுகாத்து ஆராய்ந்து பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கும் பெருஞ் செயலைச் செய்திருக்கிறார்கள்.

அவர்கள் செய்துள்ள பேருதவியினாலேயே பண்டைத் தமிழரின் நாகரிகத்தையும் பெருமையையும் நாம் இப்பொழுது அறிந்திருக்கிறோம். நமது தொன்மையைக் குறித்து நாம் நியாயமாகப் பெருமை பாராட்டிக் கொள்வதற்கு அவர்களே முக்கிய காரணமாக உள்ளார்கள் அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள ஒப்புயர்வற்ற தொண்டுகளைத் துரைத்தனத்தாரும் சர்வகலாசாலையாரும் நன்கு மதித்து மஹாமஹோபாத்தியாயர், டாக்டர் என்னும் பட்டங்களை அவர்களுக்கு அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பாஷாபிமானிகளும் கல்வியின் மேம்பாட்டைக் கருதுவோரும் தமிழ்ப்பெரியாராகிய ஐயரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாட விரும்புவார்கள் என்பது திண்ணம்.

பிறநாடுகளிலே கல்வித்துறைகள் பலவற்றில் மேம்பாடுற்ற பெரியார்களின் வாழ்க்கையில் இவ்வகையான சந்தர்ப்பங்களை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாகக் கட்டுரைத் தொகுதிகளை வெளியிட்டு, உருவச்சிலைகளை நிறுவி, உபகார நிதிகளையும் அமைத்துப் பலவாறுகப் பாராட்டுகிறார்கள்.

தமிழ்மக்களுக்கு ஐயரவர்களிடமுள்ள நன்றியறிவைப் புலப்படுத்துவதற்கும், சிறந்த பாஷாவிற்பன்னராகவும் போதகாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் இருந்து நெடுங்காலமாக அவர்கள் செய்துவரும் அருஞ் செயல்களைப் பாராட்டுவதற்கும் இது தக்க சமயமாகும்.

ஆதலால் மார்ச்சு மாதம் 6-ஆம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப்பத்திரம் ஒன்று அளித்தும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச்

சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் தூற்பதிப்பு வேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கு ஒத்தபடி வேறு உசிதமானவற்றைச் செய்தும், அவர்களை இச்சமயம் பாராட்ட எண்ணியிருக்கிறோம்.

அந்த விழாவிலே தாங்களும் கலந்து கொள்வீர்களென்று நம்புகிறோம். தங்கள் உடன்பாட்டையும் தங்களுடைய கருத்துக்களையும் தெரிவிப்பதோடு தங்களாலான பொருளுதவியையும் செய்யும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

பணம் அனுப்ப விரும்புவோர்கள் மயிலாப்பூர், வடக்குமாடவீதியிலுள்ள ஸ்ரீமான் ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயரவர்களுக்கு அனுப்பலாம். பொருளுதவி செய்வோரின் கூட்டமொன்று மார்ச்சு மாதம் முதல்தேதி வெள்ளிக்கிழமை மாலை 5¼-மணிக்குத் தேனும்பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில், தலைவர் கனம் பி. டி. ராஜனவர்கள் வீட்டில் நடைபெறும். தாங்கள் அச்சமயம் வந்திருந்து விழாவைச் சிறப்பாக நடத்துவதற்கு வேண்டியனவற்றைச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

இப்படிக்கு,
பி. டி. ராஜன்
(தலைவர்.)
டி. சிவராமசேதுப் பிள்ளை
பே. நா. அப்புஸ்வாமி
எஸ். வையாபுரிப் பிள்ளை
(காரியதரிசிகள்.)
கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்
(பொக்கிஷதார்.)

The Mahamahopadhyaya Dr. V. Swaminatha Ayyar's EIGHTY-FIRST BIRTHDAY CELEBRATION

Chairman: The Hon. Mr. P. T. Rajan.
Secretaries: Mr. T. Sivaramasetu Pillai.
Mr. P. N. Appuswami.
Mr. S. Vaiyapuri Pillai.
Treasurer: Rao Bahadur K. V. Krishnaswami Ayyar.

Madras, 6th February, 1935.

DEAR SIR,

Mahamahopadhyaya Dakshinatya-kalanidhi Dr. V. Swaminatha Ayyar will be attaining his Eighty-first Birthday on 6th March, 1935.

As you are doubtless aware, for over sixty years now he has been rendering inestimable services to the cause of our language and its literature. He has accomplished, single-handed and at enormous personal sacrifice, the work of rescuing, deciphering, editing and publishing the great classics of the Golden Age of Tamil Literature, with the result that our conception of the culture of the ancient Tamils is very different to-day from what it was when he began his life's work. To him more than to any other single individual it is owing, that we have just historical grounds for taking high pride in our past. The uniqueness of his services to Tamil studies has been both officially and academically recognised and he is the only Tamil scholar who is both a Mahamahopadhyaya and a Doctor of Literature *honoris causa*. All who care for Tamil, and for higher culture in general, must be eager to celebrate in a worthy manner the Eighty-first Birthday of this doyen of Tamil studies.

In other countries and in the lives of scholars in other languages and sciences, similar occasions are being celebrated on a magnificent scale by the publication of memorial volumes, the erection of statues, the founding of endowments and so forth. The gratitude of the Tamil public to the Mahamahopadhyaya and its appreciation of his long and distinguished work as scholar, teacher and editor may well be signalised on this occasion and his services commemorated by presenting him with an address on Wednesday the 6th March, 1935, by installing a portrait of him in the Madras University, by arranging to continue his work of publication of Tamil classics and by such other means as contributors might decide upon.

May we request you to express your willingness to join in these celebrations, to send in at an early date any further suggestions you may have to make, and to remit a generous contribution to the Treasurer, Rao Bahadur K. V. Krishnaswami Ayyar, 6, North Mada Street, Mylapore.

A meeting of the donors will be held at the residence of the Chairman, Mowbray Road, Teynampet, at 5-15 P.M. on Friday, 1st March, 1935. We hope you will make it convenient to be present and so contribute to the success of the celebration.

Yours Sincerely,
P.T. RAJAN
(*Chairman.*)
T. SIVARAMASETU PILLAI
P. N. APPUSWAMI
S. VAIYAPURI PILLAI
(*Secretaries.*)
K.V. KRISANASWAMI AYYAR
(*Treasurer.*)

பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்

டாக்டர் உ. வே. சாமிநாதையர்

நம் நாட்டினருடைய சராசரிவயதைக் கவனிக்கையில் 80-வயது வரையில் ஒருவர் ஜீவித்திருப்பதென்பது ஒரு பெரிய அதிசயமாகும். மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையருக்கு வருகிற மார்ச்சு மாதம் 6-ஆம்தேதி 80-ஆம் ஆண்டு பூர்த்தியாகிறது. அவர் தமது வாழ்நாள் முழுவதையும் தமிழ்த்தாயின் தொண்டிற்கே அர்ப்பணம் செய்திருக்கிறார். மேலுட்டு நாகரிக மோகத்தால் தாய்ப்பாஷையில் அலட்சிய புத்தி ஓங்கியிருந்தும் தமிழன்னை சிரும் சிறப்பும் குன்றுமலிருந்துவரின், டாக்டர் ஐயர் செய்துள்ள அருந்தொண்டு அதற்கு ஒரு முக்கிய காரணமாகும். ஆகையால் அவருடைய 80-ஆவது ஆண்டு நிறைவு தமிழ் நாட்டிற்கு ஒரு சுதினமாகும். இதைக் கொண்டாடுவதன் சம்பந்தமாகத் தலைவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை யொன்றை இன்று வேறிடத்தில் பிரசுரித்துள்ளோம். அன்று அவருக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கவும், அவருடைய உருவப்படத்தைத் திறந்துவைக்கவும், அவர் நடத்திவரும் நூற் பதிப்பு வேலை குறைவின்றி என்றென்றும் நடை பெறுவதற்கு வகை தேடவும், மற்றும் பொதுஜன சகாயத்திற்குத் தகுந்தபடி ஆவன செய்யவும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த நோக்கங்கள் கைகூடுதற்குத் தமிழ்மக்கள் தங்கள் தங்களால் இயன்ற எல்லா உதவிகளையும் செய்வார்களென்று நாம் நம்புகிறோம். —சுதேசமித்திரன்-6-2-35.

The eighty-first birthday of Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar falls on the 6th March next. It is proposed to celebrate the occasion by unveiling a portrait of the Mahamahopadhyaya and presenting him with an address in appreciation of his labours in the cause of the promotion of the study of classical Tamil literature. As the Birthday Celebration Committee observe, the Mahamahopadhyaya has accomplished, "single-handed and at enormous personal sacrifice the work of deciphering, editing and publishing the great classics of the Golden Age of Tamil literature, with the result that our conception of the culture of the ancient Tamils is very different to-day from what it was when he began his life's work." The Committee appeal for adequate financial aid to enable the work of publication of Tamil classics to be continued. We trust lovers of Tamil will co-operate with the Committee in celebrating the birthday in a fitting manner. —*The Hindu-7-2-35.*

ஆதரிக்கிறோம்

மகா மகோபாத்யாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு, வருகிற மார்ச்சுமீ எண்பது ஆண்டு பூர்த்தியாகிறது. அந்தச் சம்பவத்தை, தமிழர்கள் அனைவரும் பெரு மித மனமகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டு வது அவசியம். இது சம்பந்தமாக, வேறோர் இடத்தில் அறிக்கையொன்று பிரசுரமாயிருக் கிறது. அறிக்கையில் கண்ட ஒவ்வொரு எழுத்தையும் நாம் ஆதரிக்கிறோம். ஸ்ரீமான் ஐயர் அவர்கள் தமிழ்மொழிக்கு ஆற்றி யிருக்கும் தொண்டை அளவிட்டுச் சொல்லு தல் முடியாது. நம்முடைய மகிழ்ச்சி யென்ன வெனில், ஐயர் அவர்களுடைய எண்பதா வது வயதிலேனும், ஐயர் அவர்களைப் பாராட்ட வேண்டுமெனத் தமிழர்கள் எண் ணங் கொண்டதுதான். பண்டைத் தமிழ் நூல்கள்—அருமையான, அழகு வாய்ந்த தமிழ் நூல்கள்—ஐயர் அவர்களின் ஊக்க மில்லாமற் போயின், வெளிவந்து, அச்சு ஏறி, தமிழர் பலருக்கு உபயோகப்பட்டிருக்க மாட்டா. பழுத்துக் கனிந்திருக்கும் பெரும் புலவரின் எண்பதாவது ஆண்டுவிழாவைத் தக்க வகையில், விமரிசையுடன் கொண்டாட வேண்டும் என்று கனம் மந்திரி பி. டி. ராஜன் உள்ளிட்ட தமிழபிமானிகள் வெளியிட்டிருக் கும் அறிக்கையை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம். —சுதந்திரச்சங்கு-9-2-35.

ஓர் தமிழ்ப்பெரியாரின் ஜனனவிழா

அடுத்தமாதம் 6-ஆம் தேதி சென்னையில், தமிழ்ப்பாஷையின் விருத்தியை நோக்கிச் சென்ற 60 வருடங்களாக இடைவிடாது உழைத்துவந்த பிரமஶ்ரீ உ. வே. சாமிநாதை யரின் 81-ஆவது ஆண்டு ஜனனவிழா மிக விமரிசையாக நடத்தப்பட விருப்பதாக அறி கின்றோம். அப்போது அவரது உருவப்படம் திறந்துவைக்கப்படுவதோடு அவருக்கு ஓர் உபசாரப்பத்திரமும் வாசித்துக் கொடுக்கப் படுமென அறிகின்றோம். இவ்வளவு நீண்ட காலத்துக்குச் சலியாது மிக்க முயற்சியுடன் தமிழ்த்தாயின் பெருமையை நாடியுழைத்த வர்கள் இல்லையென்று கூறினும் சாலும். பழமையடைந்து வெளிப்படாது மறைந்து கிடந்த எத்தனையோ இலக்கிய இலக்கணங் களை அச்சுவாகனம் ஏறச்செய்த பெருமை இவருக்கே யுரியது. இற்றைக்கு ஐம்பது வருடங்கட்குமுன் தமிழினதும் சைவத்தின தும் உயர்ச்சியை நாடியமைந்த யாழ்ப்பாணத் துப் பெருமக்களுக்கும் இவர்க்குமிடையில் சிறிது துவேஷம் இருந்துளதாயினும் அது பிற்காலத்தில் முற்றுகத் தொலைந்துவிட்ட தாக எண்ணினேம். ஆனால் மேற்படி ஐயரவர் கள் மனத்தை விட்டு அவை யகன்றிலவென இவர் வெளியிட்ட நூல்கள் சில காட்டி நின்றன. எப்படியாயினும் இப்பெரியார்

தமிழ்நாட்டிற்குச் செய்த பரோபகாரத் திற்குக் கைம்மாறியாது? அச்சிட்ட புத்தகங் களே யெல்லாம் நன்காராய்ந்து வேண்டிய அநேக விஷயங்களைச் சேர்த்து வாசிப்போர்க் குப் பெரும் உதவிபுரிந்துநின்ற இவர்க்குத் தமிழ் மணஞ்செறிந்தவிடங்களில் வாழ்வோர் பன்முறையும் துதிகூறவேண்டியவராகின்ற னர். தமிழ்நாட்டில் இவரை யறியாதாரில்லை யெனலாம். ஆழ்ந்த அநுபவமும் பரந்த அறிவும் தமிழில் இவரைப்போல் கைவரப் பெற்றவர் வேறு யாவருளர்? இப்பெருமை வாய்ந்த மகாமகோபாத்தியாயரவர்கள் இன் னும் பல்லாண்டுகட்கு வசித்துத் தேசத்தின தும் பாஷையினதும் பெருமையை விளக்கி நிற்பாராக. —சுழகேசரி-10-2-35.

தமிழறிஞரின் 80-ஆவது ஆண்டுப் பூர்த்திவிழா

தமிழ்நாட்டு அறிஞர், தருப்பிடித்த ஏட் டுப் பிரதிகளை ஆராய்ந்து அச்சிட்டுப் பரோ பகாரமாக வெளியிட்ட வித்வச்சிரோமணி, எமது பண்டைய மேன்மையைக் சகலருக்கும் உணர்வித்த பண்டிதமணி மகாமகோபாத்தி யாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்களின் 80-ஆவது ஆண்டு நிறைவுவிழா இன்னும் சில நாட்களில் கொண்டாடப்படுவதறிந்து பெரு மகிழ்வுறு கின்றோம். தமிழ்த்தாய்க்கு அருந்தொண்டு புரிந்து தமிழ்மக்களைத் தட்டி யெழுப்பிய பெருமை ஐயர் அவர்களுக்கு உரியது என்று கூறல் மிகையாகாது. இப்பெரியாரின் 80-ஆவது ஆண்டுப் பூர்த்திவிழாவின்போது, அதன் ஞாபகார்த்தமாகத் தமிழ்மொழி வளர்ச்சிக்கேதுவான ஏதும் கர்மம் ஆற்ற வேண்டும் என்பதே எமது அவா. பிரமஸ்ரீ ஐயர் இன்னும் பன்னெடுங்காலம் வாழ்ந்து தமிழ்மொழிக்கு அநேக தொண்டுகள் ஆற்ற இறைவன் அருள் பாலிப்பாராக.

—இந்துசாதனம்-11-2-35.

டாக்டர் சாமிநாதையர்

தமிழ்நாட்டின் இலக்கியச் செல்வம் அழிந்து போகாதவாறு பாதுகாத்துத் தந்த வர்களுள் மகாமகோபாத்தியாய உ. வே. சுவாமிநாதையரும் ஒருவர். அவருக்கு 6-3-35 தேதியோடு 80-ஆவது ஆண்டு பூர்த்தியாகிறது. அந்த ஆண்டுவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடவும், ஞாபகார்த்த நிதி திரட்டவும் தமிழறிஞர் சிலர் முன் வந்திருப்பதைப் பாராட்டுகின்றோம்.

ஸ்ரீ தாக்ஷிணாத்யகலாநிதி சுவாமிநாதையர் வெளியிட்டுள்ள பழந்தமிழ்நூல்கள், அவரது பெயர் நீண்டகாலம் தமிழகத்தில் உலவுமாறு செய்யுமெனின், அவரது காலத்திலேயே இப் பெருந் தமிழ்க்கிழவருக்குத் தமிழகம் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

டாக்டாவர்கள் இன்னும் நீண்ட காலம் ஆயுளோடிருந்து அவரது அரிய தமிழ்த் தொண்டை ஆற்றுவாராக!

—தினமணி-14-2-35.

நீடு வாழ்க

தமிழகத்தே இந்நாளில் மாப்பெரும் புலவராக விளங்குகின்ற மகாமகோபாத்தி யாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிடவித்யா பூஷணம் பிரமஸ்ரீ உத்தமதானபுரம், வே. சாமிநாத ஐயரவர்களுக்கு, சமீபகாலத்தில் எண்பதாம் ஆண்டு நிறைவுத் திருவிழா நடை பெறவிருக்கிறது. அந்நாளை ஒரு தமிழ்த் திருநாளாகத் தமிழகத்தார் அனைவரும் கொண்டாடும் உரிமையுடையராவர். நம் நாட்டிலே வடநாட்டுப் பெருமக்களாகிய மஹாகவி ரவீந்திரநாத தாகூர், பிரபுல்ல சந்திரராய், மதன்மோகன மாளவியா என் னும் நல்லோரது விசேஷ வார்ஷிக மஹோத் ஸவங்களிலே பல நாட்டு மக்களும் உற்சாகத் தோடு கலந்து தத்தமால் இயன்ற பணிபுரிந்து அரும்பொருளுரை பல அடங்கிய புத்தகங் கள் வெளியிட்டதை நாம் அறிவோம். அங்ங னம் பெறும் தகுதியுடையார் தமிழகத்தே

இந்நாளில் நம் மாப்பெருந் தமிழ்க்கிழவரே என்று துணிந்து கூறுவோம். அயல் மொழிகளுக்கும் அயல்நாட்டு ஆராய்ச்சி முறைகளுக்கும் விஞ்ஞானக் கலைவளர்ச்சிக்கும் மிக்க ஊக்கம் பிறந்து வளரும் இந்நாளிலே நம் தமிழ் மக்களின் பண்டைப் பெருமையை உண்மையாக உலகம் அறியச்செய்யும் தமிழ்ப்பணியைப் பிறர் உதவி பெரிதும் இன்றி அறுபதாண்டுகளுக்கு மேலாக இயற்றிவந்திருக்கும் ஐயரவர்களுக்கு அறிவுலகம் மிகவும் கடமைப்பட்டதாகும்.

இப்பெரியோரது உண்மைப் பெருமையைத் தமிழ் வழங்கும் நாடுகள் மட்டில் அறிந்திருப்பதாக எண்ணுதல் கூடாது. இன்று தமிழ் நூல்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைத் துணிந்தெழுதும் மேனாட்டு நிபுணர் ஒவ்வொருவரும் தம் நூல்களிலே இன்னவர் உழைப்பின் உயர்வைப் பாராட்டாதிருப்பதில்லை. ஆங்கிலமொழியின் மூலமாகப் பல நாட்டாரும் அறியும்படி தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சி நூல்களை எழுதி வெளியிடும் அறிஞர் பலரும் நம் தமிழ்க்கிழவர்க்குப் பல்லாற்றானும் கடமைப்பட்டவராயிருத்தலைத் தத்தம் நூல் முகவுரைகளிலே கூறியிருக்கின்றனர். கேம்ப்ரிட்ஜ் ஸர்வகலாசாலையார் வெளியிட்டு வருகின்ற தென்னிந்திய மக்கள் வாழ்க்கைச் சரித நூற்றொகுதியிலே நம் தமிழ்த்தலைவர் பணியின் தகுதியும் உயர்வும் பலபடியாக எடுத்துப் பேசப்படுகின்றன.

இந்நல்லோர்க்கு நம் அரசாங்கத்தார் பல வாண்டுகளின் முன்னே, அன்றும் அதற்குப் பின்னும் தமிழ்ப்புலவர் எவர்க்கும் கொடுக்கப் பெறுத, மகாமகோபாத்தியாயர் என்ற பட்டத்தை உதவினர். இப்புலவர் தமிழ்ப் பணி ஒப்பற்ற சிறப்புடையது என்பதை விளக்கச் சமீபகாலத்திலே நிகழ்ந்ததோர் சென்னைச் சர்வகலாசாலைப் பெருங்கூட்டத்திலே இன்றளவும் ஆங்கிலம் அறியாதவர்க்கு அளிக்கப்பெறுத டாக்டர் என்ற பட்டத்தை இவர்க்குச் சூட்டி மகிழ்ந்த பெருமையைத் தக்கதோர் சான்றாகக் குறிப்பிடலாம். இன்றளவும் தமிழ்ப் புலவருள், மகாமகோபாத்தியாயரும் டாக்டரும் இப்பெரியோர் ஒருவரே. பாரத தர்ம மகாமண்டல மகாசபையாரும், காமகோடி பீடாதிபதிகளும் வேறு இரண்டு பட்டங்கள் இவர்க்குக் கொடுத்துள்ளனர். அச்சிறப்பும் இன்றளவும் பிறர்பெறுதவையே.

இவ்வளவு பெருமை பெற்றுமாறு இப்பெரியோர் செய்துள்ள பணியைப்பற்றி இங்குச் சிறிது கூறுதல் அவசியமாகும். அச்சுத் தொழிலின் உதவியால் புத்தகங்களைப் பல பிரதிகளாக்கிப் பலர்க்கும் பயன்படுத்தலாம் என்பது இந்நாளில் யாவரும் அறிந்த உண்மையே. தமிழ்மொழியின் பண்டைப் பனுவல்களாய், ஆழ்வார் திருநகரிப்புலவர் மனைகளிலும், மிதிலைப்பட்டிப்புலவர் அகங்களிலும், திருவாவடுதுறை தருமபுரம் முதலிய மடங்களிலும் அடங்கிக்கிடந்த அரும்பொருட்பேழைகள் பல இன்று தமிழ கத்தார்பலர் கையிலும் நின்றும் இருந்தும் பயன்படுவது இப்பெரியோர் முயற்சியினாலே யேயாகும். ஏடுகளிலே உள்ள எழுத்து முறை வேறு; இந்நாளில் நாம் காணும் அச்செழுத்து முறை வேறு. ஏடுகளின் பழமைக் கேற்ப அவற்றின் பெருமையும் சிறப்பும் அதிகமாகும். எழுத்துக்களைக் கூர்ந்து பார்த்துப் படித்து உண்மை யுருவம் காணுதல் பழைய ஏடுகளிலே பயின்றோர்க்கன்றிப் பிறர்க்குத் தெரியாது. அத்தகைய பழைய ஏடுகளைப் பல நாடுகளுக்கும் சென்று சேகரித்து, உண்மைப்பாடம் காணப் பலவாண்டுகள் உழைத்து ஒவ்வொரு நூலும் வெளியிடப்பட்டது. மூலப் பிரதிகள் சில, உரைப் பிரதிகள் சில, மூலமும் உரையும் உள்ள பிரதிகள் சிலவாய் வைத்துக்கொண்டு இப்புலவர் முயன்ற முயற்சி அச்சுப் புத்தகத்தையே பார்த்துப் பயின்றிருக்கும் நமக்கு எளிதில் விளங்குவதன்று. பத்துப்பாட்டு என்ற சங்கச் செய்யுளிலே இரண்டு பாட்டுக்களுக்கு மூலமே அகப்படாமல் உரையைக்கொண்டே மூலத்தைக்கண்டு வெளியிட்ட இந்நல்லோர் முயற்சியைத் தமிழுலகு என்றும் நினைவில் வைத்து நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுச் சரித்திரத்தை அறியப் பெருஞ்சாதனமாய் உள்ள, புறநானூறு, பரிபாடல், ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து என்ற சங்கச் செய்யுட்கள் ஆராய்ச்சிக் குறிப்புக்களோடும் புலவர் வரலாற்றுக் குறிப்புக்களோடும் வெளியாகியிருப்பது, இப்புலமைச் செல்வர் பெருமுயற்சியால் என்பதைத் தமிழறிஞர் அனைவரும் அறிவர். ஐம்பெருங்காப்பியங்களிலே தமிழர் தவப்பேறாக முழுவுருவத்தோடு இன்றளவும் வந்திருக்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி என்ற மும்மணிகளும் இப்பெரியோர் தமிழ்ப்பணிக்கு

மலையிலக்காம் என்பதை அறியாதார் யார்?

நன்னூல் மயிலைநாதர் உரை, சங்கரநமச்சி வாயர் உரை என்ற பெயர்களையே கேளா திருந்த காலம் மிகவும் சமீபத்திலேயே இருந்தது. ஐயரவர்கள் முயற்சியால் இவ்விரு உரைகளும் வெளிவந்த பிறகு நன்னூலின் பெருமை பின்னும் வளர்வுற்றது. இம் மட்டோ! இவர்கள் வெளியிட்டுள்ள சிறு பிரபந்தங்கள் எத்துணைய என்று எண்ணுதல் எளிதன்று. சென்னை நகரத்துக் கலைமகள் பத்திரிகையும் இத்துறையில் இவர்க்கு உதவி புரிகின்றது. இவை எல்லாவற்றினும் மேலாகத் தமது தமிழாசிரியராகிய திரிசிரபுரம் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களது தமிழ்ப்பணியின் மாண்பை இவ்வுலகம் நன்குணருமாறு இவர் வெளியிட்டுள்ள மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு, திருப்பெருந்துறைப் புராணம், மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முதலிய நூல்கள் இவரது நன்றியறிவை நன்கு விளக்குகின்றன.

இன்று எண்பதாண்டு நிரம்பப் பெற்றிருக்கும் இப்பெரியார் தமிழ்ப்பணி நிலையான சிறப்பைப் பெறவும், தமிழகத்தாராகிய நாம் இவரது பணியை உண்மையில் அறிந்து பாராட்டுகின்றோம் என்பதை உலகம் அறியவும் இப்பொழுது ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் ஒவ்வொரு தமிழபிமானியும் தமிழறிஞரும் தமிழ்மாணவரும் பிறரும் இவ்வெண்பதாம் ஆண்டு நிறைவு விழாவிற்குப் பயன்படுமாறு தம்தம் மனநிலைக்கும் பாஷாபிமானத்தின் அளவுக்கும் ஏற்றவாறு பொன்னாலும் பொருளாலும் உதவி புரிய முன்வர வேண்டுகின்றோம். இந்த ஸந்தர்ப்பத்தில் பயன்படும் பொருள் தமிழ்மகள் திருக்கோயிலில் நந்தா விளக்கு ஏற்றிவைக்கும் பெரும்பணிக்கு உதவும் என்பதை ஒவ்வொரு தமிழரும் அறியவேண்டும். சென்னைப் பிரமுகர் சிலர் இவ்விஷயமாய் வெளியிட்ட வேண்டுகோட் பத்திரத்தை மற்றொரு பத்தியிற் பிரசுரித்திருக்கின்றோம். அதை ஒவ்வொருவரும் பார்த்துத் தம் சக்திக்கு மீறியும் இம் முயற்சியில் உதவிபுரிய முன்வருவார்கள் என்று நம்புகின்றோம். தமிழ்த்தாயின் தவப் புதல்வராகிய இம்மாப்பெருங் கிழவர் இன்னும் பல்லாண்டு நல்வாழ்வு பெற்றுத் தமிழ்ப் பணி புரிந்து வருமாறு இறைவன் திருவருள் புரிவானாக.—ஜனமித்திரன்-15-2-35.

LONG LIVE THE TAMIL VETERAN!

தமிழ்த் தொண்டர் வாழி!

"புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை வாய்மையாற் காணப் படும்."

உலகம் போற்றும் உத்தமரான 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு, எல்லார்க்கும் பெய்யு மழை' என்று உரைத்த நம் நாட்டுப் பெரியாரது நன்மொழிக் கிலக்காக நம்மவர் ஒருவர்க்குக் கிடைத்த கௌரவம் நற்கௌரவ மென்றே மதித்தல் தகுதியும் முறைமையும் ஆகும். நற்கௌரவம், நல்லிணக்கம், நன்மை கடைப்பிடிக்குந் தன்மை, நாட்டாரின் நன்மைதீமைகளைப் பற்றிய விசாரணை, சீரிய கொள்கைகள் ஆகிய இவையுள்ளவர்களையே பெரியாரென நாம் போற்றிப் புகழ்ந்து கொண்டாடுகிறோம். அத்தகைய உத்தமர்களின் உழைப்பையும் பெருமையையும் குறித்துப் பேசநேரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நமக்கு உற்சாக முண்டாவது இயல்பு.

தெய்வத்தைப் போற்றிப் பாராட்டுவதனால் இம்மையிலும் மறுமையிலும் நற்பயன்கள் வாய்க்குமென ஆஸ்திகர் அனைவரும் நம்புகிறார்கள். ஆனால், தெய்வத்தைத் தொழுவதல்லாமல் தெய்வத் தொண்டரைப் போற்றுவதனால் மிக்க நற்பயன்கள் விளையுமென்பது அவ்வாஸ்திகர்களுள் நூற் பயிற்சியுள்ளோர்க்கே தெரியும். இவர்கள் மூலமாக மற்றவர்களும் தெரிந்து நாயன்மார்களையும் ஆழ்வாராதிகளையும் அடியார்களையும் போற்றிப் பெரிதும் பாராட்டுகின்றனர். தமிழ்த் தெய்வத்தைப் பாராட்டுவது நம்மவர்க்கு இயல்பு. இந்தத் தென்னாடு அவருக்கே உரியதென்றும், அவரே இதற்கு அதிபதி என்றும்

சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. இந்தத் தென்னாட்டிலுள்ள அளவு ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியின் பெருமை இந்தியாவின் பிற பகுதிகளில் பாராட்டப்பெறுவதில்லை. இந்தப் பெயரும் அவர்களுக்குப் புதுமையாகத் தோன்றும். சோதிடநூல்களில் இந்தியாவைப் பல பல பகுதிகளாகப் பகுத்து ஒவ்வொரு கிரகம் ஒவ்வொன்றுக்கு அதிபதி எனக் கூறுமிடத்து, சூரியசந்திரர்களுக்கு உலகெலாஞ் சொந்தம்; இப்பரதகண்டத்தில சனி இராகுகளுக்கு இமயம் முதல் கேகய நாடு வரையிலும், புதனுக்குக் கேகயநாடு முதல் விந்தியமலை வரையிலும், குருவுக்கு விந்தியகிரி முதல் கௌதமீ நதி வரையிலும், சுக்கிரனுக்குக் கௌதமீ நதிமுதல் கிருஷ்ணை நதி வரையிலும், செவ்வாய்க்குக் கிருஷ்ணை நதி முதல் லங்கை வரையிலும் எனக் குறிப்பிட்டிருக்கின்றனர். இவ்விடத்தில் செவ்வாய் என்னும் கிரகமே ஸ்ரீ சுப்பிரமணியருடைய பிரதிநிதியாகும். இவருக்குரிய ஷஷ்டி, கிருத்திகை, விசாகம் முதலான விரதங்கள் அநுஷ்டிப்பதும், காவடிகள் எடுப்பதும் இந் நாட்டிலே காணுமல்லாது வேறு பிரதேசங்களில் இல்லை. இவ்வாறு தமிழ்த் தெய்வத்தைக் கொண்டாடுவதனல் நமக்கு வாய்க்கத்தக்க இம்மை மறுமைப் பயன்களைக்காட்டிலும் தமிழ்த் தொண்டரைப் போற்றுவதனல் மிகப் பெரும் பேறுகள் நமக்கு வாய்க்கு மென்பது திண்ணம். பொதுவாகக் கலைமகளை ஆராதிக்காத பிற தேசத்தாரும் பிற மதத்தாரும் கலைமகளின் தொண்டர்களாகிய கவி வாணரையும் விற்பன்னரையும் மிக மிகக் கொண்டாடி, அவர்களுடைய ஞாபகம் எந் நாளும் எல்லா ஜனங்களுக்கும் இருக்கத்தக்க வழிகளில் அவ்வித்துவான்களுடைய அருமை பெருமைகளைப் பத்திரிகைகளின் வாயிலாகவும் புத்தகங்களின் வாயிலாகவும் சில்சித்திர வடிவமாகவும் ஓவியங்களாகவும் நிறுவி, தமது நன்றிக்கு ஏற்றவாறு நற் பெயரும் பெருமையும் பல்வகைப் பேறும் படைத்துள்ளார்.

அவர்களைப் பின்பற்றியேனும் நம் நாட்டார் தமிழ்த் தொண்டர்களைப் பாராட்டும் புண்ணியம் பெற்றிலரே என ஏங்கி நிற்குந்தருணத்தில் சிற்சில கனத்தனபுண்ணிய சீலர்களின் மனத்தில் நல்லெழுச்சி யொன்று தோன்றி 'தமிழ்த் தெய்வமே கதி' 'தமிழ்த் தொண்டே வாழ்க்கைப்பணி' எனப் பூண்டு உள்ளும் புறமும் ஒத்துக் கிட்டமுட்ட அரை நூற்றாண்டுக்கதிகமாகவே அயர்வின்றி உழைத்து உயர்பதவி வாய்ந்து ஒப்பிலாப் புகழுடன் விளங்குகிற எந்தையாகிய மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் பிரம்மஸ்ரீ வே. சாமிநாத ஐயரவர்களுடைய 81-ஆம் ஜன்ம தின விழாவைக் கொண்டாட முன்வந்திருப்பதைக் கண்டு மன மகிழ்கின்றேம். அன்றைத் தினத்தில் ஐயரவர்களுக்கு உபசாரபத்திர மளித்து மகாஜனங்கள் வாழ்த்துவதன்றி, அவர்களது உருவப்படத்தையும் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைநிறுத்துவார்களெனத் தெரிகிறது. இப்படிப்பட்ட பெருங்கொண்டாட்டத்தில் ஈடுபடத் தமிழபிமானிகள் அனைவரும் தமக்குத் தாமே முன்வந்து பொருளுதவி புரிவது இயல்பே. ஆனல், தமிழபிமானிகளுள் தமிழை வளர்க்கும் பேராவல்கொண்டு யாண்டுதோறும் ஓராயிரம் ரூபாய் பரிசளித்துச் சிறப்புற்று விளங்குகிற திருப்பனந்தாள் ஆதீனத் தலைவராகிய காசிவாசி ஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளவர்கள் தனித்தே இதற்கான பொருட்செலவனைத்தையும் வகிக்கக் கூடுமாதலால், நம் போன்ற தமிழ் அபிமானிகளனைவரும் சேர்ந்து அதனினும் பெரிய கைங்கரியமாக பிரம்மஸ்ரீ ஐயரவர்களுடைய உருவச்சிலையை அமைத்து நிறுவ முயலுவது நமக்கு அழகாகுமென நம்புகிறேம். ஆஸ்திக சிலமும் ஊக்கமும் அன்பும் வாய்மையுமே பூஷணமாகக் கொண்டு நந்தமிழுலகில் பாஷாபிமானமும் தமிழ் மணமும் பரப்பிய தமிழ்த் தொண்டரின் பெருமை என்றென்றும் இந்நிலவுலகிற் பிரகாசிக்குமாறு செய்வது தமிழ் மாந்தரின் பெரும் பொறுப்பாகு மென்பதை நாம் வற்புறுத்திக் கூறுகின்றேம். வாழி வாழி தமிழ்த் தொண்டர் வாழி!

"ஆக்க மதர்வினுய்ச் செல்லு மசைவிலா
ஆக்க முடையா னுழை"

—இந்துநேசன்-16—2—35.

தாத்தா!—தாதா!

ஸ்ரீமத் சகலகுண சம்பன்ன அகண்டித லக்ஷ்மீ அலங்கிருத ஆகிருத ரக்ஷக மகாமேரு சமான தீர இகபர சௌபாக்கிய வதான்னிய மூர்த்தன்னிய சதுஷ்டய சாதாரண திக்விஜய பிரபு குல திலக மங்கள குண கணலங்கிருத வாசாலக பரிபாக சிரோரத்ன மகா புருஷ மகாராஜமான்ய ராஜஸ்ரீ பொதுஜனம் அவர்கள் திவ்ய சமூகத்திற்கு விகடன் தாழ்மையாகச் செய்துகொள்ளும் விஜ்ஞாபனம்.

என்ன, பெரியவாள் முழிக்கிறாப் போலிருக்கிறது? ஒன்றும் விளங்கவில்லையாக்கும்! "என்னமோ காமாசோமாவென்று எல்லாருக்கும் தெரிந்த பாஷையில் எப்போதும் எழுதும் விகடனுக்கு இன்று என்ன வந்தது?" என்று யோசிக்கிறீராக்கும். அதெல்லாம் முடியாது; இன்று உம்மைக் கதற வைத்துத் திணற அடித்து விடுவதாக உத்தேசம். தினம்போல் சுலபமாய்த் தப்பித்துக் கொண்டு போகலாமென எண்ண வேண்டாம். எங்கே, தைரியமிருந்தால் பின்வரும் புத்தகங்களின் பெயர்களைப் படியும், பார்க்கலாம்:—

மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்து யமகவந்தாதி, துறைசை யமகவந்தாதி, மறைசை யந்தாதி, திருக்குற்றால யமகவந்தாதி, பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் அந்தாதி, வயலூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி, பாலைவனப் பதிற்றுப் பத்தந்தாதி, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், பிரம்மவித்யா நாயகி பிள்ளைத் தமிழ், மயூரகிரி இரட்டைமணி மாலை, வாளொளிபுற்றூர்ப் புராணம், வாட்போக்கிக் கலம்பகம், திருநாகைக்காரோணப் புராணம், திருவெண்ணீற்றுமை பிள்ளைத் தமிழ், கலைசைச் சிலேடைவெண்பா.....

அதற்குள்ளாகவா சரணாகதி அடைந்து விட்டீர்? இந்த நூல்களின் பெயர்களைப் படிப்பதே உமக்குச் சிரமமாயிருக்கிறதே, அவைகளைக் கற்றல் எவ்வளவு சிரமமாயிருக்கவேண்டும்? அவற்றைப் போன்ற விகடனில் நாலைந்து பக்கங்களுக்குப் பெயர் ஜாபிதா மட்டும் கொடுக்கக்கூடிய அவ்வளவு தமிழ் நூல்களையும் கற்றுத் தேர்தல் என்றால், அது எத்தகைய செயற்கரிய செயல்?

அப்பேர்ப்பட்ட அரும்பெரும் செயல் புரிந்த பெரியார் ஒருவர் நமது தமிழ் நாட்டில் இருக்கிறார். அவர் யார் தெரியுமா? அவருடைய முழுப்பெயரைப் படிப்பது கூட்கொஞ்சம் கடினமான விஷயந்தான். மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்.

அய்யர்வாள் படித்திருக்கிற பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றின் பெயரையும் சொல்வதென்றால் மிகவும் பிரயாசையான காரியமே. ஆனால் அவர் படிக்காத பழந்தமிழ் நூல்களைக் குறிப்பிடுவது மிகவும் சுலபம். 'ஒன்றும் இல்லை' என்று இரண்டே வார்த்தையில் கூறுதல் எளிதல்லவா?

பொதுஜன ஸ்வாமி! நீரும் நானும் கூடத்தான் தமிழ் நூல்கள் படித்திருக்கிறோம். அதாவது, அத்தியாயத் தலைப்புகளுடனும், அரும்பத அகராதிகளுடனும், முன்னுரை பின்னுரைகளுடனும் முத்து முத்தாக அச்சிட்ட புத்தகங்களைப் படித்திருக்கிறோம். ஆனால் அய்யர்வாள் தமிழ் படித்தது எப்படித் தெரியுமா? அந்தக் காலத்தில் அச்சிட்ட புஸ்தகங்களே அபூர்வம். ஒரு பண்டார சந்நதி அந்நாளில் கம்பராமாயணம் அச்சுப் பிரதியைப் பார்த்துவிட்டு "ஓகோ! இதைக்கூடப் 'புக்கு' (Book)ப் போட்டு விட்டானா?" என்று வியந்தாராம்! இவ்வாறு, அச்சிட்ட புத்தகமே வியப்பளித்த காலம் அது. அந்நாளில், கறையான் அரித்த ஓலைச் சுவடிகளில் தெளிவின்றி எழுதியிருந்த எழுத்துக்களைக் கண்நோவுகாணும்படி படித்தாக வேண்டும். அந்த ஓலைச்சுவடிகளும் கிடைப்பது கடினம். ஊர் ஊராகச் சென்று, யார் யாரிடம் எந்த ஓலைச்சுவடியிருக்கிறதென்று அறிந்து அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக் கற்றுகவேண்டும்.

அய்யர் அவர்கள் தம் இளம்பிராயத்தில் அவ்வாறெல்லாம் பிரயாசைப்பட்டுப் படித்ததனால்தான், தமிழ்மொழிக்கு வேறு எவராலும் செய்யப் பெறுத மகோபகாரம் செய்தல் சாத்தியமாயிற்று. அந்நாளில் வடமொழிக்கு வியாஸ பகவானும், தமிழ் மொழிக்கு அகஸ்திய முனிவரும் எத்தகைய தொண்டு செய்தார்களென்று சொல்லப்படுகிறதோ, அவ்வளவு சிறப்பான தொண்டை

இந் நாளில் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் தமிழுக்குச் செய்திருக்கிறார்கள். அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற பழைய தமிழ் நூல்களின் ஜாபிதாவைப் பாருங்கள்:—

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதருரை, நன்னூல் சங்கர நமச்சிவாயருரை, தக்கயாகப்பரணி, பாசவதைப்பரணி, திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், திருக்காளத்தி நாதருலா, திருப்பூவண நாதருலா, தேவை உலா, மதுரைச் சொக்கநாதருலா, கடம்பர் கோயில் உலா, சங்கரலிங்க உலா, தமிழ்விடு தூது, வண்டு விடுதூது, தென்றல்விடு தூது, திருவாவடுதுறைக்கோவை, திருமயிலைத் திரிபந்தாதி, கூழை அந்தாதி, பழனிப்பிள்ளைத்தமிழ், திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, ஸ்ரீ சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை பிரபந்தத் திரட்டு, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், தியாகராஜ லீலை.

'தமிழ்ச் செல்வம்', 'தமிழ்ச் செல்வம்' என்று நாமெல்லாம் பெருமையடித்துக் கொள்கிறோம்; அய்யர்வாளின் அரிய முயற்சிகள் இல்லாமற் போயிருந்தால், 'உங்களுடைய தமிழ்ச் செல்வம் எங்கே?' என்று கேட்பவர்களுக்கு, 'எங்கேயோ பூமியில் புதையுண்டு கிடக்கிறது; தோண்டிப்பார்த்தால் ஒரு வேளை அகப்படலாம்' என்றே பதில் சொல்லவேண்டியிருந்திருக்கும்.

அய்யர் அவர்கள் தாம் இளம்பிராயத்தில் தமிழ் நூல் கற்பதற்காகப் பட்ட சிரமங்களை எண்ணி, அத்தகைய கஷ்டம் இனி வரும் சந்ததிகளுக்கு ஏற்படக்கூடாதென்று கங்கணங் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

பழைய ஓலைச்சுவடிகளிலிருந்து பாடபேதங்களை ஆராய்ந்து புத்தகம் பதிப்பித்தல் எவ்வளவு சிரம சாத்தியமான காரியம் என்பது தெரியுமா? எல்லையற்ற பொறுமையும், உழைப்புத் திறமையும், அறிவுத் தெளிவும் அதற்கு வேண்டும். அந்தத் தொண்டின் அருமையை அறிந்திருப்பவர்கள், அய்யர் அவர்கள் பதிப்பித்த ஒவ்வொரு புத்தகத்துக்காகவும் அவருக்குத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஞாபகச் சிலை நிறுவவேண்டும் என்று சொல்வார்கள்.

பொதுஜன ஸ்வாமி! தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் அத்தகைய பரமோபகாரம் செய்திருக்கும்—இன்னமும் செய்துவரும்—பெரியாருக்குச் சமீபத்தில் 80-ஆவது வயது பூர்த்தியாகப்போகிறது. இந்த விசேஷ சம்பவத்தை நாளது மார்ச்சுமீ 6-ஆம்வியன்று சிறப்பாகக் கொண்டாடுவதற்காகத் தமிழன்பர்கள் சிலர் ஏற்பாடு செய்துவருகிறார்கள். அன்றைய தினம் அய்யர் அவர்களுடைய உருவப்படம் ஒன்றைப் புதிய சர்வகலாசாலை மண்டபத்தில் திறந்து வைக்கவும், அய்யர் அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். மேற்படி வைபவத்துக்கு இஷ்டமித்ர பந்துக்களுடன் உம்மை அழையா விட்டாலும் நீர் வந்துசேரவேண்டியது.

ஆமாம், சந்தேகம் என்ன? தமிழ் யார் வீட்டுச் சொத்து? மற்றவர்களுக்குள்ள பாத்தியதை தமிழில் நமக்கும் உண்டு. தமிழ்த் தாய் நம் எல்லாருக்குந்தான் தாய். எனவே, அய்யர்வாள் விஷயத்திலும் நம் எல்லாருக்கும் சமமான பாத்தியதை உண்டு.

இப்படிக்கு,
அன்பன்,
விகடன்.

2

உயர்திருவாளர் தமிழ் அன்பர் அவர்களுக்கு விகடன் வரையும் லிகிதமாவது:—

தங்களுடைய அழைப்புக்கடிதம் பெற்றேன். மெத்த மெத்த சந்தோஷம். அய்யர் அவர்களுடைய எண்பதாம் வயதுப் பூர்த்தியைத் தாங்கள் விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருப்பது மிகவும் பொருத்தமானதே.

நம்முடைய காலத்தில், நம் கண் முன்னால், தமிழ் மொழிக்குப் பெருமை யளித்தவர்களுக்குள் இரண்டு பேர் சிறந்து விளங்குகிறார்கள். ஒருவர், தேசீயகவி சுப்பிரமணிய பாரதி; மற்றவர் மகாமகோபாத்தியாய சாமிநாதையர்.

பாரதியார் வாடாமலர்களைத் தொடுத்துத் தமிழ்த்தாய்க்குப் பாமாலை சூட்டினார்; புதிய நாகரிகமுறையில் அழகிய சின்னஞ்சிறு ஆபரணங்களைச் செய்து அணிவித்தார்.

அய்யர் அவர்களோ, காணுமற்போயிருந்த தாயின் பழைய ஆபரணங்கள் பலவற்றைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்தார்; துருப் பிடித்துக் கிடந்த நகைகளை யெல்லாம் துரு வெடுத்துச் சுத்தம் செய்து மெருகிட்டு அளித்தார்.

எனவே, இரண்டுபேரும் ஒவ்வொருவகை யில் தமிழ்த்தாய்க்கு மகத்தான சேவை செய் திருக்கிறார்கள்.

ஆனல் பாரதியார் ஒரு தவறு செய்தார்; திடீரென்று யாரிடமும் சொல்லிக்கொள்ளா மல் அவர்பாட்டுக்கு இறந்து போய்விட் டார்! என்ன அவசரமோ தெரியவில்லை?

"ஏதடா! நாம் செய்த சேவையைத் தமிழர் கள் அறிந்து பாராட்டுவதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டாமா?" என்று அவருக்குச் சற்றும் தெரியாமல் போயிற்று.

ஆனல் அய்யர் அவர்கள் அத்தகைய தவ றைச் செய்ய வில்லை. அவர்கள் தமிழர்களின் மதாந்த குணத்தை நன்கறிந்தவர் போலிருக் கிறது. "நம்முடைய தொண்டின் பெருமை யை இந்தத் தமிழர்கள் அறியவேண்டுமா னல் 80 வயதுக்குமேல் ஜீவித்தே தீரவேண் டும்" என்று இளம்பிராயத்திலேயே தீர் மானித்திருப்பார் போலிருக்கிறது.

எப்படி யிருந்தாலும், நம்முடைய அதிர்ஷ் டந்தான். அவருடைய எண்பத்தோராவது வயதிலாவது அவரைக் கௌரவப்படுத்த வேண்டுமென்று நமக்குத் தோன்றியது பெரிய காரியமல்லவா?

ஏதோ, இவ்வளவு தாமதமாகத் தொடங்கி யிருக்கும் காரியத்தை அதற்கேற்ற பெருமை யுடன் சிறப்பாக நடத்தி வைப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
நண்பன்,
விகடன்.

3

தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள் சமுகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக்கொள்வது.

பெரியவாள் என்ன யோசிக்கிறீர்கள்? இது என்ன புதிய பட்டமாயிருக்கிறது, இவன் யார் கொடுப்பது என்று? அப்படியெல்லாம் தாங்கள் நிராகரிக்கமாட்டீர்களென்று நம்பு கிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள் நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. முதலாவது ஔவையாருக்கு எப்படி 'தமிழ்ப் பாட்டி' என்னும் பட்டம் பொருந்துமோ அது போலவே, தங்க ளுடைய பிராயத்தினலும், தமிழுக்குத் தாங் கள் செய்திருக்கும் தொண்டினலும் 'தமிழ்த் தாத்தா' என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்தி லுள்ள இரண்டு 'த்' களையும் நீக்கிவிட்டால், தாங்கள் 'தமிழ் தாதா' ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அது சரித்து அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினயிரக் கணக்கானவர்களுக்குப் பயன் படும்படி செய்த தங்களை, 'தமிழ்தாதா' என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல் வது?

மூன்றுவதாக, 'ருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்' என்பதுபோலத் தமிழன் பர்கள் இன்னமும் தங்களை நோக்கி, 'தமிழ் தா! தா!' 'தமிழ் நூல்களைத் தா! தா!' என்று கேட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள். (மேற்படி சிலேடை என் சொந்தமல்ல, இரவல்தான் என்பதையும் பெரியவாளிடத் தில் தெரிவித்துக்கொண்டுவிடுகிறேன்.)

ஆகவே, இவ்வளவு பொருத்தமான பட்டத் தைத் தாங்கள் அங்கீகரித்தே தீரவேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டாலும் நான் என்னமோ அந்தப் பட்டத்தால்தான் தங்களை அழைப்பேன்.

ஏனென்றல், 'மகாமகோபாத்தியாய', 'தாக்ஷிணாத்யகலாநிதி' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, 'தமிழ்த் தாத்தா' என்பதோ தங்களுடைய தமிழ் வசனநடையைப்போல் எளிதாயிருக்கின்றது.

நல்லவேளை, ஞாபகம் வந்தது. தங்க ளுடைய தமிழ் வசனநடையைப்பற்றித்தான் ஒன்று கேட்கவேண்டுமென்றிருந்தேன். அதென்ன, தாங்கள் அவ்வளவு பெரிய தமிழ்ப் புலவராயிருந்துகொண்டு இவ் வளவு எளிய தமிழ்நடை எழுதுகிறீர் கள்?

என் நண்பர் ஒருவர் தங்களைப்பற்றி நிந்தாஸ்துதியாக ஒன்று சொல்வது வழக்கம்:—'இந்த அய்யர்வாள் தமிழுக்கு ரொம்ப துரோகம் செய்திருக்கிறார்கள். இவர்கள் வெளியிடும் பழந்தமிழ்க்காவியங்களில் அரும்பத அகராதி ஒன்று சேர்க்கிறார்களா? அந்த அரும்பத அகராதிகளை வைத்துக் கொண்டு கடுமை கடுமையான வார்த்தைகளைக் கோத்து இந்த நாளில் சிலர் தமிழ் எழுதுகிறார்கள்!' என்று.

அப்படியாகத் தங்களுடைய புத்தகங்களின் உதவியினால் அநேகர் பல் உடைந்து, காது கிடுகிடாய்க்கும்படியான தமிழ்நடை யெல்லாம் எழுதும்போது, தாங்கள்மட்டும் எனக்கெல்லாங்கூட விளங்கும்படியான வெள்ளைச் சொற்களையே உபயோகிக்கிறீர்களே, அது ஏன்? நானும் தங்களுடைய கட்டுரைகளை எல்லாம் படித்தேன்; தாங்கள் எழுதிய ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரத்தையும் படித்தேன். எனக்கு விளங்காத வார்த்தை ஒன்றுகூட இல்லை. இது தங்களுடைய கௌரவத்துக்குக் குறைவு என்று தாங்கள் நினைக்க வில்லையா?

போகட்டும்; தங்களுக்குச் சமீபத்தில் 80-வயது நிரம்பப்போகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மைதானு? எனக்கு என்னமோ நம்பிக்கை யில்லை. பார்த்தால் பாயைமாய்த் தோன்றுகிறதே? தாங்கள் செய்யும் வேலையைப் பார்த்தாலும் அவ்வளவு வயதானவராக நினைக்கக்கூடவில்லையே?

எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், தாங்கள் ஒரே மூர்த்தன்னியமாய்த் தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்டிருக்கையில் ஒரு வேளை வயதுக் கணக்கை மறந்திருக்கலாமென்று.

உண்மையாகவே தங்களுக்கு 80 வயது பூர்த்தியாகிற விஷயத்தில் அதை எப்படிச் சாதித்தீர்கள் என்னும் இரகசியத்தைத் தயைசெய்து தெரிவித்துவிடுங்கள். எனக்கென்னமோ, தமிழ் மக்களாகிய நாங்கள் செய்த பூர்வஜன்ம சுகிர்தந்தான் தங்களது நீடித்த ஆயுளுக்குக் காரணம் என்று தோன்றுகிறது.

எதுவாயிருந்தாலும், மார்ச்சுமீ 6உ யன்று தங்களுடைய பேரன் பேத்திகள் எல்லாரும் தங்களுக்குத் திருஷ்டி கழித்துக் கொட்டுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இது தங்கள் காதுக்கும் எட்டியிருக்குமென்று நம்புகிறேன்.

ஏதோ, உருவப்படமாம்; உபசாரப் பத்திரமாம்; தங்களுக்கு இதெல்லாம் உபத்திரவமாய்த்தானிருக்கும். ஆனாலும் பேரன் பேத்திகளின் மனத்திருப்திக்காகத் தாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கடைசியாக ஒன்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதாவது மார்ச்சுமீ 6-ம்உ வைபவங்கள் முடிந்து 7-ம்உ பிறந்ததோ இல்லையோ, உடனே இந்த வயது விவகாரங்களையெல்லாம் மறந்துவிடுங்கள். நீங்கள் பாட்டுக்குத் தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்டிருங்கள். தப்பித் தவறி வயதைப்பற்றி ஞாபகம் வந்தால், 81 என்பதைத் திருப்பி வைத்து 18 என்று எண்ணிக்கொள்ளுங்கள். என்றும் பதினாறு வயதாயிருந்த மார்க்கண்டனைப்போல் தாங்களும் 18 வயதுக்குமேல் போகாமலே இருந்துவிடுங்கள்.

ஏனெனில், தாங்கள் செய்யவேண்டிய தொண்டுகள் இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கின்றன. தமிழ்த்தாய் இன்னமும் கையில் ஏராளமான பழைய நகைகளை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள். அவைகளையும் தாங்கள் மெருகிட்டுத் தரவேண்டுமாம். எப்படியும் ஸ்திரீ யல்லவா? அசாத்திய நகை ஆசை! நிற்க. தங்களிடமிருந்து பேரன் பேத்திகளாகிய நாங்கள் ஆவலுடன் எதிர் பார்க்கிற இன்னும் ஒரு காரியமும் பாக்கியிருக்கிறது. எங்களுக்குக் கதை கேட்பதில் மிகவும் பிரியம். தங்கள் சொந்தக் கதையை முழுதும் பூரணமாய்க் கேட்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீ மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் சரித்திரத்தில் ஒருவாறு எங்களுக்கு ஆசை காட்டியிருக்கிறீர்கள். ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், ஸ்ரீமான்கள் வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, மகாவைத்தியநாத ஐயர், இராமஸ்வாமி சிவன் முதலிய தமிழ்ப் பெரியார்கள் வாழ்ந்த அக்காலத்தைப்பற்றி மேற்படி சரித்திரத்தில் படித்தபிறகு அதற்குப்

பிந்திய காலத்தைப்பற்றியும் தெரிந்து கொள்ளவேண்டுமென்று பேராவல் கொண்டிருக்கிறோம். அந்த ஆவலைப் பூர்த்திசெய்தல் தங்கள் பொறுப்பு.

தங்களுடைய சுயசரிதத்தை எழுதினால், அது பெரும்பாலும் தமிழ்மக்களின் சரித்திரமாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஏதோ நான் சொல்லவேண்டியதைச் சொல்லி விட்டேன், அப்புறம் தங்கள் விருப்பம்.

இங்ஙனம், அடியேன்,

விகடன்.

—ஆனந்தவிகடன்-12-2-35.

தமிழ்ப் பெரியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவு

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவை நாளது மார்ச்சுமீ 6-ம்உ சென்னையில்கொண்டாடப்போவதாகக் கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

தமிழ்த்தந்தையாம் நமது ஐயரவர்கள் தமிழுக்குச் செய்திருக்கும் தொண்டு தமிழ் நாட்டவரால் மறக்கற்பாலதல்ல. பண்டைத் தமிழரின் நாகரிகங்களைத் தெள்ளெனஅறிவிக்கும், பத்துப்பாட்டு, ஜீவகசிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலிய செந்தமிழ்ச் சங்க இலக்கியங்களை நம்மனோர் அறிந்து அநுபவிக்க அருளியது ஐயரவர்களின் விடாமுயற்சியேயாகும்.

சங்க நூல்களைப் பிழையறப் பதிப்பித்துத் தமிழ்நாட்டாருக்கு உதவுவதற்கு தன்னந்தனியே ஐயரவர்கள் பட்ட கஷ்டத்தையும், அவ்வப்போது பணத்தட்டினால் ஏற்பட்ட நஷ்டங்களையும் விஷயமறிந்தவர்கள் அறிந்திருப்பர். எவ்வளவு இடையூறு நேரினும் துளியும் பொருட்படுத்தாமல் எடுத்த காரியத்தை விடாமுயற்சியுடன் முடித்துத் தமிழுக்குச் செய்த பேருதவியை உலகம் உள்ளளவும் ஒருவராலும் மறக்க முடியாது.

ஐயரவர்களிடமிருந்து தயாரான தமிழ் வித்வான்களும் அநேகர். நாமும் ஐயரவர்கள் சிஷ்யனாகச் சிதம்பரத்தில் சின்னஞ்சிறுகள் பாடம் கேட்கும் பாக்கியம் பெற்றிருந்தாலும் அவர்களிடமிருந்து வெளிப்போந்த தமிழ்வித்வான்கள் ஆயிரக்கணக்கானவரின் வித்வத் திறத்தில் நூற்றில் ஒருபங்குகூட நாம் பெற்றோமில்லை. இதற்குக் காரணம் பூராப்படிப்பும் முடிவடையுமுன் அவர்களை விட்டுப் பிரிந்ததுதான். இப்படி எம்போன்ற அரைகுறைப் படிப்பாளிகளிலும் ஐயரவர்களிடம் தயாரானவர் அநேகர்.

ஐயரவர்களின் 80-ஆம் ஆண்டு 6-3-35-ம் உடன் முடிவடைவதை முன்னிட்டு மந்திரி கனம் பி. டி. ராஜனைத் தலைவராகக்கொண்ட ஒரு கமிட்டி தக்கமுறையில் இத்தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக நமக்கு அறிவிக்கப்படுகிறது. ஐயரவர்களுக்கு ஒரு பண முடிப்பும் அச்சமயம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. எல்லோரும் தங்கள் தங்களாலியன்ற பணம் அனுப்பியும் அவ்விழாவில் கலந்துகொண்டும் தமிழ்ப் பெரியாரைக் கௌரவிக்கத் தமிழர் கடமைப்பட்டிருக்கிறார் என்பதை அறிவித்துக்கொண்டு பணம் அனுப்புபவர்கள் 'ஸ்ரீமான் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், வடக்கு மாட வீதி, மயிலாப்பூர்' என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவேண்டுமாறு கோருகிறோம். மார்ச்சுமீ முதல் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5½ மணிக்குத் தேனும் பேட்டை, மௌண்ட்ரோட்டில் கனம் பி. டி. ராஜன் வீட்டில் பொருளுதவி செய்வோரின் கூட்டமொன்று நடைபெறும் என்றும் நமக்கு அறிவிக்கப்படுகிறது.

—மதுரமித்திரன்-18-2-35.

ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய டாக்டர் ஸ்ரீ சாமிநாத ஐயர் அவர்களின் 80-ஆம் ஆண்டு நிறைவு விழா

தமிழுலகில் வாழுமெவரும் ஸ்ரீமான் மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களை அறியாதாராயிருக்க முடியாது. ஐயரவர்கள் தமிழ் மொழிக்கு ஆற்றியிருக்கும் தொண்டு அளவிடற்கரியது; தமிழர்களால் என்றென்றும் போற்றுதற்குரியது. சங்க இலக்கியங்கள் பல நம் கண்களினின்று மறைந்தே போயிருக்கவேண்டிய இக்காலத்தில், அவை என்றும் அழியா என்னும் தைரியத்துடன் முன் வந்து அந்நூல்களை யெல்லாம் பிழையறப் பரிசோதித்து வெளியிட்டு, இற்றைப்போது தமிழில் ஆர்வங் கொண்டுள்ளவர்களுக்கெல்லாம் பயன்படுமாறு செய்துவைத்த பெருமை ஐயரவர்களுக்கே உரியதாகும். அத்தகைய பேரூழியம் 60 ஆண்டுக்காலமாகப் புரிந்திருக்கும் பெரியார் இவ்வாண்டு மார்ச்சு மாதம் 6-ஆந்தேதியுடன் தம் 80-வது பிராயத்தைப் பூர்த்தி செய்கின்றார். நம் நாட்டில் தமிழர்கள் நீண்டகாலம் வாழுவதற்குரியவர்கள் என்பதற்கு ஐயரவர்களின் நீண்ட ஆயுள் சான்றுபகர்வதுடன், ஸெர்ஜ் வாரனுப், டாக்டர் பேக்கர் போன்றவர்களும் பார்த்துப் பொருமை யடையும் பேறு ஐயரவர்கள் பெற்றிருக்கின்றார்கள். ஐயரவர்களின் 80-வது ஆண்டுப் பூர்த்தி தினத்தன்று அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் அளிப்பதென்றும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைப்பதென்றும் தீர்மானித்திருக்கின்றபடியால் தமிழ் அன்பர்கள் அபிமானிகள் அனைவரும் அதில் கலந்துகொள்வதுடன், பின்வரும் வியாசங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விலாசத்திற்குப் பணம் அனுப்பி அவ்விழாவைச் சிறப்புற நடத்த வேண்டுமென்று கோரிக்கொள்ளுகிறோம். இப்பெரியாரின் நற்றொண்டை நாம் மனமாரப் போற்றுவதுடன், இன்னம் பல்லாண்டுகாலம் இவர்கள் உயிருடன் வாழ்ந்து, இன்னம் பல அரிய சங்க இலக்கியங்களை யெல்லாம் வெளிக்கொணர்ந்து தமிழர்களின் நன்றியறிதலுக்குப் பாத்திரராய் விளங்க எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

—தாருல் இஸ்லாம்-20—2—35.

தமிழ்ப் பெரியார் எண்பதாண்டு விழா

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கு அடுத்த மார்ச்சு மாதம் 6-ந்தேதி எண்பதாண்டு நிறைவதை யொட்டி அன்றைய தினத்தை ஒரு திருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்று தமிழன்பர்கள் கருதுகிறார்கள். அன்று மாலையில் ஐயரவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் சமர்ப்பிப்பதுடன், அவர்கள் உருவப் படத்தைச் சென்னைச் சர்வ கலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் நூற்பதிப்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கிசைந்தபடி வேறு தகுதியானவற்றைச் செய்தும் அவர்கள் தமிழ்த் தொண்டைப் போற்ற வேண்டுமென்று தமிழன்பர்கள் கருதியிருக்கிறார்கள். இது நன்று. ஐயரவர்கள் சென்ற பல ஆண்டுகளாகத் தொடர்ந்து புரிந்துவரும் தமிழ்த்தொண்டு நாடறிந்த விஷயம். அறிஞர்கள் பெரும்பாலும் அற்பாயுளில் மறைந்துபோகும் இந்த நாட்டில் ஐயரவர்கள் எண்பதாண்டுவரை யிருப்பது தமிழ்த்தாய் செய்த பாக்கியமென்றே சொல்லவேண்டும். இந்த விழாவைச் சிறப்பாக நடத்துவதற்குத் தமிழ் அன்பர்களும், தமிழ்ச் செல்வர்களும் போதிய ஆதரவளிக்கவேண்டும். மந்திரி பொ. தி. ராஜன் இந்த விழாக்கமிட்டி நிதிக்குத் தலைவராக அமைந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது.

—லோகோபகாரி-21-2-35.

தமிழ்ப்பெரியார்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களைத் தமிழுலகம் நன்கறியும். அப்பெரியாருக்கு வருகின்ற புதன் கிழமையோடு 80 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அந்நாளைத் தமிழ்நாட்டுமக்கள் ஒரு திருநாளாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துகொண்டு வருகின்றனர். பர்மாவில் வாழும் தமிழர்களாகிய நாமும் அத்திருநாளைப் பெருமையோடு கொண்டாடக் கடமைப்பட்டுள்ளோம்.

திரு. ஐயரவர்கள் சென்ற 60 ஆண்டுகளாகத் தமிழ்த் தாய்க்கு இயற்றிய அருந்தொண்டுகளைத் தமிழர்கள் என்றும் மறக்க முடியாது. ஓலைச்சுவடிகளிலிருந்த அரும் பெரும் தமிழ்நூல்களைப் பிழையறப் பரிசோதித்துப் புத்தக வடிவமாகச் சிறந்த முறையில் வெளியிட்ட தனிப்பெருமை ஐயரவர்களையே சாரும். ஐயரவர்களின் ஒய்வற்ற—ஒப்பற்ற—உழைப்பினலன்றே இன்றுதினம் பழந்தமிழ் நூல்கள் பயில்வார்க்குச் சுலபமாக அமைந்துள்ளன?

ஐயரவர்கள் சிறந்த புலவர். அவரினும் சிறந்தது அவர் தமிழ்நடை. ஏனையோர்க்கு விளங்காத வார்த்தைகளை உபயோகித்துப் படிப்பவர்களுக்கு ஊக்கக் குறைவை யுண்டாக்கும் பண்டிதர்களுக்கும் நமது ஐயரவர்களுக்கும் வெகுதூரம். ஐயரவர்களின் நடை மிக எளிது. மிக இனிது. படிப்பவர்களுக்கு மிகவும் சுவாரஸ்யமாக விருக்கும். ஐயரவர்கள் இயற்றிய 'மீனாட்சி சுந்தரம் பிள்ளை சரித்திர'மும், 'கலைமக'லில் எழுதி வரும் வியாசங்களும் அவர்களின் நடைச் சிறப்பை நன்கு விளக்கும்.

வெறும் புலவராக மட்டுமின்றிச் சிறந்த ஆராய்ச்சியாளராகவும் திகழ்கின்றார்கள் நமது ஐயரவர்கள். அவருடைய ஆராய்ச்சித் திறமையினாலேயே அவரை அறிஞருலகம் அதிகமாகப் பாராட்டுகின்றது. ஐயரவர்களுக்கு இவைகள் மட்டுமின்றிக் குண நலன்களும் நன்கு அமைந்துள்ளன. எளிய வாழ்க்கை, குருபக்தி, அடக்கம், கல்விச் செருக்கின்மை முதலிய அருங்குணங்கள் வாய்க்கப் பெற்ற பெரியாரைத் தமிழர்கள் வாயார வாழ்த்துவதோடு அவருடைய குணங்களைப் பின்பற்றவும் கடமைப்பட்டுள்ளார்கள்.

பர்மாவில் ஐயரவர்களின் எண்பதாவதாண்டுப் பூர்த்தி விழா சம்பந்தமாய்த் தமிழன்பர்கள் செய்யும் முயற்சிகளை நாம் முழுமனதோடு ஆதரிக்கின்றோம். பர்மாவாழ்தமிழர்கள் ஐயரவர்களின் பேரால் சேர்க்கப்பெறும் நிதிக்குத் தாராளமாகப் பொருளுதவத் தயங்கமாட்டார்கள் என்று நம்புகின்றோம். 80-வது ஆண்டு நிறையப்பெறும் தமிழ்ப் பெரியார் சாமிநாதையரவர்கள் இன்னும் பல்லாண்டு சகல நலன்களுடனும் வாழ்ந்து இன்னும் பல அரிய நூல்களையும் வெளியிட அருளுமாறு இறைவனைப் பிரார்த்திப்போமாக!

—தனவணிகன்.

ஸ்ரீமான் உ. வே. சாமிநாத ஐயரின் ஆண்டு விழா

நமது புராணங்களை நோக்கினால், ராவணன், இரணியன் முதலியோர் அநேக ஆயிரம் ஆண்டுகள் வாழவேண்டுமென்றும், சாகாமலே யிருக்கவேண்டுமென்றும் கடவுளை வரம் வேண்டியவர்களென்பதையும், அவர்கள்கூடத் தெய்வத்தின் சூழ்ச்சியால் நமனுலகடைந்தனரென்பதையும் அறிவீர்கள். ஏன்? அறிந்திருக்கிறீர்கள். நீண்டநாள் வாழ்ந்திருக்கவேண்டும் என்னும் பித்து நம்மிடம் திடீரென்று தோன்றிவிட, அது தலைமுறை தத்துவமாய் நமது முன்னோர்கள் ரத்தத்திலும், அதன் காரணமாய் நமது ரத்தத்திலும் ஊறிப்போயிருக்கிறது. ஆனால் பௌராணிக காலமுதல் நமது ரத்தத்தில் தோய்ந்திருக்கும் நீண்டநாள் வாழவேண்டும் என்னும் ஆசையை ஆசையளவில்தான் வைத்து வருகிறோம். நடைமுறையில் நீண்டநாள் வாழவேண்டியதற்குரிய விதிகளை அநுசரிக்காதிருப்பதுடன், அதற்கு விரோதமான காரியங்களையும் செய்து வருகிறோம்.

நம்முள் ஒருவர் (ஆனால் ஒரே ஒருவர் என்று சொல்லத் துணிவில்லை) வேண்டிய விதிகளைத் தமது வாழ்க்கையில் அநுசரித்து (அது என்ன முறை என்பதை ஸ்ரீமத் மகா

மகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி உ. வே. சாமிநாத ஐயர் அவர்களிடம் போய்க் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்) நாளை மார்ச்சுமீ 6-ஆம் தேதி தமது 81-ஆவது ஆண்டை எட்டிப்பிடிக்கப்போகிறார்.

ஆமய்யா! விகடரே! இந்தியாவில் 80 வயதிற்கு மேற்பட்ட கிழங்கள் எத்தனையோ இருக்கிறதே. அதுகளைப் பற்றியெல்லாம் எழுதாது ஸ்ரீமான். உ. வே. சுவாமிநாத ஐயரைப்பற்றிமட்டும் எழுதக்காரணமென்ன? என்று கேட்பீர்கள்.

வாஸ்தவமே. ஐயர் அவர்கள் 80 ஆண்டு உயிர் வாழ்ந்திருந்தது ஓர் ஆச்சர்யமான காரியமல்லதான். அதற்காகவும் இப்போது 80-ஆவது ஆண்டு நிறைவுவிழா நடக்கப் போவதில்லை. பின் எதற்காக? ஐயர் அவர்கள் தமது 20-ஆவது ஆண்டில் தொடங்கி, இதுவரை 60 ஆண்டுகளாகத் தமிழ்த்தாய்க்கியற்றியுள்ள ஒப்பற்ற தொண்டிற்காகவே விழா.

தற்காலம் எண்ணிறந்த அறிஞர்கள் தமிழ்த்தாய்க்கு அரிய தொண்டாற்றி வருகின்றனர். அவர்களுள், எவரேனும் மூச்சு விடாது 60 ஆண்டுகள் தமிழ் அன்னையின் தாள் பணிந்து அவளது உருவத்தைப் பல நூல்களென்னும் ஆபரணத்தால் அலங்கரித்தார்களா? பொறுக்கி எடுத்தால் ஒருவர் தேருவதுதான் சாத்யம். அவரே நமதி ஐயர் அவர்கள். இத்தகைய பெறுதற்கரிய பேற்றைத் தாமும் பெற்று, தமிழ் உலகிற்கும் அளித்த அவர் இன்னமும் பன்னெடு நாட்கள் உயிருடன் இருந்து வரவேண்டும் என்பதே விகடன் அவா. அத்துடன் அவரின் 100-ஆவது ஆண்டு நிறைவு விழாவையும் நடத்திக் கண்டு களிக்கவேண்டுமல்லவா? விகடனும் தன் சக்திக்கேற்றவாறு விழாவிற்குச் சிறு பொருள் அனுப்பப்போகிறான். நீங்களும்—தமிழ் மக்களாய்ப்பிறந்த நீங்களும் இயன்றவரை விழாவுக்கு உதவிசெய்தே தீர வேண்டும். ஐயரைப்போன்ற பெரியாரை இனி ஒரு தமிழ்த்தாத்தாவைக் காண்பது எக்காலமோ? அதற்காகத்தான் விகடனும் உங்களாலான உதவியை மேற்படி விழாவிற்குச் செய்யும்படி வேண்டுவதும், அவ்விழாவில் கலந்துகொண்டு நீங்கள் அன்பர்கள்தான் என்று காட்டவேண்டுமென்று கேட்பதும். தயைசெய்து விழாவிற்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள், கீழேகண்ட விலாசத்திற் கனுப்புங்கள்.

ஸ்ரீமான். கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள்,
வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை.
—குமாரவிகடன்-1-3-35.

கவிக்கு நாயகன்

ஒரு நாட்டின் மேன்மைக்கு அடிப்படையாய் உள்ளவர்கள் புலவர்களே. அவர்களுடைய பரந்த அறிவுக்குத்தான், நாடு இன்னின்ன துறைகளில் முன்னேறினால் நலம் பெறும் என்றதொரு திட்டத்தை வகுக்கும் ஆற்றல் உண்டு. சரீரமுயற்சியால் அத்திட்டங்களை நடத்தி வெற்றிபெறுவது அரசனின்—அரசாங்கத்தின்—கடமையாம். பழைய காலத்தில் நம் நாட்டில் இவ்வேற்பாடே நிலை பெற்றிருந்தது என்பதற்கு எண்ணிறந்த ஆதாரங்கள் உள.

நம் தமிழ்நாடு எல்லாத்துறைகளிலும் சிறப் புற்று விளங்கியதற்கு அக்காலத்துப் புலவர் களே காரணபூதரா யிருந்தனர்; அவ்வப் போது அரசர்களுக்கு அறிவுகொளுத்தி வந்தனர். அவ்வரசர்களும் அவர்களைப் போற்றி வந்தனர். அரசர் தம் முறை பிசகிய காலத்தில் சற்றும் அச்சமின்றி அப்புலவோரே அவருக்கு முன்னின்று நீதியைப் புகட்டுவர். அவர்கள் அரசரைக்காட்டிலும் நன்கு மதிக்கப்பட்டு வந்ததுமுண்டு.

நிற்க, கல்விச்செல்வத்தை யாவரும் கொள்ள உவந்து ஈயும் தருமவான்களும் அப் புலவர்களே. ஆனால் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்னிருந்த ஒரு பெரியார் நம் தமிழ்ப் புலவர்களைப்பற்றிக் கூறும்போது, தமிழ்ப்புலவர்களால் 'தமிழானது முன்னேற்ற மடையாது' என்ற ஒரு கருத்தை வெளியிட்டனர். அவர் கூறியதாவது, 'புலவர்கள், எளிய நடையில் யாவரும் உணரும் வண்ணம்

பேசவோ, எழுதவோ செய்வதில்லை; பிறரும் தம்மைப்போலப் புலவர்கள் என்ற பெயரோடு வெளிவரக்கூடாது என்ற அழுக்காறும் அவர்களுக்குண்டு' என்பவை போன்ற குறைபாடுகளே. ஆனால் அவர் தற்போது உயிர்வாழ்ந்திருப்பின் தம் கொள்கையை மாற்றிக்கொள்வார் என்பதில் தடையில்லை. அப்படிப்பட்ட நிலைமை நம் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாயிருந்தவர்களில்—இருப்பவர்களில் பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயர் அவர்கள் தலைசிறந்தவர்.

இவர் தம்மிடம் தமிழ் கற்க வருபவருக்கு முதலுபதேசமாக, 'நீங்கள் தமிழில் ஆர்வங் கொண்டுள்ளவர்களைத்தேடிச்சென்று பாடம் சொல்லவேண்டும்' எனக் கூறுவதுண்டு. தம்மிடத்தே வருவோரது ஐயங்களைத் (தம் அவசரவேலைகளைக்கூட நிறுத்திவிட்டுத்) தீர்ப்பதில் அவர் காட்டும் முயற்சியும் அவாவும் நேரில் கண்டு மகிழக்கூடியவை.

80 வயது நிரம்பியும், இன்னும் தமிழுக்காக உழைப்பதில் யௌவன பருவமுடைய (மனமுள்ள) வராயிருப்பது அவரைக் காண்போருக்கெல்லாம் ஓர் ஊக்கத்தை அளிக்கிறது.

பிற பாஷைகளைப் படித்து அதில் ஏதோ கொஞ்சம் நயங்களிருப்பதைக் கண்ட சிலர், தாம் தமிழராயிருந்தும் தம் நிலையை மறந்து, 'ஆ! தமிழில் என்ன நயம் இருக்கிறது?' என்று இகழ்ச்சியோடு வினவிவந்த காலமுண்டு. அவர்களிற் பலரே இப்போது 'தமிழில் என்ன நயம் இருக்கிறது!' என்று வியந்து சொல்லும் நிலைமைக்கு அதனைக் கொண்டுவந்தது, ஐயரவர்களின் பெருமுயற்சியேயென்பது திண்ணம்.

யாவராலும் சுட்டப்பட்டுப் போற்றப்படுதற்கு இவர் கையாளும் முறை—நோன்பு—மிகவும் கடினமானது. அஃதாவது, பிறருடைய சிறப்புக்களைமட்டும் கூறி, சிறுமையைப் புறங்காத்து, யாவரிடத்தும் தாழ்ந்து பேசுதலேயாம். இதனை இவரிடம் நேரில் ஒரு நிமிஷமேனும் பழக நேர்ந்தவர்கள் செவ்வையாய் உணரக்கூடும்.

எந்த வித்தைக்கும் குரு ஒருவர் இருக்க வேண்டியது அவசியம். அக்குருவையே தெய்வத்துக்குச் சமமாகக் கொண்டாட வேண்டும் என்பது நம்மனோர் கொள்கை. அப்படி ஒரு சீடன் குருவை அடைந்து தன் குறையைக் கூறி இரந்து உபதேசம் வேண்டுங் காலத்தில், அவர் அவனைத் தம் புத்திரனாக மதித்து, புதுப்பெயர் அளித்து, இன்ன துறையில் உழை எனக் கட்டளையிடுவது மரபு. ஞானமார்க்கத்தை அநுசரிக்கும் சந்நியாசிகளும், சைவவைஷ்ணவ சித்தாந்திகளும் இவ்வாறே செய்துவருகின்றமை வெளிப்படை. அதுபோலவே நம் ஐயரவர்களும், தற்காலக் கம்பர் எனப் புகழ்பெற்றவரும், (உபசாரவழக்காகவன்றி) உண்மையிலேயே தமிழில் ஒப்புயர்வற்று விளங்கியவருமான ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களால் தமிழ்த் தீக்ஷைபெற்று, தமிழுக்கே உழைக்கும் கடன் பூண்டு, இயற்பெயராகிய ஸ்ரீ வேங்கடராமன் என்ற பெயர் மாறி 'சுவாமிநாதன்' என்ற தீக்ஷாநாமத்தோடு விளங்குகிறார்.*

இவ்வளவு புலமை நிரம்பிய ஐயரவர்கள் தாமாக ஒரு புதிய நூல் இயற்றவில்லையே என்று சிலர் எண்ணுகின்றனர். அதற்குக் கணக்கில்லாத சமாதானங்கள் உண்டு. பண்டை நூல்களின் பெருமையை உணர்ந்தார் யாரும் புதிய நூல்கள் இயற்றப் புகார் என்பது திண்ணம். ஏன்? பழம்புலவர்கள் அரைகுறையாக விட்ட விஷயம் ஏதேனும் ஒன்றுவது உண்டானால்தானே அதைப் பூர்த்தி செய்யப் புது நூல்கள் வேண்டும்! தவிர, அத்தகைய சிறந்த நூல்களைக் காப்பது, புதிதாக அதுபோல ஒன்று செய்வதைக்காட்டிலும் மிக மிகச் சிறந்ததன்றோ? சிருஷ்டிக்கும் பிரம்மனைப் போற்றுவாரில்லை. ஆனால் காத்தளிக்கும் கண்ணனை யாரும் இகழ்வதில்லை. சில சமயங்களில் 'ஏன் இந்தப் பிரமன் இதனைப் படைத்தான்!' என்றுகூட நொந்து கூறுகிறோம். அப்படிப்பட்ட பழிச்சொல் எதுவும் காப்போன்பால் நிகழாது. இதுபோன்ற எண்ணங்களே ஐயரவர்களைப் பழைய நூல்களைக் காக்கும் பணியில் தூண்டியிருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது.

'நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே' என்று ஈசனைக் குறித்து சுந்தரர்

---

*இவ்வரலாறு ஐயரவர்கள் 45 வருஷப் பெருமுயற்சியால் தொகுத்தெழுதிய ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களது சரித்திரத்தில் (2-ஆம் பாகம், 18-ஆம் பக்கத்தில்) காணப்படும்.

கூறியதொப்ப, நம் ஐயரவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டினை 'முக்குண வசத்தான்' சிலர் மறப்பினும், அவர்களது அந்தரங்க மனமானது கனவிலும் இவரைப் போற்று மென்பது திண்ணம், திண்ணம்!

இத்தகைய பெரியார், இன்று, 80 வயது பூர்த்தியாகப் பெற்று நம்மிடையே, இன்னு மூள்ள தமிழ்ப் பழநூல்களை ஆராய்வதில் இளைஞராகவே திகழ்வது அத்தமிழே செய்த அருந்தவந்தான் என்று கூறவேண்டும்.

இவ்வாறு புகழ்வெள்ளம் முடுகிப் பாய இடந்தரும் குணக்கடலாகிய இவரது பிறந்த நாள், நாளது மார்ச் மீ 6-ஆம் தேதி—மாசி மீ உக-ஆம் தேதி—புதன் கிழமையன்று கொண்டாடப்படும். இவ் விழா வானது உண்மையில் தமிழ்த்தாயின் திருவிழாவே யாம். அன்றையதினம் சென்னைச் சர்வகலா சாலை மண்டபத்தில் இவர்களது திருவுருவப் படத்தை நிலைபெற வைக்கவும், இவர்களுக் கோர் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக் கவும் ஏற்பாடாகி யிருக்கிறது.

இவைபோன்ற நிகழ்ச்சிகளை, இவர்போன் றார் வேண்டாரெனினும், நம் நன்றியைக் காட்ட நமக்கு வேறுவழியின்மையின், இவ் வாறுதான் செய்தாகவேண்டும். மற்றும் தமிழுலகுக்கு இவர் செய்துள்ள தொண்டி னுக்கு அறிகுறியாகக் கூடிய சீக்கிரத்தில் தமிழ்மக்களின் நன்முயற்சியால் இவரது சிறப்பு மிக்க உருவச்சிலை ஒன்றும் நிலை நிறுத் தப்படும் என்று எதிர்பார்க்கிறோம். தமிழர் களின் வண்மையும், நன்றிமறவாமையும் உலகப் பிரசித்தமன்றே?

இனி, வயது அறிவு முதலியவற்றில் நாமெல்லோரும் ஐயரவர்களைவிட எவ்வ ளவோ இளையவரா யிருப்பினும், ஆழ்வாராதி கள் மாலுக்குப் 'பல்லாண்டு' கூறியதொப்ப, இவர்கள் அரோகதிடகாத்திரராக இன்னும் பல்லாண்டு வாழ்ந்துவரவேண்டுமென்று (நம் சுயநலம் கருதியே) மனமொழிமெய்களால் எம்பெருமானைப் போற்றி, வாழ்த்துவோ மாக!

வாழ்க வந்தணர் வானவ ராநினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெ லாமர னுமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

(பாலறுவாயர்)

—பாரதஜோதி-1-3-35.

முக்கிய அறிவிப்பு

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலா நிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர் களின் 80-ஆம் ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுவதற்கு கனம் பி. டி. ராஜன் முத லான ப்ரபல ப்ரமுகர்கள் முன்வந்துள்ளதை உன்னியுன்னி மனமகிழ்வடைகிறோம். ஐய ரவர்கள் தமிழுலகத்திற்குச் செய்த உபகாரம் உரைக்கும்பெற்றித்தன்று. இறைவன், உயிர் கள் நல்லதும் தீயதும் அறிந்து நன்னெறி சேர்ந்துய்வதற்கு நற்கலிகளைக் காட்டித்தந்த தையே பேருபகாரமாகக் கொண்டாடுதல் ஆன்றோர்வழக்கு. விஷயத்தை உணரக்கருது மவனுக்கு அதற்குச் சாதனமாகியநூலில்லாத போது விஷய உணர்ச்சி உண்டாகமாட்டா தென்பது ஒருதலையன்றே? உணர்ச்சி யுண் டாவதற்குக் காரணமாயிருக்கிற நூல்களை உபகரிப்பதே தலைசிறந்த உபகாரமாகும். முதற்சங்க காலத்தும் பிற்காலத்தும் ஒழிந் தனபோக எஞ்சிநின்ற சங்க நூல்கள் தற் பொழுது வழங்கப்படுபவை எவையோ, அவையெல்லாம் ஐயரவர்களாலே வெளியிடப் பெற்றன. இவை வெளிவராவேல் தமிழுலகம் எவ்வளவு அல்லலுறும்! இக்குறையினை யகற்றிய ஐயரவர்களுக்குத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்யவல்லது! ஒருவாற்றான் அவர்கள் செய்த நன்றியைப் பாராட்டுதற்கு அவர்களின் 80-ஆம் ஆண்டு நிறைவுவிழா வந்துற்றதும் தமிழுலகம் செய்த பாக்யமே. இந்த விழாவிற்குத் தமிழ்மக்கள் வேண்டிய பொருளுதவி புரிந்து நேரிலிருந்து அவ்விழா வைக் கொண்டாடுதற்குக் கடமைப்பட்டவ ராவரென்பதைத் தாழ்மையோடு தெரிவித் துக் கொள்ளுகிறோம்.

—ஹரிசமயதிவாகரம்.

ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய Dr. உ. வே. சாமிநாதையரவர்களின் 80-ஆவது ஆண்டு நிறைவு விழா

அடுத்த மார்ச்சு மீ 6-ஆம் தேதி யன்று இத்திருவிழா சென்னையில் கொண்டாடப் படும். திரு ஐயரவர்களின் மதிப்பரிய தொண்டுகளை அறிந்த தமிழ்மக்கள் இத்திரு விழாவில் மிகுந்த அக்கரை எடுத்துக்கொள்ள வேண்டுவது அவர்கள் கடமை. அதற்காகத் தம்மால் கூடிய அளவு பொருளுதவி செய்து திருவிழாவைச் சிறப்பாக நடத்துவ தற்கு முன்வருவார்களாக. ஐயரவர்களின் தொண்டுகளை எடுத்துக்காட்டிப் பாராட்டுவ தற்கு இது தக்க சமயமென்று எடுத்துக் காட்டுகிறோம். சொங்குமலர்—பவஹ மாசி.

பத்திராசிரியர் குறிப்பு

சென்னையில் தக்க தமிழபிமானிகள் கூடி, நாளிது 1935-ஆம் ஹஹ மார்ச்சுமீ 6உ ஸ்ரீ மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலா நிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 80-ஆம் ஆண்டுநிறைவுவிழாக் கொண்டாடக் கருதியிருப்பதாகத் தெரிந்து மிகுந்த சந்தோ ஷமடைகிறோம்.

ஐயரவர்கள் நம் தமிழ்மொழிக்கு ஓர் ஐம் பதிற்றியாண்டின் மேலும் நீண்டகாலம் புரிந்துவரும் அரும்பெரும் பணிகளுக்கு அள வில்லை.

அன்றியும், அவர்கள் நம் மதுரைத் தமிழ்ச்சங்கம் தோன்றிய காலந்தொட்டுச் சங்கத் தனித்தமிழ்ப்புலமைத் தலைமை பூண்டு சாசுவத அங்கத்தினராகவும், சங்க நிர்வாஹ ஸபையங்கத்தினராகவும், வித்யாவிஷய ஆலோசனை ஸபையங்கத்தினராகவும், தனித் தமிழ்ப் பரீக்ஷைப் பரீக்ஷகராகவும், நூற் பரிசோதகராகவும் இருந்து தமிழ்ப்பரி பாலனம் புரிந்துவருவதும் தெரிந்ததே.

இத்தகைய காரியங்கள் எத்துணையோ பல இடையீடின்றி யியற்றிவரும் ஐயரவர்கள் போலும் பெரும்பாக்கியமுடையார் இக் காலத்து எவருமில்லை. இவ்வாறு உலக நன்மை புரிந்துவரும் ஐயரவர்களது ஒப்புர வாண்மைக்குத் தமிழுலகம் என்ன கைம்மாறு செய்யவல்லது! அவர்களிடத்து ஒவ்வொரு தமிழரும் நன்றியறிதலுடையராய் அத்திரு விழாவிற் கலந்து அதனைச் சிறப்புறச்செய்வ துடன் அத்திருவிழாவிற்குத் தம்மாலியன்ற பொருளுதவி புரிந்தும் கிருதார்த்தர்-(செய்த பொருளுடையர்) ஆவதே தக்கதாகும்.

இவ்விழாவைச் சிறப்பிப்பது தமிழைச் சிறப்பிப்பதாகவும் இதற்குப் பொருளுதவி புரிவது தமிழுக்குப் புரிவதாகவும் உலகத்தா ரால் பாராட்டப்பெறும்.

அல்லும் பகலும் அனவரதமும் அருந் தமிழ்ப்பணியாற்றிவரும் ஐயரவர்கள் அரோக திடகாத்திரராய் எல்லா நலனுமெய்தி இன் னும் பல்லாண்டு வாழ இறைவன் திருவருள் புரிக.

கீரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.
—செந்தமிழ், பவ, மாசி, 1935.

'தோன்றிற் புகழொடு தோன்றல்', 'இசை பெற வாழ்தல்' என்பனவாதிய அருமைத் திரு வாக்குகளுக்கு இலக்கியமாக, கல்வி அறிவு ஒழுக்கங்களின் நிலைக்களமாக, தமிழ்த்தாயின் அருமைத் திருமகனாக, தமிழ் உலகத்திற்குத் தலைவராக, தமிழர் பெருநிதியாக, செந் தமிழ்த் தெய்வமாக, வையகம் புகழும் நமது ஐயரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடவேண்டியது நமது கடமை யென்பதை யுணர்ந்து முன்வந்த கூட்டத்தினர்க்கு நன்றி பாராட்டுவதுடன் நாமும் அதிற் கலந்துகொள்ளவும், எல்லா வகையானும் விழா இனிது நிறைவேறவும் தமிழ்முனிக்கருளும் முருகவேள் திருவருள் துணைபுரிய வேண்டுவோமாக!

—சிவநேசன், பவஹ, மாசிமீ.

சதாபிஷேகம்

தமிழ்நாட்டிலே, தற்காலத்திலே பெரும் புகழ்பெற்று விளங்கும், மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி டாக்டர் பிரம ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்களின் 81-ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, "சதாபிஷேக முகூர்த்தம்" நடத்துவதை யறிந்து பெரிதும் உவகையடைகின்றேம். ஐயாவர்கள் தமிழ்மொழிவளர்ச்சி கருதிச் சென்ற அறுபது ஆண்டுகளாகச் செய்துவரும் தொண்டு தமிழகத்தாரெவரும் நன்கறிந்ததே. ஆதலின், நம் ஐயரவர்கள் இன்னும் தமிழ்மொழி வளர்ச்சிக்காகச் செய்ய வேண்டிய தொண்டுகள் பல செய்து எல்லா நலன்களும் பெற்றுப் பல்லாண்டு வாழப் பரம்பொருளின் திருவருளே வேண்டிப் பல்லாண்டு கூறுதும்.

ஐயரவர்களின் சோதரர் பிரமஸ்ரீ வே. சுந்தரம் ஐயர் அவர்களுக்கும், புதல்வர் பிரம ஸ்ரீ சா. கலியாணசுந்தரம் ஐயரவர்களுக்கும் எமது நன்றியறிதலான வணக்கம் உரிய தாகுக!

—ஈழகேசரி-3-3-35.

தமிழ்ப்பெரியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவுவிழா

ஸ்ரீ மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடைய எண்பதாவது ஆண்டு நிறைவை மிகச் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்றெண்ணி அதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யும்பொருட்டு, சென்னைத் துரைத்தன மந்திரி கனம் பி. டி. ராஜனவர்களுடைய தலைமையில் ஒரு சபை அமைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் தி. சிவராமசேதுப்பிள்ளையவர்களும், ஸ்ரீமான் பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்களும், ஸ்ரீமான் எஸ். வையாபுரிப்பிள்ளையவர்களும் காரியதரிசிகள். ஸ்ரீமான் ராவ்பகதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயரவர்கள் பொக்கிஷதார். அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையைப் பின்னே பிரசுரித்திருக்கிறோம்.

ஸ்ரீ ஐயரவர்களுடைய பெருமையை உலகு நன்கு அறியும். தமிழ்நாட்டிற் பிறந்த ஒவ்வொருவரும் அவர்கள்பால் நன்றிபாராட்டக் கடமைப்பட்டவராவர். அவர்களுடைய பேருழைப்பின் பயனாகத் தமிழுலகில் ஒரு புது யுகம் உண்டாயிருக்கிறதென்பதில் ஐயமில்லை. அவர்கள் சம்பந்தமான இக்கொண்டாட்டத்தைச் சிறப்புற நடத்துவதில் ஒவ்வொருவரும் தம்முடைய ஆற்றல் முழுவதையும் காட்டித் தொண்டுபுரியவேண்டும். ஐயரவர்களால் தமிழ் உலகடைந்த நன்மையைத் தமிழறிஞர்கள் நன்கு எடுத்துக் கூறியாவரையும் இக்கொண்டாட்டத்திற்குப் பலவகையில் உதவிபுரியும்படி தூண்டவேண்டும். பள்ளிக் கூடமாணவர்கள் தங்களுடைய தமிழ் அன்பைக் காட்டுதற்குரிய செவ்வி வாய்த்திருப்பதை எண்ணித் தமிழ்ப்பெரியாரைப்பற்றிய புகழ்களைப் பரப்பவேண்டும். எவ்வளவு முயற்சிகளைச் செய்தாலும் அவ்வளவும் தமிழ்த்தாயின் தொண்டேயாகும்.

—கலைமகள், பவஹ, மாசிமீ.

அபிமானிகள் எழுதிய கட்டுரைகள்

பர்மாவாழ் தமிழர்கட்கு ஒரு வேண்டுகோள்.

திருவாளர்களான பி. எஸ் மோசஸ், ஆ. ஞானகுருபரன், அ. கருப்பன் செட்டியார், பொ. திருகூடசுந்தரம், அ. சாமி ஐயர், வெ. சாமிநாத சர்மா, மு. சோமசுந்தரம் செட்டியார், கே. ஜி. கிருஷ்ணன் ஆகியோர் கையெழுத்திட்டுக் கீழ்க்கண்ட வேண்டுகோளை வெளியிட்டுள்ளார்கள்.

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்—தமிழ்ப் பெரியார்—டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாவதாண்டுப் பூர்த்தி விழா 6-3-35-ல் வருகின்றது. தமிழ்நாட்டில் அவ்விழாவைத் தக்க முறையில் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பெற்றுவருகின்றன.

சென்ற அறுபது வருடகாலமாகத் தமிழ் மொழிக்கு, தளராது தொண்டியற்றிய மகாமகோபாத்தியாயரின் எண்பதாவதாண்டு விழாவைப் பர்மாவாழ் தமிழர்களாகிய நாம் கொண்டாடப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்விழா சம்பந்தமாக 6-3-35-ல் பர்மாவாழ் தமிழர்களின் சார்பாகப் பொதுக் கூட்டம் ஒன்று நடத்தவும், நிதி ஒன்று வசூலிக்கவும் தீர்மானித்துள்ளோம். இந்நிதிக்குப் பொருளுதவுவோரின் பெயர்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் அவ்வப்போது வெளியிடப் பெறும். நிதிக்குப் பொருளுதவ விரும்புவோர்களை "பாரதபந்தர், 110, 48-ஆவது வீதி, கிழக்கு ரங்கூன்" என்ற விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் விழாவைச் சிறப்புறச் செய்யுமாறு தமிழ்ப்பெருமக்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை கேட்டுக்கொள்ளுகின்றோம்.

—தனவணிகன்-14-2-35.

தமிழ்ப்பெரியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவிழா

தமிழறிஞர் ஒருங்கே புகழும் பெருமை பெற்றுள்ள மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரது எண்பதாம் ஆண்டு 1935-ஆம் ஆண்டு மார்ச்சுத் 6-ஆந் தேதி முடிவுறுகின்றது. அந்நாள் மாலை 5-மணிக்கு ஐயருக்கு வாழ்த்துக்கூறி உபசாரப்பத்திரிகையொன்றை வாசித்தளிக்கவும், அவர்களது திருவுருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெறவைக்கவும் அவர்கள் தமிழ் உழைப்புக்கு உரிய கைம்மாறு இயன்றவரையில் செய்யவும் கனம் பி. டி. ராஜன் போன்ற பேரறிஞர் முன்வந்திருப்பது தமிழுக்கே பெரும்பேறாகும். இது தமிழின் முன்னேற்ற மென்னும் மாளிகைக்கு அஸ்திவாரம் என்றே நான் நினைக்கிறேன்.

மேனாடுகளில் சாதாரண நாவலாசிரியர்க்கெல்லாம் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுதல் வழக்கம். நம் தமிழ்நாட்டில் தமிழர் தம் தாய்மொழியையும் அதனில் துறைபோனவர்களாயிருக்கும் ஐயாவர்கள் போன்ற பேரறிஞர்களையும் பாராட்டுவதில்லை. இப்பொழுது இவர்கள் பாராட்டவந்திருத்தல் தமிழ் உலகிற்கொரு நவயுகம் பிறந்திருக்கிறதென்றே கூறுதல் வேண்டும்.

தமிழ்ப்பெரியார்களாகிய ஐயரவர்கள் சாதி வேறுபாடுகள் இல்லாதவர்கள். பாஷை ஒன்றே அவர்களது உயிர்நாடி. தமிழ்ப்புலவர்கள் தமிழர்கள் என்றுல் அவர்கள் அவர்களோடு அளவளாவுதல்கண்டு மகிழத்தக்கது. அவர்கள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பெருங்காப்பியநூல்களையும் புறநானூறு, பரிபாடல், பத்துப் பாட்டு முதலிய சங்க இலக்கியங்களையும், பிற இலக்கண நூல்களையும் பல்லாண்டுகளாக அரிதின் முயன்று இனிதே வெளிபடுத்தியுள்ளார்கள். சுருங்கக் கூறின் அவர்களது ஆயுள் தமிழ்மொழிக்கே அர்ப்பணம் செய்யப்பெற்றதாக இருந்து வருகின்றது. எண்பது வயது நிரம்பப் பெற்ற இப் பெரியார் அவர்கள் இப்போதுகுறுந்தொகை

என்னும் சங்கநூலே ஆராய்ந்து வெளியிட முயன்றுவருகிறார்கள். எனின், இவர்களது தளராத ஊக்கத்தையும் தமிழ்ப்பற்றையும் என்னென்றுரைத்துப் பாராட்டுவது!

இப்பெரியார் அவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவிழாவைத் தமிழன் ஒவ்வொருவனும் பேரூக்கத்துடன் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளான். சென்னையில் நடக்கும் விழாவைக் கூட்டியுள்ள கமிட்டியாரது விலாசத்திற்கு ஒவ்வோர் உண்மைத் தமிழரும் தம்மால் இயன்ற பொருளே அனுப்பி விழாவை வெற்றிபெறச் செய்வித்தல் வேண்டும். இது தமிழராகிய நம்மனோர் கடமையாகும். பணம் அனுப்புவோர் "கே. வி. கிருஷ்ண சாமி ஐயர், பி. ஏ., பி. எல்., வடக்குமாட வீதி, மயிலாப்பூர், சென்னை" என்ற விலாசத்திற்கு அனுப்பும்படி வேண்டுகின்றேன். எல்லாம்வல்ல இறைவன் ஐயரவர்களுக்கு நீடிய ஆயுளையும் இளமை பொருந்திய பேரூக்கத்தையும் அளித்துத் தமிழ் மொழியை நலனுறச் செய்வானாக எனத் தமிழராகிய நாம் வேண்டுவோமாக. தமிழ்ப் பெரியார் ஆற்றுமணலினும் பல வாழ்நாட்களேப்பெற்று வாழ்க! வாழ்க!! வாழ்க!! என்று வண்ணரப்பேட்டைத் தமிழாசிரியர் ஸ்ரீமான் மா. ராஜமாணிக்கம் எழுதுகிறார்.

—சுதேசமித்திரன்-16-2-35.

மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்கள்
80-ஆவது ஆண்டுப் பூர்த்தி விழா

கும்பை, தனவைசியர் கல்விக் கழகத் தமிழ்ப்பண்டிதர் திரு. சு. கந்தசாமி தேசிகர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

பொன் விளையும் பூமியாகிய நம் தமிழ் நாட்டில் சகிகற்பனானம்பயக்கும் வியஞ்சக ஞானகாரணமாய் விளங்குகின்ற கல்வியைக் கற்றறிந்த தெய்வப்புலவர்கள் பலர் இருந்தார்கள்; இருக்கின்றார்கள்; இருப்பார்கள் என்பது பல்லோரும் அறிந்ததொன்றாகும்.. அப்புலவர்களே அன்போடு போற்றுவோரும் பலர். அத்தகைய புலவர்களுள் நம் தமிழ்த் தாயின் தவப்புதல்வரும் தமிழ்நாடு உய்ய உதித்தவருமாகிய பெரியார் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்தியகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவாகிய நற்பயனளிக்கும் நன்னாள் நணுகியது. ஸ்ரீமத் ஐயரவர்களின் பெருமையை யறியாதாரு முளரோ! அறுபது ஆண்டுகளாக ஐயரவர்கள் தன்னலங் கருதாது எங்கணுஞ் சென்று பழந்தமிழ்நூற்சுவடிகளைப் பரிந்து தேடி ஆழ்ந்து நோக்கி அவற்றிலுள்ள குற்றங் களைந்து குணங் கொண்டு ஒப்பு நோக்கி ஆராய்ச்சியுரை சேர்த்து அச்சிட்டு இழந்த பொருளைப் பெற்றோமென்று என்றுங் களிக்கத் தமிழுலகிற்கீந்த தந்தையன்றோ நம்மையரவர்கள்! அவர்களின் பெருமையும் அறைதற்பாற்றோ! சொற் பெருக்கின் வன்மையையும் கட்டுரையின் கண்ணியத்தையும் விரிக்கிற் பெருகும். 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்—வேட்ப மொழிவதாஞ் சொல்' என்ற பொய்யாமொழியாரின் வாக்கைப் பொய்க்காது செய்யுந்திறத்தினர். அறிவாளர்கள் அளித்துள்ள பட்டமே ஐயரவர்களின் திறனே விளக்கும். இத்தன்மைவாய்ந்த பெரியாரின் எண்பதாவதாண்டு நிறைவுற்ற தினமாகிய நன்னாளைத் தமிழபிமானிகள் கொண்டாட வேண்டுமென்பது வரையாமலே விளங்கும். இவ்விழாசம்பந்தமாக நமது நண்பர்கள் சிலர் சென்ற வார 'தனவணிக'னில் பர்மாவாழ் தமிழர்கட்கு வெளியிட்ட வேண்டுகோளைப் படித்திருப்பார்கள். தனித்தனியாகக் கொண்டாடுவது அருமையாயிருப்பினும் பொதுவாகச்சேர்ந்து கொண்டாடுமிடங்களில் தாங்களுங் கலந்து கொள்வதோடு பொருளுதவி புரிந்து விழாவைச் சிறப்புற நடத்தி ஸ்ரீமத் ஐயரவர்களுக்கு நிறைந்த ஆயுளும் மனப்பூர்த்தியும் உண்டாகுமாறு இறைவனே மனமார வழுத்துவோமாக.

—தனவணிகன்-21-2-35.

தமிழ் பழுத்த பழம்

தமிழன்

அன்றொரு நாள் அருட்பிரகாசவள்ளலார் 'அருள் பழுத்த பழச்சுவையே கனியே தேனே' என்று பாடிய பாட்டின் அடி ஒலிக்கையிலே அதையும் அமிழ்த்திவிட்டு என் உள்ளத்தில் ஒரொலி எழுகின்றது; 'தமிழ் பழுத்த பழச் சுவையே, கனியே, தேனே, சாமிநாதத் திருப்பேர் உடையாய் வாழி' என்று நா வாழ்த்துகின்றது. தமிழ் என்ற நினைவு எழும்பொழுதெல்லாம் இவை நிகழ்கின்றன. இந்த நிகழ்ச்சிகளே இன்னும் அதிகப் படுத்திவிட்டது சில நாட்களுக்கு முன் பத்திரிகைகளில் வெளிவந்த அறிக்கை.

எண்பது வருஷம் பழுத்த பழம், அறுபது வருஷமாகத் தமிழ்த்தேனை இடையறாது பில்கிக்கொண்டிருக்கிறதென்று இன்றைக்காவது தமிழன் கண்விழித்துப் பார்த்தானே! ஆமாம்! டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தந்த—தரும் தமிழ்த்தேனை அறுபது வருஷங்களாகத் தமிழன் குடித்தும் உணர்ச்சி பெறவில்லையே. இன்றைக்குத்தான் அந்தத் தேனின் இருப்பிடம் எல்லாருக்கும் விளங்க வேண்டுமென்பது கடவுள் ஸங்கல்பம் போலும்.

எண்பது ஆண்டுகள்வரையில் தமிழ் பழுத்த பழத்தைத் தமிழன் மறந்தது பெரும் பாவம்! இதற்குமுன் எத்தனை கொண்டாட்டங்கள் நடத்தியிருக்கலாம். போனது போகட்டும்.

ஸ்ரீ மகாமகோபாத்தியாய சாமிநாதையர் வர்கள் வேறு, தமிழ் வேறு என்பவர்கள் அவர்களை அறியாதவர்கள்; தமிழையும் அறியாதவர்களென்றே சொல்லவேண்டும். பழைய இலக்கியப் புதையல்களை எடுத்துத் துலக்கிப் புதுப் பவுன்களாக அடித்துத் தந்த அவர்களுடைய எண்பதாவது ஆண்டு நிறைவைத் தமிழ் நாட்டினர் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். இல்லாவிட்டால் 'நாங்கள் தமிழர்கள்; வீரம் செறிந்த தமிழ்நாடு எங்கள் நாடு; புலவரும் புரவலரும் சரி நிகர் சமானமாக இருந்த நாடு எங்கள் நாடு' என்று நெஞ்சு நிமிர்ந்து பேசுவதற்கு அர்த்தமே இல்லை. 'நீ தமிழ்ப்பூனை யல்ல; தமிழ்ச்சிங்கம்' என்று காட்டிவிட்ட சிங்கத்தை நாம் மறக்கலாமா?

தமிழர் வீரம், தமிழர் அரசியல் முறை, தமிழ்ப்புலவர் பெருந்தன்மை, தமிழ் மகளிர் மாண்பு, தமிழர் நாகரிகம், தமிழர் கைத்தொழில் முயற்சி, தமிழர்மொழி முன்னேற்றம்—இன்னும் உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் அடுக்கிக் கொள்ளுங்கள்—இவ்வளவும் அந்த ஒரு மகான் பிறந்திராவிட்டால் நாம் பேசுவதெங்கே? நேற்றுப் பிறந்த பாலைகளெல்லாம் அவையேறி நிற்க, சதகங்களிலும் மாலைகளிலும் அந்தாதிகளிலும் மறைந்தொடுங்கித் தமிழ் மொழியை அழியாமற் காப்பாற்றிவிட்ட தமிழ்வள்ளலுக்கு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? நாட்டில் நூற்றுக்கணக்கான இடங்களில் அவர்களுடைய உருவச் சிலை நின்று விளங்குவதை நாம் கண்டு கண்குளிரவேண்டாமா? ஒரு சிலையை யாவது நம்மால் நிறுத்த முடியுமென்ற வீரம் பேச அன்பர்கள் முன் வருவார்களாக!

அவர்கள் தமிழுக்காகவே ஒவ்வொரு மூச்சையும் விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசுவது தமிழ்ப்பேச்சு; எழுதுவது தமிழ்மகளை அணிசெய்யும் எழுத்து; வாழ்வது தமிழ்மகளின் மங்கலம் விளங்க. நாம் அவர்களைப் போற்றினால் தமிழ்மகளுடைய பேரழகை இன்னும் நன்றாகக் காணலாமல்லவா?

நல்ல சமயம்! இப்பொழுது முனைந்தால் தமிழர் தம்முடைய மொழிப்பற்றைக் காட்டிவிடலாம். மார்ச்சு மாதம் 6-ம் தேதி தமிழ் நாடு முழுதும் சாமிநாதையர் பேச்சாக இருக்கவேண்டும். எங்கும் தமிழ்மணம் கமழவேண்டும். தமிழர் நன்றியறிவுடையவர் என்பதை நிலைநாட்ட வேண்டும். தமிழருடைய உணர்ச்சியைச் செயலில் அல்லவா பார்க்கவேண்டும்?

—தினமணி-23-2-35.

AN APPEAL TO TAMIL LOVERS

தமிழ் அபிமானிகளுக்கு ஒரு விண்ணப்பம்

பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரையர் வரைவது

தமிழகப்பெரியீர்! நமது பாரதநாட்டில் பண்டைக்காலம் நற்றமிழறிஞர் பலர் வீற்றிருந்து சீரிய வாழ்க்கை நடத்தினர். அப் பெரியார் தமிழை வளர்த்தனர். தமிழ்ப் புலவர்களைத் தமிழரசர் பலர் ஆதரித்தனர். இவை முழுதும் உண்மையே. ஆனல் தமிழ்ப் புலவர் சிலருடைய வரலாறு இத்தன்மைத்து என்று அறியக்கூடவில்லை. காரணம் அவர்கள் அரிய வாழ்க்கைச் சரிதமின்மையேயாம். தற்காலம் சிலாசாசனங்களினுதவியால் சிற்சில வரலாறுகள் அறியலாம். அப் புலவர் பெருமக்களினும், தமிழைப் பலர் ஆதரியாத முறையில், அரும்பாடுபட்டுத் தமிழன்னையை வளப்புறச் செய்தாரும் இக்காலம் இலைமறை காயென்ன இலங்குகின்றனர். அக் கலாபூஷணர்களுட் சிறந்த பெரியார் ஒருவர் இருக்கின்றார். அவர் பெருமை சில காட்டுவன். அவர், நமது நாட்டின் மன்னர் பெருந்தகையாரும் அயல் நாட்டு வேற்று மொழி வல்லாரும் போற்றி மதிக்கும் செந்தமிழ்ப் புலமை பொற்புறப்பெற்ற பெரியாரேயாவர். அவர், அறிவினொளி பல புத்தகங்களாய் உருவமைந்து திகழுகின்றது; ஜகத் குரு ஸ்ரீமத் சங்காராசாரியரவர்கள் 'தாகூஞ்ஞத்யகலாநிதி' என்னும் பட்டமருளினர். அரசினர் தமிழறிஞர் இதுகாறும் பெற்றிராத 'மஹாமஹோபாத்யாய' என்ற நற்பட்டமீந்தனர். தற்கால இயற்கை நாடிய சென்னைச் சர்வகலாசங்கத்தினர் 'டாக்டர்' என்னும் பெரும்பட்டமளித்தனர். இன்னோரன்ன பெருமைகளுக்குப் பாத்திரரான, பிரம்மஶ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் இன்னும் பல்லாண்டுகல்லார்க்கும் கற்றவர்க்கும் கலைகளைய் நீடு வாழ்வார்களாக. செந்தமிழறிவுள்ள தற்கால மக்கள் தெய்வத்தமிழ்மொழிக்கு அவர்கள் புரிந்த நன்றியை மறக்கலாகாது. எண்பத்தோராம்ஆண்டு விழாவைத் தமிழகம் முழுதும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டுகை.

—இந்துநேசன்-23-2-35.

தமிழ்த் தாத்தாவுடன் ஒரு நாள்

தமிழன்

சென்ற கலைமகள் விழாவன்று சென்னைக்குச் செல்லும்படியான சந்தர்ப்பம் எனக்கு வாய்த்தது. கலைமகள் விழாவானதால் கலைமகளின் அருளுக்குப் பெரிதும் பாத்திரரான தமிழ்ப்பெரியார் ஒருவரைச் சந்திக்கவேண்டுமென்று எண்ணினேன். அவ்வாறு நான் எண்ணியதற்குக் காரணம் என்னுடன்போந்த சிறந்த ரஸிகரான ஆருயிர் அன்பரின் கூட்டுறவேயாகும்.

எனது நண்பருடன் காலை ஒன்பது மணிக்கெல்லாம் சென்னை, திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ள 'தியாகராஜ விலாசம்' என்னும் கட்டிடத்திற்குச் சென்றேன். அவ் வீட்டிற்குரிய தாத்தா, வேறொரு வீட்டில் அமைதியாக நூலாராய்ச்சி செய்துகொண்டிருக்கின்றார் என அறிந்தோம். எங்கள் வருகை அவருக்கு அறிவிக்கப்பெற்றது. அதற்குள்ளாக என் நண்பரும் நானும் வீட்டினுள் சென்று அங்கிருந்த நாற்காலிகளில் அமர்ந்தோம்.

அப்பொழுது வெயில் சிறிது அதிகமாய் இருந்தது. எனவே அங்கு விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சிறுவர்களில் ஒருவரைக் கூப்பிட்டு 'விசிறி வேண்டும்' என்றார் நண்பர். சொன்னதுதான் தாமதம், உடனே மூத்த பையன் விசிறியை எடுத்துக் கொண்டுவந்து என் நண்பருக்கு வீச ஆரம்பித்தான். என் நண்பர் அவ் விசிறியைத் தம்மிடம் கொடுக்குமாறு எவ்வளவோ மன்றாடியும் பலிக்கவில்லை. மூத்தவனுக்குக் கிடைத்த பாக்கியத்தைக் கண்டு இளையவனுக்குச் சகிக்க முடியவில்லை.

இளையவன் மூத்தவனை நோக்கி, "நீ விசிறியை என்னிடம் கொடு; இரண்டு மாமாவுக்கும் விசிறுகின்றேன்" என்றான்.

"அதெல்லாம் முடியாது. நீ இன்னுமொரு விசிறி கொண்டு வந்து அந்த மாமாவுக்கு விசிறு" என்றான் மூத்தவன்.

அடுத்த நிமிஷத்தில் இளையவன் ஒரு விசிறியுடன் வந்து எனக்கு விசிற ஆரம்பித்தான். இவர்களுடைய போட்டி போட்ட உபசரிப்பில் நாங்கள் தத்தளித்தோம். குழந்தைகளை இவ்வளவு அருமையாகப் பழக்கி வைத்திருக்கும் பெரியவர்பால் எங்களுக்கு உண்டான மதிப்பு அதிகமாயிற்று.

நாங்கள் எதிர்பார்த்திருந்த தாத்தா வந்து சேர்ந்தார். அன்போடு "வாருங்கள்" என்று கூறி மிகுந்த உற்சாகத்தோடு மேல்வீட்டிற்குச் சென்றார். நாங்களும் அவரைப் பின் தொடர்ந்தோம்.

மேல் வீட்டில் ஒரு ஹால். கீழே பாய் விரிக்கப் பெற்றிருந்தது. பக்கத்தில் ஒரு சாய்வுநாற்காலி. நாற்புறங்களும் கண்ணுடி அலமாரிகளில் ஓலைச்சுவடிகளும் புத்தகங்களும் காணப்பெற்றன. சுவரில் பல பெரியார்களின் படங்கள் காணப்பெற்றன. அவர்களெல்லாரும் இந்தத் தாத்தாவின் நண்பர்களாம்.

அந்த ஹாலுக்குள் சென்றதும் ஏற்கனவே அங்கிருந்த இரண்டு முஸ்லீம் பெரியார்கள் எழுந்து இத்தாத்தாவை வரவேற்றனர்.

அவர்களில் ஒருவர் சிறந்த மதப்பற்று உடையவரும் பத்திரிகாசிரியருமாவர். மற்றொருவரும் நல்ல தமிழபிமானி. நாங்கள் அனைவரும் கீழே அமர்ந்து தாத்தாவை நோக்கி 'நாற்காலியில் அமருங்கள்' என்று பணிவோடு கூறினோம். 'எனக்கு அது வழக்கமில்லையே' என்று கூறிக்கொண்டே அத்தாத்தா எங்கள் மத்தியில் கீழே உட்கார்ந்தார்.

சில தாத்தாக்களைக் கண்டால் நமக்குப் பிடிக்காது. பல தாத்தாக்கள் அழுக்கு வேஷ்டியுடன் மிளிர்வார்கள். பேசினால் வாய் நாற்றம் தோன்றும். கண்களிலே கோழை வடியும். பக்கத்திலிருக்கவே அருவருப்பாய்த் தோன்றும். ஆனால் இந்தத் தாத்தா அப்படியல்ல. மிகவும் சுத்தமாக இருந்தார். அவரோடு சில மணிநேரம் அமர்ந்திருந்ததையே எனது நண்பரும் நானும் பாக்கியமாகக் கருதினோம்.

இந்தத் தாத்தாவுக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனால் நடந்துகொள்ளவேண்டிய மரியாதை முறைகளைப்பற்றி ஆங்கிலேயர்கள் இவரிடந்தான் பாடங் கற்றுக்கொள்ளவேண்டும். எங்களை முஸ்லீம் நண்பர்களுக்கு அறிமுகப் படுத்தினார். அவர்களையும் சிறந்த முறையில் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். சிறிது நேரத்திற்கெல்லாம் முஸ்லீம் நண்பர்கள் வந்த வேலையை முடித்துக்கொண்டு போய் விட்டார்கள்.

என் நண்பர் தாத்தாவை நோக்கி, 'கப்பலில் மயக்கம் அதிகம், அந்த மயக்கம் இங்கு வந்துதான் தீர்ந்தது' என்றார்.

"ஆம், நானும் கவலைக்கப்பலில்தான் மிதக்கின்றேன். அம்மயக்கமும் தங்களைப் பார்த்தவுடனேதான் தீர்ந்தது" என்றார் தாத்தா.

தாத்தா பதிப்பித்த பல அரிய நூல்களை விலைக்கு வாங்கும்பொழுது என் நண்பர், 'இன்று கலைமகள் விழா; இவ்வரிய நூல்களை இன்று வாங்குவது பொருத்த முடையது' என்றார்.

'ஆம், உண்மைதான். இன்றுதான் உண்மையில் கலைமகள் விழா. இதுவரை மூலையிலடுக்கப்பெற்றிருந்த புத்தகங்கள் இன்றுதான் விற்பனையாகின்றன' என்றார் தாத்தா.

பின்னர் என் நண்பர் 'தனவணிகன்' காங்கிரஸ் மலரொன்றைத் தாத்தாவிடம் சமர்ப்பித்தார். அதில் சர். மணி ஐயர், ஜீ. சுப்பிரமணிய ஐயர், கஸ்தூரிரங்க ஐயங்கார் முதலியோர் படங்களைப் பார்த்ததும் மிகுந்த அன்போடு 'இவர்களெல்லாம் என் நண்பர்கள், தியாகிகள், பெரியவர்கள்' என்றார். காந்தியடிகளின் படமும் ஜவஹர்லால் குடும்பப்படமும் தாத்தாவின் மனத்தைக் கவர்ந்தன.

தாத்தாவுடன் நாங்கள் சம்பாஷித்த இரண்டு மணிநேரமும் மதிப்பிடற்கரியதாகும். கல்விக் களஞ்சியமென்றால் தாத்தாவுக்கே தகும். எளிய நடையில் ஹாஸ்யம் ததும்ப உயர்ந்த விஷயங்களைக் கூறும் சிறந்த தன்மையைத் தாத்தாவிடந்தான் கண்டோம். இந்தக் கிழ வயதில் கண்ணுடியின்றி ஓலைச் சுவடிகளைப் படிக்கின்றார் தாத்தா.

தாத்தா தமிழ்த்தாயின் தவப்புதல்வர். அவர் புலவர்மட்டுமல்ல; ஆராய்ச்சியாளர். நல்ல உழைப்பாளி. அதோடு சிறந்த ஒழுக்க முடையவர். அதனாலேதான் சிறந்த நிலை மைக்கு அவர் வந்துள்ளார்.

அவர் பதிப்பித்துள்ள நூல்கள் எண் ணில. பதிப்பிக்கப்படவேண்டிய நூல்களும் எண்ணில. பொருட்செல்வத்தைப்போலவே நூற்செல்வத்திலும் வறண்டுள்ள தமிழ்த்தாய் தாத்தாவின் தொண்டுகளை எதிர்பார்த்து நிற்கிறாள்.

தாத்தாவின் எண்பதாவதாண்டுப் பூர்த்தி விழா வருகின்ற புதன்கிழமை யன்று தமிழ் நாட்டிலும் தமிழர் வாழும் வெளிநாட்டிலும் கொண்டாடப் பெறும். தாத்தாவின் படம் சென்னைச் சர்வகலாசாலையிலும் கும்பை தனவைசியர் கல்விநிலையத்திலும் திறந்து வைக்கப்பெறும். நமது தாத்தா, மகாமகோ பாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் இன்னும் பல் லாண்டு வாழ்ந்து தமிழ்த் தாய்க்குத் திருப் பணிகள் செய்யுமாறு எல்லாம்வல்ல இறை வனை வணங்குவோமாக. வாழ்க சுவாமி நாதையர்! வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ் மக்கள்!

—தனவணிகன்-28-2-35.

தமிழ்ப் பெரியாருடன் ஒன்றரை மணி நேரம்

"எஸ். வி."

மாலை மூன்று மணி இருக்கும். ஒருவரை இருவர் பின் தொடர்ந்தோம். திருவேட் டீசுவரன் பேட்டையை அடைந்தோம். அங்கே கலைமகள் வாழும் தியாகராஜ விலாசம் என்னும் கட்டிடத்தைக் கண்டோம். தமிழ்மகளைப் பேணிப் புத்துயிர் பெறச்செய் கின்ற—புது வடிவம் ஆக்குகின்ற பெரியார் இருக்கின்றனரோ வென வினவினோம். அங்கிருந்த அன்பர் எங்களை அன்புடன் வர வேற்று மேல்மாடிக்கழைத்துச் சென்றார். அங்கே எங்களை இருக்கச்செய்து விரைவில் தமிழ்ப்பெரியாரை அழைத்துவருவதாகச் சென்றார். இருக்குமிடத்துக்கு நாங்களே வருவதாகத் தெரிவித்தும் அவர் மறுத்து நாங்கள் இருந்த இடத்துக்கே தாத்தாவைக் கூட்டிக்கொண்டுவந்துவிட்டார்.

வந்ததும், என்ன உபசாரம்! எதிர்பாராத விதமாக எங்களனைவரையும் பெரியார் வாய்த் தோன்றிய உபசாரவார்த்தைகள் பிரமிக்கச் செய்துவிட்டன. சுமார் ஒன்றரைமணி நேரம் உரையாடிக்கொண்டிருந்தோம். எவ் வளவு புதுமை இடையிடையே தோன்றிற்று! அப்பப்பா! எவ்வளவு நகைச்சுவை சம்பாஷ ணையில் மிடைந்து மிளிர்ந்தது! ஒவ்வொரு பேச்சிலும் நகைச்சுவை, நுண்பொருட் பொ திவு, பழமையை நினைவுக்குக்கொண்டுவரும் திறமை! இத்தனையும் நிறைந்திருந்தன வென்று கூறினால் அது மிகையாகாது.

பதினேழு வருடங்களுக்கு முன் ஒருமுறை ஐயரவர்கள் நமது செட்டிமார் நாட்டிற்கு விஜயம் செய்திருந்தபொழுது பற்பல ஊர் கட்குச் செல்லும் பேறு கிடைத்ததாம். அது காலை நிகழ்ந்த நிகழ்ச்சிகளனைத்தையும் அன்று நிகழ்ந்தனபோல் ஒன்றுவிடாது கூறியது எங்கட்குப் பெரிதும் மகிழ்ச்சியைத் தந்தது. தென்னிந்தியாவில் ஐயரவர்கள் நுழையாத கிராமமே இருக்கமுடியாது. காரணம், நமது பழம்பெரு நூல்களின் ஏட்டுப்பிரதிகட்காக ஐயரவர்கள் அலைந்து திரிந்து அரிதின் முயன்று பெற்ற விதங்களைக் கேட்டால் 'இவ்விதமும் நிகழ்ந்திருக்குமா!' என்று வியப்பும் திகைப்பும் எவரும் கொள் ளுவர்.

செட்டிமார் நாட்டிற்குச் சென்றிருந்த காலை, கவிராயரொருவர் சத்திரத்து ஊறகா யைப் புகழ்ந்து ஒரு கவிபாடியிருக்கிறார். அவ்வூர்ப் பெயர்கேட்டதும் ஐயரவர்கள் அப் பாடலை நினைவுறுத்திக் கூறிக் குறித்து வாங்கி வைத்துக்கொண்டார். நீண்ட காலத்துக்கு முன் நிகழ்ந்தன இன்று நிகழ்ந்தனபோல் அவரது அகக் கண்முன் நினைவில் நிற்கின்றன.

எங்கட்குச் செவிக்குணவு தந்த தாத்தா அருந்தும்படி (காபி) பானமும் தந்தார். தனித்தனியே வெள்ளிப்பாத்திரங்களில் பெற்ற எங்களின் அகக் குறிப்பறிந்து தாத்தா 'எனது தேட்டம் இவை யல்ல. பேரனின் மாமனார் வீடு அவனுக்களித்த ஆஸ்திகள்' என்றார்.

பின்னர் அவரது ஆஸ்திகளை எங்கட்குக் காட்டினர். மேல்மாடியின் ஒரு பகுதியில் வரிசை வரிசையாகத் தரைமீது அடுக்கி வைத்திருக்கும் சுவடிகளைக் காண்பித்து, 'இவைகள் என்னிடமுள்ளவற்றில் எட்டில் ஒரு பங்கு. இங்கு இவற்றை வகைப்படுத்தி வைத்திருக்கின்றேன். மற்ற ஏழு பங்கும் ஒருங்கே வேறிடத்தில் வைத்திருக்கிறேன்; அவற்றையும் விரும்பினால் பார்க்கலாம்' என்றார். ஒருங்கே கண்குளிரச் சேர்த்துப்பார்த்து விட்டுத் திரும்ப மனமில்லாத நண்பர்கள், 'போதும், ஒரு மடங்கு இதுவானால் எட்டு மடங்கு எவ்வளவாகும் என்பதைப் பெருக்கிப் பார்த்துக்கொள்கிறோம்' என்று கூறிச் 'சிலப்பதிகார' ஏட்டுச் சுவடியை மட்டும் அதுமதியுடன் அவிழ்த்துப் பார்த்தோம்.

'சிலப்பதிகாரம்' புத்தக வடிவில் படித்த பகுதியை அவ்வேட்டுச் சுவடியிற் படித்துப் பார்த்தோம்.

எழுத்துக்கள் சுத்தமாக அச்செழுத்துப் போல இருந்தும், அசை, சீர், தளை முதலிய பிரித்து எழுதப்படாத காரணத்தினால் தெளிவாகப் படித்து அறிந்துகொள்ள முடியவில்லை. இதிலிருந்து ஏட்டுச் சுவடிகளைப் புத்தக வடிவமாக்கத் தமிழகத்துத் தாத்தா எவ்வளவு தூரம் சிரமமெடுத்துக்கொண்டிருக்கவேண்டும் என்பது புலனாகின்றதல்லவா? ஏட்டுப் பிரதியளவிலேயே கிடந்த எத்தனையோ அரும் பெரும் நூல்களையும் அவற்றையாக்கிய பெரியார்களின் வரலாறுகளையும் அரும்பாடுபட்டுத் தமிழகத்துக்கு உதவிய பெருந்தன்மையைத் தமிழர்கள் நன்குணர வேண்டும். உணர்ந்து இன்னும் தாத்தா காலத்துக்குள் எத்தனை ஏட்டுப் பிரதிகளைப் புத்தக வடிவமாக்க வேண்டுமோ அத்தனைக்கும் தகுந்த ஊக்கங் காட்டுதல்வேண்டும். பல துறைகளிலும் உதவி வேண்டப்பெறுவதாயினும் இன்று முக்கியமானது பொருளுதவியே. அற்பமான அழிந்துபோகும் பொருளினைப் பெரிதென எண்ணுமல் உதவி, என்றும் அழியாததும் தமிழ் மொழியை வளர்ப்பதுமான பழம் பெருங் காப்பியங்களைப் புத்தகமாக்க ஐயரவர்களை ஊக்குவிப்பது தமிழர்களின் கடமையல்லவா? தமிழ் நாட்டில் தொன்மை வாய்ந்த பல சிறந்த நூல்கள் இன்று இருக்கின்றன என்றால் அதற்கு ஐயரவர்களைத் தவிர—அவர்களிடமுள்ள ஏட்டுப் பிரதிகளையும் அவர்களால் வெளியிடப்பட்ட புத்தகங்களையும் தவிர வேறு ஏதாவது ஆதாரம் உண்டா?

தாத்தா ஓய்வுறக்கமின்றித் தமிழ்த் தாய்க்குத் தொண்டு செய்யக் காத்துக்கொண்டிருக்கிறார். அவரது தொண்டினைக் காலத்துக்குள் உதவிபுரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டுவது தமிழ் மக்களின் இன்றியமையாத கடமையல்லவா?

—தனவணிகன்-28-2-35.

என்பத்தொன்றும் பிறந்த நாள்.

ஊ. சா. வேங்கடராமையர்.

செந்தமிழ் நாட்டில் முந்துபல் லாண்டாய்த்
தோன்றிவா னேக்கு மான்றசீ ராய்ந்த
தண்டமிழ்ப் பயிர்க்கோர் கொண்டல் மானப்
பொன்னிநன் னாட்டில் தன்னிகர் தானும்
புகழ்பெறு மூத்தம தான புராதில்
தண்டமி ழறிவே இன்னிசைத் தெளிவே
சான்றவ ருறவே சங்கரன் பூசையே
என்பன கைவந் தன்பமர் சரஸ்வதி
அம்மையும் வேங்கட சுப்பிர மணியச்
சீரிய ரும்புரி நேரிய நோன்பின்
பயனு வந்தித்த நயமிகு புனிதன்
ஆரியன் செந்தமிழ்ப் பேரிய லாசான்

என்று தமிழுலகம் போற்றிப் புகழும் பெருமை வாய்ந்து சிறந்து விளங்கும் ப்ரம்மஸ்ரீ மஹாவித்வான், மஹாமஹோபாத்யாய, தாக்ஷிணாத்யகலாநிதி, த்ராவிடவித்யாபூஷணம், டாக்டர் வே. சாமிநாதையரவர்களு

டைய எண்பத்தொன்றும் பிறந்த நாள் நாளிது பவருஷம் மாசிமாதம் இருபத்து மூன்றும்தேதி புதன்கிழமை (6-3-35) அன்று தமிழ்நாட்டினரால் மிகச்சிறப்பாகக் கொண் டாடப்பட வேண்டிப் பெரு முயற்சி நடைபெற்றவருகிறது. இந்த நன் முயற்சி யிலே முன்னின்று தொண்டியற்றத் தொடங் கியுள்ள பலருக்கும் முதற்கண் எனது நன்றி யறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நாடு புராதனப் பெருமை வாய்ந்தது; தடுக்க முடியாத பலவேறு காரணங்களால் அப்பெருமையை யிழந்து நிற்பது. இங்ஙனம் பெருமையிழந்து வீழ்ச்சியுற்ற நாட்டினர்க்கு வாழ்ச்சி பெறத் துணைபுரிவன அந்நாட்டுப் புராதன நூல்களே. அந்த நூல்களே அவர் கள் கைக்கொள்ளவேண்டிய குறிக்கோள் இவை என்பதைத் தெளிவுறத் தெரிவிப்பன. 'காலான முதற்பூமி கைவந்தால் முக்தியும் கைவந்ததாம்' என்பர். அங்ஙனமே 'மனைக் குள் வைத்த பண்டங்களே மறந்தவன் வருட நூறழுதாலும்-நினைத்துணர்ந்தபின் கிட்டும்' என்பர். இந்த இலக்கணங்களுக்குப் பொ ருந்த நமது நாட்டினர் தங்களது மறந்திழந்த பெருமைகளைப் பண்டை நூல்கள் காட்டும் குறிநெறிகளின் துணைகொண்டே பெற்று இன்புறுதல்வேண்டும்.

இம்முறையில் நம்மவர்க்குத் துணை செய் யும் நூல்கள் பல. அவற்றுள் பெரும்பாலான வற்றை இறந்தொழிந்து போகாமல் காத்துப் பதித்தளித்தருதல் எளியதொரு காரியமன்று; அருமையினும் அருமையான செயலே. இத் துணை அரிய செயலைச் செய்தவர்களும், செய் பவர்களும் மிகச் சிலரே. இத்தகைய பெரு மைக் குரிய செயற்கரும் செயலினைச் செய்து தலைநிறைந்து விளங்குகின்ற பெரியார்களுக்கு நம்மவர் செய்யவேண்டிய கைம்மாறு பல திறப்படும்.

'எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை, செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பர் திருவள்ளுவர். நன்றியறிதலை மிகச் சிறந்த தருமச் செயலாகக் கொண்டொழுகும் இயல்புவாய்ந்த தமிழ் நாட்டினர் இக்கட் டுரைத் தலைவராகிய ஸ்ரீமத் ஐயாவர்கள்பால் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள். ஐயரவர் கள் உடல், பொருள், காலம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாது தண்டமிழ்த் தாய்க்குச் செய்துவரும் தொண்டுகள் மிகப்பல. அவற்றை—

சிந்தா மணியே நந்தா தறங்கூ
மணிமே கலையே மன்னுஞ் சிலப்பதி
காரமே பத்துப் பாட்டே வெண்பா
மாலையே புறநா நூறே ஐங்குறு
நூறே பதிற்றுப் பத்தே துதிசேர்
பரிபா டலலே பாரோர் வியக்கும்
பற்பல செய்தியைக் கற்பனையுடனே
தந்தவப் பிக்கும் கொங்குவேள் கதையே
திருவிளை யாடலே அரியநன் னூலே
தாழிசை மணக்குந் தக்க யாகப்
பரணியே வொப்பிலாப் பாவலர் மணியாம்
தேசிக னூற்றெழுகைத் திரளே தேசிகர்
திரட்டே பலபல சிறுகாப் பியமே
பற்பல வுரையே திப்பிய சரிதமே

என்று ஓராற்றான் நன்றி தொகுத்துக் கூறு மாறு அமைந்து கிடக்கின்ற அவர்கள் அரி தின் ஆராய்ந்து அச்சியற்றி வெளியிட்ட நூல் களின் பெயர்களைக் குறிக்கு முகத்தால் வெளிப்படுத்தலாம். 'தொல் பல நூல் ஆய்ந்து சிவந்த' நெஞ்சினராகிய ஐயரவர்கள் செய்துவரும் திருத்தொண்டு இவ்வள வேயோ! அவ்வப்பொழுது பத்திரிகைகளில் வெளியிடும் கட்டுரைகளையும் கழகங்களில் இயற்றிவரும் விரிவுரைகளையும் சேர்த்துக் கொள்வதும் கடமையை உணர்ந்த செய்கை யாகும்.

இவ்வாறு மாரிபோற் கைம்மாறு கருதாது செய்துவரும் ஐயரவர்களிடமிருந்து இன்னும் பல பயன்களையும் பெற்று இன்புற வேண்டித் தமிழ் மக்கள் செய்யவேண்டியன சில. அவற் றுள் தலையாயது அவர்கள் வெளியிடும் நூல் களைப் பத்தாயிரக்கணக்கில் வாங்கிப் பல்லி டத்தாரும் படித்துப் பயன் பெறுவது. மற் றொன்று அவர்கள் செய்துவரும் திருத் தொண்டைப் பலரறியப் புகழ்ந்து பேசுவது.

இவ்விரு கடமைகளையும் நிறைவேற்றிக் கொள்ளத்தக்க நல்ல சமயம் இப்பொழுது கிடைத்துள்ளது.

'ஒல்லும் வகையா னறவினை யோவாதே, செல்லும்வா யெல்லாம் செயல்' என்ப. ஆதலின் அந்த நல்ல சமயத்தைக் கை நழுவவிடாமல் ஒவ்வொரு தமிழ் மகனும் தன் தன் இயல்புக்குத் தக்கவகையில் ஒழுகிக் கடமையை நிறைவேற்றிக்கொள்வது விரும் பத் தக்கதாம்.

நந்தமிழ் வாழி சாமி நாதவா சிரியன் வாழி
சுந்தர மாக வன்னூன் தொகுத்துமுத் திரித்துத்
தூய்தாத்
தந்தபன் னூல்கள் வாழி தக்கபொன் னளித்தோர்
வாழி
சந்தத மவற்றைக் கற்போர் தரணியில் வாழி
வாழி.

இந்த நிலப்பரப்பி லென்று முளதாகும்
செந்தமிழ் வாழ்க நிகழ்செந் தமிழ்ப்பணிக்கே
முந்தருளு வோன்சா மி நாதன் முருகருளால்
சந்ததமும் வாழ்க தழைத்து.

சுபம். சுபம். சுபம்.

—ஆர்யதர்மம்-28-2-35.

தமெக்கென வாழாப் பிறர்க்குரியாளர்
[வித்வான் ச. கு. கணபதி ஐயர் அவர்கள்]

'நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்தமிழ் தந்தான்'

என அகத்தியரைப்பற்றிக் கம்பர் கூறிப் போயினர். சிவபெருமான் தந்த தமிழை அகத்தியர் போற்றி வளர்த்துக் குரவு பூண்டு வளர்த்துவந்ததை ஏட்டில்தான் அறிகின்றோம். இன்று வழங்கும் தமிழ் தந்த பெருவள்ளல் யாரெனின், அக்காலத்து அகத்தியரைப்போல் இக்காலத்து அகத்தியராக விளங்கும் மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலா நிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் எனக் கூறல் மிகையன்று.

இவர், தமிழுலகத்துக்குச் செய்துவரும் வித்தியாதானத்திற்கு அறிகுறியாக உத்தமதானபுரம் என்னும் கிராமத்தில் வேங்கட சுப்பையரென்னும் வேதியருக்கும், ஸரஸ்வதி யம்மாளுக்கும் குமாரராக 1855-ஆம் வருஷத்தில் உதித்தார். இவருடைய தந்தையார் சங்கீதத்திற் சிறந்த வித்துவான். உடையார்பாளையம் முதலிய இடங்களிலுள்ள பல ஜமீன்தார்களிடத்தும், செல்வர்களிடத்தும் நன்மதிப்புப் பெற்றவர். சாமிநாதையர் இளமைப் பருவத்தில் தந்தையாரிடத்தில் ஸங்கீதமும் அரியிலூர்ச் சடகோப ஐயங்காரென்பவரிடத்தில் தமிழும் பயின்றுவந்தார். 'விளையும் பயிர் முளையிலே' சிறந்து நிற்றலேப்போல ஐயரவர்களுடைய நுண்ணறிவும், தமிழின் பால் பேரன்பும் இளமைக் காலத்திலேயே உயர்வுடையனவாக விளங்கின. இவருடைய கல்வியவாவை நிறைவேற்றுதற்காக இவருடைய தந்தையார் எங்கெங்கே தமிழ் வித்துவான்கள் இருந்தார்களோ அங்கங்கே அழைத்துச் சென்று தாமும் இருந்து இவரைத் தமிழ் பயிலச் செய்துவந்தார். தந்தை மகற்காற்றும் நன்றி இதனினும் வேறுண்டோ? இவர் அவ்வாறு சில வித்துவான்களிடம் தமிழ்ப்பிரபந்தங்களையும், நைடதம் முதலிய அக்காலத்துக் கிடைக்கும் காப்பியங்களையும், இலக்கணங்களையும் அறிந்துகொண்டார். இவருடைய அறிவாற்றலுக்குத் தக்க உணவு அந்த வித்வான்களால் அளிக்க முடியவில்லை. 'ஆனைப்பசிக்குச் சோளப்பொரி' எவ்வளவு?

அக்காலத்தே தமிழ் நாடெங்கும் தம் ஒப்புயர்வற்ற கல்வித்திறத்தின் புகழ் விளங்கப் பல மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லியும், பல நூல்களை இயற்றியும் மகாகவியாக விளங்கிய, திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், திருவாவடுதுறை ஆதீனவித்துவானாக இருந்துவந்தனர். ஐயரவர்களுக்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்த ஆசிரியர்கள் எல்லாம், 'இனி இவருக்குப் பாடஞ் சொல்லிக் கொடுக்கத்தக்கவர்கள் இங்கே யாருமில்லை. மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடத்திற் சென்றால்தான் இவருடைய தமிழ்ப்பசி தீரும்' என்றனர். இவருடைய தந்தையார் எவ்வாறேனும் தம்குமாரர் தகுகல்வி இடையூறுமல் வளர்ச்சிபெற வேண்டுமென்னும் நோக்கமுடையவராதலின், அவ்வாறே இவரை அழைத்துச் சென்று அப்பொழுது மாயூரத்தில் இருந்த பிள்ளையவர்களிடம் ஒப்பித்தார்கள். 1871-ஆம் வருஷம் இவர் பிள்ளையவர்களிடம் தமிழ் பயிலத் தொடங்கினர். அதுமுதல் நிழல்போல அவரை நீங்காது உடனிருந்து பல நூல்களைப் பாடங்கேட்டார். அதற்குமுன் பல வித்துவான்களும் கூறியபடி தம் தமிழ்ப்பசிக்குத் தக்க உணவையளிக்கும் பெருமான் அவரேயென்று இவர் கண்டுகொண்டார். அவரிடத்தில் படித்த பல

மாணவர்களுக்குள்ளும் இவர் மிகச்சிறப்படைந்து விளங்கினர். பிள்ளையவர்கள் 1875-ஆம் வருஷம் விண்ணுலகெய்தினர். அதன்பின் திருவாவடுதுறையில் அப்பொழுது ஆதீனத் தலைவராக இருந்த சுப்பிரமணிய தேசிகரிடம் இவர் பாடங்கேட்டுவந்தார். அங்கே புதியவராகப் படிக்கவந்த பலருக்குப் பாடஞ் சொல்லியும் வந்தார்.

இவ்வாறு இருக்கையில் கும்பகோணம் காலேஜில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவரும் பிள்ளையவர்கள் மாணாக்கருமாகிய தியாகராஜ செட்டியாரென்பவர் பிராய முதிர்ச்சியினால் வேலையினின்றும் நீங்கும் காலத்தில், தமக்குப் பின்பு தக்கவரொருவரை நியமிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால் இவரை அவ்வேலையிலிருக்கச் செய்தார். அதுமுதல் ஐயரவர்கள் ஆசிரியவேலையில் அமர்ந்து பல பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்லிப் புகழ்பெற்றார். இவர் வேலையிலமர்ந்த வருஷம் 1880. கும்பகோணத்தில் அப்பொழுது இராசாங்க உத்தியோகத்திலிருந்த சேலம் இராமசாமி முதலியாரவர்கள் இவரோடு பழகி அளவளாவி வந்தார். அவர் தமிழ்நூற் சுவையை அறியும் ஆற்றல் வாய்ந்தவர். சிவகசிந்தாமணி முதலிய நூல்கள் வெளியிட்டால் தமிழுலகத்திற் பழைய இலக்கியங்களின் சுவையை யாவரும் அறிந்து இன்புறுவார்களென்று அவர் கூறித் தம்மிடமிருந்த சிவகசிந்தாமணிப் பிரதியையும் இவரிடம் கொடுத்தார். அதை இவர் ஆராய ஆரம்பித்தார். அக்காலத்துச் சிந்தாமணியைப் போன்ற நூல்களைப் பாடஞ் சொல்வாரும் படிப்பாரும் தமிழ் நாட்டில் இல்லை. அந் நூற் சுவடிகளைப் பேணிவைப்பாரும் இலராயினர். ஐயரவர்கள் சிந்தாமணியைப் படித்து வருகையில் அஃது ஓர் உயர்ந்த நூலென்பதையும், பிற்காலத்துக் காப்பியங்களுக்கெல்லாம் வழிகாட்டியது அதுதானென்பதையும் அறிந்து கொண்டார். சிந்தாமணிக் காட்டுள் நுழைந்து வெளிவர அக்காலத்தில் தக்க கருவி ஒன்றும் இல்லையெனினும், இவருடைய நுண்மாணுழைபுலம் ஒருவாறு அதனை உட்புகுந்து கண்டுவிட்டது. பின்பு அந்நூல் உரையில் வந்த மேற்கோள்களையும் பிற செய்திகளையும் அறிந்து கொள்ளவேண்டிப் பல பழைய நூற்சுவடிகளைத் தொகுத்துப் படித்துவரலானார். இவ்வகையில் பழைய நூல்களிற் பல இவருடைய அறிவுக்குச் சுவைதந்து ஒரு புதிய ஊக்கத்தைக் கிளப்பிவிட்டன. சிந்தாமணியை நன்கு பரிசோதித்து வெளியிடத்தொடங்கினர். 1887-ஆம் வருஷம் ஐயரவர்களின் உழைப்பின் முதற்கனியாகச் சிந்தாமணி வெளிவந்தது. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டாற்போன்ற முயற்சியில் யாதோருதவியுமின்றி உழைத்து ஏட்டில் இன்னதென்று அறியப்படாம்லிருந்த அந்த மணியை நன்கு துலக்கிச் சாணையிட்டுக் கதிர்பரப்பும் வண்ணம் வெளியிட்ட அந்தச் செயற்கருஞ் செயல், இவருக்குத் தமிழ்நாடு முழுவதும் பெரும் புகழை நாட்டியது. ஆயுந்தொறுந் தொறும் இன்பந்தரும் பழந்தமிழ் நூல்களைப் புதுக்கும் பணியில் ஈடுபட்ட ஐயரவர்கள் முறையே பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களை வெளியிட்டனர். ஐயரவர்கள் கும்பகோணத்திலிருந்த பொழுதே இவருடைய தந்தையார் இறைவன் திருவடி நீழலெய்தினர். 1903-ஆம் வருஷம் இவர் சென்னை இராசதானிக் கலாசாலைக்கு மாற்றப்பட்டார். இவருடைய நூற்பதிப்பு வேலைகள் யாவும் சென்னையிலேயே நடைபெற்றுவந்தனவாதலின், தம்மைச் சென்னைக்கு மாற்றியது திருவருட் செயலே என மகிழ்ந்து, தம் ஆசிரியப்பணியையும், தமிழ்நூற்பணியையும் கலைப்பின்றிச் செய்துவரலாயினர். 1919-ஆம் வரு இவருடைய 64-ஆம் வயதில் வேலையிலிருந்து நீங்கி உபகாரச்சம்பளம் பெற்றார். ஓய்வு எடுத்துக் கொள்வதற்கே வேலையினின்று நீங்குவது வழக்கம். ஆனால் ஐயரவர்களுடைய தமிழ்ப் பணி, உபகாரச்சம்பளம் பெற்றதனால் இரண்டு பங்கு சிறப்பாக நடைபெற்றது. சென்னைக்கு வந்தபின்னர்ப் பதிற்றுப்பத்து, பரிபாடல், பெருங்கதை, நன்னூல்—மயிலை நாதருரை முதலிய நூல்கள் வெளியிடப் பெற்றன.

1924-ஆம் வரு சிதம்பரத்தில் ராஜாஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் விரும்பியபடி அவர்களால் ஸ்தாபிக்கப் பெற்ற மீனாட்சி தமிழ்க்கலாசாலையில் 'பிரின்ஸிபால்' ஆக அமர்ந்தார். அங்கே 1927-ஆம் வரு வரையில் இருந்து, பல மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லிவந்தார். அதன் பின்பு தமது முதுமைப்பருவம் அதிக வேலை செய்ய இடங் கொடாமையின், அங்கிருந்து வந்து

இப்பொழுது சென்னையிலேயே வாழ்ந்து வருகிறார். மற்ற வேலையைச் செய்வதற்குத் தான் இவருக்கு ஓய்வும், உடல் வன்மையும் இல்லையேயன்றித் தமிழ்நூலாராய்ச்சியில் இவருக்கு என்றும் வன்மையும், ஓய்வும் உண்டு. இன்றைக்கும் இவர் வீட்டுக்குச் சென்றால்—சுற்றியும் சில ஏட்டுச் சுவடிகள்; அருகில் பல புஸ்தகக்குவியல்கள்; அருங் குறிப்புக்கள்—சில மாணவர் கூட்டம்—இவற்றிற்கு நடுவே அவர் வீற்றிருந்து தமிழ்மகளின் அணிகளில் ஏதேனும் ஒன்றைத் திருத்தி யமைத்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இவர் தமிழுக்குச் செய்த மகோபகாரத்தை அறிந்த அரசாங்கத்தார் 1906-ஆம் ஸ்ரீ இவருக்கு 'மகாமகோபாத்தியாயர்' என்னும் பட்டத்தை வழங்கினர்கள். சென்னை யூனிவர்ஸிடியார், 1932-ஆம் ஸ்ரீ ''டாக்டர் ஆப் லிடரேச்சர்' என்னும் பட்டத்தை வழங்கித் தங்களுக்கு ஒரு புகழை நாட்டிக்கொண்டனர்.

ஐயரவர்கள் தமிழ்நாட்டிற்குச் செய்த பல உதவிகளுள், பண்டைத் தமிழ் நூல்களை வெளியிட்டது தலைசிறந்து நிற்கின்றது. இராமாயணம், பைடதம், சில புராணங்கள், பிரபந்தங்கள் முதலியவற்றின் எல்லைக் குள்ளே அடங்கியிருந்த தமிழ், இப் பொழுது எவ்வளவோ விரிவுற்று விளங்குகின்றது. முதல் வகுப்பிற் படிக்கும் சிறு குழந்தையுங்கூடப் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வழியிலே உற்சாகத்தோடு, 'பாரி என்பவன் ஒரு வள்ளல்' என்று பழம் பாடத்தை ஒப்பித்துக்கொண்டு போவதைக் கேட்கிறோம். சங்ககாலத்துப் புலவர்கள், சங்ககாலத்து அரசர்கள், நூல்கள், முதலிய பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சிகளே எங்கும் கேட்கப்படுகின்றன.

இவ்வளவிற்கும் காரணம் நம் ஐயரவர்களின் பேருழைப்பே என்பதை எவர் மறுப்பார்! இவருடைய நூற்பதிப்பிற்கு ஒரு தனி மதிப்புண்டு. அழகிய முகவுரை, ஆசிரியர், நூல் முதலியவற்றைப்பற்றிய ஆராய்ச்சி அறிவின் வளர்ச்சிக்குதவும் அருமையான அடிக்குறிப்புக்களுடன் நூல், பிரயோகவிளக்கம், அரும் பதவகராதி என்ற உருவில் தமிழ்நூல்களை அழகுறுத்திக் காட்டும் இவருடைய தனிச் சிறப்பைக் கூறுதற்கு எவ்வளவு நாள்கள் வேண்டும். பிற்காலத்து நூல்கள் சிலவற்றையும் இவர் பதிப்பித்துள்ளார். அவைதாம் எவ்வளவு அழகுறப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன? ஓவியம் வல்லானொருவன் எழுதிய எதுதான் அழகைத் தராது?

இவர் ஆசிரிய முறையில் செய்த உபகாரம் அடுத்தபடியாக எண்ணத்தக்கது. திருவாவடுதுறையில் இருந்த அக்காலந்தொட்டே பாடஞ்சொல்லும் வேலையில் இவர் ஈடுபட்டிருந்தார். இவர்பால் மாணாக்கர்களாக இருந்தவர்களை மூன்று வகையினராகப் பிரிக்கலாம். திருவாவடுதுறையிற் படித்தவர்கள், கலாசாலையிற் படித்தவர்கள், தனியே படித்தவர்களாகிய அம்மூவகையாரும், இவரை ஒரு தெய்வமாகவே போற்றிவருகின்றனர். இவருடைய இனிய உரையும், பாடஞ்சொல்லும் திறமையும் அவர்களைச் சித்திரப்பாவை போல ஆக்கிவிட்டன. தனியே பல பெரிய நூல்களை இவர்களிடம் பாடங்கேட்ட மாணவர்கள் பலர். அவர்கள் யாவரும் நல்ல அறிவையும் நிலையையும் பெற்றுள்ளார்கள்.

இவருடைய பேச்சைப்பற்றிச் சில விஷயங்கள் கூறவேண்டுமன்றே! இவர் அவைத் தலைமை வகித்துப் பேசிய சபைகள் பல. இவருடைய பேச்சில் அநுபவம் நிறைந்திருக்கும். சாதுரியமான சொற்கள் முத்துப்போல உதிர்ந்துகொண்டேவரும். இவர் வசனநடை எளியது. கருத்தை விளக்குவது முக்கியமே ஒழியச் சொற்களை அடுக்கி முடைவதிற் பயனில்லை யென்பது இவர் கொள்கை.

மகாகவியினுடைய மாணவராகிய இவருடைய கவிகள், அவருடைய கவிகளை அடியொற்றி நிற்கும். இவர் இளமையிலும் பிற்காலத்தும் பாடிய தனிப்பாடல்கள் அளவிறந்தன. அவற்றை யெல்லாம் போற்றி வைக்கும் வழக்கம் இவர்பால் இல்லை. பெரியவர்கள் நூலை அறிந்து வெளியிடலே சிறந்த தென்னும் கொள்கை இவருடைய நெஞ்சில் வீறி நிற்கின்றது. இல்லை யெனில் எவ்வளவோ செய்யுள் நூல்களை இவர் வாயிலாகத் தமிழ்நாடு கண்டிருக்கும்.

இத்தகைய பெரிய அறிஞரொருவரைத் தமிழுலகம் பெற்றது, பெரும்புண்ணியப் பயனேயன்றே? இவருக்கு நீண்ட ஆயுளையும் தேகாரோக்கியத்தையும் வழங்கி, இன்னும் பலவகை நூல்களை ஆராய்ந்து வெளியிடச் செய்தருள வேண்டுமென்று எல்லாம் வல்ல கடவுளை இறைஞ்சுவோமாக. —பாரதஜோதி-1-3-35.

ஐயரவர்களின் ஆசிரியப் புலமை

'வழிப்போக்கன்'.

ஆசிரியர்கள் பலவகைப்படுவார்கள்; போதகாசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர், ஞானாசிரியர், பத்திரிகாசிரியர் என இவர்கள் யார் யார் என்று இங்கே விளக்கவேண்டுவது அவசியமில்லை. இவ்விஷயம் யாவருக்கும் தெரிந்திருக்கும். நமது தமிழ்ப்பெரும் புலவராகும் ஸ்ரீ மகாமகோபாத்தியாய திராவிட வித்தியாபூஷணம் தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் சாமிநாதையரவர்கள் போதகாசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர் என்று பிறர் பாராட்டுமாறு தமிழிற்குத் தொண்டுபுரிந்து வருகிறார்கள். மேற்கூறிய ஆசிரியப்புலமைகளில் போதகாசிரியப்புலமையே இவர்களுக்கு உயிர்போன்றுள்ளது. அஃது எப்படி என்பதை விளக்கவே இக்கட்டுரை எழுதலானேன்.

ஸ்ரீமத் ஐயரவர்களின் மாணவர்கள் நான்கு வகையினராவர். அவரவர்களின் இயல்பும் தகுதியும் வெவ்வேறுவகையினவாக அமைந்திருப்பன. அவற்றை நன்கு அறிந்து கொண்டு நமது தமிழ்ப்பெரியார் பாடஞ் சொல்லி அவர்கள் அனைவரையும் வியப்பித்து முன்னுக்குக் கொண்டுவந்ததில்தான் இவர்களது புலமை மிகமிகச் சிறந்து விளங்குகின்றது.

இவர்கள் தமது இளமைப்பருவத்தில் தம்மினும் முதியவர்களாகிய துறவிகளுக்குத் திருவாவடுதுறையிலே பாடம் கற்பித்து வந்தார்கள். இவர்களுக்கு முன்னர் அம்மடத்தில் ஆசிரியப்புலமையை நடத்திவந்த ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடஞ் சொல்லுதலில் சிறந்த மகாவித்வான். அவ்வித்வானிடம் பாடங் கேட்டுவந்த, தம்மினும் வயதிலே முதியவர்களுக்கு இவர்கள் பாடஞ் சொல்லிப் புகழ்பெற்றார்கள் என்றால், இவர்களுடைய போதகாசிரியப்புலமையை என் என்பது!

அடுத்தபடியாக இவர்கள் தூரைத்தனக் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்துவந்தார்கள். இவர்களுக்கு ஆங்கிலமொழியில் ஒரெழுத்தும் தெரியாதிருந்தும் மாணவர்களையெல்லாம் கவர்ந்திருக்கிறார்கள். வகுப்பு என்பதை மறந்து மாணவர்கள் மகிழ்ந்திருந்தார்கள் என்று தெரிகிறது. இவர் கலாசாலையில் ஒரு வகுப்புக்குப் பாடம்சொல்லிவருகையில் அயலிலே வேறு பாஷை வகுப்புக்கள் நடைபெறும். அவ்வகுப்பிலுள்ள மாணவர்களிற் பலர் ஜன்னல் வழியாக இவர்கள் பாடத்தைக் கவனித்து வந்ததாகச் சிலர் கூற, நான் கேட்டிருக்கிறேன். அவ்வளவு ருசிகரமாக இருக்குமாம் தமிழ் வகுப்பு.

மூன்றுவதாக இவரிடத்தில் பயின்றவர்கள் ஆராய்ச்சி மாணவர்கள். அவர்களில் முக்கிய மானவர்கள் ஸ்ரீமான்கள் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர், அநந்தராமையர், இராமாநுஜாசாரியார் ஆவர். சிதம்பரத்தில் இவர்கள் தலைமைத்தமிழாசிரியராக இருந்து வித்துவான் வகுப்புக்களுக்குப் பாடஞ்சொல்லி வந்த காலத்தில், இவர்களிடம் பயின்றவர்களும் ஆராய்ச்சி மாணவர்களே. தளர்ந்த பருவத்தில் சுறுசுறுப்பானவர்களுக்கு அதிகடின மான பாடங்களைச் சொல்லிக்கொடுக்கவேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது. அந்நிலையிலும் இவர்கள் மனந்தளராமல் வெகு அழகாகப் பாடஞ்சொல்லி வந்திருக்கிறார்கள்.

இப்பொழுதும் இவர்கள் பல மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லுதலே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் பாடஞ் சொல்லி வருகையில் இவர்களுடைய சொற்களில் ஹாஸ்யச்சுவை ததும்பும். சிரித்துச் சிரித்து மாணவர்களுக்கு வயிறு புண்ணாகிப்போகும். வீட்டில் பாரா மலே மாணவர்கள் பாடங்களை எளிதில் உணர்ந்துகொள்ளுவார்கள். வகுப்பில் நேரம் கழிவதே தெரியாது.

பாடஞ்சொல்லுவதுதான் இவருக்கு உயிர். எவராவது அருகிலிருந்து படித்துவந்தால் தான் இவருக்கு மனம் குளிரும். படித்து வருகையில் இடையிடையே பல விஷயங்களைக்கூறுவார்கள். அச்சந்தர்ப்பத்தில் அது காறும் தெரியவராத பல அரிய கருத்துக்கள் புலனாகும். பாடஞ்சொல்லும் வழக்கத்தை எவரும் மேற்கொள்ள வேண்டும் என்று இவர் தமிழ்கற்றவர்களிடம் அடிக்கடி கூறுவார்கள். பாடஞ்சொல்லும் வழக்கம் குன்றிவிட்டதனால்தான் தமிழ்மொழி தன் வலிமையை

இழந்தது என்று இவர்கள் கூறுவார்கள். ஒருவர் எவ்வளவுதான் படித்திருந்தாலும் பாடஞ்சொல்லுபவரல்லாஞல் அவரைப் படியாதவர் என்று நினைப்பது இவர்களது கொள்கை.

சரத்துக்கேற்பப் பாடஞ்சொல்லும் இயல்பு இவர்களிடம் அமைந்திருக்கின்றது. வேலைகள் அதிகமாக இருக்கையில் எவரேனும் பாடம் பயிலவந்தாலும் சரியே, சந்தேகங்களைத் தீர்த்துக்கொண்டுபோக வந்தாலும் சரியே, உடனே இவர்கள் தங்களுடைய வேலைகளை நிறுத்திவிட்டுப் பாடஞ் சொல்லவோ, சந்தேகங்களைத் தீர்க்கவோ புகுந்து விடுவார்கள். பாடங் கற்பிப்பதில் அவ்வளவு ஆர்வம் இவர்களிடம் காணப்படுகின்றது.

இவர்கள் கேள்விகேட்கும் முறை மாணவர்களுக்கு மேலும்மேலும் நூல்களைச் சோதித்துப் பயில உதவக்கூடியதாக இருக்கும். உதாரணமாக இரண்டொன்றை இங்கே காட்டுகிறேன்:

"பரிமேலழகர் பிறநூற் செய்யுளடிகளை வசனமாக அமைத்துச் செல்வர் என்பதற்கு இரண்டு உதாரணங்கள் தருக."

"திருவள்ளுவர் ஒரே நீதியை உடன் பாட்டாலும் எதிர்மறையாலும் விளக்குவார்; நீதியை அநுசரிக்க உபாயங் கூறுவார்; ஒரு நீதியைக் கூற வந்தவிடத்து வேறொரு நீதியையும் சேர்த்துக் கூறுவார்; ஓரதிகாரத்துக்குத் தோற்றுவாய் சில சமயங்களில் அதற்குமுன் அதிகாரத்தில் அமைத்துக் கூறுவார். இவற்றிற்கு ஒவ்வொருதாரணம் தருக."

இத்தகைய விஞக்களைக் கண்ணுற்ற மாணவன் மறுமுறை திருக்குறளையும் பரிமேலழகர் உரையினையும் வாசித்துவரும்போது இந்த விஷயங்களைக் கவனித்துக் குறித்து வைத்துக்கொள்ளுகிறான்.

இவர்களுடைய ஆசிரியப்புலமை இவ்வளவோடு அடங்கிவிடவில்லை. இவர்களுடைய பதிப்புநூல்கள் எல்லாம் தமிழ்கற்பாருக்கு அவசியமானவை. அவைகள் எளிதில் எவருக்கும் விளங்கும் வண்ணம் இவர்கள் அவற்றைப் பதிப்பித்து வருகிறார்கள். எனவே அந்த நூல்களைக் கற்பாரும் ஒருவகையில் இவர்களுடைய மாணவர்களே.

—பாரதஜோதி-1-3-35.

"ஸ்வாமி என்ன பண்ணுகிறார்?"

கி. வா. ஜகந்நாதன்

ஸ்ரீ மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களுடன் பழகியவர்கள், அவர்கள்பால் அமைந்துள்ள ஹாஸ்ய உணர்ச்சியை நன்றாக அறிந்திருப்பார்கள். நான் அநுபவத்தில் அறிந்த பல நிகழ்ச்சிகளுள் பின்வருவதும் ஒன்று:

ஐயரவர்கள் ஏதோ ஓர் உத்ஸவ தரிசனத்துக்காகத் திருவிடைமருதூர் போயிருந்தார்கள். அக்காலத்தில் திருவையாறு அரசர் கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்த ஸ்ரீமான் ஸந்தானமையங்காரவர்கள் உடனிருந்தார்கள். ஓய்ந்த நேரங்களில் ஏதேனுமொரு தமிழ்நூலை வாசித்துக் கேட்பது ஐயரவர்களுடைய வழக்கம்.

ஸந்தானமையங்கார் நன்றாகப் பாடுவார். ஸ்ரீ ஐயரவர்கள் திருவாசகத்தை எடுத்துப் படிக்கச் சொன்னார்கள். அவர்கள் தங்கியிருந்த வீட்டின் திண்ணையிலிருந்துகொண்டு அவர் படித்தனர். அருகிலிருந்த ஐயரவர்கள் இடையிடையே சில கருத்துக்களை விளக்கி வந்தார்கள்.

வீட்டுக்குள்ளே யிருந்தவர்கள், திண்ணையில் ஐயங்கார் வாசித்த இன்னிசையால் கவரப்பட்டு இடைகழிச்சு வந்து இருந்து கொண்டு கேட்டு வந்தனர். அந்த வீட்டுக் காரராகிய கிழவர் ஒருவர் வெளியில் வந்து மற்றொரு திண்ணையில் உட்கார்ந்துகொண்டார்.

"ராமாயணந்தானே இது? அடாடா! என்ன அழகு! என்ன அழகு!!" என்று கிழவர் கூறிவிட்டு மிகவும் சிரத்தையோடு கேட்க ஆரம்பித்தார்.

"ஆமாம்!" என்றார்கள் ஐயரவர்கள். கொஞ்சம் வேடிக்கை செய்யவேண்டுமென்று அவர்கள் எண்ணினார்கள்.

"ராமாயணம் எப்படியிருக்கிறது?"

என்று கிழவரைப் பார்த்துக் கேட்டார்கள்.

"வெகு பேஷாயிருக்கிறது? இப்பொழுது எந்தக் கட்டம் நடக்கிறது? ஸ்வாமி என்ன பண்ணுகிறார்?" என்றார் கிழவர்.

"ராமர் அயோத்தியை விட்டுப் புறப்படப் போகிறார்" என்று புன்னகையுடன் ஐயரவர்கள் சொன்னார்கள்.

"அப்படியா!"

திருவாசகத்தில் மிகவும் உருக்கமான இடம் ஒன்று வந்தது. ஐயரவர்கள் உருகிக் கண்ணீர் விட்டார்கள். 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' அல்லவா? கிழவர், ராமர் வனவாசம் செய்யப்போகிற இடத்திலுள்ள சோகரஸத்தால் ஐயரவர்கள் உருகுவதாக எண்ணிக்கொண்டார். "ஸ்வாமி இப்போது புறப்பட்டு விட்டாற்போலிருக்கிறது!" என்று சொல்லிக்கொண்டே அவரும் கண்ணீர் விட்டார்.

சிறிதுநேரம் சென்றது.

"இப்பொழுது ஸ்வாமி என்ன பண்ணுகிறார்?"

"சீதையைத் தேடிக்கொண்டு புறப்படுகிறார்!"

கிழவருக்கு இவ்வளவு சீக்கிரம் சீதை எப்படிப் பிரிந்தாளென்பதை ஆலோசிக்கும் சக்தி இல்லை. இருந்தால், தாம் கேட்பது ராமாயணமன்றென்பதை முன்பே அறிந்து கொண்டிருப்பாரல்லவா?

சிறிதுநேரம் சென்றது.

"இப்பொழுது ஸ்வாமி என்ன செய்கிறார்?"

"சீதையோடு தண்டகாரண்யத்தில் ரிஷிகளை உபசரிக்கிறார்?"

"அப்படியா!"

மீண்டும் கதை முன்னுக்குத் தள்ளிவந்த சமாசாரத்தையும் அவர் ஆலோசிக்கவில்லை. கேட்பது ராமாயணம் என்ற அளவில் அவருக்கு உண்டான உருக்கத்துக்கு எல்லையில்லை.

படிக்கப்படும் திருவாசகத்தில் சில பதிகங்கள் முடிந்தன. படிப்பது நிறுத்தப்பட்டது.

"இப்பொழுது ஸ்வாமி என்ன பண்ணுகிறார்?" என்று மீண்டும் கேள்வி பிறந்தது.

"படுத்துத் தூங்குகிறார்" என்று சிரிக்காமல் ஐயரவர்கள் சொன்னார்கள். உள்ளுக்குள்ளேயே சிரிப்பைச் சிறைப்படுத்தி வைத்திருந்த நாங்கள் புறத்தே சென்று வயிறு வலிக்கச் சிரித்தோம்.

—பாரதஜோதி-1-3-35.

MAHAMAHOPADHYAYA Dr. V. SWAMINATHA AYYAR

A MEMOIR

Mr. S. R. Venkataraman, B.A., B.L., Mangalore.

About six feet in height his figure is well proportioned; his features are suffuced with the culture of ages; his moral expression is only equalled by his cultural, for there is a softness, a gentleness, and delicacy about it, and that air of profound religious veneration which characterises supermen. Verily, Mahamahopadhyaya Dr. V. Swaminatha Iyer is one without a second in the field of Tamil research and scholarship.

For over two generations Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar, has been devoting his best talents and energies for Tamil research. He will be celebrating his 81st birthday on the 6th of March this year. He was born in the year 1855 of respectable parents in the village of Uttamadanapuaram in the district of Tanjore. His father Venkatasubramania Iyer was a great devotee of Lord Shiva. Early in life Mr. Swaminatha Iyer was initiated into the study of Tamil literature and music by his dutiful father whose proficiency in those two subjects was of no mean order. Mr. Swaminatha Iyer

possesses even to this day a good voice and his knowledge of music is full and complete.

His old students remember even now the sonorous cadence of his voice with which he used to read Tamil poems in the class. He was very fortunate indeed in his early teachers. He studied Tamil literature dealing with the Saiva and Vaishnava cult at the feet of the exponents of the respective schools. Unlike the present day students, young Swaminatha Iyer lived with his teachers and studied the whole gamut of Tamil literature. To give a finishing touch to his studies, his father apprenticed him to the celebrated Tamil scholar of the day, one Meenakshisundaram Pillai of Mayavaram who seems to have influenced the life of the young protege in an exraordinary manner. Mr. Swaminatha Iyer was then barely a lad of 16 or 17. Mr. Pillai had a host of disciples all of them taking up advanced study in Tamil literature. He did not at first know that his new acolyte had attained very high proficiency in Tamil which is not ordinarily associated with young colts of his age. Naturally Mr. Pillai entrusted the supervision of his studies to one of his assistants. As days wore on, the assistant found he learned more from his ward than he could teach him. He felt helpless to clear the doubts raised by his ward. In good time Mr. Pillai came to know of this and very gladly agreed thereafter to supervise the studies of Mr. Swaminatha Iyer. The disciple never for a day even absented himself from the presence of his Guru. He was present with his Guru when great scholars carried on discussions on Tamil literature and dialectical disquisitions. He used to accompany him during his travels. Whenever Pillai taught him, he listened to him with great attention and respect. Mr. Pillai himself was very proud of his new disciple and spared no pains to shape him well. Dr. Iyer's love and respect for his Guru have taken the shape of a biography which has been published last year. As a biographer, perhaps Dr. Swaminatha Iyer has excelled even that prince of biographers in English, James Boswell.

Mr. Meenakshisundaram Pillai was highly respected by the Thambirans of the Thiruvavaduthurai Mutt. He used to pay frequent visits to them, accompanied invariably by Mr. Iyer. The head of the Mutt, one Srilasri Subramanaia Desikar and the Thambirans were equally impressed with Mr. Swaminatha Iyer's scholarship, his manners and behaviour. He became a great favourite with the Mutt. Later on, when Mr. Pillai died, the Head of the Mutt appointed Mr. Iyer to succeed him. He was entrusted with the supervision of the Tamil studies of the *sanyasis* in the Mutt.

A few years later Mr. Iyer was asked by a friend and well-wisher of his, one Mr. Thiagaraja Chettiar, the Pandit of the Kumbakonam College, at that time, to take up the post of Tamil in the said college as he very much wanted to retire from service having become old. The Kumbakonam College at that time was at the height of its fame and was rightly called the Cambridge of South India. Mr. Swaminatha Iyer agreed to take up the post though the head of the Mutt where he was serving at first was against Mr. Iyer accepting the place.

It is interesting to be told that Mr. Iyer before he was appointed to the post had to face a Board of Examiners in Tamil. He was subjected to stiff *viva voce* examination in which professors of the college took part. They examined him in grammar, in prosody, and in extempore poetry. Mr. Swami-

natha Iyer no doubt came out with flying colours in the examination and was appointed to the post. This took place in 1880. As a teacher of Tamil, it is said that Mr. Iyer touched the high water-mark. Students used to flock to his class and scramble for seats. It is said, that the then Principal Rai Bahadur T. Gopal Rao who guided the destinies of the college with great success and distinction at the time, used to stop for a few minutes and listen to the lectures of Pandit Swaminatha Iyer. In 1903 Mr. Iyer was transferred to the Presidency College in Madras. Mr. Iyer too was anxious to go to Madras as he was at that time engaged in research work and in editing the Tamil classics. He felt that his transfer to Madras would facilitate his publication of the Tamil classics. He retired from service in 1919 at the age of 64. After retiring from Government service, he was persuaded by Raja Sir Annamalai Chettiar the founder of the Annamalai University to take up the principalship of his Tamil College in Chidambaram. He held that post from 1924 to 1927 when he retired to whole-heartedly devote his time for research and study.

For over forty years he has taught college students and has created in them a love and respect for Tamil literature. Among his students he counts with legitimate pride, many who are leaders in various walks of life and many who have filled with credit to themselves posts of trust, power and influence. His old students recall with respect and reverence, those eventful and happy college days that they spent sitting at the feet of Mr. Iyer.

Dr. Iyer's house has been an institute of research and post graduate study in Tamil literature for over a generation. Any casual visitor to the "Thyagaraja Vilas" in Pillaiyar koil street, Thiruvetteeswaranpet, Madras, will find the venerable Bhishma in a room upstairs sitting in front of a low desk surrounded by a number of eager and devoted disciples. His room is a veritable store house of rare Tamil manuscripts which he had collected with great difficulty and at great cost. You will find the disciples engaged in deciphering these manuscripts and helping their Kulapathi in editing them. If you sit for a while and watch the great scholar at work you will really marvel at his memory and scholarship. The way in which he gives cross references to similar words in other classics of Tamil literature quoting chapter and verse and giving the special sense in which it is used in each of these classics, is nothing short of a feat of his memory.

The Mahmahopadhyaya's title to lasting fame as the greatest scholar that the Tamil world has seen within the last two generations rests on his bringing to light the great classics of the Tamils. It may surprise many to be told that the Tamil classics Jivaka Chintamani, Silappadhikaram, Manimekhalai etc., were only known to scholars fifty years ago through references to these classics in other pieces of Tamil llterature. Nobody had ever read these classics fifty years ago as their existence was not at all known. It is even said that the great Guru of Dr. Iyer, the late Meenakshisundaram Pillai had not read some of these works as their existence was not known. When Mr. Iyer started on his mission of collecting rare manuscripts of Tamil classics, some of the works came to light one after the other. It was found later on when going through the manuscripts, that some of the passages in these works could'nt be easily understood without any commentary. The

first book that Dr. Iyer took up for editing and annotating was the Jain classic called the Jivakachintamani. The first edition of it appeared in 1887. It was an epoch making work and at once it established Mr. Iyer's reputation as a rising star of the first magnitude in the literary firmament of the Tamils. Since then that book had undergone three editions and the discerning reader will find that every suceeeding edition has been an improvement over the preceding one. It may be mentioned here in passing that almost all the classics deal with Buddhism and Jainism. In editing these works Dr. Iyer took very great care to correctly represent the religious import of the works. He consulted Buddhist and Jain scholars and studied their philosophy and religion along with them. If Buddhists and Jains hold Dr. Iyer's commentaries on these works as authoritative and correctly representing their faiths it only speaks of Dr. Iyer's German thoroughness in his work.

In his publication of Pattuppattu Dr. Iyer has touched the highest plane of research scholarship. At first he could not get at the original of the book. A rare manuscript, a commentary of the Pattuppattu, fell into his hands and the commentator had dealt with its peculiar prosody and grammatical construction. Taking these technical suggestions as the basis, like the expert jeweller who makes an ornament of beauty and brilliance out of ill-shaped diamonds, Dr. Iyer exercising his scholarship and imagination was able to reconstruct the whole of the original of the book. In a similar manner he has improved the commentaries on Silappadhikaram, Purananuru and Manimekhalai.

Besides this, Dr. Iyer has played a distinguished part in the cultural life of the Tamils. He has attended invariably almost all the important conferences of the Tamil pandits and religious leaders and has contributed not a little to the promotion of Tamil learning. He played the *role* of a University lecturer in the year 1927 and delivered a series of lectures on the "Tamil of the Tamil Age and the Post Sangam age". The Government also honoured him by conferring on him the title of "Mahamahopadhyaya" for the solid and lasting contribution he had made to Tamil literature. He was loved and respected by savants not only in India but all over the world. The Madras University also honoured itself when two years ago it conferred on him the Doctorate in literature. He is a member of the Boards of studies of the Madras, Benares, Mysore and Annamalai Universities.

Quiet and unassuming, compassionate and charitable, as he is, Mahamahopadhyaya Dr. V. Swaminatha Iyer is a type of Superman, always returns good for evil. He remembers small help with gratitude. His charity is not known to the public. He is even now helping the widow of the late Satagopachariyar of Ariyalur, under whom he read Tamil at the very outset out of love and respect he bears for him. He is, it is said even to this day, helping the grandson of his Guru the late Meenakshisundaram Pillai. He has endowed a scholarship in the Government College, Kumbakonam, in the name of the late Thyagaraja Chettiyar who was responsible for inducing him to accept the post of the Tamil Pandit of that College.

The significance and importance to Dr. Iyer's services and contribution to Tamil literature cannot be over-estimated. Before the Doctor published

his works very little was known about the culture and civilization of the Tamils. Now he has made the glorious past of the Tamils live before us in these books of his. As a commentator he is superb and unrivalled. He has tried in his works to give always the views of the author instead of foisting his own views on him.

He has made the lot of the Tamil Pandits much better than what it was before. He has induced the Pandara Sannidhi of the Thiruppanandal Mutt to give away a prize every year Rupees One thousand to the student who passes first in the Vidwan's examination.

In any other country Dr. Swaminatha Iyer would have been raised to the peerage; statues would have been erected to honour him; institutes would have been established to continue the useful work in which he has been engaged for more than fifty years.

The Celebration Committee that has been formed in Madras would do well in the first place to make arrangements to continue the work that the Doctor has been carrying on for over half a century. We should have an institute named Dr. Swaminatha Iyer Institute and it should be subsidised by the Government like the Bhandarkar Oriental Institute in Poona. Attempts ought to be made to publish a commemoration Volume with a fairly good biographical sketch of the Doctor. His birthday should be observed all over the Tamil Nad in every important town and village, and attempts ought to be made to start a reading room and library in each village, named after him. It is high time that the Madras Committee issues necessary instructions to such of the local committees as are willing to celebrate the day in their own places. In conclusion, let us all join hands to honour one that has done yeoman service to Tamil literature.

—Hindu Nesan-2-3-35.

தமிழ்ப் பெரியார் வாழி!

தமிழன்பர்காள்!

'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்' என்றார் இளங்கோவடிகள். இவ்வளவு சுலபமாய் இந்த வாக்கியத்தைக் கையாளும் படி ஏட்டுப் பிரதியாயிருந்த சிலப்பதிகாரத்தை அச்சுவாகனமேற்றித் தமிழரும் பிறரும் எளிதில் அறியுமாறு உபகரித்த வள்ளலார் தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையராவர்; சிலப்பதிகாரம் போன்ற எண்ணிறந்த நம் பண்டைத் தமிழ் நூல்களை வெகு சிரமத்துடன் ஆராய்ந்து அவற்றிற்குப் புத்துயிர் அளித்துக் காத்துவரும் இம்மகானுபாவரை நம் தமிழ் நாட்டில் அறியாதார் யாரும் இருக்கமாட்டாரென்பதே நமது துணிபு. அவர்கள் கல்வித்திறமையும், சொல்வன்மையும், உதாரகுணமும், பொறுமையும், போதனாசக்தியும், இனியவாக்கும் நம்மால் இவ்வளவென்று எடுத்துரைக்க இயலுமா? அன்னார் நாம் செய்ததவப்பயனால் இப்பொழுது இச் சென்னைமாநகரின்கண் திகழ்ந்துவருகிறார்கள். அவர்கட்கு நாளிது மார்ச் மீ 6-ந்தேதி (மாசித் திங்கள் 24-ந்தேதி புதவாரம்) எண்பது ஆண்டுகள் நிறைபெறுகின்றன. அது தமிழபிமானிகள் அனைவரும் மிக்க குதூகலத்துடன் கொண்டாடவேண்டிய பெரியதோர் திருநாளாகும். அறிஞர்கள் அவ்விழாவை எவ்விதம் கொண்டாட உத்தேசித்திருக்கிறார்களோ அதுபோல் நாமெல்லோரும் அதில் சேர்ந்து அதுபவிப்பதே தக்கமுறை. நன்றிமறப்பது நன்

றல்ல. இத்திருநாளை ஆரம்ப தினமாகவைத்து ஐயரவர்கள் பதிப்பித்திருக்கும் தமிழ்நூல்களை யாவரும் எளிதிலறியுமாறு ஆங்காங்கு இலவச வகுப்புகளும் பிரசங்கங்களும் வாரந்தோறும் தமிழாசிரியர்கள் நடத்துவார்களேயானால், அதுவே நம் பெரியார்க்கு உண்மையாகச் செய்த நன்கொடையும் பிரதி உபகாரமும் ஆகும். 'தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்' என்று அகத்திய முனிவரைக் கொண்டாடுகிறார் கல்வியிற் பெரிய கம்பர். யாம் காண மூழ்கிப்போன பெருந் தமிழிலக்கியங்களைத் தமிழ்நாட்டுக்குத் தந்த காரணக் கொடையார் நம் ஐயரவர்கள்தான் என்பதில் ஏதேனும் ஐயம் உளதா? அன்னாரும் அவர் பந்து மித்திரரும் அரோக திடகாத்திரராய் இந்நிலமிசை நின்று இன்புறுமாறு இறைவனை இறைஞ்சுவோமாக. பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

பந்தலடி மாடபூசி திருமலை ஐயங்கார்,
காரியதரிசி,
திருவல்லிக்கேணி, தமிழ்ச்சங்கம்.

—இந்து நேசன்-2-3-35.

தமிழ் வியாஸர்

சக்கரவர்த்தி இராஜகோபாலாசாரியார்

முற்காலத்தில் ஸம்ஸ்கிருத வேதங்களையும், இதிஹாச புராணங்களையும் வியாஸர் எப்படித் தேடித் திரட்டி உருவாக்கித் தந்தாரோ அப்படியே தமிழ் இலக்கிய ரத்தினங்களை ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையர் இக்காலத்தில் தேடித் திரட்டித் தந்தவர். ஆகையால் ஸ்ரீ சாமிநாதையருக்கு 'தமிழ் வியாஸர்' என்றே நாம் புதுப்பட்டம் இடலாம்.

பாரத நாட்டில் ஆங்கிலம் பாஷியதும் தமிழ்மொழி தன்மீது தானே குறைகூறிக் கொண்டு வெட்கி மறைந்துகொண்டது. ஸ்ரீ சாமிநாதையர் பழைய நூல்களையும் அவைகளின் அரிய உண்மைகளையும் கடலில் முத்தெடுப்பதுபோல் முழுகித் தேடி யெடுத்துத் தூளைத்துக் கோத்துக் கொடுத்த பிறகுதான் தமிழின் பெருமையை மறுபடி அறியலானோம். 'இவ்வளவு அழகும் நாகரிகமும் பொருந்தியதா நம் பாஷை!' என்று ஆங்கிலமும் வடமொழியும் கற்ற தமிழர்கள் வியந்தார்கள்.

ஸ்ரீ சாமிநாதையர் தமிழுக்குப் புதிய கௌரவத்தை உண்டாக்கி அது ஸம்ஸ்கிருதத்திற்குச் சமானமான ஆஸனத்தில் அமர்ந்து விளங்குமாறு செய்தார் என்பதில் ஐயமில்லை. ஸ்ரீ சாமிநாதையர் சோதித்து வெளியிட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களைத் திறந்து படித்தபின்தான், தமிழ் மொழியின் லாகவமும், நயமும், எளிய நடையில் ஆழ்ந்த பொருள்களை யடக்கும் அதன் அழகும், தமிழரின் பழைய வாழ்க்கைமேன்மைகளும், தாய்மொழியை இளவயதில் மதியாமற்போன என்னைப் போன்ற துர்ப்பாக்கியர்களுக்குத் தெரியவந்தன.

தாய்மொழிக்கு இவ்வளவு தொண்டு செய்து பேரும் புகழும் பெற்றிருந்தபோதிலும் ஸ்ரீ சாமிநாதையரவர்களுடைய அடக்கமானது ஒப்பில்லாத அரிய ஒரு குணம். இதுவும், குலத்தில் உயர்வு-தாழ்வு, ஆரியர்-திராவிடர், வடமொழி-தென்மொழி என்னும் பேத உணர்ச்சிகள் எள்ளளவும் காணமலிருப்பதும், இப்பெரியாருடைய தனிச் சிறப்பு. ஐயரவர்களின் முன்னுரைகளைப் படிக்குங் காலத்தில் இந்தக் குணங்கள்தான் என் மனதைக் கொள்ளை கொள்கின்றன.

ஸ்ரீ சாமிநாதையரின் கல்வி கடலிற்போன்றது. மெய் வருத்தம் பாராத அவருடைய முயற்சியுடன் எறும்பும் தேனீயுமே போட்டி போடலாம். தாய்மொழியின் தொண்டிலும், கல்வி முயற்சியிலும் அவருடன் நாம் போட்டிபோட முடியாதாயினும் அவருடைய அடக்க குணத்தையாவது நாம் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும்.

—ஆனந்தவிகடன்-3-3-35.

தேசீயத் திருவிழா

வி. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார்

மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் அவர்களைச் சென்ற நாற்பத்தைந்து வருஷங் களாகத் தெரிந்திருக்கும் பாக்கியம் எனக்கு உண்டு. ஒப்பற்ற அவரது ஜீவிய குணதிச யங்களைப் பாராட்டுவதில் இதற்கு முன்னரே நான் என்னாலியன்றவரையில் ஈடுபட்டிருக் கிறேன். சென்ற ஐம்பது வருஷங்களில் இம் மாகாணத்தில் விளங்கிய பெரியார்கள் ஒவ் வொருவரையும் அநேகமாக எனக்குத் தெரி யும். ஆனால் அறிவாற்றலில் சிறந்து கல்விக் காக முழுமனதுடன் பாடுபட்டதில் மகா மகோபாத்தியாயருக்கு ஈடாக வேறு யாரை யும் நான் அறியேன். 'அதிவேகமாய்ச் சென்று கொண்டிருக்கும் காலம் ஒரு நாளும் திரும்பி வராது' என்னும் உண்மையை அவரைப் போல் நன்குணர்ந்து ஒவ்வொரு நிமிஷத்தையும் நற்பயன் படுத்தி வருபவர் களையும் நான் பார்த்ததில்லை.

கலைஞர்களாகக் கருதப்படுவோர் தங்கள் தங்கள் கலைகளிடத்தில் கொள்ளக்கூடிய சிரத்தா பக்தியில் இப்பெரியாரைப்போல் சிறந்தவர் தென்னிந்தியாவில்—ஏன் இந்தியா வில்கூட—இல்லை யென்றே அச்சமின்றிச் சொல்லுவேன்.

அவரைப் பார்த்துச் சிறிது நேரம் பேசி னால்கூட அதுவே ஒரு பெரிய கல்வி அது பவமாயிருக்கும். வாழ்க்கையில் உற்சாகமூட் டும் அற்புத சஞ்சீவிபோலுள்ள கலைமகளின் பணியே சிறந்த உபாசனை யென்றும், வேலை யின்றி ஓய்ந்திருத்தல் துருப்பிடித்துப்போவ தற்கே உபாயமாகுமென்றும் கருதும் பெரி யார் அவர். அவரது ஆடம்பரமற்ற வாழ்க்கை யும், அனைவரையும் வசியப்படுத்தும் நடை உடை பாவனைகளும் புராதன இந்தியா வின் சிறந்த நாகரிகத்துக்கே ஏற்றவையாகும். மங்களகரமான அவருடைய ஸஹஸ்ராபிஷேக விழாவில் கலந்துகொள்ளும் இந்தச் சந்தர்ப் பத்தை இங்ஙனம் நாம் கொண்டாடக் கொடுத்து வைத்ததுபற்றி மகிழ்ச்சி அடை கிறேன்.

இந்தச் சம்பவம் ஒரு பெரிய தேசீயத் திரு விழாவாகக் கொண்டாடுதற்குரியது என்ப தில் சந்தேகம் இல்லை. அதன் சிறப்பையும் முக்கியத்தையும் நன்கு எடுத்துக்காட்டு மாறு ஒரு விசேஷ மலர் கொண்டுவர உத்தே சித்த "ஆனந்த விகட"னைப் பாராட்டுகிறேன்.

—ஆனந்தவிகடன்-3-3-35.

'தியாகராஜ விலாசம்'

அல்லது

புலவர் தொழில்

டி. கே. சிதம்பரநாத முதலியார், பி.ஏ., பி.எல்.

எனது நண்பர் ஊரைவிட்டு அமெரிக்கா வுக்குப்போனார். போய்ச்சேர்ந்து சில நாள் ஆகவே, அவருக்கு வீட்டைப் பற்றி நாட்டம் ஏற்பட்டுவிட்டது. ஆயிரக் கணக்கான மயிலுக்கு இப்பால் இருக் கிற பெண்டு பிள்ளைகள்தான் சதா கண்முன் நிற்பது. மனைவி, வீட்டு வேலையில் முழுகி அரங்குக் கதவைத் திறக்கிறதும், அவசரமாய் ஓடி அடுப்பில் வைத்திருந்த சாமானை இறக்கு கிறதும், அப்படியே கண்முன் வந்துவிடும். குழந்தைகள் விளையாடுகிறதையும் ஓடிவரு கிறதையும் பார்த்து, கீழே எங்கே விழுந்து விடுமோ என்று பயந்து, நாற்காலியை விட்டு எழுந்து அவசரமாய் நடந்து போவார். சொந்த ஊர், வீடு, பெண்டு பிள்ளைகள் நிதர் சனம், நனவு. உண்மையாக எதிரே நிற்கும் நியூயார்க் கட்டிடமும், டிராயிங் ரூமும், அமெரிக்கர்களும், ஆண், பெண் எல்லாம் கனவுதான். இந்த மனநிலையை இங்கிலீஷ்க் காரர் அடிக்கடி நேரில் அநுபவித்து, அதை

ஒரு நோய் என்று கண்டு, மருத்துவ சம்பிரதாயத்தை ஒட்டி 'ஹோம்-வலிக்னஸ்' என்று பேரும் கொடுத்திருக்கிறார்கள்.

இது தூரதேசத்துக்குப் போனதால் வந்த காரியம். அதாவது இடம் பெயர்ந்து வாழ்கிறது. இதேபோலக் காலம் பெயர்ந்து வாழ்கிறதும் உண்டு. திருவேட்டீசுரன்பேட்டையில் 'தியாகராஜ விலாச'த்தில் நாளது கிறிஸ்துநாம ஸம்வத்ஸரம் 1935-ஆம் வருஷத்தில் இருந்துகொண்டே காலம் பெயர்ந்து, ஐம்பதல்ல, நூறல்ல, ஆயிரம் இரண்டாயிரம் மூவாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள பழைய காலங்களில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள், மகாமகோபாத்யாய டாக்டர் சாமிநாதையர் அவர்கள்.

ஐயர் அவர்களுடைய ஆசிரியர் திருச்சிரபுரம் மீனாக்ஷி சுந்தரம்பிள்ளை அவர்கள் இருந்த காலம் 50 வருஷத்துக்கு முன். அது, தற்போதைய காலத்துக்கு எவ்வளவோ வித்தியாசப்பட்டது. பிள்ளை அவர்கள் காலஞ் சென்று எத்தனையோ வருஷம் ஆய்விட்டதுதான். ஆனால் என்ன? மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கிறதும், மாணவர் ஒருவர் தம் மனையாளை விட்டுத் தனியாய் இருந்ததனால் உண்டான பிரிவாற்றுமை நோயைக்கண்டு வருந்துவதும், அதற்குச் சிகிச்சை செய்வதும் (மாணவருக்குத் தெரியாமலே தகப்பனுருக்கு எழுதி, மனையாளைக் கொண்டுவந்துவிட ஏற்பாடு செய்ததும்), ஆசிரியர் சிவபூஜை செய்யும்போது மணி ஓசை கேட்கிறதும், புஷ்பத்தை எடுத்து அர்ச்சிக்கிறதும், நந்தவனத்தைத் தினம் போய்ச் சுற்றிப் பார்க்கிறதும், புதிதாய் வைத்த செடி முதல்முதலாகப் பூத்த செய்தியைத் தாம் சொல்ல ஆசிரியர் அப்படியே ஓடிவந்து பார்க்கிறதும், இது போன்ற ஆர்வங்கலந்த எத்தனையோ காட்சிகளை இன்றைக்கும் 'தியாகராஜ விலாச'த்திலிருந்து பார்த்துக்கொண்டும், ஆனந்தித்துக்கொண்டும் இருக்கிறார்கள் ஐயர் அவர்கள்.

இதைவிட விசித்திரம்: இரண்டாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள புலவர்கள் செயலைக் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. கபிலராகிய புலவர், வள்ளல் பாரிக்கு முன் வந்து அங்குள்ள புலவர்களைப் பார்த்து, "அடடா, புலவர்களே! உங்கள் சரக்கு இவ்வளவுதானு! பாடுகிறதற்கு விஷயம் அப்படித் தரித்திரமாகவா போய்விட்டது? கொடையைப்பற்றிப் பாடவேண்டுமானால் ஒருவன்தானு உலகத்தில் உங்களுக்கு? கொடையெல்லாம் பாரியோடு அப்படியே நின்று போய்விட்டது? என்ன! உங்களுக்குத் தெரியாதா? உலகத்தை அளிப்பதற்கு மழையும் இருக்கத்தானே செய்கிறது?"* என்று இன்றைக்குந்தான் ஐயர் அவர்கள் முன் நின்று "தியாகராஜ விலாச"த்தில் விகடம் நடத்திக்கொண்டிருக்கிறார்.

அதிகமான் இறந்து போகிறான். அவனுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் ஆளாயிருந்துவந்த புலவர் அரிசில்கிழார், இதயம் நொந்து அலறுகிறார்: "அட எமனே! என்ன காரியம் செய்துவிட்டாயடா! இவனைக் கொன்று லாபமா கட்டிக்கொண்டாய்? உனக்கு இரை வேண்டும் என்றால் இவனையா கொல்லுகிறது? ரொம்ப வாழ்ந்துபோனாய்! இவன் உயிரோடிருந்தால்தான் போரில் எத்தனையோ பேர் இவன் வில்லால் இறந்து போவார்களே. அத்தனை பேர் உயிரையும் நீ வயிறார உண்ணலாமே. அட பைத்தியமே! பைத்தியமே!!"—இந்தத் தாங்கமுடியாத துயரமும் அலறுதலும் இன்றைக்கும் நிகழ்கின்றன, ஐயர் அவர்களுடைய கலங்கிய கண்களுக்கு முன்.

நிகழ்ந்த காலத்தைக் கைநழுவவிட்டுவிட்டு, சென்ற காலத்தில் இப்படியெல்லாம் ஓட்டிப் பழகுவதோடு நிற்பதில்லை. எதிர்காலத்தில் நெருங்கிப் பழகிக்கொண்டு இருக்கிறதும் அவர்களுக்கு உண்டு.

நூறு அல்லது ஆயிர வருஷங் கழித்துத் தமிழ் நாட்டில் தமிழ்மக்கள் என்ன செய்கிறார்கள் என்று கண் பூத்துப்போக ஒரே பார்வையாய் அடிக்கடி பார்த்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்த வருங்கால உலகத்தில் அவர்கள் காணுகிற விஷயங்கள்:

தமிழைப் புறக்கணிக்கிறதில்லை. தமிழை அவமதிக்கிறதில்லை. தமிழ் படித்தவர்களைக் கடைக்கண்ணால் பார்த்துக் கண்ணடித்து நகையாடுவதில்லை. மற்றெந்தப் பாஷை

*"பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வீர் செந்நாப் புலவீர்
பாரி ஒருவனும் அல்லன்—
மாரியும் உண்டு ஈண்டு உலகு புரப்பதுவே."
புறநானூறு.

யிலும்விடத் தங்கள் தமிழிலேயே மோகம். தமிழ்ப் புத்தகங்களே தங்கள் கைக்கு அலங்காரம். தமிழ்க் கல்வியே தங்கள் அறிவுக்கு அலங்காரம் என்று எக்களிப்போடு பேசுவார்கள்—பயந்து போய், தொண்டைக் குழிக்குள் விழுங்கிப் பேசமாட்டார்கள். உலகத்திலுள்ள கலைகள் எல்லாம் தமிழில் புஸ்தக ரூபமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் எங்கும் ஓடி ஆடி உலவுகின்றன. முக்கியமாக "ருலுலும், ருலுலும்" என்ற தம்பூர் சுருதியோடு ஆற்றுவரி, கானல்வரி, வள்ளைப்பாட்டு, திருவாசகம், குறவஞ்சிப் பாட்டுகள், தமிழ்ப் பதங்கள், இன்னும் எத்தனை எத்தனையோ தமிழ்ப் பாடல்கள் எல்லாம் ஒலித்து, தமிழகம் இசையகமாய் மாறி, தமிழ்மக்கள் தங்களை மறந்துகிடக்கப் பார்க்கிறார்கள்.

ஆகவே "தியாகராஜ விலாச"த்துக்கு வந்து போய்க்கொண்டிருப்பவர்கள் சென்ற காலத்து ஆசாமிகளும் வருங்காலத்து ஆசாமிகளும் தான்—நாம் அல்ல.

—ஆனந்த விகடன்-3-3-35.

வாழிய செந்தமிழ்!

எஸ். ஸத்தியமூர்த்தி, எம். எல். ஏ.

நமது காலத்திய மிகப் பெரிய தமிழ்ப் புலவரான மஹாமஹோபாத்தியாய டாக்டர் சுவாமிநாதையரவர்களின் எண்பதாவது வருஷ பூர்த்தியைக் கொண்டாடுவதென்பது சந்தோஷகரமான விஷயமாகும். இந்த மங்களகரமான சந்தர்ப்பத்தில், தமிழ் மக்கள் தமிழினிடம் காதல் கொள்வதற்குப் பெரு முயற்சிகள் செய்திருக்கும் "ஆனந்த விகடன்" ஒரு விசேஷ மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதே.

மஹாமஹோபாத்தியாயர் அவர்களை அறிந்திருக்கும் பேறு பெற்றவன் நான். அவர்களை அறிந்தவர்கள் அவர்களுடைய அன்புக்கு வசமாகாமல் இருக்க முடியாது. படாடோபம் என்பதை அறியாதவர். கம்பீர முகத்தோற்றம் உடையவர். இன்சொல்லே உரைப்பவர். நாலுபேருடன் அளவளாவிக் கொண்டிருப்பதில் பிரியமுள்ளவர். முதல் தரமான பேச்சுக்காரர். ஆழ்ந்த சிந்தையாளர். சில பெரியார்களைப்போல் எப்போதும் தம்மைப்பற்றிமட்டுமே சிந்தித்துக் கொண்டிராமல் பிறர் நலத்திலும் கவலை கொள்ளுகிறவர்.

தென்னிந்தியர்களின் அறிவுச் சிறப்புக்குக் காரணமான ஆரிய திராவிடக் கலைகளின் அவதாரமென்றே ஐயரவர்களைச் சொல்லலாம். டாக்டர் சுவாமிநாதையரவர்கள் வைதிக ஆசார சீலர். அவர் தமிழிடம் கொண்டிருக்கும் காதலுக்கு வேறெந்தக் காதலையும் ஒப்பிட்டுக் கூற முடியாது.

தமிழுக்கும் ஸம்ஸ்கிருதத்துக்கும் இடையே பாஷைப் போட்டி ஏற்படுத்தும் தூர் முயற்சிகளுக்கு ஐயரவர்களின் தமிழ்த் தொண்டு என்றும் அறை கூவி நிற்கிறது. தமிழர் இன்று தமிழின் பெருமையை உணர்ந்திருப்பது ஐயரவர்களால்தான். தாய்ப் பாஷையை விரும்புவது நல்லது. அதைப் பொருளறிந்து விரும்புவது மேலும் நல்லது. ஆனால் மற்றப் பாஷைகளையும் அவமதிக்காது தாய்ப்பாஷைக்குப் பணிவிடை செய்வது சர்வசிலாக்கியமானது. டாக்டர் சுவாமிநாதையரவர்களிடம் இந்தச் சர்வசிலாக்கியமான குணம் காணப்படுகிறது.

ஐயரவர்களின் ஒப்பற்ற, சுயநலமற்ற உழைப்பில்லாவிட்டால் பல அருமையான தமிழ்நூல்கள் இருந்த இடம் தெரியாமல் போயிருக்கும். வயதில் முதியோரான அவர் ஊக்கத்தில் வாலிபர்.

கொஞ்ச நாள் முந்தி அவரை நான் கோயமுத்தூரில் சந்தித்தேன். வழக்கம் போல் அவர் அருமையான பழைய தமிழ் நூல்களைத் தேடியே வந்திருந்தார் என்று அறிந்தேன்.

ஐயரவர்கள் இன்னும் பல வருஷங்கள் ஜீவித்திருந்து உழைத்து வர அநுக்ரஹிக்கும்படி கடவுளைப் பிரார்த்திப்போமாக! அந்த வருஷங்களில் அந்த உழைப்பு தமிழுக்கு உழைப்பாகவே இருக்கவேண்டுமென்றும் நாம் பிரார்த்தனை செய்ய வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால்

தமிழ்த் தாய்க்குப் பணிசெய்து நிற்பதைத் தவிர ஐயரவர்களுக்கு வாழ்க்கையில் வேறு லக்ஷியமோ ஆசையோ கிடையாது. அவர் களது உழைப்பு தமிழ் நாட்டு வாலிபர்களுக் கும் சகோதரிகளுக்கும் ஒரு தூண்டுகோலாக இருக்குமென்று நம்புகின்றேன்.

"ஆனந்த விகடன்" சொல்வது போல் காலஞ்சென்ற சுப்ரமண்யபாரதியவர்களும், மஹாமஹோபாத்தியாய டாக்டர் சுவாமி நாதையரவர்களும் தற்காலத் தமிழ்வானில் உதயமான இரண்டு பெரிய நட்சத்திரங்க ளாவார்கள். இவைகளில் ஒரு நட்சத்திரமா வது இன்றும் ஒளி வீசிக்கொண்டிருப்பது நம்முடைய பாக்கியம். நாளது மார்ச்சு மீ 6-ந் தேதியன்று இந்தத் தமிழ்ப் பெரியாரின் எண்பதாவது ஆண்டு பூர்த்தியாகிறது. தமி ழர்களும் தமிழன்பர்களும் இந்தத் தினத் தைக் களிப்புடன் கொண்டாடி ஐயரவர் கள் இன்னும் நீடுழிகாலம் வாழ்ந்திருக்கப் பிரார்த்தனை செய்வார்களாக.

வாழிய செந்தமிழ்!

—ஆனந்தவிகடன்-3-3-35.

பழைய நினைவுகள்

கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், பி. ஏ., பி. எல்.

சென்ற நாற்பத்தைந்து வருஷங்களாக, அதாவது எனக்கு விவரம் தெரிந்த நாள் முதல், மகாமகோபாத்தியாயர் அவர்களை எனக்குத் தெரியும். என்னை அப்பொழுது படிக்கக்கூட வைக்கவில்லை. அந்தக் காலத் திலே என் தாயார் தகப்பனார் கும்பகோணத் திலே பக்தபுரித்தெருவிலே குடியிருந் தார்கள். நாங்கள் இருந்த வீட்டுக்கு நேர் எதிர்வீட்டிலே சாமிநாதையரவர்களும் அவ ருடைய தாயார் தகப்பனரும் குடியிருந்தார் கள். அப்பொழுது அவர் அந்த ஊரிலுள்ள அரசாங்கக் கலாசாலையில் தமிழ்ப் பண்டிதரா யிருந்தார்.

நான் முதலில் அவரைப் பார்த்தபோது அவரைச் சுற்றிச் சுவடிகள் அடுக்கடுக்காகக் கிடந்தன. சுவடிகளுக்கு இடையே அவர் இருந்தார் என்று சொல்வதுதான் பொருந்து மென்று தோன்றுகிறது. இந்தக் காட்சியா னது எனக்கு இன்றும் நினைவிருக்கிறது.

அவர்கள் வீட்டின் வாசல் திண்ணைக்கு முன்புறத்திலே கீற்றுக் கொட்டகை ஒன்று போட்டிருந்தது. அவர்கள் அங்கே தரையில் காலைச் சப்பணங்கூட்டி உட்கார்ந்து கொண்டு, கையிலுள்ள ஏட்டுச் சுவடிகளைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருப்பது எனக்கு நன்றாக ஞாபகமிருக்கிறது. அந்த நாட்க ளிலே அவர்களுக்கு மேஜை நாற்காலிகள் இல்லை. மெத்தை தைத்த ஸோபாக்களோ, சாய்மான நாற்காலிகளோ, கட்டில்களோ கிடையா. இன்றும் அவர்கள் அவைகளை உபயோகிப்பதில்லை. கீழே சிறுபாய் ஒன்று விரித்திருக்கும். அதன்மேல் அவர்கள் சப் பணங்கூட்டி உட்கார்ந்துகொள்ளுவார்கள். அவருக்கு எதிரே சிறு சாய்பலகை மேஜை ஒன்றுமட்டிலும் இருக்கும். இன் றைக்கும் அப்படித்தான். ஓலைச் சுவடிகளைப் படிக்கும்போதும் அல்லது அவைகளைப் பார்த்து எழுதும்போதும் அவர் அந்த மேஜைப்புறமாகச் சிறிது குனிந்துகொண்டி ருப்பார். மணிக்கணக்காகக் குனிந்தவண்ண மாகவே படித்துக்கொண்டிருப்பார். சிறிது நேரமாவது முதுகைச் சாய்த்துக்கொள்ளுவ தில்லை. ராத்திரி வெகுநேரம் வரையிலும் தூக்கம் விழித்துப் படித்துக்கொண்டிருப் பார். கொட்டகைக்குள் மினுக்கு மினுக்கு என்று எரியும் சிறிய ஆமணக்கெண்ணெய் விளக்கு எத்தனையோ நாட்களில் பாதிராத் திரி வரையில் எரிவதை நான் பார்த்திருக் கிறேன்.

நாற்காலிகளையும் மேஜைகளையும் ஒடித்து எறிந்துவிட்டுப் பழைய நாட்களில் போலத் தரையில் உட்கார்ந்துகொண்டு படிப்பதும் எழுதுவதும்தான் மேலென்று எனக்குத் தோன்றுகிறது. பழைய முறையைப் பார்த் தால் யோக ஆசனத்தில் அமருவதற்கு வேண் டிய பயிற்சியைக் கொடுப்பது போலிருக் கிறது. ஏனென்றால், இன்றும், அவர்களுக்கு எண்பதாம் ஆண்டு பூர்த்தியாக இருக்கும்

போதும், அவர்கள் முதுகுக்குச் சாய்மானம் வேண்டியதில்லை. தரையில் உட்கார்ந்து கொண்டு, ஒரே மூச்சாக மணிக்கணக்காக வேலை செய்கிறார்கள். நம்மில் எத்தனை பேரால் இது முடியும்? ஓர் அரைமணி நேர மாவது சேர்ந்தாற்போல் நம்மால் சாயாமல் உட்கார முடியுமா?

அவர்கள் வேலை செய்யும் பொழுது மிகவும் ஆழ்ந்த சுவனத்துடன் வேலை செய்வார்கள். அவர்கள் படித்துக்கொண்டிருக்கும் போது யாராவது வருவார்கள். வேலை தடைப்படும். அவர்கள் பேசிவிட்டுப்போன மறு கணமே அவர்கள் முழு மனதும் பழைய வேலையில் ஆழ்ந்துவிடும். அவர்கள் எவ்வளவு முக்கியமான வேலையைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் சரி, தம்மைப் பார்க்க வேண்டும் என்று வருபவர்களை மிகவும் உற்சாகத்துடன் வரவேற்று மிகவும் பிரியமாகப் பேசுவார்கள். துளிக்கூட மனச்சலிப்பு அடையமாட்டார்கள். அவரிடம் பேச வந்தோரும் ஒரு வில் எழுந்திருந்து போகமாட்டார்கள். போக மனம் வராது. அவருடைய பேச்சின் நயமும் சுவையும் அப்படியிருக்கும். நேரம் போவதே தெரியாது. ஒவ்வொரு நிமிஷமும் புதிது புதிதாக ஏதாவது சொல்லிக்கொண்டேயிருப்பார்கள். கேட்கக்கேட்க மேன்மேலும் ஆவலுண்டாகுமே தவிர, எழுந்திருந்து போகவேண்டுமென்ற எண்ணமே உண்டாகாது. அவர்கள் காட்டும் மரியாதையும் அன்பும் அப்படி இருக்கும். எவ்வளவு நேரம் நாம் பேச்சுக் கொடுத்து அவர்களுடைய நேரத்தை வீணாக அடித்தாலும் அவர்களுக்குத் தம்முடைய நேரம் வீணாகிவிட்டதே என்ற மனச்சலிப்புச் சிறிதுகூட உண்டாகாது. நம்மில் எத்தனை பேருக்கு இந்த மாதிரியான உயர்ந்த மனநிலை இருக்கிறது?

நான் சிறு பையனாயிருக்கும்போது என் வயதுப் பையன்களோடு தெருவில் விளையாடியது நன்றாக ஞாபகமிருக்கிறது. எங்களுக்கு விளையாடுவதற்கு வேறு இடம் ஒன்றும் கிடையாது. இரண்டு பக்கமும் வரிசையாய் வீடுகள் நிறைந்த தெருவில் குடியிருந்த நாங்கள் விளையாடுவதற்கு எங்கே போகமுடியும்?

ஆகவே முனிஸிபாலிடித் தெருத்தான் எங்கள் விளையாட்டிடம். பெருக்கிக் குவித்த குப்பை, அடுப்புச் சாம்பல், எச்சில் இலைகள் எங்கேபார்த்தாலும் கிடக்கும். இடை இடையே வீட்டுக் கழிவுநீர் தெருவில் தேங்கிக் கொசு மொய்த்து நிற்கும். இவை ஒன்றும் எங்களுக்கு லக்ஷியமே இல்லை. நாங்கள் பந்து விளையாடும் போது அவற்றின்மேலெல்லாம் ஓடியாடுவோம். அவற்றின்மேல் உருளும் பந்து, நிறம் நிறமாக மாறும். தெருவிலே நடந்துபோகும் பெரியவர்கள்—ஆண்களும் பெண்களும்—எங்களை வாயில் வந்தபடி திட்டுவார்கள். கோயிலுக்கோ நதிக்கோ போய்வரும் பெண்டிர்கள்மேல் நாங்களாவது எங்கள் பந்தாவது பட்டுவிட்டால் எங்களைச் 'சனியன்' என்றும் 'பீடைகள்' என்றும் 'பறை ஜாதிகள்' என்றும் அவர்கள் வைது கொட்டியதை நினைத்தால் எனக்கு இன்றும் சிரிப்பு வருகிறது.

சிற்சில வேளைகளில்—வேண்டுமென்றல்ல, எங்களை அறியாமலே—எங்கள் பந்துகளை ஐயரவர்கள் வேலை செய்யும் கொட்டகைக்குள் உதைத்து விடுவோம். அவர்கள் சாயங்கால வேளைகளிலுங்கூடப் புஸ்தகங்களையும் சுவடிகளையும் வைத்துப் படித்துக்கொண்டிருப்பார்கள். நாங்கள் பந்தை எடுப்பதற்கு ஓட்டமாக ஓடிவருவோம். நாங்கள் பந்தை அடித்ததற்காவது, அதை எடுப்பதற்கு வந்ததற்காவது அவர்சிறிதுகூடக் கோபித்துக்கொள்ளமாட்டார். முகத்தைச் சுளித்துக்கொள்ளவும் மாட்டார். உள்ளே பரபரப்பாக ஓடிவரும் எங்களைப் பார்த்துப் புன்னகை புரிவார். பிரசன்னமான முகத்தோடு எங்கள் பந்தைப் பொறுக்கி எடுத்துக்கொடுப்பார்.

அவர் ஒருவரிடமும் அப்பிரியமாகப் பேசமாட்டார். கடுமையான வார்த்தை மருந்துக்கும் அகப்படாது. ஒருவன் செய்த காரியத்தைக் கண்டோ, அல்லது பேசிய பேச்சைக் கேட்டோ, நமக்கு அவனை அறையவேண்டும்போல் கோபம் வரக்கூடுமல்லவா? அப்பேர்ப்பட்ட வேளைகளிலுங்கூட அவருக்குக் கோபம் வருவதில்லை. பொறுமையே வடிவமாக உடையது அவருடைய வாழ்க்கை. அவருடைய ஆத்மாவானது இந்த ஒரு ஜன்மத்தில் அடைந்துள்ள பக்குவத்தை நாம் அடைய வேண்டுமானால் இன்னும் எத்தனையோ ஜன்மங்கள் எடுத்தாகவேண்டும்.

நம்முடைய குழந்தைப் பிராயத்திலே நமக்கெல்லாம் 'அன்னையும் பிதாவும் முன்னறி

தெய்வம்' என்கிற பழமொழியைப் பாடம் பண்ணிவைக்கிறார்கள். அநேகருக்குப் பழமொழியானது பாடத்தோடு முடிவடைந்து விடுகிறது. ஐயரவர்கள் இந்தப் பழமொழியைத் தம் வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தார்கள். தம்முடைய தாய் தந்தையர்கள்மேல் அவர் அளவில்லாத அன்புவைத்திருந்தார். அவர்களிடம் மிகவும் பக்தி சிரத்தையுடனும் மிக்க மரியாதையுடனும் நடந்துவந்தார். அவருடைய தகப்பனாரின் முன்னிலையில் அவர் உட்காருவதில்லை. 'நம் முடைய தகப்பனார் ஏராளமான பணத்தைச் சம்பாதித்து வைத்திருக்கிறார். நாம் பவ்யமாக நடந்துகொள்ளாவிட்டால் அவர் நமக்குச் சொத்தைக் கொடுக்கமாட்டார், என்கிற எண்ணத்தால் ஏற்பட்டது அல்ல இந்த நடத்தை. அவருக்கு உண்மையாகவே தம் முடைய தாய் தந்தையரின்மேல் உள்ள விசுவாசமும், அவர்களிடம் தாம் நடந்து கொள்ளவேண்டிய முறை இதுதான் என்கிற உணர்ச்சியுமே இதற்குக் காரணம். அவர் எழுதியிருக்கிற மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களின் ஜீவசரிதையைப் படித்துப் பார்த்தால் அவர் தம் தகப்பனாரிடத்திலும் குருவிடத்திலும் எவ்வளவு மரியாதை வைத்திருந்தார் என்பது தெரியும்.

அவரிடத்தில் இன்னொரு அற்புதமான குணமும் உண்டு. தம்மோடுகூட வேலை செய்கிறவர்களிடத்தில் அவருக்குள்ள அபிமானம் அளவற்றது. அவர் வேலை செய்துகொண்டிருக்கும்போது அவர் சாப்பிடுவதற்கென்று வீட்டுக்குள்ளேயிருந்து ஏதாவது பலகாரத்தையோ அல்லது ஒரு டம்ளர் காப்பியையோ கொண்டுவந்து வைப்பார்கள். அவர் அதை எடுத்துத் தம்மோடு வேலைசெய்துகொண்டிருப்பவருக்குக் கொடுத்து அவரைச் சாப்பிடும்படி வற்புறுத்தி உபசரிப்பார். கூட வேலைசெய்பவர் காப்பி ருசியை அறியாதவராகவே இருக்கலாம். அப்படியிருந்தாலுங்கூட அவரைக் கட்டாயப்படுத்திச் சாப்பிடச் செய்வார். தாம் ஒன்றுமில்லாமல் இருந்துவிடுவார். இதை நினைக்கும் பொழுது இவ்வாறு செய்யாமல், தாம் சாப்பிட்டுப் பிறருக்குக் கொடுக்காத பல பெரியார்களின் ஞாபகம் வருகிறது. பணத்திலும் பெரியவர்களுக்கும் குணத்திலும் பெரியவர்களுக்கும் இதுதான் வித்தியாசம்.

இவ்வளவும் என் சிறுவயதில் நேர்ந்த சம்பவங்கள். எனக்கு வாலிபப் பருவம் வந்த பிறகு நடந்த சம்பவங்களுள் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். அந்த வயதிலே அது என் மனத்திலே ஒரு பெரிய உணர்ச்சியை உண்டாக்கிற்று. மகாமகோபாத்தியாயரவர்களைப் போன்ற பெரியோர்கள் சாதாரணமாய் ஒருவரோடொருவர் எப்படிப் பழகிவந்தார்கள் என்பதையும் அது விளக்குவதாயிருக்கிறது.

கும்பகோணம் காலேஜிலே நான் எப். ஏ. வகுப்பிலே வாசித்துக்கொண்டிருந்தேன். நான் ஸம்ஸ்கிருதத்தை இரண்டாவது மொழியாக எடுத்துப் படித்துக்கொண்டிருந்தேன். ஒவ்வொரு நாளும் கடைசிப் பாடம் ஸம்ஸ்கிருதப் பாடம். பி. ஏ. வகுப்புக் கடைசிப் பாடம் சரித்திரம், கணிதம், தத்துவ சாஸ்திரம். அப்பொழுது புரொபஸர் கே. சுந்தர ராம ஐயர் சரித்திர போதகாசிரியராயிருந்தார். காலஞ்சென்ற தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியார் ஸம்ஸ்கிருத பண்டிதராயிருந்தார். காலேஜின் மேற்குக் கோடியிலே உபாத்தியாயர்களுக்கென்று தனியாக ஏற்படுத்தப்பட்ட அறை இருந்தது. கடைசிப் பாடத்துக்கு மூன்றினபாடம் முடிந்து விட்டது என்பதைக் காட்டும் மணி அடித்தவுடன் புரொபஸர் சுந்தரராமையரவர்களும் இரண்டு பண்டிதர்களுமாக உபாத்தியாயர்களின் அறையை விட்டுப் புறப்படுவார்கள். மூன்று பேரும் ஒன்றுபோல ஊர்வலத்தில் நடப்பது போல் மெதுவாக நடப்பார்கள். இவர்கள் எப்பொழுது சந்தித்தாலும் சரி, நல்ல விஷயமாக ஏதாவது ஒன்றைப்பற்றிப் பேசாமலிரார்கள். உள்ளே அறையில் தொடங்கிய பேச்சை வெளியேயும் நடத்திக்கொண்டே வருவார்கள். ஒரு நிமிஷத்துக்குப் பத்தடி எடுத்து வைத்தால் அதிகம். முதலிலே அவர்களுக்குச் சரித்திர வகுப்புக்கு முன்னாலே ஒரு மண்டபப்படி ஆகும். அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் செய்து கொள்ளும் உபசாரங்களையும், காட்டும் மரியாதைகளையும் பார்க்கக் கொடுத்துவைக்க வேண்டும். அவர்கள் அங்கிருந்து பிரிவதற்குப் பத்து நிமிஷமாவது ஆகும். ஒருவருக்கொருவர் நமஸ்காரம் முதலியவற்றைச் செய்த பிறகு புரொபஸர் சுந்தரராமையர் சரித்திர வகுப்புக்குள் போவார்.

பிறகு அங்கிருந்து இரண்டு பண்டிதர்களின் ஊர்வலம் புறப்படும். இதற்குமுன் நகர்ந்தார்கள் என்று சொன்னால் இப்பொழுது ஊர்ந்தார்கள் என்றுதான் சொல்லவேண்டும். இடையிடையே பேச்சு சுவாரஸ்யத்திலே நடைக்கு முற்றுப்புள்ளி கூடப் போட்டு விடுவார்கள். மண்டபப்படி பெரிய மண்டபப்படி ஆகிவிடும். அடுத்த வகுப்பு எங்களுடைய ஸம்ஸ்கிருத வகுப்பு. அதற்கு எதிரேயும் நமஸ்காரங்களும் அஞ்சலிகளும் பரிதாக நடைபெறும். பிறகு ஸம்ஸ்கிருத பண்டிதர் மெதுவாக எங்கள் வகுப்புக்குள் வருவார். சாமிநாதையரவர்களும் கீழ்க் கோடியிலுள்ள தம் வகுப்புக்குப் போவார்கள். இம்மூன்று பேராசிரியர்களும் ஒன்றாக நடந்துவரும் காட்சியைப் பார்ப்பது அதிர்ஷ்டவசமென்றே கூறவேண்டும். அதை ஒரு தெய்விகக் காட்சியென்றுகூடச் சொல்லுவேன்.

'இவர்கள் இப்படி நேரங் கழித்து வந்தால் வகுப்புச் சரியாக நடக்குமா? பாடம் வீணாகப் போகாதா?' என்று கேட்கலாம். பாக்கியுள்ள அரைமணி முக்கால் மணியில் இவர்களிடம் பாடம் கேட்பதும் சரி, மற்ற ஆசிரியர்களிடம் மூன்று நான்கு மணி கேட்பதும் சரி. அவ்வளவு மனத்தில் படும்படியாயும் நேர்த்தியாயும் இருக்கும் இவர்கள் பாடம் சொல்லுகிற முறை.

ஐயரவர்கள் நடத்திவரும் வாழ்க்கை மிகச் சிறந்தது; வருங்காலத்திலுள்ளோர்க்கெல்லாம் வழிகாட்டியாக உள்ளது; யாவராலும் பின்பற்றத் தகுந்தது. நெறிதவறுமை, உண்மை, தூய்மை, தன்னம்பிக்கை முதலிய சிறந்த மேன்மைக் குணங்கள் நிரம்பிய வாழ்க்கை. சின்னஞ் சிறு அசூயைகளுக்கும் சில்லரைக் கோபங்களுக்கும் அவருடைய மனத்தில் இடம் கிடையாது. அவருடைய விசாலமான மனத்திலே பெருந்தன்மையும் பரோபகாரசிந்தையும் அன்பும் நிறைந்து குடிகொண்டுவிட்டன. அதனால்தான் அவர் திடசரீரியாயும், தீர்க்காயுள் உடையவராயும், குன்றாத ஊக்கமுடையவராயும், சலிக்காத உழைப்புடையவராயும் இருந்து வருகிறார்.

நாளுக்கு நாள் அவருடைய அறிவு முதிர்ச்சி அடைந்துவருகிறது. அவருடைய மேதையானது வலிவுமிகுந்துவருகிறது. புத்தியானது மேன்மேலும் கூர்மையாகின்றது. அவருடைய ஞாபகசக்தி யாவரும் வியப்புறும்படி இருந்துவருகிறது.

இன்னும் பலவருஷகாலம் நாம் வணங்கி மகிழும்படி அவர்கள் வாழ அருள்புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக!

—ஆனந்த விகடன்-3-3-35.

இளமையின் இரகசியம்

பே. நா. அப்புஸ்வாமி ஐயர், பி. ஏ., பி.எல்.

ஐசுவரியமும் ஆரோக்கியமும் நிரம்பித் ததும்பும் மேல்நாடுகளிலே எத்தனையோ பேருக்கு நூறும் ஆண்டு நிறைவுவிழா வருகிறது. அப்பொழுது சுறுசுறுப்புள்ள பத்திரிகை நிருபர்கள் அவர்களைச் சும்மா விடுவதில்லை. யாராவது ஒருவன் அவர்களிடம் போய், 'ஐயா தாங்கள் தீர்க்காயுசாக இருப்பதற்கு ஏதாவது ஒரு விசேஷமான காரணம் இருக்கவேண்டும். அதைத் தயை செய்து தெரிவித்தால் நான் அதை உலகத்தாருக்குத் தெரியப்படுத்துவேன். அவர்களும் தங்களைப் போல் தீர்க்காயுசாக இருப்பார்கள்!' என்பான். உடனே அவர் 'வேறொன்றுமில்லை: நித்தியம் காலை ஐந்துமணிக்கு எழுந்திருந்து நாலு மைல் ஓடுகிறேன். அதுதான் என் தீர்க்காயுசுக்குக் காரணம்' என்பார். இன்னொரு நூற்றுண்டுப் பேர்வழி 'நான் காலையில் எழுந்திருப்பதே கிடையாது. ஒன்பது மணிவரை நன்றாகத் தூங்குவேன். அதனால்தான் என் உடல் கட்டுத் தளராமலிருக்கிறது' என்பார். மற்றொரு சதாயுஸ் 'நான் கள்ளைத் தொடுவதே இல்லை. அதனால்தான்' என்பார். நான்காவது ஆசாமி 'நான் மிதமாகக் கள் உண்பேன். அதுதான் என்னு

டைய தீர்க்காயுளுக்குக் காரணம்' என்பார். இன்னொருவர், 'என்னவந்தாலும் சரி. நான் கவலைப்படுகிறதில்லை, கவலைப்படவே கூடாது. அதுதான் முக்கியம்' என்பார்.

* * *

மூன்காலத்திலே பிசிராந்தையார் என்ற புலவர் ஒருவர் இருந்தார். அவருக்கு வயது அதிகமாகிவிட்டது. பேருக்குக்கூடத் தலையில் ஒரு நரைத்த மயிர் கிடையாது. அவரைக் கண்ட பழங்காலப் பேர்வழி ஒருவர்—அந்தக்காலத்தில் பத்திரிகை நிருபர்கள் இல்லை-அவரிடம், 'தங்கள் இளமையின் இரகசியத்தை எனக்குத் தெரிவிக்க வேண்டும்' என்றார். உடனே புலவர்—ஒரு காரணத்தையல்ல—பலகாரணங்களை அடுக்கினார். 'ஐயா, என் மனைவி நன்றாகப் படித்தவள். நற்குணம் வாய்ந்தவள். எனக்கு நிறையக் குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களும் நன்றாகப் படித்திருக்கிறார்கள். என் வேலைக்காரர்கள் நான் எண்ணிய காரியங்களைக் குறிப்பறிந்து செய்கிறார்கள். எங்கள் அரசன் மிகவும் நல்லவன். கெடுதியே செய்யமாட்டான். எல்லாரையும் காப்பாற்றுவான். எங்கள் ஊரிலே எனக்கு எத்தனையோ சிநேகிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கற்றவர்கள். நல்லவர்கள். சாந்தகுணம் உடையவர்கள். இதுதான் என்னுடைய இளமைத் தோற்றத்தின் ரகசியம்' என்று சொன்னதாகப் புறநானூற்றுச் செய்யுள் ஒன்றிலே காணப்படுகிறது.

தற்காலத்திலே தமிழ்ப் பேரறிஞராகவுள்ள மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடப்போகிறார்கள். அவர்கள் இப்பொழுதுகூட இளம் பிராயத்தினரைப் போலவே உற்சாகமாக வெகுநேரம் உழைத்து வருகிறார்கள். இதற்குக் காரணம் என்ன? பிசிராந்தையார் சொல்லாத காரணம் ஒன்று இருக்கிறது. அதுதான் இவர்களது இளமைக்குக் காரணம். அதை இரகசியமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்:

சாமிநாத ஐயரவர்கள் சென்னைக்குப் பக்கத்திலுள்ள ஓர் ஊரில் சுவாமிதரிசனத்துக்குப் போயிருந்தார்கள். அங்கே கோயில் தர்மகர்த்தா இவர்களை மிகவும் ஆதரவுடன் வரவேற்று மேளதாளத்துடன் சுவாமி தரிசனம் செய்து வைத்தார். அந்தக் கோயில் நாக சுவரக்காரன் இவர்களுக்குத் தர்மகர்த்தா செய்கிற உபசாரங்களைப்பார்த்து இவரை மிகவும் திருப்திசெய்ய வேண்டுமென்று எண்ணி இவர் முன்னால் நின்றுகொண்டு தன்னுடைய கைச்சரக்கை எல்லாம் காட்ட ஆரம்பித்துவிட்டான். அவனுக்கு ஒரு ஸ்வரமாவது சரியாகப் பேசாது. ஐயரவர்களோ சங்கீதத்தில் மிக்க தேர்ச்சி உள்ளவர்கள். அதை முறையாகக் கற்றவர்கள். நன்றாகப் பாடக் கூடியவர்கள். அவர்கள் காதிலே ஒவ்வொரு ஸ்வரமும் நாராசம்போல் பாய்ந்து கொண்டிருந்தது. அவர்கள் சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தார்கள். தாங்க முடியவில்லை; மேளகாரனும் நிறுத்துவதாயில்லை. உடனே புன்னகையுடன் அவர்கள் தர்மகர்த்தாவைப் பார்த்து, 'ஐயா! உங்கள் மேளகாரன் பக்தியுடன் வாசிக்கிறான். இந்த மாதிரியான பக்தியை நான் பார்த்ததே இல்லை' என்று சொல்லிவிட்டு இவனைப் பார்த்து, 'அப்பா! போதும்; ரொம்ப சிரமம்' என்றார்கள். அவன் தன்னை ஐயரவர்கள் புகழ்ந்ததாகவே எண்ணி உற்சாகத்துடன் வாசிப்பதை நிறுத்திவிட்டுக் கும்பிடு போட்டான்.

ஐயரவர்கள்கூடவிருந்தவர்களில் சங்கீத ஞானமுள்ள சிலருக்குமட்டிலும் ஐயரவர்கள் சொன்ன வார்த்தைகளின் உண்மையான பொருள் தெரிந்தது. ஒருவர் மனதும் புண்படவில்லை. உண்மையல்லாததைச் சொல்லவும் இல்லை. நினைத்த காரியம் இனிதாக முடிந்தது.

சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னாலே சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜில் சாமிநாத ஐயரவர்கள் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். பாடம் கேட்போர் எல்லாரும் பொதுவாகக் கவனத்துடன் கேட்டுவருவார்கள். வகுப்பில் சிரிப்பும் அடிக்கடி கேட்கும். ஒரு நாள் நண்பன் ஒருவன்—அவன் இப்பொழுது நல்ல உத்தியோகத்தில் இருக்கிறான்—பாடத்தைக் கவனிக்காமல், பின் பெஞ்சு ஒன்றில் இருந்து கொண்டு, பேனாக் கத்தியால் மேஜையில் ஓட்டை போட்டுக் கொண்டிருந்தான். அந்தச் சேஷ்டையைக் கவனித்த ஐயரவர்கள் அவனைக் கோபித்துக்கொள்ளவில்லை. புன்

னகையுடன் 'ஐயர்வாள்! அது இயற்கையோ? செயற்கையோ?' என்று கேட்கவே, வகுப்பு கொல்லென்று சிரித்தது. தன்னைக் குரங்குச் சேஷ்டை செய்பவன் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் என்பதை உணர்ந்த மாணவனும் ஐயரவர்களின் முகத்தில் தோன்றிய புன் னகையில் ஈடுபட்டுவிட்டான். இவன் சிறிது வெட்கம் அடைந்தானெயினும் மனம் சலிப் படையாமல் பாடத்தைக் கவனிக்கத் தொ டங்கினன்.

ஐயரவர்கள் பிரஸிடென்ஸி காலேஜில் பாடம் நடத்தும்போது மாணவர் ஒருவர் சேஷ்டை செய்துகொண்டும், பக்கத்திலுள்ள வர்களோடு பேசிக்கொண்டும், பாடத்தைக் கவனிக்காமல் இருந்தார். ஐயரவர்கள் பலமுறை புத்தி சொல்லியும் கேட்கவில்லை. ஒரு நாள் பொறுக்க முடியாதபடி விஷமம் செய்யவே, ஐயரவர்கள் அவரைக் கண்டுபிடித்து விட்டு, அவர் செய்வது தீது என்றும், தீங்கு செய்கிற வர்கள் முன்னேற்றம் அடையமாட்டார்கள் என்றும் மேற்கோள்களுடன் நாலு வார்த்தை சொன்னார்கள். பிறகு புன்னகையுடன் வகுப் பைப் பார்த்து, 'தீயாரைப்பற்றி வேறு ஏதா வது மேற்கோள்கள் உங்களுக்குத் தெரி யுமா?' என்று கேட்டார். பளிச்சென்று எழுந்திருந்தார் மேற்கூறிய மாணவர்; 'என்ன?' என்று ஐயரவர்கள் கேட்கவே மாணவர், 'தீயார் சொற் கேட்பதுவும் தீதே' என்று கணீரென்று சொன்னார். வகுப்புத் திகைப்படைந்தது. அதுவரை அவ்வளவு துடுக்காக ஒருவரும் சொன்னதில்லை. ஐயர வர்களுக்கு என்ன கோபம் வருமோ வென்று பயந்தார்கள். ஒரு பயத்துக்கும் இடமே இல்லை. ஐயரவர்கள் முகத்தில் கோபக் குறியே கிடையாது. மிகவும் இனிமையான புன்னகை பரந்தது. அவர்கள் சற்றுச் சிரித் துக்கொண்டு, 'அஞ்சாத நெஞ்சபடைத்தவர் ஐயா, நீர்' என்று சொல்லவே வகுப்பு மூச்சு விட்டது. அன்று முதல் அந்த அஞ்சாத நெஞ்சு படைத்த நண்பர் தம்முடைய விஷம மூட்டையைத் தமிழ்வகுப்பில் அவிழ்ப்ப தில்லை.

இரகசியம் விளங்கிவிட்டதா? நகைச் சுவைதான் இளமைக்குக் காரணம். அது தான் தேகபுஷ்டியைத் தரும் சிறந்த டானிக்.

பிறர் மனத்தைப் புண்ணாக்காமல் ஒவ் வொரு சந்தர்ப்பத்திலும் உள்ள நகைச் சுவையை உணர்ந்து அநுபவிப்பது மிகவும் விசேஷமான குணம். ஐயரவர்களைப்பற்றிய முதல் இரண்டு கதைகளிலும் இது காணப்படு கிறது. முதல் கதையில் பரிகசிக்கப்பட்ட வன் பரிகாசத்தை உணரவே இல்லை. அத னால் அவன் புண்படவில்லை. இரண்டாம் கதையில் உணருகிறான்; ஆயினும் புண் உண் டாகவில்லை. இவ்விரண்டைக்காட்டிலும் மூன்றாவதே மேலானது. தன்னை ஒருவன் பரிகசிக்கும்போதும், தன் மனநிலை கெடா மல், அந்தச் சந்தர்ப்பத்திலுள்ள வேடிக் கையை அநுபவித்துச் சந்தோஷமடைவது மேலானது. உண்மையான நகைச்சுவை பொருந்தியவர்கள்தான் இவ்வாறு செய்ய முடியும். அவர்கள் என்றென்றைக்கும் இளமைப்பருவமுடையவர்களாகவே இருப் பார்கள். —ஆனந்தவிகடன்-3-3-35.

ஒரு நாள்

வித்வான் கி. வா. ஜகந்நாதன்

பல வருஷங்களுக்கு முன்பு, ஸ்ரீ மகாமகோ பாத்தியாய ஐயரவர்கள் கும்பகோணத்தில் இருந்த காலத்தில் அவர்கள் காலேஜுக்குப் போவதொழிந்த மற்றக் காலங்களிலெல் லாம் தமிழ் ஏட்டுச்சுவடிகளை வைத்துக் கொண்டு ஆராய்ந்து வருவதை ஒரு கனவான் கவனித்து வந்தார். ஒரு நாளைப் போலவே நாள்தோறும் சலிப்பின்றி ஐயரவர் கள் அந்தச் சுவடிக்குவியல்களுக்கு இடையில் முழுகிக் கிடப்பதை யறிந்த கனவானுக்கு மனவில் இரக்கம் வந்துவிட்டது. ஐயரவர் களிடம் வந்தார். 'ஐயா! ஒன்று சொல் கிறேன் கேட்கவேண்டும். பொழுது விடிந்தால் அறுபது நாழிகையும் இந்தப் பனையோலை களைப் புரட்டிப் பார்த்துக் கண்ணைக் கெடுத் துக்கொள்கிறீர்களே! இதை யெல்லாம் விட்டுவிடுங்கள். வீணாக எதற்கு உடம்பைக் கெடுத்துக் கொள்கிறீர்கள்?' என்று

அவர் உபதேசம் செய்தார். ஐயரவர்களுக்கு அவருடைய அன்பு புலப்பட்டது. அவருக்கு, சிந்தாமணி, சிலப்பதிகாரம், தமிழ்—இந்த சமாசாரமெல்லாம் புரியாதென்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையால், 'அப்படியே செய்கிறேன். தாங்கள் சொன்னது பற்றி மெத்த ஸந்தோஷம்!' என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

சில வருஷங்கள் சென்றன. மேலேகூறிய கனவானை ஐயரவர்கள் சந்திக்க நேர்ந்தது. அவர், "என்ன ஐயா! இப்பொழுது உடம்பு சௌக்கியமாக இருக்கிறீர்களா? அந்தத் 'தொடிசை' இப்பொழுது வைத்துக்கொள்ளவில்லையே?" என்று ஆர்வத்துடன் கேட்டார். ஐயரவர்கள் புன்னகையால் விடை கூறினர்கள். அவர்களுடன் சென்ற அன்பர்களுக்கு, கனவான் சொன்ன 'தொடிசு' இன்னதென்று விளங்கவில்லை. அவரிடம் விடை பெற்று வந்தபின்பு உடன் வந்த அன்பர்களுக்கு ஐயரவர்கள் அந்தக் கனவான் ஏட்டுச் சுவடிகளைக் குறிப்பிட்டாரென்று விளக்க வேண்டியதாயிற்று. இது பழங்கதை. இன்றைக்கு அக்கனவான் வந்து பார்த்தாராலுல் இந்த எண்பத்தோராம் பிராயத்திலும் ஐயரவர்கள் அந்தத்தொடிசை இன்னும் பலமாகப் பிடித்துக்கொண்டிருப்பதைக் கண்டு மயங்கி விழுந்து விடுவாரென்பதில் சந்தேகமில்லை.

இருபதாம் பிராயத்தில் முளைத்த தமிழ்ப் பணி, மரமாகிப் பூத்துக்காய்த்துப் பழுத்தும் இன்னும் பழைய ஊக்கத்தோடு அவர்களிடம் பச்சிளமையில் விளங்குவதைக் காணலாம்; இன்னும் எத்தனையோ மடங்கு அதிகமே ஒழியக் குறைவில்லை. இந்த அறுபது ஆண்டுகளாக ஓயாமல் ஒழியாமல், திக்குத் தெரியாத காட்டில் கண்ணைக் கட்டிவிட்டாற் போன்ற உழைப்பில் ஈடுபட்டு நல்ல வழிகளை உண்டாக்கிவரும் அவர்களுடைய உடலும் உள்ளமும் உயிரும் தமிழ் மயமாக இருக்கின்றன. 'ஒருநாள் இந்தத் தமிழ்ப்பணி இல்லாமல் இருந்தால் என்ன முழுகிப் போய்விடும்?' என்று நீங்கள் சுலபமாகக் கேட்டுவிடலாம். 'ஒருநாள் மூச்சு விடாமல் இருந்தால் என்ன பிரமாதம்!' என்று உங்களைக் கேட்டால் என்ன விடை சொல்வீர்கள்? அதே விடையை ஐயரவர்கள் விடையாக வைத்துக்கொள்ளலாம். அவர்களுடைய ஒருநாள் வேலைகளைச் சிறிது எண்ணிப் பாருங்கள்.

விடியற்காலையில் நான்கு மணிக்கு விழித்துக் கொள்கிறார்கள். வழக்கம் போலச் செய்ய வேண்டியவற்றைச் செய்த பிற்பாடு ஜபம் செய்வார்கள். ஐயரவர்களுக்குச் சிவபக்தி அதிகம். நடக்கும்போதுகூடச் சிவநாமம் சொல்லிக்கொண்டிருப்பது அவர்கள் வழக்கம். ஆறுமணி வரையில் ஜபம். பின்பு தேவார பாராயணம் செய்வார்கள். பிறகு உலகத்தார் பண்ணி வைத்த வழக்கம்—வெறுங்காப்பி ஆகாரம். அப்பொழுது மாணாக்கர்கள் வந்துவிடுவார்கள். அந்தக் காப்பியில் சிறிது சிறிது உடன் இருப்பவர்களுக்குப் பங்கிட்டுக் கொடாவிட்டால் அவர்களுக்கு இறங்காது.

தமிழ்ப்பணி தொடங்கப்படும். ஏட்டுச் சுவடிகளைப் பார்ப்பதோ, பிரதி செய்வதோ, பிரதி செய்ததை ஒப்பிட்டுப் பார்ப்பதோ, 'ப்ரூப்' படித்துப் பார்ப்பதோ, குறிப்புரை யெழுதுவதோ ஏதேனும் ஒன்று நடைபெறும். ஏட்டுச்சுவடிகளை ஒப்பிடும் பொழுது தாமே ஏட்டை வைத்துக்கொண்டு பாராவிட்டால் அவர்களுக்குத் திருப்தி பிறவாது.

ஏட்டுப் புஸ்தகமோ, அச்சுப் புஸ்தகமோ படித்துக்கொண்டுவரும்போதே, இடையில் சட்டென்று நிறுத்தி, 'இங்கே பிழை இருக்கிறது. இந்த வாக்கு இப்படி இராது. மற்ற ஏடுகளைப் பார்க்கவேண்டும்' என்று சொல்வார்கள். அந்த இடத்தில் எழுதினவர்கள் அல்லது பதிப்பித்தவர்கள் செய்த பிழை ஒன்று இருக்கும். வேறொரு சுவடியைப் பார்த்தால் ஐயரவர்கள் சொன்னது உண்மை என்பது புலப்படும். ஓர் இராகத்தை ஒருவன் பாடிக்கொண்டேவரும்போது ஸங்கீத வித்வான்கள் எங்கேயாவது சிறிது அபஸ்வரம் நேர்ந்தாலும் கண்டுபிடித்துவிடுகிறார்களல்லவா? அதைப்போல ஐயரவர்களுடைய காது கலப்படத் தமிழைப் பிரித்து அறிவதில் மிகவும் நுண்ணுணர்வை உடையது. 'சங்க காலத்துவாக்கு இது, பிற்காலத்தது இது' என்று எடுத்தவுடனே சொல்லிவிடுவார்கள்.

'ப்ரூப்' பார்ப்பதென்றால் எவ்வளவு சிரமமான காரியம் என்பதை எல்லோரும் அறியமாட்டார்கள். முதற் 'காலி' முதல், கடைசியில் அச்சிடும்படி உத்தரவு கொடுக்கும் வரையில் ஒவ்வொரு முறையும் கூர்ந்து கவனிப்பது அவர்கள் வழக்கம். எவ்வளவு பேர் பார்த்தாலும் இறுதியில் ஒரு முறை அவர்கள் பார்க்கவேண்டும். அவர்களுடைய கண்ணுக்குத்தான் 'முடிபுப்பிழை, விளங்காத குறிப்பு' இவைகள் தெரியும்.

குறிப்புரை எழுதும்போது அவர்களே எழுதுவார்கள். இல்லாவிட்டால் ஒரு மாணாக்கரிடம் சொல்லி எழுதுவிப்பார்கள். நூலிலுள்ள கருத்துக்கும் சொல்லமைப்புக்கும் ஒத்த பகுதிகள் இன்ன இன்ன நூலில் உள்ளனவென்று காட்டுதல் அவர்களுடைய தனிப்பெருமை. 'சீவக சிந்தாமணியில் இன்ன இடத்தில் பார்; இது விளங்கும்' என்பார்கள். இப்படியே பல ஒப்புமையான பகுதிகள் குறித்துக் கொள்ளப்படும். விளங்காத விஷயங்களுக்கு வலிந்துபொருள்கொள்ளுவது அவர்கள் வெறுக்கும் செயல்களுள் ஒன்று. நெடுநேரம் யோசித்தும் ஒன்றும் விளங்காவிட்டால், 'சரி, மேலே வாசி. பிறகு தோற்றும்' என்பார்கள்; 'ஸம்ஸ்கிருத வித்வான்களைக் கேட்டால் தெரியும்; விசாரிக்கவேண்டும்' என்பார்கள். அன்று மாலை அந்த ஒரு வார்த்தைக்கு ஐந்து மைல் தூரத்திலுள்ள ஒரு வித்துவானிடம்போய் அலைந்துவிட்டு வருவார்கள்.

இத்தகைய தமிழாராய்ச்சிகளுள் ஒன்று மாறி ஒன்று நடைபெறும். சிறிது தளர்வு தோன்றினால் பாடஞ் சொல்லத் தொடங்குவார்கள். தமிழ்ச் செய்யுட்களை இசையுடன் படிக்கவேண்டுமென்று மாணாக்கர்களை வற்புறுத்துவதோடு தாமும் இசையுடன் சொல்லிக் காட்டுவார்கள். மிகவும் வெப்பமான காலத்தில் குளிர்ந்த தென்றல் வீசினால் நமக்கு எவ்வளவு ஆனந்தமுண்டாகிறது! அப்படியே தளர்ச்சியுள்ள காலத்தில் ஐயரவர்களுடைய காதில் தமிழ்ப் பாட்டுக்கள் விழுந்தால் அவர்களுக்குண்டாகும் ஊக்கத்துக்கு அளவில்லை; 'ஆஹா! என்ன வாக்கு! என்ன வாக்கு! ஜிலு ஜிலென்று காதில் விழுகிறது!' என்பார்கள். அந்த 'ஜிலுஜிலுப்பை' அவ்வளவு இனிமையாக அநுபவிப்பவர்களை வேறு எங்கும் காணமுடியாது.

இடையில், யாரேனும் ஓரன்பர் அவர்களைப் பார்க்க வருவதுண்டு. அக்காலங்களில் அங்கே நிகழும் சம்பாஷணைகளை ஓர் இயந்திரம் இருந்து குறித்துக்கொண்டே வருமாயின் இனிய தமிழ்நூல் ஒன்றை எழுதிவிடலாம். அத்தனை ரஸமாக இருக்கும் பேச்சு! அவர்களுடைய பேச்சில் ஹாஸ்ய ரஸம் ததும்பி வழியும் என்பது உலகறிந்த விஷயம். பழைய வரலாறுகளை அவர்கள் பேச ஆரம்பித்துவிட்டால் அவர்களுக்கு உண்டாகும் ஊக்கமே வேறு. வந்து இருக்கும் அன்பர் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாக வேண்டியதுதான்.

இப்படி யாராவது வந்து அதிகநேரம் பேசிவிட்டுச் சென்றால், அவர் போனபிறகு ஐயரவர்களுக்குச் சிறிது வருத்தம் உண்டாகும். "இன்றைக்கு வேலை குறைந்துவிட்டது" என்பார்கள். வந்தவரிடம் திருப்தியிருந்தாலும் அந்த நேரத்தில் தமிழ்ப்பணி இடையில் நின்றுவிட்டதை அவர்களை அறியாமல் மனத்தை உறுத்திக்கொண்டேயிருக்கும்.

பத்தரை அல்லது பதினொரு மணிக்குத் தமிழ்ச் சுவடிக் குவியலிலிருந்து எழுவார்கள். பெரும்பாலும் அப்புறந்தான் ஸ்நானம் செய்வார்கள். ஜபம், பூஜை முதலியன செய்தபின் உணவு கொள்வார்கள். தமிழ் நூல்களில் ருசியறிந்து அநுபவிப்பது போலவே உணவிலும் சுவையறிந்து உண்பார்கள். உண்டபிறகு இளைப்பாறுவார்கள். சிறிதுநேரம் படுத்துக்கொண்டு தூங்குவார்கள். படுத்த உடனே தூக்கம் வராது. யாரேனும் உடனிருந்து பாடங் கேட்கவேண்டும்; அல்லது எதையாவது வாசிக்க வேண்டும். அவர்களுக்குத் தூக்கம் உண்டாக்கும் மருந்து இது.

ஒரு மணிக்கு எழுந்து சுவடிகளை வகைப்படுத்துவார்கள். சமாசாரப் பத்திரிகையிலுள்ள முக்கிய செய்திகளைப் பார்ப்பார்கள்; அல்லது படிக்கக் கேட்பார்கள். மறுபடியும் தமிழாராய்ச்சி, இரவு 9 மணிவரையில் ஏடு பார்ப்பது, ஒப்பிடுவது முதலிய தமிழ்ப் பணிகள் நடைபெறும்.

சாயங்காலம் 'ப்ரூப்' வரும். அதை ஒப்பு நோக்குதல் முதலியன நடைபெறும். 9-மணிக்குப் பிறகு சாப்பாடு. அதற்கப்பால் உடனிருக்கும் மாணாக்கருக்குப் பாடஞ் சொல்லுவார்கள். சில தினங்களில் 11-மணி, 12-மணி

வ்ரையிற்கூடப் பாடஞ் சொல்லுவார்கள். படித்துக்கொண்ட பிறகு கடவுளுக்குப் பாமாலே சூட்டுவார்கள்.

'அது என்ன?' என்று நீங்கள் கேட்பீர்கள். கவிச் சக்கரவர்த்தியாகிய ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களுடைய தலைமாணாக்கர் ஐயரவர்கள் என்பதைச் சற்றே ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். 'ஐயரவர்கள் செய்யுள் இயற்றுவார்களா? ஏதேனும் இயற்றி நூலாக வெளியிட்டிருக்கிறார்களா?' என்று பலர் கேட்பதுண்டு. 'பழைய செய்யுளைத் திருத்தமுற அறிந்தால் போதாதா? நம்முடைய செய்யுளில்லாமல் என்ன குறை நேர்ந்துவிட்டது?' என்று ஐயரவர்கள் சொல்லும் அடக்கமான விடையைக் கேட்டவர்கள் அவர்கள் செய்யுளே இயற்றுவதில்லை என்றுகூட நினைக்கக்கூடும்.

இரவு படுக்கையிற் படுத்துக் கொண்ட பிறகுதான் அவர்களுக்குத் தனிமை ஒய்வு கிடைக்கிறது. அப்பொழுது பழைய செய்திகள் அவர்களுடைய மனத்தில் தொடர்ச்சியாக நினைவுக்கு வரும். அவை பாட்டுக்களாக வெளிவரும். அவற்றையெல்லாம் எழுதிவைத்திருந்தால் லக்ஷக்கணக்கான பாடல்கள் ஆகியிருக்கும். அந்தத் தனித்த நேரத்தில் எழுதிவைக்கக் கடவுளாவது துணிய வேண்டும்; அன்றி ஐயரவர்களாவது அருள் செய்ய வேண்டும். செய்யுட்களைப் பாடிக்கொண்டு ஈசுவரத்தியானத்தில் ஒன்றிய மனத்தோடு தூங்கிவிடுவார்கள். விடியற் காலையில் எழுவதற்குள் சிலமுறை விழித்துக்கொள்வார்கள். சில நாட்களில் நடுகிசியில் எழுந்து விளக்கை ஏற்றிக்கொண்டு எதையாவது பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒரு நாள் நிகழ்ச்சிகள் இவை. எண்பத்தோராம் வயதிலும் இப்படி நடக்கின்றதென்றால் அவர்கள் எவ்வளவு காரியங்கள் செய்திருக்கவேண்டும்! அவர்கள் வெளியிடும் ஒவ்வொரு நூலும் எவ்வளவு காலம் ஆராயப்படுகிறது! அவ்வளவு காலம் ஆராய்வதனால்தான் அது தெள்ளத் தெளியத்துலக்கப்பட்டு வெளிவருகிறது.

இன்று அவர்கள் வீட்டுக்குப் போய்ப் பாருங்கள். தரையில் ஒரு கணக்குப்பிள்ளை மேஜைக்கருகில் தமிழ் முனிவர் உட்கார்ந்திருப்பார். சுற்றிலும் சில மாணவர்கள் அந்தக் காலத்துக் குருகுலவாஸம் செய்யும் மாணாக்கர்களைப்போல மேல்வேஷ்டிகளை இடுப்பில் கட்டிக்கொண்டு உடனிருப்பார்கள். தமிழ்ப் பணி ஏதேனும் நடந்துகொண்டிருக்கும். 'நீங்கள் எவ்வளவோ காரியம் செய்திருக்கிறீர்கள்!' என்று அவர்களிடம் சொல்லிப் பாருங்கள். 'என்ன செய்துவிட்டேன்! இன்னும் செய்யவேண்டியவை எவ்வளவோ பாக்கி இருக்கிறதே!' என்று இரக்கக் குறிப்போடு அவர்கள் விடை கூறுவதைக் கேட்கலாம்.

அந்தப் 'பாக்கி' முழுவதையும் தமிழ்ப்பெரியார் செய்து திருப்தியை யடையும் வண்ணம் அருளும்படி கடவுளே வேண்டித் தவங்கிடத்தல் தமிழர் கடமையல்லவா?

—ஆனந்தவிகடன்-3-3-35.

பெருமையின் காரணம்

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி.ஏ., பி.எல்.

எல்லா உண்மைகளையும் ஆராய்ந்துதான் அறியவேண்டுமென்பது இல்லை. 'சூரியன் காலையில் உதயமாகிறான்' என்றால், இதை நன்றாக ஆராய்ந்த பின்புதான் ஒப்புக் கொள்ளமுடியும் என்று யாராவது கூறுவார்களா? சொல்லுவதுதான் தாமதம். உடனே ஏற்றுக் கொள்ளுவார்களல்லவா? இம்மாதிரியான உண்மைகளில் விகட நேயர்களுக்கு அதிகப் பிரியம் இருக்கும். ஏனெனில், விகடரசத்தின் மர்மம் எளிமையாகும். கடினமான ஆராய்ச்சிக்கும் அதற்கும் வெகுதூரம்.

பீடிகை பெரிதாயிருக்கிறதே! நேரே விஷயத்தைச் சொல்லப்படாதா?

சொல்லத்தானே தொடங்கியிருக்கிறேன். நான் சொல்லப்போகிற உண்மை வெகு காலமாக வெட்டவெளிச்சமாயுள்ளதுதான்.

அது எதுவோ?

பிரம்மஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்களைப் பற்றித் தமிழ் மக்களில் ஒவ்வொருவரும் அறிவார்கள். ஆனால் தமிழ்க் கல்வியில் அவர்கள் இப்போது ஒப்புயர்வற்று விளங்குகிறார்கள்

என்ற உண்மையை நாம் பிரதிதினமும் நினைப்பதில்லை. அதனால் என்ன! உண்மை மறைந்து போய் விடுமா? சூரியன் காலையில் உதயமாகிறான் என்று நாம் தினமும் எண்ணிக்கொண்டிருக்கிறோமா? இல்லாவிட்டாலும், அவன் உதயமாகிக்கொண்டுதானே இருக்கிறான்?

ஐயரவர்களது கல்வியின் பெருமையை அரசாங்கத்தினர் தெரிந்துகொண்டு பட்டம் அளித்திருக்கின்றார்கள். சென்னைச் சர்வகலாசாலையார் நன்கு மதித்து டாக்டர் பட்டம் அளித்துக் கௌரவித்திருக்கிறார்கள். இவற்றிற்கெல்லாம் மேலாக, அவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ள பெருநூல்கள் அவர்கள் பெருமையைப் பறைசாற்றிக் கொண்டே யிருக்கின்றன. ஐயர் அவர்களின் பெருமைக்கு வேறு என்ன சாட்சியம் வேண்டும்?

இந்தப் பெருமை ஐயரவர்களுக்கு எப்படி வந்தது தெரியுமா?

முதலாவதாக, ஐயரவர்களுக்குத் தமிழ் மொழியைத்தவிர வேறு தெய்வம் கிடையாது. இது எல்லாருக்குந் தெரிந்த பரம ரகசியம். ஆகவே, தமிழைத் தவிர வேறு தெய்வம் இல்லை யென்ற கொள்கையோடு, பகுத்தறிவு ஏற்பட்ட காலந் தொடங்கித் தமிழ்த் தெய்வத்தையே அவர்கள் ஓயாது பூசித்து வருகிறார்கள். கேவலம் ஒரு பாஷையை (அது தாய்மொழியா யிருந்தால் தான் என்ன?) தெய்வம் என்று கொண்டாடி அந்தத் தெய்வ நாயகத்தை இரவும் பகலும் போற்றிவந்து அதற்குத் தொண்புரிவதிலேயே வாழ்நாளைச் செலவு செய்த ஐயரவர்கள் ஒரு பெரும்பிடிவாதக்காரர் என்பதில் சந்தேகம் என்ன?

ஆகவே, இந்தப் பிடிவாத குணமே அவருடைய பெருமைக்கு ஒரு காரணமாகும்.

நல்லது! வேறு ஏதாவது உண்டா?

ஐயரவர்கள் தாம் மேற்கொண்டிருப்பது எவ்வகையான நூலாராய்ச்சியா யிருந்தாலும் சரி, எவ்வகையான கல்வி முயற்சியாயிருந்தாலும் சரி, அதைத் தாமே நேரிற் செய்வார்கள். வேறொருவர் எத்தனை தகுதிவாய்ந்தவராயிருந்தாலும், அவரிடம் ஒப்புவித்து விட்டு மேற்பார்வையோடு ஐயரவர்கள் திருப்தியடைந்துவிடுவதில்லை. அவர்கள் எத்தனை அரிய நூல்களை தருவித்து ஆராய்ந்து பதிப்பித்திருக்கிறார்கள்! அவர்கள் நேரிலே பார்வையிடாத ஒரு வரியாவது ஓரெழுத்தாவது அந்த நூல்களிலே உண்டா? ஒருவரிடத்தாவது வேலை முழுவதையும் ஒப்புவித்து விட்டு 'ஹாய்' ஆக இருந்து மேற்பார்வை உத்தியோகம் பார்த்திருக்கிறார்களா? தன் காரிய முழுவதும் தானே செய்யும் "ஸ்வகாரிய துரந்தரர்" என்று இவர்களைச் சொன்னால், அதை அவர்கள் ஒப்புக்கொண்டு தானே தீரவேண்டும்.

ஆம். ஐயா! பிடிவாதக்காரர் என்றீர்; ஸ்வகாரிய துரந்தரர் என்றீர்; இன்னும் என்ன இரகசியங்களெல்லாம் வைத்திருக்கிறீர்?

சொல்லித்தானே வருகிறேன். ஏன் இந்த அவசரம்? ஐயரவர்களிடத்தில் அவசரம் என்பதே கிடையாது. எல்லாம் அதி சாவகாசம். ஒரு நூலைப் பதிப்பிக்கத் தொடங்கினால் பல வருஷங்கள் வேண்டும். வருஷக் கணக்கிலேயே வேலைசெய்து வருபவர்கள். அவர்கள் தொகுத்து வைத்திருக்கும் அகராதிகளில் 'அவசரம்' என்ற பதமே கிடையாது. நான் சொல்வது சரியா என்ற சந்தேகம் இருக்குமானால், அவர்களிடம் சென்று அவர்கள் கைப்பட எழுதிவைத்துள்ள அகராதிகளைக் கேட்டு வாங்கிப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

'நின்றன நின்றன நில்லா வேனவுணர்ந்து
ஒன்றின வொன்றின வல்லே செயிற்செய்க'

என்ற உபதேசமெல்லாம் அவர்களிடம் சாயாது. வெகு, வெகு நிதானம்.

சரி, வேறென்ன? இன்னொரு ரகசியம் சொல்லுகிறேன். ஐயரவர்களுடைய வாழ்க்கையில் எத்தனையோ இடையூறுகள் நேர்ந்திருக்கின்றன. அவைகளை யெல்லாம் அவர்கள் சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அவற்றின்பொருட்டு நொந்துகொள்வதும் இல்லை. இடையூறுகளால் நலிந்து புண்படும் நிலைமையிற்கூட, அவர்கள் சாந்தத்தைக் கைவிடுவதில்லை. அதுமட்டுமல்லாமல், இடையூறுகள் நேர்ந்த சந்தர்ப்பங்களில் நகைச்சுவை கண்டு அதனை நினைந்து மகிழுவார்கள்.

'இடுக்கண் வருங்கால் நகுக வதனை
அடுத்தூர்வ தஃதோப்ப தில்'

என்ற உபதேசத்தை ஐயரவர்கள் ஒருபொழுதும் மறந்ததே இல்லை. அதாவது, அவர்களுக்கு மனவருத்தம் என்பதே தெரியாது; சிரிக்கத்தான் தெரியும்.

ஐயரவர்களுடைய பெருமையின் காரணம் இப்போது தெரிந்ததா?

—ஆனந்தவிகடன்-3-3-35.

தமிழன் கவனிக்க வேண்டும் தமிழ்ப்பெரியார் 80-ஆம் ஆண்டு விழாவை மறக்கலாமா?

"தமிழன்" எழுதுவது

ஸ்ரீமகாமகோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் சாமிநாதையர் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடச் சென்னையிலும், வெளியூர்களிலும் பல பிரமுகர்கள் முயன்று வருதலானது மிகவும் போற்றத் தகுந்த தொன்றும். ஸ்ரீமான் ஐயரவர்கள் தமக்கென வாழாப்பிறர்க் குரியாளர் என்பது அவர்தம் வாழ்க்கையிலிருந்து புலனாகின்றது. இன்றும் ஒருவர் சென்னை, திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ள அவர்தம் வீட்டுக்குச்சென்று பார்த்தால் அங்கே நரைமுதிர்யாக்கை நடுங்கா நாவின் உரைமூதாளர் மனத்தளர்ச்சி ஒரு சிறிதுமின்றிச் சில மாணவர்களுக்கு நடுவில் இருந்து ஏதாவதொரு பழஞ்சுவடியை ஆராய்ந்து கொண்டிருப்பதைக் காணலாம். பெயரே தெரியாதிருந்த பலநூல்களைப் பெயர்தெரிந்தவற்றுள்ளும் உருவமே காணமுடியாத பல வற்றை நல்லுருவில் தம் ஆராய்ச்சிக் குறிப்புரைகளுடன் வெளியிட்டுத் தமிழ் இலக்கியப் புதையலைத் தமிழ்நாட்டிற்கு உதவிய வள்ளல் அப்பெரியாரே. 60 வருஷங்களுக்கு முன் சங்க நூல்களின் பேச்சே இல்லை. பழைய உரையாசிரியர்கள் மேற்கோளாக எடுத்தாண்டிருக்கும் சில சங்கச் செய்யுட்களை மட்டும் அங்கங்கே ஒரு சிலர் சொல்லிவந்தனர். இக்காலத்திலோ இரண்டாம் வகுப்பில் படித்துவரும் ஒரு பாலகன் 'பாரி என்பவன் ஒரு வள்ளல்' என்று கத்திக்கொண்டு பள்ளிக்குச் செல்கிறான். சங்கநூல் ஆராய்ச்சி இதுபொழுது அவ்வளவுதூரம் பரவியிருக்கிறது என்று கூறவேண்டும். அதற்குக் காரணமாகின்றவர் நமது ஐயரவர்களே.

இத்தகைய பெரியாரைப்பற்றித் தமிழ்நாட்டிலுள்ளார் அனைவரும் முற்றிலும் கேள்வியுற்றிருப்பார் என்று எண்ணுவதற்கில்லை. ஔவை, கம்பர் முதலிய பெயர்கள் எப்படி பாமரர் உலகிலும் பயின்று வருகின்றனவோ, அவ்வாறு அதற்கும் அதிகமாக இவர்தம் பெயரும் எல்லாராலும் பல வருஷங்களுக்கு முன்னமேயே அறியப் பெற்றிருக்க வேண்டும். தமிழ்மொழியைப் புறக்கணித்து ஆங்கில பாஷையின் மயக்கிலே பலர் உழன்று வந்ததனாலும் ஏனையோர்களில் பலர் ஆரம்பப் படிப்பும் இல்லாதவர்களாகிவிட்டமையாலும் இக்குறை ஏற்பட்டது என்னலாம். ஐயரவர்களின் எண்பதாவது ஆண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடும் வழியாக நாம் இப்பொழுதாவது இக்குறையை நீக்கிவிட வேண்டும். தமிழன்னையினிடம் நமக்குள்ள ஆர்வத்தை வெளியிடும் நல்ல சந்தர்ப்பத்தைத் தமிழர்கள் பயன்படுத்திக்கொள்வார்களென்று கருதுகிறேன்.

ஒரு பெரியாரைப்பற்றி விழாக் கொண்டாடுவதன் நோக்கமென்ன? 'நீ எதை நினைக்கிறாயோ, அதுவாக நீ ஆகின்றாய்' என்பது ஒரு மதம். ஒரு பெரியாரைக் கொண்டாடும் விழாவில் அவரைப்பற்றிய புகழ்மொழிகளைப் பலர் கேட்கிறார்கள். மக்களின் நினைவு அப்பெரியாரின் அரிய தொண்டுகளில் ஈடுபடுகின்றது. தாங்களும் அவரைப்

பின்பற்றித் தமிழ்மொழிக்கு ஆக்கந்தேட வேண்டும் என்ற விருப்பம் அவர்கள்பால் தோன்றுகிறது. அவ்விருப்பம் நாளடைவில் செயல் அளவில் உருக்கொள்கின்றது!

தமிழுக்கென்றே வாழ்ந்துவரும் ஸ்ரீமான் ஐயரவர்களுடைய எண்பதாவது ஆண்டு நிறைவுவிழா வருகிற மார்ச்சு மாதம் 6-ஆம் தேதி நடைபெறப்போகின்றது. எங்கெங்கே தமிழ்மணம் கமழ்கின்றதோ அங்கெல்லாம் இவ்விழா கொண்டாடப்பெறவேண்டும். தென் ஆப்பிரிக்கா, யாழ்ப்பாணம் முதலிய வையும் இதில் கலந்துகொள்ளுமென்று எண்ணுகிறேன். அன்று தமிழ்ப் பிரசாரம் யாண்டும் நடைபெறவேண்டும். மாணவர் கள் தங்கள் பள்ளிகளில் கூட்டம் கூட்டி, விரி வுரைகளைக் கேட்டு ஆனந்திக்க வேண்டும். வாசகசாலை, புஸ்தகசாலை, வேறு பொதுக் கழகங்கள் முதலியவையும் இவ்விழாவைக் குறித்துச் சபை கூட்டிப்பேசவேண்டும். இத் தமிழ்ப் பெரியாரின் படத்திறப்புவிழா நடை பெறலாம். ஸ்ரீமான் ஐயரவர்களின் படத்தை யும் "வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்" என்பனபோன்றவற்றை எழுதுவித்த கொடி களையும் வைத்துக்கொண்டு ஊர்வலங்களைச் சிறப்பாக நடத்தலாம். அன்று இப்பெரியா ரின் பெயரால் புதிய கழகங்களோ, வாசக சாலைகளோ தொடங்கப்பெறலாம். ஒவ் வொருவரும் ஏதாகிலும் ஒரு தமிழ்நூலைப் புதியதாகக் கற்பதற்கு அந்நாளை நன்னாளா கக் கொள்ளலாம். தமிழ் தெரிந்தாரைக் கொண்டு ஆங்காங்கே பாடங்கேட்கும் வழக் கம் அன்று தொடங்கி நடந்துவரும்படி செய்யலாம். தமிழ்த்தொண்டாற்றிவரும் ஐயரவர்களுக்குப் பணமுடிப்பை உதவி, மேலும் மேலும் அவர் இந்தப்பிராயத்திலும் ஊக்கம் குன்றாமல் தமிழுக்கு உழைத்துவரு மாறு செய்யலாம். மேற்கூறியவற்றுள் ஒன்றோ, பலவோ அதுசமயம் நாடெங்கும் நடைபெறவேண்டும். தங்கள் மொழியைப் போற்றுவதில் தமிழ்மக்கள் மற்றெல்லாரிலும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பதை நாம் உலகத் திற்குக் காட்டத்தக்க நல்லதருணம் வாய்த் திருக்கின்றது. இத்தருணத்தை நாம் செவ் விய வழியில் பயன்படுத்திக்கொள்வோமாக!

—மதுரமித்திரன்-4-3-35.

A CONSECRATED CAREER
PANDIT SWAMINATHA AIYAR
(By K. Vyasa Rao)

Pandit Swaminatha Aiyar, as he was familiarly known to the eminent men of South India during the closing two decades of the nineteenth century, has been the recipient of signal distinctions in our own times. In fact there does not seem to be anything more, that could be appropriately added to his name—unless British men of letters coming to know of his unique greatness in the world of literature, should inaugurate an unprecedented era of width of cultural outlook and obtain for him the Order of Merit. He is to complete his 81st year in a few days—which fact entitles him, according to South Indian tradition and custom to Sathabishekam a sacramental form of felicitation—for having lived through a period of a thousand full moons. The event is to be celebrated by his portrait—presented by the head of a seat of classical learning—being unveiled in the Senate Hall of the University by the first Indian Governor of this presidency. The celebration furnishes an occasion for the public to know what kind of labour has devolved on him—incessant, uninterrupted, of one sustained even tenor from his 30th to his 81st birthday, a full half a century of continuous research in which night ran into day and day into night.

A SCHOLASTIC PILGRIMAGE

Swaminatha Aiyar was born in 1855 at a village in Tanjore district bearing the attractive name Uttamadanapuram. His father, Venkatasubbaiyar, who was an eminent musician, belonged to that typical class of Indian parents whose legacy to their sons is a cultured mind out of which they might win abundant esteem, while providing for the needs of a simple life. A high talent for music ran in the family and although the father took it for granted that his son would slip into that career easily, he felt the need for the boy to be taken through a course of classical literature as a necessary foundation for culture and character. He accompanied the boy from place to place to have him taught by a reputed scholar whenever he came to know of one within reach, making a kind of scholastic pilgrimage. The peregrination could not, however, be continued since the boy rapidly reached a stage at which he had to be left with some one who had mastered the entire classics and could impart to him his store of learning. Except for a literally handful of books, the days of printed editions were yet to come and even the bundles of cadjan leaves on which famous works had been transcribed were the privileged treasures of a few scattered families. The works and the teacher who could teach them had to be found together. One such master of classical Tamil was the well-known Meenakshisundaram Pillai who resided at Mayavaram and Venkatasubbaiyar was advised to repair to Mayavaram and entrust his son to the care of Meenakshisundaram Pillai. Venkatasubbaiyar acted on this advice and braced himself to the inevitable separation; his son soon became an adjunct to the teacher. Some time after, when the latter had to assume the place of Chief Pandit of Thiruvavaduthurai Mutt, the pupil accompanied the teacher and remained there until his appointment in 1880 as Tamil Pandit of the Kumbakonam College in succession to Thyagaraja Chettiar, a distinguished authority in Tamil who had studied under Meenakshisundaram Pillai. At this time the retiring Pandit was past 58 years, and Swaminatha Aiyar who was selected by Thyagaraja Chettiar was only 26 and Meenakshisundaram Pillai under whom both of them had studied had died a few years before. This single circumstance would be enough to show the extraordinary talent of the young man who was to render incomparable service to the cause of Tamil Literature and who as a teacher exercised a unique fascination on his students.

THE IMPETUS

One esteemed personality in the political advance of South India of the pre-Congress period was Salem Ramaswamy Mudaliar, a brilliant alumnus of the Presidency College. Mr. Mudaliar was at this time District Munsiff at Kumbakonam. Subsequently, he resigned his place in the public service and joined the bar and was one of the Indian Delegation to England with Lal Mohan Ghose, perhaps the earliest on a political mission. To his high proficiency in Tamil Literature, Mr. Mudaliar added an earnest solicitude for rescuing from oblivion, possibly from irretrievable extinction, the rarer classics of Tamil whose names were known to scholars but which were not easily

available even in cadjan leaves. He told the young Pandit that reading and teaching what was available to be read and taught was not to be regarded as the entire task of a man of parts such as Swaminatha Aiyar was, but to do research work and publish the ancient classics which were likely to be lost for ever, if not traced and printed. He not only gave this advice to the young college Pandit but placed him in possession of some works in cadjan leaves and started him on a track which has led to the resuscitation of works which throw valuable light on South Indian civilisation as it was several centuries ago. The exact age of these works published by Pandit Swaminatha Aiyar may be difficult of determination but there could be no question that they date back to a long past—of whose physiognomy there is no more than meagre evidence, comparable with what is contained in these works.

A HERCULEAN TASK

The publication of these works, as many as about twelve in number, spread over an interval of about 30 years, between 1887 when the first edition of "Jeevaka Chintamani" was published and 1918 when "Paripadal" appeared, shows a continuity and amplitude of literary labour, the full range of which can be understood only by those who know the difficulty of getting access to the original in palm leaves. Generally the owners would not part with them for love or money; at times they had to be copied without being removed. And when more than one original was available they had to be compared. The system of writing in a palm leaf with a stylus ("writing nail" as it is called in Tamil) did not permit writing the verses line by line as is done on paper but from one end of the palm leaf to the other, without punctuation; the work was at times transcribed along with the commentary and at times the commentary was found without the text. To make a volume fit for printing in modern style, not only high proficiency but an incredible degree of patience was required. Getting at the originals was a research in itself before the actual research began. And when the ascertained text became ready for print, the Pandit was not satisfied with dumping the text for what it was worth. His method of publication can hardly be improved by modern editors and annotators. His preface states where and with whom he came across a work and the places where he had searched for them. His edition usually contains an account of the author of the work, of its subject matter, a list of names of towns, villages and kings mentioned in it; an account of the commentator or the work; a detailed list of works referred to by the commentator; then the text and the commentary of the commentator; notes by the editor; an alphabetically arranged explanation of difficult or unusual expressions giving references to the stanzas in the text where they occur; a metrical index of the stanzas in alphabetical order; and wherever there is a reference to one work in another, the exact reference and where parallels could be quoted, the parallels also. One wonders whether if Skeat had been in charge of these publications, he could have done better. The evolution from crumbling cadjan leaves where stanzas are transcribed from end to end, to printed volumes of this kind marks the contribution of a Hercules in literary research and publication. He has

brought out in this manner standard works of great antiquity, as many as perhaps twelve in number, running into thousands of pages and over thirty other works which, although not ancient, were printed and published by him for the first time. Such an accomplishment would be a monument of credit to any College of Research with a well equipped cadjan library, a competent staff under the direction of a supremely capable chief. Dr. Swaminatha Aiyar has been such a college of research in himself for years, and even now at the present hour he has not ceased to be such an institution. The measure of self-denial required for this work, necessitating living in a forgotten past, while attending to the daily routine of life, dreaming of the correct text in waking hours, repeated scrutiny of conclusions arrived at, and then bringing the publication to the standard of modern publications, in some respects even excelling them, thus saving from oblivion works that deserve to live for ever is a service worthy of immortality.

—The Hindu-5-3-35.

ஸ்ரீமான் டி. எஸ். கோதண்டராம ஐயர்

எழுதுவதாவது:—

டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரின் 81-ஆவது பிறந்த நாளை ஒரு மகோற்சவமாகக் கொண்டாடுவதில் தமிழர்கள் அனைவரும் ஈடுபட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கும் இச்சமயத்தில் அது சம்பந்தமாய்ச் சிறிது எழுத விரும்புகிறேன். அவர், பெரிய சிவப்பத்தராய் விளங்கிவந்த உத்தமதானபுரம் பிரம்மஸ்ரீ வேங்கடசுப்பையரின் மூத்தகுமாரரென்று சொல்லவேண்டியது அநாவசியம். நமது ஐயர் கும்பகோணத்துக்குத் கீழ்பாலும் திருவாவடுதுறைக்கும் திருக்கோடிகாவலுக்கும் வடபாலும் மூள்ளூர் சூரியமூலை என்ற ஊரில் தமது தாய்மாமன் வீட்டில் பிறந்தவர்.

ஐயர் தமது இளமைப்பருவத்தில் தமது தந்தையாரிடமே நிகண்டு முதலிய நூல்களைக் கற்றார். பின்பு அரியலூர் ஸ்ரீ சடகோப ஐயங்கார் முதலான சில தமிழ்வித்துவான்களிடம் சில தமிழ்ப் பிரபந்தங்களையும் இலக்கணங்களையும் பயின்றார். அப்பால் பெரும்புலியூர் (பெரம்பலூர், திருச்சி ஜில்லா) தாலூகாவைச் சேர்ந்த செங்கணம் சின்னப்பண்ணைவிருத்தாசல ரெட்டியாரிடம் வாசித்தார். தாம் ரெட்டியாரிடம் வாசித்த காலத்தில் அவர் பல நூல்களிலிருந்து அநேக விஷயங்களைத் தமக்கு அப்போதப்போது சொல்லிவந்ததாகவும், அதனால் தமிழ்நூல்களின் பரப்பைத் தாம் அறிந்துகொண்டதன்றி மேலும் மேலும் பலநூல்களைப் பயில வேண்டுமென்ற விருப்பம் தமக்கு அதிகமாயுண்டானதாகவும் ஐயர் சொல்லியிருக்கிறார். இந்த நிலைமையில், ரெட்டியார், ஐயரின் பிதாவினிடம் திரிசிரபுரம் வித்துவான் ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்க ஐயரைக் கொண்டுபோய்விட்டுவிடுதல் உசிதமாகுமெனப் பன்முறை வற்புறுத்திச் சொல்லி வந்தார். அவ்விதமே செய்துவிடவேண்டுமென்று நிச்சயித்து அதற்கு வேண்டிய முயற்சிகளை ஐயரின் தந்தையார் செய்துகொண்டிருந்தார். தந்தையாரின் முயற்சியும், ஐயரது விருப்பமும் நிறைவேற இறைவன் திருவருளும் கூடிற்று. தந்தையார் 1870-இலோ 1871-இலோ ஏப்ரல் மாதத்தில் ஐயரை அழைத்துக்கொண்டு மாயூரஞ் சென்று நல்ல நாளொன்றில் பிள்ளையவர்களிடம் சேர்ப்பித்தார். அப்போது ஐயருக்கு 16 அல்லது 17 வயதுதானிருக்கும். பிள்ளையவர்களிடம் அவர் ஐந்து வருஷங்கள்போல் தமிழ்படித்துவந்தார். அவர் தமிழ் படித்துவந்ததைப் பற்றிய வரலாறு ஒரு பெரிய சரித்திரமாகும். அதனை விவரிக்க இவ்வியாசம் இடந்தராது. நமது ஐயர் தாம் தேக அசௌக்கியமாயிருந்த சமயங்கள் நீங்கலாக மற்றக்காலங்களில் பல தமிழ்நூல்களைப் பாடங்கேட்பதும் பிள்ளையவர்கள் புதிதாய் இயற்றிவரும் பாடல்களை ஏட்டுச் சுவடிகளில் எழுதுவதுமாகவே யிருந்துவந்தார். ஐயரில்லாமல்போனால் மற்றப் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்வதும் நிறுத்திவைக்கப்படும். திருவாவடுதுறை மடத்து ஆதீனகர்த்தராக அக்காலத்திலிருந்துவந்த ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரின் கட்டளை

யும் அதுவேயாகும். ஐந்து வருஷங்கள் சேர்ந்தாற்போலப் படித்ததன் பயனாக, தமது 21-ஆவது வயதிலேயே பிள்ளையவர்களுக்குப் பிற்காலம் அவர் ஸ்தானத்தில் மடத்துவித்து வானையிருந்து மடத்தின் ஆதரவில் வாசிக்கும் பிள்ளைகளுக்குப் பாடஞ்சொல்லும் பாக்கியத்தை ஐயர் பெற்றார். இது 1876-இல் நிகழ்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். ஏனெனில் படித்தவர்களான பல தம்பிரான்களும் கற்றுத்தேர்ந்த மற்றும் பல சைவ வித்துவான்களும் நிறைந்துள்ள ஒரு சைவ ஆதீனமாகிய திருவாவடுதுறையில் மிக்க இளம் பிராயத்தினரான நமது ஐயரை ஆதீன வித்துவானாக அமர்த்தி அவரிடம் சைவப்பிள்ளைகளைப் பாடங்கேட்கும்படி ஆதீனகர்த்தரான ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் செய்தது சாதாரணமாய் நிகழக்கூடிய சம்பவமன்று. அது ஆதீனத்தலைவர்கள் ஐயருடைய படிப்பை அளவிட்டு அது மிக ஆழமுடையதென்று தெரிந்து செய்த செய்கையாகும். தேசிகரவர்களுக்கு ஐயரிடம் அவ்வளவு மதிப்பு இல்லாதிருந்திருக்குமானால் அக்காரியத்தைத் துணிந்து செய்யும் பொறுப்பை அவர்கள் மேற்கொண்டிருக்கவே மாட்டார்கள். அங்ஙனம் பிள்ளையவர்களுக்குப் பின்பு ஆதீன வித்வானாக ஐயர் திருவாவடுதுறையில் ஏறக்குறைய 4 வருஷங்கள் இருந்தார். அக்கால மெல்லாம் திருவாவடுதுறைச் சாமிநாதைய ரென்றுதான் ஐயர் விவகரிக்கப்பட்டுவந்தார். அப்போதுதான் அவர் ஸ்ரீமான் தியாகராஜ செட்டியாரின் வேண்டுகோளின்மேல் கும்பகோணம் காலேஜ் தலைமைத்தமிழ்ப்போதகர் ஸ்தானத்தை வகித்து ஸர்க்கார் உத்தியோகம் பார்க்க, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் சம்மதித்தது. 1880-இல் ஐயர் கும்பகோணம் காலேஜுக்கு வந்துசேர்ந்தார். அது முதல் 23 வருஷங்கள் அந்தக் காலேஜிலும் அப்பால் 16 வருஷகாலம் பிரஸிடென்ஸி காலேஜிலும் அவர் தமிழ்ப் போதகராயிருந்துவந்தார். அப்போதே அவர் பழைய தமிழ்நூல்களை அச்சிற் பதித்துத் தமிழுக்கு அருந்தொண்டாற்றத் தொடங்கிவிட்டார். அவரிடம் படித்த மாணவர்கள் அன்னார் தமிழ்ப்பாடஞ்சொல்லும் முறையின் மேம்பாட்டை யுணர்ந்து அவரைத் தங்களுக்கு அருமையாய்க் கிடைத்த தமிழ்த்தெய்வம் எனக் கொண்டாடி வந்ததை இங்கு விசேஷமாய்க் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. அப்படி மாணவர்கள் கொண்டாடினதிருக்கட்டும். 1933-ஆம் வருஷக் கடைசியில் இச்சென்னை யூனிவர்ஸிடியாரின் வேண்டுகோளின்மேல் சேதுபதி சம்ஸ்தான மகாவித்துவான் ஸ்ரீமான் ஆர். ராகவையங்கார் ஸெனேட் ஹவுஸில் ஒருவாரம் தொடர்ந்தாற்போல் தமிழ்ப் பழைய நூல்கள் சம்பந்தமாய்ப் பிரசங்கங்கள் செய்தபோது அவற்றைக் கேட்டு இன்புற ஐயர் தவறாமல் விஜயம் செய்தருண்டு. அப்போது ஒரு நாள் பிரசங்கத்தினிடையே ஸ்ரீமான் ஐயங்கார், நமது தமிழ்த் தெய்வம் என்று ஐயரை மிகுதியும் பாராட்டிப் பேசியது அப்பிரசங்கங்களைக் கேட்கச் சென்றிருந்தவர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

நாளது பவ வருஷம் மாசி மாதம் 22-ந்தேதி புதன்கிழமை முற்பகலில் ஐயருடைய வாசஸ்தலமாகிய திருவேட்டீசுவரன் பேட்டை பிள்ளையார்கோவில் தெரு தியாகராஜ விலாஸில் அன்னருக்குச் சதாபிஷேக முகூர்த்தம் நடக்கின்றது. அன்று சாயங்காலம் 5-30 மணிக்குச் சென்னை யூனிவர்ஸிடி புதிய ஸெனேட்ஹவுஸ் கட்டிடத்தில் அன்னர் இதுவரையில்தமிழுக்குச் செய்துவந்திருக்கும் பல்வகைப்பட்ட தொண்டினையும் கருதி இந்நகரிலுள்ள தமிழர்கள் அவரது 81-ஆவது பிறந்த நாளை ஒரு மகோற்சவமாகக் கொண்டாடப் போகிறார்கள். அச்சமயம் அவருடைய உருவப்படமொன்று அக்கட்டிடத்தில் திறந்து வைக்கப்படுவதோடு அவருக்கு ஓர் உபசாரப் பத்திரமும் வாசித்துக் கொடுக்கப்படும். அது பல்லோரும் கண்டு களிக்க வந்து கூடியிருக்கும் ஒரு பொதுக்கூட்டத்தில் வாசித்துக்கொடுக்கப்படும். ஆகவே ஐயரின் பிறந்த நாள்கொண்டாட்ட சம்பந்தமான நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நிறைவேறி முடியுமாறு அருள்புரியும்படி பிரார்த்தித்துக் கொள்வதோடு இதுவரை செய்துவந்தது போலவே இனியும் தமிழ்த்தொண்டினைச் செய்துவருவது சாத்தியமாகும்படி நமது ஐயருக்கு அரோகதிடசரீரத்தையும் பூர்ண ஆயுளையும் கொடுத்தருளும்படி எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"தமிழ்தனதாக் கொண்டொழுகும் சாமிநா தப்பேர்
அமிழ்தகுண அந்தணரேற் றருள்—இமிழ்திரைநீர்
வேலை மணலின் மிகுவென நாள்நாளும்
மூல முதற்போற்று வாம்."

—சுதேசமித்திரன்-5-3-'35.

சிந்தாதிரிப்பேட்டை, தமிழ்ப் பண்டிதர்

ஸ்ரீமான் கா. மு. சின்னப்பா பிள்ளை

எழுதுகிறார்:—

ஒரு நாடு பல துறையிலும் வளர்ச்சியுற்றுச் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ்வதற்கு அந் நாட்டில் வாழும் அறிவிற்சான்ற பெரியோரே காரணமாவர். அப்பெரியோர்களது நிலை கண்டுணர்ந்தே அவர்கள் வாழும் நாட்டை மதிப்பிடுவர் பிற நாட்டார். இக்கருத்தைக் கொண்டே ஒல்காப்புலமையார் தொல் காப்பியனரும் 'உலக மென்பது உயர்ந்தோர் மாட்டே' என்றார். அவ்வுயர்ந்தோருள்ளும், தம் தாய்மொழியைச் செவ்வனே ஆய்ந் தாய்ந்து உணர்ந்துணர்ந்து அதன் நுண் பொருளையும் விடாது உண்டு களித்துத் தாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக வென வெண்ணி அம்மொழியின்பத்தை வகைப்படுத்தி வாரியளிக்கும் அருந்திறனும் அருட்குணமும் அமைந்த புலவர்பெருமக் களே மிக்க சீரியராவர். அப்பெருமக்களே ஏனைய பெரியோர்க்கும் ஏது ஆவார்கள்.

ஒரு நாட்டின் மொழிவளர்ச்சி குன்றின் அந்நாட்டின் சீர்மையும் குன்றத்தொடங்கும். சீரிய நந்தமிழ்நாடும் இடைக்காலத்தில் ஏற் பட்ட காரணம் பலவற்றால் மொழிவளர்ச்சி குன்றப்பெற்றது. அதனால், நந்தமிழன்னை அணிகலன்களே இழந்தும் புனைவாரையற்றும் அலமந்து அருந்தவங் கிடந்தாள். அத்தவத் தின் பயனாகவே நம் சிகாமணியாம் செம்மல் சாமிநாத ஐயர் அவதரித்தார் என்பது மிகை யாகாது. அவர் தோன்றாதிருப்பின் தமிழ்த் தாய் சிந்தாமணியாம் சீரிய மணியைச் சிரசி லணிவாளோ? திப்பிய காப்பியமாம் சிலப்பதி காரத்தைத் திருப்பாதத்தில் பூண்பாளோ? மாண்பார் மணிமேகலையைச் சிற்றிடையிற் சிறக்கத் தரிப்பாளோ? பரிபாடலாம் சீரிய வளையைக் கரத்தும் பத்துப்பாட்டாம் பசு மணிப் பதக்கஞ் சேர்ந்த வெண்பா மாலையாம் ஒண்மணி மாலையை மார்பகத்தும், புறப் பொருளாம் பொன்மணி மாலையைக் கழுத் துப்புறத்தும் ஐங்குறுநூறும் சதமணி மாலை யைக் கண்டத்திடத்தும் அடிமுடியற்றும் அணிமிகுபேரொளிவீசும் பெருங்கதையைக் காதகத்தும் நத்து மூக்குத்தியென நன்னூல் (சங்கரநமச்சிவாயர் மயிலைநாதர் உரைகள்) மூக்கினிடத்தும், ஏனைச் சிறு நூல்கள்தம் மைச் சிறுவிரல்களிடத்தும் எங்ஙனம் அணி வாள்? எங்ஙனம் அணிவாள்? சிலர் ஐயரின் றேல் அந்நூல்கள் அச்சாகாவோ என்று வாய்கூசாமல் கூறுகின்றனர். என்னே அவர் கள்தம் அறியாமை! "கூலிக்காரனும் உண்ணு கின்றான்; குபேரனும் உண்ணுகின்றான். ஆயின், இவ்விருவர் உணவும் ஒன்றாமோ" ஊகித்துணர அவர்தம்மை வேண்டுகின்றேன். "பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ?" ஆகாதவாறுபோல நூற்பதிப்பெல்லாம் நுண் புலமைத் திறமிகு சாமிநாதையரவர்கள் பதிப்புக்கிணையாமோ. ஆகாது என்பதே தேர்ந்த பதிலாம்.

சீரிய சிற்பத்திறமை வாய்ந்த சிற்பியோ ஓவியக்காரனோ ஓர் உருவத்தைச் செய்யப் பன்னெடுநாள் முயன்று முயன்று முடிப்பன் அல்லவா? அங்ஙனமே சீரிய பெருநூல் ஒன்றை அச்சிடக் கருதின் ஆண்டுகள் பல ஆராயவேண்டும். அங்ஙனம் ஆராய்ந்தாற்றான் நூல் படிக்க விரும்புவார்க்கு விழைவு குன்று வண்ணம் வெளியிடல் கூடும். இம் முறை யைப் பின்பற்றியே நம் புலவர்சிகாமணி ஒவ்வொரு நூலையும் பல்லாண்டுகாலம் பல படி ஆய்ந்து ஆய்ந்து அச்சிட்டுத் தமிழன் னைக்கு அணி செய்தார். அவர் அறுப தாண்டுகளாக இவ்வரும்பணியை மேற் கொண்டும் சிறிதும் சலிப்படையாமல், "தமி ழன்னையே! இன்னமுள அணிகள் பல. (தொல்காப்பியம், குறுந்தொகை முதலி யன.) அவற்றையும் தருகின்றேன்; அணிந்து கொள வருகவே" என்று அழைப்பவர்போல உலகின்றி இன்றும் முயன்று வருகின்றார்கள்.

இப்புலவர்பெருமானது அருந்திறலைக் கண்டே அரசாங்கத்தார் ஆனந்தங்கொண்டு "மகாமகோபாத்தியாயர்" என்னும் மாட்சி வாய்ந்த பட்டமும், யூனிவர்ஸிடியார் "பேரறிஞர்" என்னும் பொருள்படும் டாக் டர்பட்டமும், கும்பகோணம் காஞ்சி காம கோடிபீடாதிபதிகளவர்கள் "தாகூணத்ய கலாநிதி" என்னும் பட்டமும் அளித்துத் தம் தம் அன்பை வெளியிட்டுப் பாராட்டி போற்றினர்.

நம் அருங்கலையை ஆய்தலையே விநோத மாகக்கொண்டொழுகும் அண்ணலாரவர் கள், பட்டங்கள் கடந்து நிற்கும் பரம மேதா விகளின் இனத்தைச் சேர்ந்தவர்களாய்

விளங்குகிறார்கள். ஆதலால், அவர்கட்குப் பட்டங்களே அளித்துப் பாராட்டும் அன்பர்களும், அறிஞர்களும், அரசாங்கத்தாரும் அழியாப் புகழ்பெற்ற அவர்கள்தம் உருவத்தைச் சிலைவடிவாய்ச்சிறக்கச்செய்து யூனிவர்ஸிடி மண்டபத்திற்கு முன்போ, அரசாங்கக் கல்லூரிக்கு முன்போ நாட்டி ஆண்டுதோறும் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்தலே தமிழர்கட்கும் தமிழன்பர்கட்கும் சிறந்ததொரு கடமையாகும். தமிழை வளர்க்கும் முறையுள் சிறந்ததுமாகும்.

மற்றும் இப்பேராசிரியர் பெரும்பள்ளியிலிருந்து மாணவர்க்குப் போதித்த ஆற்றலையும், இதுகாறும் போதித்துவரும் அரிய முறையையும், இடையிடையே காட்டும் ஹாஸ்யக் குறிப்புக்களையும் மறந்தும் வழுவாத ஒழுக்கத்தின் சீர்மையையும் விரித்தெழுதப்புகின் அவர்கள் பதிப்பித்த பெருங்கதையும் பின்வாங்கிப்போகும்படி பெரியதோர் நூலாய் முடிவுபெறும். சின்னஞ் சிறிது காலத்தில் அவைதாமும் ஒவ்வொன்றுகவோ ஒன்று சேர்ந்தோ வெளிவந்து இலங்கும் என்பதில் ஐயம் இல்லை.

தமிழன்னை மேன்மேலும் மகிழ்ச்சிகூருமாறு ஏட்டிலுள்ள அருநூல்களை அச்சுவாகனம் ஏற்றுமாறு குணக்குன்றும் ஐயர் அவர்கட்குக் குன்று உடல்வன்மையும் நீடிய ஆயுளும் அளித்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவனைச் சிந்தித்து மனமார வழுத்துகின்றேன். —சுதேசமித்திரன்-5-3-'35.

Dr. V. SWAMINATHA IYER
A SHORT SKETCH

It will not be inappropriateif on the eve of the celebration of the eighty-first birthday of Mahamahopadhyaya Dr. V. Swaminatha Iyer, we place before the public a short sketch of his life and career. The Mahamahopadhyaya, the distinguished Tamil scholar of Southern India was born in 1855 in Uttamadanapuram, a village that lies close to Papanasam in Tanjore district. His father, Venkatasubbier was well-known for his piety and musical talents. In those days Minakshisundaram Pillai was the chief Pandit of Thiruvavaduthurai Mutt and the young boy became his pupil. The latter remained there with his teacher till his twenty-sixth year when he was appointed as Tamil Pandit of the Kumbakonam College.

"His was not the prosaic teaching of the ordinary Pandits" writes Mr. T. S. Kothandarama Iyer, an old student of the Kumbakonam College. "It was of a very high order. There was something charming in his very personality. This trait in him was heightened all the more by that rare talent of his which kept his pupils spell-bound when he was lecturing to them. His pupils considered themselves to be a favoured lot and worshipped him as their Tamil Theyvam."

Sir Annamalai Chettiyar of Annamalai University appointed him Principal of the Tamil College, Chidambaram. Its headship Mr. Ayyar retained for a short span of three years. From there he returned to Madras to enjoy his well-earned rest.

"A lot of research work he has done in Tamil and still continues to do in spite of his advanced age. The books he has edited and published, Chintamani, Silappadhikaram, Manimekhalai etc., are monumental works. He has worked at them in the rare moments of an otherwise strenuous life and done them to perfection with unremitting toil, unabated vigour and unflinching charge. He has had as his life's work the rejuvenation of old Tamil literature that had been left to decay for ages in the past. He set his heart upon the resuscitation of old Tamil classics and worked at them daily for

many a long hour not knowing at times even the dawn of day or the fall of night." The title of Mahamahopadhyaya was conferred on him by the Government thirty years ago. He was connected with the Madras University as a member of the Board of Studies in Tamil as well as of the Tamil Lexicon Committee. In recognition of the superhuman work he has been doing in the field of Tamil literature, the Madras University conferred on him the honorary degree of Doctor of Literature at the special convocation held in 1932.

—Indian Express-6-3-'35.

மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர்

ஸ்ரீமான் கே. எஸ். ராகவன்

தமிழ்த் தெய்வமென இத்தென்னாட்டில் திகழும் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 80-ஆவது ஆண்டுபூர்த்தியாகும் தினம் தமிழருக்கு ஓர் அரும்பெரும் விழாவாகும். ஸ்ரீமான் சாமிநாதையரவர்கள் தமிழிற்குச் செய்துள்ள தொண்டு அனைவருக்கும் தெரிந்துள்ளது. தமிழ் என்றால், சாமிநாதையருடைய நினைவும் அச்சமயமே உண்டாகும். இங்கிலாந்து முதலிய மேனாடுகளில் இத்தகைய பெரியோர்களின் சிறப்பு விழா மிகவும் உன்னதமாகக் கொண்டாடப் பெறுவது நாம் அறிந்ததேயாம். இன்றைக்கு 80-ஆண்டுகளுக்கு முன்னர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சூரியமூலை என்னுமோர் புராதன கிராமத்தில் தோன்றிய நம் ஐயரவர்களின் பிதாவின் நாமதேயம் வேங்கட சுப்பையர். இவர்களது சொந்த ஊர் உத்தமதானபுரம். பால்யத்திலேயே இவருக்குத் தமிழிலும் சங்கீதத்திலும் மிகுந்த விருப்பம் ஏற்பட்டுவிட்டது. இவருடைய இளமைக்காலம் தொடங்கி இவருக்குத் தமிழ் படிக்கவேண்டுமென்ற விருப்பமே மிகுதியாக இருந்துவந்தது. இவர் தந்தையாரே இவருக்கு முதலில் தமிழாசிரியராக இருந்து நிகண்டு, சதகம் முதலிய கருவிநூல்களைக் கற்பித்துவந்தனர். பின்பு அரியிலூர்ச் சடகோப ஐயங்கார் முதலிய சில வித்வான்களிடமும், செங்கணம் என்னும் ஊரிலிருந்த விருத்தாசல செட்டியார் என்ற கனவானிடமும் இவர் பாடம்கேட்டுத் தமிழ்நூல்களின் பரப்பை அறிந்துகொண்டதன்றி, மேலும்மேலும் பல நூல்களில் பயில வேண்டுமென்னும் விருப்பத்தை அதிகமாக மேற்கொண்டார். ஆகவே இவருடைய ஆசிரியர்கள் அனைவரும் இவர் திருவாவடுதுறை யாதீனத்து மஹாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்களிடம்தான் இனிமேல் பாடம் கேட்பது தகும் என்ற அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். அப்போது இவருக்கு வயது 17. 1871-ஆம் வருஷம் ஏப்ரல் மாதம் இவரது தந்தையார் இவரை மஹாவித்துவானிடம் அழைத்துச் செல்ல, அப்போது மஹாவித்துவான் இவருக்குச் சில கேள்விகள் இட்டனராம். விடைகளைச் செவியுற்ற பின்னர், அவர், ஐயரவர்கள் அவசரப்படாமல் சிலகாலம் தம்மிடம் இருக்கவேண்டிய அவசியத்தை உணர்த்தினர். குமாரரை மஹாவித்வானிடம் விட்டுப் பிரிகையில் பிதாவின் கண்களிலிருந்து சில நீர்த்துளிகள் விழுந்தனவாம். இது நிற்க, மஹாவித்வானை ஆச்ரயித்த பின்னர் ஐயரவர்களின் தமிழ் ஞானமும் தமிழ்ப் பிரியமும் அளவு கடந்து விஸ்தரித்துவிட்டன. தமிழையே தாம் வழிபடும் தெய்வமாகக்கொண்டார். மஹாவித்வான் பிள்ளையவர்கள் அக்காலத்துத் தமிழ்ப்பாஷைக்குச் சர்வகலாசாலைகள்போல் சோபித்துவந்த மடங்களில் பிரதானமான திருவாவடுதுறையாதீனத்தலைவரின் அத்தியந்தப்பிரியராஞர். மடாதிபதிகளான ஸ்ரீ அம்பலவாண தேசிகரும், மேலகரம் ஸ்ரீ சுப்ரமண்ய தேசிகரும் மகாவித்வானிடம் அன்பு பூண்டொழுகினவர்கள். ஐயரவர்களின் விசேஷ மதிப்பை அறிந்த அவர்கள் இவரிடமும் அதே அன்பைக் கொண்டனர். மஹாவித்துவானிடம் வந்தபின்னர் சாமிநாதையரின் இசைப்பயிற்சிக்கு முடிவு ஏற்பட்டது.

இக்காலம் போல் அல்லாத அந்நாளில் ஏட்டுச்சுவடிகளைக் கூர்ந்து கவனிப்பதும் படித்து ஆராய்வதும்தான் முக்கியமானவை. அச்சுப்பிரதிகள் அந்நாளில் கிடையா. சுவடிகளைப் படிப்பதும், புலப்படாதவற்றிற்கு விளக்கத்தை வித்துவான்களிடம் விநயத்துடன் விசாரிப்பதும் அக்காலத்தில் ஐயரவர்களைப்போலத் தோன்றிய பெரியார்களின் பெருமை. வித்தியாபிவிருத்திக்கு இன்றியமையாததான விநயம் நம் மஹாமஹோபாத்தியாயரிடம் அக்காலத்திலிருந்ததுபற்றி இவர் தமிழ்ப்புலமையின் உச்சியை எட்டிவிட்டார். இது நம் நாட்டின் பாக்கியம். மஹாவித்துவானுக்கும் மஹாமஹோபாத்தியாயருக்கும் இருந்த நெருங்கிய சம்பந்தத்தை ஐயரவர்களே தாம் வெளியிட்ட மஹாவித்துவானது சரித்திரவரலாற்றின் இரண்டாவது பாகத்தில் விஸ்தாரமாகக் குறிப்பிட்டுள்ளார். ஐயரவர்களால் இயற்றப்பட்ட இந்த மஹாவித்துவானின் சரித்திரம் நம் தமிழ்நாட்டிற்கு மகிமை யளிப்பதாகும். சரியான காலக்குறிப்புக்களுடனும் சற்று முற்றுமுள்ள ஸ்திதி விளக்கத்துடனும் பெரியாரின் பிரபந்த ஆராய்ச்சிகளுடனும் நெருங்கிய சம்பந்தத்துடனும் எழுதப்பட்ட மஹாவித்துவானின் சரித்திரத்தில் மஹாவித்துவானின் பெருமைக்குரிய காரணங்களையும் ஐயரவர்கள் தமிழ்மக்களின் நலனுக்காக எழுதித்தமிழ்மக்களையே தமக்குக் குருதக்ஷிணை களாகவிருக்கும்படி செய்துள்ளார். ஐயரவர்களுக்கு இப்புத்தகம் எழுதுவதற்கு ஸுமார் 45 வருஷகாலப் பிரயாசை நேரிட்டது. இப்புவியில் தமிழ் உலாவிவரும் பரியந்தம் இச்சரித்திரம் ஜீவித்திருக்கும் என்பதில் ஐயம் ஏது?

இவரது பெயர் மாறியது

இவருடைய இயற்பெயர் வேங்கடராமன் என்பது. அதுதான் இவரது சர்மா நாமமாம். இப்பெயரால் பிள்ளையவர்கள் சிலகாலம் அழைத்துவந்தார். ஒருநாள் அவர் இவரை அப்பெயரால்தான் வீட்டார்கள் அழைக்கின்றனரா என வினவியபோது, இவர் அது தமது மூதாதையின் பெயராதலால், பெற்றோர்கள் தம்மை 'சாமா' வென அழைப்பதாகக் கூறினராம். உடனே மஹாவித்துவான் சாமிநாதன் எனும் பெயர் நன்றாக விருக்கிறது எனவும், அப்பெயரால்தான் தாம் இவரை இனி அழைக்கப்போவதாகவும் கூறி, அவ்வாறே அழைக்கலாயினர். அவரது விருப்பத்தினால் அப்பெயரே நிலைத்து விட்டது. இவ்வாறு தமது பெயர் மாறிய விதத்தை ஸ்ரீமான் ஐயரவர்களே தமது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

மஹாவித்துவானிடம் இவர் இருந்துவருகையில் அந்நாளில் கும்பகோணம் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரான தியாகராஜ செட்டியார் அங்கு அடிக்கடி வருவதுண்டு. இதனால் செட்டியாருக்கும் ஐயருக்கும் நட்பு ஏற்பட்டது. செட்டியாருக்கு ஐயரவர்களின் தமிழ் இலக்கியஞானம் நன்கு தெரியும். 1876-இல் மஹாவித்துவானின் மரணம் ஐயரவர்களைத் துக்கசாகரத்தில் ஆழ்த்தியது. இதனால் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இவரிடங்கொண்ட பரிவு பிரகாசமாயிற்று. தேசிகருடன் மதுரைக்குச் சென்று, அங்குப் பண்டித சமூகத்தில் சாமிநாதையர் புகழ் எய்தினர். 1880-இல் தியாகராஜ செட்டியார் தமிழ்ப் பண்டிதர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். அவரே தமக்குப்பின்னர்த் தகுதியானவர் ஐயர்தான் என்பதைப் பிரின்ஸிபால் ராவ் பஹதூர் கோபால ராயருக்குத் தெரிவித்தார். இதுவுமன்றி, சாது சேஷையா, திவான் பஹதூர் ஆர். வி. ஸ்ரீநிவாஸையர், பி. ஹனுமந்த ராயர் ஆகியோரும் ஐயரவர்கள் தமிழ்ப்பண்டிதராக நியமிக்கப்படுவதை ஆவலுடன் வரவேற்றனர். அவ்வருஷம் பிப்ரவரி மாதம் இவர் வேலையை ஏற்றுக் கொண்டார். செட்டியாரை என்றும் தமது ஞாபகத்தில் இருத்தத் தமது கிருஹத்திற்கு "தியாகராஜ விலாஸம்" எனும் பெயரையும் இவர் இட்டுள்ளார்.

பழைய நூல்களைப் பதிப்பித்தல்

பண்டைய நூல்களைக் கண்டு பிடித்து, அவற்றை ஆராய்ச்சி செய்து தமிழுலகிற்குப் பேருதவி புரிந்த இப்பெரியாரைப் போற்றாதார் யார்? ஒரு சமயம் சேலம் ராமசாமி முதலியார் 'ஜீவகசிந்தாமணி' பிரதியை இவரிடங் கொடுத்து, அதைத் தமக்கு விளக்க வேண்டும் என வேண்டினர். பின்னர்ப் பிழையின்றி அதை அச்சிற் பதிப்பிக்கத் தாம் உதவுவதாகவும் அவர் கூறினர். ஆகவே 50 வருஷங்களுக்கு முன்பேயே இவர் தமிழ்நூல்களின் பதிப்பை எல்லோருக்கும் உபயோகப்படுமாறு ஆரம்பித்து, இன்றும் தளராமல்

அதை நடத்திவருகின்றார். இவரது குன்றாத ஊக்கமும், வெறுப்புறாத ஸ்வபாவமுமே இவர் பண்டைய பௌத்தமதம், ஜைனமதம் முதலியவற்றைப் பிரகடனப்படுத்தும் நூல்களையும், தமிழ்ச்சங்க நூல்களையும் பிரசுரித்தற்குக் காரணங்களாம். இவரால் இது பரியந்தம் அச்சிடப்பட்ட பழைய நூல்களின் பெயர்களை இங்குக் குறிப்பிடுவது அசாத்தியம் என்றே சொல்லவேண்டும். தமிழின் முதிர்ச்சியையும், தமிழின் பெருமையையும், தமிழரின் நாகரிகத்தையும் நாம் தற்போது அறிதற்கு மஹாமஹோபாத்தியாயருக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம். இவர் காலத்தையும் நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் ஐயரவர்கள் மேற்கொண்ட பிரயாசையும் அந்தப்பிரயாசையால் நமக்குலபித்த பலனும் தெரியவரும். இங்கு ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீனிவாச ஐயங்கார் ஆங்கிலத்தில் எழுதிய சில வார்த்தைகளைக் குறிப்பிடவேண்டிய தவசியம். "ஐயர் திரஸ்கரிக்கப்பட்ட தமிழ ணங்கைக் கண்டெடுத்து அவளைத் தமது குமாரியாகப் பாவித்து அவளைப் பரிவுடன் வளர்த்து வருகின்றார். அவளிழந்த ஐந்து ஆபரணங்களுள் மூன்றைக் கண்டு எடுத்து அவற்றால் அவளை அலங்கரித்துள்ளார். ஜீவக சிந்தாமணியால் அவளது சிரசைச் சோபிக்கச் செய்து, மணிமேகலையினால் அவளது அழகிய இடையைச் சிங்காரித்து, சிலப்பதிகாரத்தினால் அவளது இருபாதங்களுக்குத் திரும்பவும் இனிய ஓசை ஒலிக்கும் சதங்கையை அணிவித்திருக்கிறார். கைவளையல்களாகிய வளையாபதிகம்மலாகிய குண்டலகேசி எனும் அணிகலங்களால் அவளைப் பிரகாசப்படுத்துவதையே அவர் இப்போது எதிர்பார்க்கிறார்." கும்பகோணத்தில் இவர் ஒரு நல்ல பண்டிதராகச் சோபித்தார். கோபாலராயர் ஒரு சமயம் தமது விசுவாசத்தை வெளிப்படையாகத் தெரிவித்தார். பழைய நூல்களுக்கு இவர் எழுதிய முகவுரைகளும் குறிப்புரைகளும் இவர் எவ்வாறு உண்மையர்த்தத்தைக் கண்டு பிடிக்கச் சதா பிரயாசைப்பட்டு உழைத்தார் என்பதைத் தெரியப்படுத்துவன. 1887-இல் ஜீவகசிந்தாமணியும், 1892-இல் சிலப்பதிகாரமும், 1894-இல் புறநானூறும் இவரால் முதன் முதல் வெளியிடப்பட்டன. 1898-இல் புத்தநூல் 'மணிமேகலை'யும் இவரால் அச்சிடப்பட்டது.

மஹாமஹோபாத்யாயருக்குப் பாரதியாரின் பாட்டுக்கள்.

1903-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் இவர் கும்பகோணத்திலிருந்து சென்னைப் பிரஸிடென்ஸிகலாசாலைத் தமிழ்ப் பண்டிதராக மாற்றப்பட்டார். 1919-ஆம் வருஷம் இப்பதவியினின்றும் இவர் விலகிக்கொண்டார். 1903-ஆம் வருஷம் ஜனவரி மாதம் இவருக்கு ஸர்டிபிகேட் ஆப் ஹானர் அரசாங்கத்தாரால் அளிக்கப்பட்டது. 1905-இல் இவருக்குக் கவர்ன்மெண்டார் 1000-ரூபாய்கள் உதவினர். 1906-ல் இவருக்கு மஹாமஹோபாத்தியாய விருதும் அளிக்கப்பட்டது. இப்பட்டம் இதற்கு முன்பும் பின்பும் தமிழ்ப் பண்டிதருக்கு அளிக்கப் பட்டதே கிடையாது. இவருக்கு இப்பட்டம் அளிக்கப் பட்டதற்குத் தமிழின் மேன்மையைப் பிரகடனப்படுத்தியதே காரணம் போலும். இது அநேகருக்கு மகிழ்ச்சியை விளைவித்தது. அச்சமயம் தேசீய கவி ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் பின்வருமாறு பாடினர்:—

"செம்பரிதி யொளிபெற்றுன் பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்த தாங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்
றெவரேகொல் உவத்தல் செய்வார்?
கும்பமுனி யெனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப்பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கின் றீரே? (1)

அன்னியர்கள் தமிழ்ச்செவ்வி யறியாதார்
இன்றெம்மை யாள்வோ ரேனும்
பன்னியசீர் மஹாமஹோ பாத்தியா
யப்பதவி பரிவி னீந்து
பொன்னிலவு குடந்தைநகர்ச் சாமிநா
தன்றனக்குப் புகல்செய் வாரேல்
முன்னிவனப் பாண்டியர்நா ளிருந்திருப்பின்
இவன்பெருமை மொழிய லாமோ? (2)

நிதியறியோம் இவ்வுலகத் தொருகோடி
யின்பவகை நித்தந் துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க
குடந்தைநகர்க் கலைஞர் கோவே
பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெலாம் புலவோர் வாயிற்
றுதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே! (3)

ரவீந்திரநாத தாகூர் ஆதிய பெரியோர்கள் இவரைப் பார்க்க வந்ததுண்டு. 1924-ஆம்

வருஷம் செட்டிநாட்டு ராஜா ஸர் அண்ணுமலை செட்டியாரவர்களின் வேண்டுகோளுக் கிணங்கித் தமது தள்ளாத வயதிலும், சிதம்பரம் மீனாட்சி தமிழ்க்கலாசாலை அதிபர்பதவியை இவர் ஏற்றுக்கொண்டார். பின்னர் 1927-ஆம் வருஷம் மார்ச்சு மாதம் இவர் மீண்டும் இங்குத் திரும்பிவிட்டார். சென்னை ஸர்வகலாசாலை சங்கத்தார்கள் விரும்பியபடி 1927-இல் இவர் 'சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்னும் விஷயமாக 10 அரிய பிரசங்கங்கள் செய்தார்.

இசைப்பயிற்சியும் ஞானமும்.

மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களுக்கு இளம்பிராயத்திலிருந்தே இசையில் பிரியமும் பயிற்சியும் உண்டு. சிறிதுகாலம் கோபால கிருஷ்ண பாரதியாரிடம் இவர் சங்கீதங் கற்றுக்கொண்டார். 1929-ம் ஹூ மே மாதம் இங்ஙகளில் 'பண்டைத் தமிழர் இசையும் இசைக்கருவிகளும்' எனும் அரிய விஷயத்தைப் பற்றித் தாம் ஆராய்ந்த பழைய நூல்களின் ஆதாரத்துடனும் அநுபவஞானத்துடனும் பேசினர். இவ்விஷயத்தை, இசைப் பெருமை, தமிழர் இசை, இசை வகை, இசைக்கருவிகள், பிற்காலச் சங்கீதம் என்று ஐந்து விதமாகப் பிரித்து உபந்நியசித்தார். இதில் இவர் பண்களுக்கும் திறங்களுக்கும் உள்ள வேற்றுமையை விளக்கிக்காட்டினர். நெடில் ஏழும் ஸப்தஸ்வரங்களுக்கு எழுத்துக்கள் என்ற அரிய விஷயத்தைப் புலப்படுத்தினர். பாடுங்கால் இருக்க வேண்டிய இலக்கணங்களைப்பற்றிச் சொல்லிச் சம்பவிக்கும் குறைகளையும் எடுத்துக்காண்பித்தார். நடுவே சிலவற்றையும் தாமே பாடினர். சில மாதங்களுக்கு முன்பு 'கலைமகள்' சஞ்சிகைகளில் ஸங்கீத வித்வத்சிகாமணிகளான மஹாவைத்தியநாதையர், கனம்கிருஷ்ணையர் ஆகியவர்களைப்பற்றி நமக்குத் தெரியாதவையும், தமது மஹத்தான பிரயாசைகள் காரணமாகச் சேகரித்து வைத்தவைகளுமான சமாசாரங்களைப் பொதுநலனுக்கென வெளியிட்டார். இவர்களைப்பற்றின குறிப்புக்களில் இவர்களால் இயற்றப்பட்ட பாடல்களையும் குறிப்பிட்டுள்ளார்.

மஹிமையும் மரியாதையும்.

பாரத தர்ம மண்டலசபையார் 'திராவிட வித்யாபூஷணம்' எனும் பட்டத்தையும், காஞ்சி காமகோடிபீடாதிபதிகள் 'தாக்ஷிணாத்ய கலாநிதி' எனும் பிருதையும் இவருக்கு உவந்து அளித்தனர். சென்னை, காசி, மைசூர், சிதம்பரம் ஆகிய இடங்களின் சர்வகலாசாலைகளில் இவர் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப் பெற்றுள்ளார். 1932-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் மஹாமஹோபாத்தியாய ஐயரவர்களுக்குச் சென்னைச் சர்வகலாசாலையார் 'டாக்டர் ஆப் லிடரேச்சர்' பிருது அளித்துக் கௌரவித்தனர். இவரது உருவப்படம் கும்பகோணம் கலாசாலையில் மாஜி ஜட்ஜ் திவான் பஹதூர் கே. சுந்தரம் செட்டியாரால் திறந்துவைக்கப்பட்டது.

1933-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் சென்னையில்கூடிய தமிழன்பர் மஹாநாட்டில் டாக்டர் சாமிநாதையர் வரவேற்புத் தலைவராக விருந்து அரிய பிரசங்கம் செய்தார். இப்பிரசங்கம் நமது கவனத்திற்குரியது. ஏனெனில் இவரது குணாதிசயத்தைக் காட்டுவதாக அது இருக்கிறது. இவர் அப்பொழுது 'பண்டைக்காலப் புலவர்கள் வடமொழிப் புலவர்களோடு மனம் கலந்து பழகி அவர்களது கருத்துக்களையும் சொற்களையும் தங்கள் நூல்களில் ஆண்டிருக்கிறார்கள். வடமொழியின் தொடர்பினால் தமிழ் மக்கள் எவ்வளவோ அரிய கருத்துகளையறிந்து பயனுற்றிருக்கிறார்கள். ஒரு பாஷை வேறுபாஷையின் தொடர்பினால் விரியினும் அதனால் அப்பாஷையின் அழகு ஒருபோதும் குறையாது' என்றார். இதனால் தமிழ் மொழியில் கொண்டுள்ள பிரியத்தால் மற்றொரு பாஷையைத் தூஷிக்கக்கூடாது எனத் தெரிகிறது. பின்னர்த் தமிழ்ப்பாஷையின் வளர்ச்சி குறைந்ததைப்பற்றி இவர் சொன்னதாவது—"பண்டைக்காலத்துத் திண்ணைப் பள்ளிக்கூடங்களில் தமிழ்க் கணிதவகைகளையும் நிகண்டுகளையும், இன்றியமையாத இலக்கிய இலக்கணங்களையுங் கற்பித்துவந்தனர். பழைய முறைப்படி பாடம் கேட்பவர்களுக்கு அவை உபயோகமுள்ள நூல்களாக விருந்தன. சங்க நூல்கள்வரையில் அவர்கள் தங்கள் பயிற்சியை முறையாகவே வளர்த்துவந்தனர். அந்த முறை இப்போது அடியோடு போய்விட்டது. அதனால்தான் பாஷையில் அபிமானமும் குறைவுபட்டது."

இன்னும் புராதன நூல்களைப் படித்துத் தமது அறிவைப் பெருக்கிக்கொள்ளுவதையே

நோக்கமாகக் கொண்டுள்ள மஹாமஹோபாத்தியாயரவர்கள், அரியலூர் சம்ஸ்தானம், சம்ஸ்தான வித்துவான்கள், உடையார்பாளையம் ஜமீன்தார்களின் அறிவுவளர்ச்சி, தஞ்சை மன்னர்களின் ஆதரவு, மற்றும் இதர தமிழ் விசுவாசிகள் ஆகிய விஷயங்களைப்பற்றிப் பத்திரிகையில் எழுதிவருவது பாலைவனத்தில் நீருக்குத் தவிக்கும் ஒருவனுக்கு அமுதங் கிடைப்பதுபோல் இருக்கின்றது. இவ்வாறான பழையகதைகளை அறிந்தோர் ஐயரைத் தவிர வேறு யாரும் இலர். இவருடைய வீடு கலைமகள் நிலயமாகத் திகழ்கின்றது. இப்பெரியாருடைய புகழ் தமிழ் மணக்கும் இடங்களில் எல்லாம் பரவி விளங்குகின்றது. இவர் தம் ஆசிரியர் மஹாவித்துவானைப்பற்றி எழுதிய வார்த்தைகளில் பெரும்பான்மையானவற்றை நிகழ்காலத்தில் குறிப்பிடுவதாயின் இவருக்கே அவை பொருந்தும். கல்வி அபிவிருத்திக்காகவும் ஆராய்ச்சியின் மேம்பாட்டிற்காகவும் உழைக்கும் இவருக்குச் சர்வேசுவரன் தீர்க்காயுளையும், பூரண தேகசுகத்தையும், சம்பத்விருத்தியையும் அளிப்பாராக! தமது வாழ்க்கைப் பகுதி முழுவதையும் இந்நாட்டினரின் உபயோகத்திற்காக ஐயரவர்கள் எழுதி வெளியிடவேண்டுமென்பதுதான் இன்று தமிழர், தமிழன்பர் ஆகிய அனைவருடையதுமான வேண்டுகோள்!

—சு. மி-6-3-'35.

தமிழ் வளர்த்த தனிப் பேராசிரியர்

தென்னாடு ஒருங்கே புகழும் பெருமை வாய்ந்த மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் கும்பகோணத்துக்கு மேற்கே பத்துமைல் தூரத்திலுள்ள உத்தமதானபுரம் என்னும் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் தகப்பனாரான திரு. வேங்கட சுப்பையர் சிறந்த சிவபக்தர். ஐயருக்குத் தமிழில் இருந்த ஆளவிலாப் பற்றைக் கண்ட தந்தையார், இவரை அக்காலத்தில் தென்னாட்டு மகாவித்துவானாக விளங்கிய திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்களிடம் தமிழ் பயில விட்டார். ஐயர், பிள்ளையவர்களைத் தெய்வமாகக் கருதி வழிபட்டுத் தமிழ் நூல்களைக் கற்கலானார். பிள்ளையவர்கள் திருவாவடுதுறை ஆதீன வித்துவானுதலின், அவர்கள் அடிக்கடி அங்குச் செல்வதுண்டு. அவர்களைத் தொடர்ந்து ஐயரும் சென்று, பண்டாரசந்நிதியான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அன்புக்குப் பாத்திரரானார்.

ஐயர் 1880-ஆம் ஆண்டு, கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியர் பதவியில் அமர்ந்தார். அதுமுதல் 23 வருடகாலம், ஐயர் அக்கல்லூரியிலேயே தமிழ்ப்பேராசிரியராக இருந்தார். தமிழ்ப் பெருங் காப்பியங்களான சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை என்பன இக்காலத்திலேயே புத்தகரூபத்தில் வெளிவந்தன. இவையன்றி, பத்துப்பாட்டு என்னும் சங்கநூலும், புறநானூறு என்னும் சங்கநூலும் ஐயரால் வெளியிடப்பெற்றன. இவற்றிற்கு ஐயர் பட்ட இன்னல்கள் பல.

தமிழ் மொழி—தமிழர்—தமிழ்ப் புலவர் என்று, இன்று சிறிதளவேனும் நாம் பேசுவது ஐயரின் அருந்தொண்டினால் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. இவர் இன்னும்—தமது முதுமைப் பருவத்திலும்—பல தமிழ்நூல்களை ஆராய்ந்து பதிப்பித்து வருகின்றார் எனின், இவர்தம் உலையா உழைப்பையும் சலியா ஊக்கத்தையும் என்னெனப் புகழ்வோம்!

[இது, கே. பழனியாண்டிப்பிள்ளை கம்பெனியாரால் வெளியிடப்பட்டுள்ள சன்மார்க்கதீபம், இரண்டாம் புத்தகம், 16-ஆம் பாடத்தின் சுருக்கம்.]

6-3-'35.

மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஜீவிய சரித்திரச் சுருக்கம்

ச. கு. கணபதி ஐயர்

தமிழுக்குக் கௌரவம்

சென்ற இருபது வருஷங்களாகத் தமிழர்கள் எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகிறார்கள்; சிறப்பாகத் தமிழ்ப் பாஷை விஷயத்தில் நிறைந்த அபிவிருத்தி அடைந்துள்ளார்கள்; தங்கள் பாஷை மிகப் பழமையானதென்றும், பழந்தமிழர்கள் வீரர்களாகவும் சிறந்த வள்ளல்களாகவும் இருந்தார்கள் என்றும் பெருமை பாராட்டிக்கொள்கிறார்கள். பாரதியார் 'வீரம் சிறந்த தமிழ் நாடு' என்றும், 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம்படைத்த தமிழ் நாடு' என்றும் தமிழ்நாட்டைப் புகழ்ந்து கூறியிருப்பதைக் காண்க.

நமது பண்டைப் பெருமைகளை உலகுக்குத் தோற்றுவித்தவர் யார்? சிலப்பதிகாரம், புறநானூறு, சிந்தாமணி முதலிய நூல்களைத் தமிழ்மக்கள் இன்று பெற்றுத் தலை நிமிர்ந்து நிற்குமாறு செய்த பெருந்தகையாரைப் பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டாமோ? அவர்தாம் மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிடவித்யாபூஷணம், மகாவித்வான், டாக்டர், உ. வே. சாமிநாதையரவர்கள். ஸ்ரீ ஐயரவர்கள் தமிழ் நாட்டிற்குச் செய்த பல உதவிகளுள், பண்டைத்தமிழ் நூல்களை வெளியிட்டது தலைசிறந்து நிற்கின்றது. இராமாயணம், நைடதம், சில புராணங்கள், பிரபந்தங்கள், நிகண்டு முதலியவற்றின் எல்லைக்குள்ளே அடங்கியிருந்த தமிழ் இவர்களால் இப்பொழுது எவ்வளவோ விரிவுற்று விளங்குகிறது. முதல்வகுப்பில் படிக்கும் சிறுகுழந்தையுங் கூடப் பள்ளிக்கூடத்திற்குப் போகும் வழியிலே, 'பாரி என்பவன் ஒரு வள்ளல்' என்று பழம் பாடத்தை ஒப்பித்துக்கொண்டு போவதைக் காண்கிறோம். சங்க காலத்துப் புலவர்கள், சங்க காலத்து அரசர்கள், நூல்கள் முதலிய பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சிகளைக் குறித்து எங்கும் கேட்கப்படுகின்றது.

பிறப்பும் இளமைப் பருவமும்

தமிழ்மொழி இவ்வாறு பரவியதற்குக் காரணராக இருக்கும் நமது தமிழ்ப் பெரியார் சோழதேசத்திலே உத்தமதானபுரம் என்னும் கிராமத்தில் வேங்கடசுப்பையர் என்னும் வேதியருக்கும் ஸ்ரீ ஸரஸ்வதி அம்மாளுக்கும் குமாரராக 1855-ஆம் வருஷத்தில் அவதரித்தார்கள். இவர்களுடைய தந்தையார் சிறந்த ஸங்கீதவித்வான்; உடையார்பாளையம் முதலிய இடங்களில் உள்ள ஜமீன்தார்களிடத்தும் செல்வர்களிடத்தும் நல்ல மதிப்புடையவர். நமது ஐயரவர்கள் சிறு பிராயத்தில் தம் தந்தையாரிடத்தில் ஸங்கீதத்தைக் கற்றுக்கொண்டார்கள்.

கல்வி கற்றமை

அக்காலத்தில் இக்காலத்தைப்போல் எங்கெங்கும் பள்ளிக்கூடங்கள் இல்லை. சிற்சில இடங்களில் தமிழ் தெரிந்தவர்கள் தமக்குத் தெரிந்த விஷயங்களை மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லி வந்தார்கள். ஒருவருக்கே எல்லா நூல்களும் தெரியா. தமிழைக் கற்றுக்கொள்ளுகின்றவர்கள் பல நூல்களைப் பாடங் கேட்பதற்குப் பல ஆசிரியர்களை நாட வேண்டியிருந்தது. ஸ்ரீ வேங்கடசுப்பையர் தமது திருக்குமாரரைப் பல நல்லாசிரியர் இருந்த இடந்தேடி அழைத்துச் சென்று பாடஞ் சொல்லுவித்தார்கள். அவ்வகையில் இவர்கள் அரியிலூர் ஸ்ரீ சடகோப ஐயங்காரிடத்திலும் செங்கணம் ஸ்ரீ விருத்தாசல செட்டியார் என்பவரிடத்திலும் சிற்சில நூல்களைப் பாடங் கேட்டு வந்தார்கள். இவர்களுடைய அறிவாற்றல்களுக்குத் தக்க உணவு அவர்களால் அளிக்க இயலவில்லை. 'ஆனைப் பசிக்குச் சோளப்பொரி எம்மாத்திரம்?'

பிள்ளையவர்களை நாடியது

அக்காலத்தில் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பெருமை தமிழ் நாடெங்கும்

பரவி யிருந்தது. பாடஞ் சொல்லுவதிலும் செய்யுள் நூல்கள் இயற்றுவதிலும் அவர்கள் சிறந்து விளங்கினார்கள். வேங்கட சுப்பையர் தம் அருமைப் புதல்வரைப் பிள்ளையவர்களிடம் அழைத்துச் சென்று கல்வி புகட்டுமாறு வேண்டிக் கொண்டனர். பிள்ளையவர்கள் இவர்களைப் பரீட்சித்துத் தமிழ்ப் பாஷையினிடத்து இவருக்கிருந்த ஆர்வத்தையும் ஞாபக சக்தியையும் நுண்ணறிவையும் கண்டு மகிழ்ந்து தம்முடன் வைத்துக்கொண்டு பாடம் சொல்லிவர உடன்பட்டார்கள். இவர்கள் தந்தையாரை விட்டு ஆசிரியருடன் இருந்துகொண்டே நான்கு வருஷங்கள் பிரபந்தங்களையும் புராணங்களையும் பாடங் கேட்டுச் சிறந்த புலமையை அடைந்து விட்டார்கள்.

ஆதீன வித்வான் ஆனமை

பிள்ளையவர்கள் அக்காலத்தில் திருவாவடுதுறை மடத்தின் மகாவித்துவான்களாக இருந்து வந்தார்கள். அம் மடாதிபதிகளாக அக்காலத்தே இருந்த ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களும் கல்வியிற் சிறந்தவர்களாக விளங்கி வந்தார்கள். ஐயரவர்களின் அறிவாற்றல்களையும் மேலான ஒழுக்கத்தையும் கண்டு அவர்கள் இவர்கள்மேல் அத்யந்த அன்பு பாராட்டி வந்தார்கள். அதன் காரணமாக ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுக்குப் பின் இவர்கள் அந்த மடத்தின் ஆதீனவித்துவான்களாக நியமிக்கப்பெற்றார்கள். அக்காலத்தில் இவர்கள் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரிடத்தில் சில நூல்களைப் பாடங்கேட்டுக்கொண்டே தாமும் அம்மடத்திலே சில மாணவர்களுக்குக் கல்வி புகட்டி வந்தார்கள்.

காலேஜ் பண்டிதராகமை

இருபதாவது பிராயத்திலேயே இவர்கள் பாடஞ் சொல்லத் தொடங்கிவிட்டார்கள். பிள்ளையவர்களின் மாணாக்கர்களுக்கெல்லாம் ஸ்ரீ ஐயரவர்களிடம் பெரிய மதிப்புண்டு. இவர்களுடைய கல்வி வன்மையைக் கண்டு அவர்கள் வியந்து பாராட்டியிருக்கிறார்கள். அவர்களில் தியாகராஜ செட்டியார் என்பவர் ஒருவர். அவர் பிள்ளையவர்களின் முதல் மாணவர்; கல்வி கேள்விகளில் சிறந்த புலமை வாய்ந்தவர்; கும்பகோணம் காலேஜில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக இருந்துவந்தார். அவருக்கு நம் பெரியாரிடம் அத்யந்தப் பிரீதி இருந்துவந்தது. அதன் பயனாக அவர்கள், தாம் வயது முதிர்ச்சியால் வேலையிலிருந்து விலகும்போது தம்முடைய ஸ்தானத்துக்கு ஸ்ரீ ஐயரவர்களைச் சிபார்சு செய்தார்கள். அக்காலத்தில் அக் கல்லூரியிலிருந்த பல ஆசிரியர்களும் பிரின்ஸிபாலும் தமிழில் ஆர்வமுடையவர்கள். அவர்கள் எல்லோரும் ஐயரவர்களைப் பரீக்ஷித்து இவர்களுடைய புலமையை அறிந்துகொண்ட பிறகே இவர்களுக்கு அந்தவேலை கொடுக்கப்பட்டது. அப்பொழுது இவர்களுக்கு வயது 24.

சிந்தாமணி பதிப்பித்தது

கும்பகோணத்தில் அக்காலத்தில் சேலம் இராமசாமி முதலியார் டிஸ்ட்ரிக்ட் முன்ஸீபாக இருந்து வந்தார். அவருக்குத் தமிழ் மொழியினிடம் அதிக ஆர்வம் இருந்துவந்தது. அவர்கள் ஐயரவர்களுடன் நட்புக் கொண்டு பழகிவரவே இவர்களுடைய அபார மூளையையும், ஓயாத உழைப்பையும் அறிந்து கொண்டு 'தமிழிலே எத்தனையோ நூல்கள் முற்காலத்தில் இருந்தன வென்று கூறுகிறார்களே; அவற்றைத் தேடி வெளியிடுவது சிறந்த தொண்டாகும். அதை மேற்கொள்ளத்தக்க வன்மை தங்களிடமே இருக்கிறது" என்று கூறித் தம்மிடமுள்ள சீவக சிந்தாமணிக் கையெழுத்துப் பிரதியைக் கொடுத்து முதன் முதலாக அதனை நன்கு பரிசோதித்து விஷயங்களைத் தீர்மானித்துக் கொண்டு வெளியிடுமாறு வேண்டிக்கொண்டனர். ஸ்ரீ ஐயரவர்களுக்கு அவ்வித எண்ணம் இயல்பாகவே உண்டு. அப்பொழுது ஒருவர் ஊக்க முன்வரவே இவர்கள் நூற் பதிப்பு வேலையை மேற்கொண்டார்கள்.

சிந்தாமணியைப் பதிப்பிப்பதில் இவருக்கு எத்தனையோ கஷ்டங்கள் இருந்தன. கும்பகோணத்தில் ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்ற சாதனங்கள் கிடைக்கவில்லை. பிறர் சகாயமும் குறைவு. காலேஜ் வேலைகளைப் பார்த்துக் கொண்டே சிந்தாமணி ஆராய்ச்சியையுஞ் செய்து வந்தார்கள். சில சமயம் இரவு நேரங்களில் இரண்டொரு மணிகளே உறங்கியிருக்கிறார்கள்.

உழைப்பினால் மலர்ந்த உயர்ந்த நூல்கள்

சிந்தாமணியைப் பதிப்பிக்குங்கால் இவர்கள் பல பல நூல்களை ஆராய வேண்டியிருந்தது. அக்காலத்திலேதான் இவர்கள் சங்க நூல்களைப் பற்றி அறிந்துகொண்டார்கள்.

சிந்தாமணிப் பதிப்பு முடிந்ததும் இவர்கள் சுவடிகளைத் தேடப் பல பல இடங்களுக்குக் கால்நடையாகவே சென்றார்கள். அக் காலங்களிலெல்லாம் இவர்கள் அடைந்த கஷ்டங்கள் பல. பத்துப்பாட்டு இன்னவை என்று இவர்கள் தாம் கண்டறிந்தார்கள். முருகாற்றுப்படை 11-ஆம் திருமுறை ஆதல் பற்றித் தமிழர் அதனை அறிந்திருந்தனர். மற்ற ஒன்பது பாட்டுக்களையும், முருகாற்றுப் படை பத்துப்பாட்டில் ஒன்று என்பதையும் எவரும் அறிந்திருக்கவில்லை. ஐயரவர்களுக்குப் பத்துப்பாட்டுப் பிரதி ஓர் இரவிலே கிடைத்தது. ஐயரவர்கள் நிலா வெளிச்சத்திலேயே முல்லைப்பாட்டு முழுவதையும் படித்து அது பத்துப்பாட்டைச் சேர்ந்தது என்று தீர்மானித்தார்கள்.

சிந்தாமணியை வெளியிடும்போது இவருக்கு வயது 31. தொடர்ச்சியாக எட்டு வருஷங்கள் இவர்கள் ஆயுந்தொறும் இன்பந் தரும் பழந்தமிழ் நூல்களைப் பதுக்கும் பணியில் ஈடுபட்டு முறையே பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுநூறு, புறப்பொருள் வெண்பாமாலை முதலிய நூல்களை வெளிவிட்டனர்.

சென்னையில் தமிழ்ப்பணி

கும்பகோணத்திலிருந்த போதே இவர்களுடைய தந்தையார் காலஞ்சென்றனர். 1903-ஆம் வருஷம் இவர்கள் சென்னைத் துரைத்தனக் கலாசாலைக்கு மாற்றப் பெற்றார்கள். சென்னைக்கு வந்தபிறகு இவர்கள் பதிற்றுப்பத்து, பரிபாடல், பெருங்கதை, நன்னூல் மயிலைநாதருரை முதலியவற்றை வெளியிட்டார்கள்.

ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் காலேஜ் பிரின்ஸிபால் பதவி

1919-ஆம் வருஷம் இவர்கள் தம் 64-ஆம் பிராயத்தில் பிரஹிடென்ஸி காலேஜ் வேலையிலிருந்து நீங்கி உபகாரச் சம்பளம் பெற்றார்கள். பிறகு 1924-ஆம் வருஷம் சிதம்பரத்தில் ராஜா ஸர் அண்ணாமலைசெட்டியாரவர்கள் விருப்பப்படி அன்னார் ஸ்தாபித்த ஸ்ரீ மீனாட்சி தமிழ்க் காலேஜில் பிரின்ஸிபாலாக இருந்துகொண்டு 1927-ஆம் வருஷம்வரையில் தமிழ்ப் பணி ஆற்றிவந்தார்கள்.

அதற்குப்பின் இவர்கள் இப்பொழுது சென்னையில் நூலாராய்ச்சியிலேயே தம் காலத்தைச் செலவிட்டு வருகிறார்கள். மேற் குறித்த நூல்களையல்லாமல் இவர்களால் வெளியிடப்பெற்ற பிரபந்தங்களும் புராணம் முதலியவைகளும் மிகப் பலவாகும். இன்றைக்கும் இவர்கள், 'கலைமகள்', 'செந்தமிழ்', 'சிவநேசன்' என்னும் மூன்று பத்திரிகைகள் வாயிலாக ஒவ்வொரு புதிய நூலை வெளியிட்டு வருகிறார்கள்.

ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரத்தை எளிய நடையில் பலர் பாராட்டும் வண்ணம் இவர்கள் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார்கள். அது தமிழ்ப் பாஷைக்கே ஒரு பெருஞ்சிறப்பை அளித்திருக்கிறது.

இவர்கள் தலைமை வகித்துப் பேசிய ஸபைகள் பல. இவர்களுடைய பேச்சில் நிறைந்திருக்கும் சாதுரியமான சொற்கள் முத்துப் போல உதிர்ந்துகொண்டேவரும். நடை மிகவும் எளிமையானது.

பட்டங்கள்

இவர்கள் தமிழுக்குச் செய்துள்ள மகோபகாரத்தை அறிந்த அரசாங்கத்தார் 1906-ஆம் வருடம் இவர்களுக்கு 'மஹாமஹோபாத்தியாயர்' என்ற பட்டத்தையும், சென்னை யூனிவர்ஸிடியார் 1932-ஆம் வருஷம் 'டாக்டர் ஆப் லிட்ரேசர்' என்ற பட்டத்தையும் வழங்கியுள்ளார். ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியாரவர்கள் "தாக்ஷிணாத்யகலாநிதி" என்ற பட்டத்தை அளித்திருக்கிறார்கள். காசி பாரததர்மமகாமண்டலத்தார் 'திராவிடவித்யாபூஷணம்' என்ற பட்டத்தைச் சூட்டியுள்ளார்கள்.

தமிழர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்?

ஸ்ரீ ஐயரவர்கள் இப்பொழுது வெளியிட்டுள்ள நூல்கள் தற்சமயம் இவர்கள் ஆராய்ந்து வைத்திருக்கும் நூல்களில் ஒரு பகுதியேயாகும். கம்பராமாயணம், பெரியபுராணம், தேவாரம், குறுந்தொகை, தொல்காப்பியம், நன்னூல் விருத்தியுரை, காரிகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முதலியவற்றைச் செவ்விய வடிவில் வெளியிட வேண்டுமென்பது இவர்களுடைய விருப்பமாகும். தமிழ் நாட்டில் போதிய ஆதரவு கிடைக்குமேல் தமிழணங்கு தான் இழந்த சிலம்பையும் மணியையும் மறந்த கதையையும் பாட்டையும் மறுபடியும் பெற்றதுபோல் இவற்றையும் பெறலாகும்.

இப்பெரியார்க்குத் தமிழர்கள் இன்று இவர்களுடைய எண்பதாவது ஆண்டு விழாவைக் கொண்டாடி மகிழ்வதனால் இவர்களால் தமிழ்ப் பாஷைக்கு ஏற்பட்ட, ஏற்படுகின்ற, ஏற்படும் சிறப்பை நன்குணர்ந்திருக்கிறார்களென்பது உறுதிப்படும்.

தமிழர்களின் ஆதரவு கிடைப்பதோடு இவர்கள் அரோக திடகாத்திரர்களாக இன்னும் பல வருஷங்கள் தமிழ்ப்பணி ஆற்றிக் கொண்டு வாழும்படி எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன். தோழர்களே! என்னுடன் நீவிரும் வேண்ட வம்மின்.

[ஸ்ரீமத் ஐயரவர்கள் சுமார் 50 சங்கநூல்கள் வரை ஆராய்ந்து முக்கியமான பலவகை ஆராய்ச்சிக் குறிப்புடன் சுத்தப் பதிப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றுள் சில வருமாறு:—சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பெருங்கதை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும், புறப்பொருள் வெண்பா மாலை; ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுடைய ஜீவிய சரித்திரத்தையும் எளிய நடையில் இரண்டு பாகங்களாக எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். குறுந் தொகையை ஆராய்ச்சிசெய்து வெளியிட்டுக்கொண்டுவருகிறார்கள். தா. இ. ப-ர்.]

—தாருல் இஸ்லாம்-6-3-35.

அபிமானிகள் எழுதிய கடிதப் பகுதிகள்

Government House, Madras
27th. February, 1935.

Dear Mr. Rajan,

His Excellency has asked me to convey to Mahamahopadhyaya Dr. V. Swaminatha Ayyar through you his congratulations on his eighty-first birthday.

Yours truly
(Sd.) A. D. Crombie.

சுவாமி வேதாசலம்,
போதுநிலைக்கழகக்குரு,
ஞானசாகர ஆசிரியர்,
பல்லாவரம், 8—2—1935.

அன்புமிக்க ஐய,

மறைத்திருவாளர் உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுநாட் கொண்டாட்டத்தின் அழைப்பைப் பெற்று மகிழ்ந்தேன். பழைய தனிச் செந்தமிழ் இலக்கிய நூல்களைப் பெரிது முயன்று பிழையற ஆராய்ந்து தமிழுலகுக்கு வழங்கிய அப்பெரியார் செய்த நன்றியைப் பாராட்டி, அவர்களது நினைவுக் குறியாகத் தக்கதொன்று செய்யவேண்டுவது, தமிழன்னையின் புதல்வர் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாக்கடமையே யாகும்....

R. SWAMINATHA AYYAR B.A., L.T.,
Retired Headmaster, Town High School, Kumbakonam.
Kumbakonam, 10-2-1935.

The Tamil country would be only honouring itself by honouring such a great scholar and writer. In other lands statues would be erected to commemorate the services of a public worker of that stamp and in our own country, in ancient times, extensive "manyams" would have been sanctioned. Times are changed. Conditions are peculiar. We must take things as they come. I wish all success to the efforts of the good committee.

ச. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,

தருமாலயம்,
பருத்தித்துறை,
12-2-35.

...பண்டைக்காலத்தனவாகி ஒதுங்கியும் சிதைந்தும் மறைந்துகிடந்த தமிழ்க் கலைகளை அரும்பெருஞ் சிரமத்தோடு ஆராய்ந்தும் வியாதனர் வேதங்களை வகுத்ததுபோன்று எவரும் எளிதின் உணருமாறு நிரைந்தும் விளக்கியும் அச்சிட்டுத் தமது வாழ்நாள் முழுவதையும் தமிழ் மக்களின் அறிவைப் பெருக்குதற்கே உதவி வருகின்ற ஸ்ரீமகா மகோபாத்தியாயர் அவர்கள் தமிழ்மக்களால் தினந்தோறும் தியானஞ் செய்தற்குரியரென் பது எமது உள்ளக்கிடக்கை. தருமநூல் முதலாகிய பலவகையான கலைகளை ஆரிய மொழியில் இயற்றி நன்னெறியைக் காண் பித்த ஏதுபற்றி வைதிக நெறியினராகிய அந்தணர் முதலியவர்கள் அந்த இருடிக ளுக்கு விதித்தகாலங்களில் தர்ப்பணாதிகள் செய்துவருகின்றார்கள். அவைகள் அவ்விருடி கள் செய்த நன்றிக்காகச் செய்யப்படுவன வன்றே? அதுபோலவே தமிழ்மொழியை அபிமானிக்கும் குழுவினரும் தமிழ் முனி யென்னும் ஸ்தானத்தை வகித்திருக்கிற இப் பெருந்தகையினரைத் தியானஞ்செய்வதும் நன்றிபாராட்டுவதும் கடப்பாடாகக் கொள் ளல் வேண்டும். தாங்கள் தொடங்கிய ஆண்டு நிறைவுவிழா அவர்களுக்குத் தமிழ் மக்கள் செய்யுங் கடமைகளை ஞாபகப்படுத் துமென்று நம்புகிறோம்.

"வந்தி பரிவாய் மகவைப் பெறுந்துயரம்,
நொந்தறிகு வாளோ நுவல்" என்றபடி,
பண்டைத் தமிழ்நூல்களை ஆராய்ச்சிசெய்தும் பதித்தும் வெளிப்படுத்துதற்கண் நேர்ந்த சிரமத்தைச் சிற்சிலரே அறிதல் கூடும்.

C. Pannirukaiperumal Mudaliar, B.A., B.L.

Science College,
Trivandrum,
12-2-35.

Dr. ஐயர் அவர்கள் தமிழ்மொழிக்குச் செய்த பேருபகாரத்துக்குத் தமிழர்கள் ஐயர் அவர்களது உருவச்சிலை (*Statue*) ஒன்றைச் செய்து அதனைத் தமிழ்நாட்டின் முக்கிய நகரம் ஒன்றில் நிலைநிறுத்தவேண்டும் என்று அடிக்கடி நான் எனது நண்பர்களிடம் சொல்வதுண்டு. அத்தகைய காரியத்தைச் செய்வதற்குரிய காலம் இப்பொழுது வந் திருக்கிறது என நினைக்கிறேன். தமிழ் நாட்டில் செல்வாக்குள்ள சிலர் இந்த விஷயத் தில் முயற்சி செய்வார்களானால் நாம் நினைத்த காரியம் நிறைவேறுவது நிச்சயம்.

பாஷாகவிசேகர-மஹாவித்வான்
ரா. ராகவையங்காரவர்கள்.

Annamalai University,
Annamalainagar, 13-2-35.

...பெருந்தமிழ்நூல் வள்ளலாகிய மஹா மஹோபாத்யாய டாக்டர் ஸ்ரீமான் உ. வே. ஸ்வாமிநாதய்யரவர்களை நன்றிபாராட்டி உப சரித்தற்குத் தாங்கள் முதலியோர் மேற் கொண்டுள்ள காரியம் எம்மனோர்க்குப் பெரு மகிழ்வினைப்பதொன்று. அவர்கள் தமிழ்த் தாய் மொழிக்குச் செய்துள்ள பெருநல்லுத விக்குக் கைம்மாறாக எத்துணைச் சிறப்புச் செய்தாலும் நிறையீடாகுமோ, தெரிகிலேன்; ஆயினும், அப்பெரியார்பால் நமக்குள்ள அன்பை இயன்ற அளவு காட்டிக்கொள்வதே இவ்வமயத்திற்குப் பொருந்துவதாகும்.

Bhasha Bharata Dhurandhara
M.V. Ramamujacharya, Editor,
Tamil Translation of Mahabharatam,
Kumbakonam, 13th Feb. 1935.

ஸ்ரீமத் ஐயரவர்கள் தமிழ் உலகத்திற்குச் செய்திருக்கிற பேருதவி சொல்லில் அடங்கு வது அன்று. அதற்காக அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சியும் அதனால் அடைந்த ச்ரமங்களும் எல்லையில்லாதவை. உருவப் படம் வைத்தல், அட்ரஸ் வாசித்தல் முதலி யன, ஒருவிதத்தில், நம்முடைய நன்றியைத் தெரிவிப்பனவானாலும் அவர்களுக்கு ஏற்பட் டிருக்கிற ச்ரமத்தை நீக்க ஒருசிறிதும் காரண மாகமாட்டா. பெருந்தொகை சேர்த்து ஒருபொருள் முடிப்பு அளித்தால் நலமா யிருக்கும். அந்த முறையில் வேலைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE ZAMINDAR OF PALAYAMPATTY,
15-2-35.

No one could have a greater claim for due recognition than yourself for the services rendered in the cause of Tamil Literature and I pray Almighty to spare you many more years as a worthy son of the Tamil Nad.

N. NARAYANAN, B.A., B.L., L.T.,
of the Jaffna Hindu College.
The "Ardralaya,"
Vannar ponnai, Jaffna,
Ceylon, 16th February, 1935.

Even people who have looked through the Ardra cursorily would be able to see that there is scarcely a single number of it in which the great Guru's name is not referred to in some connection or other. This shows to what extent his personality dominates the field of Tamil research at the present day.

F. G. NATESA AIYAR,
Manohara Vilas, Woraiyur, 16-2-35.

I would like to make the suggestion that whatever other forms the meeting will decide upon to celebrate the event, the biography of the Mahamahopadhyaya in as full and complete a manner as possible may be undertaken and published at a moderate price, so that the Tamil world and those interested in it will be benefited for generations. The biography might include notes by qualified persons on the value of the actual contribution made to Tamil Literature by Dr. Swaminatha Ayyar and the list of the monumental works he has been responsible for and short notes detailing the salient features of each work. The reminiscences of Dr. Swaminatha Ayyar might also be collected and added to the volume with advantage.

ராவ் ஸாஹிப் த. வே. உமாமகேசுவரம்பிள்ளை,
கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.
கருந்திட்டைக்குடி, 19-2-35.

ஐயரவர்களின் திருநாளைத் தமிழுலகம் கொண்டாடவேண்டுவது இன்றியமையாதது.

தங்கள் விளம்பரத்திற் கண்டபடி நூற் பதிப்பு வேலைகளைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஏற்பாடு சிறந்ததாகும்.

F. E. CORLEY,
Wingate, Mylapore, 20th Feb. 35.

It is a pleasure to have a share, however humble, in the project for doing honour to Dr. V. Swaminatha Ayyar, and the enclosed cheque is its tangible expression. I only regret that my poverty forbids the giving of a larger amount, but I trust the large numbers of those who will contribute will make up for what individually we cannot do and permit the celebration of the occasion on a worthy scale.

As you know, I can make no pretensions to Tamil scholarship; but I know enough about it to know something of the esteem in which Dr. Swaminathan is justly held and I am proud to join in this tribute to one whose longevity is as remarkable as his learning.

PANDITHAMANI M. KATHIRESAN CHETTIAR,
LECTURER IN TAMIL, ANNAMALAI UNIVERSITY,
Annamalainagar, 20-2-'35.

தமிழ்ப்பணி செய்தலையே சிறந்த தொண்டாக மேற்கொண்டு தமிழ் நிலத்தாருக்கு அரிய பல பழந்தமிழ்நூல்களை வெளியிட்டு உதவிவரும் தமிழ்ப்பெரியாராகிய மஹா

மஹோபாத்தியாய, டாக்டர், சாமிநாதைய ரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடுவதற்குச் செய்திருக்கும் ஏற் பாடுகளெல்லாம் மிகவும் மகிழ்ச்சிதருகின் றன. அப்பெரியாருக்குச் செய்யும் சிறப்புக் களெல்லாம் தமிழ்மொழிக்குச் செய்தன வாகவே முடியும். ஆதலின் இச்செயலிற் றலைப்படுதல் தமிழ் நிலத்துள்ளார் எல்லோ ருக்கும் உரிய சிறந்த கடமையாகும்.

PANDITHAMANI
M. KATHIRESA CHRTTIAR,
Lecturer in Tamil, Annamalai University.
Annamalainagar, 4-3-35.

எங்கள் அரிய தமிழ்த் தலைவரும் தங்கள் அன்புரிமைத் தமையனரும் ஆகிய மஹா மஹோபாத்தியாய டாக்டர் ஐயரவர்களுக்கு நடைபெறும் சதாபிஷேக விழாவைத் தமி ழுலக முழுதும் கொண்டாடுங் கடப்பா டுடையதாகும். விழா நடைபெறும் நாளில் யான் அங்குவந்து உடனிருந்து இன்புறுதலில் அளவிகந்த அவாவுடையேன். அதற்கு இங் குள்ள வேலை தடைப்படுத்தலால் வர இய லாமையைத் தெரிவித்துக் கொள்ளலானேன்; பொறுத்தருளல் வேண்டும். என் பருவுடல் இங்கிருப்பினும் நுண்ணுடலாகிய மனம் விழாநிகழ்ச்சியிலேயே ஈடுபட்டிருப்பதாகும். ஸ்ரீமான், ஐயரவர்கள் தமிழ் நிலத்தார்க்குச் செய்துவரும் உபகாரங்கள் மிகப்பலவாகும். அவர்களுக்கு நடைபெறும் சதாபிஷேக மங்கல விழா ஒவ்வொரு தமிழர் இல்லத்தும் நடைபெறுவதாகும். ஆதலின் யாண்டு இருப் பினும் விழாநிகழ்ச்சியில் ஈடுபட்டின்புறுவ தாகவே முடியும்.

K. KANNAN MENON, HEADMASTER,
Board High School, Dharapuram,
21-2-35.

I have heard of the great man though I cannot claim his friendship. Such men as devote their whole life for the sacred cause of learning and spreading light over a literature that is being pushed to the background every-day, in spite of its ancient virility, have been always rare and on becoming rarer still, now, when reading and thinking have lost their charm to the growing youngsters of our country.

K. RANGASWAMI AIYANGAR,
B.A., B.L., L.T.,
Headmaster,
The Hindu Theological High School,
Sowcarpet, 21-2-35.

Pandit Swaminatha Aiyar's great and valuable services are unforgettable and Tamil Nad owes a deep debt of gratitude to him. By holding the celebration, we are not honouring the great savant so much as ourselves.

H. CHAMPION,
Director of Public Instruction, Madras,
23-2-35.

I am sorry I shall be compelled to be absent from Madras on the 6th March next. Otherwise I should have been present at the meeting at which it is proposed to present Dr. V. Swaminatha Ayyar with an address, and by my presence should have offered my humble tribute to one who is so deserving of his mother-land. Will you please convey to Dr. Swaminathan my best wishes to him on the attainment of his 81st birthday and my hopes that he will live for many years to render further service in the cause of Tamil Literature.

THE HON'BLE SIR DAVID DEVADOSS,
12, Ferozshah Road, New Delhi,
23-2-35.

Dr. Swaminatha Ayyar has done much for Tamil Literature and he deserves recognition at the hands of all who are interested in Tamil Literature.

Tamil is an ancient language having a Literature of its own long before the Aryans came down south and the elucidation of that fact will enable one to understand the history of South India. It is a pity we don't pay sufficient attention to the history of our own country. We must know the past in order to appreciate the present and to be prepared in the future.

T. S. SWAMINATHA AYYAR,
Retd. Dt. Registrar,
Mylapore, 23-2-35.

I need not say that the proposed address to the foremost Tamil scholar of India should have been presented to him much earlier on the 60th birthday. It is well stated that statues would have been erected in foreign countries to commemorate the services of men like the venerable Pandit. He would have been given the Nobel Prize if he had lived in foreign countries.

R. SIVOHAM,
Salem Town, 26-2-35.

தமிழன்னைக்கு ஐயரவர்கள் செய்துள்ள வேலையை அளவிட்டுரைக்க முடியாது. தமிழ்த்தெய்வமே இவ்வுருவெடுத்துவந்திருக்கிறதென்று கூறுவதைத் தவிர வேறு என்ன கூறுவது? இத்தகைய பெரியார் மேல்நாட்டில் தோன்றியிருப்பாரேயாகில் அம்மேல் நாட்டார் இவர் இயற்றிய ஒவ்வொரு தூலுக்கும் ஒவ்வொரு உருவச்சிலையை நாட்டியிருப்பர். ஆனால் தமிழ்நாட்டினராகிய நாம் என்ன செய்யப்போகிறோம்!

மார்ச்சுமாதம் 6-ஆம் தேதி புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஐயரவர்களுக்கு உபசாரப் பத்திரம் ஒன்றளித்தும், அவர்களுடைய உருவப்படத்தைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெற வைத்தும், அவர்கள் செய்துவரும் தூற்பதிப்புவேலைகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தும், பொருளுதவி செய்வோர் கருத்துக்கு ஒத்தபடி வேறு உசிதமான வற்றைச் செய்தும் அவர்களை இச்சமயம் பாராட்ட எண்ணியிருப்பதாக அறிக்கையில் கண்டு மகிழ்ந்தேன். அடியேனுக்குத் தோன்றியுள்ள கருத்தையும் இதுசமயம் தெரிவிக்க என்மனம் விழைகின்றது. ஐயரவர்கள் நீண்ட காலமாகத் தமிழ்ப்பேராசிரியராக இருந்த சென்னை அரசாங்கக் கல்லூரி (*Presidency College*) யின் முன்புறத்தில் கடலை நோக்கிய வண்ணம் அவரது உருவச்சிலையொன்றை நிறுவுதல்வேண்டும். தமிழ்த் தெய்வத்துக்குச் செய்யும் கைம்மாறு இதைவிட வேறு ஒன்று இருப்பதாக அடியேனுக்குத் தோன்றவில்லை.

ஆனந்த விகடன் அன்பாகக் கூறியவண்ணம், ஐயரவர்கள் தமது சுயசரிதையை எழுதுமாறு தங்களைப்போன்ற பெரியோர்கள் தூண்டவேண்டும். அதுவும் அருமைக் கலைமகளில் வளிவருமாறு செய்தால் மிகவும் மேன்மையாக விருக்கும்.

THE MUSIC ACADEMY,
Madras, 28-2-35.

We have great pleasure in communicating to you the following resolution passed by the Executive Committee of the Music Academy Madras on 18-2-1935.

"The Music Academy Madras places on record its high sense of appreciation of the valuable services rendered by Mahamahopadyaya Dr.V. Swaminatha Iyer, to the cause of Tamil Literature and music, and conveys to him its felicitations on the attainment of his 81st birthday."

Yours faithfully
(Sd) E. Krishna Iyer,
Hon. Jt. Secretary.

ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பண்டாரஸன்னிதியவர்கள், ஆதீனகர்த்தர்,
தருமபுரம் ஆதீனம், 1-3-35.

இவ்விழா எவ்வகையினும் சிறப்பாகக் கொண்டாடத்தக்கதே. நம்முடைய திருக்

கூட்டத் தம்பிரான் ஒருவரை ஷே கொண் டாட்டத்தில் பங்கு எடுத்துக்கொள்ள அனுப்புகிறோம். விழா இனிது நிறைவேற வும் ஸ்ரீமத் ஐயரவர்கள் நீடூழி காலமிருந்து பணிசெய்துவரவும் அருள் செய்யும்படி எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகிறோம்.

K. V. SUBRAHMANYA AIYAR, B. A.,
Retd. Supt. for Epigraphy,
Coimbatore. 2-3-'35.

He is one of the few sons of India that has made himself immortal by his extremely valuable contributions to the Tamil Literature and it is hard for lovers of Tamil to forget him. I had the pleasure of knowing him personally only recently when he came to Coimbatore though I knew him well enough all these years through his works. The world of scholars owe a deep debt of gratitude to him for his depth of knowledge, wealth of learning and majesty of thought and expression.

The Agent,
Samasthanam,
Udayarpalaiyam, 3-3-35.

Honoured Sir,

Your kind invitation for the ensuing 81st Birth-day celebrations for your revered self reached, and the Raja saheb is very happy to go through it.

You are the only medium between the waning Tamil Literature and the Modern times who is retaining the prestige of this language and it is the duty of every Indian to pray for your long life and prosperity.

To personally convey his best regards the Raja Saheb is herewith sending his clerk Mr. Krishnamoorthi Sastrigal with whom is sent Rs. 50-0-0, and a shawl being the Samasthana Sambhavana for your 81st Birth-day celebrations for which so many luminaries are taking interest.

May God bestow His choicest blessings on your revered self and keep you amidst us for many many long years.

DEWAN BAHADUR RAJASABHABHUSHANA
K. R. SREENIVASIENGAR,
Retired Member of Council,
Bangalore City, 4-3-35.

தாங்கள் தமிழ்நாட்டிற்கும் தமிழ்ப் பாஷைக்கும் செய்திருக்கும் பேருதவிக்குத் தங்களுக்கு எவ்விதமான நன்றியறிவு-கைம் மாறு-கௌரவம் செய்தாலும் அவை மிகவும் குறைவேயன்றி வேறில்லை. தாங்கள் நோயற்ற திடகாத்திரராய்க் குடும்பத்தில் எவ்விதமான குறைவும் கவலையுமில்லாமல் ஸந்தான ஸம் பத்துக்களை அநுபவித்துக் கொண்டும், இன் னும் மேன்மேலும் பாஷாஸேவை செய்து கொண்டும், தங்களுடைய அன்புக்குப் பாத் திரரான ஜனங்களை ஆசீர்வதித்துக்கொண்டும் "வேதநாற்பிராயநூறு" எழுந்தருளியிருக் கும்படி ஸர்வேசுவரனைப் பிரார்த்திக் கின்றேன்.

* * * *

As an old student of Mahamahopadhyaya Dr. Swaminatha Iyer and one of his most ardent admirers, it gives me great pleasure to hear of the arrangements made by the Committee formed under your distinguished Chairmanship for the celebration of his 81st Birth-day in a fitting manner. Dr. Swaminatha Iyer's services to the cause of Tamil Literature are so numerous and invaluable that no amount of honour done to him in appreciation thereof can be considered too much. Dr. Swaminatha Iyer combines in himself not only great erudition and scholarship but also such simplicity, modesty and godliness as is rather rare in these days when much inferior people are prone to make a parade of their learning and cleverness. It is in the fitness of things that the Tamil

Nad should show its appreciation of his great services to the country in the manner proposed and your Committee has laid itself under a deep debt of obligation to all Tamil lovers by the arrangements made by it in this behalf.

DEWAN BAHADUR,
T. A. RAMALINGAM CHETTIAR,
B.A., B.L., M.L.C.,
Coimbatore, 4-3-35.

All the same I offer my hearty felicitations to the revered Dr. on the auspicious occasion and pray to God that He will grant him many more years of health and strength to carry on the great work he has been doing. It is over 35 years since I first made his acquaintance. There is no more erudite scholar of Tamil learning now. We owe practically all the old Tamil Literature to him. But for his untiring work, the great store of Tamil classical works, of which we are justly proud, would have been lost. What it meant to publish works of which it was very rarely a full copy was found anywhere may well be imagined. Dr. Swaminatha Iyer's name will be remembered with love and reverence as long as Tamil speaking men and women live in this world. He has been working harder as he grew older. It was rarely that he found help and encouragement as he has always been of a retiring disposition and very modest. It will be some gratification to him that at least now people are appreciating his work. He would like nothing better than his books being read and appreciated and facilities being given for the publication of books still to be published. I hope the meeting will do something to achieve these objects.

* * * *

You know the great regard I have for your father to whom we owe the greater part of the Tamil Literature so far published. His untiring zeal and the great love he has for our mother tongue make him work even harder in spite of his advanced years and the great work he has done all these years. May God grant him long years of healthy life to carry on the noble work he has been doing is the ardent prayer of every lover of Tamil.

K. G. SEHA AIYAR,
Judge, High Court (Retd.),
Trivandrum, 4-3-35.

தங்கள் சதாபிஷேகதினம் தமிழ் நாட்டிற்கே புண்ணியதினமென்று சொல்ல வேண்டும். இன்றைத்தினம் என் சாஷ்டாங்க நமஸ்காரத்தைத் தங்கள் திருவடிகளில் செலுத்துகிறேன். தங்கள் அன்பார்ந்த ஆசீர்வாதத்தைக் கோருகிறேன்.

தமிழ்க்கலையிடம் தாங்கள் வைத்திருக்கும் சிரத்தாபக்திக்கும் பண்டைக் காலத்துத் தமிழ்நாட்டுச் சரித்திர ஆராய்ச்சிக்குத் தாங்கள் செய்திருக்கும் பேருதவிக்கும் எவ்விதந் தான் உங்களைப் புகழ்வது! உங்களிடம் நன்றி கூறுவது! எல்லாம்வல்ல ஈசன் தங்களுக்கு இன்னம் பல்லாண்டு அருளளிப்பாராக.

RAO BAHADUR P. V. SESHU AIYAR,
I.E.S. (Retd.),
(Camp) Bangalore City, 4-3-35.

Your father has worked very hard in the cause of Tamil against many difficulties and disadvantages and has rightly earned the several titles he has received from the Government, the University and Matadhipathis etc.

Friends like me who have known him intimately know full well how strenuously and against odds he has been working. More than that we appreciate him and have a great regard for him for his amiable good nature. Very generous and courteous towards

all he came in contact with; and he has been deservedly revered as a 'Guru'.

Rao Sahib
V. P. Subramania Mudaliar, G.B.V.C.,
Vellakal, 4-3-'35.

மேன்மேலும் லோகோபகாரமாகத் தாங்கள் தமிழ் வளர்ப்பு முயற்சி தளர்வின்றிச் செய்துவரும்வண்ணம் தங்களுக்கு அரோகதிடகாத்திரமும் பூர்ணயுசும் அருளும்படி எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

A. S. Muthiah Mudaliar,
Lecturer in Tamil, College of Arts,
Trivandrum, 4-3-35.

அன்புமறிவுமாற்றலுமமைந்த அண்ணலாகிய மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கட்கு 80-ஆம் ஆண்டு விழாவைச் சிறப்புடன் நடத்தவேண்டுவது இன்றியமையாததே. நேரில் வந்து கலந்து கொள்ள இயலாததைப்பற்றிப் பெரிதும் வருந்துகிறேன். இத்தகைய பெரியார் நந்தமிழ்த்தாய்க்குத் தொண்டுசெய்த முறை பாராட்டத்தகுந்தது.

"செயற்கரிய செய்வர் பெரியர்" என்ற மறைமொழிக்குச் சான்றுயமைந்து விளங்குகின்றனர். தமிழ் மகனைப் பிறந்த ஒவ்வொருவரும் இம்மாண்பு வாய்ந்த பெருந்தகையாளரைப் பாராட்டவேண்டியது அவர் தங் கடமையாகும். தமிழ்த்தாய் இந்நிலைமையில் நிற்கக் காரணம் இப்பெரியாராற்றிய தொண்டே. இன்னவரின் உருவப்படத்தைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நிலைபெறச் செய்வது பெரிதும் பொருத்தமுடையதே. இதுமாத்திரம் போதாது என்பது என் தாழ்ந்த அபிப்பிராயம். இப்பெரியார் பேரால் சர்வகலாசாலை பிரைஸ் ஒன்று ஏற்படுத்துவது சிறந்ததாகும்.

A. Chidambaranatha Chettiar,
B.A. (Hons.),
Annamalai Nagar, 4th March, 1935.

பரந்த அறிவும் விரிந்த நோக்கமும் ஆன்ற கேள்வியும் அடங்கிய கொள்கையுமுடைய மஹாமஹோபாத்தியாய Dr. V. சாமிநாதையரவர்களது 81-ஆவது ஆண்டு நிறைவு விழா இனிது நிறைவேறுமாறு அருள்புரிய எல்லாம் வல்ல முழுமுதலை வழுத்துகின்றேன்.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்க்கு ஒப்பாகத் தேர்ந்த அறிவாளிகளால் மதிக்கப்பட்டு வருபவரும் தமிழன்னைக்கு அரிய பெரிய சேவை செய்துள்ளவருமாகிய அப்பெரியார் நீண்ட நல்வாழ்வும் உடனலமும் கடவுளருளும் பெற்றுச் சிறப்பாராக!

சிவமயம்

அண்ணாமலையார் துணை.

அ. மு. ப. அ. மு. முருகப்பசெட்டியார்,
நடனவிலாசம், பள்ளத்தூர்.

4-3-35.

பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்தருளிய பண்பினையே!

நினது உயர்ந்த வாழ்நாட்பணியே நந்தமிழன்னையின் தலையணிமணியாகும். மக்கள் மறதியாங்கடல் கடந்து மாண்புகொள் தமிழ்நிலைகை மணந்து வாழ நின் உளம், மொழி, உடல்கொண்டு உயிரிய பேரணவகுத்தருளிய உழைப்பினை உலகம் என்றும் போற்றும்.

தமிழரின் தலைசிறந்த வாழ்க்கையோய்!

இவ்வுலகில் நீ தோன்றிய நன்னாளே தமிழ்த்தாய் தன் மக்களைத் தழுவியருளும் தலைநாளாகும். அன்றினும் இன்றே தமிழன்னை நின்முகம்கொண்டு எம்முகம் நோக்கும் இனிய நாள். இந்நாள் நின்பணியால் வெளிவந்துள்ள நிகரில்லாத் தண்டமிழ்நூல்களாம் பல்கரங்களால் நம்தமிழன்னை நலமைத் தழுவித் தண்ணருள்செய்யும் பேற்றைப் பெற்றேம்; என்றும் பெறுவோம்.

நினது எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா இன்று யாவர்க்கும் இணையில் மகிழ்வை அளிக்கின்றது. நின் வாழ்வு தமிழன்னையின் வாழ்வேயாகும். தமிழ்மக்களின் வாழ்வேயாகும்; தரணியோர் வாழ்வுமாகும். எல்லாம் வல்ல இறைவன் உமக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும் அளிப்பானாகுக.

N. KRISHNASWAMY,
Sub-Registrar,
Ambasamudram, 4-3-35.

He is the gratest gentleman of scholarship and character in Tamil Nad and an ornament to our community. May he live long to guide us all in the right path and to spread the Tamil Literature more and more for which he has done ever so much.

LADY RAMANATHAN, JAFFNA.
(Camp) Mylapore, 5-3-35.

I feel so delighted to see him still working with enthusiasm at his Ola manuscripts. We are most fortunate to be permitted to behold this beautiful soul ripe in knowledge and experience, giving a lead to all of us not to retire into comfortable ease as our years increase, but to continue even more vigorously the work we have undertaken. His mind is clear, his outlook bright with confidence, the events of the past are as fresh in his memory as if they occurred only yesterday. His presence has added grace and culture to the present age and his contribution to classical Thamil Literature will long be treasured by all Thamil scholars.

I pray that he may be granted many years of health, prosperity and peace to continue the work to which he has devoted his life with such infinite patience and perseverance and with such elegant and lasting results.

SIR DR. R. VENKATARATNAM,
(formerly Vice-chancellor,
Madras University),
Cocanada, 5-3-'35.

My dear sir,

I feel grateful for the kind invitation to the meeting to be held to-morrow to celebrate the eighty-first birthday of the honored Mahamahopadyaya Dr. V. Swaminatha Aiyar Avargal. Requesting and trusting to be excused inability to be present, I beg to join with his numerous admirers in tendering heartiest felicitations on the auspicious occasion and soliciting Heaven's peace and benedictions unto this noble votary of culture. It has been given to him to render unto his Creator the homage—the offering—of a life consecrated to the dissemination of sound learning; and while very justly acclaimed with high academic distinctions, he has enshrined himself, by both spotless life and selfless tasks, in the hearts of numberless seekers after the light which kindles the past into a beacon-light for the future. I request you to tender my very respectful regards to the venerable gentleman.

N. M. VENKATASWAMI NATTAR,
Lecturer in Tamil,
Annamalai University,
Annamalai Nagar, 5-3-35.

தமிழ்நாட்டிலுள்ள சங்கங்களாலும், வேறு புலவர் பலராலும் செய்யலாகாத அரியபணிகளை ஐயரவர்கள் சலியாத ஊக்கமும் உழைப்புங் கொண்டு தனியே அமைதியாகச் செய்து முடித்திருக்கும் திறத்தினை யாவர்தாம் வியந்துபோற்றுதிருத்தல் கூடும். ஈடெடுப்பில்லாத தமிழ்மொழியின் பீடு வெளிப்படுதற்குக் காரணமாயுள்ள பெரியாரின் (81-ஆவது) பிறப்புத்திருநாளைத் தமிழகத்திலுள்ள பல்திறத்த பெருமக்களும் ஒருங்கு கூடிக் கொண்டாடிப் போற்றும் இவ்வினிய செய்கையானது தமிழ்நாட்டின் எதிர்கால மேன்மைக்குச் சுபசூசகமாகின்றது.

தமிழன்னையின் தவப்பெரும் புதல்வரும் தங்கள் தவத்தந்தையாருமாகிய புலவர் பெருமான் பிரம்மஸ்ரீ ஐயரவர்களின் சதாபிஷேக முகூர்த்தமானது தமிழ்மக்களனைவர்க்கும் அவரவர் இல்லத்தில் நிகழும் மங்கலவிழாப் போன்று மகிழ்ச்சி விளைப்ப தொன்றாகும்.

ஐயரவர்கள் தாம் அடைந்துள்ள பெருமைக்கும் புகழுக்கும் காரணமாக வாணாள் முழுதும் சலியாத உழைப்பும் ஊக்கமும் கொண்டு செய்துபோந்திருக்கிற தமிழ்ப்பணிகளையும், அவற்றால் தமிழகம் அடைந்துள்ள எல்லையில்லாத நன்மைகளையும் தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் இந்நன்னாளில் நினைவுகூர்ந்து போற்றுங் கடப்பாடுடையராவர்.

ஆ. கார்மேகக்கோனார்,
தமிழாசிரியர், மதுரை,
அமெரிக்கன் காலேஜ். 5-3-'35.

தமிழ்மக்களின் பெருந்தவப்பயனாக விளங்கும் மாண்பு மிக்க மகாமகோபாத்தியாயரவர்களின் சதாபிஷேக முகூர்த்தப்பத்திரிகை வரப்பெற்றுப் பெருமகிழ்வெய்தினேன்.

சதாபிஷேகம் மங்களகரமாகப் பூர்த்தியுறவும், தற்கால மகத்துவமிக்க அகத்தியனாராக விளங்கும் ஐயரவர்களது வாழ்நாள் வையையெக்கர் மணலினும் பலவாகப் பல்கித் தமிழ்ப் பேரன்னைக்கு இன்னும் அவர்கள் அவளது பண்டையணிகலன்களைப் புதுக்கியணிந்து தமிழ்மக்களை மகிழ்வுறுத்தவும் தமிழ்த்தாயின் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

L. OLAGANATHA PILLAI
Senior Professor of Tamil (Retd).,
Raja's College, Tiruvadi,
Tanjore, 5-3-35.

தமிழ்த்தாயின் அருமந்த புதல்வ! செல்வாய்ப்பட்டழிந்து மண்ணிற்புகாது, ஏடுகளைச் சிரமம் பாராட்டாது அல்லும் பகலும் ஆராய்ந்து அச்சிட்டு உலகிற்கீத்துவக்கும் வள்ளியோய்! நின்போல விடா முயற்சியுடன் தமிழ்க்கு ஆக்கம் தேடினர் உலகில் எவர்?

முகத்தானமர்ந்து நோக்கி அகத்தானும் இன்சொல்லுரைக்கும் அண்ணல்! திருவடிக்கண் வணக்கம் மிகப் பல.

T. V. SADASIVA PANDARATHAR,
Tamil Pandit,
Vanadurai High School,
Kumbakonam, 5-3-35.

தமிழ்த்தாயின் அருமை பெருமைகளையும் தமிழ்மக்களின் சிறப்பையும் இவ்வுலகம் நன்குணருமாறு செய்தருளிய புண்ணிய சீலர்கள் தாங்களே என்பது யாவரும் உணர்ந்துள்ள உண்மையாகும்.

தமிழ்த்தாய்க்கு உரிய அரிய பணிகள் பல வற்றைப் புரிந்து தாங்கள் நீடுவாழுமாறு என் குலதெய்வமாகிய புறம்பயத்துறை பெருமான் திருவடிகளைப் பன்முறை வணங்குகின்றேன.

கவிராஜ பண்டிதர்
ரா. திம்மப்ப ஐயர்,
தமிழ்விரிவுரையாளர்,
நகரபரிபாலனக்கல்லூரி, சேலம்.
5-3-35.

.....சங்கநூல்களையும் பிற அரிய தமிழ் நூல்களையும் பழைய உரைகளுடனும், வேண்டிய குறிப்புரைகளுடனும் செவ்விதினச்சிடுதற்கென்றே அவதாரஞ் செய்த தவப்பெரியாரும், சங்கநூற்சக்கரவர்த்தியுமாகிய தங்களது தந்தையார் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி பிரம்மஸ்ரீ (டாக்டர்) உ. வே. சாமிநாத ஐயரவர்களது சதாபிஷேகத் திருவிழாவின் அழைப்புப் பத்திரமும் பிறிதொரு அழைப்புத்தாளும் கிடைக்கப் பெற்று மனமகிழ்கின்றேன். சிற்சில அசௌகரியங்களால் இச்சமயம் அவண்வர இயலாமைக்கு வருந்துகின்றேன். ஐயரவர்களது சங்கநூற்பதிப்புக்கள் இன்னும் எத்துணையோ பதவுரை விளக்கவுரைக் குறிப்புக்களுடன் பாமரரும் எளிதிலுணரும்படி பதிப்பெய்தி மேன்மையுறும்படி எல்லாம் வல்ல கருணையம்பெருமான் முருகன்றிருவருளே யனவரதமும் சிந்தித்துவந்திக்கின்றேன். தமிழ்ப்பணியின்பொருட்டே ஐயரவர்கள் நீடுழிவாழத் தமிழ்த்தெய்வத்தை மனமாரப் போற்றுகின்றேன்.....

DIWAN BAHADUR P. SUBBIAH MUDALAR
Retd. Dt. Judge, Nalladai, 5-3-35.

தமிழில் அபிமானம் குன்றிய காலத்தில், அதன் அரிய பெருமையை விளக்கிய தங்கள் கல்வித்திறனைத் தங்கள் காலத்திலேயே பெரியோர்கள் உணர்ந்து தங்களைப் பலவிதத்திலும் கனப்படுத்திக்கொண்டு வருவது தங்களுக்கும் மற்றத் தமிழ்நூலபிமானிகளுக்கும் மிகவும் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது.

தங்கள் ஆசிரியர் மகாவித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களின் மேலான இயல்புகளும் புலமைத்திறனும் என்றும் நிலைத்திருக்குமாறு தாங்கள் அவர்கள் சரித்திரத்தை உண்மையான மாணாக்க விசுவாசத்துடன் எழுதித் தமிழ் உலகத்துக்குப் பயன் அளித்திருக்கிறது போலத் தங்கள் சரித்திரத்தையும் தங்கள் மாணாக்கர்களில் தக்கவர்கள் எழுதித் தாங்கள் தமிழ்நாட்டுக்குச் செய்திருக்கும் பேருதவியை யாருக்கும் என்றும் நன்று விளங்கும்படி செய்வார்களென்று நம்புகிறேன்.

N. PARAMASIVA AYYAR, B.A., L.T.,
Head-Master,
Tiruvavaduthurai Adheenam High School,
Tiruvadamaruthur, 5-3-'35.

தமிழுலகனைத்தும் தணியாமகிழ்க்கடல் சூழ்ந்தும் தன்னிகரில் நன்னிலையாகிய தங்கள் தந்தையாரவர்களின் சதாபிஷேகப் பெருவிழாநாளில் தங்களுடனிருந்து இன்புறுதற்கியலாவிடினும் அவ்வின்பத்தை இங்கிருந்தே யெய்தும் பெருநலமுடையேன்.

தாங்கள் தங்கள் தந்தையார் அவர்களின் விழா நாளென்று கொள்ளும் அதே மகிழ்ச்சியைத் தமிழுலகெலாம் கொள்ளும்படியும், அவர்கள் தாம் இன்புறுவதில் உலகு இன்புறும்படியும் நிகழ்கின்ற பெருந்தவத்தினராதலின், அவர்களுடைய தீர்க்க திடவாழ்க்கை உலகத்திற்கே உபகாரமாய் உள்ளதாகும். ஆகையால் உலகுவிரும்பும் பெரும் பொருளாயுள்ள ஐயரவர்களுக்கு ஸ்திரதேக அரோகவாழ்க்கையை எல்லாம் வல்ல உமையொருபாகத்தீசன் அருளும்படி அவனது அணிபொற்றிருவடியைத் திரிகரணங்களாலும் சிந்தித்துத் துதித்து வணங்குகின்றேன்.

வ. மு. இரத்தினேசுவரையர்,
தமிழ்ப்பண்டிதர்,
ஆவினிப்பட்டி, 5-3-35.

.....உயர்தனிச் செம்மொழியாகிய தமிழ்மொழிப் பெரும்புலவராகிய தங்கள் அரிய வாழ்நாள் மிளிர்வடையவும், தமிழ் உலகம் சிறப்படையவும், மிக்க உழைப்புள்ள தாங்கள் செய்த உபகாரம் என் போன்ற சிற்றறிவுடையவர்களால் வியக்கும்பான்மையனவன்று!.....

டாக்டர் டி. வி. எஸ். சாஸ்திரி,
ஆசிரியர், கலிராட்டை, திருச்சி, 5-3-'35.

.....தமிழ் இலக்கியத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் அரிய தொண்டாற்றிய தங்கள் வாழ்நாட்கள், இன்னும் பல்லாண்டுகள் விருத்தியடைய வேண்டுமென்றும், அவை மனமகிழ்ச்சியுடனிருத்தல் வேண்டுமென்றும் இன்று பிரார்த்திக்கும் பல தமிழன்பர்களுடன், முழுமனதுடன் கலந்துகொள்ளும் தங்கள் வணக்கமுள்ள சீடன்.

ப. சி. கந்தசாமி பிள்ளை,
பாலக்காடு, 5-3-35.

.....தங்கள் சதாபிஷேக விசேஷத்தைத் தமிழ்நாடெங்கும் ஒருதிருவிழாவாகக்கொண்டாடுவார்களென்று நம்புகிறேன். ஏனெனில் தமிழ்ப்பாஷையின் மகிமையைத் தாங்கள் நாடெங்கும் பரவும்படி அரிய பெரியகாவியங்களை அருமைபெருமை விளங்கப் பதிப்பித்தது தானே.....

Vidwan N. T. TIRUVENKATACHARI, B.A.,
Erode, 5-3-35.

It is quite befitting to honour such a great man as Srimath Swaminatha Iyer Avl., who had been the chief cause for bringing into light the great classics of the golden age of the Tamils.

* * * * *

தங்களுடைய அருமை பெருமைகளை அறிவித்தற்குத் தாங்கள் பதிப்பித்த நூல்களில் ஒரொன்று போதாதோ? மேனாட்டவர்களின் வழக்கப்படி இவ்விழாவைத் தங்களுடைய தமிழாராய்ச்சிக்கு வைரவிழா (Diamond Jubilee) என்னலாம். தமிழ்ப்பிச்சையளித்த தயாநிதியாகிய தங்களைப்பாராட்டத் தமிழுலகம் இப்பொழுதாவது முன்வந்ததுபாராட்டத்தக்கதே. வாசாகைங்கர்யமாகப் போகாமல் கிழியளித்தல், தங்கள் பிரசுரங்களை மேன்மேலும் வாங்கிப் பயிறல் முதலியனவும் செய்வார்களாயின் மிகவும் நலமாக இருக்கும்.

Rev. H. A. POPLEY, B.A.
London Mission Community
Training School,
Erode, S. India, 6-3-35.

.....தாங்கள் 81 ஆண்டு நிறைவு பெற்ற இந்தச் சுபதினத்தில் என் அன்பான வந்தனமும் வாழ்த்துதலும் தங்களுக்குத் தெரிவிக்குமாறு கோருகின்றேன். தாங்கள் கடந்த அறுபது வருஷகாலமாய்த் தமிழிலக்கிய வானத்தில் பேரொளியை வீசும் ஞான சூரியனாகவே யிருந்து விளங்குகிறீர்கள். ஆராய்ச்சிக்குரிய தங்களுடைய பேரவாவும் திட்டவட்டமாய் அறிந்துணர்ந்து கொள்ள வேண்டும் என்ற தங்களுடைய அரிய பெரிய முயற்சிகளும் யாவரும் மிகவும் புகழத்தக்கவை. தமிழகத்தின் அபிமானிகளுக்கும், தேசாபிமானிகளுக்கும், தங்கள் பெயர் மிகவும் அருமையானது. தாங்கள் வாழ்ந்தது தமிழும் வாழ்ந்தது. தங்கள் சுகக்ஷேமத்தை அதிகம் சுருதி இந்த அன்பான கடிதம் எழுதியனுப்பியுள்ளேன்.....

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,
அமைச்சர்,
சென்னைமாகாணத் தமிழ்ச்சங்கம்,
திருநெல்வேலி,
தங்கள்: நான்குநேரி, 6-3-35.

தாங்கள் தமிழ்த்தாய்க்கு ஆற்றி யிருக்கும் திருத்தொண்டுகள் அளவற்றன. இன்னும் தாங்கள் செய்யத் துணிந்திருக்கும் சீரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற நீண்ட வாழ்நாளும், நோயற்ற வாழ்க்கையும், குன்றா ஊக்கமும் தங்களுக்குத் தந்தருள எல்லாம் வல்ல இறையவர் பொன்னடி மலரிணைகளைப் போற்றுகின்றோம்.

சு. ஹரிஹரையர்,
தமிழாசிரியர், மதுரை,
மதுரைத்தமிழ்ச்சங்கம். 6-3-35.

.....ஐயரவர்கள் பல்லாண்டுகளாகத் தமிழ்க்கடலைக் கடைந்து அமுதமயமான தொன்னூல்களை ஆராய்ந்து தமிழுலகிற்கு விருந்து செய்து வரும் பெருமை சூர்ய சந்திரருள்ளளவும் உலகில் தமிழ்மக்களாற் கொண்டாடப்பெறும் என்பது ஒரு தலையாகும். அத்தகைய மஹோபகாரியாகிய ஸ்ரீமத். ஐயரவர்களுக்கு அரசாங்கத்தார் அளித்த மஹாமஹோபாத்தியாய விருதும், சென்னைப் பல்கலைக்கழகத்தார் அளித்த டாக்டர் விருதும் அத்வைத மதஸ்தாபகராயெழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீமத்சங்கராசார்யசுவாமிகள் அருளிய தாக்ஷிண்யகலாநிதி எனும் பெருஞ்சிறப்பும் தமிழுலகம் உள்ளங் குளிர ஏற்று ஆனந்திக்கும் உண்மைச் சிறப்புக்களாம். மேலும் அவர்களின் பெருமையை யென்போல்வார் எடுத்துரைக்கப் புகுவது பொருத்தமிலதாகும்.....

S. P. SRINIVASA RAU,
Salem, 5-3-35.

I wish your revered father many years of happy life—at least 19 years more to complete 100 so that his longevity of life may well serve to exemplify the truth of what is contained in Srutis viz. 'शतायुः पुरुषः' "sathayuf purushaha" and of what is stated by Bharthruhari viz.('आयुर्वर्षशत नृणां परिमितम्') 'Ayurvarshasatham nrunam parimitham'.

தி. கி. சோ. பஞ்சாபகேசன்,
திருவருள்நிலையம், திருவிடைமருதூர்,
பவஹ மாசிமீ 25உ (ட-3-35)

கலைபயிலறிவு நிரம்பி உலகியலு முற்றவறிந்து ஆன்றமைந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களாகிய உயர்தனிச்செம்மலார் ஐயா அவர்கள் திருவடிகட்கு வணக்கம் பலப்பல.

நந்தமிழ்மொழிவளர்ச்சி கருதிச் சென்ற 80 ஆண்டுகளாகத் தாங்கள் ஆற்றிவரும் அரும்பெருந் தொண்டுகள் அளவிடற்கரியன. செந்தமிழன்னையின் தவப்பெரும் புதல்வராம் திருவினரும், தமிழ்நாட்டுப் பேரறிஞர்தம் தலைமைப்புலமை பூண்டவர்களுமாகிய தங்கள் புலமையும் ஒழுக்கமும் அன்பும் தமிழ் உலகிற்கும் சைவஉலகிற்கும் எல்லாவகையாலும் பயன்பட்டுவரத் தங்கட்கு உடலுறுதியையும், நீண்ட ஆயுளையும் உதவியருளப் பிறைமுடி தரித்த பெம்மானருளிய நறைவளர் கடம்ப நறுமணத்தெரியல் குறைவறக் கொண்ட குமரன் திருவடிகளை இடையறாது நிறைஞ்சுகின்றேன்.

S. NARASIMHA AIYAR,
Manager,
Sree Arunachaleswarar Devasthanam,
Tiruvannamalai, 9th March, 1935.

.....Let me also join the chorus of well deserved praise that has been showered upon him by the various notables and public associations for his Herculean labours in the cause of Tamil Literature and may he in return bestow his blessings on us to emulate his notable example of single minded devotion to work and duty.....

THIRUVARANGA NEELAMBIGAI,
Palamcottah, 13-3-1935.

.....தங்கள் எண்பதாம் ஆண்டு விழா அறிக்கை உரிய பொழுதே கிடைக்கப்பெற்றேன். சில இடையூறுகளால் உடனே விடையளிக்கக்கூடாமல் நேர்ந்துவிட்டது. சங்க நூல்களைப் பயிலும்போதெல்லாம் தங்கள் பெருமுயற்சியை யுன்னி மகிழாதிருப்பதில்லை. அரிய தொண்டுசெய்தார்க்குத் தமிழுலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டே தீரும். பல்லாண்டு தாங்கள் மனவொருமையோடு செய்துவந்த அரும்பணிக்கு எம்போன்றூர் யாது கைம்மாறு செய்யவல்லோம்.....

SIR R. VENKATARATNAM, D. Litt. etc.
Cocanada, March, 18-3-35.

.....I value your spotless life and selfless devotion to learning as a sacred offering to God. You have, with stintless zeal, laboured, during half-a-century, to cast a vivid light upon the dim past of Dravidian India and thus to convert the 'stored past' into a guiding beacon for the future. May the rich worth of your life-work, endure like a precious mine, for generations to come!

சதாபிஷேகக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள்

சென்னை

தமிழ்மகள் திருநாள்

மார்ச்சுமீ 6-ஆம் தேதி தமிழ்நாடு முழுவதும் தமிழ்மயமாக விளங்கியது. தமிழ் மகட்கு முடிசூட்டிய பெரியாருடைய சதாபிஷேகத் திருவிழா, தமிழ்மக்களால் மிகச் சிறப்பாகப் பலவிடங்களிற் கொண்டாடப் பட்டதென்பதைப் பத்திரிகைகள் வாயிலாக அறிந்து மகிழ்கிறோம்.

அன்று, சென்னைமாநகரில் நிகழ்ந்த கொண்டாட்டம் தனிச்சிறப்புடையதாக இருந்தது. ஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய வாஸஸ்தானமாகிய தியாகராஜ விலாஸத்தில் 5-ஆம் தேதிமுதல் வைதிகமுறைப்படி சதாபிஷேக உத்ஸவத்திற்குரியன நடைபெற்றன. 6-ஆம் தேதி காலையில் தமிழ்ப் பெரியாருடைய திவ்ய தரிசனத்தைக் காணவேண்டிப் பல வகையான அன்பர்களும் கூடியிருந்தனர். பல புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் நடந்தபின்னர், பலவுத்தமான தானங்கள் வழங்கப் பெற்றன. ஸ்ரீ ஐயரவர்களுடைய குமாரர் ஸ்ரீமான் கலியாணசுந்தர ஐயரவர்கள் தம் முடைய கடமையை நன்குணர்ந்து செய்ய வேண்டியவற்றைக் குறைவின்றி மிகவும் சிரத்தையோடு செய்வித்தனர். இத்தகைய பெரிய விசேஷம் நடைபெறுதல் அருமையாதலின் இதனைப் பார்க்கவேண்டு மென்னும் அவாவினால் தூண்டப்பெற்றுப் பல அன்பர்கள் வந்து கூடினர்.

அன்று மாலை ஸைனெட் தோட்டத்தில் ஸ்ரீமான் கல்யாணசுந்தர ஐயரவர்களால் யாவருக்கும் தேநீர் விருந்து அளிக்கப்பட்டது. பிறகு ஸைனெட் மண்டபத்தில் பாராட்டுக்கொண்டாட்டம் நடைபெற்றது.

இவ்வளவு சிறந்த அமைதியுள்ள கூட்டத்தை இதுவரையில் கண்டதில்லை என்பதே எங்கும் பேச்சாக இருந்தது. நகரத்திலுள்ள பிரமுகர்களிற் பெரும்பாலோரும் தமிழ்ப்புலவர்களும் மாணக்கர்களும் பிறரும் இந்தக்கூட்டத்திற் காணப்பட்டனர். வெளியூரிலிருந்தும் பலர் வந்திருந்தனர். கூட்டத்

திற்கு ஸர் மஹமத் உஸ்மான் ஸாஹிப் பகதூர் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஐயரவர்களுக்குப் பல உபசாரபத்திரங்கள் படித்து அளிக்கப்பட்டன.

முதலில் நண்பர்களும் அபிமானிகளும் அளித்த உபசாரபத்திரத்தை ஸ்ரீமான் சிவ ராமசேதுப் பிள்ளையவர்கள் வாசித்தளித் தார். அந்தப் பத்திரம் பனையேட்டில் எழுதப்பெற்றிருந்தது; இரண்டு தந்தயானை யால் தாங்கப்பெற்ற ஒரு வெள்ளிக்குழாயில் வைத்து அளிக்கப்பட்டது.

பிறகு கொண்டாட்ட ஸபையின் சார்பில் கனம் பி. டி. ராஜன் அவர்கள் 3001 ரூபாய்க் குரிய உண்டியலடங்கிய வெள்ளிப் பை யொன்றை ஐயரவர்களிடம் சேர்ப்பித்தார். பொதுமக்கள் பலரும் அன்போடளித்த நிதியிலிருந்து இத்தொகை வழங்கப் பெற் றது. பின்பு சென்னைப் பண்டிதசங்கத்தாரு டைய உபசாரபத்திரத்தை ஸ்ரீமான் அருண கிரிநாதர் படித்தனர்; அஃது ஓர் அழகிய வெள்ளிப்பேழையில் வைத்து அளிக்கப் பெற்றது. அப்பால் சென்னை ஸம்ஸ்கிருத ஸேவாஸமிதியாருடைய வடமொழி அபிநந் தனபத்திரம் ஒன்று ஸ்ரீமான் மகாமகோபாத் தியாய எஸ். குப்புசாமி சாஸ்திரிகளவர்களாற் படிக்கப் பெற்று ஒரு தந்தப் பேழையில் வைத்துக் கொடுக்கப்பட்டது. பின்பு வித்வச் சிரோமணி மண்டலத்தாரால் வடமொழி அபிநந்தனபத்திரமொன்றும் தமிழ் வாழ்த் துச்செய்யுள் இரண்டும் படித்தளிக்கப்பட் டன. சென்னைப் புத்தகாலயப் பிரசாரசங் கத்தின் சார்பாக ஆங்கிலத்தில் கையால் எழு தப்பெற்றிருந்த உபசாரபத்திரத்தை ஸ்ரீ மான் ஏ. ராமசாமி முதலியாரவர்கள் வாசித் தளித்தனர். அந்தப் பத்திரம் மிக அழகாக எழுதப்பட்டிருந்தது. அதன் ஓரங்களில் ஐயரவர்களாற் பதிப்பிக்கப்பெற்ற நூற் பெயர்கள் காலமுறைப்படி வரிசையாகத் தொங்கல் மாலையைப்போல எழுதப்பட்டி ருந்தன. அப்பத்திரம் ஒரு வெள்ளித் தட் டில் வைத்துத் தரப்பட்டது. தமிழ்ப்பேரக ராதி நிர்வாகசபையார் உபசாரச் செய்யுளும், வண்ணத் தமிழபிவிருத்திக் கழகத்தாரின் செய்யுளும், கும்பகோணம் காலேஜ் பழைய மாணவர் சங்கத்தார், கும்பகோணம் காலேஜ் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆகியவர்க ளுடைய பத்திரங்களும் பிறகு வாசிக்கப்பட் டன. பின் கூறிய உபசாரபத்திரத்தில், ஐய ரவர்கள் தம் சுய சரிதையை எழுதி வெளி யிடவேண்டும் என்ற வேண்டுகோள் காணப் படுகிறது. அப்பால் சென்னைப் பிரஸி டென்ஸி காலேஜ் தமிழ்ச்சங்கமாணவர்களது உபசாரபத்திரம் ஓர் அழகிய தந்தக்குழா யில் வைத்து வழங்கப்பட்டது. லயோலா காலேஜ், சென்னைக் கவர்ன்மெண்டு மகமதி யர் காலேஜ், பச்சையப்பன் காலேஜ் என்ப வற்றிலுள்ள தமிழ்மாணவர்கள் சார்பாக மூன்று பத்திரங்கள் பின்னர் வாசித்து வழங் கப்பட்டன.

அதன்பின் நண்பர்கள் வழங்கிய ஸம்மா னங்கள் அளிக்கப்பட்டன. ஸ்ரீ ஐயரவர்க ளெழுதியுள்ள ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்களின் சரித்திரத்தைப் படித்து, ஆசிரிய ருக்கும் மாணவருக்குமிடையே உள்ள சிறந்த தொடர்புக்கு அந்நூல் இணையற்ற உதாரண மாகவிளங்குகின்றதென்பதை அறிந்து அதன் பால் ஈடுபட்டு, ஸ்ரீ ஐயரவர்களுடைய வர லாறு அதனினும் பன்மடங்கு உயரிய செய்தி களையும் தமிழ்மகளின் சரித்திரத்தையும் வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு வழிகாட்டி யாக நின்று நிலவுமென்ற எண்ணந்தூண்ட அச்சரித்திரத்தை எழுதி வெளியிடும் பொருட்டு ஓர் அபிமானி, கொண்டாட்ட ஸபையினருக்கு 501 ரூ. அனுப்பியிருந்தனர். அது பிறகு வழங்கப்பட்டது. அவ்வபிமானி தம் பெயரை வெளியிட விரும்பவில்லை. இது மிகவும் அருமையான செயலென்பதை நாம் கூறவேண்டியதில்லை. தமிழர்களிடையே ஐயர வர்களுடைய உழைப்பு வியக்கத்தக்க உணர்ச் சியை உண்டாக்கியிருக்கிறதென்பதற்கு இவ் வபிமானியின் செயலும் ஒரு சான்றாகும்.

பின், ஸ்ரீ ஐயரவர்கள் எழுந்து பின்வரு மாறு பேசினர்கள்:—

இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்.

அக்கிராசனாதிபதி யவர்களே! பெண்மணி களே! அன்பர்களே!

என்னுடைய 81-ஆவது ஜன்ம தினமாகிய இன்று உங்களெல்லோரையும் கண்டு உங்க ளுடைய அன்பு நிறைந்த உபசாரங்களைப் பெறவைத்த இறைவன் திருவருளை வழுத்து கின்றேன்.

இப்பொழுது வாசிக்கப் பெற்ற உபசார பத்திரங்களில் என்னை அளவுக்குமேலே புகழ்ந்திருக்கிறீர்கள். அவை உங்களுடைய பேரன்பை விளக்குகின்றன. அவற்றில் என் பால் உள்ளனவாகச் சொல்லப்பட்ட இயல்பு கள் யாவும் என்னிடத்தில் இல்லையாயினும் இன்னபடி இருப்பது நலம் என்ற எண் ணத்தை அவை உண்டாக்குகின்றன. என்னு டைய இளம்பிராயந் தொடங்கித் தமிழ்த் தாயின் திருப்பணியை எனக்குத் தெரிந்த வரையில் செய்து வருகிறேன். என து உழைப்பு உங்களுக்கெல்லாம் உவப்பைத் தந்திருக்கின்றதென்பதை இந்த உபசார பத்திரங்கள் மூலமாக உணர்ந்து என் உள்ளம் நிறைவடைந்து குளிர்கின்றது. நீங்கள் அளித்த நிதி முதலியவைகளைத் தமிழ் அன் னையின் அருள்வடிவென்றே எண்ணுகிறேன். தமிழ் நாட்டின் பல வேறிடங்களிலிருந்து பல வகையினரும் சேர்ந்து அளிப்பன வாத லின், இவை தமிழ்நாட்டார் என்பாற் கொண்ட பேரன்புக்கும் தமிழபிமானத்திற் கும் அடையாளங்களாக இருக்கின்றன.

இப்பொழுது என்னுடைய மனம் சந் தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கின்றது. இறைவன் தரிசனம் அளித்ததைச் சொல் லும்போது, 'சொல்லுவ தறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி' என்று சேக்கி ழார் கூறியது நினைவுக்கு வருகிறது. மீண் டும் இளமை வந்தாற்போன்ற ஊக்கம் உண் டாகிறது. இன்னும் நான் செய்ய எண்ணி யிருக்கும் பல தமிழ்ப்பணிகளும் இடையூ றின்றி நிறைவேறும், தமிழர் ஆதரவு கிடைக் கும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

இந்தக் கொண்டாட்டத்தை நடத்த முன் வந்த நிர்வாக சபையார்பால் நான் மிக்க நன்றியறிவுடையேன். இந்த ஸந்தர்ப் பத்தில் தமிழ் நாட்டாருடைய நல்லன்பை நான் நன்கு அறிந்து ஊக்கம் பெற அவர்கள் முயற்சி உபகாரமாயிற்று. நிதிக்கு உதவி செய்தவர்களுக்கும், உபசார பத்திரங்கள் வாசித்தளித்த ஸ்தாபனங்களுக்கும், அன்பர் களுக்கும், பத்திரிகைகளில் என்னைப் பாராட்டி எழுதிய பத்திரிகாசிரியர்களுக்கும், பிற அன்பர்களுக்கும் என் நன்றியறிவைத் தெரிவிப்பதையன்றி வேறு என் செய்ய வல்லேன்!

இவ்வளவு உபசாரத்திற்கும் நான் ஒரு வனே உரியவனல்லன். என் இளமை தொடங்கி எனக்குப் பாடம் சொல்லி வந்த ஆசிரியர்களுக்கும் அவ்வப்போது என்னை ஆதரித்து வந்தவர்களுக்கும் என்னுடைய பதிப்புக்களுக்கு ஏடுதருதல் முதலிய பல வகை உதவிகளைச் செய்தவர்களுக்கும் உட னிருந்து ஸஹாயம் செய்தவர்களுக்கும் பிறருக்கும் இவ்வுபசாரத்திற் பங்கு உண்டு. அவர்கள் உதவியின்றி நான் என்னுடைய தமிழ்ப்பணிகளை இயற்றமுடியுமோ?

பல வருஷமாகிய இவ்வாண்டு என்னுடைய ஆசிரியராகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை யவர்கள் பிறந்த வருஷம். எனது ஜன்ம தினமாகிய உத்தரட்டாதி அவர்களுடைய ஜன்மதினமாகிய பூரட்டாதியை அடுத்துள் ளது. அவர்களுடைய ஜனனத்தை நினைவு றுத்தும் இவ்வாண்டில் நான் இத்தகைய உப சாரங்களைப் பெற்றது அவர்களுடைய அன்பு இன்னும் என்னைப் பாதுகாத்து நிற்கின்றது என்பதைக் குறிக்கின்றது. எனக்குத் தம் முடைய தமிழாசிரியர் ஸ்தானத்தை அளித் துப் பாதுகாத்த ஸ்ரீ தியாகராச செட்டியா ரவர்களுடைய அன்பை நினைக்கின்றேன். அவர்கள் முயற்சியால் ஒரு நல்ல ஸ்தானம் எனக்குக் கிடைத்ததற்கு அறிகுறியாக நான் இருக்கும் இடத்திற்கு 'தியாகராஜ விலாஸம்' என்ற பெயரை வைத்தேன். புகழுடம்பில் இருந்து என்னைப் பாதுகாக்கும் அவர்களு டைய இயல்பு என் நெஞ்சைவிட்டு என் றும் அகலாது. திருவாவடுதுறை யாதீனத் தில் இளமை தொடங்கி நான் அடைந்து வரும் பலவகையான ஆதரவுகளை நினைந்து உள்ளம் உருகுகின்றேன். தக்கயாகப்பரணி முதலிய ஏட்டுச்சுவடிகளை எனக்கு வழங்கிய தருமபுரமடத்தார் உபகாரத்தை என்றும் மறவேன். எனது உருவப்படத்தை இங்கே அமைக்கத் தந்து என்னைப் பிரகாசப்படுத் திய திருப்பனந்தாள் காசி மடாலயத் தலைவர் களை மனமார வாழ்த்துகின்றேன்.

இந்தக் கொண்டாட்டத்திற் கலந்து கொண்டு தங்களுடைய அன்பைப் புலப்படுத் திய எல்லோருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை மீண்டும் செலுத்துகின்றேன்.

அயர்ச்சியினாலும் மறதியினாலும் பல அன் பர்களையும் பற்றிச் சொல்ல நேரமின்மையி

னலும் இங்கே சொல்லப்படாத அன்பர்கள் யாவரும் இதுகாறும் சொன்னவற்றைத் தமக்கும் உரியனவாகக் கொள்ளும்படி வேண்டுகின்றேன். எல்லோருக்கும் நன்மையை உண்டாக்கியருளும்படி ஸர்வேசுவரனைப் பிரார்த்திக்கின்றேன்.

—கலைமகள்—14-3-35.

.....

அப்போது ஸர் மகமது உஸ்மான் ஸாஹிப் அவர்கள் பேசியதாவது:—

எனக்குத் தமிழில் விசேஷ ஞானமில்லாத போதிலும் இந்தப் பெரியாருடைய அரிய தொண்டைப் பாராட்டுவதில் நானும் கலந்து கொள்ள விரும்பி இதில் தலைமை வகிக்கவந்தேன். சென்ற 60 வருஷங்களாக டாக்டர் ஐயர் உயர்ந்த நோக்கங்களையும் பரிசுத்தமான கொள்கைகளையும் கொண்டு வாழ்ந்து வந்திருக்கிறார். இப்போது அவரைப் பாராட்டி மரியாதை செய்வதன்மூலம் நாம் நம்மையும் நமது பாஷையையும் கௌரவித்தவர்களாவோம். அவர் இத்தனை காலமாகத் தமிழ் வளர்ச்சிக்காகச் செய்துவந்திருக்கும் வேலையைப் பாராட்டி அவர் நீடிழிகாலம் வாழ்ந்து இதை இன்னும் தொடர்ந்து நடத்த உதவியளிக்குமாறு ஆண்டவனைப் பிரார்த்திப்போம். திருப்பனந்தாள் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி ஸ்வாமிநாத தம்பிரான் டாக்டர் ஐயர் அவர்களின் உருவப்படத்தை அளித்துள்ளார். முன்பே அவர் தமிழ்க் கலைக்கு அளித்துவரும் உதவி யாவரும் மறிந்ததே. ஒவ்வொரு வருஷமும் வித்வான் பரீக்ஷையில் தேறும் முதலாமவருக்கு அவர் 1000 ரூபாய் பரிசளித்துவருகிறார். இப்போது இந்தப் படத்தையும் அளித்திருக்கிறார். டாக்டர் ஐயரின் வேலையைப் பாராட்டி அவருடைய உருவப்படத்தைச் சந்தோஷத்துடன் திறந்துவைக்கிறேன் என்று கூறிக் கரகோஷங்களுக்கிடையே உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

சென்னை ஸர்வகலாசாலை உப அத்தியக்ஷர் மிஸ்டர் லிட்டில்ஹேல்ஸ் படத்தை ஸர்வகலாசாலையின் சார்பாக அங்கீகரித்துப் பின் வருமாறு பேசினார்:—மகா மகோபாத்யாய சாமிநாதையர் சென்னை ஸர்வகலாசாலையில் நீண்ட காலமாகச் சம்பந்தம் பெற்றிருக்கிறார். அவர் இதர கலாசாலைகளில் ஆசிரியராகவும் பரீக்ஷாதிகாரியாகவும் பாட புத்தகசபையங்கத்தினராகவும் இன்னும் பல வழிகளிலும் நெருங்கிய சம்பந்தம் பெற்றிருக்கிறார். அவர் இந்த வயதில் ஆரோக திடகாத்திரராக இங்கு வந்திருப்பதே அவருடைய பரிசுத்த வாழ்க்கைக்கு அத்தாட்சியாகும். அவர் பல அரிய ஓலைச்சுவடிகளை ஆராய்ந்து தகுந்தபடி பிரசுரித்திருக்கிறார். தமிழ்க்கலை அவரால் வெகுதூரம் முன்னேற்ற மடைந்திருக்கிறது. சமீபத்தில் சென்னை ஸர்வகலாசாலை இதைப் பாராட்டி அவருக்கு டாக்டர் பட்டமளித்தது. ஆகவே, அவருடைய உருவப்படம் இந்த ஸர்வகலாசாலை மண்டபத்திலிருப்பது மிகவும் பொருத்தமாகும். ஸர்வகலாசாலையின் சார்பாக அவருடைய உருவப்படத்தை ஏற்றுக்கொண்டு அவர் இன்னும் நீடிழி காலம் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தமது வேலையை நடத்திக்கொண்டேவருமாறு பிரார்த்திக்கிறேன்.

படத்தை எழுதிய ஸ்ரீமான் ஆர். துரைக்கு ஒரு தங்கப்பதக்கம் பரிசளிக்கப்பட்டது.

கூட்டத்தில் தலைமை வகித்த ஸர் மகமது உஸ்மான் ஸாஹிபுக்கும் கொண்டாட்டக் கமிட்டித் தலைவர் கனம் பி. டி. ராஜனுக்கும் ஸர்வகலாசாலை அதிகாரிகளுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் உதவியளித்த மற்ற அனைவருக்கும் காரியதரிசி ஸ்ரீமான் பெ. நா. அப்புசாமி ஐயர் வந்தனோபசாரம் கூறினார்.

பிறகு காயகசிகாமணி முத்தையா பாகவதர் சிறிது நேரம் பாட்டுக்கச்சேரி நடத்தினர். பாட ஆரம்பிக்குமுன் அவர் டாக்டர் ஐயர் தமிழுக்குச் செய்திருக்கும் சேவையைப் பாராட்டிச் சில வார்த்தைகள் பேசினர்.

இந்தக் கொண்டாட்டத்தில் படித்துக் கொடுக்கப்பட்ட உபசாரப் பத்திரங்கள் எல்லாம் ஒரு புஸ்தகமாக டாக்டர் ஐயரவர்களின் படங்களுடன் நேர்த்தியாக அச்சிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டன. டாக்டர் ஐயரின் சதாபிஷேக மலர் என்று 'கலைமகள்' தனிப்பிரசுரமொன்று 64 பக்கங் கொண்டதாக அச்சிடப்பட்டு வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டது. இதில் டாக்டர் ஐயருடைய சரித்திரமும் அவரைப் பற்றிப் பலர் எழுதிய கட்டுரைகளும் அடங்கியிருக்கின்றன.

ஆந்திர ஸர்வ கலாசாலையின் சார்பாக அதில் தமிழ், கன்னடபாஷை போர்டின் தலைவர்

ராவ் பகதூர் கிருஷ்ண ராவ் பான்ஸ்லேயால் டாக்டர் ஐயருக்கு 60 வருஷமான ஒரு எழுத்தாணியும் ஒரு பௌண்டன் பேனவும் பரிசளிக்கப்பட்டன. இந்தக் கொண்டாட்டத்திற்கு முன்னதாக, திருவேட்டீசுவரன் பேட்டையில் டாக்டர் ஐயருடைய வீட்டில் சென்னைத் தமிழ் மாணவர்களால் ஓர் உபசாரபத்திரமளிக்கப்பட்டது. அது ஸ்ரீமான் சுப்பிரமணியனால் படித்துக் கொடுக்கப்பட்டது. —சு. மி. 7-3-35.

On the occasion of the celebration of the 81st Birthday of Mahamahopadhyaya V. Swaminatha Aiyar, some of his former students presented, this afternoon, an address to him at his residence, 'Tyagaraja Vilas', Tiruvetiswaranpet.

Among those who were present were Prof. K. Sundararama Aiyar, Dewan Bahadur K. S. Ramaswami Sastriar, Vidwan K. V. Jagannatha Aiyar and a representative of the Dharmapuram Adhinam.

The address was in the form of a poem of three stanzas and contained a tribute to the services rendered by the Mahamahopadhyaya to the study of Tamil Literature, his researches in the field, and particularly to the work he had done in collecting old manuscripts and 'chuvadis' (cadjan leaf records) of literary works. The poem was composed for the occasion by Vidwan K.V. Jagannatha Aiyar.

Messages wishing Mr. V. Swaminatha Aiyar long life and still greater service to the cause of Tamil Literature were received from several persons from all over the province. Among those who had sent messages were Sir R. Venkataratnam, Messrs. Rajaram Pandian, Lakshmana Pillai, Umamaheswaram Pillai, P. V. Jagadisa Aiyar, V. Saranatha Iyengar and Karmegha Konar. Similar messages were also received from the committee organised to celebrate the occasion at Papanasam, the Tiruvallur Students' Union and the Jaffna Kalanilayam.

The address was presented in a plate with cocoanuts, fruits, candy and pan.

Mahamahopadhyaya Swaminatha Aiyar expressed his appreciation of the token of the affection and esteem of his former students and wished them success and prosperity. He recounted to them some of the difficulties he encounted in the course of his tours to collect manuscripts and 'chuvadis'. On one occasion, he said, he visited a prominent Mutt in the Tanjore district hearing that there were some rare manuscripts there. His search for the same, however proved futile for a time. His eyes then fell on a heap of cadjan leaves bundled up in one rack for being destroyed. On a close examination of these, he said, he came across a number of 'chuvadis'—exactly the portion of the work 'Pattuppattu', which he was in search of all the while. He expressed his great appreciation of the help he received from several lovers of Tamil in the work of collection of manuscripts and publication of works in Tamil.

To felicitate Mahamahopadhyaya Dakshinathya Kalanidhi Pandit Dr. V. Swaminatha Aiyar on the attainment of his Eighty-first birthday, a representative and distinguished gathering of the citizens of Madras met last evening, at the new Senate Hall, Chepauk, under the presidency of Sir Mahomed Usman. A number of congratulatory addresses to the Mahamahopadhyaya on behalf of various

public bodies was presented to him as also a purse containing Rs. 3,001. The occasion was availed of to unveil a portrait of the Mahamahopadhyaya presented to the Senate by the Head of the Thiruppanandal Adheenam, one of the patrons of Tamil culture. The function was a great success.

Before the commencement of the public meeting, the guests were entertained to tea, on the spacious lawns of the Senate House by Mr. S. Kalyanasundaram Aiyar to celebrate the Sathabhishekam of his father. The caterers were the Ramakrishna Lunch Home.

The public meeting commenced with a prayer. Mr. P.N. Appuswami, Secretary of the Celebration Committee, read a number of messages wishing Dr. Swaminatha Aiyar a long and prosperous life from the Pandit's numerous friends and admirers. His Excellency Lord Erskine, Sir C. P. Ramaswami Aiyar, Sir T. Desikachariar, Sir V. T. Krishnamachari, Sir M. D. Devadoss, Sir R. Venkataratnam, the Raja of Ramnad, Rajamantrapraveena K. R. Srinivasa Iyengar (Mysore), the Rt. Hon'ble V. S. Srinivasa Sastri, the Lord Bishop of Madras, Mr. H. Champion, the Rev. H. E. Popley and Lady Ramanathan were among those who had sent messages.

Mr. T. S. Sivaramasethu Pillai next read a congratulatory address, on behalf of the friends and admirers of the Pandit. The address was written on cadjan leaves.

The Hon'ble Mr. P. T. Rajan next presented a purse containing Rs. 3,001 to the Mahamahopadhyaya.

Presentation of Addresses.

Addresses were presented by Pandit Arunagirinathar on behalf of the Madras Tamil Pandits' Sangam, Mahamahopadhyaya Pandit Kuppuswami Sastrigal on behalf of the Sanskrit Academy, Mr. Ramachandra Dheekshitar on behalf of the Vidwat-Siromani Mandalam, Dewan Bahadur A. Ramaswami Mudaliar on behalf of the Madras Library Association, Rao Bahadur P. Sambandha Mudaliar on behalf of the Tamil Lexicon Committee, Mr. Pakkiriswami Chettiar on behalf of the Vannai Tamil Abhivridhi Kazhagam, Mr. S. Muthiah Mudaliar on behalf of the Kumbakonam College Old Boys' Association, Mr. K. C. Veeraraghava Aiyar on behalf of the Kumbakonam College, Mr. V. S. Thyagarajan on behalf of the Presidency College Tamil students, Mr. S. Sivakumaran on behalf of the Loyola College Tamil students, Mr. V. Syed Khader on behalf of the Government Mahomedan College Tamil students and Mr. A. S. Narasimhachar on behalf of the Pachaiyappa's College Tamil students. The addresses were enclosed in handsome caskets and presented to the Mahamahopadhyaya. They recounted the services of the Pandit in the cause of the resuscitation of Tamil classics of the Sangam Age.

Dr. Swaminatha Aiyar was presented with a sum of Rs. 501 donated by an admirer of the scholar who, the Secretary said, preferred to be anonymous. Mr. R. Krishna Rao Bhonsle presented a stylus 60 years old and a fountain pen on behalf of the Board of Studies in Tamil and Kannada of the Andhra University. A Silver idol was presented to the

Mahamahopadhyaya by the students of the Mettuppalayam Middle School.

Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar replying in Tamil to the congratulatory addresses, said that they had praised him beyond his deserts, which he could attribute to their love and admiration for Tamil Literature. The warmth of their reception had rejuvenated him. He added that his success in the field of his labours was largely due to his master, and to those who had helped him on many a difficult occasion. He thanked them for their kind words and said that he hoped to render what little service he could to Tamil Literature with the blessings of the Almighty.

Unveiling of Portrait.

Sir Mahomed Usman next unveiled the portrait of the Mahamahopadhyaya. In doing so, he paid his humble tribute of respect and admiration to Dr. Swaminatha Aiyar and said that the function they were celebrating was a fitting recognition of the great work the learned Pandit had done for the cause of Tamil Literature. He knew the Mahamahopadhyaya for several years. They all knew how the Mahamahopadhyaya for over half a century, had laboured for the promotion of Tamil Language and Literature under difficult circumstances. By honouring the great pandit they were only honouring themselves. One could not help admiring the pandit for leading a true scholastic life of plain living and high thinking. It was their earnest prayer, Sir M. Usman concluded, that the pandit might be blessed with long and healthy life so that he might carry on the work dear to his heart. They owed a deep debt of gratitude to that great patron of Tamil learning who had founded a prize of Rs. 1,000 for the best Tamil Vidwan and who had now presented the University of Madras with a portrait of the great Tamil scholar.

A medal was awarded to the artist Mr. Dorai for executing the portrait.

Mr. R. Littlehailes, on behalf of the University, accepted the portrait. He said that the connection of Dr. Swaminatha Aiyar with this University had extended over a period which could very well be measured in terms of the life time of some of those present there. Recently this University honoured itself by conferring on the great pandit a Doctorate. Dr. Swaminatha Aiyar had a rare collection of old and valuable manuscripts which was not only a great source of delight to him, but also a rich one to the Tamil world. He possessed the acumen of a critical scholar and the learning of a pandit, and thus he combined in himself the rare virtues of research and cultural scholarship. Mr. Littlehailes said that he had, therefore, great pleasure in accepting the portrait on behalf of the University. Mr. Littlehailes congratulated the pandit on the attainment of his Eighty-first Birthday, both on his own behalf and on behalf of the University.

The pleasant function terminated with a musical entertainment by Brahma Sri Muthiah Baghavathar.

The Hindu 7-3-1935.

OCTOGENARIAN TAMIL SCHOLAR HONOURED.

Address Inscribed on Cadjan Leaves Presented.

The 81st Birthday of Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar, a prominent Tamil scholar and author, was celebrated yesterday evening by a committee of citizens of which the Hon. Mr. P. T. Rajan, Minister for Public Works, was chairman. An address inscribed on cadjan leaves was presented to Dr. Swaminatha Aiyar.

Dr. Swaminatha Aiyar is the author of several valuable works in Tamil and has done research in Tamil Literature. For several years he was a member of the Board of Studies in Tamil of the Madras University and an examiner. In recognition of his valuable contribution to Tamil Literature, the Madras University recently conferred on him the honorary degree of D. Litt.

At the Senate House, Chepauk, yesterday evening several institutions and students' associations interested in Tamil Literature presented addresses to Dr. Swaminatha Aiyar. Sir Mahomed Usman, a former acting Governor of Madras, presided and unveiled a portrait of the Mahamahopadhyaya. Before the addresses were presented, Mr. S. Kalyanasundaram, son of Dr. Swaminatha Aiyar gave a tea party in the garden round the Senate House. A large gathering of prominent citizens and friends of the Mahamahopadhyaya was present.

The gathering next adjourned to the Senate Hall, where the Secretary of the Dr. Swaminatha Aiyar's Birthday Celebration Committee, read messages, including one from His Excellency the Governor, wishing Dr. Swaminatha Aiyar long life and happiness.

Presentation of Addresses.

An address presented by the friends and admirers of the Mahamahopadhyaya was inscribed on cadjan leaves, the writing material on which ancient works are still preserved. The address referred to Dr. Swaminatha Ayyar's services in the cause of Tamil Literature and wished him long life and happiness. A cheque for Rs. 3,001, was also presented to the scholar by the friends and admirers. Addresses, each enclosed in a casket, were also presented on behalf of the Madras Tamil Pandits' Sangam, theSanskrit Academy, the Vidwat-Siromani Mandalam, the Madras Library Association, the Tamil Lexicon Committee, the Vannai Tamil Abivridhi Kazhagam, the Kumbakonam College Old Boys' Association, the Kumbakonam College, the Presidency College Tamil students, the Loyola College Tamil students, the Government Mahomedan College Tamil students, the Pachaiyappa's College Tamil students and the Madras City Tamil students.

A cheque for Rs. 501 sent by an admirer, who preferred to be anonymous, was also presented to Dr. Swaminatha Aiyar,

Presents

Among the presents were a stylus (writing nail) and a fountain pen, from Rao Bahadur R. Krishna Rao Bhonsle, Chairman of the Board of Studies in Tamil and Canarese, of the Andhra University, on behalf of the Board.

Dr. Swaminatha Aiyar thanked the various associations and institutions which had presented the addresses to him The honour done him, he added, was a great encouragement to him in his work for the preservation and development of Tamil Literature.

President's Tribute

Sir Mahomed Usman, unveiling a portrait of the Mahamahopadhyaya, said he consented to preside at the function, because he believed it would give him an opportunity of paying his meed of tribute to the valuable contribution of Dr. Swaminatha Aiyar to Tamil Literature during the last sixty years. They all wished him long life and perfect health to continue his valuable work. Sir Mahomed Usman then unveiled the portrait amidst applause.

Mr. R. Littlehailes, Vice-Chancellor of the Madras University, in accepting the portrait on behalf of the University, observed that Dr. Swaminatha Aiyar's connexion with the University extended over a period which could be suitably measured only in terms of the lifetime of many present at the meeting that day. Dr. Swaminatha Ayyar had been a teacher in affiliated colleges and member of the Board of Studies, and also an examiner for a very long time. In recognition of his valuable services, the University had conferred on him an honorary doctorate degree. Dr. Swaminatha Aiyar had a rare collection of old and valuable manuscripts, which was not only a source of delight to him but a rich ore which enriched Tamil learning. He had edited several classical Tamil Works, a work which would last far beyond their day.

"Rare Virtues"

Possessing as he did, the acumen of critical research and the learning of a pandit, he combined in himself the rare virtues of the old and the new in cultural scholarship.

Brahma sri Gayakasikhamani Muthia Bhagavathar provided a programme of music, after which the Secretary of the Committee proposed a vote of thanks,

Madras Mail 7-3-1935.

பாராட்டுச் செய்திகள்

தந்தி மூலமாகத் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்த அன்பர்களும் நிலயங்களும்

1. அமிர்த கணேச முதலியார், நகர சபைக் கமிஷனர், தூத்துக்குடி. 2. ஆவுடையப்பப் பிள்ளை, வக்கீல், திருநெல்வேலி. 3. தி. இலட்சுமண பிள்ளை, திருவனந்தபுரம். 4. இராமநாதபுரம் அரசரவர்கள். 5. இரத்தினசுவரையர், தமிழாசிரியர், ஆவினிப்பட்டி. 6. உமாமகேசுவரம் பிள்ளை, அட்வொகேட், தஞ்சை. 7. கருப்பன் செட்டியார், தனவணிகன் ஆசிரியர், ரங்கூன். 8. கிருஷ்ணமூர்த்தி ஐயர், ஹெட் மாஸ்டர், ஹை ஸ்கூல், திருப்பூர்.

9. சத்தியமூர்த்தி ஐயர், புது டெல்லி. 10. சதாபிஷேகக் கொண்டாட்டக் கழகம், உத்தமதானபுரம். 11. ஷெ ரங்கூன். 12. ஷெ ஹை ஸ்கூல், திருவிடைமருதூர். 13. ஷெ ஷெ பாபநாசம். 14. சாமிநாத சர்மா, பாரதபந்தர், ரங்கூன். 15. சார நாதன், பிரின்ஸிபால், நேஷனல் காலேஜ், திருச்சி. 16. சீதாராமையர், தமிழாசிரியர், நேஷனல் காலேஜ், திருச்சி. 17. சுந்தரம், கௌஹாத்தி. 18. சோமசுந்தர பாரதியார், தமிழ்ப் புரொபஸர், அண்ணாமலைச் சர்வகலா சாலை, சிதம்பரம். 19. தலைவர், ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ்ச் சங்கம், திருவனந்தபுரம். 20. தலைவர், காசிமடம், திருப்பனந்தாள். 21. தலைவர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி. 22. தலைவர், தமிழ்ச்சங்கம், மதுரை. 23. ஸர். டி. தேசிகாசாரியார், Kt., திருச்சி. 24. பன்னிருகைப்பெருமாள் முதலியார், திருவனந்தபுரம். 25. மாணவர் கழகம், திருவல்லூர். 26. ராஜாங்கமையர், திவான், விஜயநகரம். 27. ராஜாராம் பாண்டியன், இராமநாதபுரம். 28. ஸர். ஆர். வேங்கட ரத்னம் நாயுடு, D. Lit. etc., காக்கிநாடா. 29. டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், மதுரை.

SOME OF THE MESSAGES RECEIVED

SAMI IYER, PRESIDENT,

Swaminathier's Birthday celebration Committee, Rangoon.

Tamilians in Burma heartily appreciate Swaminathier's eminent services. May God bless him with long life and prosperity.

SIR T. DESIKACHARYAR, KT.

Trichinopoly.

Hearty congratulations on the Satabhishekam of Dr. Swaminathier. May the revered sage have a real century celebration. His is the spirit of Tamil renaissance. To him we owe our awakening in Tamil studies.

R. SHANMUGA RAJESWARAN,

Raja of Ramnad, President,

Madura Tamil Sangam.

Madura Tamil Sangam associates itself in the celebration of the 81st Birthday of Dr. Mahamahopadhyaya Swaminathier. Tamilians owe him a deep debt of gratitude for his great services in the cause of the revival of Tamil learning. His unbroken literary career of over 50 years is part of the history of the Tamil land. Sangam conveys its warmest congratulations to him and wishes him many happy returns of Birthday in health and prosperity.

KASIMUTT, TIRUPANANDAL.

Extremely glad. You and admirers are grandly celebrating the birthday of the Mahamahopadhyaya, the greatest Tamil scholar of the day. The honour done to him is the honour done to Tamil Muse. Wish the celebration every success. Pray for the longevity of the scholar. Greatly admire you have all come forward to recognise the valuable work rendered by the veteran Doctor.

T. C. SREENIVASAIENGAR,

Advocate, Madura.

Tamilians honour themselves in celebrating the birthday of Dr. Swaminathier, greatest benefactor of Tamil. My respectful congratulations to him.

RAJAH OF RAMNAD.

Kindly permit me to add my personal congratulations to Dr. Mahamahopadhyaya Swaminathier. Hi great services to Tamil have enthroned him in the hearts of all Tamilians.

வெளியூர் நிகழ்ச்சிகள்

ஈரோடு

ஈரோட்டிலுள்ள போர்டு ஹை ஸ்கூல், மகாஜன ஹை ஸ்கூல், லண்டன் மிஷன் ட்ரெயினிங் ஸ்கூல், கவர்ன்மெண்டு பெண்கள் ட்ரெயினிங் ஸ்கூல் என்பவற்றின் ஆதரவில் 6—3—35 அன்று மாலை 6-30 மணிக்கு ரெவ. ரெண்டு எச். ஏ. பாப்பிளி, பி. ஏ., அவர்களுடைய தலைமையின் கீழ்ச் சதாபிஷேகக் கொண்டாட்டம் நடைபெற்றது. பல பிரசங்கம் செய்தனர். இணைப்புச் சங்கத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் ஆர். ராமகிருஷ்ணன், எம். ஏ., எல். டி., அவர்கள் இதில் மிக்க ஊக்கமெடுத்துக்கொண்டார். கொண்டாட்டத்தின் போது பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது:—

'மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் சாமிநாதையரவர்களுக்கு எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாக் கொண்டாடப்படும் இந்நாளில் ஈரோடு ஆகிரிய சங்கங்களின் இணைப்புச் சங்கம் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்வதோடு, இதுகாறும் தமிழுக்கு அவர்கள் செய்துள்ள அரிய பெரிய சேவையை மனமாரப் பாராட்டுகிறது. சுமார் அறுபது ஏருஷங்களாகத் தாழ்ந்த நிலையில் இருந்த தமிழ்மொழியை அதன் பழைய உன்னத நிலைக்கு வெற்றிகரமாகக் கொண்டு வந்ததைக் கண்டு மகிழ்கின்றது. தமிழுலகத்திற்குப் பயன்படும் அரிய பெரிய காரியங்கள் பலவற்றைச் செய்வதற்கு அவருக்கு உடல் நலனும் நிறைந்த ஆயுளும் சடவுள் அளிக்கும் படி பிரார்த்திக்கிறது'.

உத்தமதானபுரம்

ஸ்ரீமத் ஐயரவர்கள் ஊராகிய இங்கே இக் கொண்டாட்டம் மிகச்சிறப்பாக நடைபெற்றதாக அறிகிறோம். அன்று இவ்வூரிலுள்ள ஆலயங்களில் ஸ்ரீமத் ஐயரவர்களுடைய தீர்க்காயுளைக் குறித்து அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. யாவருக்கும் சித்திரான்னப் பிரஸாதங்கள் வழங்கப்பட்டன. கொண்டாட்டத்தினத்தன்று மாலை ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்குப் பாபநாசம் ஸ்டேஷனரி ஸப் மாஜிஸ்டிரேட் ஸ்ரீமான் ஸுந்தர ராவ் அவர்கள் தலைமை வகித்தார்கள். பாபநாசம் ஹை ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் குழந்தைவேலுப் பிள்ளையவர்களும் ஸ்ரீமான் கடலூர் கிருஷ்ணமாசாரியாரவர்களும் பிரஸங்கம் செய்தார்கள். ஐயரவர்களுடைய படம் ஊர்வலமாக வந்து ஐயரவர்களுக்குரிய இல்லமாகிய ஸ்ரீஸரஸ்வதி விலாஸத்தில் அமைக்கப்பெற்றது.

கும்பகோணம்

6-ஆம் தேதி குடந்தைத் தமிழ்ச் சங்கத்தின் கூட்டம் டவுன் ஹை ஸ்கூலில் மாலை 6 மணிக்குக் கூடியது. முனிஸிபல் கமிஷனர் ஸ்ரீமான் ஏ. எஸ். ராமநாத ஐயர் தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள் பாரங்கதர் சடகோப ராமாநுஜாசாரியார், எம். ஓ. எல்., தமிழ் ஆசிரியர் சீனிவாஸ ஐயர், ராஜகோபால பிள்ளை, பிச்சமூர்த்தி ஐயர், என். ஆர். கேதாரி ராவ், சாரங்கபாணி ஐயங்கார், ஹ. சா. வேங்கடராம ஐயர், கல்லூரித் தமிழ்ச்சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் கஜபதி முதலியோர்கள், ஸ்ரீமான் ஐயரைப் பெரிதும் புகழ்ந்து, தமிழ் மக்களுக்கு அறிவெனும் விளக்கை ஏற்றி வழி காட்டியுள்ள பிதா என்று அருமையாகவும், உருக்கமாகவும் பேசினார்கள். அக்கிராசனர் தமக்கு ஸ்ரீமான் டாக்டர் சாமிநாத ஐயரிடம் இரண்டு வருடம் பழகும் பாக்கியம் ஏற்பட்டதாகச் சந்தோஷத்துடன் கூறினர். பின்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

(1) பிரம்மஸ்ரீ மகாவித்வான் மகாமகோபாத்யாய திராவிடவித்யாபூஷணம் தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் என்பதொன்றும் பிறந்த நாள் கொண்டாட்டம் தமிழ் நாட்டினரால் கொண்

டாடப்படுவதைப் பெருமையாகக் கருதுவ துடன் பிரம்மஸ்ரீ ஐயர் அவர்களுக்கு நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் நீடூழி வாழ்க்கையும் உண்டாகுமாறு திரு வருள் சுரக்கும்வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை இந்த மகாசபை பிரார்த்திக்கிறது.

(2) பிரம்மஸ்ரீ ஐயரது பேருதவியால் தமிழ் நாட்டினர் இன்னும் பல பயன்களையும் பெற வேண்டியிருக்கின்றமையால் அதற்குத் துணை யாகுமாறு அவர்கள் வெளியிட்ட புத்தகங் களை வாங்கி அவர்களுக்கு ஊக்கம் அளிக்கு மாறு தமிழ்மக்களை இந்த மகாசபை வேண் டிக்கொள்ளுகிறது.

பிறகு சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீமான் எஸ். சுவாமிநாதன் எல்லோருக்கும் வந்த னைபசாரம் கூறினர். விஜயம் செய்திருந்த எல்லோருக்கும் சந்தனம், புஷ்பம், பழம், தாம்பூலம் வழங்கிய பின் கூட்டம் கலைந்தது.

—சு. மி.—9-3-35.

மற்றொரு கொண்டாட்டம்

குடந்தைத் துரைத்தனக் கல்லூரித் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் ஒரு பெருங்கூட்டம் மே கல்லூரித் தமிழாசிரியர் ஸ்ரீமான் வித் வான் சடகோபராமானுஜாசாரியார், எம். ஓ. எல்., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது பின்வரும் தீர்மானம் நிறை வேற்றப்பெற்றது:—

'இக்கல்லூரியில் பல வாண்டுகள் தமிழ்ச் சொற்பொழிவாளராக இருந்து தமிழ்த் தொண்டாற்றியவரும், தமிழ் அன்னையின் செல்வப் புதல்வரும், தமிழ் இலக்கியத்திற்கே புத்துயிரளித்த பேராசிரியருமாகிய மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையரவர்கள் தம் எண்பதாம் ஆண்டு நிறைவு குறித்து இக் கழகத்தின் அங்கத்தினர் பெருமகிழ்ச்சி கொள்வதோடன்றி, அப்பெரியார் இன்னும் பல்லாண்டுகள் வாழ்ந்திருந்து தமிழ்ச் சேவை செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவன் இன் னருள் புரிய இறைஞ்சுகிறோம்.'

சத்தியமங்கலம்

சத்திய மங்கலம் போர்டு ஹை ஸ்கூல் ஆசிரியர் சங்கம், இளைஞர் இலக்கியச் சங்கம் என்னும் இரண்டன் ஆதரவிலும் நடை பெற்ற கொண்டாட்டக் கூட்டத்தில் பின் வரும் தீர்மானம் நிறைவேறியது:—

'சத்திய மங்கலம் போர்டு ஹை ஸ்கூல் ஆசிரியர்களும் மாணவர்களும் அடங்கிய இந்தக் கூட்டம் தன்னுடைய பாராட்டுதலை மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமி நாதையரவர்களுடைய 81-ஆம் ஜனன விழா வாகிய இன்று தெரிவித்துக் கொள்வதோடு அவர்களுக்கு நீண்ட ஆயுளும் ஆக்கமும் கொடுத்தருளும்படி எல்லாம் வல்ல இறை வனைப் பிரார்த்திப்பதாகத் தீர்மானிக்கிறது.'

திருச்சிராபுரம்

திருச்சிராபுரம் தமிழ் ஆராய்ச்சிக் கழகத்தின் விசேஷக் கூட்டம் ஒன்று 6-3-35 மாலை 6-மணிச்சுப் பிஷப் ஹீபர் ஹை ஸ்கூல் மண்ட பத்தில் டாக்டர் சுவாமிநாத ஐயரின் எண்ப தாவது ஆண்டுநிறைவு விழாவைக் கொண் டாடுவதற்காகக் கூடியது. திருச்சி ஜில்லா போர்டு தலைவரும், சென்னை சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீமான் டி. எம். நாரா யணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., தலைமை வகித்தார். திருச்சி ஜில்லாவிலுள்ள பிரபலஸ்தர்களும், ஆசிரியர்களும், தமிழ்ப் பண்டிதர்களும், மாணவர்களுமாகப் பலர் திரண்டிருந்தனர்.

தலைவர் தமது முன்னுரையில் தாம் சென்னையில் எப். ஏ. வகுப்பில் வாசித்த போது ஐயரவர்களின் மாணாக்கராக இருந்த

தாகவும், அவருடைய எண்பதாவதாண்டு நிறைவுவிழாவில் தலைமை வகிக்கும் பாக்கியம் தமக்குக் கிட்டியதைப்பற்றித் தாம் அளவு கடந்த ஆனந்தம் அடைவதாகவும், ஐயரவர் களின் உழைப்பு அளவுக்கு அழியாப் புகழை ஈட்டித் தந்துள்ளது என்றும், அவரது தமிழ்த் தொண்டைப் போற்றுவது தமிழர் அனைவருடைய கடமையாகும் என்றும் கூறித் தாம் அவர்களிடம் மாணாக்கராயிருந்த காலத்தில் கண்ட அவருடைய குணாதிசயங்களை எடுத்துரைத்து ஸ்ரீமான் எஸ். கே. தேவசிகாமணி அவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான் தேவசிகாமணி தேசத்தை முன்னிலைக்குக் கொண்டுவருபவர் மூவகைப்படுவர் என்றும், அவர்கள் வீரர் நூலாசிரியர் மதாசாரியர்கள் என்றும், அவர்களுள் ஐயரவர்கள் நூலாசிரியர் என்றவகையில் நமது தமிழ்நாட்டிற்குச் செய்துள்ள அரிய சேவை சொல்லுந்தரமுடையதன்றென்றும், அரியனவும் பெரியனவுமான சங்கநூல் களை ஆராய்ந்து அச்சிடுவதில் ஐயரவர்கள் செய்துள்ள உழைப்பும் அதன் பலனும் தமிழர் வணக்கத்தை என்றென்றும் பெறுதற்கு உரியனவென்றும், ஐயரவர்கள் இன்னும் நீடூழி வாழ்ந்து தமிழ்த்தொண்டு புரிய இறைவன் அருள்புரிய வேண்டுமென்றும் கூறினர்.

பிறகு ஸெயிண்ட் ஜோஸப் காலேஜ் தமிழ்ப் பேராசிரியர் ஸ்ரீமான் மு. நடேச முதலியார் பேசினர். அவர் ஐயரவர்களுடைய ஜீவிய சரித்திரமாகிய பெருங்கடலுள் பல்விலைய முத்தமும் பவளமும் வைரமும் போன்ற அரிய பல உண்மைகள் ஆழ்ந்துள்ளன வென்றும், ஐயரவர்கள் தமிழ் கற்பதற்குப் பட்ட சிரமமும், கல்விபெற்ற ஆசிரியரிடம் அவர் காண்பித்துவரும் குருபக்தியும் அளவற்றனவென்றும், இவற்றை ஐயரவர் கள் இயற்றியுள்ள ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய சரித்திரம் என்ற நூல் நன்கு விளக்கும் என்றும் கூறினர். மேலும் தாம் ஐயரோடு நெருங்கிப் பழகிய காலங்களில், அவரிடம் கண்ட குண விசேஷங்களையும், மரியாதையாக அனைவரிடமும் அன்பு பாராட்டி நடந்துகொள்ளும் பாங்கையும், பொறுமை நன்றிமறவாமை முதலிய குணங்கட்கு அவர் உறைவிடமாயிருப்பதையும் எடுத்துரைத்து ஐயர் நீண்டகாலம் வாழ்ந்து தமிழ்ப்பணி புரிய இறைவன் அருள் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்து மாணவர்களும் ஏனைய தமிழாசிரியர்களும் ஐயரைப் போன்ற உழைப்புடையவராதல் வேண்டும் என்பதை எடுத்துக் காட்டி, அவர்கள் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ள நூல்களை அனைவரும் வாங்கி வாசித்துத் தமிழ்ச்சுவை அடையும்படி வற்புறுத்தினர்.

பண்டிதர் துரைசாமி ஐயர் ஸ்ரீ ஐயரின் பிரசுரங்கள் தமிழ்ப்பண்டிதருக்குப் பெரும் பயன் விளைத்திருப்பதாகக் கூறினர்.

பின்பு திருச்சி நாஷனல் காலேஜ் தலைவராகிய ஸ்ரீமான் ஸாரநாத ஐயங்கார் தமதுநண்பரும் சிறந்த தமிழறிஞருமான மகாலிங்க ஐயரும் ஐயரவர்களும் மிகவும் நெருங்கிய நண்பர்கள என்றும், தாம் ஐயரோடு நெருங்கிப் பழகும் பேற்றை அடைந்துள்ளதாகவும், அவருடைய முயற்சி லௌகிகஞானம் முதலியன எவரையும் பிரமிக்கச் செய்யத்தக்கவை என்றும், இப்படிப்பட்ட பேராசிரியர் ஒருவர் மேல்நாட்டில் தோன்றியிருந்தால் அவருக்கு எவ்வளவு சிறப்பு நடைபெறுமோ அதிற் காலளவுகூட நாம் செய்யவில்லையென்றும், ஐயரவர்களுடைய ஆராய்ச்சியைப் போல அவர்களுடைய ஆயுளும் பெருக வேண்டும் என்று தாம் கோருவதாகவும் பிராமணர்களுக்குத் தமிழ்ப் பாஷையில் சிரத்தையில்லை என்று சொல்லுவதை ஐயர் தம்வாழ்நாளில் பொய் என்று காண்பித்துவிட்டார் என்றும் கூறினர்.

அப்பால் திருச்சி நாஷனல் காலேஜ் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகிய வித்வான் வீ தாராம ஐயர் சங்ககாலத்துப் புலவர்களையும், அவர்கள் இயற்றிய அரிய நூல்களையும், இறவாமல் இன்றளவும் உயிர்கொடுத்துக் காப்பாற்றி வருகின்ற ஐயரவர்கள் பெரிய கல்விக்களஞ்சியமாகக் கிடைத்தது தமிழரும் தமிழ்நாடும் செய்த தவப் பயனே என்றும், அவர்களுடைய ஒழுக்கமும் அடக்கமும், பொறுமைக்குணமும், தமிழ்ப் பற்றுள்ள ஒவ்வொருவருக்கும் சீரிய வழிகாட்டியாகும் என்றும் கூறி வாழ்த்துரை புகன்றார்.

பிறகு, தலைவர் ஐயருடைய குணாதிசயங்களையும் உழைப்பையும்பற்றிக் கொண்டாடிப் பேசியவர்களின் பிரசங்கங்களிலிருந்து சில குறிப்புக்களை மட்டும் எடுத்துக் காட்டி, எல்லோரும் தமிழ்மொழிவளர்ச்சியில் பேரூக்கம் கொள்ளவேண்டுமென்று வேண்

டிக்கொண்டார். தமிழன்புள்ள பிராமணர்களைத் தாங்கள் பெரிதும் கொண்டாடுவதாகவும் அவர் கூறினர். அப்பால் மேற்படி ஆராய்ச்சிக் கழகத்தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் பஞ்சாதம் பிள்ளை ஐயருடைய நகூத்திரம் உத்திரட்டாதி என்றும், அது ஐயரின் குருவான மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் நகூத்திரத்திற்கு அடுத்ததாயுள்ள ஒரு பொருத்தமும் இவ்விருவரும் திருச்சிராப்பள்ளிக்கு மிகுந்த சம்பந்த முடையவராயிருப்பதும் இந்நகரவாசிகள் செய்த பாக்கியமே என்றும், ஐயரவர்கள் இச் சங்கத்திற்கு வாழ்த்து அனுப்பியிருப்பதாகவும் கூறினர். அவரால் ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்கள் இவ்வைபவத்தை முன்னிட்டுக் குறைந்தவிலைக்கு அளிக்கப்படும் என்ற அச்சிட்ட அறிக்கையும் படிக்கப்பெற்றுக் கூட்டம் இனிது முடிந்தது.

—சு. மி. 9—3—35.

மேற் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானம் வருமாறு:—

'சென்னை, பிரம்மஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் எல்லாம் வல்ல இறைவன் திருவருளால் பல்லாண்டு சுகமே வாழவும், தமிழ்த் தெய்வத்திற்குரிய அணிகலன்களாகிய மற்றும் பல நூல்களை வெளியிட்டு உதவவும் இக்கழகத்தார் வேண்டுகின்றார்கள்.'

மற்றோரிடத்திற் கொண்டாட்டம்

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி, திராவிடவித்யாபூஷணம் டாக்டர் ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களின் 80-ஆம் ஆண்டுப் பூர்த்திவிழா திருச்சி கள்ளத்தெருவிலுள்ள தமிழரபிவிருத்தி சங்கத்தாரால் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. நேற்றுமாலை 6 மணிக்குச் சங்கத்தில் ஏராளமான அன்பர்கள் புடைசூழ்ந்திருக்க இவ்விழா ஆரம்பிக்கப்பட்டது. சங்கத் தலைவர் ஸ்ரீமான் கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் கூட்டத்தின் நோக்கத்தை எடுத்து விவரித்து "மதுரமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் என். சுப்பிரமணியம் அவர்களை அக்கிராசனம் வகிக்குமாறு கேட்டுக்கொண்டார். தலைவர் ஆசனத்தமர்ந்தபின் சங்க உபத்தலைவர் ஸ்ரீமான் சோமசுந்தரம் பிள்ளை அவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றது. தலைமைவகித்து "மதுரமித்திரன்" ஆசிரியர் ஸ்ரீமான் என். சுப்பிரமணியம் முகவுரையாகப் பேசுகையில் தமிழ்ப் பெரியார் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் அருமை பெருமைகளை எடுத்துக்கூறித் தமிழுக்குத் தனி அரசாய்விளங்கும் ஐயரவர்களின் ஆண்டுப்பூர்த்தி விழாவைத் தமிழரபிவிருத்தி சங்கம் கொண்டாடுவது மிகப் பொருத்தமானதென்றும், ஐயரவர்களின் ஆசிரியர் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களை உறைவிடமாகப் பெறும் பாக்கியம் பெற்ற உறையூரைக்கொண்ட திருச்சி இத்தினத்தைக் கொண்டாடுவது பெருமை தரக்கூடியதென்றும் எடுத்துக்கூறி வக்கீல் ஸ்ரீமான் N. ஹாலாஸ்யமையரவர்களைப் பேசும்படி கேட்டுக்கொண்டார்.

வக்கீல் ஸ்ரீமான் ஹாலாஸ்யமையர், B. A., B. L., அவர்கள் பேசுகையில் ஸ்ரீ சுவாமிநாத ஐயரவர்களிடம் தாம் பாடம் கேட்கவோ பக்கலில் இருந்து பழகவோ பாக்கியம் பெறாவிட்டாலும் ஐயரவர்கள் பதிப்பித்து உதவிய புத்தகங்களால் அரிய சந்தர்ப்பம் வாய்த்ததாகவும், மதராஸ் முதலிய இடங்களில் ஐயரவர்களை ஏகதேசத்தில் சந்திப்பதுண்டென்றும், ஐயரவர்களிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டிய பாடங்களுள் அடக்கம் பொறுமை பெரியாரைப் பேணல் தமிழ்த் தொண்டு ஆகிய இவை முக்கியமானவையென்றும் கூறி ஐயரவர்கள் நீடூழி வாழ்ந்து இன்னும் பல அரிய தொண்டுகள் தமிழுக்குச் செய்யவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு ஐயரவர்களின் சரித்திர நிகழ்ச்சிகளையும் விளக்கிச் சுமார் ஒரு மணி நேரம் பேசினர். பிற்பாடு ஸ்ரீமான் R. வாசுதேவ சர்மா, M. A., B. L., அவர்கள் பேசுகையில் ஐயரவர்களின் சரித்திர நிகழ்ச்சிகள் சிலவற்றைக்கூறி, ஐயரவர்கள் தமிழ்ப்பண்டிதராயிருந்த காலேஜில் தாமும் படிக்கும் பாக்கியம் பெற்றிருந்ததாகவும், தாம் வடமொழி மாணவராக இருந்தபோதிலும் ஐயரவர்கள் பாடம் சொல்லும்பொழுது தாம் அடிக்கடி அதில் ஈடுபட்ட துண்டென்றும், ஐயரவர்கள் தம்மிலும் கீழானவரையும் கௌரவிக்கும் முறை மிக உயர்வென்றும் விரிவாகப் பேசினர். பிறகு ஸ்ரீமான் கந்தையா (நாஷனல் ஹை ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்) பேசுகையில் தமிழன் என்று தனியாகப் பிரிப்பது அறிவீன

மென்றும், தமிழ்நாட்டில் பிறந்து தமிழுக்குத் தொண்டு செய்வோரனைவரும் தமிழர்களே என்றும் விளக்கிக் கூறி ஐயரவர்களின் ஆண்டுவிழாவைக் கொண்டாடுவது தமிழ் நாட்டாரின் கடமை யென்பதை விளக்கிக் கூறினர்.

கடைசியாக அக்கிராசனர் முடிவுரையில், பிரசங்கிகள் கூறிய விஷயத்தில் கருத்துக்களை எடுத்து விளக்கி ஐயரவர்களிடம் உடனிருந்து பழகிய சில நிகழ்ச்சிகளை விரிவாகக் கூறி இவ்விழாவைக் கொண்டாட முன்வந்த சங்கத்தாரைப் பாராட்டி, தமிழ பிவிருத்தி சங்கத்தில் எல்லோரும் மெம்பர்களாகச் சேர்ந்து தமிழ் அபிவிருத்திக்கு உழைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். சங்கத் தலைவர் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை வந்தனோபசாரம் கூற, தலைவர், பிரசங்கிகளுக்கு மாலைசூட்டியபின் சந்தனம் தாம்பூலம் கற்கண்டு வழங்கப்பட்டு இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

—மதுரமித்திரன்—11—3—35.

திருச்செந்தூர்

இத்தலத்தில் ஸ்ரீமத் ஐயரவர்களின் சதாபிஷேகத்தை உத்தேசித்து அவர்களுடைய நகூத்திரத்திற்கு ஸஹஸ்ரநாமார்ச்சனையும் நிவேதனமும் செய்யப்பட்டன. ஸ்ரீஸுப்ரமண்ய ஸ்வாமி கோயில் ஸ்தலத்தாராகிய ஸ்ரீமான் கா. அப்பையர் முதலிய பலர் கூடி வாழ்த்துத் தீர்மானம் அனுப்பினர்கள்.

திருப்பாதிரிப்புலியூர்

மகாமகோபாத்தியாயர் ஸ்ரீமான் உ. வே. சாமிநாதையர் 81-ஆவது ஆண்டு விழா இந்நகர்த் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் ஸ்வாமிகள் மடத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவ்வைபவத்திற்கு ஏராளமான ஜனங்கள் விஜயம் செய்திருந்தனர். ராவ் சாகிப் சக்கரபாணி ஐயங்கார் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான் ஸ்வாமிநாதையருடைய ஜீவிய சரித்திரத்தைப்பற்றியும், அன்னார் தமிழபிவிருத்தியின் நிமித்தம் சுமார் 65 ஆண்டுகளாகப் பல துறைகளில் தொண்டாற்றிவந்த விவரத்தைப்பற்றியும், மடத்துத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் ருத்திரசாமி ஐயர், ஸெயிண்டு ஜோஸப் ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கந்தசாமி முதலியார், முனிசிபல் உயர்தர சுலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் சங்கர ஐயர், ஸம்ஸ்கிருத பண்டிதர் ஸ்ரீமான் நடேச சாஸ்திரிகள் ஸ்ரீலஸ்ரீ ஞானியார் ஸ்வாமிகள் எல்லோரும் விரிவாகப் பேசினர்கள். ஸ்ரீ ஞானியார் ஸ்வாமியின் உருக்கமான பிரசங்கத்தில் ஸ்ரீமான் ஸ்வாமிநாதையருடைய பால்யவயதின் படிப்பினையைப்பற்றியும், அன்னருடைய என்றும் மறக்க முடியாத தமிழ்த் தொண்டைப்பற்றியும் பேசிவிட்டு அவர் இன்னும் நெடுங்காலம் ஆரோக திடகாத்திரராய் இருந்து தமிழ்மக்களுக்குத் தொண்டாற்றுமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துப் பேசினர். பிறகு அக்கிராசனர் முடிவுரையுடனும் வந்தனோபசாரத்துடனும் எல்லோருக்கும் சந்தனம், வெற்றிலை, பழம் முதலிய வழங்கப்பெற்றுக் கூட்டம் இனிது கலைந்தது.

—சு. மி. 9—3—35.

திருநெல்வேலி

டாக்டர் உ. வே. சாமிநாதையர் எண்பதாம்ஆண்டு நிறைவுவிழா இன்று மாலை இந்துகலாசாலையில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. விழாவிற்குப் பிரபல தமிழ் வித்வானும் கவிஞருமான ராவ் சாகிப் வி. பி. சுப்பிரமணிய முதலியார் தலைமை வகித்தார்.

இவ்வூரிலுள்ள பிரமுகர்கள் பலர் விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் தமது முகவுரையில் சொன்னதன் சுருக்கமாவது:—ஐயரவர்கள் சடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழுக்குச் செய்திருக்கும் சேவையை அறியாதார் இருக்க மாட்டார்கள். அவர்களுடைய பரிபூரண பாண்டித்தியத்தையும் உதாரகுணத்தையும் எல்லாரும் அறிவார்கள். சங்க கால இலக்கியங்களை ஏடுகளிலிருது தேடி ஆராய்ந்து அச்சிடுவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட விடாமுயற்சியையும் தமிழ்பால் அவர் கொண்டிருக்கும் அன்பையும் பக்தியையும் வியக்காமலிருக்க முடியாது. ஐயரின் அறிவின் திண்ணமும், நீளமும், அகலமும், ஆழமும் அதியற்புதமானவை. பத்துப் பாட்டைப் பதிப்பித்தற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட சிரமமும் அதில் அவர் காட்டியிருக்கும் விரிந்த அறிவும் பாண்டித்யமும் ஒப்பற்றவை. அந்த ஒரு இலக்கியத்தைப் பதிப்பித்திருந்தாலே ஐயரவர்களின் கீர்த்தி நிலைநிற்கும்; தமிழுக்கு டாக்டர் சாமிநாதையர் செய்திருக்கும் அரிய சேவையை என்றும் மறக்க முடியாது. ஐயரவர்களின் சங்ககால இலக்கியப் பதிப்புக்கள் வெளிவராவிட்டால் தமிழரின் பண்டை நாகரிகத்தைப்பற்றியும் அவர்களுடைய கலைகளைப் பற்றியும் தெளிவான அறிவு இருக்காது. இந்தக் கொண்டாட்டத்தில் நான் மன மகிழ்ச்சியுடன் கலந்துகொள்கிறேன்.

டாக்டர் சாமிநாதையரின் உருவப்படத்தைத் திறக்கும்போது ஸ்ரீமான் கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்., தாம் ஐயரின் மாணாக்கரென்றும், அவருடைய பாண்டித்தியமும், விரிந்த அறிவும், நிறைந்த அன்பும், விடாமுயற்சியும், தமிழ்பால் காட்டியிருக்கும் பேரன்பும், தெய்வ பக்தியும் உலகமெல்லாம் போற்றத்தக்கவை என்றும் சொல்லி, டாக்டர் சாமிநாதையர் தமது மாணாக்கர்கள் மீது காட்டியிருக்கும் அன்பைப்பற்றியும் அவர்போதித்த முறைகளைப்பற்றியும் பேசினார். கடைசியில் ஸ்ரீமான் சுப்பிரமணிய பிள்ளை, டாக்டர் சாமிநாதையர்மீது பாடியிருக்கும் ஒரு அகவற் பாவை வாசித்தார்.

டாக்டர் சாமிநாதையரின் சேவையைப் பெரிதும் பாராட்டியும் அவருக்கு நீண்ட ஆயுளும் ஆரோக்கியமும் அளிக்கவேண்டுமென்று இறைவனை வேண்டியும் ஒரு தீர்மானத்தை ஸ்ரீமான் ஸாது கணபதி பந்துலு காரு பிரேரணை செய்ய, அது பப்ளிக் பிராஸிகூடர் ராவ் சாகிப் பி. ஆவுடையப்ப பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டது. ஸ்ரீமான்கள் ஜே. சக்கரபாணி நம்பியார், அ. ஸ்ரீனிவாச இராகவன், பி. எஸ். விஸ்வநாதையர், வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியார் இவர்கள் ஆதரித்தார்கள். எல்லோரும் ஐயரவர்களின் பாண்டித்தியத்தையும் குணாதிசயங்களையும் புகழ்ந்து உருக்கமாகப் பேசினார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்படி தீர்மானத்தை அவர்களுக்கு அனுப்பவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

தலைவரின் பின்னுரைக்கு அப்புறம் வித்துவான் பி.கே. அருணாசலக் கவுண்டரால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டு விழா இனிது முடிந்தது.

—சு. மி.—9—3—35.

மேடை கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

1. டாக்டர் மகாமகோபாத்தியாய திராவிட வித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி சாமிநாதையரவர்கள் சென்ற அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட காலமாகப் பழந்தமிழ் நூல்களைத் தேடி ஆராய்ந்து அச்சிட்டுத் தமிழுக்கு என்றும் அழியாத ஒப்பற்ற பெருந்தொண்டு ஆற்றிவருவதை இம்மகாநாடு பெரிதும் போற்றிப் பாராட்டுகின்றது. அன்றியும் ஐயரவர்கள் இன்னும் பல ஆண்டுகள் தமிழுக்கும் தமிழருக்கும் பெரும்புகழ் அளிக்கும் தொண்டாற்றிவருமாறு ஐயரவர்களுக்குப் பூரண ஆயுளையும் அரோகதிடகாத்திரத்தையும் அளிக்கும்படி எல்லாம் வல்ல இறைவனை இம் மகாநாடு பிரார்த்திக்கின்றது.

2. பாராட்டுத் தீர்மானத்தை ஐயரவர்களுக்கு அறிவிக்கும்படி இம் மகாநாடு தீர்மானிக்கின்றது.

———

திருவனந்தபுரம்

ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ்க்கழகம்

இக்கழகத்தின் சார்பாக மார்ச்சுமீ 6-ஆம்வ புதன்கிழமை யன்று மாலை 3 மணிக்கு மகாமகோபத்தியாயர் டாக்டர் V. சுவாமிநாத ஐயர் அவர்களின் எண்பதாம் ஆண்டின் நிறைவுவிழாவைக் கொண்டாடுதற்கு, காலேஜ் பிரின்ஸிபால், திருமிகு. C.V. சந்திரசேகர ஐயர் அவர்களின் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் காலேஜில் வடமொழி தென்மொழிகட்குத் தலைமை வகிக்கும் திருவாளர் V. கிருஷ்ணன் தம்பி அவர்களும் (Superintendent of Studies in Sanskrit and Dravidian Languages) ஆங்கில அஸிஸ்டெண்ட் புரொபஸர் திரு S. ராம ஐயர் அவர்களும் (Asst. Professor in Eng.) வந்திருந்து கூட்டத்தை யலங்கரித்தார்கள்.

காலேஜ் தமிழாசிரியர், திரு A. S. முத்தையா முதலியார் அவர்களும் மூன்று மாணவர்களும் சாமிநாத ஐயர் அவர்களின் இயல்பு, வேலை, திறமை முதலியவைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றினர்கள்.

அடியிற்கண்ட தீர்மானம் நிறைவேறித் தந்திமூலம் செய்தி மதராஸ் கொண்டாட்டக் கமிட்டியாருக்கு அனுப்பப்பட்டது.

டாக்டர் சாமிநாத ஐயர் அவர்கள் நீண்ட காலம் வாழவேண்டுமென்ற செய்தியையும் சந்தோஷத்தையும் ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ்க் கழகம் தெரிவித்துக்கொள்கிறது.

கடைசியாகத் தலைவரவர்கள் முடிவுரை கூறியதும் கூட்டம் கலைந்தது. முடிவுரையில் தலைவர் அவர்கள் Dr. சுவாமிநாத ஐயர் தமிழுலகத்தில் ஓர் திலகம் போன்று விளங்குகின்றனர் என்றும், அன்னவரின் ஆண்டு நிறைவு விழாவைப் பார்ப்பனரும் பார்ப்பனரல்லாதாரும் இனிது கொண்டாடுகின்றார்கள் என்றும், பிராமணர்களும் தமிழர்கள்தான் என்பதை உணருகிறார்கள் என்றும் இனிய செந்தமிழ் நடையில் பேசினர்கள்.

—தமிழன்—17—3—35.

திருவிடைமருதூர்

தாக்ஷிணாத்யகலாநிதி மகாமகோபாத்யாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 81-ஆவது பிறந்தினவிழா திருவிடைமருதூர் திருவாவடுதுறை ஆதீனம் ஹை ஸ்கூலில் ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் 6-3-35-ல் இனிது கொண்டாடப்பெற்றது. மேற்படி ஸ்கூல் ஹெட் மாஸ்டரும் கரஸ்பாண்டெண்டும் ஆகிய ஸ்ரீமான் பரமசிவ ஐயர், பி. ஏ., எல். டி. மேற்படி கொண்டாட்டத்திற்குத் தலைமை வகித்து ஐயருடைய திருவுருவப் படமொன்றைத் திறந்து வைத்து மாலைசூட்டி அவர்களது புகழை மாணவரும் பிறரும் நன்குணர இனிது கூறினர். மேற்படி ஸ்கூல் தலைமைப் பண்டிதராகிய ஸ்ரீமான் கே. எஸ். பாலசுப்பிரமணியக் கவிராயர் ஐயருடைய திவ்ய சரித்திரத்தையும் தமிழ் நாட்டிற்கு அவர்கள் செய்துள்ள செயற்கருஞ் செய்கை நலன்களையும் விரித்துக் கூறினர்.

பின்பு தலைவர் ஐயரால் எழுதிப் பதிப்பிக்கப்பட்ட மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை சரித்திரத்திலிருந்து ஐயரவர்களைப் பற்றிய சில குறிப்புக்களை விளக்கிப் பாராட்டினர்கள்.

முடிவில் வாழ்த்துக்கள் கூறப்பட்டுச் சந்தன தாம்பூலாதிகள் வழங்கிச் சபை நிறைவுற்றது. சு. மி.

பாப நாசம்

பாபநாசம் விக்டோரியா ஹை ஸ்கூல் மாணாக்கர்கள் இவ்விழாவைக் கொண்டாடினர்கள். தஞ்சை ஸ்ரீமான் உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் தலைமையில் விழா நடைபெற்றது. ஐயரவர்களுடைய திருவுருவப்படமொன்று திறந்துவைக்கப்பெற்றது. ஷி

பள்ளிக்கூடத்தின் முதல் உதவி உபாத்தியாய ராகிய ஸ்ரீமான் வி. ஆர். ஸந்தானமையர், பி. ஏ., எல். டி. அவர்களும் தமிழ்ப்பண்டி தர் ஸ்ரீமான் குழந்தை வேலுப்பிள்ளையவர்க களும் ஐயரவர்களைப்பற்றிப் பேசினர்கள். தலைவர், ஐயரவர்களுடைய ஆராய்ச்சிவன்மை யையும் அவர்கள் தமிழுலகத்திற்குச் செய் துள்ள நன்மையையும் எடுத்துப் பாராட்டிப் பேசினர்.

பாலக்காடு

இந்நகர் அரசரங்க விக்டோரியா கலா சாலைத் தமிழ் மாணவர் சங்கத்தின் ஆதரவில் 6 3-35 அன்று சதாபிஷேக விழாவைக் கொண்டாட ஸ்ரீமான் ஆர். திருமூர்த்தி ராவ் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு கூட்டம் கூடியது. பலர் மகாமகோபாத்யாய ஐயரவர் கள் நம் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உழைத்துவரும் அரும்பெருஞ் செயல்களைப் புகழ்ந்துபாராட்டியதோடு, அப்பெரியார் இன்னும் பல ஆண்டுகள் அரோகதிடகாத் திராய் எழுந்தருளியிருந்து மேன்மேலும் புகழுடன்ஓங்கி நம் தாய்மொழியை வளர்த்து வருமாறு திருவருள் சுரக்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதாக ஒரு தீர்மான மும் நிறைவேற்றப் பெற்றது.

புதுக்கோட்டை

புதுக்கோட்டை வாசகசாலை, புத்தக சாலைச் சங்கம் முதலியவற்றின் ஆதரவில் பாலையா பள்ளிக்கூடத்தில் இக்கொண்டாட் டத்தை உத்தேசித்து ஒரு கூட்டம் கூடியது. பள் ளிக் கூட டிப்டி இன்ஸ்பெக்டராக இருந்து உபகாரச் சம்பளம் பெற்றவரும் ஸ்ரீமான் என். எஸ். நாராயணசாமி ஐயரவர் கள் தலைமைவகித்தார். பலர் பேசினர். ஐய ரவர்களைப் பாராட்டியும் ஐயரவர்களுடைய நீண்ட ஆயுளைக் குறித்துக் கடவுளைப் பிரார்த் தித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற் றன.

புலவர்நத்தம்

மகாவித்துவான் டாக்டர் உ. வே. சாமிநா தையர் அவர்களைப் பாராட்டிப் போற்றும் நோக்கத்துடன், புலவர்நத்தம் கிராமத்தில் ஜனப் ஷேக் ஜெயினுலாப்தீன் சாஹிப் அவர் கள் தலைமையில் ஒரு பாராட்டுக் கூட்டம் கூடியது. பல புலவர்கள் ஐயரவர்களைப் போற்றி யாத்த கவிகள், திரு. நாராயண ஐயங் காரால் படிக்கப்பட்டன. புலவர்நத்தம் என்ற அந்தக் கிராமத்தின் பெயரை டாக்டர் சாமிநாதையரின் ஞாபகார்த்தத்தை உத்தே சித்து மாற்றி, சாமிநாதபுரம் என்று பெய ரிட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

—தாருல் இஸ்லாம்—10—4—35.

மங்களூர்

மார்ச்சுமீ 6-ஆம் உ மாலை 6-30 மணிக்கு மங்களூரிலுள்ள தமிழ் மக்கள் ஒன்று கூடி இவ்விழாவை உள்ளால் ரகுநாதையா மெ மோரியல் ஹாலில் கொண்டாடினர்கள். அச் சமயம் மங்களூரில் அலியோஷிஸ் கலா சாலைக் கணிதப் பேராசிரியர் ஸ்ரீமான் எஸ். இராமச்சந்திரையரவர்கள் அக்கிராசனம் வகித்தனர். பின்வரும் தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன:—

1. இந்த மங்களூர், தமிழ்க் கூட்டமா னது மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலா நிதி டாக்டர் சாமிநாதையரவர்கள் செய் துள்ள அரும்பெருந்தொண்டைப் பாராட்டு கிறது.

2. இறைவன் அவர்களுக்கு இன்னும் ஆரோக்கியத்தையும் ஆயுளையும் கொடுத்துத் தமிழ்மொழியை இதுகாறும் பாலித்தது போல் பாலிக்க அநுக்கிரகிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

3. மங்களூரிலுள்ள தமிழ்மக்களின் நன்மைக்காக ஐயரவர்கள்போல் ஒரு புத்தக சாலையைப் புதுவருஷப் பிறப்பன்று ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கிறது.

4. இந்தத் தீர்மானங்களை ஐயரவர்களுக்குத் தெரிவிக்கும்படி இந்திய ஊழிய சங்கத்து அங்கத்தினராகிய சி. ரா. வேங்கடராமன் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

மதுரை

அமுதினும் இனிய தமிழ்மொழியும் தமிழ் நாடும் செய்த தவப்பேற்றால் உத்தமதானபுரத்துதித்துத் தமிழணங்கைப் பல்லாண்டுகளாகத் தாமியற்றும் நற்பணிகளால் அலங்கரித்து வருபவர்களாகிய ப்ரஹ்மஶ்ரீ மஹாமஹோபாத்யாய த்ராவிடவித்யாபூஷண தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் சதாபிஷேக மஹோத்ஸவக் கொண்டாட்டம், நாளிது பவ ஜூலை மாசிமீ 23உ (6—3—35) புதன்கிழமை மாலை 5½ மணி முதல் 8½ மணிவரை மதுரைத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தாராலும் மதுரை ராமநாதபுரம் ஜில்லாப்பண்டிதர் சங்கத்தாராலும் ஒருங்கு சேர்ந்து பெருஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

அவ்வமயம் தமிழபிமானமிக்க புலவர்பெருமக்களும் வழக்கியலறிஞர்களும் செல்வர்களும் பிறரும் திரளாக விஜயம்செய்திருந்தனர்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உபாக்ராஸநர் ஶ்ரீமான் T. C. ஶ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L., M.L.C. அக்ராஸநராக வீற்றிருக்கக் கடவுள்வாழ்த்துடன் ஸபைநிகழ்ச்சி தொடங்கிற்று.

முதலில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் சார்பாக, மஹாமஹோபாத்யாய ஐயரவர்களின் அருமை பெருமைகளைப் பாராட்டிச் செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் T. K. இராமாநுஜையங்கார் இயற்றிய வாழ்த்துப்பத்திரம் அவரால் படிக்கப்பட்டது. அதன்மேல் தமிழ்ச்சங்கக் கலாசாலை ஆசிரியர் ஶ்ரீமத் பண்டித ஹரிஹரையரவர்கள் தாம் இயற்றிய வாழ்த்துப்பாடல்களையும், யாழ்ப்பாணத்துப் பரமேசுவரக்கல்லூரித் தமிழாசிரியர் ஶ்ரீமத் K. S. நவநீதகிருஷ்ண பாரதியவர்கள் இயற்றியனுப்பியிருந்த நாண்மங்கல வாழ்த்தையும், கும்பகோணம் டவுன் ஹைஸ்கூல் தமிழாசிரியர் ஶ்ரீமத். ஊ. சா. வேங்கடராமையரவர்கள் எழுதியனுப்பிய எண்பத்தொன்றும் பிறந்தநாள் என்ற கட்டுரையையும் படித்தார்கள்.

பின்பு மதுரை அமெரிக்கன் கல்லூரித் தமிழாசிரியர் திரு. ஆ. கார்மேகக் கோனரவர்கள், யாழ்ப்பாணத்துத் தமிழ்த்தொண்டன் பத்திராசிரியர் திரு. V. M. கனகசுந்தரம் அவர்கள், மதுரையிலுள்ள இராமேசுவர தேவஸ்தான மஹாபாடசாலைப் பிரின்ஸிபால் ஶ்ரீமத். V. சுப்பிரமணிய ஐயரவர்கள் B. A. L. T., ஶ்ரீ. உ. வே. வித்வான் காண்டீர் ராமாநுஜாசாரியரவர்கள், ரிடையர்டு சிரஸ்தேதார் திரு. முத்திருளாண்டிப் பிள்ளையவர்கள், மதுரைக் கல்லூரி ஆசிரியர் ஶ்ரீமத். C. V. கிருஷ்ணமூர்த்தி ராவ், M. A. அவர்கள், திரு. R. ராமஸ்வாமி அவர்கள், மதுரைக்கல்லூரித் தமிழாசிரியர் திரு. பண்டித. ஆ. அரங்க ராமாநுஜம் பிள்ளையவர்கள், மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவர் குருசாமி, ஶ்ரீநிவாஸன் ஆகிய இவர்கள் இற்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்குமுன் தமிழ்மொழியடைந்திருந்த தாழ்நிலையையும், பின் ஐயரவர்கள் நன்முயற்சியால் தமிழ்மொழி யடைந்த உயர்நிலையையும், ஐயரவர்களாற்றிவரும் தமிழ்ப்பணியின் சிறப்பினையும், அவர்களுடைய ஞான சீலங்களையும், பெருந்தகைமையினையும், அவர்கள் தம்பால்வரும் மாணவரைப் பலகலையுணரும் பருணிதராகப் பயிற்றுவிக்கும் பான்மையினையும், அவர்கள் தம் ஆசிரியரிடத்துக் கொண்ட பெரும்பற்றினையும் பலபடியாக விரித்து உபந்யஸித்தார்கள்.

பின்னர், செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஶ்ரீ. உ.ப. வே. திரு. நாராயணையங்காரவர்கள், ஐயரவர்கள் தம் நூற்பதிப்புக்களால் தமிழ் மொழிக்குச் செய்துவரும் பேருபகாரத்தையும்,

மரபிற்றிரியாமாண்பினவாக உரையும் பாட்டு மியற்றும் ஐயரவர்களின் நிறைபேராற்றலையும் பாராட்டி, ஐயரவர்கள் ஜீவியசரிதம் தமிழுலகுக்குப் பலவகையாலும் மிகுந்த பயனளிக்கத் தக்கதென்றும், அதனை ஒருசிறிதும் எஞ்சாதெழுதல் அவர்களுக்கே இயல்வதென்றும், மேனாட்டறிஞர் தம் சரிதம் தாமே எழுதியுதவுதல்போல இவர்களும் தமிழறிஞர் வேண்டின் தம்சரிதம் எழுதியுதவ இசையக் கூடுமென்றும் பேசி,

"ப்ரஹ்மஶ்ரீ மஹாமஹோபாத்யாய திராவிட வித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களை அவர்களுடைய ஜீவியசரித்திதை அவர்களே எழுதித்தர வேண்டுமென்று இச்சபையார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்"

என்ற பிரேரணையை விவரித்துப் பிரேரிக்க, மதுரைப் புத்தக வர்த்தகரும் தமிழ்வளர்ச்சியிற் பெரும் பற்றுடையவரும் அதற்கு உதவி வருபவரும் ஆகிய ஶ்ரீமான். இ. மா. கோபாலகிருஷ்ணக் கோனரவர்கள் ஐயரவர்கள் சரிதம் புத்தக உருவில் வெளிவருவது மிகவும் அவசியமென்று வற்புறுத்தி ஆமோதிக்க, ஸபையோரால் பெருமகிழ்ச்சியுடன் ஒருமுகமாக அங்கீகரிக்கலாயிற்று.

அதன்மேல், ஸபைத்தலைவரான ஶ்ரீமான் T. C. ஶ்ரீநிவாஸையங்காரவர்கள், தமிழ் மொழியையும் தமிழ்ப்புலவர்களையும் ஸேதுமன்னர் முதலிய புரவலரும், திருவாவடுதுறை முதலிய ஆதீன கர்த்தர்களும் ஆதரித்துப் போற்றிவருமாறும், ஐயரவர்களுக்கு ஆசிரியராகிய மஹாவித்வான் மீநாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள் சீர்மை விளங்குமாறும், ஐயரவர்கள் பிள்ளையவர்களாலும், திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஶ்ரீலஶ்ரீ சுப்பிரமணிய தேசிகராலும், சுப்பராய செட்டியார் தியாகராய செட்டியார் சேலம் ராமஸ்வாமி முதலியார் அரங்கநாத முதலியார் முதலிய தக்கோர்களாலும் நன்கு மதிக்கப் பெற்றவாறும், சிந்தாமணி முதலிய நூல்கள் அச்சிற்பதிக்கப் பெற்றவாறும், ஐயரவர்களுடைய இடைவிடா உழைப்பும் ஊக்கமும் இத்தகையவென்பதும், ஐயரவர்கள்சரிதம் தமிழ்மக்களுக்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றென்பதும், அதனை யெழுதத் தக்கவர்கள் அவர்களே என்பதும், அதனை அச்சிட்டு வெளியிடத்தக்கார் அது விஷயமான பிரேரணையை ஆமோதித்துப்பேசிய ஶ்ரீமான் கோபாலகிருஷ்ணக் கோனரவர்களே என்பதும் நன்கு விளங்கச் சற்றேறத்தாழ ஒரு மணிநேரம் அரியதோர் விரிவுரையாக முடிப்புரை கூறினர்கள்.

பின்னர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் கௌரவகாரியதரிசியாகிய ஶ்ரீமான் N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் வந்தனோபசாரங் கூறுமுகத்தால் ஐயரவர்களுடைய நன்முயற்சியால் தமிழ்மொழியேயன்றித் தமிழ்நாடும் பிறர் நன்குமதிக்கத்தக்க நிலையையடைந்ததென்றும், தமக்கு அவர்களுடன் நெருங்கிய பழக்கமுண்டென்றும், அவர்களுடைய குணவிசேஷங்கள் மிகவும் கொண்டாடத்தக்கனவென்றும் கூறி, ஐயரவர்கள் இன்னும் பல்லாண்டு ஆரோகதிடகாத்திரராய் வீற்றிருந்து தமிழ்ப்பணிபுரிந்துவாழ அருள்புரியுமாறு எல்லாம்வல்ல இறைவனைப்பிரார்த்தித்து, சங்கத்தார் அழைப்புக்கிணங்கி இக்கொண்டாட்டத்துக்கு வந்து ஸபையை அலங்கரித்த கனவான்களுக்கும், உபந்யஸித்துக் கொண்டாட்டத்தைச் சிறப்புறச்செய்த புலவர்பெருமக்களுக்கும் நன்றிசெலுத்தக் கடவுள் வாழ்த்துடன் ஸபைநிகழ்ச்சி இனிது நிறைவெய்தியது.

சங்கத் தமிழ்ப்பனுவல் சாலப் பதித்துதவி [ல்
எங்கட் கிதயத் திருள்கடிந்து—தங்குதலா
ஓராழி யான்போல் உலகுதொழ வாழிபெரும்
பேரா சிரியர் பிரான்.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

—செந்தமிழ்—பவஹ—பங்குனிமீ.

மன்னார்குடி

டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் 81-ஆவது ஆண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படம் நாஷனல் ஹை ஸ்கூல் சங்கரா ஹாலில் நேற்று மாலை கௌமார குருகுலத் தலைவர் ராவ் சாகிப் சு. வி. கனகசபைப் பிள்ளையால் திறந்துவைக்கப்பட்

டது. இந்தப் படம் மாணவர்களின் நன் கொடையாலேயே வரங்கப்பட்டதென்று தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் எஸ். வைத்தியநாத ஐயர் கூறினர். ராவ் சாகிப் சு. வி. கனக சபைப் பிள்ளை தமிழ்ப்பாஷையின் அபிவிருத்திக்கு டாக்டர் செய்த அருந்தொண்டைப் பாராட்டினர். ஸ்ரீமான் ஏ. ராமசுப்பா முதலியார் டாக்டர் சாமிநாத ஐயரின் அரிய குணங்களைப்பற்றியும், அவருக்குத் தமிழில் உள்ள ஒரு பேரவாவைப்பற்றியும், அவர் தமது இளமைப்பருவத்தில் யாரிடம் கல்வி பயின்றாரென்பதைப் பற்றியும் ஸ்ரீமான்கள் சோமசுந்தரம் பிள்ளை. வி. எஸ். விசுவநாத ஐயர், டி. என். ஸ்ரீனிவாச ஐயங்கார் இவர்கள் டாக்டர் ஐயரின் தமிழ்ப் புலமைகுறித்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள்.

சு. மி.—9—3—35.

மோகனூர்

இவ்வூர்த் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் கா. பொ. மீனாக்ஷிசுந்தரம் செட்டியாரவர்கள் தலைமையில் இக்கொண்டாட்டத்தை நிகழ்த்த ஒரு கூட்டம் கூடியது. பலர் பேசினர்கள். ஐயரவர்கள் உருவப்படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

வாணியம்பாடி

வாணியம்பாடி இந்திய இளைஞர் சங்கத்தின் ஆதரவில் இக்கொண்டாட்டம் கொண்டாடப்பெற்றது.

வாணியம்பாடி பெண்ட்லண்ட் டவுனிலுள்ள இந்திய இளைஞர்சங்கத்தினரால் மங்களம் மிகுந்த 6—3—1935 புதன்கிழமையாகிய அன்று மாண்புமிக்க செந்தமிழ்த் தாயின் அருந்தவப் புதல்வரும் தமிழ்மொழியிற் பலவகையான இலக்கிய இலக்கண நூல்களைப் பன்முறையும் நன்கு ஆராய்ந்து பரிசோதித்துப் பிழையறப் பதிப்பிப்பதில் தமக்கு நிகரற்றவரும் தமது வாழ்நாளைத் தமிழ்த்தாயின் திருப்பணியாற்றுதலிலேயே அர்ப்பணம் செய்து ஊக்கத்தோடு உழைத்து வருபவரும், தமிழ்ப் பெருமக்கள் திருவுள்ளத்தே வீற்றிருப்பவரும், புலவர் திலகரு மாகிய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிடவித்யா பூஷணம் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களது எண்பதாவது ஆண்டு நிறைவுவிழாவினைப் பெரு மகிழ்வுடன் கொண்டாடியதோடு ஆசிரியர் பெருமான் அவர்கட்குத் தமிழ் மொழியாக்கங்களுதி அரோகதிடகாத்திரம் நீடிய ஆயுள் முதலிய பல நலன்களும் அருளுமாறு எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளின் திருவடிகளைச் சிந்தித்து வந்திப்பதாக ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

வாலாஜாபாத்

வாலாஜாபாத் இந்துமதபாடசாலை மெய்கண்டார் மாணவர் கழகத்தின் சார்பாக (6-3-35) புதன்கிழமை மாலை 4-மணிக்கு இந்துமதபாடசாலை ஆசிரியர் ஸ்ரீ. வி. டி. ராஜகோபால ஐயங்கார் தலைமையில் ஓர் கூட்டம் கூடியது. அதுகாலை இந்துமதபாடசாலைத் தமிழாசிரியர்கள் ஸ்ரீமான்கள் கீ. சாமிக் கண்ணும் அ. மு. பரமசிவானந்தமும் தணிகைராயனும் டாக்டர் சாமிநாத ஐயர் தமிழுலகுக்குச் செய்த நன்மைகளையும், அவர் பதிப்பித்த புத்தகங்களின் பொருள்களையும் எடுத்துக்கூறி அவர் பல்லாண்டு பொலிவுறுமாறு வாழ்த்தினர். இன்னும் சில ஆசிரியர்கள் தொடர்ந்து பேசினர். பிறகு ஐயருக்கெனக் கழகத்தின் சார்பாக வாழ்த்துப் படிக்கப் பெற்றது. பிறகு அன்னார்க்கு நீண்ட ஆயுளை அளித்துத் தமிழ் நாடு நன்மை அடையச் செய்யும் வண்ணம் இறைவனைப் பிரார்த்திக்கக் கூட்டம் இனிது கலைந்தது.

தினமணி— 9—3—35.

வெளி நாடு

யாழ்ப்பாணம்

I

மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் திரு. உ. வே. சாமிநாதையர் அவர்களின் நூற்றாண்டு விழா திருநெல்வேலி கிழக்குச் செங்குந்தத் தமிழாங்கிலவித்தியா சாலை மாணவர் கல்விக் கழகத்தினரால் சென்ற புதன்கிழமை பின்னேரம் 4 மணியளவில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை, B.A. அவர்களின் தலைமையின்கீழ் சிறப்பாக நடைபெற்றது.

அக்கிராசனர் முதலில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதன் நோக்கத்தைச் சுருக்கமாக எடுத்துக் கூறியதன்பின், ஆசிரியர் திருவாளர் T. சதாசிவம் அவர்கள் பின்வரும் நிர்ணயத்தைப் பிரேரித்தனர்:

"மஹா மஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் சென்ற ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ் மொழிக்கு ஆற்றிவரும் ஒப்புயர்வற்ற அரும் பெருந்தொண்டைப் பாராட்டுவதோடு மேலும் இவ்வரிய தொண்டிற் பல்லாண்டு ஈடுபட்டு உழைக்க அருள்புரியுமாறு இக் கழகம் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றது."

ஆசிரியர் திரு. S. ஆனந்தம் அவர்கள் இப் பிரேரணையை அநுவதித்துப் பேசினர். சபையோர் ஏகமனதாக நிர்ணயத்தை ஏற்றுக் கொண்டனர்.

சற்றில் அக்கிராசனர், சாமிநாதையர் சரித்திரத்தை விரிவாக எடுத்துரைத்தார். அதன் சுருக்கம் இங்கே தரப்படுகின்றது.

திரு. சாமிநாதையர் அவர்கள் கும்பகோணத்துக்கு மேற்கே பத்துமைல் தூரத்திலுள்ள உத்தமதானபுரத்தில் சங்கீத வித்துவான் திரு. வேங்கட சுப்பையருக்கும் திருமதி. ஸரஸ்வதியம்மாளுக்கும் புத்திரராக 1855-ஆம் ஆண்டு பிறந்தனர்.

இவர் திரு. ஆறுமுக நாவலர், திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை முதலியோர்போலப் பழைய நூல்களை அச்சிட்டு வெளியிடுந் தொண்டில் பெரிதும் ஈடுபட்டவர். தமது விடாமுயற்சியால் தமிழருடைய பழைய சங்க நூல்களை யாவருக்கும் பயன்படுமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

இவர் பெருமையைப்பற்றி அக்கிராசனர் கூறுமிடத்து இவர் முதலில் வித்துவான்களிற் சிறந்த மீனாட்சி சுந்தரம் பிள்ளையை யடைந்தும், பின் சைவாதீனங்களில் பெரிது ஆதிக்கம் பெற்றுள்ள திருவாவடுதுறை யாதீனத்தை அடைந்தும், பின் சென்னைக் கல்லூரிகளிற் சிறந்த இராசதானிக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியர் பதவியைப் பெற்றும், இன்னும் மதுரைத் தமிழ்ச் சங்கம், சென்னைச் சர்வகலாசாலை முதலிய வித்துவ அங்கத்தினருள் ஒருவராகி யமர்ந்தும் தமிழ்நாட்டில் தமது பெருமையை என்றைக்கும் நிலை நாட்டியுள்ளார்.

இவர் இயற்றிய நூல்களை மூன்று பகுதியாகப் பாகுபாடு பண்ணி ஒவ்வொன்றின் சிறப்பையும் எடுத்துரைத்தனர். சாமிநாதையருடைய பதிப்பு நூல்களை அவருக்கு எல்லாப் பெருமையையுங் கொடுத்தன. ஆங்கில நூல்களைப் பதிப்பிக்கும் முறையை முதல் முதல் பின்பற்றியவர் ஐயரவர்களே. ஆகையாற்றான் ஐயரவர்களுடைய பதிப்புக்கள் சிறப்புவாய்ந்தன. ஐயரவர்கள் அநேகம் பாநூல்களை வெளியிட்டதாகத் தெரியவில்லை. 1891-ஆம் ஆண்டு அவர் கொழும்புத்துறை தண்டபாணி சுவாமி பேரில் விருத்தமும் ஊஞ்சலும் பாடியுள்ளார்.

பாக்கள் சொல்லினலும் பொருளினலும் சிறந்து விளங்குகின்றன. இவருடைய பாக்கள் இவருடைய வசனங்களிலும் பார்க்கப் பெரிதும் போற்றத்தக்கன. இவர் 44 வருடங்களுக்குமுன் தமிழில் வைத்த பற்றை, 'தேமேவு செந்தமிழ்ச்சொல் செழித்து வாழ' என்னும் தண்டபாணி ஊஞ்சற்பாகம் நன்கு விளக்குகின்றது. தண்டபாணிமீது கீர்த்தனங்களும் பாடியுள்ளார். கீர்த்தனங்கள் படிப்பவர்க்கு இனிமை பயக்கவல்லன. ஐயரவர்களது சங்கீதத் திற்மையையும் இக் கீர்த்தனங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஐயரவர்கள் பல கீர்த்தனங்கள் பாடியுள்ளார் என்றும், அவைகளை விரைவில் வெளியிடுவா

ரென்றும் அறியக்கிடக்கின்றது. அவர் சில வசனநூல்களையே எழுதியிருக்கின்றனர். புத்த சரித்திரம், மணிமேகலை கதை, உதயணன் கதை இவைகள் மூலங்களை ஒட்டி நன்கு எழுதப் பெற்றுள்ளன. அவர் இயற்றிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம் அமைப்பில் மிகச் சிறந்தது. ஆங்கில பாஷையிலுள்ள சரித்திரங்களுக்குச் சமமானது. சரித்திரத்தைப் பாகுபாடு செய்து எழுதிய முறை பெரிதும் போற்றத்தக்கது. திரு. ரா. இராகவ ஐயங்கார், திரு. சுவாமி வேதாசலம், திரு. வேங்கடசாமி நாட்டார், திரு. கணேசையர் முதலியோருடைய வசனங்களைப் போல் இறுக்கமின்றிப் பேச்சுநடையில் எழுதப்பெற்றுள்ளது.

இவர் காலத்திலிருந்த யாழ்ப்பாணப் புலவர்கள் பெரும்பாலும் கண்டனஞ் செய்வதிலேயே காலங்கழித்து வந்தனராகையால், பெரிய வேலைசெய்தவர்கள் மிகச் சிலரேயாவர். 'இலங்கைநேசன்', 'உதயபானு', 'உதயதாரகை' முதலியவற்றின் பழைய இதழ்களைப் பார்க்கும்போது யாழ்ப்பாணப் புலவர்கள் கண்டனம் எழுதுவதில் அடைந்துள்ள திறமை நன்குவிளங்கும். சாமிநாதையர் கண்டனங்களைக் கவனியாது தாம் ஈடுபட்ட வேலையைச் செய்து பெருமையடைந்தவர். சன்னகம் முருகேச பண்டிதரும், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் அவரை வாதுக்கு வலிந்து இழுத்தும் அவர் முன்வரவில்லை.

அக்கிராசனர் அவரது பெருமைக்கு முக்கிய காரணம் அவரது ஊக்கமும், தமிழ் மொழிப் பற்றும் என்றுகூறி முடித்தனர்.

—ஈழகேசரி—10—3—35.

II

இன்று சாயங்காலம் 5-30-மணியளவில் கலாநிலையமண்டபத்தில், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத்தாராலும் கலாநிலையத்தாராலும் இருகாரணங்கள்பற்றி ஓர் பகிரங்கக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் நோக்கங்கள் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடைய 80-ஆவது ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடவும், அத்தமிழ்ப் பெருமகனின் உருவப்படத்தைக் கலாநிலைய மண்டபத்தில் திறந்து வைக்கவும், ஆரியதிராவிட பாஷாபிவிருத்தி சங்கஸ்தாபகரும் லிகிதருமாகிய பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் இங்கிருந்து வித்தியாதரிசியாகக் கண்டிக்கு மாறிப்போவதனால் பிரியாவிடை கூறவுமாகும்.

தமிழ்த் தாதா வென்பதாகத் தமிழ்நாடு முழுவதிலும் சிறுவர்களாலும் முதியோர்களாலும், பண்டிதர்களாலும், பாமரர்களாலும், போற்றி நேசிக்கப்படுகின்ற திராவிட வித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 80-ஆவது ஆண்டுப் பூர்த்திவிழாக் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. அத்தருணம் அரசாங்க சபை அங்கத்தவராகிய திரு. நெவின்ஸ் செல்வத்துரைப் பிள்ளையவர்கள் ஜே. பி. எம். பி. ஈ. தலைமை வகித்தார். அப்போது அவர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் வருமாறு:—

"நான் 1883-ஆம் ஆண்டு சென்னையில் வாசித்துக் கொண்டிருந்தபோது டாக்டர் சாமிநாதையரவர்கள் கும்பகோணம் அரசாங்கக் கலாசாலையில் தலைமைத் தமிழ் ஆசிரியர்காக் கடமை பார்த்து வந்தார். அக்காலத்தில் அவர் எங்கும் பிரசித்தியடைந்தவராகத் தோன்றுவிட்டாலும், தமிழ்த்தொண்டில் ஆர்வமுடையவரென்பதாக மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் போற்றப்பட்டுவந்தார். யாழ்ப்பாணத்திலே தமிழ்த் தொண்டாற்றிய பெரியார்கள் பலர் முன்னிருந்தார்கள். அவர்களில் முதன்முதலாக நாங்கள் நன்றி பாராட்டவேண்டியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரேயாவர். நாவலரவர்களுடைய உற்ற சினேகிதரும் சகாவுமாகவிருந்து இந்தியாவில் தொண்டாற்றிவந்தவர் ஸ்ரீலஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களாவர். திரு. மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பிரதம சீடரே எங்கள் டாக்டர் சாமிநாதையரவர்கள். ராய் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் நாவலருக்குப் பின் தமிழ் நூல்களைச் செவ்வனே பதிப்பித்தலில் ஊக்கங்காட்டி வந்தனர். அவர்களுக்குப் பின் தமிழ் நூல்களை ஒழுங்காகச் சேகரித்து அச்சிட்டுத் தமிழுலகிற்கு உதவுகின்ற தொண்டு தமிழுலகில் டாக்டர் சாமிநாதையரவர்களாலேயே ஆற்றப்பட்டு வருகிறது. இத்தொண்டினாலேயே கறையானுக்கிரையாகும் ஏட்டுப் பிரதிகளிலிருந்த அனேக அரிய தமிழ் நூல்கள் அர்த்தத்துடனும் குறிப்புரைகளுடனும் வியாக்யானத்துடனும் ஒழுங்காக அச்சிடப்பட்டுத் தமிழ்

உலகிற்கே புத்துயிர் பிறந்தது. எம் மூதாதையராகிய ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்களால் தொடங்கப் பெற்றவோர் தொண்டு, தாமோதரம் பிள்ளையவர்களுக்குப் பின் செய்யப்படுவதற்குத் தமிழுலகில் வேறெவருமின்றி டாக்டர் சாமிநாதையரவர்களால் உயரிய நிலையில் ஆற்றப்பட்டுவந்திருக்கிறது. இத் தொண்டைப் பின்பற்றி இத்தொண்டையே சீவியத்தின் இலக்காக வைத்துக்கொண்டு தமது சீவியத்தையும் இதுபோன்ற உயர்ந்த இலக்குகளுக்காக அர்ப்பணஞ் செய்து எம் இளைஞர்கள் தம்வாழ்க்கையை நடத்துவார்களாக. எமது தாய்ப்பாஷையாகிய தமிழிலிருக்கின்ற இலக்கியங்கள் அழிந்துபோகாவண்ணம் காப்பாற்றும் தொண்டுடன் நில்லாது, எம் இளைஞர்கள் தமிழ்மொழியில் வாழ்க்கைக்கு இன்றியமையாத பௌதிக சாஸ்திரங்கள், புதிய மேநாட்டுக் கலைகள் போன்றவைகளையும் அமைத்தல் வேண்டும். இவை போன்ற தொண்டுகளில் இளைஞர்கள் ஈடுபட்டால்தான் இவ்வகையான விழாக் கொண்டாட்டங்களின் பயன் ஏற்படும். இவைகட்கெல்லாம் முன்மாதிரியாய் விளங்குகின்ற டாக்டர் சாமிநாதையரவர்கள் சிரஞ்சீவியாய் வாழும்படி இறைவன் கிருபை புரிவானாக.

இதன்பின்னர் அவைத்தலைவரவர்கள் டாக்டர் சாமிநாதையரவர்களின் திரு உருவப்படத்தைத் திறந்து பூமாலையுமணிந்து அழகு படுத்தினர்.

அப்பால், வித்துவான் நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்களால் இத்தருணத்திற்கெனப் பாடப்பட்ட வாழ்த்துப்பாக்கள் திரு. கதிர்வேலு அவர்களால் வாசிக்கப்பட்டன. பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயரவர்கள் இப்பாவைப் பற்றிச் சில குறிப்புக்கள் கூறி வியந்தமை குறிப்பிடத்தக்கது.

பாக்கள் வாசித்து முடிந்ததும் பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்கள் டாக்டர் சாமிநாதையரவர்களின் சீவியசரிதையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறியவற்றுட் சில வருமாறு:—

"மகாமகோபாத்தியாயரென்னும் பட்டம் பெற்றவர்கள் பலரிருப்பினும் அப்பட்டம் ஐயரவர்களுக்கே பொருந்தும். ஏனெனில் தமிழாசிரியராக வருகின்ற எவரும் சர்வகலாசாலைப் பரீட்சைக்கென்றாலும் சரி, தமிழ்ச் சங்கப் பரீட்சைக்கென்றாலும் சரி, டாக்டர் ஐயரவர்களின் புத்தகங்களில் நூற்றுக்கு அறுபது வீதமாகவாவது கற்றுக்கொள்ளாமல் பரீட்சைகளில் சித்தியெய்தி ஆசிரியர்களாக வருவது அசாத்தியம். ஆகவே உபாத்தியாயர்களாக இருக்கின்றவர்கள் அனைவருக்கும் உபாத்தியாயராக ஐயரவர்கள் விளங்குகின்றார். அத்தன்மையால் மகாமகோபாத்தியாயரென்னும் பட்டம், பட்டத்தோடுமட்டும் நில்லாது உண்மையளவிலும் டாக்டர் ஐயரவர்கட்குச் சாலவும் பொருந்தும். இருபதாவது நூற்றாண்டு ஆரம்பத்திலே தமிழ்த்தாயின் அணிகலங்களாகிய சிலப்பதிகாரம், சிந்தாமணி, மணிமேகலை, புறநானூறு, கலித்தொகை, ஐங்குறுநூறு, பத்துப்பாட்டுப் போன்றவைகள் தமிழ்த்தாயின் தேகத்தைவிட்டுத் தூரப்பிடித்தகன்று அவையிருந்த இடங்களில் தமிழ்த் தாயின் தேகம் புண்பட்டிருந்தது. அப்புண்களையெல்லாம் ஆற்றி, சிகிச்சை செய்து எம் தாயின் தேகத்தை நன்னிலைக்குக் கொணர்ந்து அவளது அணிகலன்களை இருப்பிடத்திற்கு ஏகுமாறு செய்து, எம் பின்சந்ததியார் எக்காலத்தும் நன்றி கூறும்படியான ரணவைத்தியத்தைச் செய்ததனால் டாக்டர் என்ற பட்டமும் சாமிநாதையரவர்கட்குப் பொருந்தும். பேராசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களது சரித்திரத்தைப்பற்றி டாக்டர் ஐயரவர்கள் எழுதிய புத்தகத்தின் இரண்டாவது பாகத்தில் ஐயரவர்களின் சீவிய சரித்திரத்தைப்பற்றி அநேக குறிப்புக்கள் காணக்கிடக்கின்றன.

இத்துடன் பண்டிதர் கணபதிப்பிள்ளையவர்களின் சொற்பொழிவு நிறைவேறியதன்மேல், பிறக்டர் திரு. V. நாகலிங்கம் அவர்கள் குறிப்புரை கூறினர். அவர்கள் பிரதானமாக ஐயரவர்களுடைய நடுவு நிலைமையையும் சாந்த குணத்தையும் எவருடனாவது கோபமேனும் துவேஷமேனும் காட்டாத உயரிய மனப்பான்மையையும் பற்றிக் கூறிவிட்டு, தமிழன்பனாகிய ஒவ்வொருவனும் ஐயரவர்களின் புத்தகங்கள் அனைத்தும் வைத்திருக்கவேண்டுமெனவும் வற்புறுத்துவதுடன் தம் சொற்பொழிவை நிறுத்தினர். திரு. V. குமாரசாமி அவர்கள் அக்கிராசனம் வகித்த திரு. நெவின்ஸ் செல்வத்துரைப்பிள்ளை அவர்கட்கு நன்றி கூறியதுடன் கூட்டம் நிறைவுற்றது. —ஈழகேசரி—10—3—35.

இரங்கூன்

சாமிநாதையரவர்களின் 81-ஆவது ஜனன விழாவைக் கொண்டாடத் தமிழ் மக்களின் பொதுக்கூட்டம் 6-3-35 மாலை 6 மணிக்கு இரங்கூன் பிகாண்டட் வீதியிலுள்ள ஆரிய சமாஜக் கட்டிடத்தில் பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தலைவர் திரு. சா. அ. ச. ராமன் செட்டியார் தலைமையில் நடைபெற்றது. ஆரியசமாஜஹால் கம்பை தனவைசியர் கல்விக்கழகச் சாரணர்களால் மிகவும் அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்தது. சாமிநாதையரவர்களின் பெரிய உருவப்படம் மலர் மாலையுடன் விளங்கிற்று. அவர் பதிப்பித்த நூல்கள் காட்சியாக வைக்கப்பெற்றிருந்தன. முந்நூற்றவருக்கு அதிகமான மக்கள் விஜயம் செய்திருந்தனர். ஏராளமான ஸ்திரீகளும் கூட்டத்தில் கலந்துகொண்டனர். முதன்முதலில் பி. இ. டி. பெண்பள்ளிக் கூட மாணவிகள் கடவுள் வாழ்த்துப் பாடினர். பின்னர், கம்பை தனவைசியர் கல்விக்கழக மாணவர்கள் தமிழ் வாழ்த்துப் பாடினர்.

தலைவர் முன்னுரையாசப் பின்வருமாறு கூறினர்:—

சகோதரிகளே! சகோதரர்களே! பெருமை வாய்ந்த தமிழ்ப் பெரியார்களே!

தமிழ்த்தாயின் தவப் புதல்வரான மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 81-ஆவது பிறந்தினத்தைக் கொண்டாடவே நாம் இங்குக் கூடியிருக்கின்றோம். பொறுப்பு வாய்ந்த பல சங்கங்களின் சார்பாக்க் கூட்டப்பெற்றிருக்கும் அறிஞர்கள் நிறைந்த இக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படியான கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக நன்றி செலுத்துகின்றேன். சாமிநாதையரவர்களின் 81-ஆவது பிறந்த தினமாகிய இன்று, இக் கூட்டத்திற்குத் தலைமைவகிக்க நேர்ந்ததை எனது பெரும் பாக்கியம் என்று கருதுகின்றேன்.

மகாமகோபாத்தியாய சாமிநாதையரவர்கள் சென்ற ஐம்பது வருடகாலமாகத் தமிழ்த் தெய்வத்திற்குத் திருப்பணிகள் செய்து வந்திருக்கின்றார். அவருடைய அரிய முயற்சியின் பயனாகவே இன்று தினம் அரிய நூல்கள் பிழையின்றி அச்சுவாகனத்திலேறி நமக்குக் காட்சி தருகின்றன.

ஐயரவர்களின் பெருமையைக் குறித்துப் பல அறிஞர்கள் உங்கள்முன் பேசுவார்கள். அவர்களுடைய அரிய பிரசங்கங்களை அமைதியாக இருந்து கேட்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

பின்னர் மிஸஸ் டாசன், எம். ஏ., பி. எல். பேசுகையில் தாம் ஐயரவர்களின் மாணாக்கியென்றும், கூலிக்கு மாரடிக்கும் ஒரு சில ஆசிரியர்களைப்போலன்றி உண்மை ஆசிரியர்களில் முதன்மை பெற்றவராகச் சாமிநாதையரவர்கள் இருக்கின்றார்கள் என்றும், அவர்களுடைய அடக்கமான குணம் பாராட்டத்தக்கதென்றும் கூறினர்.

அடுத்தபடி, ராவ் பகதூர் என். சி. கிருஷ்ணையர், எம். ஏ., ஐ. இ. எஸ். (ரிடையர்டு) பேசுகையில், 1902, 1903-ஆம் வருஷங்களில் தாம் ஐயரவர்களுடன் பழகியிருப்பதாகவும், ஐயரவர்கள் தற்பெருமை என்பதே இன்னதென்று தெரியாதவர்களென்றும், சிறந்த ஒழுக்கமுடையவர்களென்றும் கூறினர்.

பண்டிதர் கே. பக்கிரிசாமி பிள்ளையவர்கள் பின்னர்ப் பேசுகையில், தமிழர் ஒருவரை இவ்வாறு பெருமைப் படுத்துவது இதுவே முதல்தடவை என்றும், தமிழருக்கு இது புதுமை யென்றும், இது தமிழுக்கே நற்காலம் பிறந்திருக்கிறதைக் காண்பிக்கிறதென்றும் குறிப்பிட்டார்.

ஜாதி மத வேற்றுமையுடைய பல வகுப்பினரையும் ஒருங்கு கூட்டி வைத்திருப்பது தமிழே என்றும், தமிழபிவிருத்தி செய்தால் ஜாதி சமயப் பிணக்குகள் மறைந்து விடுமென்றும் திரு. கே. எஸ். மரைக்காயர், பி. ஏ. குறிப்பிட்டார்.

பின்னர், கம்பை தனவைசியர் கல்விக்கழகக் காரியதரிசி திரு. மு. சோமசுந்தரம் செட்டியார், ஐயரவர்களின் பெருமையை விரிவாக எடுத்துரைத்தார்.

சோலியா முஸ்லீம் அஸோஸியேஷன் காரியதரிசி திரு. எம். கே. ஏ. முகமது இப்ராகீம் அவர்கள் பேசுகையில், தமிழின் பெருமையையும் ஐயரவர்களின் தொண்டினையும் பாராட்டினர்.

திரு. அ. மு. மு. வெள்ளையன் செட்டியார், எம். எல். சி. அடுத்தபடியாகப் பேசுகையில்

தமிழுக்குக் கௌரவமளிக்க வேண்டுமென்றும், தமிழ்த் தேதிகளையே உபயோகப் படுத்துதல் நலமென்றும் கூறி ஐயரவர்களின் அருங்குணங்களை எடுத்துரைத்துப் பாராட்டினர்.

திரு. பொ. திருகூடசுந்தரம், எம். ஏ., பி.எல். பேசுகையில் நாடு சுதந்திரமடைந்தால் தான் மொழி வளருமென்று வற்புறுத்தினர். ஐயரவர்களின் எளிய நடையைப் பற்றிப் பாராட்டினர்.

"சுதேசபரிபாலினி" ஆசிரியர் திரு. ஏகாம்பர முதலியார் பேசுகையில் நல்லாரைப்பற்றிக் கேட்பவைகள் அனைத்தும் நலமென்று கூறினர்.

பின்னர் திரு. வே. சாமிநாத சர்மா பேசுகையில் ஐயரவர்கள் முதிய உடலிலே இளமையுள்ளம் படைத்தவர் என்று கூறினர்.

தலைவர் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்:—

"பர்மா நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் சங்கம், இந்திய மாதர்சங்கம், சோலியா முஸ்லிம் அஸோஸியேஷன், கிறிஸ்துவ வாலிபர் சங்கம், ஹிந்து சோஷல் கிளப், ஹிந்து டிராமாடிக் கிளப், கம்பை தனவைசியர்சல்வி நிலையம், யாதவ வாலிபசங்கம், சத்சிவானந்தசபை, ஸமரஸஸமாஜம், ஷண்முகானந்த சபை, தனவைசிய இளைஞர்சங்கம், தென்னிந்திய யாதவசங்கம், ஸமரஸசங்கம், இந்துநாடார் மகாஜன சபை முதலியவைகளின் சார்பாகக் கூட்டப் பெற்ற பர்மாவாழ் தமிழர்களின் இப்பொதுக் கூட்டம் மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் 81-ஆவது பிறந்த தினமாகிய இன்று, அவர் இதுகாறும் தமிழுக்குச் செய்துள்ள தொண்டினைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இன்னும் பல ஆண்டுகள் அவர் வாழ்ந்து தமிழ்த் தொண்டு செய்யப் போதிய ஆயுளையும் தேகாரோக்கியத்தையும் அருளுமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறது."

திரு. அ. சாமி ஐயரவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரேபித்தார்.

"மேற்படி தீர்மானத்தை மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு அனுப்புமாறு கூட்டத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறது."

இரண்டு தீர்மானங்களும் ஏகமனதாய் நிறைவேறின. பின்னர், தலைவர் முடிவுரையாகப் பின்வருமாறு பேசினர்:—

சகோதரிகளே! சகோதரர்களே!

சந்தோஷகரமான இக்கூட்டத்தை இவ்வளவு சிறப்பாகவும் வெற்றியாகவும் நடைபெறச் செய்த உங்களைப் பாராட்டுகின்றேன். டாக்டர் சாமிநாதையரவர்களின் அருமை பெருமைகளைப்பற்றிப் பல அறிஞர்கள் மிக நன்முக உங்களுக்கு எடுத்துக்காட்டினர்கள். ஐயரவர்களுக்குச் செய்யும் பெருமை யெல்லாம் தமிழுக்குச் செய்யும் பெருமையேயாகும். ஐயரவர்களை நான் அறிவேன். எனது ஜனன பூமியாகிய மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சபை ஆண்டு விழாவில் ஐயரவர்கள் தலைமை வகித்த பொழுது நான் அவர்களைப் பார்த்திருக்கின்றேன். அவர்கள் பரந்த மனப்பான்மை உடையவர்கள். ஜாதிமத பேதம் அவர்களிடம் கிடையாது. பல முஸ்லீம்களும் பல கிறிஸ்தவர்களும் ஐயரவர்களின் மாணாக்கர்களாக இருக்கிறார்கள். ஐயரவர்கள் சிறந்த ஒழுக்கமும் உயர்ந்த குணங்களும் வாய்ந்தவர்கள். அவர்களால் பதிப்பிக்கப் பெறவேண்டிய நூல்கள் எவ்வளவோ இருக்கின்றன. அதற்குத் தமிழர்களாகிய நாம் தாராளமாகப் பொருளுதவி செய்ய வேண்டும். நம் அனைவர் உள்ளத்திலும் இவ்வெண்ணம் உண்டு என்பதில் ஐயமில்லை. ஆனல் பொருளாதார நெருக்கடி நமது எண்ணத்தைப் பூர்த்தி செய்ய விடாமல் தடுக்கின்றது. என்றாலும் இயன்றவளவு நிதிக்குப் பொருள் உதவுமாறு உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்விழாவைத் தக்க முறையில் கொண்டாட ஏற்பாடு செய்து நிதி வசூல் செய்த ஜனன விழாக் கமிட்டியாருக்குப் பர்மாவாழ் தமிழ்மக்கள் சார்பாக நன்றி செலுத்துகின்றேன். சாமிநாதையரவர்கள் பல்லாண்டு சகல நலன்களுடனும் வாழ்ந்து தமிழ்த் தொண்டு இயற்றுமாறு அனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக!

முடிவுரைக்குப் பின் திரு. அ. சாமி ஐயரவர்கள் வந்தனம் கூற, கூட்டம் இரவு எட்டரைமணிக்கு இனிது நிறைவெய்தியது.

—தனவணிகன்—7—3—35.

கம்பை

கம்பை தலைவரியர் கல்வி நிலையக் கட்டிடத்தில் 8—3—35 வெள்ளிக்கிழமை மாலை 6—30 மணிக்கு மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களின் உருவப் படத்தைத் திறந்து வைப்பதற்காக ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கல்வி நிலைய ஆசிரிய மாணவர்களும் இரங்கூனிலிருந்து பல பிரமுகர்களும் விஜயம் செய்திருந்தனர். திரு மெ. செ. மெ. மெ. பழனியப்ப செட்டியாரவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்கள். செட்டியார் சங்கக் காரியதரிசி திரு. சுப. க. அ. லட்சுமணன் செட்டியாரவர்கள் ஐயரவர்களின் படத்தைப் பலத்த கரகோஷத்தினிடையே திறந்துவைத்தார்கள். கூட்டத்தலைவருக்கும் திறந்துவைத்த அன்பருக்கும் கல்வி நிலையக்காரியதரிசி மலர்மாலை அணிவித்தார். திரு. சுப. க. அ. லட்சுமணன் செட்டியாரவர்கள் படத்தைத் திறந்து வைத்ததும் பின்வருமாறு பேசினார்கள்:—

தலைவரவர்களே! சகோதரர்களே!

தமிழ்த் தாயின் தவப்பயனுய் உதித்த மகாமகோபாத்தியாய திராவிட வித்தியா பூஷண தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்களின் உருவப்படத்தைத்திறந்து வைக்கும்படியான ஒரு பாக்கியம் எனக்கு ஏற்பட்டது குறித்துப் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். இவருடைய அருமை பெருமைகளை நான் அதிகமாக அறிந்தவன் என்ற காரணத்திற்காக எனக்கு நீங்கள் இந்தக் கௌரவத்தைக் கொடுக்கவில்லையென்பதை நான் நன்கு உணர்வேன். ஆனல், தமிழ் நாட்டு இளைஞர்கள், இந்தப் பெரியாருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றித் தமிழ்த் தொண்டாற்றத் தீர்மானித்திருக்கிறார்கள் என்பதற் கறிகுறியாகவே, உங்களில் என்னை, இந்தப் பணியாற்றும்படி கட்டளை செய்திருக்கிறீர்கள் என்றே நான் கொள்கிறேன். இதற்காக முதலில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சாமிநாதையர் சென்ற அறுபது வருஷ காலமாகப் பல அரியநூல்களைப் பரிசீலனை செய்து வெளியிட்டுவருகிறார். இன்னும் பலநூல்களை வெளியிடவும் போகிறார். "இதிலென்ன ஆச்சரியம்? எத்தனையோ ஆசிரியர்கள் பல நூல்களை வெளியிட்டிருக்கிறார்களே! அவர்களுக்கில்லாத சிறப்பு இவருக் கென்ன?" என்று நீங்கள் கேட்கலாம். தமிழ்மொழி வளர்ச்சியைக் கருதிப் பல நூல்களை வெளியிட்ட ஆசிரியர்களனைவரையும் நாம் ஒருங்கே போற்றுகிறோம். ஆனல் திரு. சாமிநாதையர், மிகுந்த முயற்சி யெடுத்துச் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, புறநானூறு முதலிய நூல்களைப் பதிப்பித்திராவிட்டால், தமிழ்நாட்டின் பழைய பெருமையை நாம் இப்பொழுது அறிந்து கொண்டிருக்கமுடியுமா? இந்த நூல்களை வெளியிடுவதற்காக ஐயரவர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருக்கிறார்கள்? எத்தனை ஊர்களுக்குச் சென்றிருக்கிறார்கள்? ஓலைச் சுவடிகளை ஒழுங்குபடுத்திப் பார்ப்பதும் அவைகளைக் கோவையாக வேறொரு பிரதியில் எழுதிக்கொள்வதும் எவ்வளவு சிரமமான காரியங்கள் என்பதை, அச்சுவசதிகளில் அநுபவம்பெற்ற இளைஞர்கள் அதிகமாக அறியமாட்டார்கள். ஐயரவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டிராவிட்டால், தமிழிலக்கிய மாணிக்கங்கள் பல, காலமென்னும் குப்பையிலே மறைந்து போயிருக்கும் என்று சொல்லுதல் மிகையாகுமோ? இதற்காக, ஐயரவர்களுக்குத் தமிழர்கள் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

பழைய தமிழ்நாடு, கல்வியிலும் கைத்தொழிலிலும் சிறப்புற்றிருந்தது. வேளாண்மையிலும் தாளாண்மையிலும் பெருமை யடைந்திருந்தது. மன்னுயிரைப்போல் தன்னுயிரைக் கருதிய மன்னர் பலரும், அன்பு, ஈகை ஆன்மநேய ஒருமைப்பாடு இவைகள் நிறைந்த மக்களும் நமது தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இவைகளை எல்லாம் நமக்குக் கண்ணாடி போல் எடுத்துக்காட்டுவன சங்கநூல்கள். இந்நூல்களின் நடையழகும், பொருட்செறிவும் தனிச்சிறப்புடையன. அச்சிறப்புக்களைப் பல குறிப்புரைகளால் நமக்குப் புலப்படுத்தியுள்ள ஐயரவர்களைத் தமிழ்நாடு எளிதிலே மறக்க முடியுமோ? ஐயரவர்கள் 1855-ஆம் வருடம் உத்தமதானபுரம் என்கிற கிராமத்தில் வசித்த சங்கீதத்திலும் தமிழிலும் ஆர்வமிக்க வேங்கடசுப்பையர் என்கிற பெரியாரின் திருக்குமாரராய் அவதரித்து, திருசிரபுரம்

மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் முறையாகத் தமிழ்க் கல்வி பயின்றார். எளிய வாழ்க்கையும் உயரிய நோக்கமும் கொண்டு தமிழைப் போதிப்பது தமது வாழ்நாளின் இலட்சியமென்று கருதி அவ்வண்ணமே நடந்து வந்த அப்பெரியாரிடம் ஐயரவர்கள் பாடங்கேட்ட காலத்தில் சந்தித்த சங்கீத வித்வான்கள் பலர். நாவலரும் பாவலரும் பலர். அவர்களுடைய வரலாறுகள், புதைந்து போன சரித்திரக் கதைகளாக மறைந்து போகாமல், ஐயரவர்களின் அரிய முயற்சியால் இப்பொழுது நமக்குப் பத்திரிகைக் கட்டுரைகளாகவும், சிறு நூல்களாகவும் காட்சிதருகின்றன. மகா வைத்தியநாதையரின் சங்கீதத் திறமையையும், வேதநாயகம் பிள்ளை புலவர்களை ஆதரித்த அருமையையும், நந்தனார் சரித்திரம் பாடிய கோபால கிருஷ்ண பாரதியாரின் பக்திப் பெருக்கையும், பங்கா இழுத்த பாவலரின் பணிவையும், கலை வளர்ச்சிக்காகக் கலை பயின்ற கனம் கிருஷ்ணையரின் சலியா முயற்சியையும் நாம் வியந்து பாராட்டுவதற்குக் காரணராய் இருப்பவர் யார்? சுமார் அரைநூற்றாண்டுக்கு முன்னர், சைவ மடங்களாலும், பெருஞ்செல்வர்களாலும் ஆதரிக்கப்பட்டு வந்த புலவர்களின் சரித்திரங்களை நமக்குச் சித்திரித்துக் காட்டுபவர் யார்? கன்மனதையும் கரைந்துருகச் செய்யும் குசேலோபாக்கியானத்தைப் பாடியவர் மஹா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களே என்ற உண்மையை நமக்கு எடுத்துக்காட்டி, அந்தச் செஞ்சொற் புலவருக்கும் அவருடைய மாணாக்கர்களுக்கும் இருந்த தொடர்பை விளங்க வைப்பவர் யார்? மகா மகோபாத்தியாய சாமிநாதையரவர்களே. ஐயரவர்கள் சரித்திரம் தமிழ்நாட்டின் சரித்திரமாகும். இதனை நாம் நன்கு தெரிந்துகொண்டு, அதிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை நமது அன்றாட வாழ்க்கையில் கொண்டுவர முயலவேண்டும்.

சகோதரர்களே! நமது ஐயரவர்கள் வெறும் புலவர் மட்டுமல்லர். இவர் ஒழுக்கத்தில் தலை சிறந்தவர்; குருபக்தியிற் பெரியவர்; சங்கீதக் கலையை அநுபவத்தோடு ஆராய்ந்தவர்; எல்லாரிடத்தும் இனிமையோடும் அன்போடும் பேசும் ஆற்றல் பெற்றவர். இவரிடம் ஒரு நிமிஷம் பேசச் சென்றவர்கள் ஒரு மணி நேரமாவது இருந்து விட்டுத்தான் வரமுடியும். இவர் தமது சம்பாஷணையினாலேயே நம்மை வசப்படுத்திக் கொள்வார்; அதோடு நமது அறிவுக்கும் விருந்தளிப்பார். அவருக்கு 80 வயது பூர்த்தியாகிறது. ஆனால் நூலாராய்வதிலும், ஓலைச் சுவடிகளைப் புரட்டிப் பார்ப்பதிலும் ஓர் இளைஞருக்குள்ள உற்சாகம் அவருக்கு இருக்கிறது. மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்வதில் அவர் சலிப்புக்கொள்வதில்லை. கண்ணுடியின்றியே அவர் ஓலைச் சுவடிகளை விரைந்து படிப்பதும், கையில் ஜபமாலையுடன் கீழே அமர்ந்து, நகைச்சுவை ததும்ப அனைவருடனும் இனிதுரையாடுவதும் காணத்தகும் காட்சிகளல்லவோ? அன்பர்களே! இப்பொழுது உலகமெங்கணும் ஒரு புத்துணர்ச்சி உண்டாயிருக்கிறது. பழையன கழிதலும் புதியன புகுதலும் தினசரி சம்பவங்களாயிருக்கின்றன. மேனாட்டில் ஜர்மனியும் இத்தாலியும், துருக்கியும் சென்ற பதினைந்து வருடங்களுக்குள் எத்தகைய மாறுதலை யடைந்திருக்கின்றன என்பதைச் சிறிது கவனித்துப்பாருங்கள். ஆனால் இவையெவையும் பழமையை அடியோடு இடித்துத்தள்ளி விட்டு அதன்மீது புதுமையைக்கட்டவில்லை. பழைய வீட்டையே பண்படுத்திப் புதிய விளக்கை ஏற்றிவைத்திருக்கின்றன. இந்நிலையில் இந்த இருபதாம் நூற்றாண்டில் நமது கடமையென்ன? பிறமொழிக்கும் அந்நியநாட்டுக்கும் அடிமையாயிருந்து காலங்கழிப்பதா? அரசியல் ஒன்றில் மட்டும் நாம் வேற்று நாட்டுக்கு அடிமைப் பட்டிருப்போமானால் நமது புறவாழ்வு மட்டும் பாதிக்கப்படும். ஆனால் நமது தாய்மொழியை விடுத்து, வேற்று மொழிக்குத் தலைவணங்குவோமானால் நமது அகவாழ்வும் சீர்குலைந்து போக நேரிடுகிறது. இச்சீர்குலைவினால் நாம் மனிதத் தன்மை யற்றவர்களாகி விடுகிறோம் என்று சுருக்கமாகக் கூறவிரும்புகிறேன். இப்படி நான் கூறுவதனால் வேறு பாஷைகளைக் கற்கக் கூடாதென்றோ அல்லது அவைகளினிடம் பொதிந்து கிடக்கும் நயங்களைப் பாராட்டக் கூடாதென்றோ கூறவில்லை. அறிவு வளர்ச்சிக்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் சாதனங்கள் இருக்குமானால் அவைகளை நாம் தேடிக்கொள்ள வேண்டியது அவசியமாகும். ஆனால் முதலில் உங்கள் தாய்மொழிமீது கவனஞ்செலுத்துங்கள் என்று கூறுகிறேன். தாய்மொழியைப் பேணுவது தாய் நாட்டைப் பேணுவதாகும்; இழந்துபோன சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் போராடிய எந்த நாடும், தாய்மொழியைப் புறக்கணித்ததாகச் சரித்

திரம் கூறவில்லே. அயர்லாந்துச் சுதந்திரப் போராட்டச் சரித்திரத்தை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களாயின், ஐரிஷ் தேசபக்தர்கள், தங்கள் தாய் மொழியாகிய கெய்லிக் பாஷையை நிலே நிறுத்தவும் அதனே ஜனங்களிடையே பரப்பவும் எவ்வளவு பாடுபட்டிருக்கிறார்கள் என்பது நன்கு புலனாகும். இவர்கள் புதிய நூல்களேத் தாய்மொழியில் இயற்றினர்கள்; தேசீயக் கவிகள் பல செய்து ஜனங்களுக்கு உணர்ச்சியூட்டினர்கள்.

ஆதலின் எனது இளேய சகோதரர்களே! நமது கடமையென்ன? இந்த ஹாலிலே இந்த உருவப்படத்தைத் திறந்துவைத்து, இதனே அழகுபார்த்துக் கொண்டிருப்பதோடு நமது கடமை முடிந்து விடுகிறதா? அல்லது சாமிநாதையர் பெரிய புலவராக இருந்தார் என்று போற்றிப் புகழ்வதில் நாம் திருப்தியடைவதா? இல்லே. இப்பெரியாரை நாம் உண்மையிலேயே பெருமைப்படுத்த வேண்டுமானல் அவர் தாய்மொழிக்காக எவ்வளவு உழைத்தாரோ அந்த உழைப்பை நாமும் மேற்கொள்ளவேண்டும். அதலேடு அமையாது, புதிய நூல்களேயும் இயற்றித் தமிழ்த்தாயை அலங்கரிக்கவேண்டும். சாமிநாதையரவர்கள் தமது ஆசிரியரிடத்திலே செலுத்திய பக்தியும் அன்பர்களிடத்திலே நடந்து கொள்ளும் மாதிரியும் இன்னேரன்ன பிற நற்குணங்களும் நமக்கு வழிகாட்டிகளாயிருந்து நம்மை மேன்மேலும் ஊக்குமாக! வாழ்க தமிழ்மொழி! வாழ்க நம் தாய்நாடு!

பின்னர் திரு. அ. கருப்பன் செட்டியார் பேசுகையில் கம்பை தனவைசியக் கல்வி நிலேயத்தார் ஐயரவர்களின் படத்தைத் திறந்து வைக்க ஏற்பாடு செய்ததைப் பாராட்டுவதாகக் குறிப்பிட்டார்.

கல்விக்கழகக் காரியதரிசி அவர்கள் வந்தனம் கூற, நாட்டு வாழ்த்துடன் 7 - 15 மணிக்குக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

—தனவணிகன்—14-3-35.

வேறு ஊர்கள்

இவ்வாறே இராசீபுரம், களவீரநாட்டுப் புதுக்கூடு, சேரன் மாதேவி, தஞ்சாவூர், திண்டிவனம், திருக்காட்டுப்பள்ளி, நிம்பூர், வில்வாரணி முதலிய இடங்களில் இக்கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றதாக அறிகிறோம்.

கொண்டாட்டத்தைப்பற்றி வெளிவந்த

பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்

தமிழ்த்தாயின் தவச்சேய்

நமது தேசத்தில் மனிதர்களுடைய சராசரி வயது மிகவும் குறைவாக இருக்கிறது. எனினும் 80 வருஷகாலம் ஜீவித்திருப்பதென்பது அபூர்வ சம்பவமாகும். அதிலும் புத்தியடைந்த கால முதல் வாழ்நாள் முழுவதையும் தமிழ்த்தாயின் தொண்டிற்கே அர்ப்பணம் செய்வதென்பது சாமான்யமான தன்று. மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அந்தப் பெருமையை அடைந்திருக்கிறார். நேற்றுடன் அவருக்கு 80-ஆம் ஆண்டு நிறைந்து இன்று 81-ஆம் ஆண்டு பிறந்திருக்கிறது. இத்தினம் தமிழ் நாட்டிற்கே சுதினமாகும். இதை மிகவும் சிறப்பாகக் கொண்டாடவும், இப்பெரியாருடைய உருவப்படத்தைச் சர்வகலா சங்கத்தில் திறந்து வைக்கவும், இவர் நடாத்திவரும் தமிழ் நூற் பதிப்புப்பணி முட்டின்றி நடைபெற வழிதேடவும் சென்னையிலுள்ள பிரமுகர்கள் முன்வந்தது சாலவும் பொருந்தும். காலஞ்சென்ற வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் மகாமகோபாத்தியாயர், கல்வி பயின்றார். தமக்கு அலுப்புச் சலிப்பு இன்றிப் போதித்துத் தம்மை ஆளாக்கிய அப்பெரியாரிடத்தில் இவருக்கு எத்துணே மதிப்பும், பக்தியும், விசுவாஸமும் இருந்துவருகின்றன வென்பதை இவர் எழுதியுள்ள அவருடைய சரித்திரத்தில் பரக்கக் காணலாம். அப்பெரியாரிடம் இவர் வித்தையை அப்பியஸித்துக்

கொண்டதன்றி, அவரிடத்தில் குடிகொண்டிருந்த உயரிய குணங்களையும் இவர் கைக்கொண்டுவிட்டார். தாம் என்ற மமதையை இவரிடம் காண்பதரிது; யாரிடத்தும் இவர் சரளமாகப் பேசும் சுபாவமுடையவர்; பிறரிடம் பாடங்கேட்டுப் பயிலுவதில் சகஜமாக இருந்துவரும் கஷ்டங்களைச் சொந்த அநுபவத்தின் மூலமாக இவர் நன்கறிந்திருப்பதால், தம்மிடம் பாடங் கேட்க வருவோருடைய அவாவைப் பூர்த்தி செய்துவைக்கும் பேரார்வம் இவரிடத்தில் இயற்கையாகவே குடிகொண்டிருக்கிறது. பாடங் கேட்கப் புதிதாக வருவோரிடம் இருவரும் சேர்ந்து வாசிப்போ மென்று இவர் சொல்லுவாரேயன்றி, தமக்கு உயரிய ஸ்தானத்தை ஒரு பொழுதும் கற்பித்துக்கொள்ளமாட்டார். இவர் தமிழ்த்தாய்க்குத் தொண்டுசெய்யத் தூண்டுகோலாகத் தூண்டிச் செய்வித்துள்ளவர்களின் தொகை அனந்தம்; தமிழ் மகிமை எங்கும் பரவும்படியும், தமிழ் மணம் எங்கும் கமழும்படியும் பல இடங்களிலும் சிதைந்தும் மறைந்தும் கிடந்த பழைய ஓலைச்சுவடிகளைச் சிரமப்பட்டுத் தேடிப்பிடித்து, பதவுரையுடனும் விரிவுரையுடனும் தமிழ் நாட்டுக்கு இவர் நூல்களாகக் கொடுத்துதவிவருவதற்குத் தமிழ் மக்கள் இவர் பால் என்றென்றும் நன்றியுடையவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்விதம் குணக்குன்றாகவும், அறிவுக் கடலாகவும் திகழும் இப்பெரியாருடைய காலத்தில் உதித்த தமிழ் மக்கள் அதை ஒரு பெரிய பாக்கியமாகவே கருதவேண்டும். இன்று மாலை நடைபெறும் கூட்டத்தில் இவருக்குப் படித்துக் கொடுக்கப்போகும் உபசாரப்பத்திரங்களிலும், அங்குப் பலரும் செய்யக்கூடிய பிரசங்கங்களிலும் தமிழ் மக்களின் மனப்பூர்வமான நன்றி தெரிவித்துக்கொள்ளப்படுமென்பதில் சந்தேகமில்லை. இப்பெரியார் நீடூழிகாலம் வாழ்ந்திருந்து மேன்மேலும் தமிழ்த்தாய்க்குத் தொண்டாற்ற எல்லாம் வல்ல இறைவன் கிருபை பாலிக்கவேண்டுமென்பதே எமது மனப்பூர்வமான பிரார்த்தனை. டாக்டர் சாமிநாதையர் நீடூழி வாழ்க!

—சுதேசமித்திரன்—6-3-35.

மகாமகோபாத்தியாய ஸ்ரீ சாமிநாதையரவர்களின் 81-ஆவது பிறந்த தினவிழா இன்று தமிழர்களால் கொண்டாடப்படுகிறது. பழந்தமிழ்நூல்கள் பலவற்றைத்தேடிக் கண்டுபிடித்து, நேர்த்தியான முறையில் ஆராய்ந்து, குறிப்பு, பொருள் விளக்கங்களோடு பதிப்பித்து, தமிழுக்கு அவர்கள் செய்துள்ள சேவை மதிப்பரியதாகும். இந்த முதிர்ந்த வயதிலும் தமிழாராய்ச்சி புரிந்து, அநுபவம் செறிந்த பல கட்டுரைகளையும் அவர்கள் எழுதி வருவது நமது வியப்புக்கும் மகிழ்ச்சிக்கும் உரியதாகும். இந்தச் சந்தோஷதினத்தில் * * * * தமிழர்கள் கொண்டுள்ள மகிழ்ச்சியில் நாமும் மனப் பூர்வமாய்க் கலந்துகொள்ளுகிறோம்.

—சுதந்திரச்சங்கு—6-3-35.

தமிழ்ப்பெரியார் சாமிநாதையர்

மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களது முயற்சியால், அரிய பழைய தமிழ்நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. பல கஷ்டங்களுக்கிடையே தளராத விடாமுயற்சியுடன் படாடோபமின்றி, ஸ்ரீமான் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் செய்த அரிய வேலையினால் தமிழ்ப் பாஷைக்கே பெரிய கௌரவம் கிடைத்திருக்கிறது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, புறநானூறு, சிந்தாமணி, பரிபாடல் முதலிய பல அரிய சங்கநூல்களைத் தமிழர்களுக்குத் தேடிக்கொடுத்த பெருமை ஸ்ரீமான் ஐயரவர்களுடையதேயாகும். தமிழ்மொழியுள்ள அளவும், ஸ்ரீமான் உ. வே. சாமிநாத ஐயரின் புகழ் மங்காது. இந்தப் பெரியாரின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா, இன்று தமிழ் நாட்டில் பல இடங்களிலும் கொண்டாடப்படுகின்றது. இவரை 'அபிநவ அகத்தியர்' என்பது மிகையாகாது.

ஸ்ரீமான் ஐயரவர்கள் நீண்டகாலம் வாழ்ந்து, தமிழ்த்தாய்க்குச் சேவை செய்ய அருள்புரியும்படி கடவுளை வேண்டுகின்றோம்!

—ஜெயபாரதி—6-3-35.

FITTING tributes were paid to Mahamahopadhyaya Dr. V. Swaminatha Aiyar yesterday at the public function organised to felicitate him on his attaining his eighty-first birthday. As the result of his strenuous labours, extending to over half-a-century, many a palm-leaf record in Tamil has been made to yield its secret and a flood of light thrown on life in the Sangham age. The Mahamahopadhyaya brought to bear on the task infinite patience, critical acumen and a rare scholarship. It was as difficult to get at the palm-leaf records as to decipher them. In saving precious works from oblivion, he has rendered invaluable service to Tamil literature. His example and his enthusiasm, we hope, will act as a spur to younger men to play their part in restoring Tamil to its ancient glory. We wish the Mahamahopadhyaya many more years of useful activity.

—THE HINDU—7-3-35.

தமிழ்ப் பெரியார்

மகாமகோபாத்தியாய டாக்டர் சுவாமிநாத ஐயருடைய 81-ஆவது ஆண்டுவிழாவைத் தமிழர்கள் சிறப்பாக நடத்தியதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம். இப்பெரியார் தமிழ் இலக்கியத்திற்கு ஆற்றியுள்ள சேவை சாமான்ய மானதல்ல வென்பதற்கு, நேற்று அவருக்குச் செய்துள்ள மரியாதைகளே போதிய எடுத்துக் காட்டாகும். 80 வருடங்கள்வரையில் பிழைத்திருக்கும் பாக்கியம் இவருக்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத்தக்க விஷயமாகும். பண்டித சுவாமிநாத ஐயருக்கு, இன்னும் நீடிய ஆயுள் உண்டாக வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம். உயர்ந்த கல்வியும், சிறந்த ஒழுக்கமும், பெருந்தன்மையும் நிறையப் பெற்ற டாக்டர் சாமிநாத ஐயருடைய பெருமைகளைக் குறித்து, பலதிறப்பட்ட தலைவர்களும், சென்னையில் பேசியிருப்பதை யாவரும் கவனிக்க வேண்டுகிறோம். சாமிநாத ஐயருடைய அருமை பெருமைகளைக் குறிப்பிடும்போது இவருடைய குருவாகிய "இரட்டைக் கம்பர்" என்ற காலஞ்சென்ற பண்டித சிகாமணி மீனாக்ஷி சுந்தரம் பிள்ளையவர்களுடைய ஒப்பற்ற கல்வியின் சிறப்பு நமக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. கல்வியிற் பெரிய மீனாக்ஷி சுந்தரம் பிள்ளைக்கு டாக்டர் சாமிநாத ஐயர் சிஷ்யராக அமர்ந்தபெருமை சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதாகும். திருவாவடுதுறை ஆதீனவித்வான் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை இன்று உயிருடன் இருந்தால், தமது சீடர் டாக்டர் சாமிநாதையர் அடைந்துள்ள புகழைக் கேட்டு ஆனந்த மடைவாரென்பது நிச்சயம். தமிழ் இலக்கியத்தின் பெருமை தழைக்கத் தழைக்க, இத்துறையில் பேருதவி செய்துள்ள டாக்டர் சாமிநாத ஐயருடைய பெருமையும், பதின்மடங்கு வளருமென்று கூறுவது மிகையாகாது.

—தமிழ்நாடு—7-3-35.

பல்லாண்டு

தமிழ்ப்பெருங்கிழவரான மகாமகோபாத்யாய டாக்டர் உ. வே. சுவாமிநாத ஐயரவர்களின் எண்பதாண்டு நிறைவு விழாவை நேற்றுப் புதனன்று சென்னையிலும் தமிழகத்தில் பல இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஐயரவர்கள் செய்துவரும் தமிழ்த்தொண்டு நாடறிந்த செய்தி. அதற்குரிய நன்றியறிதலைத் தமிழ் மக்கள் தக்கவாறு தெரிவித்தார்கள். சுமார் அறுபதாண்டுகளாகத் தமிழ்த்தொண்டு செய்துவரும் ஐயரவர்கள் தமிழிலேயே வளர்ந்து தமிழிலேயே வாழ்ந்து வருகிறார்கள். தமிழ்த்தொண்டே அவர்களுக்கு நீண்ட வாழ்வை அளித்திருக்கிறது. தமிழிலே உயிர்த்துத் தமிழிலே வாழ்ந்து வரும் ஐயரவர்கள் தமிழ்நாட்டில் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த்தொண்டு புரியுமாறு எல்லாம் வல்ல இறைவனை வணங்குகின்றோம். —லோகோபகாரி—7-3-35.

BIRTHDAY FELICITATIONS

ஜன்மதின உபசாரங்கள்

சதாபிஷேகச் சிறப்பு

தேனினும் இனிய தென்னாடுதனில் தனித்து வளர்ந்து ஓங்கித் திகழும் தமிழ் மொழியினை, தரணி யெங்கும் புகழோடும் பெருமையோடும் உலவி வருமாறு, வளர்த்து வரும் பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய திராவிட்வித்யாபூஷண தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் 81-ஆவது ஜன்மதினக் கொண்டாட்டம் சென்ற புதன்கிழமை மங்களகரமாகச் சென்னை திருவேட்டீசுவரன் பேட்டையிலுள்ள "தியாகராஜ விலாஸ்" எனும் அவரது மாளிகையில் மிகுந்த வைபவத்தோடு நிறைவேறியது. பிரதி வருஷத்திலும் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் கொண்டாடப்படுவதைப் போலல்லாமல் குறிப்பிட்ட காலஅளவை அதாவது 25, 50, 60 இங்ஙனமாக வருஷங்கள் நிறையும்பொழுதுவெள்ளி ஜூபிலி, பொன் ஜூபிலி, வைர ஜூபிலி ஆகிய கொண்டாட்டங்களை நடத்துவதையொப்ப ஒரு மனிதனின் ஜீவவாழ்வினில் 60-வயது ஆகும்பக்ஷத்தில் ஷஷ்டிபூர்த்தி மஹோத்ஸவமென்றும், 80-ஆவதுவயது நிறையும்பக்ஷத்தில் சதாபிஷேக மஹோற்சவ மென்றும் வைதிகபரமாகக் கொண்டாடிக் களிப்பது வழக்கமாயிருந்துவருகின்றது. இப்படிப்பட்ட சதாபிஷேகமானது அபூர்வமும் மகத்துவமும் கொண்டதாதலின், அந்தச் சேவையைத் தரிசித்து மகிழ்வதும்அதற்குப் பாத்திரரான பெரியாரின் ஆசீர்வாதம் பெற அவரை நமஸ்கரித்துக் கரங்குவித்துத் தலைவணங்கி நிற்பதும் அச்சமயத்தில் அப்பெரியாரிடத்து அன்பும்வாஞ்சையும் அபிமானமும் கொண்ட அடியார் பலர் தாமடையும் அளவிலாப்பேருவப்பை வந்தனோபசாரப் பத்திரங்கள் மூலமாகச் சமர்ப்பிப்பதும் சம்பிரதாயமாயிருந்துவருகின்றன. இவை சென்ற புதன்கிழமை தினம் பிரம்மஸ்ரீ ஐயரவர்களுக்குச் சமாரியாகச் சமர்ப்பிக்கப்பட்ட வைபவத்தைக் கண்ட நண்பர்களும் சகாக்களும் மாணவர்களும் உள்ளங்கனிந்து உவகைமேலீட்டால் குதூகலமடைந்தார்கள். இந்தச் சதாபிஷேக சமயத்தில் தமிழ்வளர்க்கும் மடாதீனங்களாகிய திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள் ஆகிய இம்மூன்றின் தலைவர்களும் உடையார்பாளையம் சம்ஸ்தானாதிபதியவர்களும் முறையே தத்தம் பிரதிநிதிகளை யனுப்பி இப்புனித சமயத்திற்குரிய உயரிய சீர்கள் வழங்கிக் கௌரவித்தார்கள். திவ்யமான தேஜஸோடு விளங்கும் வெண்ணிற உலோகமாகிற வெள்ளிக்குடத்தில் புனிதமான கங்காஜலங் கொணர்ந்தளிக்கச் செய்த திருப்பனந்தாள் ஆதீனப் பெரியாராகிய ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிநாத ஸ்வாமிகளது செவ்விய மதியூகத்தை யாம் பெரிதும் பாராட்டுகின்றோம். சதாசாரசீலரான நம்"தமிழையா"வின் சதாபிஷேகத்திற்குக் கங்காஜலம் சமர்ப்பித்த மகிமையைக் கண்டு கூடியிருந்தாரனைவரும் பெருவியப்பை யடைந்தார்களென்றால், மற்றும் அதன் மகிமையை விவரித்துக் கூறவும் வேண்டுமோ? அன்றைத்தினம் மாலையில் சென்னை சர்வகலா சங்கக் கட்டடமாகிற செனேட் ஹவுஸில் திரளான ஜனங்கள் கூடி ஐயரைப் பேட்டி கண்டுகொண்டு தத்தம் வந்தனோபசாரத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள். சுமார் 15 சங்கங்கள் வரையில் பிரதிநிதித்துவமாகக் கூடிவந்து பத்திரங்களைச் சமர்ப்பித்தார்கள். பல்லாயிரங்கொண்ட பணமுடிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன. இவையனைத்திற்கும் தகுந்தவாறு ஐயரவர்கள் பதில் பகர்ந்த பின்னர், திருப்பனந்தாள் காசிமடத் தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டதும், மிஸ்டர் ஆர். துரை என்னும் சென்னைச் சித்திர வேலைக்காரரால் அருமையாய் எழுதித் தயாரிக்கப்பெற்றதுமான ஐயரவர்களின் உருவமைப்புப்படத்தை கான்பகதூர் ஸர் மகம்மத் உஸ்மான் அவர்கள் திறந்து வைத்த போது ஐயரின் உழைப்பையுங் குணவிசேஷத்தையும் வெகுவாய்ப் புகழ்ந்தார்கள். பிறகு காயகசிகாமணி முத்தைய பாகவதரவர்களால் ஸங்கீதக் கச்சேரி நடத்தப்பட்டது. இந்த விதமாகத் தமிழன்னைக்குத் தொண்டுபுரியும் பிரம்மஸ்ரீ ஐயரவர்கள் தமிழ்மொழிக்கும் தமிழ்மாந்தர்க்கும் பயனளித்துப் பாஷையின் சிறப்பைப் புஷ்டிளங்கும் பரப்பிப் பலனளிக்குமாறு அவர்கள் பல்லாண்டு பல்லாண்டு ஆரோகதிடகாத்திரராகவாழ்ந்துவரக் கருணை காட்ட அகில புவன சராசரங்களுக்கெல்லாம் அதிபதியும் ஆதியந்தமில்லாத பராபரவஸ்துவுமான பரம்பொருளை மனமொழி மெய்களால் இறைஞ்சுகின்றனம்.

—இந்துநேசன்—9-3-35.

...தமிழ் மகளின் திருநாளாகிய இதுரங்கூனிலும், யாழ்ப்பாணத்திலும், தமிழ்நாட்டிற் பல வேறிடங்களிலும் கொண்டாடப் பெற்றதாக அறிகிறோம். பல இடங்களில் ஐயரவர்களுடைய உருவப்படம் திறந்துவைக்கப் பெற்றது. தமிழ்நாட்டார் தமிழ் மொழியின்பால் மிக்க அன்பு உடையரென்பது இக்கொண்டாட்டத்தால் நன்கு உறுதி பெற்றது. பல இடங்களில் ஐயரவர்களுடைய வரலாற்றை அவர்களே எழுதி வெளியிட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேறியிருக்கின்றது. தமிழர்களுடைய இந்த ஆசையைத் தமிழ்ப்பெரியார் மிக்க உவப்போடு நிறைவேற்ற வேண்டுமென்று நாமும் வணங்கி வேண்டுகிறோம்.

—கலைமகள்—14-3-35.

பாராட்டுகிறோம்

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பிறந்த தினத்தைப் பர்மாவாழ் தமிழர்கள் மிகச் சிறந்த முறையில் கொண்டாடியதைப் பாராட்டுகின்றோம். இக்கொண்டாட்டத்தில் தமிழர்கள் அனைவரும் ஜாதிமதபேதமின்றிக் கலந்து சிறப்புறச் செய்தார்கள். ஐயரவர்கள் நிதிக்குச் சுமார் 572 ரூபாய் சேர்ந்திருப்பதும் குறிப்பிடத் தக்கதாகும். காரியதரிசியால் அனுப்பப்பெற்ற நன்கொடையாளர்களின் விபரம் வேறொரு பக்கத்தில் வெளியிடப்பெற்றுள்ளது. கம்பைத் தனவைசியர் கல்வி நிலையத்தாரும் ஐயரவர்களின் உருவப்படத்தைக் கல்வி நிலையத்தில் திறந்து வைக்க ஏற்பாடு செய்ததைப் போற்றுகின்றோம். தமிழர்கள் உலகின் எப்பகுதியிலிருந்தாலும் தாய்மொழிமீது மாறாத அன்புடையவர்களென்று இக்கொண்டாட்டத்தாலும், சேர்க்கப்பெற்ற நிதியாலும் நிரூபித்துவிட்டார்கள் என்பதில் ஐயமில்லை.

—தனவணிகன்—14-3-35.

தமிழ்த் திருவிழா

சென்ற 6-ஆம் உ புதன்கிழமை ஸைனட் மண்டபத்தில் நடந்த வைபவத்தை யாராவது 'டாக்கி'யில் எடுத்திருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று விகடனுக்குத் தோன்றிற்று. நூறு வருஷத்திற்குப் பிறகு அந்த டாக்கி காட்டப் பெறுமானால், அக்காலத்தில் வரப்போகும் நமது சந்ததிகள் நம்முடைய தமிழபிமானத்தைக் குறித்துப் பெரிதும் பாராட்டிப் போற்றுவார்கள்; "இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழ்நாட்டில் தமிழ்புறக் கணிக்கப்பட்டது" என்றால், நம்பவேமாட்டார்கள்.

மகாமகோபாத்தியாய சாமிநாத ஐயர் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா இவ்வளவு சிறப்பாக நடைபெற்றது குறித்து "விகட"னுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. வைபவம் முடிந்ததும் வெளி வந்த பிரபல அட்வகேட் ஒருவர், "மூன்றாவருஷத்திற்கு முன்பு இத்தகைய வைபவம் ஒன்று நடக்கக் கூடுமென்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது" என்றார். சமீப காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ் அபிமானம் அவ்வளவு அபிவிருத்தியடைந்திருக்கிறது என்பது அவருடைய கருத்து.

அரசியல் பிரச்னைகள், சமூகப் பிரச்னைகள் முதலியவைகளில் தமிழர்கள் எவ்வளவு சண்டை பிடித்துக்கொண்டாலும், தமிழ்த்தாயைப் போற்றுவதிலாவது எல்லாரும் ஒன்றுபட இடமிருக்கிறது என்பதற்கு மேற்படி வைபவம் நிதரிசனமாயிருந்தது.

கனம் பொருந்திய ஸர் முகம்மத் உஸ்மான் அக்கிராசன பீடத்தை அலங்கரித்தார். திருவாளர் சிவராம சேதுப் பிள்ளை ஓலைச்சுவடியில் எழுதிய உபசாரப் பத்திரத்தைப் படித்துக் கொடுத்தார். (இதைப் படிக்கும்போது அவர்பட்ட கஷ்டம், ஐயர் அவர்கள் பழைய கறையான் அரித்த ஓலைச் சுவடிகளைப் படிப்பதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டுமென்பதை ஒரு தமிழ்ப் பண்டிதருக்கு ஞாபகப்படுத்திற்று.) மந்திரி ஸ்ரீமான் பி. டி. ராஜன் ரூ. 3001 அடங்கிய பணமுடிப்பைத் தமிழன்பர்களின் சார்பாகச் சமர்ப்பித்தார்.

திருப்பனந்தாள் பண்டார சந்நிதியவர்களால் ஐயர் அவர்களின் பெரிய உருவப்படம் யூனிவர்ஸிடிக்கு அளிக்கப்பட்டது. (இது குறித்து "மடாதிபதி அவர்கள், ஐயரவர்களைப் படாதிபதியாக்கி விட்டார்கள்" என்று பிரம்மஸ்ரீ முத்தையா பாகவதர் ஒரு பிராஸத்தைப் போட்டார்.) உருவப்படத்தை யூனிவர்ஸிடியின் சார்பாக மிஸ்டர் லிட்டில் ஹெயில்ஸ் ஏற்றுக்கொண்டு, ஒரு அழகான பிரசங்கம் செய்தார். இன்னும் பதிலொரு சபைகளின் சார்பாகவும் உபசாரப் பத்திரங்கள் அளிக்கப்பெற்றன. ஐயர் அவர்கள் எளிய சில சொற்களில் மனமுருகித் தமது மகிழ்ச்சியையும், தம்மை ஆதரித்தவர்களிடம் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டார்.

பாண்டு வாத்திய கோஷத்துடன், ஐயர் அவர்களுடைய ஏக புதல்வரான ஸ்ரீமான் கல்யாண சுந்தரமையர் அவர்களால் அளிக்கப்பட்ட சிற்றுண்டி விருந்து எல்லாவற்றையும் விட முதல்தரமாயிருந்தது.

பொதுவாக, அன்றைய வைபவம், தமிழ ரசியை அவளுக்குரித்தான சிம்மாசனத்தில் மீண்டும் இருத்தி மகுடாபிஷேகம் செய்வித்தது போலவே தோற்ற மளித்தது.

இவ்வளவும் நன்றாக நடப்பதற்குக் காரணபூதர்களாயிருந்து சிறப்பாகக் காரியங்களை நடத்தி வைத்தவர்கள் ஸ்ரீமான்கள் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. என். அப்புஸ்வாமி ஐயர் ஆகியவர்கள். இவர்கள் பாரபட்சம் காட்டாமல், அடுத்தாற் போல் விகடத்தாத்தாவுக்கு 80-ஆம் ஆண்டு நிறைவுவிழா வரும்போது அதையும் நடத்தி வைப்பார்களென்று விகடன் எதிர்பார்க்கிறன். அந்த வைபவத்துக்கு இன்னும் 70 வருஷந்தானே பாக்கியிருக்கிறது!!

—ஆனந்த விகடன்—17-3-35.

The great Savant

On Wednesday, the 6th of March, Pandit Mahamahopadhyaya V. Swaminatha Aiyar entered on his 81st birthday. A great Tamil teacher, scholar and writer, he has thousands of admirers all over Tamil Nad. The function held in his honour on the occasion of his birthday showed the high regard and reverence in which he is held by all sections of the educated community. To the felicitations that have been offered to the venerable octogenarian from a hundred quarters, we add our own, and pray that the peace of the external abide with him during the remainder of his life.

THE HINDU THEOLOGICAL HIGH SCHOOL MAGAZINE—19-3-35.

பேராசிரியர் உ. வே சாமிநாதையர் அவர்கள்

பண்டைக்காலத்தில், தமிழ்மொழி சீரும் சிறப்புமுற்றுத் திகழ்ந்தது. அக்காலத்துத் தமிழறிஞர் பல உயர்ந்த நூல்களை இயற்றினர். அரசரும் புலவர்களை ஆதரித்து அவரவரின் தகுதிக் கேற்பப் பரிசு வழங்கி, தண்ணீர் தமிழைத் தழைத்தோங்கச் செய்தனர். நாடும், தன் கலைச்செல்வத்தால் ஒப்புயர்வற்றுப் பொலிந்தது.

பிற்காலத்தில் தோன்றிய சில மாறுதல்களால் தமிழ்மொழி புறக்கணிக்கப்பட்டது. தமிழை ஆதரிப்பாரற்றனர். சிறந்த புலவர்களும் தோன்றினர்களில்லை. மக்களுடைய அறியாமையால் தொல்லாசிரியர்களால் இயற்றப்பட்ட அரும்பெரும் நூல்கள்பல நீருக்கும் நெருப்புக்கும் கறையானுக்கும் இரையாய்ச் சிதைந் தொழிந்தன. எஞ்சி மறைந்து கிடந்தன ஒரு சிலவே.

எத்திசையும் புகழ்மணக்க வீற்றிருந்த தமிழணங்கின், அப்பழம் பணிகளைப் புதுக்கி அணிந்து, அழகுகண்டு அகங்களித்த தமிழ்த் தாயின் தவப்புதல்வர்களுள் திலகம் போன்றவர் ஸ்ரீ உ. வே. சாமிநாதையர் அவர்கள். அன்னையின் தொண்டாற்றி அழியாப் புகழ் படைத்தார். தமிழரின் புண்ணியப்பயனுய் இத்

தமிழ்ச் செல்வர் தோன்றி யிராவிடில், நெஞ் சையள்ளும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், ஐங்குறுநூறு, புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களும், புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதருரை, சங்கரநமச்சிவாயருரை முத லிய இலக்கணங்களும், பல பிரபந்தங்களும் நமக்குக் கிடையா; முத்தமிழ்ச் சங்கங்களி லும் வழங்கியவை என உரையாசிரியர்களின் வாயிலாக நாம் காணும் பல முத்தமிழ் நூல் கள் சென்ற இடம் நாடி இவையும் சென்றி ருக்கும் என்பதில் எட்டுணையும் ஐயம் இன்று. ஏட்டுச் சுவடிகளைத் தேடி எடுப்பதும் அவற் றைச் சோதித்துப் பிழை திருத்திப் பல குறிப்புரைகளுடன் அச்சிடுவதும் எத்துணைச் சிரமம் என்பது அத்துறையில் ஒரு சிறிதா வது பயிற்சியுடையவர் நன்கு அறிவர். கால விரயமும், பொருட்செலவும், தேகஉழைப்பும் கொஞ்சமல்ல. இப்பெரியாரால் பதிப்பிக் கப்படாது நம் கைக்கெட்டும் சிறந்த தமிழ் இலக்கிய இலக்கணங்கள் ஒரு சிலவேயாம். சங்கநூல் எனக் கூறப்படும் ஒவ்வொன்றும் இவருடைய நன் முயற்சியாலேயே அச்சுவாக னம் ஏறலாயிற்று. அவற்றை நன்கு பயின்ற பின்னர்த்தான் யாவரும் கன்னித் தமிழ் என் பது உபசாரமன்று உண்மை எனக் கொண்ட னர். திரிசிரபுரம், மகாவித்வான், ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை என்னும் தமிழ்ப் பெருங்கட லில் திளைத்த இக்கருணைமேகம் சொரிந்த தமிழமுதாம் விருந்தருந்தி மகிழ்ந்த அன்பர் கள், "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்குங் காணேம்" எனப் போற்றிப் புகழ்ந்தனர். "தெருவெல்லாம் தமிழ் முழக்கஞ் செய்தல் வேண்டும்" என்னும் உணர்ச்சி தமிழருள் தோன்றக் காரண மாயிருந்தவர் இப்பெரியார்தாம். இக்காலத் தில் தமிழ்மொழி விருப்பு எங்கும் காணப் படுகிறது. தமிழ்வளர்ச்சிக்காவன செய்யப் பலர் முன் வருகின்றனர். சென்னை, சர்வ கலாசாலையாரால் நடத்தப்படும் வித்வான் தேர்தலில் பரிசுபெறப் பலர் போட்டி போடு கின்றனர். இவை யாவும் ஸ்ரீ ஐயரவர்களின் பெரு முயற்சியால் ஏற்பட்டவை எனின் மிகையாகாது. போதகாசிரியர், நூலாசிரியர், பதிப்பாசிரியர் என்னும் முறையில் கடந்த அறபதாண்டுகளாகத் தமிழ்த் தொண்டாற் றும் நம் பெரியாரின் தியாகவாழ்வு போற்றத் தக்கது.

நமது ஆங்கில அரசியலாரும் சென்னைப் பல்கலைக் கழகத்தாரும் இப் பேரறிஞரின் அரிய முயற்சியைக் கண்டு உவந்து மகாமகோ பாத்யாயர், டாக்டர், என்னும் உயர்ந்த பட்டங்களை அளித்தனர்.

தம் வாழ்நாளைத் தமிழ் மொழிக்கே செல விடும் ஐயரவர்களைப் பாராட்ட எண்ணங் கொண்ட தமிழர், சர்வகலாசாலை மண்டபத் தில் அன்னாரின் உருவப்படம் அமைத்து ஓர் உபசாரப்பத்திரம் வாசித்தளித்ததாலேயே தங்கள் கடமை தீர்ந்தது என எண்ணாது தமிழறிஞர் பல புது நூல்கள் யாத்தும் செல் வர்கள் பொருளுதவி செய்தும் தமிழைப் போற்றி வளர்ப்பார்களாக.

தமிழ்ப்பேராசிரியர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இன்னும் பல்லாண்டு இனிது வாழ்ந்து தமிழன்னையின் தொண்டில் ஈடுபட எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிக.

—ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்—மார்ச்சுமீ.

டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் அவர்களின் 80-ஆம் ஆண்டு நிறைவு விழா

பண்டைக் காலத்திலே நம் செந்தமிழ் மொழியினைப் பெரும்பாலும் அரசர் பெரு மக்களே புரந்து வந்தனர். பொதிந்து கிடந்த அருந்தமிழ் நூல்களைப் பிற்காலத்தே அச்சேற்றி வெளியிட்ட பெருந்தொண்டினை முதன்முதற் கைக்கொண்டவர் யாழ்ப்பா ணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமா னவர். அவர் பின், சி. வை. தாமோதரம் பிள்ளை யவர்கள் சங்க இலக்கிய இலக்கண நூல்களை அச்சேற்றிப் பரப்பினர். பிழையற்ற தூய பதிப்புக்களிலே தமிழ் நூல்களை அச் சேற்றிய மேற்கண்ட பெரியாரிருவர் தம் காலத்தே அவர்தம் அரும்பணியை வியந்து ஆதரிப்பாரிலர்,

ஆயின், இக்காலத்தே தமது வாழ்க்கையிற் பெரும்பகுதியையும் தண்டமிழ்ச் சங்க நூல்களை அறிவுழைப்போடு அச்சிட்டுதவிய மறைத்திரு மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சுவாமிநாதையரவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவை நம் தமிழ்மக்கள் கொண்டாடியது மிகவும் மகிழ்தற்குரியதாகும்.

1935-ஆம் ஹூ மார்ச்சுமீ 6உ காலை 11 மணிக்கு ஐயரவர்கள் இல்லத்திலே அவர்கட்கு அபிஷேக முதலியன மிகச்சிறப்பாக நடந்தேறின. பெருமக்கள் பலர் குழுமியிருந்தனர். அன்று மாலை 4½-மணிக்குச் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் சென்னைத் தமிழ் மாணவர் சார்பாகவும், சில சங்கங்களின் சார்பாகவும் எழுத்துப் பாக்கள் திரு. ஐயரவர்கட்குப் படித்துக் கொடுக்கப்பெற்றன. திரு. ஐயரவர்கள் உருவப்பட மொன்று திறந்து வைக்கப்பட்டது. அன்பர் பலரால் வழங்கப்பட்ட தொகைகள் திரு. ஐயரவர்கட்களிக்கப்பட்டன.

திரு. ஐயரவர்கள் வரலாறு நமது செல்வியின்கண் பின்னர் வெளியிடப்படும்.

—செந்தமிழ்ச் செல்வி—மார்ச்சுமீ, 35.

Dr. V. Swaminatha Aiyar, the great Tamil scholar, entered on his eighty-first birth day on the 6th March, 1935. The functions that were held at the Senate House and in other parts of the Tamil Nadu are an evidence of the great respect in which he is held by the educated public. By his work as a scholar and teacher he has earned the undying gratitude of the Tamil land. His life sketch written by one of his devoted students, Mr. V. Duraiswami Ayiar, the Senior Tamil Pandit of our school, finds a prominent place in the Tamil section of this Magazine, which, we are sure, will be read with interest. To the tributes of respectful affection paid to him from different quarters we humbly add ours and wish Dr. Swaminatha Aiyar, health and happiness for the rest of his days.

—The P. S. High School Magazine,—
March, 35.

கொண்டாட்டத்திற்குப் பின்

அபிமானிகள் எழுதிய கட்டுரைகள்

AN OCTOGENARIAN TAMIL SCHOLAR

DR. V. SWAMINATHA IYER

(By Rev. Dr. T. Isaac Tambyah)

[*The eighty-first birthday of the great South Indian Scholar, Dr. V. Swaminatha Iyer, was celebrated yesterday* at the Kala Nilayam, Jaffna, when a portrait of the Savant was unveiled in the Nilayam hall.]

AGE need not necessarily dim the intellect. We have the high authority of Cicero *De Senectute* for this. Plato dying at 81 at his desk, Socrates composing the *Panathenaicus* at 94, Georias working rhetoric to 104, Gladstone pursuing Greek researches at 85, Dr. Pope producing his *Tiruvasagam* at 89 are sufficiently illustrative of my proposition. An example much nearer home, and of more modern times, is furnished by Dr. V. Swaminatha Iyer, who in spite of 80 years in tropical, enervating, equatorial Madras Presidency, is still in the full vigour of intellect. He seems to conform to the Ciceronian Canon, *age should have the fire of youth.* Since the publication

recently of what must remain for many years to come the standard edition of the Tamil Classic *Manimekalai*, this venerable Savant has been busy with fresh literary activities. His is the distinction of being the first non-English speaking Indian to be honoured by a British University with the degree of Doctor of Literature. It would be unique in Asia but for the fact that some years ago the University of Hongkong had conferred on Towkay Lokyew, the Chinese philanthropist of Malaya, as English non-literate, degree of Doctor of Laws. Dr. Swaminatha Iyer's photograph was unveiled by the University of Madras (which made him a D. Litt.) yesterday and a similar ceremony performed at the Kala Nilayam, Jaffna, on the same date. Dr. Swaminatha Iyer's English Degree will not to purely Tamil-speaking people convey so much as the very exalted Tamil title which he holds from the Government of India, Maha-Mahopadhyaya Dakshinatya Kala Nidhi, which is, being interpreted, "The-super Teacher, and repository of Southern Culture".

Editor and Commentator.

Among his masters was the late Maha-Vidwan Meenakshisundaram Pillai, a comtemporary of our own Sri La Sri Navalar. Dr. Swaminatha Iyer was for some years head Tamil Pandit at Presidency College, Madras, and later Principal of Meenakshi Tamil College in Chidambaram, the Rome of Southern Hinduism. We have not sufficient material from which to infer that Dr. Swaminatha Iyer's contribution to the cause of education was greater than his services to the revival of Tamil learning. A noble work had been begun by Sri La Sri Arumuga Navalar and Rao Bahadur C. W. Thamotaram Pillai of bringing to light the great Tamil Classics of all periods, and the work is being continued and kept alive by Dr. Swaminatha Iyer. The results of his literary labours of over half a century as editor and commentator may be seen in the superb editions done in Western style with introductions, notes, glossary and indexes of the following fourteen books:—

Grammar.

1. *Nannul*
2. *Purapporul Venba Malai*

Religion

3. *Thakkayakapparani*
4. *Pasavathaipparani*
5. *Vembathurar Tiruvilayiadal Puranam*

Belles letters

6. *Pattuppattu*
7. *Pura Nanuru*
8. *Pathirruppattu*
9. *Paripadal*
10. *Aingkurunuru*

Epic-Fiction

11. *Silappadikaram*
12. *Manimekalai*
13. *Sivakachintamani*
14. *Perungkathai.*

His Biographies

To the stupendous task of editing in the best modern fashion works of note such as the above, Dr. Swaminatha Iyer has added very valuable biographical studies which are not mere narratives of life-facts but are so interspersed with relevant history contemporaneous with the subject of each study that the work is not merely informative but also affords abundant material for the enabling of succeeding generation of scholars to make researches on their own account. His *Life of the Buddha, the Story of Manimekalai and the Story of Udayanan* may find themselves parallelled by

similar works in Tamil by other scholars, but Dr. Swaminatha Iyer has approached these subjects from a new angle of view and saturates his pages with a charming personal touch we must miss elsewhere. Perhaps his most outstanding biographical study is *The Life and Times of Minakshisundaram Pillai*, his master. It is along the lines of Boswell's *Life of Johnson*. It is history alive with unflagging interest. It is not just the life story of one man, and he was a great man, but there are scattered in its pages bright little sketches of contemporary literary celebrities. We can understand the adoration by one of his masters, but the adoration is not such as to obscure historic perspective and proportion.

May the time be not yet when some one will write the biography of Dr. Swaminatha Iyer, the green old man of Dravida Culture, and when it does come it will be remembered that his capacity to take pains was stupendous: his achievements mark the genius, and surely what Horace said is fit to be inscribed on the title page of such a man's biography:

Nit sine mango Vita Labore dedit mortatibus.

HINDU ORGAN (JAFFNA) 7-3.35.

தமிழ்ப் பெரியார்

திருநலங் கனிந்து தமிழ் மணங் கமழும் நம் தமிழகத்தே பண்டைக் காலத்தில் கூர்ந்த மதிவளம் மிக்க புலவர் பெருமக்கள் பல நிருந்து செந்தமிழின் மணத்தைச் சந்ததமும் வீசச் செய்து சீரிய வாழ்க்கையைத் திறம்பட நடத்திப் பெரும்புகழ் படைத்து வாழ்ந்து வருங்கால், அச்சான்றோர்தம் அகக் கண்ணிற் றோன்றும் பொருள் அனைத்தையும் நுண்ணிய நூல்களின் வழியாகவும், கவின்பெறு கவிகளின் வழியாகவும் அறிவுறுத்தி மக்களறிவைப் பண்படுத்தினர்.

அப்புலவர்பெருமக்கள் வரலாற்றை முழுதும் அறிந்துகொள்ளக்கூடவில்லை யாயினும், தற்காலம் கல்வெட்டுக்களினுதவியால் சிற்சிலர்களின் வரலாறுகளை அறியலாம். அப்புலவர்களால் தொகுக்கப்பட்ட நூல்கள் பல வாயினும், அவற்றைக் காலமென்னும் கடல் மண்டிக்கொள்ளச் சிலவே எஞ்சி நின்றன. நின்றவையும் பேணுவாரின்மையிற் பிறம் புகுந்தருவாயடையச் செந்தமிழன்னையின் முந்திய புதல்வரும், அவ்வன்னையின் சீரினைப்பாரினில் எங்கும் பரவச் செய்தவரும், தமிழ்ப் புலவர்களின் தலைவருமாகிய மறைத்திருவாளர் மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள் அதன் நிலையுணர்ந்து, தமது உடல் பொருள் ஆவி முதலியவற்றை ஒருங்கே அளித்து அரிதின் முயன்று நந்தாவொளிமிகும் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பெருங்காப்பிய நூல்களையும், புறநானூறு, பத்துப்பாட்டு, பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்களையும், பின்னும் பல இலக்கண இலக்கிய நூல்களையும் செவ்விதி னாராய்ந்து இனிது வெளிப்படுத்தியுள்ளார்கள்.

இப்புலவர் பெருமகனாரின் எண்பதாம் ஆண்டு 1935-ஆம் ஆண்டு மார்ச்சு மீ 6-ஆம் தேதி பூர்த்தியாகி 81-ஆம் ஆண்டு பிறந்தது. அக்காலை உயர்தனிச் செம்மலார் ஐயரவர்கட்குத் தமிழ்மக்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்து உபசாரப் பத்திரம் ஒன்று வாசித்தளிக்கவும், அவர்களது திருவுருவப் படத்தைச் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் நிலை பெற வைக்கவும் ஏற்பாடு செய்திருந்தார்கள். செந்தமிழன்னையின் தவப்பேறும், பெருந்திருவினரும், புலவர் தலைவருமாகிய ஐயரவர்கள் நம் தமிழன்னையின் பெருமைக்காகவும், தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும் வாழ்நாள் முழுதும் ஆற்றிய தொண்டுகள் அளவிடற்கரியன. அவர்கள் சீரிய உழைப்பை என்றும் போற்றக் கடப்பாடுடைய தமிழ்மக்கள் அவர்களது ஆயுட் காலத்திலேயே அப் பெரியாரது உருவச் சிலையையுஞ் செய்து வைப்பார்களாயின் அது ஐயரவர்களின் பெருமையையும் பெயரையும் என்றும்

நின்று நிலவுமாறு செய்யுமென்பதைக் கமிட்டியாருக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வதோடு அது தமிழ்மக்களின் செய்ந்நன்றி மறவாக் குணத்திற்கறிகுறியாகுமென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைத் திருவாளர் ஐயரவர்கட்கு உடலுறுதியையும், நெடிய வாழ்நாளையும் உதவியருள ஏரகத்துறையு மிறைவன் திருவடிகளை இடையறாதிறைஞ்சுகின்றேன்.

தி. கி. கோ. பஞ்சாபகேசன்,
திருவிடைமருதூர்.
—இந்து நேசன்—9-3-35.

என் செவிலித்தாய்

'கலைமகள் ஒரு சிறந்த தமிழ்ப்பத்திரிகை' என்று இன்று தமிழ்நாடு முழுதும் நான் புகழ்பெற்றிருப்பதற்குக் காரணம் என் அன்பர்களுடைய முயற்சிகளே. பல அறிஞர்கள் செய்துவரும் உதவிகளும் பெரியோர்களுடைய ஆசியும் மாதந்தோறும் எனது உலாவை மிகவும் சிறப்பாக நடத்துகின்றன. அவர்களுள், இன்று எண்பது ஆண்டு நிறைந்து தமிழ்ப் பழமாக விளங்கும் ஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிட வித்தியாபூஷணம் டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் என்பால் அன்பு பூண்டு செய்துவரும் நல்லுதவிகளுக்கு வரம்பும் உண்டோ?

நான் உலாவரவேண்டுமென்றெண்ணிய என்னுடைய அன்பர்கள் 1931-ஆம் வருஷம் டிஸம்பர் மாதம் ஸ்ரீ ஐயரவர்களைத் தரிசித்துத் தங்கள் எண்ணத்தை வெளியிட்டார்கள்; அன்றியும், "தாங்கள் அடிக்கடி கட்டுரை யெழுதிக் கலைமகளை அழகு செய்யவேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள். தமிழ் மொழி பல வழியிலும் பரவவேண்டுமென்னும் எண்ணமுடைய அவர்கள் அதற்கு மனமுவந்து உடன்பட்டார்கள்.

எனது உலா பிரஜோற்பத்தி வருஷம் தைமாதம் தொடங்கியது. தமிழ்மகளை அலங்கரிப்பதிலேயே தம் வாழ்வு முழுதும் அர்ப்பணம் செய்யும் ஐயரவர்களுக்குக் கலைமகளை அலங்கரிக்கத் தெரியாதா? என்னுடைய முதல் உலாவிலே அவர்கள் அருளிய 'கலைகள்' என்னும் அரிய கட்டுரையைத் தாங்கிவந்தேன். ஐயரவர்களுடைய கட்டுரையை என்பாற் கண்டவர்கள், "கலைமகள் நல்ல பேறுபெற்றது; இது வாழ்க!" என வாழ்த்தினார்கள்.

பின்பு ஐயரவர்களிடமிருந்து 'வண்டானம் முத்துசாமி ஐயர்', 'வறுமைப்புலி' முதலியன வெளிவரலாயின. தமிழ்நாடு அவற்றைக் கண்டு களித்துக் குதூகலித்தது. வரவர அவர்களுடைய அன்பு பெருகலாயிற்று. கட்டுரை எழுதுவதன்றி இதுகாறும் வெளிவராத பல பழந்தமிழ்நூல்களை என்பால் அமைத்து அழகுறச் செய்யத் தொடங்கினார்கள். முதல் முதலாக, 'தென்றல் விடுதூது' என் உலாவில் இன்பத்தைப் புகுத்தியது. 'பாசவதைப் பரணி', 'வலிவலமும்மணிக் கோவை', 'திருஇலஞ்சிமுருகன் உலா' என்னும் நூல்களை நான் தாங்கித் தமிழுலகுக்கு அளித்தேன்.

ஐயரவர்கள், தம் அன்புமுதிர்ச்சியால் தம் முடைய நூலாசிரியத் தன்மையை விளக்கும் கட்டுரைகளை முன்னும் பதிப்பாசிரியத் தன்மையை விளக்கும் நூல்களைப் பின்னும் பொருத்தி இருபுறமும் எனக்கு அரண் செய்து அருளுகிறார்கள். ஒவ்வொருமாதமும் தமிழ்நாட்டார் என்னைக் கண்டவுடன் 'ஐயரவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள்?' என்று ஆவலுடன் திறந்து பார்த்துப் படித்து முகமலர்கிறார்கள். என் முகத்தில் திலகம் போல அவர்களுடைய கட்டுரை ஒளிர்கின்றது.

'சொல்வாரற்றுக் கிடந்த அநேக வரலாறுகளை இலக்கியப் பெரும் புலவராகிய சாமிநாதையரவர்கள் மிக எளிய நடையில் எழுதி வருகிறார்கள். பண்டிதர்கள் மனதுவைத்தால் எவ்வளவு எளிய நடையிலும் எழுதமுடியும் என்பதை நன்றாக விளக்கிவிட்டார்கள். அவர்கள் எழுத்தில் ஒருதனித்தன்மை இருக்கிறது. எளிமையும் பொருத்தமும் வாய்ந்த சொற்கள்; சலனமற்ற—ஆனால் ஆற்றல் மிக்க—நடை; எளிய இனிய வருணனை; நகைச்சுவையும் உணர்ச்சியும் உள்ள வாசகம்; இவை பெரியாரின் வியாசநந்தை அலங்கரித்து நிற்பன. கலைமகளைத் திறந்ததும் அன்னார்

அளிக்கும் அருங்சாட்சியே கண்ணுக்குக் கிட்டும்' (தனவணிகன்) என்று ஒரு பத்திரிகை கூறுவதை மிகையென்று சொல்ல முடியுமா?

"தமிழ் மொழிக்கென்றே உடலெடுத்த பெரியார் உ. வே. சாமிநாதையர் அவர்களைப் பத்திரிகை உலகிலும் ஈர்த்தபெருமை சலிமகளுக்கே உரியதாகும்" (மெ) என்று பிறர் கொடுக்கும் கௌரவத்தால் எனக்கு உண்டாகும் சந்தோஷத்துக்கு அளவுண்டோ?

ஐயரவர்களுடைய கட்டுரைகள் பலபத்திரிகைகளில் பெயர்த்து வெளியிடப்படுகின்றன; எத்தனையோ பாடபுஸ்தகங்களில் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன; இவற்றால் எனது தொண்டு பயன் பெறுவதைத் தமிழர் நன்கு அறிகின்றார்கள். இவ்வளவுக்கும் காரணம் ஐயரவர்களுடைய அன்பேயன்றே?

அவர்கள் இன்னும் பலபல அரியசெய்திகளை எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். கலைமகளில் அவர்கள் எழுதிய மகாவைத்தியநாதையர் சரித்திரமும், கனம் கிருஷ்ணையர் வரலாறும் ஸங்கீதாபிமானிகளிடையே ஒரு கிளர்ச்சியை உண்டாக்கியிருக்கின்றன. இன்னும் அவர்கள் தமிழ்க்கீர்த்தனவரலாறுகளைப் பற்றியும், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியோர்களைப்பற்றியும் எழுத எண்ணியிருக்கிறார்களென்பதை அறிந்தால், "எங்கே? எங்கே?" என்று யாவரும் காத்திருப்பார்கள். ஐயரவர்கள் தமிழ்நூற் சுவடிகளைத் தேடிப்பட்ட சிரமம், பதிப்பித்த கதை, பழகிய பெரியோர் வரலாறு, கண்ட அரிய செய்திகள் முதலியவற்றை எழுதவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளப் போகிறேன். இப்பொழுது அவர்கள் என்னுடு இணைத்து வெளியிடும் 'உதயண குமார காவியம்' என்பதைப்போன்ற காவியங்களையும், பிரபந்தங்களையும், வேறு அரிய நூல்களையும், தலையாற் சுமந்து உலாவ எண்ணியிருக்கிறேன். ஐயரவர்கள் அன்பு என்றும் குன்றுதென்ற உறுதி எனக்கு உண்டு.

என்னைப் பாராட்டி எழுதும் பல அன்பர்கள், ஐயரவர்கள் கட்டுரைகளின் சிறப்பைக் குறித்தே முதலில் எழுதுகிறார்கள். உண்மையில் எனக்குச் சேவலித்தாயாக ஐயரவர்கள் இருந்து பாதுகாக்கிறார்கள் என்று சொல்லுதலிவிட வேறென்றும் சொல்லத்தெரியவில்லை.

இவ்வளவுக்கும் கைம்மாறாக அவர்கள் எதிர்பார்ப்பது எல்லோரும் படித்து இன்புறுவதேயாகும். அவர்கள் செயலுக்குத் தக்க கைம்மாறு உண்டோ?

இனியும் அவர்கள் தமிழ் நூற் செல்வத்தை விருத்திசெய்து கொண்டு அரோகதிடகாத்திரத்தோடு பல்லாண்டு பல்லாண்டு வாழும் வண்ணம் திருவருள் புரியவேண்டுமென்று இறைவன் இணையடித் தாமரைகளை இறைஞ்சுகின்றேன்.

—கலைமகள்—14-3-35.

மஹாமஹோபாத்தியாயரை நான் முதன்முதல் சந்தித்தது

ராவ் பஹதூர் ப. சம்பந்தமுதலியார்,
பி.-ஏ., பி. எல்.

சுமார் 50 வருடங்களுக்கு முன் சென்னையில் ஆச்சாரப்பன் வீதியில் 54-ஆவது கதவிலக்கமுள்ள வீட்டில் பம்மல் விஜயரங்க முதலியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு நாள் மத்தியான்னம் மேல்மாடியில் உட்கார்ந்து ஏதோ பரீட்சைக் காகிதங்களைப் பார்வையிட்டுக்கொண்டிருந்த பொழுது, அவர் பக்கலில் அவரது கடைசிக் குமாரன், 12வயதுள்ளவன் உட்கார்ந்திருந்தான். அச்சமயம் 30-வயதுள்ள ஒரு பிராமணர் முதலியாரைப் பார்க்கவந்தார். விஜயரங்க முதலியார் தம் ஆசனம் விட்டெழுந்து அவரை வணங்கி, வேறோர் ஆசனத்தில் அமரும்படி அவரைக் கேட்டுக்கொண்டார். முதலியார் பக்கத்திலிருந்த சிறுவனும், தன் தந்தையாரையோ வணங்குகிறாரே யென்று தானும் வணங்கினன். பிறகு அந்தப் பிராமணர் முதலியாரை யோகக்ஷேமங்களெல்லாம் விசாரித்துவிட்டுத் தம்முடைய ஆசாரியராகிய மஹாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப்பற்றி ஏதோ பேசிக்கொண்டிருந்தார். பிறகு அவர் விடைபெற்றுப் போகுமுன் அவர் பேசியதை யெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த பிள்ளையைப்பார்த்து,

"பிள்ளையாண்டான் உங்கள் குமாரனு?" என்று விசாரித்தார். அதற்கு முதலியார் அவர்கள், "ஆம், என் கடைசிக் குமாரன்" என்று விடைகொடுக்க, "நீ என்ன வகுப்பில் படிக்கிறாய்? உனக்குத் தமிழ்ப்பாட புஸ்தகங்கள் என்ன?" என்று சில கேள்விகள் கேட்க அப்பையன் கொஞ்சம் இலக்கணமாகவே தமிழில் அக் கேள்விகளுக்குப் பதில் உரைத்தான். அதன்மேல் ஐயரவர்கள், "பிள்ளையாண்டான் தமிழில் இலக்கணமாகப் பேசுகிறானே!" என்று கூறிவிட்டு ஏதோ ஒரு நூலைக் குறிப்பிட்டு, "இதைப் படித்திருக்கிறாயா?" என்று வினவினர். அதற்கு அப்பிள்ளை, "அதை எனக்குப் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொடுக்கிறதில்லை" என்று பதில் சொன்னன். அதன்பேரில், "அப்பா, கற்றுக்கொடுக்கிறதில்லை என்று இரண்டுபதங்கள் உபயோகித்தாயே! அதை ஒரு பதமாகச் சொல் பார்ப்போம்" என்றார். அதற்குப் பதில் உரைக்கத் தெரியாது பிள்ளை திகைத்தான். அதன்மீது ஐயர் அவர்கள், "பெரிதல்ல; கற்பிக்கிறதில்லை என்று சொல்லலாமல்லவா?" என்று கூறினர்.

அந்தப் பிராமணர்தாம் தற்காலம் மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்; அப்பிள்ளையாண்டான் அடியேன் சம்பந்தம். இது நேரிட்டு ஐம்பது வருடங்கள் கழிந்தன. அன்றுமுதல் இன்று வரை, எனக்கு ஒரு வார்த்தை கற்பித்த ஐயரவர்களை எனது ஆசாரியராகக் கொண்டு தொழுதுவருகிறேன். இதில் என் நண்பர்கள் குறிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அக்காலம் ஐயரவர்கள் தமக்கு வயதில் மிகவும் சிறியவனான என்னிடம் பேசவேண்டிய நிமித்தமில்லை; என்னுடன் பேசி என்னுடைய தமிழ்ப்பாட புஸ்தகங்களைப்பற்றிக் கேட்டு என் பதிலில் விரித்துக்கூறல் என்னும் குறையை நீக்கிச் சுருங்கச்சொல்லல் என்பதைக் கற்பிக்க ஐயரவர்களுக்கு அவசியமொன்றுமில்லை. ஆயினும் ஐயரவர்களுக்குத் தமிழில் இருந்த ஆர்வமே இங்ஙனம் செய்யும்படி தூண்டியது என்பது திண்ணம். அதன் பயனாக, எனக்கு அன்றுமுதல் தமிழ்ப்பாஷையில் ஏதோ கொஞ்சம் ஊக்கமுண்டாக, மற்றெல்லாப் பாடங்களைப் படிப்பதைவிடத் தமிழ்ப்பாடங்களைப் படிப்பதில் சிரத்தை உடையவனானேன்.

பிறகு, 40 வருடங்களுக்குமுன் நான் என் முதல் தமிழ் நாடகமாகிய லீலாவதி சுலோசனை என்பதை அச்சிட்டபொழுது என் தந்தையார் அதன் பிரதி ஒன்றை ஐயர் அவர்களுக்கு அனுப்ப, ஏதோ சிறுபிள்ளை எழுதினான் என்று அலட்சியம் செய்யாது அவர்கள் அதற்குச் சாற்றுகவி எழுதி அனுப்பினார்கள். ஐயர் அவர்கள் கவியை, பல வித்துவான்கள் அனுப்பிய சாற்றுகவிகளின் முகப்பில் அமைத்து அச்சிட்டேன். அந்நாள் முதல் இந்நாள்வரை எனக்கு ஏதாவது நாடகத் தமிழ் சம்பந்தமாகச் சந்தேகம் பிறந்தால் மஹாமஹோபாத்தியாயரிடம் சென்று அச் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வேன்.

மேற்கண்டபடி எனக்கு ஐயர் அவர்கள் உற்சாகம் அளித்ததே, ஒன்றுமறியாத என்னையும் ஓர் சிறு தமிழ்நாடக ஆசிரியனாக்கி, இதுவரையில் 64 நாடகங்கள் தமிழில் எழுதும்படி செய்தது என்று உறுதியாக நம்புகிறேன்.

"பெரிய தமிழ்வித்துவான்களெல்லாம் இதுவரையில் எழுதாத முறையில் கேவலம் வசனநடையில், இச்சிறுபிள்ளை தமிழ்நாடகம் எழுதுவதாவது" என்று அச்சமயம் என்னைத் திரஸ்கரித்திருந்தால், தமிழ் மடந்தையின் பாதங்களுக்கு நான் இயற்றிய இந்நாடகப் பூமாலையைப் புனைந்திருக்கமாட்டேன்.

ஆகவே மஹாமஹோபாத்தியாயருடைய பல அரிய குணங்களுள், எவ்வளவு புல்லறிவாளர்களாயிருந்தும் அவர்களுக்கும் நமது தாய்ப்பாஷையாகிய தமிழ்ப்பாஷையில் உற்சாகமுண்டாக்கி அவர்கள் அதைத் தங்கள் சக்திக்கேற்றபடி விருத்தி செய்யும் உற்சாகத்தை உண்டுபண்ணும் குணம் மிகவும் மெச்சத்தக்கதாம் என்பதை இதை வாசிக்கும் என் அன்பர்கள் அறிவார்களாக.

மஹாமஹோபாத்தியாயர் அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்திருந்து, எனக்குத் தமிழில் உற்சாகமளித்தது போல் இன்னும் பலருக்கு அளிக்கும்படியாக எல்லாம் வல்ல இறைவன் இணையடியைப் போற்றுகிறேன்.

—கலைமகள்—14-3-35.

பதிப்பாசிரியர் படும்பாடு

...தூக்கிஞலன்றே தெரியும் தலைச்சுமை? பரிசோதனாசிரியர் படுங்கஷ்டமும் ஓர் அரிய பழைய நூலைச் சுத்த மனச்சாட்சியோடு பரிசோதித்து அச்சிட்டார்க்கன்றி விளங் காது. இவை யெல்லாம் அநுபவத்தாலன்றி அறியப்படாப்பொருள்கள். ஒன்றற்கொன்று ஒவ்வாத இருபது இருபத்தைந்து பிரதி களையும் அடுக்கிவைத்துக்கொண்டு என் கண்காணைச் சிந்தாமணி பரிசோதனைசெய்து பதிப்பித்த கும்பகோணம் வித்தியாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத் வே. சாமிநாதைய ரைக் கேட்டால் இந்நால்வகையாசிரியர் பாட் டின் தாரதம்மியம் சற்றே தெரியலாம்... சி. வை. தாமோதரம் பிள்ளை - கலித்தொகை முகவுரை.

—கலைமகள்—14-3-35.

உண்மைப் பதிப்பாசிரியர்

பே. நா. அப்புஸ்வாமி, பி. ஏ., பி. எல்.

அளவற்ற கல்வி, தடுமாறுத ஞாபகசக்தி, ஓய்வறியாத உழைப்பு, தளராத பொறுமை, உண்மையினின்று விலகாத நிலை ஆகிய இக் குணங்கள் யாவும் பொருந்தியவரே சிறந்த பதிப்பாசிரியராக ஆதல் கூடும். மகாமகோ பாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களிடம் இந்தக் குணங்களெல்லாம் நிறைந்து காணப்படுகின்றன.

பழங்காலத் தமிழ்நூல்களை வெளியிடுவது மிகமிக அரிய காரியங்களுள் ஒன்று. அவற் றுள் காணப்படும் விஷயம் வேறு; பாஷை நடை வேறு, எழுதும் வகை வேறு; காலத் தச்சனும், பூச்சிகளும், நூல்களைச் சுவடிக ளில் பெயர்த்து எழுதுவோரும் செய்துள்ள இடையூறுகளுக்குக் கணக்கேது? ஆதலால், இத்தனை கஷ்டங்களை நிவர்த்தித்துக்கொண்டு ஏதாவது ஒரு சிறுநூலை வெளியிடுவதுகூட மிகவும் சிரமமான காரியம் என்பது அத் தகைய முயற்சி எடுத்துக்கொண்டோர் யாவ ரும் அறிந்த விஷயம்.

ஐயரவர்கள் பல அரிய நூல்களைக் கிட்டத் தட்ட அறுபது வருஷ காலமாக அடக்கத்து டன், இடைவிடாது, மனஞ்சலியாது தேடித் தேடி ஆராய்ந்து மேன்மேலும் புதிது புதிதாக வெளியிட்டுக்கொண்டே வருகிறார் கள். அவர்களுடைய பெருமையை எவ் வளவு புகழ்ந்தாலும் போதாது.

இக்காலத்திலே நாம் பழந்தமிழ் நூல் களைப் பற்றிப் பெருமை பாராட்டுகிறோம். பஞ்சகாவியங்கள், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்று பேசு கிறோம். மகாமகோபாத்தியாயரவர்கள் தம் முடைய ஆராய்ச்சி வேலையைத் தொடங்கிய காலத்திலே எட்டுத்தொகை இன்னவை பத்துப்பாட்டு இன்னவை என்று ஒருவருக் கும் தெரியாது.*

ஐயரவர்கள் அவற்றைத் தேடிந்து, சோ தித்து, ஆராய்ந்து, வெளியிட எடுத்துக் கொண்ட முயற்சிகள் கணக்கில. அவர்கள் பதிப்பித்திருக்கும் நூல்களின் முகவுரைக ளிலே இந்த விஷயத்தைப்பற்றிய சில குறிப் புக்களைக் காணலாம்.†

இவை எல்லாவற்றைக்காட்டிலும் சிறந்த தாகவும் பதிப்பாசிரியருக்குரிய குணங்களுள் இன்றியமையாததாகவும் நான் கருதுவது, கண்டவிஷயத்தைக் கண்டபடி வெளியிடு வதே யாகும். பிழையான வடிவத்தை வெளி யிடவேண்டுமென்று நான் சொல்லவில்லை. பழைய பிரதிகளில் காணப்படும் வடிவத்தை நன்றுகப் பரிசோதித்து, ஒன்றோடொன்று ஒப்பிட்டு ஆராய்ந்து, அதன் மெய்வடிவத்தை வெளியிடுவதுதான் உண்மையான பதிப்பாசி ரியர் செய்யவேண்டிய வேலை. மதசம்பந்த மாயும், ஆராய்ச்சி சம்பந்தமாயும் தாம் என்ன கொள்கைகளைக் கொண்டிருந்தாலும், பிரதிகளில் அவற்றுக்கு விரோதமாயுள்ள கொள்கைகள் காணப்படுமாயினும், அவற் றைத் தம் மனம்போல மாற்றாது ஏட்டில்

---

*புறநானூறு இரண்டாம் பதிப்பின் முகவுரையில் X-ஆம் பக்கத்தைப் பார்க்க.

†பேருங்கதை முகவுரை, LXIV-ஆம் பக்கம்; சிலப்பதிகாரம் முகவுரை 10-ஆம் பக்கம் முதல் 13-ஆம் பக்கம் வரை; சீவகசிந்தாமணி முகவுரை 7-ஆம் பக்கம்; புறநானூறு முகவுரை 9-ஆம் பக்கம்; பத்துப் பாட்டு முகவுரை 9-ஆம் பக்கம் முதல் 13-ஆம் பக்கம் வரை. மற்ற நூல்களின் முகவுரைகளையும்பார்க்க.

உள்ளபடியே வெளியிட்டு உலகத்துக்கு அளிப்பதுதான் மேன்மைக் குணம்.

சிற்சில ஆராய்ச்சியாளர்களும் பதிப்பாசிரியர்களும் சில விஷயங்களை மறைத்தும் சில விஷயங்களை அஞ்சாது மாற்றியும் தம்முடைய கொள்கைகளை நிலைநிறுத்த முயன்றிருக்கிறார்கள். ஏட்டுப்பிரதிகளைப் பெயர்த்தெழுதுவோரும் கூசாது கவிஞன் எழுதிய செய்யுளை மாற்றி அமைத்திருக்கிறார்கள்; புதியனவாகச் செய்யுட்களைச் சேர்த்திருக்கிறார்கள்; சில செய்யுட்களை விட்டும் இருக்கிறார்கள்.

ஐயரவர்கள் அப்படிச் செய்ததே கிடையாது. ஏட்டில் கண்ட வடிவத்தை, தாம் சோதித்துத் துருவித் துருவி ஆராய்ந்த மெய் வடிவத்தை, உள்ளபடியே வெளியிடுவதைத் தம்முடைய விரதமாகக் கொண்டிருக்கிறார்கள். இதை அவர்கள் பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். உதாரணமாகச் சீவக சிந்தாமணியின் முகவுரையில் 8-ஆம் பக்கத்தில்,

"புராதனமான தமிழ்நூல்களும் உரைகளும் பண்டை வடிவங்குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின், பிரதிகளில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம்போனவாறே அஞ்சாது பதிப்பித்தேனல்லேன்; ஒருவகையாகப் பொருள் கொண்டு, பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன். யாதை ஒன்றுஞ் செய்திலேன்"

என்றும்,

பெருங்கதையின் முகவுரையில் 22-ஆம் பக்கத்தில்,

"பழையநூல்கள் பழையவடிவத்தினின்றும் வேறுபடாமலிருக்க வேண்டுமென்பதே எனது முழுநோக்கமாதலால் எவ்வளவு உழைக்கவேண்டுவதோ அவ்வளவு தூரம் உழைத்து இப்பதிப்பு நிறைவேற்றப்பெற்றது; என்னேயறியாமல் பிழைகள் நேர்ந்திருக்கலாம்; அவை நாளடைவில் திருத்தமடைதல் கூடும்"

என்றும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

பழைய நூல்களின் உண்மை வடிவத்தை வெளியிடுவதே உண்மைப் பதிப்பாசிரியரின் கடமை. அதுவே அவரது மேன்மையும் ஆகும். —கலைமகள்—14-3-35.

கைம்மாறு என்னே!

நாடகத் தமிழ்க்கு நாற்புறத்தினுந் தடைகள் அமைக்கப்பட்டமையின் அஃது அழிநிலையடையத் தலைப்பட்டது. பண்டிதராயினர் நாடகத் தமிழைக் கடிந்து கைவிடவே, அது பாமரர் கையகப்பட்டு இழிவடைந்து தெருக்கூத்தினளவிலே நிற்கின்றது. அக்காலத்துச் சங்கப் புலவர்கள் செய்த பாரதம், அகத்தியம், முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம், மதிவாணர் நாடகத்தமிழ்நூல், கூத்தநூல் என்ற நாடகத்தமிழ் நூல்களெல்லாம் யாண்டுப் போயொளித்தன? 'சிலப்பதிகாரம்' என்னும் நாடகக்காப்பியம் மட்டிலே தப்பித் தவறி வெளியேறிவிட்டது. அதனை வெளிப்படுத்திய பண்டிதசிகாமணி சாமிநாதையர்க்குத் தமிழுலகம் செய்யக்கடவ கைம்மாறென்னே!—வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் - தமிழ் மொழியின் வரலாறு.

—கலைமகள்—14-3-35.

கல்லூரியில் மஹாமஹோபாத்தியாயர்

ம. பாலசுப்பிரமணிய முதலியார், பி. ஏ., பி. எல்.

மஹாமஹோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாவை யொட்டி, அவர்களிடம் சென்னை இராஜதானிக் கல்லூரி (*Presidency College*)யில் தமிழ்கற்றமாணவருள் ஒருவனாகிய என்னை, என் நண்பர் பிரம்மஸ்ரீ ரா. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், ஒரு கட்டுரை மூலம் என் ஆசிரியர் பாடம் கற்பித்த முறை முதலியவற்றை விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். இம் முறையில் நானும் இவ்விழாவிற் கலந்துகொள்ள ஏற்பட்ட சந்தர்ப்பத்துக்கு

வந்தனம் செய்து எனது கடமையைச் செலுத்துகின்றேன்.

நான் இக்கல்லூரியில் கல்வி பயின்றது 1911-ஆம் ஆண்டு முதல் 1915-ஆம் ஆண்டு வரை நான்கு வருஷங்களிலே. அக்காலத்தில் காலேஜ் வகுப்புக்களில் தமிழ்ப்பாடம் கட்டாயப்பகுதியிற் கிடையாது. இண்டர்மீடியேட் பரீக்ஷைக்குமட்டும் தமிழ்க்கட்டுரை (*Vernacular composition*) எழுதவேண்டிய நிபந்தனை யிருந்தது. பி. ஏ., பி. ஏ. ஆனர்ஸ் பரீக்ஷைகட்கு இந்த நிபந்தனை கூடக் கிடையாது. நான் கணக்கு, விஞ்ஞான சாத்திரம் முதலிய பகுதிகளைச் சிறப்புப் பாடமாக (*Optionals*) எடுத்துக் கொண்ட படியால் தமிழ்ச் செய்யுள், வசனம், இலக்கணம் முதலியவற்றைப் பாடமாகக் கற்க வேண்டிய அவசியம் கல்லூரியில் எனக்கு ஏற்படவில்லை. இண்டர்மீடியேட் வகுப்புக்களில் இரண்டு ஆண்டுகள் தமிழ்க்கட்டுரைப் பயிற்சிக்கென வாரத்துக்கு இரண்டு மணி நேரம் ஒருசேரத் தொடர்ச்சியாக அக்காலத்தில் எங்கள் கல்லூரியில் ஏற்பட்டிருந்தது. அவற்றுள் ஒரு மணி நேரத்தில் கட்டுரை யெழுதுவதை நிறுத்தி வைத்துக்கொண்டு மற்றொரு மணியில் ஐயரவர்கள் இஷ்டப்படி சிந்தாமணி, சிலப்பதிகாரம், கம்பராமாயணம் முதலிய சிறந்த காவியங்களிலிருந்து சிறந்த பாடல்களையும் நயங்களையும் எடுத்து விளக்கி எங்கட்குத் தமிழறிவு நன்குவளருமாறு துணைபுரிய அவர்களிடம் விண்ணப்பித்தோம். ஐயரவர்களும் இந்த வேண்டுகோளுக்கிரங்கி வாரந்தோறும் சில பாடல்களை விளக்குவார்கள். அப்போது அவர்களது நிரம்பிய புலமையும், ஆராய்ச்சி துட்பமும், பாடஞ் சொல்லும் திறமையும், மாணவர் உள்ளத்தைக் கவரும் பேராற்றலும் எங்கட்கு நன்றாகப் புலப்பட்டன.

அக்காலத்தில் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தமிழ் வகுப்பு ஏளனஞ் செய்யப்பட்டு வந்தது. தமிழ்ப் பண்டிதர்களையும் மாணவர்கள் ஏளனஞ் செய்வது சகஜமாயிருந்தது. தமிழ்ப் பண்டிதர்களும் இவ்வேளனத்தைப் பொறுக்கமாட்டாமல் பெருங் கோபங்கொண்டு சீறி விழுவது வழக்கம். இதனாலும் ஏளனமும் பரிகாசமும் அதிகரித்துவந்தன. தமிழ்ப் பண்டிதர்கட்குப் பெரும்பாலும் ஏளனப் பெயர்கள் (*nick-names*) இடுவதுண்டு.

ஆனால் நமது ஐயரவர்கள் விஷயத்தில் இத்தகைய நிகழ்ச்சிகள் எவையும் எக்காலத்திலும் இல்லை. அவர்களைக் காணும்போதே, மரியாதையாகவும் நேயத்தோடும் நடந்து கொள்ளவேண்டுமென்ற எண்ணம் பிள்ளைகளிடத்தில் இயல்பாகவே தோன்றும். ஐயரவர்கள் உலக அநுபவத்தில் தலைசிறந்து விளங்குபவர்களாகையால், பிள்ளைத்தன்மை, பிள்ளைமனப்பான்மை முதலியவற்றை நன்றாயறிந்து மாணவர்கட்கு இன்பம் ஊட்டும் வகையிலேயே பாடத்தை நடத்துவார்கள். எனது அநுபவத்தில் அவர்கள் ஒரு நாளிலாவது ஒரு கடுஞ் சொல்லாவது சொன்னதில்லை, கோபித்ததுமில்லை. மாணவர்கள் எழுதும் கட்டுரைகளிற் பிழைகள் மலிந்திருப்பினும், அப்பிழைகளை விளக்கும்போது சிறிது பரிகாசஞ் செய்து திருத்தியும், பிள்ளைகள் நாணமுறும்படி செய்து உயர்த்தியும் வகுப்பை மிகத்திறமையாக நடத்துவார்கள். நகைச்சுவை ததும்பப் பேசும் முறை ஐயரவர்களுடன் பிறந்ததென்று கூறுவது மிகையாகாது.

அக்காலத்தில் எங்கள் கல்லூரியில் தமிழ் மாணவர் சங்கம் ஒன்றிருந்தது. அதற்கு அவர்கள் தலைவராகவும் யான் காரியதரிசியாகவும் இருந்ததுண்டு. வாரத்துக்கு ஒரு முறையேனும், மாதமிருமுறையேனும் கூட்டங்கள் நடைபெறும். பல மாணவர்களும் சில மாணவிகளும் (அக்காலத்தில் இராணி மேரிப் பெண்கல்லூரி யில்லை) கூட்டங்களிற் பேசுவார்கள். ஐயரவர்கள் ஒவ்வொரு கூட்டத்தையும் ஆதியோடந்தமாக உடனிருந்து நடத்திவைப்பார்கள். மாணவிகட்குச் சிறப்பாக ஊக்கமளிக்க வேண்டி, அவர்கள் பேச்சைப்பாராட்டித் தமது கருத்துரையைத் தெரிவிப்பார்கள். நன்றாகத் தமிழ் எழுதவும் பேசவும் கற்ற மாணவர்களை மிகவும் புகழ்ந்து வேறு பலரையும் அவ்வாறு கற்குமாறு ஊக்குவார்கள்.

தமிழ் நூல்களைப் பயில வேண்டுமென்ற வேட்கை கொண்ட மாணவரிடத்து ஐயரவர்கட்கு நிரம்பவும் பிரிய முண்டு. ஓய்வு நேரங்களில் அவர்கட்குப் பல பொருள்களை அன்போடு தெரிவிப்பார்கள். இம்முறையில் எனக்கேற்பட்ட அநுபவம் ஒன்றைக் கூறி இக்கட்டுரையை முடிக்கின்றேன். "அபிராமியந்தாதி" என்ற தோத்திரநூலில் சில பாடல்களை நான் திருக்கோயில் வழிபாடு

செய்யும்போது அம்பாள் சந்நிதியிற் பாடுவது வழக்கம். அதிலொருபாடல்,

"பூத்தவ ளேபுவ னம்பதி னன்கையும் பூத்த வண்ணம், காத்தவ ளேபின் கரந்தவ ளேகறைக் கண்டனுக்கு, முத்தவ ளேயென்று மூவா முகுந்தற் கிளையவளே, மாத்தவ ளேஉன்னை யன்றிமற் றோர் தெய்வம் வந்திப்பதே"

என்றிருக்கிறது. இப்பாடலில் கறைக்கண்டனுக்கு மூத்தவள் என்று உமாதேவியாரைக் கூறியிருப்பது எனக்கு விளங்கவில்லை. 'மேல்நாட்டு நாகரிகத்தில்தான் புருஷனை விடப் பெண்சாதி மூத்தவளாக இருத்தல் கூடும்; நமது நாட்டில் கடவுள் திருமணத்திலும் இவ்வாறு இருத்தல் கூடுமோ?' என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது. அப்போது எனக்கு வயது பதினாறு. தத்துவ ஆராய்ச்சியேனும், சைவ சித்தாந்த சாத்திரப் பயிற்சியேனும் அந்த வயதில் எனக்கு ஒரு சிறிதுமில்லை. எனவே இந்தச் சந்தேகத்தை ஐயரவர்களிடம் கேட்டுத் தெளிய வேண்டுமென்று தீர்மானித்தேன். ஒரு நாள் தமிழ்க் கட்டுரை வகுப்பு முடிந்தபின் சிறிது நேரங் கழித்து அவர்கள் ஓய்வாகவிருந்த வேளையில் எனது சந்தேகத்தைத் தெரிவித்தேன். உடனே மிகுந்த மகிழ்ச்சியோடு என்னை உட்காரவைத்து, நான் தமிழ் நூல்களைப் பயின்றுள்ள முறை, அளவு முதலியவற்றைப் பற்றி விசாரித்து நான் படிக்க வேண்டியவற்றை விளக்கிக் கடைசியாக, "இது ஒரு தத்துவ நுட்பம். தத்துவங்கள் தோன்றும் முறையில் சத்திதத்துவம் தோன்றியபின் சிவதத்துவம் தோன்றுவதாகும். முன் தோன்றியது மூத்தது என்ற உலகவழக்கை யொட்டி ஆசிரியர் மூத்தவளே யென்கிறார்" என்று விளக்கினார்கள். இந்தத் தத்துவநுட்பம் அப்போது எனக்கு விளங்கவில்லையாயினும், மேல்நாட்டு நாகரிகமுறையில் பார்வதிதேவி தம் கணவனுக்கு வயதில் மூத்தவளல்லள் என்பதை யறிந்து மிகவும் மகிழ்ச்சியெய்தினேன். பல ஆண்டுகள் கழித்துத் திருச்சிற்றம்பலக்கோவைக்குப் பேராசிரியர் எழுதிய உரையுள், "தவளத்த நீறணியும் தடந்தோளண்ணல் தன்னொருபால், அவளத்தனும் மகனும் தில்லையான்" என்பதற்குக் கூறியுள்ள உரையைப் பார்த்தபோதும், சிவஞானசித்தியார் இரண்டாஞ் சூத்திரத்துள், "சிவஞ் சத்தி தன்னி னின்றம் சத்திதான் சிவத்தை யின்றும்" என்ற செய்யுட்கு அறவர் கூறும் உரையைப் பயின்றபோதும், திருவாசகத்தில் திருப்பொற் சுண்ணத்துள், "எம்பெரு மான் இமவான்மகட்குத் தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன் தமையன் எம்ஐயன்" என்று கூறுவதையும், திருமூலர் திருமந்திரத்தில் "தாயும் மகளும் நல்தாரமுமாமே" என்பதையும் பார்த்தபோதும் இதன் உண்மையும் நுட்பமும் எனக்குப் புலனாயின. அப்போது அபிராமியந்தாதியையும் ஐயரவர்களையும் நினைந்து நினைந்து மகிழ்ந்தேன்.

ஐயரவர்கள் தமிழ்த்தாய்க்குத் தொண்டு புரிய மேலும் பல ஆண்டுகள் உடல் நலத்தோடு வாழும்படி அருளுமாறு இறைவனை வழுத்துகின்றேன். —கலைமகள்—14-3-35.

ஐயரவர்களால் தமிழ்நாடு அடைந்த பயன்

கே. ஜி. சேஷையர், பி. ஏ., பி. எல்.

ஸ்ரீசாமிநாதையரின் கல்விப்பெருமையைக் கேட்டு மகிழாதார் தமிழ்நாட்டில் எங்குமில்லை. மகாவித்வான் என்னும் பிரசித்தி பெற்று யாவராலும் கம்பருக்கு நிகராவா சென்று புகழப்பெற்றுவந்த ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் தமிழ்த்தோர்ச்சி பெற்ற நல்லறிஞர்களுள், ஸ்ரீசாமிநாதையரைப்போல் தமிழகத்திற்கு என்றும் நிலை பெறும் உதவிபுரிந்த பெரியார் வேறொருவருமிலர். கல்வி கேள்விகளில் முதிர்ச்சியடைந்த இம் முதியார், தாம் ஸ்ரீபிள்ளையவர்களிடம் பெற்ற எல்லாச் செல்வத்தினும் முதன்மையான கல்விச்செல்வத்தைக் கணக்கிடற்கரிய தமிழ் மாணவர்கட்கு 49 வருடம் இடைவிடாமல் உதவிவந்தார். உத்தமதானபுரத்தினராகிய இவர் உத்தமோத்தமமாகிய வித்யாதானஞ் செய்தலையே கடமையாகக் கொண்டு இன்புற்று வாழ்ந்துவருகின்றனர்.

"தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்"

என்ற தெய்வப்புலவர் கூற்றிற்கு நம் புலவர் சிகாமணி இலக்காவார் என்று சொல்லச் சற்றும் ஐயமில்லை. கல்வித்திறன் வாய்ந்த குரவரது குணங்கள் யாவும் இப்பெரியா

ரிடம் உள்ளன. சாந்தமும், தம்மை வியவாமையும், தாமறிந்த அரிய விஷயங்களைத் தம்மிடம் வரும் வாலிபர்கட்கும் ஏனையோர்க்கும் நல்கி உவப்படையும் சீலமும், பிறரைப் பாராட்டலும், அழுக்காறின்மையும், அன்பு பாராட்டி வருதலும், ஒரு நிமிஷங்கூட வீண் பொழுது போக்காமல் கல்வித்துறையில் மேன்மேல் ஆராய்ச்சி செய்துவருதலும், ஆழ்ந்த ஆசிரியபக்தியும், சிறந்த தெய்வபக்தியும் நம் புலவர்பெருமானிடம் உள்ளன. ஸ்ரீ ஐயரவர்கள் படித்தறியாத இலக்கிய இலக்கண நூல்கள் தமிழில் இல்லையெனல் தவறன்று. தமிழ்க்கலைத்தோர்ச்சியில் நிகரிலாச் சீர்த்தி பெற்று விளங்குவரென்றறிந்து, அதற்கறிகுறியாக, குறுமுனிக்குத் தமிழிலக்கணம் உபதேசித்த குமரக்கடவுளின் நாமமாகிய சாமிநாதனென்ற பெயரை ஸ்ரீமீனாட்சிசுந்தர நாவலர் சிகாமணி நம் ஐயரவர்களுக்குப் பெயராயமைத்தார் போலும்! இவ்வளவு பாரங்கதராக விளங்கும் இப்பெரியாரிடத்தில் வித்தியாகர்வம் சிறிதும் இலது.

இந்நாவலர் தமிழ் நாட்டிற்குச் செய்திருக்கும் நலத்தை எந்நாளும் தமிழுலகு போற்றிக் கொண்டாடும். தமிழ் நாட்டில் தொன்னூற்பயிற்சி எங்கும் பரவுதற்கு ஸ்ரீ ஐயரே மூலகாரணராவர். தமிழ் நாட்டின் பண்டைச் சரித்திரவாராய்ச்சிக்கும் அங்ஙனமே. ஆங்காங்கே செல்லரித்து அழியநின்ற ஏட்டுப் பிரதிகளிலிருந்து சங்கநூல் பலவற்றைப் பிழையறவெடுத்தெழுதித் தமிழுலகத்துக்குப் பயன்படும் வண்ணம் அச்சியற்றி வெளிப்படுத்தும் பெரிய சிரமசாத்தியமான பொறுப்பை இப்பெரியார் மேற்கொண்டு, சுயலாபம் இச்சிக்காமல், தளரா ஊக்கத்தோடும், எதிர்ப்பட்ட இடர்களைச் சற்றும் கவனிக்காமலும், யாவரும் வியப்புறும் வண்ணம் ஐம்பது வருடகாலமாகத் தமிழ்த்தொண்டு செய்து வாழ்ந்துவருகிறார். கருமமேகண்ணாயினரை விளக்கிக்கூறும் வெண்பாவிலடங்கிய விஷயங்களுக்கெல்லாம் நம் ஐயரவர்களே உதாரணமென்று சொல்லும்படியிருந்தது பழைய ஏடுகள் தேடிப்பெறுவதில் அவர்களுக்குற்ற அநுபவம். கறையான் வாய்ப்பட்டு அழிந்து போக்கும் நிலையிலிருந்த சங்கநூல் வரைந்த ஏடுதேடுதற்கும், கிடைத்தபின் பிழைகளின்றி நன்குசோதித்துச் சுத்தப் பிரதி எழுதி அச்சியற்றச் சித்தப்படுத்துவதற்கும் ஐயரவர்கள் எடுத்துக்கொண்ட சிரமம் எல்லையில்லாதது. மேம்பட்ட இப்பணியில் அவர்கள் எடுத்தமுயற்சியும் கழித்த காலமும் அடைந்த வருத்தமும் அளவுபடுவனவல்ல. ஆங்கிலங் கற்றோரும் ஏனையோரும் கடைச்சங்ககால ஆராய்ச்சியில் கருத்தைச்செலுத்தி வேலைசெய்துவர ஆரம்பித்தது, ஸ்ரீ ஐயரவர்கள் 1892-இல் சிலப்பதிகாரத்தையும் 1894-இல் புறநானூற்றையும் வெளியிட்டதன் பலனேயாம். ஆராய்ச்சிக்காரர்கள் தம் ஆராய்ச்சிக்கு ஆதாரமாகக் கருதும் வேறிரண்டு சங்கநூல்களையும் ஸ்ரீ ஐயரவர்களே வெளியிட்டுள்ளார்கள். அவை பத்துப்பாட்டும் பதிற்றுப்பத்தும் ஆம். பதிற்றுப்பத்தின் உதவியில்லையானால், சங்க காலத்துச் சேரர்களின் வரலாறு அறியமுடியாது. வேறு அநேக தொன்னூல்களும் பிற்காலநூல்களும் ஸ்ரீ ஐயரவர்கள் ஆராய்ச்சிக்குறிப்புக்களோடும் குறிப்புரையோடும் வெளியிட்டிருக்கிறார்கள். இன்றும் கலைமகள், செந்தமிழ் போன்ற பத்திரிகைகளில் சில அருமையான நூல்கள் அவர்களால் வெளியிடப்பெற்று வருகின்றன. சென்றவருடம் தாம் எழுதிய ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம் என்றபெயர் சூட்டப்பெற்ற சிறந்ததோர் வசன நூல் தமிழகத்திற்கு அவர்கள் ஈந்ததவிரார்கள். முதிர்ந்தபிராயத்திலும் சோர்வின்றித் தமிழ்த்தொண்டு புரிவதையே தம் ஆருயிர்த் தொழிலாக ஏற்றுநடத்திவரும் இப்பெருந்தகைக்கு நாம் எவ்வளவுதான் நன்றி கூறினும் அது மிகையாகாது. அவர்களுக்கு நீண்ட ஆயுளும், ஆரோக்யமும், ஐசுவரியமும் அளித்து, இன்னும் பல்லாண்டு தமிழ்நாட்டிற்கு வித்யாதானம் செய்து இன்புற்றுவாழ்ந்து மேன்மேல் பொங்குபுகழ் உடையராய் விளங்க எல்லாம் வல்ல ஈசன் இனிது அருள் புரிவாராக!

—கலைமகள்—14-3-35.

தமிழ்விடுதூது ஆராய்ந்த வரலாறு

[கீழே உள்ளது, என்னுடைய நண்பரும் ஸ்ரீ ஐயாவர்களிடம் பாடங் கேட்பவருமாகிய ஒருவர் சில வருஷங்களுக்குமுன் எனக்கு எழுதிய கடிதங்களுள் ஒன்றன் பகுதி. இக்கடிதம் எழுதிய தேதி 1-11-1930. ஸ்ரீ ஐயாவர்கள் தமிழ்விடுதூதென்னும் பிரபந்தத்தை ஆராய்ந்த காலத்தில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை இதனால் அறியலாம். அவர்களது ஆராய்ச்சி வன்மையையும் அவர்கள் தமிழோடு ஒன்றி நிற்பதையும் இக்கடிதம் விளக்கும். இதனை எழுதியவர் இக்கடிதப் பகுதி வெளிப்படுத்தப் படும் என்பதை அக்காலத்து அறியார். எனினும், இதிலுள்ள செய்திகள் யாவருக்கும் இன்பத்தை உண்டாக்கும் என்னும் நோக்கத்துடன் இதனை இங்கே வெளியிடத் துணிந்தேன்.

—வித்துவான் ச. து. கணபதி ஐயர்.]

..ஸ்ரீமத் ஐயரவர்களுடைய உழைப்பின் வன்மையைச் சிலசில எடுத்துக் காட்டுக்களாலேயே அறிந்துகொள்ளலாம். மயிலையந்தாதியில், துயரக் கண்ணீர் சுடும் என்பதற்குக் காட்டிய குறிப்புக்கள் அரியன வல்லவென மறுத்தல் கூடுமோ? தமிழ்விடுதூதில் முகவுரையில் காட்டப்பெற்ற தூதைப் பற்றிய இலக்கணங்களும், நெல்விடுதூது புகையிலை விடுதூது என்பவற்றைப் பற்றிய செய்தியும், தமிழைத் தூதுவிடற்குரிய மேற்கோளும் எத்துணை அரிய செய்திகள்!

1900-ஆம் ஆண்டில் கிடைத்த சுவடி 1930-இல் வெளிவருதல் அதிசயமல்லவா? ஒரு சிறு நூலுக்கு முப்பது வருஷ உழைப்பு! அதனால்தான் அந்நூல் பழுத்துச் சுவை கனிந்து நிற்கின்றது.

இரத்தினச் சுருக்கத்தில் ஓலைப் பூவெனத் தாழம்பூ கூறப்படுகின்றது. அது போன்ற பிரயோகம் வேறெங்கும் காணற்கு அரிதாக இருந்தது. இந்தத் தமிழ்விடுதூதிலே "மட்டோலைப் பூவனையார்" என்ற தொடர் (கண்ணி,8) அம்மேற்கோளைப் பயன்படுத்திக் கொண்டது.

ஸ்ரீமத் ஐயரவர்கள் எந்த நூலைப் படித்தாலும் படிப்பித்தாலும் அதனிலுள்ள அரிய கருத்துக்கள், உவமைகள், அரும் பதங்கள் முதலியவற்றைக் குறியிட்டும் இடுவித்தும் வைப்பது வழக்கம். பின்னர் மற்றொரு நூலைப் படிக்கையில் அந்தக் குறிப்பு அந்நூற் கருத்தை நன்கு விளங்கவைக்கும்.

22-ஆம் கண்ணியில் சார்பெழுத்து இருநூற்றுநாற்பதென ஆசிரியர் பாடியிருக்கிறார். அதற்குரிய ஆசிரிய வசனங்களைத் தொல்காப்பியம் முதலியவற்றில் தேடியும் கிடைக்கவில்லை. கடைசியில் இலக்கணவிளக்கத்தில் இந்தக் கணக்குக் காணப்பட்டது. ஆகவே, இந்நூலாசிரியர் இலக்கணவிளக்கக்காரருக்குப் பிற்பட்டவரென்று உடனே—அந்த இளமை முறுக்கில்—நான் கூறினேன்; ஏன்? நீங்களுமே கூறுவீர்கள்.

"அவசரப் படாதே; நான் பழம் புண்ணாளி; இலக்கண விளக்கத்தார் எதனையும் சொந்தமாகச் செய்யவில்லை; பலநூல்களில் உள்ள கருத்துக்களையும் சூத்திரங்களையும் அப்படியே எடுத்து அமைப்பவர்; ஆகையால் அவருடைய சார்பெழுத்துத் தொகைக்கும் வேறு நூலில் மேற்கோள் இருக்கும்; எனவே தமிழ்விடுதூது இலக்கண விளக்கத்துக்குப் பின்பு தான் இருக்கவேண்டும் என்று துணிந்து கூற முடியாது; என்றாலும் அதனை ஒரு பட்சமாகக் கருதலாம்" என்று, இயற்கையிலேயே பனிக்கட்டிபோன்று மெதுவாகக் குளிர்ச்சியைப் புகுத்தும் தம்முடையவார்த்தைகளால் ஸ்ரீமத் ஐயரவர்கள் என் ஆவேசத்தை அடக்கினார்கள். ஆராய்ச்சிக் கதையைக் கண்டீர்களா!

34-ஆம் கண்ணியிலே "அட்டாதசவன்னனைகள்" என்று கூறப்பட்டிருக்கிறது. இலக்கணங்களெல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தும் அதற்குரிய மேற்கோள் கிடைக்கவில்லை. மாறனலங்கார உரையாசிரியர் ஓரிடத்தில் "பதினெட்டு வருணனையும்" என்று கூறிச் சென்றாரேனும் அவை இவையெனச் சுட்டிக் காட்டினரில்லர். தண்டியலங்காரம் காப்பியனிலை பேசுங்காலை பலபல கூறுகின்றது. பதினெட்டென்னும் எண்ணிற்கு வழியில்லை. அச்சூத்திரத்தில் கூறப்படும் பிறவற்றையெழுத்துப் புனையத் தகுவனவாகக் கூறப்படும் மலைகடல் முதலியவற்றை எண்ணுகையில் வழக்கம் போலவே சிறு பொழுது ஐந்தென்றே கொண்டு எண்ணினேனும் மொத்தம் பதினேழு வருணனைகள் வந்தன. இன்னும் ஒன்றுக்கு வழியில்லை. திடீரென்று, "இருங்கள் இருங்கள்! கண்டு பிடித்துவிட்டேன்" என்றார்கள்

எங்கள் குருமூர்த்திகள். நாங்கள் ஈப்புகுவதும் தெரியாமல் வாயைத் திறந்து அவர்களைப் பார்த்துநின்றோம். அவர்கள் தோளைத் தட்டிக்கொண்டே காலை அசைத்தார்கள். மிகவும் உற்சாகம் உண்டாகும் பொழுது தமிழ்த் தெய்வம் இக்கோலம் கொள்வதை நாங்கள் பன்முறை கண்டிருக்கிறோம். அவர்கள், "சிறுபொழுது ஆறுக்வைத்து எண்ணிப் பாருங்கள்" என்றதுதான் தாமதம்; "அப் பொழுது சரியாகப் பதினெட்டாயின" என்று முறுவலுடன் உள்ளக் களிப்பு வெளியிற் குதிக்கக் கூறினோம்.

"சிலருடைய கொள்கை சிறுபொழுது ஆறென்பது; அதன்படி பதினெட்டு வருணனைகள் இத்தத் தண்டியலங்காரச் சூத்திரத்தாலே ஏற்படுகின்றன; இப்பொழுது இச் சூத்திரத்திற்கு உண்மையான மிகஅரியவுரை கண்டுகொண்டோம்; இதற்குமுன் இவற்றை யார் எண்ணிப் பார்த்தார்கள்! இந்தச் சிறு நூல் (தமிழ்விடுதூது) அன்றோ இந்தச்சூத்திரத்தை விளக்குவித்தது" என்று சொல்லி எதையோ நினைந்து சிலநேரம் வாளாவிருந்தார்கள். அவர்கள் கண்ணில் நீர் துளும்பியது. நாங்கள் ஒன்றும் அறியாது இருந்தோம். அவர்கள் நாத்தழுதழுத்துக் கொண்டே, "இந்தப் புலவர் (தமிழ்விடுதூதின் ஆசிரியர்) எப்படி இருந்தாரோ! யார் இவருக்குப் பாடங் கற்பித்தாரோ! இவரைப்போன்ற எத்தனை பேர்கள் இந்தத் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள்! அவர்கள் காலத்தில் இருந்திருப்பேனுல் எவ்வளவு விஷயங்கள் அறிந்து எவ்வளவு இன்பமாகக் காலத்தைக் கழித்திருப்பேன்!" என்று இரங்கினார்கள். இந்தக்காலம் அவர்களுக்கு மன வெறுப்பை அளித்துவிட்டது. அவ்வெறுப்பின் பயனாக, பண்டைக்காலத்து நினைவு எங்கள் தமிழ்வள்ளலுக்கு எழும்போதெல்லாம் இந்தக் காட்சியையே நாங்கள் காண்போம். என் செய்வோம்? தமிழர் ஆதரவு அத்தனையில் அமைந்திருக்கிறது!

பிரபந்தங்கள் பலவற்றை ஒருவன் படித்தாலன்றித் தமிழின் உள்ளுறையாகிய மறை பல கொள்ளுதல் அரிதாம் என்பது ஐயரவர்களின் கொள்கையாகும். யாரேனும் பாடங் கேட்கவரின் 'முதலில் பிரபந்தங்களைக் கேள்' என்பார்கள். அவைதாம் தமிழ்மொழியின் ஒழுக்கை அரண்கோலிக் காப்பன வென்பது அவர்கள் துணிவு. இந்தத் தமிழ்விடுதூதிலே அப்பிரபந்தங்களைத் தமிழாகிய அரசிற்கு மெய்காப்பாளராக ஆசிரியர் கூறியுள்ளார். இதனைக் கண்ட நம் பெரும்பேராசிரியர், இது தமது உள்ளக் கிடக்கையோடு ஒத்திருத்தலை யறிந்து மகிழ்ந்து முகவுரையிலே இதனைக் குறிப்பித்துள்ளார்கள்.

66, 67-ஆம் கண்ணிகளிற் கூறப்படும் செய்திகள்—வில்லி ஒட்டக்கூத்தராதியோர் செய்கை—எம் ஆசிரியருக்கு உடன்பாடன்று. அதனால்தான் முகவுரையில் இந்நூற்சுருக்கங் கூறுகையில் அப்பகுதி காட்டப் பெறவில்லை.

113-ஆம் கண்ணியிற் கூறப்பட்டதொடைகளின் தொகை நச்சினார்க்கினியர் ஒருவரே கூறுகின்றார்; பிறர் வெவ்வேறு கொள்கின்றார்கள்.

151-ஆங் கண்ணியாகிய,

"இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"

என்பது அவர்களை நிரம்ப உருக்கிவிட்டது. அவர்கள் பலமுறை அதனை வார்த்தைகளாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் வாழ்வின் இலட்சியமும் அதுவே; செந்தமிழ் நூலில் ஒரு பாட்டு அதனைக் கூறுமெனின் மனம் உருகாதோ? ஒருவர்க்கு உள்ளுற அமைந்து கிடக்கும் தனி உணர்ச்சியை வேறொருவர் தாமாக எடுத்துக் கூறுகையில் எவ்வளவு கனிவு ஏற்படுகிறது! பாட்டிலே—மற்றவர் பாடியதே யாயினும்—நமது அநுபவம் ஒத்திருந்தால் அந்த நிமிஷத்தில் நாம் நம்மையே மறந்து விடுகிறோமல்லவா? "முத்தமிழால் வைதா ரையுமங்கு வாழ வைப்போன்" என்று பல வருடங்களுக்கு முன்பு அருணகிரிநாதர் முருகனைக் கூறிய பாட்டிலே நம்முடைய இதயம் ஒன்றி உணர்ச்சியினுல் நிரம்பி வெடித்துவிடும் போல் ஆகி ஒரு பெருமூச்சேனும் விடும்படி செய்து விடுகிறதல்லவா? நம்முடைய நம்பிக்கையை—அவன் எவ்வாறேனும் காத்தருளும் பேரருள்வாய்ந்தவன் என்ற உள்ளுணர்வை—அந்தப் பாட்டுக்கிண்டி மலர்த்தி விடுவதனாலன்றோ அந்த அநுபவம் ஏற்படுகிறது?

ஆகவே, அக்கண்ணி நம் ஆசிரியர்பிரான் மனத்தைக் கசியவைத்தது. பன்முறை அதனைப் படிக்கக் கேட்டார்கள். அக்கருத்தை அவ்வாறே வெளியிட வேண்டும், அதுவே தம்முடைய கருத்தென்று தமிழுலகம் அறிய வேண்டும் என்னும் மீதூர்ந்த அவா அவர்கள் பால் எழ, அது,

"இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் - திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்"

என்ற வெண்பாவாக முகிழ்த்தது. இப் பொழுது அது தக்கயாகப்பரணி முகவுரையின் முதலிலே காணப்படும். பன்னூல் ஒளிர வேண்டுமெனில், அவர்கள் அவற்றைப் பதிப்பிக்க வேண்டும். அவை தமிழ்த் தாய்க்கு அணிசெய்யும். தமிழ்நாடே! நீ அவ்வளவு பாக்கியம் செய்திருக்கிறாயா?

153-ஆம் கண்ணியில் அவரைநிழலைப் பற்றிய குறிப்பு இப்பொழுது எளிதாக இருக்கலாம். அந்தக் கண்ணிக்குப் பொருள் கண்டுபிடிக்கச் செலவழித்த முயற்சியில் நூற்றில் ஒருபங்கால் கம்பராமாயணம் முழுதும் பொருள் கூறிவிடலாம். ஆமாம்! உழைப்பின் வன்மை இனிய பயனை உண்டாக்குதல் பின்பல்லவோ தெரிகிறது?

194-ஆம் கண்ணியில், "காசபணம் காணி லுன்னை விற்பா ரவர்பால்நீ மேவாதே" என்ற அடியைப் படித்தேன். "ஐயோ!" என்று கூவினர்கள் அவர்கள்; இரண்டு மூன்று முறை பெருமூச்சு விட்டார்கள்; "இந்தக் காலம் பணத்தாலல்லவா எண்ணப்படுகிறது! என்னுடைய நோக்கம் காசல்ல வென்பதைப் பிரமாணமாகச் சொல்வேன்; அழிந்துபோகும் நிலைமையிலுள்ள பல அருநிதியங்களாகிய நூல்களை வெளியிடக் காகிதம் வேண்டும்; அச்சுக்கூலி வேண்டும். நான் என் செய்வேன்! பிறரை வாய்திறந்து கேட்க மனம் கூசுகின்றது; ஒரு புஸ்தகம் செலவாக இருபது முப்பது வருஷங்களாகின்றனவே! நான் ஆராய்ந்து வைத்த நூல்களைப் பதிப்பிப்பதில் தோன்றும் கஷ்டங்கள் பிறருக்கு என்ன தெரியும்? ஒரு நூலுக்காக எத்தனை நூலை ஆராயவேண்டும்! எவ்வளவு செய்திருக்கிறேன்! அவ்வளவுக்கும் பணம்—காலம்—உதவி வேண்டாவோ? நல்ல உருவத்தில் இந்நூல்களை யெல்லாம் நான் பார்க்கமுடியுமா?" என்று சொல்லி இரண்டு நிமிஷம் தங்களை மறந்திருந்தார்கள். "சரி, மேலே வாசி" என்ற வெறுப்பொலியோடு கூடிய கட்டளை எழுந்தது பின்.

இப்படி, ஆராய்ச்சிக்காலக்கதை ஒரு விரிந்த சரித்திரமாகும். அவற்றையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொண்டு எழுதும் விருப்பம் எனக்கு உண்டு; ஆனால் சோம்பல் தகைகின்றது.

இந்தத் தமிழ்விடுதூதுக் குறிப்புரையிலேயே இதுகாறும் வெளிவராத சோக்கநாதருலா, திரிசிரகிரியுலா முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் காணப்படும்.....

—கலைமகள்—14—3—35.

ஐயரவர்களின் சங்கநூற் பதிப்பு

வே. ப. சுப்பிரமணிய முதலியார், ஜி. பி. வி. ஸி.

முன்னுரை

சற்றேறக் குறைய 1890-ஆம் வருஷத்தில் என் நண்பர் எஸ். டி. கள்ளபிரான் பிள்ளையவர்கள் கும்பகோணம் காலேஜ் ஆசிரியருளொருவராயிருந்தபோது அவர்களைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது, நான் திருநெல்வேலி ஆங்கிலக் கலாசாலையில் படித்துக்கொண்டிருந்த காலத்தில் அந்தக் கலாசாலைப் பிரின்ஸிபாலாயிருந்த சாமி ஐயரவர்கள் கும்பகோணம் காலேஜ் புரொபஸராக இருந்தார்கள். அவர்களை நான் பார்த்தபோது, அவர்கள், நான் தமிழார்வமுடையனென்பதை நினைவு கூர்ந்து என்னை, பி. ஏ. வகுப்பில் தமிழ்ப் பாடம் கற்பித்துக்கொண்டிருந்த ஐயரவர்களிடம் கொண்டுபோய்விட்டு அறிமுகமாக்கி, "இவன் தமிழ்விற்பத்தியுடையவன், தாங்கள் பாடம் சொல்லுதலைக் கேட்டுப் பயன்டையத் தக்கவன்" என்று சொல்லிவிட்டுப்போனார்கள். அது முதலாக, ஐயரவர்களுக்கு அன்பனானேன். அப்போது அவர்கள் சிந்தாமணியும் பத்துப்பாட்டும் முதல் முதலாகப் பதிப்பித்திருந்தார்கள்.

பின்பு நான் கும்பகோணத்திலும் அதற்கடுத்த நீரத்த நல்லூரிலும் நிகழ்ந்த மாட்டுத்தாமணி (வருடாந்தர மாட்டுச்சந்தை) களை மேற்பார்க்கும் உத்தியோகமாகப் பலமுறை போயிருந்தபோது ஒவ்வொரு வருஷமும் ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலம் ஐயரவர்களைக் கண்டு சல்லாபித்துப் பழகும் பாக்கியம் வாய்த்திருந்தது. அவர்கள் சென்னைக்கு வந்தபின், தொடுத்தும் இடைவிட்டும் நெடுங்

காலம் பழகும் அதிட்ட முடையவனுயிருந் தேன். இவ்வாறு அவர்களைச் சந்தித்த காலங் களில் பேசப்பெற்ற பலவிஷயங்களுள் சங்க நூல்கள் சம்பந்தமானவைகளினின்று அவர் கள் அந்நூல்களைப் பதிப்பித்த வரலாற்றைத் தொகுத்துச் சுருக்கமாக எழுதுகின்றேன்:

சங்கநூற் பதிப்பு வரலாறு

தமிழ்நாட்டில், சென்ற நூற்றாண்டின் பிற் பாதியில், ஆங்கிலமொழிப்பயிற்சி பிரபல மாகப் பரவத் தொடங்கியதற்கு முன்பு, நெடுங்காலமாகச் சங்கநூற்பயிற்சி குறைந்து வித்துவான்களுள்ளேயே பெரும்பாலார், குறள் நாலடியார் தவிரச் சங்கநூற் பெயர் களையும் தெரியாராயிருந்தனர்.

*'அந்தக்காலம், பத்துப்பாட்டு எட்டுத் தொகை இன்னவை யென்று தெரியாதிருந்த காலம்'. எனவே, தமிழ்நாடெங்கும் பாரா யணஞ் செய்யப்பெற்றுப் பிரசித்தியடைந் துள்ள திருமுருகாற்றுப்படை பத்துப்பாட் டைச் சேர்ந்ததென்று அந்தக் காலத்தில் தெரிந்தவரில்லையென்பது சொல்ல வேண்டிய தில்லை.

அக்காலத்தில், தத்தமக்குரிய சமயசம்பந்த மான நூல்களன்றி வேறெந்த நூலையும் படித்தல் வீண் பொழுதுபோக்கு என்ற கொள்கையும் அக்கொள்கைப்படியே அநுட் டானமும் இருந்து வந்தன. உண்மைச்சமயப் பற்றுக்கும் உண்மை மொழிப்பற்றுக்கும் எவ்வகை விரோதமும் இல்லையென்ற பகுத் தறிவுடையார் மிகச் சிலராயிருந்தனர். அப் படியிருந்த காலத்தில் ஐயரவர்கள், சிந்தா மணியையும் அதன்பின் பத்துப்பாட்டு முத லாகப் பல சங்கநூல்களையும் பதிப்பிப்பார னர்கள். அவர்கள் பதிப்பித்திருக்கிற நூல் களின் முகவுரைகளால் அவற்றின் அருமை பெருமை முதலியவைகளும் பதிப்பிப்பதில் நேர்ந்த காலச்செலவு பொருட்செலவு முதலியவைகளும் விளங்குமாதலால் அவை இங்கே கூறவேண்டியதில்லை.

அவர்கள் முதன்முதற் பதிப்பித்ததாகிய சிந்தாமணிப் பதிப்புக்கு உதவியாகத் தம் மிடத்திருந்த அந்நூலின் ஏட்டுப்பிரதிகளைக் கொடுத்தவருள் ஒருவராகிய சேலம் இராம சாமி முதலியாரவர்கள், பெருஞ் செல்வப் பிரபுக்களுள் ஒருவராகவும், அக்காலத்து ஆங்கிலங் கற்றாருள் முன்னணியில் வைக்கத் தக்காருள்ளே மிகச்சிறந்தாரொருவராகவும் இருந்தார்கள். அக்காலத்துத் தமிழ்ப்பண்டி தருள்ளே உயரிய இயற்கையறிவும் நிரம்பிய பாண்டித்தியமும் அசாதாரண தேகமன ஊக் கமும் அரிய விடாமுயற்சியும் உடையாரென ஐயரவர்களைக் கண்டறிந்து 'தாங்கள் இது வரையும் பண்டிதர்கள் உழைத்துவரும் பழைய வேலைசெய்யாமல், புதிய வேலையாகச் சங்க நூல்களைப் பதிப்பித்தல் வேண்டும். அவை கள், பிற்காலத்து நூல்களுக்கு ஆதாரமாய், முற்கால வரலாறுகள் தெரிய உதவியாதல் முதலிய அளப்பரிய சிறப்புடையவைகள்; பயில்வாரற்று இறக்கும் தறுவாயிலிருக்கின் றன' என்ற கருத்துப்பட நல் ஆலோசனை கூறி ஐயரவர்களைச் சங்கநூல்களைப் பதிப்பிக்கும் படி தூண்டினர்கள். அந்த ஆலோசனை மிகவும் சுருக்கமானதாயினும், அது,

> "தெள்ளிய ஆவின் சிறுபழத் தொருவிதை
> தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
> நுண்ணிதே யாயினும், அண்ணல் யானை
> அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
> மன்னர்க் கிருக்க நிழல்ஆ கும்மே"

என்றவாறு மிகவும் பெருக்கமான பயனை அளித்திருப்பது பிரசித்தமானது.

சங்கநூற் பதிப்புமுறை

ஐயரவர்கள் பதிப்பித்திருக்கின்ற சங்க நூல்களைப் பார்த்திருப்பவர்களுக்கு அப் பதிப்புமுறை எவ்வளவு சிறப்புடைய தென் பது தானே விளங்குமாதலால், அதை நான் இங்கே கூறக் கருதினேனில்லை. அப்பதிப்பு வரலாறு எழுதத்தொடங்கியபோது, அது விஷயமாகத் திருஞானசம்பந்தர் கால நிர் ணயம், நூற்றொகை விளக்கம், மனோன்மணீயம் ஆகிய நூல்களின் ஆசிரியரான சுந்தரம் பிள்ளையவர்கள் என்னிடம் சொன்னது

*புறநானூறு, 2-ஆம் பதிப்பு முகவுரை.

ஞாபகத்துக்கு வந்தது. அது வெளியிடத் தக்கதென்ற எண்ணம் தோன்றியதனால் முதலில் எழுதக்கருதிய நூற்பதிப்புவரலாற் றோடு அப்பதிப்பு முறையையும் சேர்த்துக் கொண்டேன்.

சுந்தரம் பிள்ளையவர்கள் சொன்னதன் கருத்தாவது:—

'தாமோதரம் பிள்ளை தொல்காப்பியம் சூளா மணி முதலிய நூல்கள் பதிப்பிப்பதும், சாமி நாதையர் சிந்தாமணி பத்துப்பாட்டு முதலிய நூல்கள் பதிப்பிப்பதும் தமிழ் மொழிக்கு மிகச்சிறந்த உபயோகமான வேலைகள். இவ் விருவரையும் அறியாதார், இவர்கள் வெளி யிட்டிருக்கின்ற நூல்களைக்கொண்டு, முன்ன வர் ஆங்கில வாசனை அறியாத பரமவைதிக பரம்பரைத் தமிழ்ப் பண்டிதரென்றும் பின் னவர் அரிய தமிழ்ப்பாண்டித்தியத்தோடு ஐரோப்பிய அமெரிக்கப் பதிப்பாசிரிய சிரேஷ்டர் போலப் பதிப்பு முறை ஞானமும் படைத்த பல்கலைக்கழகப் பட்டதாரியென் றும் கருதுவார்கள். நான் இவ்வாறு கூறி யது, தாமோதரம் பிள்ளையிடத்து மதிப்பில் லாமையாலன்று; சாமிநாதையரது நூற் பதிப்புச் சதுரப்பாட்டில் ஈடுபட்டமையா லென்று கொள்ளவேண்டும்' என்பது.

—கலைமகள்—14-3-35.

உழைப்பின் அவதாரம்

வித்துவான் விசுவநாத ஐயர், பி. ஏ.

1929-ஆம்வரு மார்ச்சுமீ 30உ அன்று முதன் முதலாக ஸ்ரீ ஐயரவர்களை அவர்களில் லத்தில் கண்டேன். அச்சமயம் அவர்கள் தம்வீட்டுக் கூடத்தில் ஒரு சோபாவில் பாஷாகவிசேகரர் ஸ்ரீ ரா. இராகவையங்கார் சுவாமிகளுடன் தாழ்ந்த குரலில் அளவளா விக் கொண்டிருந்தனர். ஸ்ரீசுவாமிகள் எவை யோ சில பாடல்களைச் சொல்லிக்கொண்டி ருக்க ஸ்ரீ ஐயரவர்கள் அவற்றைக் கேட்பதும் இடையிடையே வினவுவதுமாக அச்சமயம் இருந்தனர். அப்பொழுது நேரம் சுமார் பிற்பகல் ஒன்றரைமணி இருக்கலாம். வெயில் மிகக்கொடுமையாயிருந்ததால் ஸ்ரீ ஐயரவர் கள் சற்றுக் களைப்பாறிக்கொண்டிருக்கக் கூடு மென்றெண்ணிய எனக்கு அவர்கள் முகப் பொலிவும் ஊக்கமும் ஆச்சரியத்தை விளை வித்தன. தமிழ்த்தாயின் தவப்புதல்வர்க ளான அவ்விருவரையும் ஒருசேரக்கண்ட எனக்கு என்னை யறியாமல் ஆநந்தம் பொங்க, தலையிலுள்ள தலைப்பாகை அவிழ்ந்ததையும் அறியாமல் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தேன்.

அச்சமயம் ஸ்ரீ ஐயரவர்கள் என்னுடன் பேசின பேச்சுக்கள் என் மனத்தைவிட்டு இன்றும் அகன்றில. அவர்கள் என்னை நோக்கி, "உழைப்பு வேண்டும்; உண்மையான உழைப்பின் பலனை ஒருவராலும் மறுக்கமுடி யாது" என்று பல தடவைகள் கூறினார்கள். அன்றைய மாலை நான் என் நண்பரான காலஞ்சென்ற ஸ்ரீ. வி. பி. வேங்கடராம ஐய ரைக் கண்டு ஐயரவர்களை நான் கண்டதையும் அவர்களைப்பற்றி நான் கொண்ட எண்ணங்க ளையும் அறிவிக்க, அவர், "ஐயரவர்கள் உழைப் பைப்பற்றி ஏதேனும் சொன்னார்களோ?" என்று வினவினர். இக்கேள்வி முதலில் மிக்க வியப்பை எனக்கு ஊட்டிய போதிலும் சீக்கிரத்தில் ஸ்ரீ ஐயரவர்களின் மூலமந்திரம் இதுவே என்று அறிந்து கொண்டேன்.

பிறகு இரண்டு வருஷங்கள் கழித்து அவர் களைக் காணநேர்ந்தபோதும் அம்மந்திரமே எனக்கு உபதேசிக்கப்பட்டது. உழைப்பின் அவதாரமே அவர்களன்றே? நான் அவர்க ளைச் சந்தித்த காலங்களெல்லாம் மிகச்சிலவே. அவர்கள் உழைப்பின்றிச் சோம்பியிருந்த நேரத்தையாவது, வீண்பேச்சுக்கள் பேசும் நேரத்தையாவது நான் கண்டிலேன். ஜபத்தில் அமர்ந்திருத்தல், தேவாரபாராயணஞ் செய் திருத்தல், ஏடுகளைச் சோதித்திருத்தல், புரூப் பார்த்தலில் கவனத்தைச் செலுத்தல், மாணவர்களுக்குப் பாடம் சொல்லுதல், வந்த வர்களிடம் காரியங்களைப் பேசுதல் இவற்றை யன்றி அவர்கள் வேறு வீண்தொழில்கள் செய்தலை நான் கண்டதேயில்லை. அவர்கள் எண்ணெய் தேய்த்துக் கொள்ளும்போதும் உண்ணும் போதுங்கூட மாணவர்களுக்குப் பாடஞ் சொல்லிக்கொடுப்பதுண்டு என்று நான் கேள்விப்படுகிறேன். யாரேனும் ஒருவர் ஸ்ரீ ஐயரவர்கள் தம் ஆயுளுள் எத்தனை மணி

உழைப்பிற் செலுத்தியிருப்பரென்று கணக் கிட்டுக் கூறுவாராஞல் உலகுக்கு அது மிக்க வியப்பைத் தருமென்பதற்கு ஐயமில்லை.

இவ்விதம் உழைப்பே உருவெடுத்துவந்த அப்பெரியார் தம்வாழ்க்கையாலும் வார்த் தையாலும் அவ்வுழைப்பென்னும் மந்திரத் தையே உலகுக்கு வழங்குவதில் விந்தை யொன்று மில்லை. அவற்றைப் பெறும் ஒவ் வொருவரும் அவ்வண்ணம் செய்யக்கூடாமை மிகவும் வருந்தத்தக்கதேயாம். நம்மில் எத் தனேபேர் அந்நல்லுபதேசங்களின் பயனைப் பெறுகின்றனர்! ஸ்ரீ ஐயரவர்களிடம் அளப் பதற்கரிய நற்குணங்களும் நற்பழக்கங்களும் மிகமிக மலிந்து கிடப்பினும் அவற்றிற்கெல் லாம் மூலமானவை அவருடைய உண்மை யும் உழைப்புமேயாகும். இவற்றை ஒரு சிறிதேனும் பிறதமிழர்கள் பின்பற்றுவரேல் தமிழின் வருங்கால நிலையைப்பற்றி நாம் கவலைப்பட இடமேயில்லை.

—கலைமகள்—14-3-35.

ஐயரவர்களின் பொறுமை

ந. மு. வேங்கடசாமி நாட்டார்

தமிழ் நாட்டின் பழமை பெருமைகளை அறிதற்குக் கருவியாகும் தொன்னூல்கள் பல வற்றையும் நன்னர் ஆராய்ந்து வெளியிட்டு, அயன்மொழியாளர்முன்னே தமிழ் மக்கள் தலைநிமிர்ந்திருக்குமாறு புரிந்தவர் மகாமகோ பாத்தியாய, டாக்டர் வே. சாமிநாதையரவர் களாவர் என்பது உலகம் அறிந்ததொன்று. அப் பெரியார்க்கு எண்பதாவது ஆண்டு நிறைதலைக் கொண்டாடும் நிகழ்ச்சி யாவரை யும் இன்புறுத்தல் ஒருதலை.

தமிழொன்றே வல்லார் ஆராய்ச்சியின் பெற்றியறியா ரென்னும் வெளிற்றுரையாளர் நாணித் தலைகவிழ்க்குமாறு அவருடைய பதிப் புக்கள் விளங்குகின்றன. ஐயரவர்கள் பதிப் பின் விழுப்பங்களையும், அவற்றால் அவர்கள் எய்தலாகும் நல்லிசையின் எல்லையினையும் உரைப்பான்புகின் "விரிப்பின் அகலும் தொகுப்பின் எஞ்சும்" என்னும் சங்கத்துச் சான்றோர் வாய்மொழி நினைவுக்கு வருகின் றது. அவர்க்குக் கல்வி கற்பித்த பன்னருஞ் சிறப்பின் நல்லாசிரியராகிய மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் வரலாறு போன்றே அவரது வரலாறும் தமிழ்ப்புலவர் வரலாறுகளில் தலைசிறந்த தொன்றாக நிலவுதற் குரியது. அவர் ஒன்றாலும் விழையும் இத் தகைய சிறப்பினைப் பெறுதற்குக் காரணமாக இருந்தது வினைமுயற்சியான் வரும் இன்ப மையை யெல்லாம் இன்பமெனக் கருதும் அவரது மனத்திட்பமே.

பன்னூட் பயிற்சியால் அவர்பாற் கண்ட றிந்த அரியகுணமொன்றை ஈண்டுக் குறிப்பிடு தல் பொருந்தும். அதுதான் பொறுமை என்பது. 'பொறைக் கயிற்றிற் புகழை'ப் பிணித்த பெரியார்களில் ஐயரவர்கள் முதற் பத்தியில் நிற்றற்குரியராவர். காரண மூள் வழியும் அவர்பாற் சினமுண்டாக யாண்டுங் கண்டதில்லை.

"உண்ணுது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னுச்சொல் நோற்பாரிற் பின்"

என்னும் தமிழ்மறை பொறுமையின் பெரு மையை இனிது விளக்குகின்றது.

நம் தமிழ்ப் பெரியார் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழன்னைக் காவன பணிகள்புரிந்து இன்புறச் செந்தமிழ்க் குரவராகிய தில்லையம் பலவாணர் செம்பொற் சேவடிகளை ஏத்து தும்.

—கலைமகள்—14-3-35.

எங்கள் தமிழ்ப்பண்டிதர்

கே. ஸ்வாமிநாதன், எம். ஏ., பி. எல்.

நான்ப்ரெஸிடென்ஸி காலேஜில் சேர்ந்த போது ஐயரவர்கள்தான் தமிழ்ப்பண்டிதர். இவருடைய ஆழ்ந்த படிப்பும், தமிழிலக்கி யத்துக்கு இவர் செய்துள்ள 'ராக்ஷஸ' காரி யங்களும், முதல்வகுப்பு மாணவருக்கு எப் படித்தெரியும்?

கழுத்தை மறைக்கும் சட்டையும், சுவரைப் பாரென்றால் கதவைப்பார்க்கும் (சற்றுத்துவண்ட) தலைப்பாகையும், படபடவென்று இங்கிலீஷ்பேசாமையும் ஒருவரிடம் ஒன்று சேர்ந்தால் அவரை மதிப்பதெப்படி?

இதெல்லாம் போகட்டும்; தமிழ்கூட இந்த ஆசாமிக்கு நன்றாய்த்தெரியாதோ என்ற சந்தேகமும் உண்டாயிற்று. அதுவரை எங்களுக்குத் தெரிந்த தமிழ்ப்பண்டிதர்கள் ஒருவித கம்பீரமான, பொருளற்ற தமிழைப் பேசி, ஒட்டக்கூத்தர் காளமேகம் முதலிய பெரியாரின் பல்லொடிக்கும் செய்யுள், உதடு ஒட்டாத செய்யுள், சிலேடைமிகுந்த செய்யுள் இவற்றைக் கக்கி, எங்களைப் பிரமிக்கச் செய்ததுண்டு; தமிழ் வகுப்பில் இந்த இடி முழக்கத்தைக் கேட்டுச் சிலராவது பயபக்தியுடன் நடந்ததுண்டு. (இதெல்லாம் பழைய சரித்திரம். இப்பொழுது தமிழ்ப்பண்டிதர்களுங்கூட வெள்ளைத்தமிழ் பேசுவதாகக் கேள்வி.)

ஆனால், இந்தக் கிழவரோ (அப்பொழுதே இவர் கிழவர்தான்) மெதுவாக, மிக எளிய இனிய நடையில், எல்லாருக்கும் பொருள் விளங்கி விடும்வகையில் பேசினார்; கரடுமுரடான பழைய செய்யுள்களை எங்கள்மேல் வீசியெறிந்து, எங்களை ஹிம்ஸித்துப் பயமுறுத்தச் சக்தியற்றவர்போலிருந்தார். உண்மையில் செந்தமிழ் தெரிந்தவராயின், இப்படி 'அப்பாவி'யாய் இருப்பாரா? இவ்வித 'சாதாரணப்பேச்சு' இருப்பானேன்? இன்று 'கல்கி'யின் கைவலிமையினால் தமிழுலகம் முழுவதும் பரவியிருக்கும் சாதாரண நடையின் ரகசியத்தை ஐயரவர்கள் மாணவர்களுக்கு அப்போதே வெளியிட்டார். ஆனால் அதன் அருமையை அறிந்து, அதைப் போற்றி அநுபவிப்பதற்குக் காலம் வரவில்லை; எங்களுக்கும் சரி, உலகத்துக்கும் சரி, தக்க காலம் வரவில்லை.

அந்த வருஷம் ஜூலைமாதம் இரண்டாம் வாரம் புதன்கிழமை காலை 10-30 மணிக்கு, செங்கோடையனும் நானும் ஒரு முடிவுசெய்தோம்; அதாவது: 'இவர் சுத்த பிரயோஜனமில்லை' என்பதே. (S. S. L. C. இங்கிலீஷில் எங்கள் இருவருக்கும் நல்ல மார்க்கு வந்துவிட்டதால் எங்களுக்குள் சுயமதிப்பும் பரஸ்பர கௌரவமும் அதிகம்.)

ஆனால், வெகுசீக்கிரத்தில் இந்த முடிவு மாறுதல் அடைந்தது. முதலாவது, ஹண்ட்டர்துரை இவருக்குக் காட்டும் மரியாதையைப் பார்த்ததில், இந்தப் பண்டிதரிடம் ஏதோ சரக்கு இருக்கும் என்ற நம்பிக்கை பிறந்தது. மேலும், தமிழ்ப்பண்டிதர்களிடம் நாங்கள் எதிர்பார்த்த குணங்கள் இவரிடம் காணவில்லை யென்றாலும், இங்கிலீஷ் அல்லது சரித்திர வாத்தியார்களுக்குக்கூட இல்லாத சாதுர்யமும், கேலிப்பேச்சும், லௌகிக அறிவும் இவரிடம் புலப்பட்டன. மாணவர் ஒவ்வொருவரின் பேர், ஊர், குடும்பம் முதலிய வரலாறுகளைக் கேட்டு, ஒவ்வொருவருடைய தகப்பனார், சிற்றப்பா, பெரியப்பா, தாத்தா முதலியவரைப்பற்றியும், அவர்கள் ஊரோ, கிராமமோ சரித்திரத்திலும் பாட்டிலும் பெற்ற பேரைப் பற்றியும், இன்னும் என்ன என்னவோ ஸ்வாரஸ்யமான விஷயங்களைப் பற்றியும் அவிழ்த்துவிட்டார். திவான் சேஷையா சாஸ்திரி முதல், மாங்குடிக்கு நாலுமைல் தூரத்திலுள்ள சுரைக்காயூர் கிராம முன்ஸீப் முத்துசாமி பிள்ளைவரை, நாங்கள் பேர் சொன்ன நபர்கள் எல்லாரும் தமக்கு நெருங்கிய சிநேகிதர்கள் என்றும், தமிழ்நாடு முழுவதிலும் தமக்குத் தெரியாத கிராமமாவது, பிராசுதாரராவது, உத்தியோகஸ்தராவது இல்லை, இருந்திருக்கவும் முடியாது என்றும் சந்தேகந் தீர நிரூபித்துவிட்டார். புத்தியுள்ள மாணவர்கள் இதை உணர்ந்து அன்று முதல் இவ்வகுப்பில் வெகு மரியாதையாய் நடந்துகொண்டார்கள். கர்ப்பூரவாசனை தெரியாத வேறு சிலர் சிலசமயம் 'வாலியாட்ட' முயன்றால், அவர்களை அடக்குவதில் நம் ஐயரவர்கள் பல தட்பமுறைகளைக் கையாளுவார். கடிந்துபேசாமல், பழுத்த வாழைப்பழத்தில் கூர்மையான ஊசியை ஏற்றுவதுபோல, அழகான இரண்டொரு வார்த்தையில் ஆளை அழச்செய்து விடுவார். "உன் தமையன் வகுப்பில் வெகுவிநயமாயிருப்பான்; ஆனால் அவன் படித்தவன்" என்று எனது நண்பனொருவனைப்பார்த்து அவர் சொன்னது இன்னும் ஞாபகத்திலிருக்கிறது. முக்கியமாய்—(அவையெல்லாம் உண்மையோ கட்டுக்கதையோ எனக்குத் தெரியாது)—பி. சம்பந்த முதலியாரை நாயகராகவுடைய கதைகளைப் பிரயோகித்தே எங்களில் பலரைக் கைவசப்படுத்திவிட்டார். பழையமாணவர் எல்லாரி

டத்திலும் இவருக்கு மிக்க அன்பு உண்டு; என்றாலும், எனக்குத் தெரிந்தமட்டில் இ. வை. அனந்தராமையரிடத்திலும், ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியாரிடத்திலும் ஒரு விசேஷ அபிமானம் வைத்திருப்பதாகவே சொல்லலாம்.

* * *

ஐயரவர்கள் வெளியிட்டிருக்கும் தமிழ் நூல்களின் தொகையையும், அவற்றின் இலக்கியச் சிறப்பையும், அவற்றினுள் பொதிந்து கிடக்கும் சரித்திரச்சாக்ஷியங்களையும் கருதுங்கால் தமிழுக்கு இவர் ஒருவர் செய்திருக்கும் தொண்டு எவரும் எந்தப்பாஷைக்கும் எக்காலத்திலும் செய்ததில்லை என்று நிச்சயமாய்ச் சொல்லலாம். கான்ஸ்டான்டிநோபில் (*Constantinople*) நகரிலிருந்து தப்பியோடும் கிரேக்க சாஸ்திரிகள் இத்தாலியா தேசத்துக்குக் கொணர்ந்த ஏடுகளே ஐரோப்பா புனர்ஜன்மம் (*Renaissance*) பெற்றதற்கு ஒரு முக்கியகாரணமென்பர். பாரதியாருக்குக் கவிதையிலும் தமிழரனைவருக்குமே வாழ்க்கையிலும் உயிரும் உத்ஸாகமும் ஊட்டித் தமிழ் நாட்டுக்குப் புனர்ஜன்மம் அளித்தவர் இவரே. எத்தனையோ புலவர்களும், கல்விக் கழகங்களும், அரச குடும்பங்களும் ஒன்று சேர்ந்து, நூறுவருஷகாலத்தில் ஐரோப்பாவில் நடத்திவைத்த ஒரு பெரிய காரியத்தை, இந்தத் தமிழர் ஒருவராகச் செய்து முடித்திருக்கிறார்.

இவர் செய்த தொண்டின் பரிமாணத்தைக் கணிக்க ஓர் உபமானம் சொல்லலாம்: 1870-ஆம் வருஷத்தில் 'பியோவுல்ப்' (*Beowulf*) என்ற காவியமும், சாஸர், ஸ்பென்ஸர், ஷேக்ஸ்பியர் (*Chaucer, Spencer, Shakespeare*) என்ற கவிகளின் நூல்களும் பதிப்பிக்கப்படவில்லையென்றும், ஏடுகளிலே அங்குமிங்கும் சிதறிக்கிடந்தன என்றும் வைத்துக் கொள்வோம். மில்ட்டன் (*Milton*), ஜான்ஸன் (*Johnson*) முதலிய பிற்காலத்திய நூலாசிரியர் பிரஸ்தாபிப்பதாலும், சில வாக்கியங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டுவதாலும் மாத்திரமே, அந்த ஆதிகவிகளின் பேர்களும், நூல்களும் சிலர் காதில் விழுவதாக வைத்துக்கொள்வோம். சென்ற அறுபது வருஷத்தில் ஆங்கிலேய வித்வான் ஒருவர் தோன்றி, தன்னந்தனிமையாய்ப் பழையகால நூல்கள் அத்தனையையும் சாஸ்த்ரோக்தமாய் முற்றும் பிழையறப் பதிப்பித்து ஆங்கிலேயருக்குத் தந்ததாக வைத்துக்கொள்வோம். மேல்நாட்டு ஜனங்களிடம் பல நூற்றாண்டுகளாக இவ்வளவு உபேக்ஷையும் குடிகொண்டிராது; வேறொரு வித்வானிடம் இவ்வளவு பாண்டித்தியமும், ஊக்கமும், உத்ஸாகமும், விடாமுயற்சியும், புத்திகூர்மையும், லௌகிக ஞானமும் ஒன்றுகூடி இரா. (ஆனால் இது உவமானந்தானே?) இப்படி ஒரு வித்வான் செய்திருந்தால், மேல்நாட்டார் அவருக்கு என்னதான் கைம்மாறு செய்யமாட்டார்கள்?

என்னசெய்வார்கள் என்று ஊகிப்பானேன்? ஆயிரம் வருஷங்களுக்குமுன் ஐரோப்பா முழுவதும் சர்வகலாசாலைகள் கிளம்பினவே; ஏன்? யாரை முன்னிட்டுக்கிளம்பின? ஆக்ஸ்போர்டு, கேம்ப்ரிட்ஜ், பாரிஸ் (*Oxford, Cambridge, Paris*) என்ற சர்வகலாசாலைகளெல்லாம், இவரைப்போன்ற 'மகா மகா உபாத்தியாயர்'களை அண்டியன்றே பிழைத்தன?

—கலைமகள்—14-3-35.

ஆயிரம்பிறை கண்டவர்

வே. நாராயணையர், எம். ஏ., எம். எல்.

ஆயிரம்பிறைகண்ட அருந்தமிழராகிய மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் ஐயரவர்களின் அருமைபெருமைகளைத் தமிழுலகு சிந்தித்துப் போற்றுவது பொருத்தமே. ஐயரவர்கள், "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்னும் வார்த்தையைத் தமிழன்னைக்கு எய்துவித்தவர்கள். ஈன்றபொழுதிற் பெரிதுவப்பள் அன்றே தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்?

ஐயரவர்கள் பிராயத்தாலும் ஞானத்தாலும் சீலத்தாலும் நோன்பினாலும் முதிர்ச்சி பெற்றவர்கள். முதுமைக்குக் கடலை உவமிப்பது மரபு. ஆக்கவும் அழிக்கவும் அளிக்கவும் வல்ல முந்நீரானது தன் வேலையை அதிக்கிரமியாது அமைவது போன்று, ஐயரவர்களும் முதிர்ச்சி

பெரும் பிறர்பலரும் செய்யும் ஆரவாரங்களை யெல்லாம் பொருட்படுத்தாமல் அடங்கியிருக்கும் இயல்புடையவர்கள். நூற்றாண்டுகளிலே இக்குணம் மிகவும் வேண்டப்படுவதாகும். அச்சு முதலிய சாதனங்களாலே நூல்கள் மலிந்துள்ள இக்காலத்திலே, நாவைக் காத்தலும் பேனாவைக் காத்தலும் அருங்குணங்களாம். வெறுமனே எழுதி அச்சிற்கண்டு மகிழ்வதினும், தான் கண்ட நல்லது உண்டானால் மட்டுமே எழுத முன்வருவது மேல். எவ்வளவு பழைய நூல்கள், எவ்வளவு சிறந்த நூல்கள், கற்போரற்று ஓலைச்சுவடிகளாகக் கிடந்தன! இன்னும் கிடக்கின்றன! அவற்றைத் தம்மால் இயன்றவரை மடிவுறுவண்ணம் காத்து, தாம் பட்டபாடெல்லாம் பிறர் படாதவாறு, சுத்தமான பதிப்புக்களாய் வெளியிடுதலே தமிழருக்குக் காலத்தாற்செய்யும் உதவி என்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பேயே நிச்சயித்து, இந்நிச்சயப்படியே காலத்தையெல்லாம் தமிழ் நூலாய்ந்து பதிப்பித்தலிலேயே போக்கிய பெருமை ஐயரவர்களதேயாம். தொன்னூல்களைத் திருத்த முறப் பதிப்பித்து உதவுவதினும் சிறந்த தொன்று உண்டோ? இவ்வாறு சுத்துவக்கும் இன்பம் அறிந்தேயன்றே, ஐயரவர்கள் "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" என்று சங்கற்பித்துக்கொண்டார்கள்:

"இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்த மென்றாலும் வேண்டேன்-திருந்த
உதிப்பித்த பன்னூ லொளிர வடியேன்
பதிப்பிக்க வேகடைக்கண் பார்."

பன்னூல் ஒளிரப் பதிப்பித்தலாகிய நோன்பிலே ஆற்றலோடு தலைப்பட்ட ஐயரவர்கள் கூற்றங்குதித்த பெருந்தமிழராவர். அவர்கள் விடாது உழைத்துப் பதிப்பிக்கச் சித்தமாய் வைத்துள்ள நூல்கள் இன்னும் எத்தனையோ உள்ளன. ஆதலின், அவை பலவும் அவர்களாற் பதிப்புறும் பாக்கியம் பெற்றுளிருமாறு பதிப்புத் தொழிலுக்கு இன்றியமையாத சாதனங்கள் பலவற்றையும் அவர்களிடம் சேர்ப்பித்து அவர்களது அபீஷ்டத்தைப் பூர்த்தி செய்வதே தமிழுலகின் தனிக் கடமையாகும்.

—சலிமகள்—14-3-35.

பாராட்டு

சே. சோமசுந்தரபாரதி, எம். ஏ., பி. எல்.

பிரம்மஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர். உ. வே. சாமிநாத ஐயரவர்களைத் தமிழுலக முழுதறியும். இவர்கள் புகழ் பரவுதற்கு என்போன்றார் எடுத்துரைகள் யாதும் வேண்டா. இவர்கள் பெருந்தகவுரைக்கச் சிறப்புரிமை பெற்றாருஞ் சிலரோடு சேர்த்தெண்ணப் பெறும் பேற்றை எனக்குதவிய 'கலிமகள்' பத்திராசிரியருள் ஒருவரும், சென்னைச் சர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியருமாகிய திரு. வையாபுரிப் பிள்ளையவர்களின் அன்பும், ஐயரவர்களின் தமிழ்த் தொண்டு பாராட்டும் விழுமினில் என் மகிழ்ச்சி கூறுமாவாவுமே இப்பணியில் எனைத் தூண்டுவன. "நல்லார் குணங்களுரைப்பதுவும்" நன்றுற்றலாமாகையால், இப்பெரியாரின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக்கொண்டாட்டு வெளியீட்டில் யானும் இப்பெரியாரின் மெய்க்கீர்த்தி சிறிது கூற விரைந்து விடைபெறுகின்றேன்.

தற்காலத் தமிழகத்தில், புலமையுலகில் தலைமைநிலை தாங்கித் தங்கிகாற்ற தமிழ் நாவலராய் வீறுபெற்றுயர்ந்த தகையாளர் சாமிநாதையரவர்களை அறியாதார் தமிழ் மணமறியாதாராம். தமிழக மட்டுமன்று; தமிழ் மொழித்தகவாயும் மேலைட்டார் எல்லாரும் இவர்கள் புகழேற்றிப் போற்றுகின்றார்கள். விரிந்து பரந்தாழ்ந்த பல விழுமிய நூலெழுந்து காலவரம்பிகந்த தமிழுகந்து பயின்று நிதம் நலமயின்று வளமலிந்து நிரம்பியநூற் பெரும்புலமைச் செல்வருளே இப் பெரியார் செம்மலாவார். சிறந்த சால்பு பிறிதெதுவும் இலதெனினும், இவர்களிடம் நின்ற நிறைபுலமை யொன்றே இவர்களுக்குக் குறையாத புகழுதவப் போதியதாகும்.

இன்னும் இவர்கள், மருங்கொவ்வாத் தமிழ்வாணர் ஒருங்கு வந்து வீறுசொலப் பொதுவறுதண்டமிழ்ப் புலமை இறைமை தாங்கி, அனைவருக்கும் இனியவராஞ் செவ்வி மிகப்படைத்தாரும் பண்பு இவர்கள் உடைமையாகும். "இன்சொலினிதீனல்" கண்டு கொண்டு இவர்கள் யாண்டும் யார்க்கும் எஞ்ஞான்றும் இனியனவே சொல்லிக் கனிவிக்கும்

ஏமாப்பை அகல அணிகலனுக் கொண்டிடை யார்கள்.

சமயவெறி, தனச்செருக்கு, சண்டையிடும் இழிபுலமை செறிந்தடர்க்குந் தற்காலத் தமிழச் சமுதாயத்தில், வேத்தியலில் விழுப் பதவிதாங்குபவர், குறுமன்னர் விணையாளர், பலமடத்தின் அதிபதிகள், தனிவணிகர், வேளாண்மை விழுச்செல்வர், இகலினையே புகலிடமாக் கொள்பவர்கள், வாதினைத் தம் வாழ்வினுக்குச் சாதகமாக்கொண்ட பலர், பலவேறு பதவியுடை யெனோவோரும் இவர் கள் தமதின்றனைவரென விரும்ப எவ்வெ வர்க்கும் இனிய சொலும் சொல்லின் செல் வர்.

நாமறியத் தமிழர்களே தமிழ்பேசல் இழி தகவென்று அதை வெறுத்து இறுமாந்த காலமுண்டு. தமிழுணர்வின் குறைவளவே அறிவின் நிறைவளங் குறிப்பதெனச் சொல் பவரைப் பழியாமல் தமிழுலகம் பெரியார் போல் மதித்ததுண்டு. தமிழ்க்கல்வி பயிலா தார் எனைமாட்சியுடையாரும் அந்நியரும் ஆங்கிலரும் இந்நாளில் தட்டுண்டு தடுமாறி யேனும் தமிழிற் பேச விரும்புவதை இன்று காண்போம். இவ்வரிய மதிப்பு விருப்ப மாறுபாட்டை ஒரே தலைமுறையில் தமிழ நிடைச்செய்துதவித் தமிழ் வளர்த்த செவ்வி யருள் தலைமை நிலை ஐயரவர்கட்கே உரித்தா மென்பது மிகையாகாது.

தமிழில் நன்னூலே கிடையாது, அறிவு வளம் பெருக்காத சின்னூல்கள் சிலவன்றி மதிவாணர் மதிக்க வேறெந்நூலும் இல்லை யெனப் பழித்த பலர், வாழ்நாளை முழுது தவிப் பயின்றுலும் படித்துலவாப் பன்னூல் கள் விழுப்பொருளும் கவிச்சுவையும் தழுவி நலமிக நிறைந்த எண்ணில நூல் இறந்த போய் இன்று முள படிப்பார்க்கென்று தொன்னூல்கள் தருவியெடுத்து உலகறிய உதவித் தொன்மைத் தமிழ்ப்பெருமை நாக ரிகம் உலகறியச் செய்த பெரும்புண்ணிய ருள் முதற்பதவி இவர்களதே யென்பதிலோர் ஐயமில்லை.

காலகதியும் கறையானும் கொண்டுண்டு அழிந்தொழிந்தனபோக, அழியவிருந்த பல பழைய விழுமிய நூற்சுவடிகளைத் தற்காலத் தமிழரின் தொதுமல், மறவி, மடிமையெனும் மறலிதாதர் கொடுங்கையினின்றும் பிடுங்கி அவற்றிற்கு இறவாப் புதுவாழ்வு உதவிய பலருங் கூடச் சிதலரித்தும் பிறவழியும் விளங்காத இடங்களிலே சொல்விரித்தும் திரித்தும் தமது மனம் விரும்பியாங்குத் திருத்தங்கள் பல துணிந்து நூற்பான்மை மாற்றுதாரில்லை யெனலாம். ஐயரவர்களோ, தெளிந்து துணியக்கூடும் இடங்களிலும் புதுப்பாடம் பெய்யாமல் ஏடிருந்தபடி யெழுதி வெளியிடுவர்; பாடங்கள் பலவுள் வேல், அவை பலவு மறையாமல் குறிப்பிப்பர். இவ்வாறு பழம்புலவர் மரபினெடு மாண்பு பேணிப் பதிப்பு வெளியீடுகளில் மெய்ம்மை யறம் ஓம்பிக் காப்பர்.

இதுவுமன்றி மேனாட்டார் முறைமுழுதும் மேற்கொண்டு முகவுரைகள், அரிய படிவிளக் கங்கள், அபிதானமஞ்சரிகள், மேற்கோளின் விவரங்கள், நூலில் வரும் அரிய பல பொ ருட்குறிப்பு இவை யெல்லாம் அரிது முயன்று இனிதெழுதித் தமிழகத்தில் நூலுலகைச்சால வளஞ்செயும் அரிய முயற்சியிலே அயர்ச்சி யின்றி உழைத்து மகிழ்வார்கள். இவர்கள் பெருமுயற்சியினால் நாகரிகப் புலவர் பலர் இன்றளவும் நூலினையே படியாமல் பல பழ நூற் பொருள் முழுதும் உணர்ந்ததுபோல் வாதப்போர் விளைத்து உளஞ்சுளியாக் களி யாட்டம் கொள்ளுதற்கு இப்பெரியார் இவர்க்கெல்லாம் வைப்புநிதிவழங்கி அவை எண்பதத்தாலெவ்வெவரும் துய்த்துலவச் செய்துவைத்த வள்ளலாவர்.

அருமையென மேனாட்டார் கொண்டாடும் வெள்ளி விழா இரட்டிய பொன்விழாவாண் டும் ஐம்பதேயாம். இக்காலம், தலைமுறைகள் இரண்டளக்கப் போதியதாம். இத்துடனே ஒருபதுகூடி அறுபது பெறினும் அதை வைர விழாவெனவே வெள்ளையரும் அயர்ந்து மகிழ் வார். ஐயரவர்கள் எண்ணேந்தை இரட்டிய ஆண்டவதிகண்டும், ஐயைந்தை யிரட்டியதன் மேலான ஆண்டு பல தமிழ்த்தொண்டே ஆற்றிவந்தும், தமிழுலகு அவர்களுக்குத் தக வுடைய செய்நன்றி செய்ததெனக் கூறற் கில்லை. அந்நியராம் ஆங்கில நல்லரசியலார் இப்பெரியார் தமிழ்ப்புலமை நிறைவு கண்டு மகாமகோபாத்தியாயப் பதவி இவர்க்கு உதவி ஒருவாறு கடனேற்றக் கண்டு வைத் தோம்.

வடமொழிக் கடலுக்கெல்லைகண்ட திருக் குடந்தை மடாதிபதிகளும் இவர்களைத் தாக்ஷிணாத்தியகலாநிதியெனப் புகழ்ந்து

தாமும் புகழ்கொண்டார்கள். தென் மதுரைத் தமிழ்ச் சங்கம் இவர்களுக்கு நிதிக்கிழி யொன்றுதவித் தன்னறத்தை ஒரு சிறிது நிறு விற்றுகும். எனினும் கொடை மடம் பயின்ற வள்ளலர் வாழ்ந்த புகழோட்டம்பெரிதகன்ற தமிழகத்தில் தமிழ்ப்பெருமை நெடிதுநிதம் பேசும் நம்மவர்கள் தளராமல் சலியாமல் தமிழ்த்தொண்டை ஒல்லும் வகையான ஓவாது அறவினையாச் செல்லும் வாயெல்லாம் செய்துவரும் ஐயரவர்களுக்குச் செய்ந்நன்றி மறவாத் தமிழ்மரபின் மாட்சி அறிவித்தல் இன்றியமையாதது ஆகுமன்றே? தமிழர் விரைந்து வினை மேற்கொண்டு உற்றுழி யுதவும் கொற்றம் விரும்பி இந்த நல்ல தருணத்தில் தங்கடனுற்றித் தம்பால் தமிழன்பு உணர்வின் தளர்வின்மையை விளக்கி வீறு பெறுவரென நம்புகிறேன்.

இப்போது நாம் செய்யும் உபசாரம் இவர்களுக்குச் செய்ததாகமட்டுமமையாது, தமிழ்ப் புலமைக்கும் தமிழ் வளர்க்கும் தொண்டினுக்குமே நாம் வைத்திருக்கும் மெய்யன்பை நீட்டியளப்பதோர் கோலாகும். ஐயரவர்கள் இன்னும் பல்லாண்டு இனிதிருந்து இனிய தமிழ்வளத்தை வளர்த்து உயரும் பெரு வாழ்வும் நலம் பலவும் பெறுகவென விரும்பு கின்ற

தமிழன்
சே. சோ. பாரதி.
—கலைமகள்—14—3—35.

தமிழ்த்தாயின் முதற்புலவர்

பண்டிதமணி மு. கதிரேச செட்டியார்

மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர் களுக்கு எண்பதாம் ஆண்டு நிறைவுறுதல் குறித்து அந்நன்னாளில் தமிழன்பர்கள் விழாக் கொண்டாட ஏற்பாடு செய்துவருதலையறிந்து பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன். ஸ்ரீமான் ஐயரவர்கள் ஆண்டினும் அறிவினும் முதிர்ந்து இக்காலத்துத் தமிழ்ப் புலவருள் தலைமணி யாக விளங்குகின்றவர்கள். துறைசையாதீனத்துக் கவிச் சக்கரவர்த்தியாக விளங்கிய மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்கள்பால் முறை யாகத் தமிழ் பயின்று அரசினர் கலாசாலை களிற் பல்லாண்டுகளாகச் சிறந்த தமிழாசிரிய ராக வீற்றிருந்து பன்னூறு மாணவர்களுக் குத் தமிழுணவளித்தவர்கள். தமிழ்ப் புல வர்கள் வாழ்ந்த பல ஊர்களுக்குஞ் சென்று பல அரிய தமிழ்நூற் சுவடிகளை யெல்லாம் தொகுத்துச் செவ்விய முறையின் ஆராய்ந்து பலவகைக் குறிப்புக்களுடன் மேலைத்தேசத்து நூல் வெளியீடுகளுக்கு எவ்வகையினும் தாழாது சிறந்தமுறையில் அந்நூல்களைவெளி யிட்டு வருகின்றவர்கள். இத்துறையில் இவர் களையொப்பார் இதுகாறும் யாரும் இல்லை யென்பது யாவரும் உணர்வர். இக்காலத்துத் தமிழறிஞர் சங்கநூல் முதலிய பழையதமிழ் நூல்களை எளிதிற் பெற்று இன்புறுதற்கு இவர்கள் பேருதவியே சிறந்த கருவியாகும். தம் வாழ்நாள் முழுதும் இடைப்பிறவரலின்றித் தமிழ்த் தொண்டொன்றையே மேற் கொண்டு உழைத்த பெருமை ஸ்ரீமான் ஐயர வர்கள் ஒருவர்க்கே உரியதென்பது மிகையா காது. இவர்கள் பெருமைக்கு அரசினரும் சர்வகலாசாலையாரும் மடாதிபதிகளும் பிற சங்கங்களும் இவர்களுக்கு அளித்த சிறந்த பட்டங்களே சான்றுகத் திகழ்கின்றன. உலக வாழ்க்கையில் கல்வியறிவினுண்டாம் இன் பமே விழுமியதெனக் கொண்டு வாழ்க்கை யை நலம்பெற நடத்திவருகின்ற நம் ஐயரவர் களின் வரலாறு பின்வரும் புலவர் சந்ததிக ளுக்கு மிகவும் உபகாரமாக விளங்குமென்பது ஒருதலை. இவர்களோடு யான் பழகுங் காலமெல்லாம் எனக்குத் தமிழிற் புதிய புதிய ஆர்வமுண்டாதல் இயல்பு. இவர்கள் பக்கலிலிருந்து கழித்த காலமெல்லாம் பய னுடையனவாகவே சென்றனவென்பது என் அநுபவமாகும். பழைய புலவர்களின் வர லாற்றுக்குறிப்புக்களும் புலவர்களை ஆதரித்து வந்த செல்வர்களின் செயல்களும் பிறவும் வியக்கத்தக்க முறையில் இவர்கள் எடுத்துக் கூறுவதுண்டு. கல்லூரி முதலிய நிலையங்களில் தமிழாசிரியர்களுக்கு ஒதுக்கிடன் அளித்துப் புறக்கணிக்கப்பட்டு வரும் இக்காலத்தில் இவர்கள் ஆங்கிலப் பேராசிரியர்களைவிடச் சிறந்த வீறு பெற்று விளங்கிவரும் நிலை தமி ழுலகுக்கே நன்கு மதிப்பைத் தருவதொன்றா கும். இவர்கள் குணங்களுட் சிறந்தது பகைவர் மாட்டும் இனியராக நடந்துகொள் வது. யாதுகாரணத்தாலேனும் தம்மை ஒருவர்

வெறுத்துப் பேசினாலும் எழுதினாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தம் கடமையைத் தளராது செய்துவரும் இயல்பு நம் ஐயரவர்கள்பாலன்றி வேறு யாரிடத்தும் காண்டற்கு இயலாத தொன்று.

ஓர் அவைக்களத்து இவர்கள் தலைவராக இருக்குங்கால், ஒருவர்நெறிபிறழ்ந்து பேசுவாராயின் அப்பிறழ்ச்சியை அறிஞர் உணர்ந்து கொள்ளும் வண்ணமும் அவ்வுபந்யாசகர் மனம் வருந்தாமல் தம்மைப் பாராட்டுவதாக நினைக்கும் வண்ணமும் இவர்கள் முடிவுரை கூறுவது வியப்பைத் தருவதாகும். புதுக்கோட்டை ஆட்சியுட்பட்ட மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபையில் மூன்றுமுறை ஸ்ரீமாந் ஐயரவர்கள் தலைவராக வீற்றிருந்து சபையை அலங்கரித்தது உண்டு. அங்ஙனம் மும்முறை இவர்கள் நல்வரவு அச்சபைக்கு நேர்ந்ததற்குக் காரணம் இவர்கள் தமிழ்ப்பணிப் பெருமையும் அச்சபையினிடத்தும் என்பாலும் வைத்த பேரன்புமேயாகும். அந்நாட்களில் எம் நகரத்துத் தனவணிக மக்கள் எய்திய இன்பம் சிறந்ததே; பன்மீன் நடுவட் பான்மதி விளங்கிய விண்ணிடம் போல அச்சபை பல புலவர் புடைசூழ்ந்திருப்ப இவர்களைத் தலைவராகப் பெற்றுத் திகழ்ந்த காட்சி இன்னும் என் உள்ளத்தை இன்புறுத்துகின்றது. தமிழ் மொழிக்குப் புத்துயிரளித்த புலவர் சிகாமணியாகிய ஸ்ரீமாந் ஐயரவர்களின் பெருமை எத்துணை விரிப்பினும் அடங்குவதன்று; "மண்டேய்த்த புகழினன்" என்பது இவர்களுக்குப் பொருந்துவதாகும். இவர்கள் மாண்பு வளர வளரத் தமிழ்ப் புலவர்களின் பெருமை வளர்வதாயிற்று. வேற்றுமொழிப் பயிற்சி ஒரு சிறிதும் விரவாது தமிழ்ஒன்றே பயின்று பல மொழிகளிலும் வல்ல நிபுணர்களினுஞ் சிறக்கப் பீடு பெரிதுடையராக இவர்கள் விளங்குதல் தனித்தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் பெருமை தருவதொன்றாகும். இத்தகைய பெருமை மிக்க பெரும்பேராசிரியராகிய ஸ்ரீமாந் ஐயரவர்களின் சதாபிஷேகவிழாக் கொண்டாடும்படி நேர்ந்தது தமிழ் நிலத்தாரின் பாக்கியமேயாகும்.

தமிழ்த் தாயின் முதற் புதல்வராகிய இவர்கள் இன்னும் பல்லாண்டு நிலவுலகவாழ்க்கை பெற்றுத் தம் அன்னைக்குரிய திருப்பணிகளை மேன்மேலுஞ் சிறக்கப் புரிந்து வாழும்வண்ணம் சொற்பொருள் வடிவினராகிய நம் உமாநாதர் திருவருள் பாலிப்பாராக.

—கலைமகள்—14—3—35.

38-வருஷங்களுக்கு முன்

கும்பகோணம் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்கள் கல்லூரியில் தம் கடமையைக் கழித்த காலம் போக எஞ்சியவற்றில் ஒவ்வொரு நிமிஷத்தையும் பனையோலைச் சுவடிக் குவியலில், முன் இறந்துபோன பழந்தமிழ் நூல்களை ஆராய்ந்து கொண்டிருத்தலிலேயே கழித்து வருகின்றார்கள். அத்தகைய பனையோலைப் பழஞ் சுவடிகளிற்றானும் வரிகள் குறைந்தும் வார்த்தைகள் பிறழ்ந்தும் செல் தூளித்த புள்ளியன்றி மெய்ப் புள்ளியில்லாச் சொற்களும், இவைகளினுலும் ஏடெழுதுவோராலும் நிகழ்ந்த சொற்குற்றம் பொருட்குற்றங்களும் தன்னகத்தில் நிறைந்து பாண வாய்ப்பட்ட சுவடிகளைத் திருத்துவதிலும் அவற்றின் குற்றங்களைக் கண்டுபிடித்துச் செம்மை செய்வதிலும் ஐயரவர்கள் படுங் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இத்தகைய அருஞ் செயல்களை முடிப்பதற்குரிய சிறந்த கருவிகளேனும் இருக்கின்றனவா? அந்தோ; அவையும் இல்லை. அவர்கள் காவிரிக்கரையிலுள்ள ஒரு சிறிய வீட்டின் மெத்தைமேல் தரையில் உட்கார்ந்து கொண்டு சுடுகாற்றுத் தம்மேல் எரிந்துவீசச் சிறிய மேசை யொன்றின்மேல் கடிதங்களை வைத்துக்கொண்டு எழுதுவார்கள். அவர்கள் திவ்ய தேகத்தின்மேல் எறிந்துவந்து வீசும் காற்றின் வன்மையைக் குறைக்கத்தக்க குளிர்ந்தபந்தல் அவர்கள் வீட்டு முகப்பில் இல்லை; க்ரோடன்ஸ் இல்லை; வெட்டிவேர்த்தட்டிகளில்லை; குளிர்காற்று வீசும் பங்கா இல்லை. இவ்வாறுகவும் இத்தகைய துன்பங்களின் நடுவிலிருந்து கொண்டே பண்டிதரவர்கள் தமிழ்ச்சுவையறிந்து அச்சுவையை எல்லார்க்கும் தருகக் கொடுக்க வேண்டு மென்னும் பொது நன்மையை நாடி அரிய பெரிய நூல்களை யாராய்ந்து அச்சிட்டு வெளியிட்டு வருகிறார்கள். இவர்கள் ஐரோப்பியராய் மட்டும் இருந்தால் அந்நாடுகளிலுள்ளோர் இவருக்குச் செய்யும் மரியாதையும், நன்கு மதிப்பும் இவ்வளவென் றெடுத்துரைக்க முடியாது;

கவர்ன்மெண்டாரும் எத்தனையோ உயர்ந்த பட்டங்களும் உத்தியோகங்களும் கொடுத்து விடுவார்கள். நம் காருண்ய கவர்ன்மெண்டார் தமதுகல்லூரியில் பண்டிதர் அவர்களது நிலைமையை உயர்த்தி, இத்தகைய வேலைகளினின்றும் அவர்களைச் சிறிது இளைப்பாறச் செய்து பிரஜைகளுக்கும் மாணவர்களுக்கும் அவர்கள் நீடிய ஆயுள் பெற்றுப் பயன் விளைக்குமாறு உதவி செய்வார்களென்று நம்புகிறோம்.—சித்தாந்ததீபிகை (21-6-1897.)

—கலைமகள்—14—3—35.

ஐயரவர்கள் ஸ்வசரித்திரம்

பாஷாபாரததுரந்தர ம. வீ. இராமாநுஜாச்சாரியார்

ஸ்ரீமத் ஐயரவர்களுடைய சரித்திரம் ஒன்று விவரமாக வெளிவந்தால், அது, நல் லுழைப்பின் பெருமையையும், இயலாத தென்று பிறரால் கைவிடப்பட்ட அரிய பெரிய காரியத்தையும் எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் அவற்றுக்கு அஞ்சி மனம் சோர்ந்து நிறுத்திவிடாமல், கடவுள் அருளே முன்னிட்டு, முயற்சிசெய்தால் நிறைவேற்றலா மென்னும் உண்மையையும் நன்கு விளக்கித் தமிழ் மக்களுக்கு ஒரு வழிகாட்டி ஆகும். அப்படிச் செய்யவேண்டுமென்னும் விருப்பம் எனக்குப் பலநாளாக இருந்தது. அஃது, இப் பொழுது அடியோடு நின்றுபோயிற்று. அதற்குக் காரணம் பின்வருமாறு:—

நமது தேசத்தில் வித்வான்களுடைய சரித்திரம் உள்ளது உள்ளபடி விவரமாக எழுதப் படவில்லை என்று பொதுவாக ஒரு குறை கூறுவது உண்டு. ஸ்ரீமத் ஐயரவர்கள் பழைய நூல்கள் பல இறக்கும் தறுவாயிலிருந்தவைகளைத் தேடியெடுத்து அவற்றுக்குப் புத்துயிர் கொடுத்து அவற்றைக் காத்து உதவியது போலத் தம் ஆசிரியராகிய மஹா வித்வான் கவிச் சக்கரவர்த்தி ஸ்ரீமான் திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களுடைய சரித்திரத்தை வெளியிட்டு வித்வான்களுக்கு உண்மைச் சரித்திரம் இல்லையென்னும் பெருங் குறையை நீக்கிப் பேருதவி செய்திருக்கிறார்கள். அது வெளிவந்ததுமுதல் அறிஞர் பலரும் காணாதது கண்டது போலப் பேராவலுடன் அதனைப் படித்துப் படித்து இன்புற்றுக்களிக்கின்றனர். ஆங்கிலம் கற்றவர்கள் பாஸ்வெல் என்பவர் எழுதிய டாக்டர் ஜான்ஸனுடைய (*Boswell's Life of Johnson*) சரித்திரத்திற்கும் மார்லி என்பவர் எழுதிய க்ளாட்ஸ்டன் (*Morley's Life of Gladstone*) சரித்திரத்திற்கும் அதனை ஒப்பிடுவாராயினர். இது போலவே தமிழ் மொழியில் ஸ்வ சரித்திரம் (*Autobiography*) இல்லாத பெருங் குறையையும் ஸ்ரீமத் ஐயரவர்கள் தமது சரித்திரத்தை எழுதி வெளியிடுவதனால் தீர்க்கவேண்டுமென்று எல்லாரும் ஒருமுகமாகச் சொல்லுகிறார்கள். மேலும் ஸ்ரீமத் ஐயரவர்களுடைய இளமைக்கால நிகழ்ச்சிகளை நேரில் பார்த்தவர்கள் இப்பொழுது ஒருவரும் இல்லை; பிற்காலத்திலும் ஒவ்வொரு ஸமயத்தில் ஒவ்வொருவர் இருந்திருப்பார்களே அல்லாமல் எல்லா நிகழ்ச்சிகளையும் உடனிருந்து பார்த்து எல்லாவற்றையும் சிறிதும் விடாமல் சொல்லக் கூடியவர்களுமில்லை. ஆதலால், ஐயரவர்களுடைய சரித்திரத்தை அவர்களே எழுதி வெளியிட வேண்டும். ஆனால், அவர்கள், தாம் பல இடங்களுக்கு ஏடு தேடச் சென்று அங்கங்கே அடைந்த பலவகைச் சிரமங்களையும் பல சபைகளிலும் மற்றும் பல ஸந்தர்ப்பங்களிலும் அடைந்த சிறப்புக்களையும் உள்ளபடி சொல்லுவார்களோ என்பது ஸந்தேகம்; முன்னுள்ளவற்றைச் சொன்னாலும் பின்னுள்ளவற்றைச் சொல்லார்களென்பதைப் பல வருஷங்களாக நெருங்கிப் பழகியதிலிருந்து நான் நன்கு தெரிந்து கொண்டிருக்கிறேன். பழைய நூல்களைச் சோதிக்கும் போது, சிலர் தங்கள் மனம் போலச்செய்வது போலல்லாமல், ஸ்ரீமத் ஐயரவர்கள் எந்த மனச்சாட்சியைக் கொண்டு பாடங்களை நிச்சயிக்கிறார்களோ அந்த மனச்சாட்சியைக் கொண்டே தமது சரித்திரத்தையும் வெளியிட வேண்டுமென்று ப்ரார்த்திப்போமாக.

—கலைமகள்—14—3—35.

ஐயரவர்களும் பதிப்பாசிரியப் பண்பும்

மா. இராசமாணிக்சம்

தங்கள் வாழ்நாட்களைத் தமிழ் நூல்களை ஆராய்ந்து வெளிப்படுத்துதலிலேயே கழித்து வரும் மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களது எண்பத்தோராம் பிறப்புவிழாவன்று இக்கட்டுரை எழுதும் பேறு கிடைத்ததைப் பற்றி யான் பெரிதும் மகிழ்கின்றேன். ஐயரவர்கள், பதிப்பாசிரியர் என்ற முறையில் செய்த பெருந்தொண்டினைப் பாராட்டவே இக்கட்டுரை எழுந்ததாகும்.

செவ்வையாகப் பதிப்பித்துள்ள இப்போதைய பேரிலக்கியங்களைப் படிப்பதோ ஆராய்ச்சி செய்வதோ இலேசான காரியமன்று. அவை இரண்டிற்கும் அளவில்லாப் பொறுமையும் நுண்ணிய ஆராய்ச்சியறிவும் வேண்டற்பாலன எனின், ஏடுகளை வைத்துக் கொண்டு ஆராய்ச்சி செய்து வெளியிடுதல் எத்துணைச் சிரமமான காரியம் என்பதை உள்ளவாறு தமிழுணர்ந்த பேராசிரியரே உணர்வர். மேலும், முதலும் கடையும் இவை யெனக் கண்டுபிடித்தற்கு இயலாவகையில் இராமபாணங்களால் துளைக்கப்பட்டு மக்கிக் கிடந்த ஏடுகளை வைத்துக்கொண்டு பொறுமையோடு ஆராய்ந்து பதிப்பிப்பதெனின் அதற்கு எத்துணைப் பேரூக்கமும் பொறுமையும் வேண்டற்பாலன என்பதை யான் உரைக்கவல்லேன் அல்லேன். ஐயரவர்கள் பேரிலக்கியங்களைப் பதிப்பிக்குங்காற் பட்ட இன்னல்களை அளவிடற்கரிய. அவற்றைப் பற்றி அவர்களே தாங்கள் பதிப்பித்துள்ள பெருங்கதையில், 'இப்படியே இன்னும் இந்நூலின் சம்பந்தமாக உண்டான செய்திகளை எடுத்து எழுதுவதென்றால், அதுவும் ஒரு பெருங்கதையாகும்' என்று எழுதியிருத்தலைக் கவனிக்குமாறு வேண்டுகிறேன்.

ஒரு பெரிய நூலினைப் பதிப்பிக்கும் ஆசிரியர் அந்நூல் எழுதப் பெற்றுள்ள மொழியில் விரிபுலமை சான்றவராகவும் பேரறிஞர் பலராலும் பாராட்டத் தக்க நிலையில் இருப்பவராகவும் இருத்தல் வேண்டும். அவர் தாம் பதிப்பிக்கும் நூலின்கண் வரும் அரிய செய்திகள் பிற நூல்களால் வலியுறுமெனின் அடிக்குறிப்பின்கண் அந்நூற் பகுதியை அப்படியே எடுத்துக்காட்டுதல் வேண்டும்; பல சிறந்த விழுமிய தொடர்களைப் பதிப்பித்தலும் வேண்டும்; நூலிற் காணப்படும் கடின பதங்கட்கு உரையும் சிற்சில இடங்களில் விளக்கவுரையும் காட்டுதல் வேண்டும்; அந்நூலால் வெளிப்படும் மக்களின் செயல்கள், நாகரிகநிலை, இன்னபிறவும் கற்போர் எளிதில் உணருமாறு வரைதல் வேண்டும்; தாம் அந்நூலைப் பதிப்பிக்குங்கால் தமக்கு உண்டான இன்ப துன்பங்களையும் முகவுரையில் எழுதுதல் அவசியம்; இஃது எற்றுக்கோ எனின், பின்னுள்ளோர் ஒரு நூலினைப் பதிப்பிக்குங்கால் உண்டாகும் சிரமத்தை உள்ளவாறு உணர்தற்கும், அந்நூலிற் பயிற்சி பெற்றதும் அதனைப் பதிப்பித்த ஆசிரியரின் பேருழைப்பைப் பாராட்டி மகிழ்வதற்குமே என்க. மேலும் பதிப்பாசிரியர் தமக்கு விளங்காத இடங்களைக் குறிப்பிட்டு முகவுரையில் காட்டுதல் மிகவும் வரவேற்கத் தக்கதும் பாராட்டத்தக்கதும் ஆகும். பதிப்பாசிரியர் தமக்கு விளங்காத இடங்களைக் குறிப்பிடாமல் ஒருவிதமாகப் பொருள் எழுதிப் போதல் அவர்தம் பேருழைப்பிற்கு ஒரு நீங்காக் களங்கமாகும். நூலினைப் பதிப்பிக்குங்கால் அவர் எவரெவர் உதவியினை எவ்வெவ்வாறு பெற்று அநுபவித்தனரோ அதனை உள்ளவாறே முகவுரையில் வரைந்துபாராட்டுதல் பெரிதும் மேற்கொள்ளத் தக்கது. பதிப்பாசிரியர் மனவடக்கம் உடையராயிருத்தலே இவையனைத்தினும் மேம்பாடுற்றது.

இவ்வுத்தம இலக்கணங்கள் யாவும் ஸ்ரீ ஐயரவர்களிடம் ஒளிர்தலை அவர்கள் பதிப்பித்துள்ள ஒவ்வொரு சங்கநூலிலும் காணலாம். உதாரணமாகப் பேரிலக்கியமாகிய பெருங்கதையை யெடுத்து ஆராய்வோம்: அதன் முகவுரையில் ஐயரவர்கள் பெருங்கதையின் ஏட்டுப்பிரதி கிடைத்த வரலாற்றையும், வேறு பிரதியைத் தாம் தேடிச்சேர்த்த வரலாற்றையும் வெகு விளக்கமாகவும் விரிவாகவும் எழுதியுள்ளார்கள். முதலும் முடிவும் இல்லாத நூல் பெருங்கதையாகும். அதுவோ வடமொழி நூலின் மொழிபெயர்ப்பு. ஐயரவர்கள் அந்நூலில் உள்ள விஷயத்தை உணர, அது சம்பந்தமான உதிதோதயகாவ்யம் என்ற வடநூலை நரசிம்மாசாரியார் என்பவரைத் தமிழில் மொழிபெயர்த்துத் தரச்

செய்து அதனை ஆராய்ந்தார்கள். 'உதயண குமார காவியம்' என்ற தமிழ் நூலையும் ஆராய்ந்தார்கள்; இதன் சார்பாக வேறு பல அரிய வடமொழி நூல்களில் உள்ள செய்திகளையும் அறிந்துகொண்டு உதயணன் வரலாற்றினை உணர்ந்தார்கள். பின்னர், இருந்த காண்டங்களை அங்ஙனமே பதிப்பித்து, கடின வார்த்தைகட்குப் பொருளும் விசேடக்குறிப்பும் நூலின் இறுதியிற் சேர்த்துள்ளார்கள்; உதயணன் வரலாற்றையும் ஒவ்வொரு காண்டத்தின் பொருள் விசேடத்தையும் முகவுரையில் நன்குவிளக்கியுள்ளார்கள்; நூலிற்காணப் பெறும் இலக்கண விசேடங்களும் மேற்கோள் இடங்களும் நன்றாகக் காட்டியுள்ளார்கள்; இவர்களது முகவுரையும் உதயணன் வரலாறும் இன்றேல், பெருங்கதை படிப்பாரற்று எம்போல்வார் நினைவில் பெயரும் இராதென்பது முற்றிலும் உண்மை.

பெருங்கதையினை முற்றும் வாசிப்போர் அதனை மிகச் சிறந்த பேரிலக்கியமாகவே கருதுவர் என்னுந் துணிபுடையேன். பழைய உரையாசிரியரும் நூலாசிரியரும் அதனைப் பாராட்டியிருத்தலே அதன் உயர்வுக்குச் சான்றாகும். அத்தகைய சிறந்த இலக்கிய அமுதைத் தமிழர் நகருமாறு தம்பேருழைப்பின் பயனாய் அளித்துள்ள பதிப்பாசிரியரவர்களை என்போல்வார் பாராட்டுவது வியப்பன்றே? ஐயரவர்கள் பெருங்கதையின் முகவுரை 13-ஆம் பக்கத்தில், 'இவற்றால், மயிலைநாதர் முதலியோர்களுடைய காலங்களிற் சிதைவில்லாமல் இந்நூல் முழுவதும் இருந்து வந்ததென்றே தெரியவருகின்றது. இப்படியே இன்னும் இதன் பகுதிகள் பழைய உரைகளில் வந்திருத்தல் கூடும்; அவற்றைக் காணும் பொழுது இந்நூலும், இதைப் படிக்கும் பொழுது அவைகளும் சில சமயங்களில் ஞாபகத்திற்கு வருவதில்லை; என் செய்ய!' என்று எழுதியிருத்தலை நோக்க, நினைக்க, என் போன்ற தமிழ் மாணவர் உள்ளம் அவர்களது உண்மை யுரையால் எத்துணைப்பெரு மகிழ்ச்சி எய்துகின்றதென்பதை யான் உரையாற் கூறுதற்கில்லை. இங்ஙனம் கூறலன்றே ஓர் உண்மைப் பதிப்பாசிரியரது பேரிலக்கணமாகும்!

மேலும், ஐயரவர்கள் அம்முகவுரையிலே 22-ஆம் பக்கத்தில், 'குறிப்புரை யென்று ஏதோ ஒன்றை எழுதலானேன். சிலப்பதிகார வுரையில்,

எழுத்தின் திறனறிந்தோ இன்சொற் பொருளின்
அழுத்தந் தனிலொன் றறிந்தோ—முழுத்தும்
பழுதற்ற முத்தமிழின் பாடற் குரையின்
றெழுதத் துணிவதே யான்

என்று நிரம்பிய கல்விமானும் முத்தமிழ்ச் சிங்கமுமாகிய அடியார்க்கு நல்லாரே எழுது வாரையின் ஒன்றுக்கும் பற்றுத யான் யாது கூற வல்லேன்?' என்று கூறியுள்ளதை எண்ணி எண்ணி,

"பெருக்கத்து வேண்டும் பணிதல்; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு"

என்ற குறளடி நினைவுக்கு வருகின்றது. பதிப்பாசிரியரவர்களின் அடக்கத்தையும் எளிமையையும் உண்மைத்தமிழர் எழுமையும் மறவார் என்பது திண்ணம்.

ஏட்டுப்பிரதிகளை உதவியவர்கள் முதல் தம்முடனிருந்து உதவி செய்த உத்தமர் ஈறாக யாவர் பெயர்களையும் ஐயரவர்கள் சிறிதும் மறவாமல் நன்றி கூறியிருத்தல் அவர்களது பரந்த மனப்பான்மையை நன்கு விளக்குகின்றது.

எல்லா நூல்களையும் மிக விரிவான முறையில் ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ள ஐயரவர்கள் பதிற்றுப்பத்தினை அங்ஙனம் ஆராயாமல் விட்டதற்குக் காரணம் எனக்குத் தோன்றவில்லை. நான் அதைப்பற்றி ஒரு முறை அவர்களைக்கேட்டேன். அதற்கு அவர்கள், "யான் அநாவசியமாகக் குறிப்புரை முதலியவற்றை வரைந்து புத்தகத்தைப் பெருக்குவதாகச் சில அன்பர் குறை கூறினர்; அதனால் இதனை, வாளாவிட்டேன்" என்று மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்தார்கள். தமிழ் மாணவ உலகில் இருதாளினையும் உறுதியாக ஊன்றிக் கொண்டுள்ள எனக்கு அச்செய்தி பெருவருத்தத்தை விளைத்தது. பேரிலக்கியங்களை ஆராய்ந்து அவற்றுள் எளிதில் உணரக் கூடா வகையில் ஆழ்ந்து கிடக்கும் பல அரிய பெரிய விஷயங்களைத் தெளிவாக எடுத்துக்கூறுதலும், கடின வார்த்தைகட்குத் தெளிவான பொருள் கூறுதலும், நூலினைப் பெருக்குவன வாகுமா? ஐயரவர்கள் பதிப்பித்துள்ள நூல்களில் எந்தத் தனிப்பட்ட காகிதத்தையேனும் 'இது பயனற்றது' எனக் கூறற்கியலுமா? யானறிந்தவரை வேறெவரும் இங்ஙனம் கூறக் கேட்டிலேன். ஒருவர் முயன்று நூல் வெளிப்படுத்தியபின் குறை

கூற அன்பர் பலர் சேர்கின்றனர்; அவர்தம் பெருமுயற்சியையும் பேரூக்கத்தையும் பாராட்டற்குச் சிலர்தாம் முன்வருகின்றனர். இது தமிழ் நாட்டாரிடம் உள்ள பெருங் குறையென்றே கூறுதல்வேண்டும். இங்ஙனம் குறை கூறியவர் ஒருபுறமிருக்க, பதிற்றுப் பத்தின் உண்மைப் பொலிவினை என்போல் வார் உணர வழியின்றித் துன்புற வேண்டுவ தாயிருக்கிறது. இத்தகைய குறைபாடுகள் இனியேனும் தமிழரிடம் தலைகாட்டாதிருத் தல் சிறப்புடையது.

ஐயரவர்கள் பதிப்பித்துள்ள புறநானூறு ஒன்றே அவர்களுடைய உத்தம இலக்கணங் களை வெளிப்படுத்துவதற்குப் போதுமான தாகும். ஒவ்வொரு செய்யுளாகப் படித்து விஷயங்களை அறியவேண்டு மென்னுந் துன்ப மின்றி, அவர்கள் தந்துள்ள 'பாடினோர் வர லாறு', 'பாடப்பட்டோர் வரலாறு' இவற்றி லிருந்தே புறநானூற்றின் பெருமையை உள்ள வாறு உணரலாம். அவர்கள் பதிப்பித்துள்ள துல்களின் முகவுரைகளைப் படித்தே (மூலத் தைப் படிக்காமல்) ஒருவர் பெரும்பண்டித ராக மாறலாம் என்பது முக்காலும் உண்மை யெனக் கூறலாம் அன்றே?

தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கட்கும் ஐய ரவர்கள் ஆற்றியுள்ள தொண்டுகட்குத் தமிழ ராய நாம் யாது கைம்மாறுகச் செய்யப் போகின்றேம்? அவர்களது உருவச்சிலை யொன்றைச் சென்னைச் சர்வகலாசாலை மண்டபத்தில் நாட்டுதல் வேண்டும் என்பதே தமிழறிஞர் பெருவிருப்பமாகும். ஐயரவர்கள் வாழ்க! தமிழ்மொழி சிறக்க!!

—கலைமகள்-14-3-35.

ஐயரவர்கள் பாடஞ்சொல்லும் முறை

வித்துவான், சு. கோதண்டராமையர்

[இந்தக் கட்டுரை எழுதிய ஸ்ரீமான் வித்துவான் சு. கோதண்டராமையரவர்கள் ஸ்ரீ ஐயரவர் களிடம் முறையாகத் தமிழ்நூல்களைப் பாடங்கேட்டவர். பதினைந்து வருஷங்களாக அவர்களுடன் இருந்து பழகும் பேறுடையவர். இங்கே உள்ள கட்டுரையில் அவர் ஸ்ரீ ஐயரவர்களுடைய போதகா சிரியத் திறமையைத் தாம் அறிந்து அதுபவித்தவாறு எழுதியிருக்கின்றனர் —ப - ர்.]

தமிழ் நாட்டில் வரன்முறையாகத் தமிழை அறிந்தும் பிறர்க்குப் பாடஞ் சொல்லியும் வரும் முறை சில வருஷங்களுக்கு முன்வரை யில் சிறப்பாக இருந்தது; இப்பொழுது வரவர அருகிக்கொண்டே வருகிறது.

பாடஞ் சொல்லுவதனாலே தான் ஒரு மொழியிலுள்ள பயிற்சி நாட்டில் மிகுமென் பது ஐயரவர்கள் கொண்ட நோக்கங்களுள் தலைமையானது. இது, தம் ஆசிரியராகிய ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடங் கேட்ட காலத்தில் அவர்கள்பால் தோன்றி மேன்மேலும் வளர்ந்துவருகின்றது. எண்பது ஆண்டு நிறைந்து விளங்கும் இந்த முதிய பருவத்திலும் அவர்கள் தம்முடைய வீட்டில் சிலமாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லி வரு கிறார்கள்.

ஐயரவர்கள் இளமைதொடங்கியே பாடஞ் சொல்வதில் ஈடுபாடுடையவர்கள். ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் காலத்திற் குப்பின் திருவாவடுதுறை மடத்திலும், பிறகு கும்பகோணம் சென்னை ஆகிய இடங்களி லுள்ள அரசாங்கக்கல்லூரிகளிலும், சிதம்பரம் மீனாட்சி தமிழ்க் கல்லூரியிலும் பலவகை யான மாணாக்கர்களுக்குப் பாடஞ் சொல்லி யிருக்கிறார்கள்.

பாடஞ் சொல்லுவோர்க்குரிய எல்லா இலக்கணங்களும் ஒருங்கே வாய்ந்தவர்கள் ஐயரவர்கள். பல நூலறிவும் நல்லாசிரியர் பழக்கமும் இயல்பாக அவர்களிடம் அமைந் துள்ள ஹாஸ்யச் சுவையும் அவர்களைச் சிறந்த போதகாசிரியராக்கியிருக்கின்றன. பாடஞ் சொல்லுவதில் அவர்களுக்கே ஒரு தனிச் சுவை யுண்டு.

பாடங் கேட்கும் மாணவரது தகுதியை அறிந்து பாடஞ் சொல்வது அவர்கள் வழக் கம். கம்பராமாயணத்தைப் பாடஞ் சொல்லு கிறார்களென்று வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் பாடஞ் சொல்லும் முறை கேட்போ ருக்கு ஏற்ப வேறுபடும். சில நூல்களைமட்டும் வாசித்துள்ள ஒருமாணவனுக்கு அதைப்

பாடஞ் சொன்னல் அவனுடைய உள்ளம் வேறொன்றிற் செல்லாதவாறு பிணித்துவிடுவார்கள். பலநூல்கள் கற்றறிந்த வித்துவான் ஒருவருக்கு அதையே சொன்னல் அவர்கள் ஆங்காங்கே புலப்படுத்திச் செல்லும் அரிய விஷயங்களில் அவ் வித்துவான் ஈடுபட்டு, "முன்பு இங்ஙனம் கேட்டிலோமே!" என்று வியப்பார். ஒரே பாட்டை ஒருமணி நேரம் பாடஞ்சொல்லும் முறையும் அவர்களுக்குத் தெரியும்; அவ்வொருமணி நேரத்திலேயே நூறு பாடல்களைப் பாடஞ் சொல்லும் ஆற்றலும் உண்டு. கேட்பவருக்கு இன்ன இடத்தில் இன்னவகைச் சந்தேகம் உண்டாகும் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனை விளக்கும்போது அவர்கள் பிறர்மனத்திலுள்ளதை அறியும் தன்மையாளரென்று நாம் வியப்போம். எத்தனைவகையான மாணாக்கர்கள் உண்டோ அத்தனை வகையினருடைய தராதரத்தையும் நன்கு அறிந்தவர்களாதலாலும் வாழ்நாள் முழுதும் தமிழ்நூலறிவைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு ஒவ்வொரு படியாகத் தாண்டியே உச்சநிலையில் நிற்பவர்களாதலாலும் இத்தன்மையுடையராஞர்கள்.

பொதுவாகத் தமிழ் மாணாக்கர்களுக்கு இலக்கணமென்றால் வேப்பங்காயாக இருக்கும் என்பது யாவரும் அறிந்ததே. சில பண்டிதர்கள் இலக்கணத்தை இலக்கணமாகவே போதிப்பதால் அவர்களுடைய உழைப்பு வீணாகிறது. நம் ஐயரவர்களோ இலக்கணத்தைப் பாடஞ் சொல்லுகையில் அவர்கள் ஏதோ கதை சொல்வதுபோலவே இருக்கும். இலக்கணங்களின் நுட்பங்களைக் கூறுவதும் அவற்றை இலக்கியத்தில் அமைத்துக் கூறுவதும் கேட்பவர்களுடைய அறிவுக்கு விரிவை உண்டுபண்ணும். இலக்கணங்களை முறைப்படுத்தி அவர்கள் பாடஞ் சொல்லுகையில் மாணாக்கர் நெஞ்சிற் பசுமரத்தாணிபோற் பதியும். பாடஞ்சொல்லும்போது இடையிடையே நகைச்சுவைக்குரிய செய்திகள் விரவி வரும். அந்த 'ஊறுகாய்களால்' மாணாக்கர்கள் பொழுது போவதுகூடத் தெரியாமல் மனம் ஒன்றுபட்டு நிற்பார்கள். 'ஊறுகாய்கள்' என்பது ஐயரவர்கள் அடிக்கடி குறிப்பிடும் தொடர்.

ஒருநூல் கேட்கும்போது அதன் சம்பந்தமான பலநூற் செய்திகளை மாணாக்கன் அறிந்துகொள்வான். அவ்வளவும் வகைப்படுத்தி அமைத்த செய்திகளாகவே இருக்கும். 'இந்தக் கருத்தை இங்ஙனம் வேறுபடுத்தி இன்னார் அமைத்திருக்கின்றார்', 'இந்த விஷயம் இவருடைய புது அமைப்பு', 'இச் சொல் இந்த விதம் மாறி வந்திருக்கிறது' என்று அவர்கள் சொல்லிவரும்பொழுது மாணாக்கனுக்கு ஒரு நூலை ஆராயும் முறை புலனாகும்.

ஆங்கிலக் கல்லூரிகளில் ஐயரவர்கள் ஆசிரியராக இருந்து தமிழைக் கற்பிக்கும் காலத்தில் ஸம்ஸ்கிருதம் முதலிய வேறு பாஷைகளைக் கற்கும் மாணாக்கர்களும் அவர்களிடம் பாடங் கேட்டிருப்பார்களாம். அவர்களுடைய இனிய சாரீரமும் பாடஞ்சொல்லும் தோரணையும் அகஸ்மாத்தாகக் கேட்பவர்களையும் காந்தத்தைப்போல இழுக்கும். துஷ்டக்குழந்தைகளைப் பாட்டுச் சொல்லித் தாலாட்டித் தூங்க வைப்பதை எண்ணிப் பாருங்கள். அந்த மெல்லென்ற அசைவிலும் ஜில்லென்ற பாட்டிலும் குழந்தை துஷ்டத்தனம் அடங்கித் தூங்குகின்றதல்லவா? அதேமாதிரி ஐயரவர்கள் மாணாக்கர்களைப் பாடஞ் சொல்லியே அடக்கிவிடுவார்கள். இங்ஙனம் அவர்களிடத்தில் இயல்பாகவே ஈடுபட்டமையால்தான் அவர்கள்பால் எப்பொழுதேனும் பாடங் கேட்டவர்கள் இக்காலத்தும் அவர்களைக் கண்டால் தெய்வம்போலவே மதித்து உபசரிக்கிறார்கள்.

சிதம்பரம் ஸ்ரீ மீனாட்சி தமிழ்க்காலேஜில் அவர்கள்பாற் பாடங் கேட்ட பேறுடையவர்கள் அந்தக்காலத்தைத் தங்கள் வாழ்வில் என்றும் மறத்தற்கரியதென எண்ணி உருகுகின்றார்கள். அங்கே ஐயரவர்கள் சங்கநூல்களையும் பிறநூல்களையும் பாடஞ் சொல்லி வந்தார்கள். அவற்றைப் பாடஞ் சொல்லுகையில் 'நம் வாழ்வு முழுவதும் நாம் மாணவராகவும் இவர்கள் ஆசிரியராகவும் இருந்து நாடோறும் பாடம் நடைபெற்றால் அதனினும் வேறு இன்பம் உண்டோ?' என்று தோற்றும். 'தமிழ்ச்சுவை, தமிழ்ச் சுவை' என்று வாயினுற் சொல்லிக் காதாற் கேட்டதை அப்போது நான் அநுபவத்தில் அறிந்திருக்கிறேன்.

ஒருநூலில் உள்ள விஷயத்தைப் பகுத்து முதலில் உணர்த்துதல் அவர்கள் வழக்கம். பிறகு தனித்தனியே எடுத்து விரிவாகச் சொல்லிவருவார்கள். அப்பொழுது இடையிடையே அந்த நூலைத் தாம் படித்தகாலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைச் சொல்வார்கள்.

சில கருத்துக்களைக் கண்டுபிடித்தற்குப் பட்ட கஷ்டங்களைக் கதைகதையாகச்சொல்வார்கள். ஒரு பாடபேதத்துக்கு ஒரு வரலாறு! ஓர் எழுத்துக்கு ஒருசரித்திரம்!

பாடஞ் சொல்லும்பொழுது அச்சுப் புத்தகங்களிலுள்ள பிழைகளைக் குறிப்பாகத் தெரிவிப்பார்கள். 'இது பிழை' என்று கூறிப் பதிப்பித்தோர்மேற் குறைகூறுதற்குத்துணிய மாட்டார்கள்; 'இந்த இடம் ஏட்டிற் சுவடியில் வேறுக இருக்கவேண்டுமென்று தோற்றுகிறது' என்று சொல்லுவார்கள்; ஏட்டுச் சுவடியில் அந்த இடத்தை எடுத்துப் பார்த்தால் அப்படியே வேறுக இருக்கும். தமிழ் நூல்களின் போக்கை அத்தனை நுணுகி ஆராய்ந்து அளவிட்டு வைத்திருக்கிறார்கள். கற்பிக்கும்போது மாணாக்கர்களை வினவி விடைகூறச் செய்து அவர்கள் அறிவை உறுதிப்படுத்துவார்கள். அவர்கள் வினவும் வினாக்களை விடைகளையும் ஆராய்ச்சிமுறையையும் மாணாக்கர்களுக்குத் தோற்றச் செய்யும். ஒரேநூலைப் பலமுறை பாடங் கேட்டால் ஒரு தடவைக்கு மற்றொரு தடவை புதுப்புது விஷயங்களை அறிந்துகொள்வோம். தமிழ்ப் பெருங்கடலாகிய அவர்களிடத்தில் தமிழறிவுப்பஞ்சமேது?

அவர்களுடைய மாணாக்கர்களுக்குத் தமிழ்ப்பசி அதிகம் இருக்கும்; எந்தக்காலத்தும் அவர்களை மறவாத நிலையுண்டாகும்; ஆராய்ச்சி செய்யும் முறைகள் புலப்படும்; உண்மையான அறிவு எங்கே உண்டென்பதைத் தேர்ந்து கொள்ளும் திறன்அமையும்.

இப்பொழுதும் அவர்களுடைய மனம் பாடஞ் சொல்வதையே நாடிக்கொண்டிருக்கின்றதென்பதை அவர்களோடு பழகியவர்கள் அறிவார்கள். படிக்கவேண்டுமென்று விரும்புபவர்களைக் கண்டால் அவர்களுக்கு உண்டாகும் இன்பத்துக்கு அளவில்லை. "எவ்வளவோ பேர்கள் என்னைவந்து பார்க்கிறார்கள்; பேசுகிறார்கள்; இன்னது படித்தேன்; அதில் இன்னது சந்தேகம்; விளக்க வேண்டுமென்று கேட்பவர்களை அரியராயிருக்கிறார்கள்" என்று அவர்கள் அடிக்கடிகூறுவதுண்டு. "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற திருமூலர் வாக்கில் அவர்களுடைய வாழ்வின் இலட்சியம் அமைந்திருக்கின்றது. தாம் பெற்றுள்ள அறிவைப் பரப்புவதில் அவர்களுக்குள்ள ஆசை திருமூலருடைய ஆசைக்குச் சிறிதேனும் குறைந்ததன்று என்பதில் ஐயமே இல்லை.

—கலைமகள்—14-3-35.

தமிழ்ப்பருதியின் கதிர்

டாக்டர் வி. வி. ரமண சாஸ்திரிகள், எம். ஏ.

தென்மொழிக்கோமான் ஸ்ரீ வே. சுவாமி நாதஐயரவர்களது 80-ஆம்ஆண்டு, 6-3-1935-இல் நிறைவுறுமென்று 'கலைமகள்' பத்திரிகாசிரியர் எனக்குத் தெரிவித்துள்ளார். இவ்வொப்பிலாக் கல்விமணியை நான் 1887-ஆம் வருடம் முதல் அறிவேன். இவரிடத்து நிகழும் தமிழ்ப் பயிற்சியின் ஆழத்தையும் பரப்பையும் மாண்பையும் வகுத்துரைக்க எனக்கு ஆற்றல் சற்றேனும் இல்லை. கோகழியில் விளங்கிய வித்துவப் பெருந்தகையாகும் தமிழ்க்கவிகேசரி ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையவர்களது சீடர், நமது ஐயரவர்களென்பது எல்லோருக்கும் வெளிப்படை. நான் கண்டறிந்த மட்டில், ஐயரவர்களது நூலாராய்ச்சித் தொண்டு, தொன்மைத் தமிழ் விளக்கு என அழைக்கத்தகும் நச்சினார்க்கினியரதைப் பின்பற்றுவதாகும். ஆனல், வீடெய்தும் மெய்யறிவை வளர்க்கும் நூல்கள் மட்டும் மாசற்ற பசுந்தமிழ் விளக்கும் நமது கல்விப் பெருங்கடலது ஆராய்விற்கு இலக்காகாது ஒழிந்தது நந்தமிழ் நாட்டின் தவக்குறையேயன்றி வேறில்லை. ஈசன் இன்னருளால் ஐயரவர்கள் நீண்டகாலம் நோவின்றி இன்னும் இம்மேதினியில் வதிந்து நின்று, தமிழ் மொழியை வளர்த்துவருவார் என்பது என் மெய்த் துணிபு.

ஐந்திலக்கணத் தொன்னூல் விளக்கத்தையும் தேம்பாவணியையும் ஆக்கிய வீரமாமுனிவரின் பிறப்புநாடாகிய இத்தாலியிலும், செந்தமிழ் எழுதும் ஆற்றலுள்ள நாநாபாஷைக்களஞ்சியமாகும் ஷூலியாங்வாங்ஸாங் பிறப்புநாடாகிய பிரான்ஸிலும், அரியஞானத் திரட்டாகும் திருவாசகத்தைக் கூசாது ஆங்கிலத்தில் திருப்பிய போப்பின் பிறப்புநாடா

கிய இங்கிலாந்திலும், கைவல்ய நவநீதம் என்னும் பெயர்தாங்கும் தமிழ் அறிவுநூலை ஆங்கிலத்தில் வன்மையுடன் மொழிபெயர்த்து விடுத்த கிரௌல் என்பவர் பிறந்த நாடாகிய ஜர்மனியிலும், மெய்கண்ட சாத்திரத்தில் சில பகுதிகளை ஆங்கிலத்தில் முயற்சியுடன் திருப்பிய ஹாய்வலிங்க்டன் பிறப்பு நாடாகிய அமெரிக்காவிலும், மற்றுமுள்ள மேற்றிசை நாடுகளிலும், நந் தமிழ்ப்பருதியின் கதிர் வீசுகின்றது. இத்தகைய புகழுடன் இலங்கும் செந்தமிழ்ப் பிழம்பாகும் நம் ஐயரவர்களைக் காக்கும்வண்ணம் எம் அண்ணலைப் போற்றுவதுடன், அவ்வண்ணலையே மீண்டும் இறைஞ்சி, ஐயரவர்களுக்கு எதிர்காலத்தில், நிகழுலகத்தும் எதிருலகத்தும் குறையில் வளப்பத்தை அருளும்படி அனைவரும் வேண்டற்பாலர்.

—கலைமகள்-14-3-35.

என் நண்பர்

ஜே. எம். ஹென்ஸ்மன்

[ஸ்ரீமான் ஜே. எம். ஹென்ஸ்மன் அவர்கள் கும்பகோணம் தாரைத்தனக்கல்லூரியில் புரொபஸராகவும் பிரின்ஸிபாலாகவும் இருந்தவர்கள். அவர்கள் பிரின்ஸிபாலாக இருந்த காலத்திலும் ஸ்ரீ ஐயரவர்கள் தமிழாசிரியராக அங்கே இருந்தார்கள். அவர்களுடைய ஸௌலப்ய குணத்தையும் ஒழுங்கையும் பற்றி அடிக்கடி ஐயரவர்கள் சொல்வதுண்டு.

ஸ்ரீமான் ஹென்ஸ்மன் அவர்களை இம் மலருக்கு ஒரு கட்டுரை எழுதும்படி வேண்டியிருந்தோம். அதற்கு விடையாக அவர் ஒரு கடிதம் ஆங்கிலத்தில் எழுதி விடுத்தார்கள். அதன் மொழிபெயர்ப்பு, கீழே வெளியிடப்படுகிறது.—ப - ர்.]

சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்,
15-2-1935.

அன்பார்ந்த ஐயா,

என்னுடைய நண்பராகிய டாக்டர் சாமிநாத ஐயரவர்களுடைய எண்பதாம் ஆண்டு நிறைவுக்கொண்டாட்டம் அவர்களுடைய நண்பர்களாலும் அபிமானிகளாலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுமென்று அறிந்து மிக மகிழ்கிறேன். தமிழில் நான் ஒரு கட்டுரை எழுதமுடியுமென்று எண்ணவில்லை. மேலும், அவர்களைப்பற்றிய நிகழ்ச்சிகள் எவையேனும் இருப்பினும், இப்பொழுது முப்பதுவருஷங்களுக்குமேல் ஆனமையால் என் ஞாபகத்தில், தெளிவில்லாத விஷயங்களையன்றி வேறொன்றுமில்லை எனினும், ஆச்சரியப்படத்தக்க அவருடைய ஆராய்ச்சியையும் பழந் தமிழிலக்கிய சம்பந்தமான விஷயங்களைத் தீர்மானிப்பதில் அவருக்குள்ள இணையற்ற ஆற்றலையும் பற்றிய ஞாபகம் மட்டும் எப்பொழுதும் திடமாக இருக்கிறது. கதைகளை நுனித்து ஆராயாமல் அவர் எப்பொழுதும் ஒப்பியதில்லை. தமிழ் இலக்கியங்களில்வரும் பெயர்களைப்பற்றிய அக்கதைகள் இன்ன வென்பது இப்பொழுது என் ஞாபகத்திலிருந்து மறைந்தன. அவர் அக்கதைகளை ஆராய்ந்து செப்பஞ் செய்தார். அவற்றிற் சில கதைகளேனும்—ஒன்றேனும்—எனக்கு நினைவுக்கு வந்திருக்கக்கூடாதா!

ஒன்றைமட்டும் நீங்கள் உறுதியாக நம்பலாம்: தமிழ் இலக்கிய ஆராய்ச்சியை மேலும் செய்துகொண்டு உடல் நலமும் இன்பமும் பொருந்தி அவர்கள் பல ஆண்டுகள் வாழவேண்டுமென்று வாழ்த்துவதில் அவர்கள் நண்பர்களும் அபிமானிகளுமாகியவர்கள் 'யாருக்கும் பின்னுகேன்'. அவருடைய இளம் பருவத்திலிருந்தது போலவே இப்பொழுதும் அவருடைய ஞாபக சக்தியும் திட்பமும் தூய்மையாக இருக்கின்றன; இனியும் அப்படியே இருக்குமாக!

—கலைமகள்-14-3-35.

'கால்மணி நேரம் தமிழுக்கு'

டி. கே. சிதம்பரநாத முதலியார், பி. ஏ., பி. எல்.

மூன்று மாசத்துக்குமுன்புதான் ரவீந்திரநாத டாகூர் நம்முடைய சென்னைக்கு வந்து சில உண்மைகளை நமக்குத் தெரிவித்தார். அவைகளில் ஒன்று: "கவியை அநுபவித்து விடுவதற்காக எத்தனையோ பாஷைகளைக் கற்றேன். இங்கிலீஷ் மாத்திரமல்ல; பிரஞ்சு

பாஷை, ஜெர்மன் பாஷை, லத்தீன், கிரீக்கு ஆகிய புராதன பாஷைகளை எல்லாம் கஷ்டப் பட்டுக் கற்றேன். என்ன பலன்? கவியின் இதயம் தெரிந்ததா? இல்லவே இல்லை. என் தாய்மொழி ஒன்றன் மூலமாகத்தான் எனக்கு அது தெரியவந்தது.'' இது நமக்கு ஸ்ருதியில் விளங்கிவிடாது என்று எண்ணி, தாம் சொன்ன வார்த்தைக்கு ஒரு தீர்மானமும் கொடுத்தார். அதாவது: ''பிற பாஷைகளின் மூலமாகக் கவியின் உயிர் நிலையை அறியப்புகுவது காதலியின் அருள்முறுவலைப் பெறுவதற்காக வக்கீலுக்கு வக்காலத்துக் கொடுக்கிற அழகுதான்.''

இதெல்லாம் வங்காளிகளைப் பார்த்துச் சொன்னதாகத்தான் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழரைப்பற்றிய உண்மை—அதாவது தமிழைப் புறக்கணிப்பதையும், தமிழ்ப்பாட்டில் ஒன்றும் இல்லை, தமிழுக்கென்று தனிநயம் (தமிழ் ஜீனியஸ்) கிடையாது என்றெல்லாம் சாதாரணமாகச் சொல்லிக்கொண்டும் அதைவிட நம்பிக்கொண்டும் இருக்கிறதையும் டாகூர் தெரிந்திருந்தால் எப்பேர்ப்பட்ட ஆவேசமும் ஆங்காரமும் வந்திருக்குமோ சொல்லமுடியாது.

ஒரு தேசத்தாருடைய நாகரிகத்துக்கும் பாஷைக்கும் விரோதிகளாய் இருப்பவர் பொதுவாக அந்தத் தேசத்தை அடியோடு அழிக்கப் பார்க்கும் அக்கம் பக்கத்திலுள்ள தேசத்தார்தான். கொரியா தேசத்தாருக்குச் சொந்தமான நாகரிகமும் அதற்கேற்ற பாஷையும் உயர்ந்த நிலையிலேயே இருந்தன. ஜப்பான் கொரியாவைக் கைப்பற்றின உடன் கொரியர்கள் தங்களுக்கு உரிய நடை உடை பாவனைகளை விட்டுவிட வேண்டும், கொரிய பாஷையை ஒழித்துவிடவேண்டும், ஜப்பானியர்களைப்போலவே எல்லா விதத்திலும் இருக்கவேண்டும், முக்கியமாக ஜப்பான் பாஷையைத்தான் கற்கவேண்டும், என்றெல்லாம் கொடுங்கோன்மை நடத்தினார்களாம். இது போலவே ஐரோப்பாக் கண்டத்திலும் ஒரு தேசத்தார் தங்களுக்கு உட்பட்ட பிற தேசத்தாருடைய நாகரிகத்தையும் பாஷையையும் வேரோடு களைந்தெறியப் பார்த்தார்கள், இன்றைக்குமே பார்க்கிறார்கள் என்பது தெரியவருகிறது.

ஆனால் தமிழ்ப்பாஷைக்கும் தமிழ் நாகரிகத்துக்கும் உலைவைக்க அயல் தேசத்தார் படை எடுத்து வரவேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. தமிழ்மக்களே அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள் என்றால் பொருந்தும். ஜப்பான் மாதிரி சட்டதிட்டங்கள் ஏற்படுத்தவில்லைதான். அந்தச் சட்ட திட்டங்கள் கொரியர்களுக்குத் தங்கள் பாஷையில் முன்னிருந்ததைவிட அதிகமாக ஆர்வங்கொள்ளக் காரணமாக இருந்தன; பாஷைமேல் ஏதோ மிதந்தாற் போலிருந்த ஆசையை இதயத்துக்குள் செலுத்தி ஒரே படியாய்ப் பதிந்துநிற்கும்படி செய்துவிட்டன. நம்மவர்கள் செய்கையோ கொடுமையிலும் கொடுமை. 'ஆபத்தில் இருக்கிறோம்' என்ற உணர்ச்சியே இல்லை. 'தமிழ் எதற்கு? தமிழில் என்ன இருக்கிறது? தமிழைப்பற்றிப் புகழ்ந்து பேசுவதும் பாராட்டிப் பேசுவதும் வெறும் படாடோபம்; தேசபக்தி என்று சொல்லுவதில் உளுத்துப்போன பொக்கான பாகம் அது; அக்கம்பக்கத்தில் உள்ளவர்களையும் அவர்கள் பாஷைகளையும் குறித்து வந்த விரோதம்.' இப்படியெல்லாம் சொல்லுபவர்கள் யார்? அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் அல்ல; தமிழ் நாட்டிலேயே இருந்துகொண்டு, வீட்டில் பெண்டு பிள்ளைகளோடு தமிழிலேயே பேசிக்கொண்டிருக்கும் தமிழ் மக்களே. இவ்வளவுக்கும் காரணம் ஏதோ உலகத்தில் இல்லாத, தமிழ் மக்களிடத்தில்மாத்திரம் அமைந்துள்ள சீர்கேடல்ல. நம்மவரும் மற்ற உலகத்தாரைப் போல ஒரேவிதமான சீலம் படைத்தவர்கள் தான். வங்காளிகளைமட்டும், இல்லாத ஒரு பக்குவத்தில் படைத்து விட்டானு பிரமன்? இல்லை. என்றாலும், வங்காளிகள் ஒவ்வொருவரும், ரவீந்திரநாத டாகூரிலிருந்து ரயில்வே போர்ட்டர் வரையும் ஏகோபித்து, தங்கள் தாய்ப்பாஷையினிடத்தில் அபார ஆர்வமும் அக்கரையும் கொண்டிருக்கிறார்கள். இதற்காக மேல் நாட்டார்கள் அவர்களை மதிக்கிறார்கள்.

தமிழர்களைப்பற்றி இப்படிச் சொல்ல முடியுமா? யூனிவெர்ஸிடி பட்டம் ஒன்று இரண்டு கிடைக்கவேண்டியது; பதவியும் ஏதாவது கிடைத்து விடவேண்டியது; உடனே, 'தமிழ்படிக்கிறவன், தமிழ்தெரிந்தவன்' என்று தம்மை எண்ணி விடுவார்களோ என்ற பயம் ஏற்பட்டு விடுகிறது. இதற்கெல்லாம் பள்ளிக்கூடங்களும் கற்பிக்கும்

முறையுந்தான் காரணம்; ஆனாலும், முக்கிய காரணம், நம்முடைய மூதாதைகளின் பூர்வ வினையே.

அவர்கள் எவ்வளவோ அரிய நூல்களை எழுதி வைத்துவிட்டுத்தான் போனார்கள். திருக்குறள் என்ன, கம்பராமாயணம் என்ன, கலிங்கத்துப் பரணி என்ன, சிலப்பதிகாரத்தில் பதித்து வைத்திருக்கிற வைரமணிகள் போன்ற வரிப்பாடல் என்ன: இவைகளின் வாடாத பெருமையையும் அழகையும் நம்மவர் அநுபவிக்கிறார்களா? ஒப்புக்கொள்வதுதான் உண்டா? தமிழர் இவைகளை அநுபவியாமல் வேறு யார் அநுபவிக்க? செவ்வாய் கிரகத்தில் யாரோ மக்கள் இருக்கிறார்களாம்; அவர்களா வரப்போகிறார்கள் அநுபவிக்க? தமிழுக்குத் தமிழர்தான் கதி; தமிழர்க்கும் தமிழே கதி.

இந்த உண்மை மகாமகோபாத்யாய சாமிநாத ஐயர் அவர்களுடைய மனசில் ஐம்பது வருஷத்துக்கு முன்னமே பதிந்து விட்டது. அன்று முதல் இன்றுவரையும் அவர்கள் தமிழ் மக்களைத் தமிழ்படிக்கும்படி சதா தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். படிப்பவர்களைக் கண்டுவிட்டால் கூத்தாடுவார்கள்.

சுமார் நாற்பது வருஷங்களுக்கு முன், திருச்சிராப்பள்ளிக்கு வந்து, எஸ். பி. ஜி. காலேஜில் தமிழின் அருமையைப்பற்றியும், வளத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்தார்கள். நானும் பிரசங்கத்தைக் கேட்கப் போயிருந்தேன். அப்போது நாலாவது பாரத்தில் வாசித்துக் கொண்டிருந்த சிறு பையனாக இருந்ததால், "கும்பகோணம் சாமிநாத ஐயரைப் பார்க்கப் போயிருந்தேன்" என்று சொல்லுவதுதான் பொருந்தும். இருந்தாலும் ஐயரவர்கள், தமிழ் மகளின் நகை ஜாபிதாவை எடுத்துக் காட்டியபோது, அதாவது தலைக்குச் சூளாமணி, மார்புக்குச் சிந்தாமணி, காதுக்குக் குண்டலகேசி, கைக்கு வளையாபதி, இடைக்கு மணிமேகலை, கடைசியாகக் காலுக்குச் சிலப்பதிகாரம் என்று முடித்தார்களோ இல்லையோ, அப்படியே மயங்கிப் போய்விட்டேன். அன்று இரவெல்லாம் ஒரே சொப்பனம்—தமிழ் அணங்கு வருகிறதும், தன் அபூர்வ அணிகலங்களை இப்படியும் அப்படியுமாகத் திருப்பித் திருப்பிக் காட்டுவதுமாய் இருந்தது. பிரசங்கத்தின் இறுதியில் ரொம்ப ஆற்றுமையோடு ஒரு விஷயத்தை வலியுறுத்தினார்கள். "மாணவர்களுக்கும் கனவான்களுக்கும் ஒரு வார்த்தை: இங்கிலீஷைப் படிக்க வேண்டாமென்று நான் சொல்லவில்லை. எவ்வளவு வேண்டுமானாலும் படியுங்கள். ஆனால், தமிழுக்குத் தினம் அரைமணி நேரம் ஒதுக்கிவையுங்கள்; கால்மணி நேரம் படித்தாலும் போதும்; பெரிய காரியம்" என்று தம் ஆர்வத்தை எல்லாம் சேர்த்து ஒருமுனைப்படுத்திச் சொன்னார்கள். இன்றைக்கும் என்னால் அந்த ஆர்வத்தை மறக்க முடியவில்லை. இந்த ஆற்றுமை நாற்பதுவருஷங்களுக்குமுன். இடையில் தமிழ்ப்பயிற்சி சிறிது விருத்தியடைந்திருக்கிறது என்றாலும், மூன்று கோடிஜனங்கள் தமிழர் என்று எண்ணும்போதும், வங்காளிகளுக்குத் தாய்மொழியிலுள்ள உணர்ச்சியும் உறுதியும் நம்மவருக்குத் தமிழ் சம்பந்தமாக இல்லையே என்று எண்ணும்போதும் நாமும் ஐயரவர்களோடு சேர்ந்து ஆற்றுமைப்பட வேண்டியதாய்த்தான் இருக்கிறது.

பண்டைக்காலத்து உயர்தர இலக்கியங்கள் சம்பந்தமாக நம்மவருக்கு அவ்வளவாக அக்கரை ஏற்படாவிட்டாலும், ஒருவிதத்தில் தற்போது நாம் எல்லோரும் சந்தோஷம்கொண்டாட வேண்டியிருக்கிறது. நாற்பதினாயிரம் ஐம்பதினாயிரம் என்று சொல்லும்படியாகத் தமிழ் மக்களுக்கு— ஆடவர் பெண்டிர் பிள்ளைகள் எல்லாருக்கும், இங்கிலீஷ் படித்தவர்களுக்குங் கூட—தமிழ் வசனம் வாசிக்கிற பழக்கம் ஏற்பட்டு, தமிழணங்கின் ஸௌலப்பியம், விசித்ரமான நடனகதிகள், உல்லாசப் போக்குகள், நம் நெஞ்சோடு நெஞ்சுவைத்து இதயத்துக்கு இதயம் பேசும் தனித்த அருமைப்பாடுகள் எல்லாம் தெரியவும் அநுபவிக்கவும் நேர்ந்திருக்கிறது. சமீபத்தில், 'ஆனந்த விகடன்' புகுந்து விளையாடாத வீடில்லை, ரயிலில்லை, ஊரில்லை, தோட்டமில்லை அடுக்களை இல்லை, பெட்டிலும் இல்லை, தோட்டியில்லை, தொண்டமான் இல்லை என்று சொல்லத் தோன்றுகிறது. ஒரேபடியாய் பேஸ்து வைத்த மாதிரி இருந்த தமிழகம் திடீரென்று குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறதைக் காண்பதில் ஐயர் அவர்களுக்கு நம்மைப் போலவே சந்தோஷம்.

வசனத்தின் ருசியைக் கண்டுவருகிற தமிழ் மக்கள் நாளடைவில் பண்டைய இலக்கியங்களின் அருமையையும் உணர்ந்து பாராட்டக்

கூடும். ரவீந்த்ரநாத டாகூர் சொன்ன சொல்லின் உண்மை இன்னதென்று அவர்களுக்கு நன்றாய்த்தோன்றிவிடும். ஐயரவர்கள் நமக்குச் செய்துள்ள உதவியும், அது எவ்வளவாக நம் முடைய நன்றிக்கு விஷயமாய் இருக்கிறது என்ற உண்மையும் அப்போதுதான் தென் படும்.

—கலைமகள்-14-3-35.

செயற்கரிய செய்த பெரியார்

எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.

தமிழன்னையின் இளமைப் பருவத்தே அவள் புனைந்தருளிய சிறந்த பொற்பணிகள் பலவற்றைத் துருவித் தேடிக் கண்டு அவற்றை மாசு நீக்கி மீண்டும் அழகுறுத்தி அவள் தெய்வத் திருமேனியில் அணிவித்து மகிழ்ந்த தமிழ்ச்செல்வர் யாவர்? தமிழ்ப் புலமைக்கு உரையாணியாக விளங்கும் தமிழ்ப் பெருந் தகையார் யாவர்? தமிழ்க்கல்வி புதியதோர் மேம்பாடுற்று எவரும் போற்றத்தக்க நிலையிலே இக் காலத்து நிலவுதற்குக் காரணமாயுள்ள அருந்தமிழ்ப் பேராசிரியர் யாவர்? தமிழ்மக்கள் தங்கள் புராதன நாகரிகத்தையும் தொன்மை, பெருமை முதலியவற்றையும் நன்கு உணர்ந்து களிப்புறும்வண்ணம் செய்வித்த தமிழ்மகனார் யாவர்?

இச்செயற்கரிய செயல்களை யெல்லாஞ் செய்த பெரியார், மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களே ஆவார்கள்.

அவர்களது 80-ஆவது ஆண்டு நிறைவுவிழாவைத் தமிழ்மக்களாகிய நாமனைவரும் மிக்க சிறப்புடனும் பெருமகிழ்ச்சியுடனும் கொண்டாடுவோமாக! அவர்கள் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பெரும் பயனளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து பிரார்த்திப்போமாக!

—கலைமகள்-14-3-35.

தமிழின் புதுயுகம்

மு. இராகவையங்கார்

செந்தமிழ்ப் பேராசிரியராகிய மஹாமஹோபாத்யாய ஐயரவர்களது எண்பதாம் ஆண்டு நாண்மங்கலத்தைக் கொண்டாடும் படி தமிழ்நாட்டுக்கு வாய்த்த பேறு பெரும் பேறே ஆகும். அரசர் முதலிய செல்வர் பிறந்ததினத்தை "வெள்ளணிநாள்' என்பது பழைய தமிழ் வழக்கு. அத்தினத்தில் அவர்கள் மங்கலவண்ணமாக வெள்ளணிகளையே அணிந்துகொள்வதுபற்றி அப்பெயர் பெற்ற தென்பர். இதன் பொருத்தம் எவ்வாறாயினும், நம் தமிழ்ப் பெருஞ்செல்வர்க்கு நடத்தும் இவ்விழாவை நாம் வெள்ளணித்திருநாள் எனல் மிகவும் ஏற்புடையதாம். தமிழ்க் கல்விக்கு நிலைக்களமாகிய நம் பெரியார் "வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப்பணி பூண்டு வெள்ளைக் கமலத்தில் வீற்றிரு"க்கும் தமிழ்க்கலைமகளின் பிரதிநிதியாகத் திகழ்தலால் அத்தெய்வத்தின் பிரசன்னம் மிகுந்து விளங்கும் மங்கலதினத்தை நாம் வெள்ளணி நாள் எனல் பெரிதும் பொருந்துவதன்றே?

மறைந்துகிடந்த தமிழ்நூற் செல்வங்களைக் கண்டெடுத்து மாசறக் கழுவிச் சுத்தஞ் செய்து உதவிய நம் பெரியாரது செயற்கருஞ் செயலை உலக முழுதுமே கொண்டாடா நின்றது. அந்நிலையில் அவர்கள் முயற்சியின் பயனை முற்றவும் அநுபவிக்கும் தமிழ்நாடு அந்நன்றி பாராட்டுவதில் வியப்பொன்றுமில்லை. ஆயினும், அப்பாராட்டுக்கு ஓர் அழகிய சந்தர்ப்பத்தைத் தேடிக்கொண்ட செயல் புகழ்ச்சிக்குரியதாகும். என்னெனில் நம் ஐயரவர்களின் இவ்வெண்பதாம் ஆண்டு விழாவைத் தமிழணங்கின் புதுயுகத் திருநாளாகவே கொண்டு போற்றத் தகும். அவர்கள் பதிப்பாசிரியராக முன்வந்தகாலம் சற்றேறக்குறைய அவர்களது முப்பத்திரண்டாம் ஆண்டாகின்றது. அதுமுதல் இதுவரை அவர்களது இடையறாத பெருமுயற்சியால் தமிழ்க்கல்வித் துறையில் உண்டாகிய மாறுபாடு அதிசயம் விளைப்பதொன்றாகும். பிற்காலத்து இலக்கியங்களையும் சில்லறைப்

பிரபந்தங்களையும் கற்பதோடும் சொல்லணி பெருகக் கவி பாடுவதோடும் நிரம்பியதாகக் கருதப்பட்டுவந்த தமிழ்ப்புலமையின் நிலைமை, ஐயரவர்கள் பதிப்புக்கள் வெளியேறிய இவ் வரைநூற்றாண்டுக்குள் சங்கச் செய்யுட்களின் சொற்பொருள் நயங்களில் ஈடுபட்டு உவப்பதும் சங்ககாலத்துச் சரித்திரவளங்களைக் கண்டு வியப்பதுமாக மாறிவிட்டது. புதுக்கவிகளிற் கவிந்துநின்ற உள்ளங்களையெல்லாம் பழங்கவிநயங்கள் கொள்ளை கொள்ளலாயின. 40வருஷங்கட்கு முன் பத்துப் பாட்டு புறநானூறு முதலிய சங்கநூல்கள் வெளியேறியபோது, அவற்றைத் 'தொட்டுப் பார்க்கப் பயப்பட்டுத் தூரவைத்துத் தொழுத' புலவர்களும் உண்டு. இக்காலத்தோ, தமிழ்ப்புலவரின் பயிற்சியிலும் பேச்சிலும் எழுத்திலும் பண்டை நூல் மணங்களே பெரிதும் கமழ்கின்றன. இத் தகைய மாற்றம் யாவும் எம்மனோர் கண் கூடாகக் கண்டறிந்தவை.

இவ்வளவேயோ! நம்மவர் தமிழ்க்கடலில் இறங்கித்திளைத்தாடுதற்கு ஆராய்ச்சித்துறைகளை அமைத்து உதவியவர்களும் நம் பெரியாரே யாவர். பன்னெடுங் காலமாக அவர்கள் தேடிக்கண்டு வெளியிட்ட பொருட்குவியல்களால் சொற்பொருளறிவும் ஆராய்ச்சியும் நாட்டில் விரிந்து பெருகலாயின. தமிழாராய்ச்சிக்கு மூலமான விதைகள் பலவும், சொல்லேருழவரான அவர்கள் தொகுத்துள்ள பொருட்குறிப்புக் களஞ்சியங்களினின்றே எடுக்கப்படுவனவாகும். ஐயரவர்களது நீண்ட பொறுமையும் சலியாத முயற்சியும் இல்லையேல், தமிழின் பழஞ் செல்வங்களைக் கண்டு மகிழவும், தம் பண்டைப் பெருமைகளை உணர்ந்து கொண்டாடவும் தமிழ் மக்கட்கு இயலுமோ? இம்முதிர்பருவத்தும் தமிழாராய்ச்சியிலுள்ள ஆர்வமிகுதியால் புதிய புதிய நூல்களை வெளியிட்டு வரும் அவர்களது நிரதிசயமான தமிழ்த் தொண்டினை நோக்குங்கள்.

"இனிநினைந் திரக்க மாகின்று...
. . . . .
குளித்தமணற் கொண்ட கல்லா வினமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்று
இருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே"

என்று, தம் முதுமைக்கு வருந்திப் பாடிய தமிழ்ப் பெருமக்களும் நம் முன்னோரில் உண்டு. அன்னோரை யெல்லாம் பின்னோராகித் தாமின்புறுவது உலகின்புறக் கண்டு உள்ளம் பூரித்து, தம்முதுமையையகிழ்ச்சிக்குரியதாக்கியவர்கள் நம் ஐயரவர்களேயன்றே?

இன்னும், பதிப்பாசிரியத் தலைமையும் நம் பெரியார்க்கே உரிமையுடையதாகும். சுத்த பாடங்களாலும் பலவகைக் குறிப்புக்களாலும் ஆராய்ச்சியுரைகளாலும் நிரம்பியவை அவர்கள் பதிப்புக்களே. ஐயந்தெளிந்து பாடசுத்தம் பெறுமளவும் ஆராய்ச்சி செய்தும் நூற்பதிப்புக்கு அங்கமான பொருட்குறிப்பெல்லாம் முற்றமுடித்தும் விலைப்பொருளீட்டத்தில் மயங்கி விரையாது கலைப்பொருளீட்டத்தையே கருதி ஆண்டு பலவாகப் பொறுமை சாட்டி உழைத்து வெளியிடப்பெற்ற அப்பதிப்புக்கள் யாவும் தமிழ்மகளின் சீரிய அணிகலனாகத் திகழ்கின்றன. இவ்வாறு நூற்பதிப்பு முறையாலும் தமிழ்மொழிக்குப் புதிய பொலிவை உண்டாக்கி வருபவர்கள் ஐயரவர்களே யாவர்.

இங்ஙனம், கல்வி ஆராய்ச்சி பதிப்பு ஆதிய துறைகளை நன்கமைத்து அரைநூற்றாண்டுக்குள் தமிழ்மக்கட்கு ஒரு புது யுகத்தைப் படைத்துதவிய நம் தமிழ்ச்செல்வரது நன்றி மண்ணிற் கடலின் மலியிற் பெரியனவாகும். அந்நன்றியைப் பாராட்டியே, அரசர் குரு அறிஞர் என்ற மூவகை உயர்ந்தோர்களும் அவர்களைச் சிறப்பிக்கலாயினர். மஹாமஹோபாத்யாயர் என்ற மாராயநெடுமொழியை மன்னராலும், தாகூரிணைத்ய கலாநிதி என்ற பேற்றினை ஜகத்குருவாலும், டாக்டர் என்ற சிறப்புப்பெயரைச் சருவகலா சங்கத்து அறிஞர்குழுவாலும் பெற்று விளங்கும் நம் பெரியாரது பேறனைத்தும் தமிழகத்தின் பெருமையேயாம். அஃதுணர்ந்து, தமிழ்ப் பொதுமக்களும் தம் நன்றிபாராட்ட நடத்தும் இவ்வெண்பதாம் ஆண்டின் கொண்டாட்டத்தைத் தமிழ்ப்புதுயுகத்தின் திருநாளாகவே கருதி, பெரியோர்களான பரமாசாரியர்களை எம்மவர் நித்தமும் வாழ்த்து முறையே "இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்று நாளும் வாழ்த்துவோமாக!

—கலைமகள்-14-3-35.

கடிதங்கள்

ஸ்ரீ ஐயரவர்கள்பால் அன்புடையார் பலர். அவர்களுடைய இளமைமுதல் பலவகையி லும் சிறந்த நிலையிலுள்ளவர்கள் பலர் அவர்களுடைய உழைப்பினால் தமிழ்நாடு அடை யும் நற்பயனை அறிந்து போற்றிவந்திருக்கின்றனர். மடாதிபதிகளும், அரசர்களும், ஸம்ஸ் தானாதிபதிகளும், பிரபுக்களும், புலவர்களும் ஐயரவர்கள்பால் காட்டிவரும் அபிமானம் பல செயல்களால் வெளியாகும். அவ்வப்போது அத்தகையவர்கள் அவர்களைப் பாராட்டி எழுதிய கடிதங்கள் நூற்றுக்கணக்கானவை. அவற்றிற் சிலவற்றைக் கலைமகளில் வெளியிட எண்ணி எம் விருப்பத்தை அவர்களிடம் தெரிவித்தோம். அவர்கள் அருள்கூர்ந்து அவசரத் தில் அகப்பட்ட சில கடிதங்களை வழங்கினர்கள். அவை பின்னே வெளியிடப்படுகின்றன. இறைவன் நல்லருளால் ஐயரவர்கள் தாமே எழுத இருக்கும் வரலாறு வெளிவருமாயின் இவற்றைவிடப் பன்மடங்கு சிறப்புடைய கடிதங்களையும் தமிழ் நாற்செல்வம் உலகுக்குப் பயன்பட்ட சரிதையையும் நாம் அறிந்து மகிழலாம். ப - ர்.

சேலம் இராமசாமி முதலியார்

[சேலம் இராமசாமி முதலியாரைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவதில்லை. அவர்தாம் முதல் முதலில் ஐயரவர்கள் சிந்தாமணியைப் பதிப்பிக்கத் தூண்டியவர். 'இச் சீவகசிந்தாமணியை உச்சி மேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர் உரையுடன் பல பிரதிரூபங்களை நன்முகப் பரிசோதித்து, எழுதுவோரால் சேர்ந்த வழுக்களை மாற்றிப் பலர்க்கும் பயன்படும் வண்ணம் அச்சிடுவிக்க முயலும் படி சில வருஷத்திற்கு முன் சேலம் ம. ரா. ரா. ஸ்ரீ இராமசுவாமி முதலியாரவர்கள் பல முறை வற்புறுத்திக் கூறி, எனக்குத் தம்பால் இருந்த கையெழுத்துப் பிரதியையும் கொடுத்தார்கள்' என்று ஐயரவர்கள் சிந்தாமணி முகவுரையில் எழுதியது காண்க. 'ஊர்க்குழைப்பான்', 'தமிழென்னு முக்கீர்க் குழைப்பான்' என அவரைப் பற்றி ஐயரவர்கள் பாடியுள்ளார்கள்.]

எழும்பூர் 26-8-'89

அன்புள்ள ஐயா,

இவ்விடத்திலுள்ளவரும் க்ஷேமம். அவ்விடத் திய க்ஷேமங்களுக்கெழுதியனுப்பக் கோரு கிறேன். தாங்களன்புடனெழுதிய கடிதம் கிடைத்துச் சகலமும் தெரியலானேன். பத் துப்பாட்டுப் பிரதிகள் என்னிடம் கொண்டு வந்து சேர்க்கப்பட்டன. அவைகளில் என் னுடைய புத்தகங்களை வைத்துக்கொண்டு மற்றவைகளைச் சேரவேண்டியவர்களுக்குச் சேர்ப்பிக்கும்படி ஏற்பாடு செய்துவிட்டேன். இப்புத்தகத்தைப் படிப்போர்கள், தாங்கள் அதுவிஷயமா யெடுத்துக்கொண்ட சிரமத் தின் மிகுதியை அறிவார்களென்று நம்பு கிறேன். சிலப்பதிகாரத்தைத் திருத்திவரத் தொடங்கினதாகத் தங்கள் கடிதத்திலே தெரியவர அதிக சந்தோஷ மடையலானேன். அவ்வரும்புத்தகமும் விரைவில் வெளிப்படு மென்று பூரணமாக நம்பியிருக்கிறேன். மற்றப் படிக்கு நூதனமொன்றுமில்லை. இவ்விடத் தில் எல்லோரும் க்ஷேமமாக இருக்கிறார்கள். தங்கள் தேக விஷயத்தில் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு இஷ்டன்
சே. இராமசுவாமி

பூண்டி ரங்கநாத முதலியார்

[ஐயரவர்கள் சிந்தாமணியைப் பதிப்பித்தவுடன் அதன் பிரதிகளை முதன்முதலில் ஸ்ரீ இராமசாமி முதலியாரவர்களிடமும் பூண்டி ரங்கநாத முதலியாரவர்களிடமும் அளிக்க எண்ணினார்கள். ஆயி னும் ரங்கநாத முதலியாரவர்களைக் காணப் போனபோது அவர் வேறு காரியமாக இருந்தார்; ஆதலின் பார்க்க முடியவில்லை. ஐயரவர்கள் கும்பகோணம் சென்றவுடன் தாம் வந்ததும் பிறவு மாகிய செய்திகளைச் செய்புட்களாகவே எழுதிவிடுத்தார்கள். அதற்கு விடையாக ரங்கநாத முதலியா ரவர்கள் செய்யுள் ரூபத்தில் ஒரு கடிதம் எழுதி விடுத்தார்கள். அதிலுள்ள செய்யுளொன்று வருமாறு:]

அன்றெனைக் காண நயந்தனை யைய;
அமையமோவ் வாமையால் அமைவாய்ச்
சென்றனை; நின்னைக் கண்டிலாக் குறைய
தென்னதே; சிற்றியல் புடையேன்
ஒன்றல பலவாம் பிழைசெயத் ததுமே!
உத்தம குணமொருங் குடையாய்!
கன்றினைக் காராக்களியுறக் காக்கும்
கனிவோடு கமித்தனின் கடனே.

[ராவ் பஹதூர், பூண்டி ரங்கநாத முதலியார், M. A. அவர்களை அறியாதாரில்லை. கும்பகோணம் காலேஜிற்குச் செட்டியாரவர்களுக்குப் பிறகு ஐயரவர்கள் வந்திருக்கிறார்கள் என்று கேட்டபொழுது, ஐயரவர்களுடைய பழக்கமில்லாமையினாலோ அல்லது பிராயத்தை உத்தேசித்தோ, அவர்கள், 'செட்டியாரவர்களுடைய ஸ்தானத்திற்கு இவர்கள் தகுதியுடையவர்களோ' என்று ஸாது சேஷையரவர்களைக் கேட்டார்களாம். பிறகு ஐயரவர்களுடைய பழக்கமுண்டான பின், ஐயரவர்களுடைய கல்விப்பெருக்கையும் குணாதிசயங்களையுங் கண்டு மிக்க நண்பர்களாயினர். இரண்டு பேருக்கும் செய்யுள் வடிவமாகவே கடிதப் போக்குவரவுகள் நடப்பதுண்டு. முதலியாரவர்கள் ஐயரவர்களை ஸமீபத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பி, பிரஹிடென்ஸி காலேஜில் ஒரு சமயம் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்தானம் காலியானபொழுது ஐயரவர்களை அங்கே வருவித்துக்கொள்ள மிக முயன்றார்கள். —பாஷாபாரத துரந்தர ம. வீ. இராமாநுஜாசாரியர்.]

புரோபஸர் ஜூலியன் வின்ஸன்

[ஐயரவர்களுடைய அயல்நாட்டு நண்பர்களுள் இவர் ஒருவர். இவர் பிரஞ்சிலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் அவர்களுக்குப் பல கடிதங்கள் எழுதியிருக்கிறார். பாரிஸ் நகரத்திலுள்ள பெரிய புஸ்தக சாலையிலுள்ள தமிழ்ச்சுவடிகளை ஆராய்ந்து சிலப்பதிகாரம், மணிமேகலையென்னும் இரண்டும் இருப்பதாக அறிவித்தார். இச்செய்தி அந்நூற்பதிப்புக்களின் முகவுரைகளில் ஐயரவர்களாற் குறிப்பிக்கப் பட்டிருக்கின்றன.]

பாரிஸ், 17-4-'95.

எனதன்பிற்குரிய ஐயாவே,

நீரனுப்பின 2 புத்தகங்களும் எழுதின கார்டும் என்கிட்ட சேர்ந்தன. ஆதலால் மிகவுஞ் சந்தோஷம் பெற்றிருக்கிறேன். நீர் பெரிய வேலைக்காரனென்றும் மகாகனம் பொருந்திய வித்துவானுயிருக்க வேணுமென்றும் நினைத்து வருகிறேன். பணமோவென்றால் இன்னுமெப்படியதை யனுப்பலாமென்றெனக்குத் தெரியாது. ஆனால் சில நாள்களில் எப்படியாகிலும் புதுச்சேரி வழியாய், சென்னப்பட்டணம் வழியால் அனுப்புவேன். மணிமேகலை அச்சிட முடிக்கும் போது 2 பிரதிகளை அனுப்புக. அது உரையின்றி இருக்குமோ? உரையை யெழுதினீரோ?

இங்ஙனம்

தங்கள் அன்பன்,

J. VINSON,

(ஜே. வின்ஸன்)

ஒரு பிரஞ்சுதேச நண்பர்

[ஜூலியன் வின்ஸனுடைய மாணக்கர்களுள் ஒருவர் இவர். இவர் ஸ்ரீமத் ஐயரவர்களே கேரே கண்டு ஸல்லாபம் செய்திருக்கின்றார். இக்கடிதத்திற் குறிப்பிக்கப்படும் பழைய காஞ்சிப் புராணத்தை இவர் ஆராய்ந்து வேண்டியவற்றைக் குறித்துக் கொண்டு ஐயரவர்களிடம் திரும்ப அனுப்பி விட்டார்.]

தஞ்சாவூர்,

6, அக்டோபர், '02.

ம-ரா-ரா-ஸ்ரீ சாமிநாதையரவர்களுக்கு அனேக வந்தனம்.

நான் கும்பகோணத்தை விட்டுப் புறப்படும்போது உங்களுக்கு விடுமுறைநாள் என்று கேள்விப்பட்டேன். ஆகையால் தங்களைச் சிரமப்படுத்த எனக்கு மனதில்லை.

ம-ரா-ரா-ஸ்ரீ கலெக்டர் வீட்டில் நான் விருந்துண்ணும்போது உங்களைக் கீர்த்தியால் அறிந்து அதிக மதிப்புவைத்திருக்கும் கலெக்டர் துரையவர்களைத் தாங்கள் எனக்குக் காட்டிய பழைய காஞ்சிப்புராணத்தை என்னுடைய செலவில் காபியெடுக்கத் தங்களைக் கேட்கும்படி பிரார்த்தித்துக்கொண்டேன். நான் அந்தப் புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த மாட்டேனென்கிற நம்பிக்கை தங்களுக்கு இருக்கலாம்.

அதின் சாராம்சத்தை அறிந்துகீழ்நாட்டுப் பாஷைகளை ஆதரிக்கும் சங்கத்துக்கு (*Orientalists' Congress*) எழுத எண்ணமே தவிர வேறு எண்ணங் கிடையாது. இந்த அருமையான அச்சிடாத புஸ்தகத்தைத் தாங்கள் கஷ்டப்பட்டுக் கண்டுபிடித்தீர்களென்றும் அதின் அசல் தங்களிடத்தில் இருக்கிறதாகவும் வெளிப்படுத்துவேன்.

நான் தங்கள் சினேகிதரும் என் உபாத்தியாயருமாகிய மா-ரா-ஸ்ரீ வின்ஸோன் துரை (*M. Vinson*) பேரைச் சொல்லித் தங்களைப் பார்க்க வந்தபோது என்னை எவ்வளவு அன்பாய் அங்கீகரித்தீர்கள்; என்முல் தங்களையான் கேட்கும் புராணத்தின் காப்பியைத் தருவீர்களென்று நம்புகிறேன்.

சாஸ்திரங்களை ஓங்கச் செய்யவும் அழகிய தமிழ்ப் பாஷையின் பெருமையை வெளிப்படுத்தவுமே இந்த உபகாரத்தைத் தங்களிடம் கேட்கிறேன்.

தங்களுடைய அபிமானத்தை எதிர் பார்க்கும் Marquis De Barrique, De Fontainieu. (மார்க்குவிஸ் டி. பாரிக் டி. போண்டேனியோ)

நான் மதுரை இராமேசுவரம் போய்த் திரும்புகையில் கும்பகோணம் வருகிறேன். தாங்கள் எனக்கு எழுதவேண்டுமானால் புதுச்சேரிக்குக் கடிதம் எழுதவும். அங்கிருந்து எனக்கு வந்துசேரும்.

ஜி. யூ. போப்

['போப்பையர் இலக்கணம்' தமிழ் நாட்டுக்குப் புதிதன்று. திருவாசகத்தையும் குறளையும் நாலடியார் முதலியவற்றையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழ் நூல்களை உலகுக்குத் திறந்து காட்டியவர் போப். இவருக்கு ஐயரவர்கள்பாலிருந்த விசுவாசம் இணையற்றது. இவர் எழுதிய கடிதங்களுள் ஒன்றன் மொழிபெயர்ப்பு இது.]

அன்புள்ள ஐயா,

உயர்ந்த பதிப்பாகிய உங்கள் புறநானூற்றை எனக்குக் கொடுத்ததற்கு உங்களுக்கு வந்தனமளித்து முன்னமே எழுதியிருக்க வேண்டியது.

உங்கள் உயர்ந்த பதிப்பாகிய சிந்தாமணி என்னிடம் இருக்கிறது. அதை நான் அடிக்கடி பார்ப்பதன்றி அதை என் நாலடியார்ப் பதிப்பின் முகவுரையிற் கண்டிருக்கிறேன்.

இன்னும் வேறு ஏதாவது பதிப்பித்திருக்கிறீர்களா? ஸொஸைடிக்காக ஒரு பத்திரிகை எழுத உத்தேசித்திருக்கிறேன்; இது நிற்க.

புறநானூற்றை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும்படிக்குச் செய்ய முடியாதா? எனக்குத் தமிழ் தெரியுமென்று நான் எண்ணிக்கொண்டிருந்தாலும் அதிலுள்ள அநேகம் பாடல்களைத் தெரிந்துகொள்ள முடியவில்லை என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுகிறேன். அப்படியானால் சுருக்கமாயும் சுலபமாயும் வெளிப்படையாயும் இருக்கிற குறிப்புக்கள், விருத்தியுரை ஆகிய இவைகளை நாங்களடையும்படி செய்ய வேண்டும். பண்டிதர்களாக இல்லாத எங்களிடத்தில் இரக்கம் வைக்கவேண்டும்.

சரித்திர சம்பந்தமில்லாத கதைகளைத் தள்ளிவிட்டு முச்சங்கத்தின் விருத்தாந்தத்தைப் பற்றி ஏதாவது சரித்திரம் எழுதமுடியுமா? கலித்தொகையின் பெரும்பாகமும் சிலப்பதிகாரத்தின் சிலபாகமும் நன்முயிருக்கின்றன. இன்னும் அநேக கவிகளிலிருந்து நல்ல பாடல்களைத் தெரிந்துகொள்ள ஆசையுண்டு.

நான் புஸ்தக விவரணத்தைப் பற்றி எழுதும் புஸ்தகத்தில் நிஜமாயுள்ள பழைய தமிழ்ப்புஸ்தகங்களை எல்லாம்சேர்க்க எண்ணமுண்டு. கூடுமானால் உதவிசெய்ய வேண்டும்.

புறநாட்டினனுகிய எனது மடமையைப் பார்த்து ஒருகால் நகைக்கலாம். தமிழை உலகத்திலுள்ள தாய்ப்பாஷைகளிலொன்முக உயர்த்துவதனிமித்தம் ஏதாவது கொஞ்சம் தொண்டு செய்ய வேண்டுமென்றெண்ணுகிறேன். எனக்குத் தாங்களனுப்பும் எதுவும் உபயோகப்படுத்தப்படும்.

புறநானூற்றை எவ்விதமாக உபயோகப்படுத்தலா மென்பதைச் சொல்லவேண்டும்.

பெருந்தேவனாற் செய்யப்பட்ட முதற் பாட்டு நன்முயிருக்கிறது; ஆனால் மாணிக்கவாசகர் பாட்டைப்போலிருக்கிறது. அது சரியா?

உண்மையுள்ள,
ஜி. யூ. போப்.

பொ. குமாரசாமி

ஸ்ரீமான் பொ. குமாரசாமி முதலியாரவர்கள் ஐயரவர்களை நெடுங்காலமாக ஆதரித்துவந்தவர்; ஸர். பொன்னம்பல ராமநாதனவர்களுடைய தமையனார். 'பழைய செந்தமிழ் நூற்பரிபாலகரும் இவ்வாராய்ச்சியால் எனக்கு மனச்சோர்வு உண்டாகாத வண்ணம் அடிக்கடி ஊக்கமளித்துவந்தவரும்

கொழும்பு நகரத்துப் பிரபு சிகாமணியுமாகிய கௌரவம் பொருந்திய ஸ்ரீ. பொ. குமாரசாமி முதலியாரவர்கள், இந்நூலிற் சிற்சில இடங்களில் முன்னம் நிகழ்ந்த ஐயங்களை நீக்கிக் கொள்ளுதற்பொருட்டு யான் கேட்ட வினாக்களுக்கு இலங்கையிலுள்ள பௌத்த வித்தியோதய பாடசாலைத் தலைவராகிய ஸ்ரீ ஸுமங்களரவர்களைக் கொண்டு விடைகளெழுதுவித்து அனுப்பிப் பேருதவி செய்து வந்தார்கள்' என ஐயரவர்கள் மணிமேகலைப் புத்தகத்தின் முகவுரையில் இவரைப்பற்றி எழுதியிருக்கிறார்கள்.]

கொழும்பு, 10 செப். 1889

ஸ்ரீ. ஸ்ரீ. வே. சாமிநாத ஐயரவர்களுக்கு,

ஐயா,

நீங்கள் அனுப்பிய கடிதமும் பத்துப் பாடல் மூன்றும் வந்துசேர்ந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். தமிழுக்கு நீங்கள் செய்யும் பேருதவிக்குத் தமிழரால் என்ன கைம்மாறு செய்யத் தக்கது? தங்களைப்போல் இன்னுஞ் சிலர் சிதைந்து போகின்ற நூல்களை யச்சிடுவார்களாகில், தமிழுக்குக் குறைச்சல் வேறென்ன?

சிலப்பதிகாரம் அச்சிடுவதில் இனி முயல வேண்டியது. சீக்கிரத்தில் முடிவுசெய்யும்படி கேட்கின்றேன். பின் வேறு நூல்களை யச்சிட இவ்வூர்ப் பிரபுக்களைக் கொண்டு உங்களுக்குப் பொருளுதவி செய்யும்படி முயற்சி செய்வேன்.

ம-ா-ா-ஸ்ரீ தாமோதரம் பிள்ளை அவர்கள் மூலமாய் ஆறுமுக நாவலர் மருகர் பொன்னையா என்பவரிட மிருக்கும் சிலப்பதிகாரப் பிரதியை அழைப்பித்தால் ஒருவேளை மூன்று காண்டங்களும் அப்பிரதியில் இருக்கும்.

பத்துப்பாடலில், எனக்குப் பத்துப் பிரதி யனுப்பினால் இங்கே செலவுசெய்து பணமனுப்புவேன். விலையின்ன தென்று எழுதுக. செலவானதன்பின் இன்னும் வேண்டுமாகில் எழுதுவேன்.

இங்ஙனம் தங்கள் அன்பன்,

பொ. குமாரசாமி

இராஜராஜேச்வர சேதுபதி

[ஐயரவர்களுடைய பெருமையை நன்கறிந்து உபசரித்தவர்களுள் இச்சேதுபதி மன்னரும் ஒருவர். இவர் தமிழ்ப்பயிற்சி மிக்கவர். இவரது செய்யுளியற்றும் ஆற்றலும் புலவர்களது வரிசையும் திறனும் ஐயரவர்களால் அடிக்கடி பாராட்டப் படும். இவர்,

"பால்வேண்டும் பழம்வேண்டும் பணம்வேண்டும் பலஉடுப்பு
மேல்வேண்டும் கோல்வேண்டும் விரைசுடம் மிகவேண்டும்
ஹால்வேண்டும் எனலன்றி அரசேநின் போல்தமிழ்த்தோன்
ஞால்வேண்டும், எனஅன்பின் நுவல்பவரைக் கண்டிலமால்"

என ஐயரவர்களாற் பாடப்பெற்ற பெருமை வாய்ந்தவர்.]

Palace, Ramnad, 17-8-'21

ஸஹாமஹோபாத்தியாய அய்யரவர்கள்
சமுகத்துக்கு நமஸ்காரம்.

அன்புடனனுப்பிய கடிதமும், கல்யாண சுந்தரமய்யரவர்கள் மூலமனுப்பிய மணிமேகலைப் புத்தகங்களும் கிடைத்தன. என்னை இப்புத்தகங்கள் மூலமாயும் கௌரவித்ததற்கு என்றும் நன்றி பாராட்டும் கடமையுடையேன். தாங்கள் இத்தமிழகத்திற்குச் செய்யும் மஹோபகாரத்திற்கு என்னால் அடையும் சொற்ப உதவி ஒருபொருட்டாமோ? நிற்க. ஆவுடையார் கோவில் தம்பிரானவர்களின் வியோகம், நியூஸ் பேப்பர் வாயிலாய்த் தெரிய மிக்க விசனமடைந்தேன். மிகவும் சமர்த்தர், லௌகிதம் நன்கறிந்தவர், மிக்க அநுபவமும் மடத்தின் சம்ப்ரதாயமும் அறிந்தார் அவர்கள்போல் பின்னொருவர் இக்காலத்தில் இல்லையென்றேசொல்லலாம். அவர்களை இழந்தது ஆதீனத்திற்கு ஒரு குறைவே. இவ்வருஷம் சங்கத்தின் விழா செப்டம்பர் மாதம் 17உ மதுரையில் நடைபெறும். கனம் K.ஸ்ரீனிவாசய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க ஒப்புக்கொண்டுள்ளார்கள். தாங்களில்லாதுஎப்படி அச்சபை நடக்கமுடியும்? நான் அந்தக் கொண்டாட்டத்தில் அன்வயிப்பது எப்படி? ஆகவே தாங்கள் அவசியம் வந்து என்னையும் சபையையும் கௌரவிக்க வேண்டுகிறேன். ஆதீன விஷயங்கள் கடவுள் கிருபையால் சீக்கிரம் ஓர் அனுகூலமான முற்றுதலடையும். தாங்கள் அங்கிருந்து வருவது எல்லோருக்கும் பெருத்த ஆறுதலாயிருக்

கிறது. தாங்கள் அதுசம்பந்தமான விஷயாதி களோடு தமிழ்ப்பாஷைக்கும் உழைக்கும் விர தம் விட்டுவிடாதது உலகோர்செய்த பெரும் பாக்கியம். என்ன கைம்மாறு செய்யப்போ கிறார்கள் உலகோர்? நன்றிமறவாது இருப் பார்களேயாயின் அதுவே சிறந்ததாகும்.

தங்கள் அன்புள்ள,

B. இராஜராஜேசுவர ஸேதுபதி.

தாமதத்திற்கு மன்னிக்க.

சுந்தரம் பிள்ளை

[மனோன்மணீயம் எழுதிய புரொபஸர் சுந்தரம் பிள்ளை ஐயரவர்களுடைய நண்பர்களில் ஒருவர்; மனோன்மணீய நாடகத்தின் பகுதிகள் பாடமாக வைக்கப்பட்ட காலங்களில் ஐயரவர்களை வேண்டி அவர்கள் செய்த திருத்தங்களை விருப்பத்தோடு ஏற்று மகிழ்ந்தவர்.]

சிவமயம்.

தயவு செய்து அனுப்பித்த எழுத்தும் திருத்தங்களும் கைசேர்ந்தன. நேற்று சாய ரக்ஷை வரையும் இரண்டு பிரசங்கங்கள் எழுதி வாசிக்கவேண்டிய அவசர அலுவல் வழக்கமானவற்றோடு தொடர்ந்து கொண்ட மையால் சற்றும் சாவகாசமில்லாமல் மறு படிக்கும் வந்தனத்திற்கும் காலம்தாழ்த்தமை மன்னிக்க வேண்டுகிறேன். திருத்தங்களைக் கவனித்து மேலும் யாதேனும் சந்தேகம் தோற்றுகிறவைகளைத் தெரிவித்துக் கொள் வேன். கண்வியாதியோடு இவ்வளவு எனக் காகச் சிரமம் எடுத்துக்கொண்டதற்காக மனப்பூர்வமாக நன்றி பாராட்டுதலன்றி மற் றென்ன உபசாரம் யான் சொல்லத்தக்கது? கண்வியாதிகள் அறிந்த நல்ல வைத்தியரிடம் அன்றிச் சாதாரணமானவர்களுடைய வார்த் தைகளைக் கேட்டு யாதும் பிரயோகிக்கத்தக்க தன்றே. இப்போது ஏது தன்மையிலிருக்கி றதென்று அறிய அவாவுகிறேன். தாங்கள் தமிழுக்கு ஒருகண். தங்கள்கண்ணுக்கு வருத்த மென்று கேட்க மனம் சகிக்கிறதில்லை. இனி யும் தங்களால் ஆகவேண்டுமவை அனந்தம். சகாயத்திற்கு ஒன்றோ இரண்டோ ஆள் அவ சியம். அவ்வகைச் செலவிற்கு என்னசெய்யக் கூடியதாக இருக்கும்? என்னலியன்றவை செய்ய ஆயத்தம். தஞ்சாவூரில் ம-ா-ா-ஸ்ரீ கல்யாணசுந்தரமய்யர் அவர்களை யான்சென்ற ஆண்டு கண்டகாலை இவ்வகையான முயற்சிக் குத் தாம் அனுகூலிக்கும் விருப்பமுடைய வராகப் பேசினர். அவர்கள் ஒரு வாக்குச் செலவிடுவதாலல் மடங்களில் அழியும் பொ ருளில் எவ்வளவு இதில் கதியடையக்கூடாத தாகும்? அவர்களைத் தாங்கள் ஏன் பிரேரிப் பிக்கலாகாது? சாது சேஷய்யர் அவர்கள் மூல மாயினும் இலகுவில் நிறைவேறலாமே. தாங் கள் இனித் தனியே யாவும் பார்க்கலாமென்ற எண்ணத்தைத் தயவுசெய்து விட்டுவிடவே ணும். சஹாயத்திற்கு ஆளின்றி இனியும் முயற்சிக்கில் எங்ஙனம் தங்கள் நேத்திரவியாதி வலுத்துவிடுமோ என்று அஞ்சி இவ்வளவு எழுதலானேன். நம் மனையார் தேகநிலையைக் கருதும் போது "இருதலைக்கொள்ளியினுள் ளெறும்பு" என்றே உண்மையாய் எண்ண வேண்டியதாக இருக்கிறது. உழைத்தால் சரீர உபாதி துணிபாக நிற்கிறது. உழைக்கா விட்டால் சரீர மிருந்தென்ன பயனென்ற சோகமும் அப்படியே. ஏது செய்ய? கடவுள் இச்சைபோல நடக்கட்டும்.

16. கார்த்திகை, திரு அனந்தை (29—11—1896)

தங்கள் நண்பன்,

பி. சுந்தரம் பிள்ளை.

அ. சண்முகம் பிள்ளை

[சோழவந்தான் அரசஞ் சண்முகனார் ஐயரவர்களைத் தமிழ்த் தெய்வமாகக் கருதி வழிபட்டவர் களுள் ஒருவர். மிகக் கூரிய அறிவுடையவர். இலக்கண ஆராய்ச்சி நிரம்பப் பெற்றவர். இவர் எழுதி யுள்ள தொல்காப்பியப் பாயிர விருத்தி இவருடைய இலக்கண ஆராய்ச்சி வன்மையை விளக்கும்.]

செந்தமிழ்க் கடலின் நிலைகண்ட தெய்வீக அந்தணர் நிலகாராய் அலகிலாப் புகழொ டென்னிந்தைவிட்டகலாத் தேசிகர் திருவடி வந்தனை செய்து வரைவதிவ் விண்ணப்பம்,

சேஷமம். அவ்விடம் சேஷமங்களுக்குத் திருமுகம் கட்டளையிட்டருளும்படி தேவரீ ரது திருவடிக் கழலலுகளைப் பிரார்த்திக்கின் றேன்.

அசௌகரியத்தால் இவ் வருடத்தினும் மதுரைச் சேதுபதி ஐஸ்கூலில் ராஜாப் பெற்றுக்கொண்டு நாளதுவரை சோழவந்தானில் வசித்துவருகிறேன். இப்போது இன்னிசையிருநூறு எனவொரு நீதிநூல் அடியேன் சிற்றறிவிற் கெட்டிய அளவிற்பாடிச் சிறிதும் நாணுது தேவரீரது சந்நிதானத்துக்குப் புக் போஸ்டு செய்து அனுப்பி யிருக்கிறேன். அரிய பெரிய சங்க நூலெல்லாம் ஆராய்ந்த தேவரீருக்கு இது மிக்க அருவருப்பைத் தருமாயினும் அடியேனது அறியாமையான் எழுந்த அவாவை முடிப்பிக்குமாறு சிறிது கடைக்கண்ணோக்கஞ் செய்தருளித் திருத்த வேண்டின் திருத்தியும் நீக்கவேண்டின் நீக்கியும் சேர்க்கவேண்டின் சேர்த்தும் அனுப்பினால் உடனே அச்சிடுதற்கு இவண் அநேகர் எதிர்பார்த்திருக்கின்றனர். தேவரீரிடத்துப் பாயிரம் பெறல் வேண்டுமென்பது அடியேனது பேரவா. கருணையால் திருவுளம் இரங்கி இதனையும் நிறைவேற்றுமாறு பிரார்த்திக்கின்றேன்.

என் தந்தை பெயர் அரசப் பிள்ளை. ஊர் சோழவந்தான். மதம் சைவம். சாதி வேளாளன்.

அடியேன் பாடிய பிற நூல்கள்: ஏகபாத அந்தாதி, மாலைமாற்று, பஞ்சதந்திரவெண்பா, நவமணிக்காரிகை நிகண்டு, கலம்பக முதலியன.

இதில் இரண்டு லேபிலிருக்கின்றன

இங்ஙனம்
தேவரீர்மாணாக்கன்
அ. சண்முகம் பிள்ளை.

சோழவந்தான் தெற்குத்தெரு

அம்பலவாண தேசிகர்

[ஐயாவர்களுடைய பிரசங்கங்களில் கடவுள் வணக்கம் இராமற் போயினும் போகும், திருவாவடுதுறை மடத்தைப்பற்றிய பிரஸ்தாபம் இல்லாமல் இராது. அந்த மடத்தைப் பற்றிப் பேசாவிட்டால் அவர்களுடைய மனம் திருப்தி உறாது. அதற்குக் காரணம் அவர்கள் இளமைக் காலத்தில் அங்கே பெற்ற கல்வியும் ஆதரவுமேயாகும். அவ்வாதீனத்தில் 17-ஆம் பட்டத்தில் தலைவராக வீற்றிருந்தவர் ஸ்ரீ அம்பலவாண தேசிகர். அவருடைய சிறந்த ஆற்றல்களைப் புகழாதார் அரியர். அவருடைய ஸபை போஜ மகாராஜனின் ஸபையை நினைவுறுத்துமாம். அவர் ஐயாவர்களிடத்தில் இணையற்ற மதிப்பு வைத்திருந்தார். ஐயாவர்களும் அவர்பால் மிக்க அன்பு பூண்டிருந்தனர். இப்பொழுதும் அவருடைய திறமைகளைப்பற்றியும் வித்துவான்களை வரிசையறிந்து ஆதரிக்கும் அவரது சிறந்த இயல்பைப்பற்றியும் ஐயாவர்கள் அடிக்கடி கூறுவதுண்டு.]

அய்யரவர்கள் மஹாமஹோபாத்யாய நமது வே. சுவாமிநாத ஐயரவர்களுக்கு விஞ்ஞாபனபத்திரிகேயம்.

தங்களாசீர்வாத விசேஷத்தால் சேஷமம்; தங்கள் க்ஷேமம் தெரிய விரும்புகிறோம்.

நாம் முன்னரெழுதிய கடிதத்திற்குப் பதிலாகத் தாங்களெழுதிய ஆப்த வாக்கிய லிகிதம் போந்தளவில்லாத மகிழ்ச்சியை விளைவித்தது.

நாமெழுதிய லிகிதம் தாங்கள் திருக்குறள் கoசு-ஆம் அதிகாரம், இரவு ச-ஆவது பாமாணவர்க்குப் போதிக்குங்கால் வந்தது மிகுந்த வியப்பிற்றே.

அந்தக்காரணத்தானும் தங்களுழுவலன்பானும், "மீளா வுளலாற் கைம்மாறில்லை" என்னும் அருமைத் திருப்பாசுரத்தை எழுதியது தெரிந்து மிக்க ஆனந்தமுற்றோம்.

தாங்கள் இடம் மாறுதலின்றி நம்மிடத்திற்கே உரியவர்களாதலின் கைம்மாறிலாதவர்களேயாம்; ஒழுங்கு மாறுதவர்கள் எனினும் ஒக்கும்.

துறைசையைப் பிரிதலரிதென்பதைப் பற்றித் தாங்களெழுதிய "தெய்வப்பொன்னி" என்னும் பாடலைப் பார்த்து இன்புற்றோம். "கலந்தார்தம் மனங்கவருங் காதலானே" என்னுந் திருத்தாண்டகத்தானும் விளங்குகின்றது.

நாம் சிறிது உபகரித்தலைத் தாங்கள் அன்பின் மிகுதியாற் பெரிதாகக் கோடலால் "தினைத்துணை நன்றி" என்னும் திருக்குறளுக்கும், இணையில்லாத நட்புடையவர்களாயிருத்தலின் "நிறைநீர நீரவர் கேண்மை" என்னும் திருக்குறளுக்கும் சான்றாயிருக்கிறீர்கள். மற்றுள்ளன பின்பெழுதுவோம்.

அம்பலவாண தேசிக:
சாதாரணவரு கும்பரவி உக ை.
திருவாவடுதுறைபாதீனம்.

—கலைமகள்—14-3-35

தமிழ்த்தாத்தாவுக்கு உபசாரம்

'தமிழ்ச் சேய்'

ஒரு பெரிய வித்தியாபீடம். மண்டபம் நிறைய ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்தனர். நடுவே நம் தமிழ்த்தாய் மந்தஹாஸ முகத்தினளாய்க் கம்பீரத்தோடு சிம்மாசனத்தில் வீற்றிருந்தாள். ஆங்கிலமகளும், ஆரியமங்கையும், மற்ற மொழி மடந்தையரும் சூழ்ந்து உட்கார்ந்து நமது தமிழன்னைக்கு வெண் சாமரை வீசிக்கொண்டிருந்தனர். பின்னர், ஒவ்வொரு மங்கையும் முன்வந்து வணங்கித் தமிழ்த்தாய்க்குக் கப்பஞ்செலுத்தித் தத்தம் மொழிகளால் வாழ்த்திவிட்டு அமர்ந்தனர். கூட்டத்திலுள்ள மக்களும் "தமிழ்த் தாய் வாழ்க! வாழ்க!" என்று அவளின் சீரிளமைத் திறம் நினைந்து செயல் மறந்து வாழ்த்தினர். நானும் எனது தாயைத் தலை தாழ்த்து வணங்கினேன்.

இது கட்டுக்கதையன்று; கனவுலகக் காட்சியன்று; உண்மையில் நடந்தது என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்! ஆச்சரியப்படுகிறீர்கள்! 'கவனிப்பாரற்றுக் கிடந்த தமிழ்த் தாய்க்கா இவ்வளவு கௌரவம் ஏற்பட்டு விட்டது! என்பது உங்களது சந்தேகம், அவ்வாறு எண்ணுவது உங்களுடைய தவறன்று.

மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையரவர்களின் எண்பதாவது ஆண்டு நிறைவு விழா நடக்கப்போகிற தென்று பத்திரிகைகளில் வெளியாய் இருந்ததைப் பார்த்திருப்பீர்களே! சென்னைச் செனெட் மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அக் காட்சியை, வாசகர்களே! நீங்கள் யாரேனும் நேரில் கண்டிருந்தீர்களானால், நான் மேலே வருணித்தது மிகையன்று என்பதைக் கட்டாயம் ஒப்புக்கொள்வீர்கள். நம் தமிழ்மொழிக்கு இவ்வளவு சிறப்பு ஏற்படுமென்று எந்தத் தமிழ் மகனும் இதுவரையிற் கனவுகூடக் கண்டிருக்கமாட்டான் என்பது திண்ணம். தமிழ் மன்னர்களான சேர சோழ பாண்டியர்கள் காலத்தில் தமிழ்மொழி உன்னதநிலையிலிருந்தது என்று பழைய நூல்கள் கூறுகின்றன. புரொபஸர் சுந்தரம் பிள்ளை, எம். ஏ. அவர்கள் கூடத் தமது "மனோன்மணீயத்"தில், ஒரு காலத்தில் நம் தமிழ்மொழி உலக முழுவதிலும் வழங்கி வந்தது என்று உறுதி கூறி வாழ்த்தியிருக்கிறார். இக்கூற்று உண்மையாயிருக்கலாம். ஆனால், கடந்த சில நூற்றாண்டுகளாக நம்முன்னோர்களும் நாமும் நம் தமிழ்மொழிக்குற்ற சிறுமையையே கேட்டும் கண்டும் வந்திருக்கிறோமன்றிப் பெருமையை அதிகமாகக் கேட்டதில்லை; கண்டதுமில்லை. அவ்வளவு தூரம் போவானேன்? சமீபகாலம் வரை, உயர்தரப் பட்டம் பெற்றவர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், பெரும் பதவி வகித்தவர்கள் முதலியவர்களிடையே இத்தமிழ்மொழி கேவலமாக வன்றோ கருதப்பட்டு வந்தது? தன்னைத் தமிழனென்று கூறிக்கொள்ள வெட்கப்பட்டவர்கள் எத்தனைபேர்? தமிழில் பேசுவதை அகௌரவமாகக்கருதியவர்கள் எத்தனை பேர்? தமக்குத் தமிழ்தெரியாது என்று கூறிக்கொள்வது தங்களுக்கு மிகுந்த பெருமையென்று கருதியவர்கள் எவ்வளவுபேர்? தமிழ்க் கூட்டங்களென்றால் அலட்சியமாக எண்ணியவர்களும், காதைப் பொத்திக்கொண்டோடியவர்களும் கணக்குண்டோ? தமிழ்மொழி தங்கள் தாய்மொழி என்பதையுங் கருத்தில் வைக்காது, "தமிழில் என்ன சார் இருக்கிறது? லிட்டரேச்சர் (*Literature* இலக்கியம் அதாவது காவியம் முதலியன) ஆர்ட் (*Art*—கலைகள்; சித்திரம், நடன முதலியன) ஏதேனும் உண்டா? தெலுங்கர்கள் நன்னை சொன்னார்கள் சார்! 'அரவம் அத்வானம்' என்று. இதையொரு பாஷை யென்று சொல்கிறார்களே அதுதான் வேடிக்கையாயிருக்கிறது" என்று அன்னியரிடம் ஏளனமாகப் பேசி மகிழ்ந்தோர் அளவிடற் பாலரோ!

அது ஒரு காலம். இயற்கைநியதியைத் தடுப்பாருண்டா? காலசக்கரத்தின் வேகத்தை எதிர்த்து நிற்கவும் முடியுமோ! பிற மொழிகளைப் போலவே, நம் தமிழ்மொழியையும் உன்னதநிலைக்குக் கொண்டுவரவேண்டு மென்று பல பெரியோர்கள் முனைந்து நின்று விடாமுயற்சியோடு வேலைசெய்து வராலாறுகள். அவர்களது முயற்சி வீண்போகவில்லை. உயர்தரப் பட்டம் பெற்றவர்களெல்லாம் இப்போது தமிழிலக்கிய ஆராய்ச்சியில் புகுந்திருக்கிறார்கள். பலர் தமிழில் புத்தகங்கள் எழுதி வருகிறார்கள்; பலர் தமிழ்மொழியில் பேசிவருகிறார்கள். இப்பெரு மாறுதலுக்குக் காரணமாயிருந்தவர்களில், முக்கியமானவர் நமது தமிழ்த்

தாதா டாக்டர் சாமிநாதையரவர்கள் என் பதை யாரும் மறுக்க முடியாது. ஸ்ரீலஸ்ரீ ஆறு முகநாவலர், ராவ் பகதூர் சி. வை. தாமோ தரம் பிள்ளை ஆகியவர்களுக்குப் பின்னர், பண்டைத் தமிழ் நூல்களை நாம் படித்தின் புறுமாறு பதிப்பித்துத் தந்தவர் நமது தமிழ்த் தாத்தாவைத் தவிர வேறு யார்? தலைக்குச் சூளாமணியையும் காதுக்குக் குண்டலகேசி யையும் கைக்கு வளையாபதியையும் மார்புக்குச் சிந்தாமணியையும் இடைக்கு மணிமேகலை யையும் காலுக்குச் சிலப்பதிகாரத்தையும் சூட்டித் தமிழ்த் தாயை ஒப்பனை செய்த பெரு மை இத்தாத்தாவுக்கன்றி வேறு யாருக்குக் கிடைத்தது? எனவே, அத்தகைய பெரியா ருக்கு நன்றி செலுத்திக் கௌரவிக்க வேண்டி யது தமிழர்களாகிய நமது முக்கிய கடமை யென்பதைக் கூறவும் வேண்டுமா?

இம்மாதம் 6-ஆம் தேதியன்று நமதுதமிழ்த் தாத்தாவின் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா சென்ட் மண்டபத்தில் மிகச் சிறப்பா கக் கொண்டாடப்பட்டது. ஸர் உஸ்மான் சாயபு தலைமை வகித்தார். மந்திரி கனம் பி. டி. ராஜன் நண்பர்கள் அபிமானிகள் சார்பாகப் பணமுடிப்பு அளித்தார். மஹா மஹோபாத்யாய குப்புசாமி சாஸ்திரிகள் முதலியவர்கள் சம்ஸ்கிருதத்திலும், திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியார் முதலியவர் கள் ஆங்கிலத்திலும், கலாசாலைகள் சபைகள் சார்பாக மற்றும் பலரும் வாழ்த்துப்பத்திரம் வாசித்து வெள்ளிப் பேழைகளில் அளித் தனர். சர்வகலாசாலை மண்டபத்தில் நம் தமிழ்த்தாத்தா உருவப்படத்தைத் திறந்து வைத்ததை வைஸ்சான்ஸலர் ஆர். லிட்டில் ஹெயில்ஸ் ஏற்றுக் கொண்டார். இக்கூட் டத்துக்கு ஐரோப்பியர்கள், மகம்மதியர்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், அட்வொ கேட்டுகள், புரொபஸர்கள், சங்கீதவித்வான் கள், பெண்மணிகள், மகாவித்துவான்கள், மற்றும் பலகனவான்கள் எல்லாரும் வந்திருந் தார்கள். சார்ஜண்டுகள், போலீஸ் கான்ஸ் டேபிள்களுங் கூட மண்டபத்தினுள்ளும் வெளியிலும் காவலிருந்து கௌரவித்தார் கள் என்றால் இக்கூட்டத்தின் பெருமை யைச் சொல்லவும் வேண்டுமா!

—பிரசண்டவிகடன்—15-3-35.

MAHAMAHOPADHYAYA DR. V. SWAMINATHA IYER

BY

DEWAN BAHADUR K. S. RAMASWAMI SASTRI

That the *Merry Magazine* should pay its tribute of admiration to Maha-mahopadhyaya Dr. V. Swaminatha Iyer is fitting in many ways. I have to make this clear at the outset, as orators generally say at the beginning of their oration. They generally try to make things clear at the outset because they generally get confused as they go along and make their hearers' confusion more confounded yet. Once again they make things clear in their peroration or they think that they do so. The peroration is so called because orators are fervid in their oration and perfervid in their peroration.

I must ask my readers to forgive my inconsequence. I am a man of no consequence. Where was I? I was trying to explain why M. M. (*Merry Magazine*) should make its reverential bow to M. M. (*Maha Mahopadhyaya*). One reason is that both are full of M. and both are full of vim. Some may ask me if he is a merry man. I have known him all my life and I am not a baby. I have not seen a merrier man than he.

He is not only a merry man but also an active man. All merry men are active but the converse does not hold good. I have seen some active men who are funereal. The most active entity in the world is undoubtedly the White Ant. It is more active than even the occupant of the White House. He may be an expert in the New

Deal, but it is an expert in the Old Deal. It is the greatest of book-lovers. There is no limit to its omnivorous appetite for books. It is an omniologist. It is almost fit to ascend the *Sarvajna Peetha*. But I have never seen it smile. Its whiteness is not in its smile but in its similarity to the bone which is the symbol of Death.

Mahamahopadhyaya's birth hour was an hour of consternation for the White Ants. He was born to take the food from their mouths and give it in a new form to the starved human mouths. He is as merry as they are morose. He is as constructive as they are destructive. But in other respects they are alike. His indefatigable industry is as unique as theirs. No village and no house in Tamil Nad were safe from his all-seeing eyes. His appetite for books is as omnivorous as that of the White Company. He positively revels in palmleaves. You must see his eyes light up when he sees a cadjan bundle. Valmiki says that Dasaratha's eyes lighted up with joy when he saw Visvamitra—just as a man rejoices when he gets nectar and has a certainty of deathlessness, just as the parched up soil in a famine-stricken tract rejoices in rain, and just as a childless man is overjoyed when a son is born to him. All these similes apply in an ample measure to our Mahamahopadhyaya. Cadjan manuscripts are his nectar, his shower of rain, and his child.

All the same, I may be asked how he is a merry man. He was trained at first for a musician's career but eventually worshipped at the shrine of Goddess Manuscript in preference to the shrine of Goddess Music. A musician is certainly a merry man though a manuscripter may be merry or morose. But the learned Doctor carried his music into his later career. I was not his student in the Kumbakonam College as I worshipped at the shrine of Sanskrit. But as I used to flit in and out of the college rooms, I used to hear,

> "Notes with many a winding bout
> Of linked sweetness long drawn out"

issuing from Pandit Swaminathier's Tamil class-room. I used to linger with waiting foot-steps that were unwilling to move away. There was a sweet and charming quality about the tone itself apart from the tune.

The learned Doctor was not only fond of music and capable of combining music and poesy but he could also evoke harmony out of scholarships. Ordinarily scholarship is harsh and crabbed and scholars are a dreadful lot of men. They are not only musty but crusty as well. Kalidasa introduces two scholars—albeit they were scholars in the arts of music and dance—in his drama *Malavikagnimitra* and tells us with charming confidence that scholars are always jealous of one another. He makes them spar with each other. In fact most scholars are human counter parts of the Kilkenny cats. They go for each other tooth and nail and eat each other up till only the tails (scholars have tails, you know) are left behind. I once saw two scholars debating with each other about the meaning of a passage in a Sanskrit book. They began with compliments and wore charming smiles. But it was a calm that preceded a storm. Soon there was many a screech. Then came curses and imprecations. Then from words they came to blows. Their disciples—candidates for future scholarship with similar scholarly amenities ahead of them—joined in the fray. Very soon, the Riot Act had to be read

and the police had to shoot in the air and eventually had to resort to tear-gas bombs and turn the wranglers into weepers. But the learned Mahamahopadhyaya knew nothing of such crabbed scholarship and never cared to be a Senior Wrangler. He never had an enemy in his life and somehow made all the other scholars his personal friends and admirers. About his scholarship the poet may well sing:

"How charming is divine scholarship!
Not harsh and crabbed as some dull fools suppose,
But charming as is Apollo's lute,
A perpetual feast of nectared sweets,
Where no crude surfeit reigns."

Dr. Swaminatha Iyer is not a merry man because he is a tuneful and bland scholar. He is an inveterate joker. It is said of Englishmen that they are a nation of humorists. The same cannot be said of us to-day though I think that the new Comic Muse may enliven us soon. I have seen people in whose case jokes can pass into their brains only by means of a cranial surgical operation. But the learned Doctor is wearing his weight of learning lightly as a flower. At the grand public gathering convened on 6th March 1935 to do him honour on his eighty-first birth-day, he was the youngest and most jovial man of all. He said that he did not know that he had passed his eightieth year till they reminded him of it. It was raining garlands of roses and garlands of gold all that evening. He said in a jolly mood—*மாலைப்பொழுதல்லவா i.e.*, is this not the time of *Malai* (which means both evening and garland)? With his Mahamahopadhyaya scarlet robe and his lace turban and his lace garlands and his smile-wreathed face growing younger and more buoyant every minute, he was looking like a bridegroom.

The most merry element of all was the merry story narrated by him. Once he had to go from place to place, in search of some missing links in the classic poem *Pattuppattu.* Missing links are searched for by scholars as by scientists. He went to the Dharmapuram Mutt and was carrying on his searches and researches. But his labour seemed to be in vain. In the meanwhile the head of the Mutt said that a large number of loose manuscripts had been piled up in a *chapram* (chariot-like structure, made of cocoanut leaves etc.,) to be taken and flung into the Kaveri river on the eighteenth freshes day (*Pathinettamperukku day*). The procession had not started as it was suspected that it was probable that some valuable Mutt accounts might have got mixed up in that pile. Thus old accounts were of more account than literary gems. Dr. Swaminatha Iyer searched that heap and found there the missing poetic gems. All his life he has been searching for such gems and getting them by the thousands and decorating the Goddess of Tamil Poesy from head to foot with jewels which far outshine the wealth of Ormuz and of Ind! May he live long and serve the Queen of his heart!

—MERRY MAGAZINE.

ஒரு தமிழ்ப் பெரியாரின்
80-ஆவது ஆண்டு பூர்த்திவிழா
அறுபது வருட இடைவிடா ஆராய்ச்சி
ஆயிரம் சந்திரர்சனக்கண்ட தாதா

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் (அதாவது 1880—1900) யாவராலும் பண்டிதர் சாமிநாதையரெனப் போற்றப்பட்ட இப்பெரியார்க்குத் தற்போது அரசினரும் மற்றையோரும் அரிய பட்டங்களும் வெகுமதிகளும் கொடுத்துக் கௌரவப்படுத்துகின்றனர். இவரது தகுதிக்கும் ஆற்றலுக்கும் பெருமைக்கும் பொருத்தமுடையனவாகக் காணப்பட்ட பட்டங்கள் யாவும் இவர்க்கு வழங்கப்படலாயின. இலக்கியத் துறையில் இவர் அடைந்துள்ள பெரும் பாண்டித்தியத்தை ஆய்ந்தறிந்து புதிய பட்டங்களைக் கல்வித்துறையிற் சென்ற பிரிட்டிஷ் பேரரசர் சிருட்டித்தாலன்றி இனி இவர்க்கு வழங்குவதற்குப் பட்டங்களில்லையாகும். இவரது 80-ஆவது ஆண்டுப் பூர்த்திவிழா இற்றைக்குச் சில நாட்களுக்கு முன் (6-3-35) மிக விமரிசையாகச் சென்னையிலும் தமிழ்நாட்டின் மற்றைய பாகங்களிலும் கொண்டாடப்பட்டது. தென்னிந்திய முறைப்படி இவரது சதாபிஷேக விழா நடத்தப் பட்டதெனக் கூறுவாம். ஆயிரம் சந்திரர்களைக் கண்டவர்க்கே இச்சதாபிஷேக விழா நடத்தப்படுவதாகும். அன்றைத் தினம் இப் பெரியாரின் நிழலுருவம் சென்னைச் சர்வகலாசாலையாரின் புதிய மண்டபத்தில் சென்னை மாகாணத்தின் தேசாதிபதியாகச் சிலகாலம் வேலைபார்த்த ஸேர். மகமது ஊஸ்மான் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. அந்நிழலுருவத்தைச் சர்வகலாசாலையின்பேரால் அதன் அமைச்சர் ஏற்றனர். அப்போது சென்னை மாநகரிலுள்ள தமிழன்பரும் வேறு உயர்தர உத்தியோகத்தரும் சமுகமளித்துச் சபையைச் சிறப்பித்தனர். சென்னைச் சட்ட சபையின் மந்திரிகளுள் ஒருவராகும் கௌரவ P. T. இராசன் என்பவர் ஐயரவர்கட்கு 3001 ரூபா கொண்ட ஓர் பணமுடிப்பினை வழங்கினர். இப் பெரியோர்க்குப் பின்வரும் சங்கங்கள் வந்தனோபசாரப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தன:—

(1) சென்னைத் தமிழ்ச் சங்கம், (2) சென்னை, சம்ஸ்கிருத சங்கம், (3) சென்னை வித்துவச் சிரோமணிமண்டலம், (4) சென்னைப் புத்தகசாலைச் சங்கம், (5) சென்னை அரசினர் பேரகராதிச் சபை (The Lexicon Committee) (6) வண்ணைத் தமிழ் அபிவிருத்திச் சங்கம், (7) கும்பகோணம் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், (8) இராசதானிக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், (9) லயோலாக் கல்லூரித் தமிழ்மாணவர் சங்கம், (10) மகமதிய கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், (11) பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், (12) கும்பகோணம் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம்.

ஐயரவர்கள் இப்பத்திரங்கட்குப் பதில் கூறுகையில் தம்மை அளவுக்கு மிகுதியாகப் பத்திரங்களில் வியந்து கூறியிருப்பதாயும் அவ்வாறு கூறப்பட்டமைக்குக்காரணம் அவர்கள் தமிழ்த்தாய்மீதுகொண்ட காதலே யெனத் தாம் மதிப்பாகவும் கூறினர். இவ்விழாக்கொண்டாட்டத்தில் சமுகமளித்த திருப்பனந்தாள் மடாதிபதிக்கும் சபைத் தலைவராகும் ஸேர். மகமது ஊஸ்மான் துதி கூறினர். ஐயரவர்களின் உருவப்படத்திற்குப் பொருளுதவியவர் இம்மடாதிபதியே. அன்றியும் மடாதிபதி வருடாவருடம் சிறந்த பாண்டித்திய மடைந்த தமிழ் வித்துவான் ஒருவர்க்கு 1000 ரூபா சர்வகலாசாலையார் மூலமாக அளித்து வருகின்றார்.

சீவிய சரித்திரம்

மகாமகோபாத்தியாயர் சாமிநாதையர் அவர்கள் 1855-ஆம் ஆண்டு தஞ்சாவூர் ஜில்லாவில் உத்தமதானபுரமென்னும் அழகிய நாமம் பூண்ட கிராமத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் நாமம் வேங்கடசுப்பையர். இவர் சங்கீதத்தில் பெரிதும் திறமை வாய்ந்தவர். தமது புத்திரர்க்குக் கல்வி பயிற்றி வைத்தால் அவர்கள் புகழைப் பெறுவதுமன்றிச் சீவியத்திற்கும் வழிதேடிக் கொள்ளக்கூடியவராவரென எண்ணும் பெற்றோரின் வகுப்பை வேங்கடசுப்பையர் சேர்ந்தவர். தம்மைப் போலவே தமது அரிய புதல்வரும் சங்கீதம் பயின்று அதில் நிபுணத்துவம் அடைய

வேண்டுமென்பதே இவருடைய பேரவாவாக இருந்தது. சங்கீதக் கல்விக்கு அடிப்படையாகச் சிறிது இலக்கிய உணர்ச்சியைத் தமது புத்திரர் பயிலவேண்டுமெனக் கருதினர். சமீபத்திலுள்ள தமிழறிஞரின் இல்லங்கட்கு அழைத்துச் சென்று தம் புத்திரர்க்கு இலக்கியக் கல்வியை ஊட்டுவிப்பித்தனர். பலவிடத்துக்கும் சென்று பயில்வதிலும் ஒரே இடத்தில் ஒரு சிறந்த வித்துவானிடம் இலக்கியக் கல்வியைக் கற்பது அவசியமாகத் தோற்றியது. அக்காலத்திலோ தற்போது பெறக் கூடியனபோல் அச்சிட்ட புத்தகங்கள் பெரும் பான்மையும் கிடையா. அரிய தமிழ்க்காவியங்கள் ஏட்டிலேயே எழுதப்பட்டிருந்தன. அவைகளை ஐசுவரியம் படைத்த உயர்ந்த குடும்பத்தினரே வைத்திருந்தனர். இவ்வரிய நூல்களையும் அவைகளைக் கற்றுக்கொடுக்கக் கூடிய ஆசிரியரையும் தேடிச் சேரவேண்டியது அவசியமாயிற்று. அப்போது பெருங் கீர்த்தி வாய்ந்து விளங்கிய மகாவித்துவான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையே இவரடைந்த ஆசிரியராவர். மாயூரத்தில் வசித்த மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையிடம் கூட்டிச் சென்று தம் புதல்வரை அவரிடம் வேங்கடசுப்பையர் ஒப்படைத்தார். சாமிநாதையர் அவர்கள் தம் ஆசிரியருடன்கூட வசித்து அவரிடம் தமிழ்க் கல்வியைக் கற்றுவந்தனர். பின்பு மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை யாதீன வித்துவானாக நியமனம் பெற்று அங்கே செல்ல, ஐயர் அவர்களும் கூடச் சென்று கல்வியைக் கற்பதில் ஊக்கமுடையராயினர். பின் 1880-ஆம் ஆண்டு ஐயர் அவர்கள் கும்பகோணம் கல்லூரியின் பிரதம தமிழ்ப் பண்டிதராம் பதவிக்கு நியமிக்கப் பட்டுக் கும்பகோணம் சென்றனர். இவர்க்கு முன் அக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதராக இருந்து இளைப்பாறியவராகும் தியாகராசச் செட்டியாரும் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையின் மாணாக்கரேயாவர். மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை இதற்கு நான்கு வருடங்கட்கு முன் அதாவது 1876-ஆம் வருடம் இறந்துவிட்டனர். தியாகராசச் செட்டியாரின் விருப்பப்படியே ஐயர் அவர்கள் கும்பகோணம் கல்லூரிப் பண்டிதராக நியமனம் பெற்றனர். வயதில் குறைந்தவராயிருந்தும் தமது கடமையை மிகவும் திறமையாகவும், திருப்தியாகவும் நடத்தியதிலிருந்து இவர் பெருமை நன்கறியக் கிடக்கின்றது.

அக்காலத்தில் கும்பகோணத்தில் ஜில்லா முன்சீப் உத்தியோகத்தை வகித்து வந்தவர் சேலம் இராமசுவாமி முதலியார் என்பவரே. இவர் பிற்காலத்தில் ஓர் பிரபல அரசியல் வாதியாக விளங்கினவர். இவர் தமது உத்தியோக பதவியைப் பரித்தியாகஞ் செய்துவிட்டு நியாய துரந்தரராகச் சிறிதுகாலம் வேலை பார்த்தனர். பின் இந்தியாவுக்கு அரசியல் திருத்தங்கள் அவசியம் ஏற்படவேண்டுமென்பதை எடுத்துக்காட்ட வேறு அநேக தலைவர்களுடன் ஒரு கோஷ்டியாக லண்டன் நகர்க்குச் சென்றவர். இம்முதலியார் தமிழ்ப் பாஷையிலும் பாண்டித்தியம் பெற்றவர். ஏட்டுப்பிரதிகளாக விருக்கும் அரிய பழைய நூல்கள் இறந்தொழியாது காப்பதற்குவேண்டிய முயற்சியை இவர் செய்தும் வந்தனர். பனையோலை, தளப்பத்தோலைகளில் எழுதப்பட்டிருந்த அரிய நூல்களைக் கண்ணுற் காண்பதும் அரிதாயிருந்தது. தமிழில் பாண்டித்தியம் வரப்பெற்றிருந்த சாமிநாதையர்க்கு இவர் சொன்னதாவது:—"கிடைக்கக்கூடிய நூல்களை மாத்திரம் வாசிப்பதும் படிப்பதும் போதாது. நன்காராய்ச்சி செய்து ஏட்டுப் பிரதிகளாகவிருக்கும் நூல்களை அச்சிடுவித்தலே ஒருவரது பெருந்தொண்டாகவேண்டும். அல்லாவிடில் அவைகள் இருந்தவிடமுந் தெரியாது மறைந்துவிடும்." இவ்வாறு கூறித் தம்மிடமிருந்த ஏடுகளையும் இளைஞராகும் ஐயரிடம் கொடுத்து அரியபெரிய தொண்டில் ஈடுபடும்படி செய்தனர். ஐயரவர்கள் பதிப்பித்த நூல்கள் பல்லாயிர வருடங்கட்கு முன் இயற்றப்பட்டனவாகும்.

அதி அற்புதத் தொண்டு

இவர் பதித்த பன்னிரண்டு நூல்கள் 30 வருடகாலமாக ஆராய்ந்து வெளியிடப்பட்டனவாகும். சீவகசிந்தாமணி முதற்பதிப்பு 1887-ஆம் ஆண்டு வெளிப்படுத்தப்பட்டது. பன்னிரண்டாவது நூலாகும் பரிபாடல் வெளியிடப்பட்டகாலம் 1918-ஆம் வருடம். ஏட்டுப்பிரதியிலிருந்து பழைய நூல்களைப் பிரதிபண்ணிப் பிழையின்றி அச்சிடுவதில் ஏற்படும் சிரமம் எவ்வளவென்பது அவ்வித வேலையைச் செய்தோர்க்கன்றி ஏனையோர்க்கு விளங்காது. பழைய ஏட்டுப்பிரதிகளைச் சொந்தக்காரர் பெரும்பாலார் கைவிடமாட்டார். அவர்கள் வீட்டிற் சென்றே அந்நூல்களைப் பிரதி செய்யவேண்டியதாயிருந்தது. ஒரு

நூலில் அநேக ஏட்டுப்பிரதிகள் அகப்படின் அவைகளை ஒத்துநோக்கி எத்தனையோ திருத்தங்கள் செய்யவேண்டிவரும். கவிகளை இப்போது கடதாசியில் அடிக்குப்பின்னடியாக எழுதுவதுபோல் முன்னுள்ள ஏட்டுப்பிரதிகளில் எழுதப்பட்டிருக்கக் காணவியலாது. கவிகள் தரிப்பு முதலிய அடையாளங்களின்றி ஏட்டின் ஓரந்தலை தொடக்கம் மற்றந்தலை வரைக்கும் எழுதப்பட்டிருக்கும். ஏட்டுப்பிரதிகளிலுள்ள பழைய நூல்களை அச்சிட முயல்வோர் தமிழில் பாண்டித்தியமுடையவராயிருப்பதோடமையாது அதிகம் பொறுமையுடையவராகவும் இருக்க வேண்டும். மூலப்பிரதிகளை உள்ளபடி பிழையின்றி அச்சிடுவது சிறுவேலையன்று. சாமிநாதையரவர்கள் பதிப்பித்த நூல்களைத் திருத்தி இன்னும் விசேஷமாகப் பதிக்க முயல்வது வீணுகவே முடியும். புதிய முறையில் நூல்களை அவரிலுந் திறமையாக அச்சிட எவராலும் முடியாதெனத் துணிவாகக் கூறலாம். அவர் பதிப்பித்த நூல்களில் எவ்வளவோ விஷயங்கள் நிறைந்து பொலிந்திருக்கக் காணலாம். முகவுரையில், எங்கே ஏட்டுப்பிரதி கிடைத்ததெனவும் யார் அதைப்பெறத் துணைபுரிந்தனரெனவும் கூறுவர். மேலும் நூல் ஆக்கியோன் உரைவகுத்தோன் என்பவர்களது வரலாறு, நூலில் கூறப்பட்டவிஷயம், நூலில் குறிக்கப்பட்ட பட்டினங்கள், அரசர் என்பவரின் சரித்திரங்கள் முதலிய யாவும் மிகவும் விரிவாக ஆராய்ச்சியுடன் எடுத்துக்காட்டும் வன்மை ஐயரவர்கட்கு உண்டு. இவ்விதஅரிய வேலையை வேறு யார் இவ்வளவு திருப்திகரமாகச் செய்யும் ஆற்றல் கொண்டுள்ளார்? சிதல் வாய்ப்பட்டு இறக்குந் தசையிலிருந்த பல அரிய நூல்களை எத்தனையோ புதிய விஷயங்களுடன் அச்சிட்டு யாவரும் பெற்றுப் படிக்கும்படி, இவர் செய்தமை பெரிய அற்புதமேயாகுமென மதிக்கலாம். இதுவரையில் இவர் பதிப்பித்த நூல்களின் தொகை முப்பதிற்கு மேலாகும். ஒரு பெரிய சங்கத்தினர் சேர்ந்து செய்து முடிக்கவேண்டிய இவ் வேலையை ஐயரவர்கள் தமது இடைவிடா முயற்சியால் நிறைவேற்றியுள்ளார். இவர் தொண்டு எவரால் மறக்கப்படக்கூடியதாகும்! பழைய முறையில் சீவித்துத் தமது அரியநேரத்தையும் சக்தியையும் தமிழ்த்தாய்க்காக அர்ப்பணஞ் செய்து தற்கால முறையில் நூல்களை அச்சிட்டுத் தமிழுலகுக்குதவிய பெருந்தகையின் ஞாபகம் என்றும் நிலவலகில் நிலவி அழியாப் புகழை இவர்க்குச் சேர்த்துவைக்குமெனச்சொல்லவும் வேண்டுமோ?

—ஈழகேசரி—17-3-35.

எனது குருநாதர்

வே. துரைசாமி ஐயர்

தலைமைத் தமிழ்ப்பண்டிதர், பி. எஸ். ஹை ஸ்கூல், மயிலாப்பூர்.

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வரலாறுகளைப் பலர் பலபடியாகச் சிற்பித்து எழுதிவருகிறார்கள்; அத்துறையில் நான் செல்லவில்லை. அவர்களிடம் தமிழ்க் கல்வி கற்ற மாணவன் என்ற முறையில் என் அறிவிற்கு எட்டிய சிலவற்றையே இங்குக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் 1905-ஆம்ஆவு முதல் வெளியூர்களில் சில வித்வான்களிடம் தமிழ்நூல்களை முறையாகப் படித்துவந்தேன்; அப்படிச் சில ஆண்டுகள் கழிந்தன. 1911-ஆம்ஆவு டிசம்பர் மீ முதல் டாக்டர் ஐயரவர்களிடம் தமிழ் நூல்களைக் கற்றுவரும் பேறு பெறலானேன். அது முதல் மாணவனுகப் பழகியதால் முன்னம் சிலரிடம் படித்த நூல்களையும் இவர்களிடம் திரும்பக் கேட்டுத் தெளியவேண்டுமென்னும் அவா மிகுதியாக வளர்ந்தது.

போதகாசிரியர்

ஐயரவர்கள், இலக்கண இலக்கிய நூல்களைக் கற்பிக்கத் தொடங்கும் காலத்து நூலாசிரியர் பெருமையை அந்நூலைக் கொண்டும் பிற நூலுதவியாலும் ஆராய்ந்து தாம் தெளிவாகக் கண்டறிந்த உண்மைகளைக் கற்போருக்குச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் போதிப்பது வழக்கம். இயல்பாக அவர்களுக்கமைந்த இசையறிவும், அவர்கள் போதிக்கும் முறையும், படிப்போருக்கு உற்சாகத்

தையும் இலக்கியச் சுவையையும் உண்டாக்கி விடும். அவரிடம் பாடங் கேட்கும்போது அப்படி ஈடுபட்டவருள் நானும் ஒருவன்.

ஐயரவர்கள் குறிப்பிட்டதொரு நூலை ஆராயும் காலத்தும், போதிக்கும் காலத்தும், அதைப் பலமுறை படித்து, இயற்றியவர் உட்கோளையும், அவர் காலத்தில் வாழ்ந்த பிற ஆசிரியர் கருத்துக்களையும் கொண்டு நூலின் சிறப்பை உணரவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுவது வழக்கம். ஒரு நூலைப் படியாமலே பிறர் எழுதியிருப்பவற்றை உண்மை யென நம்புவதை அவர்கள் விரும்புவதில்லை.

ஆராய்ச்சியாளர்

ஐயரவர்கள் ஒரு நூலை ஆராயுமிடத்து விளங்காதவற்றை முதலில் சந்தேகக்குறியிட்டு வைத்து, பின்னர் அதனையே பலமுறை பல்வேறு காலங்களில் தனியே படித்தும், மாணவர்களைக் கொண்டு படிப்பித்துக் கேட்டும், அந் நூலோடு தொடர்பு பெற்றனவும் சமகாலத்தனவுமான பிற சான்றுகளாலும் சந்தேகம் தெளிவது வழக்கம். தாம் பதிப்பிக்க முற்படும் ஒரு நூலாசிரியருடைய மனக்கருத்தை அறிவதற்கு அவர்கள் மேற்கொள்ளும் முயற்சியைக் காணுந்தோறும், உயிர் போவதையும் பொருட்படுத்தாது நவரத்நங்களை வெட்டியெடுக்கச் சுரங்கங்களில் உழைத்து வெளிக்கொணர்ந்து சமூகத்திற்குதவும் மக்கள் பலர் முயற்சியே ஒப்பாகுமென்று கூறுதல் மிகையாகாது. ஐயரவர்கள் பிறரறியாதனவும், பல நாள் உழைப்பின் பயனைத் தாமறிந்தனவுமாகிய எத்துணையோ உண்மைகளை அறிந்திருந்தும் அவற்றைத் தாம் பதிப்பிக்கும் நூல்களில் எழுதும் குறிப்புக்களில் சாதாரண விஷயங்களையொப்ப மதிப்பவர்போல் தற்பெருமையின்றி வெளியிடுவதையும் இயல்பாகக் கொண்டவர்கள்.

பதிப்பாசிரியர்

ஸ்ரீமத் ஐயரவர்களிடம் குன்றுப்பொறுமையும் அமைதியும் ஊக்கமும் இடையூறுகளை வெல்லும் மனத்திட்பமும் அறிவுத்தெளிவும் அமைந்திருத்தல் உலகம் போற்றற்குரிய சிறப்பாம்; இவ்வியல்புகள் யாவும் சிறந்த பதிப்பாசிரியருக்கு இன்றியமையாத குணங்கள் என்பதை அறிவுடை யுலகம் நன்கு அறியும்.

புதிதாக ஒரு நூலை இயற்றுவது அவ்வளவு கஷ்டமில்லை; ஏனெனில், கதைப்போக்கையோ, மொழிகளையோ, தொடர்களையோ, பொருள் நோக்கத்தையோ, மனங்கொண்டவாறே மாற்றியமைக்க இடமுண்டு. ஆனால் ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னம் இயற்றப்பெற்றதும், பூச்சியரித்ததும், எழுதுவோர் கற்போர் அறிவின்மையால் நேர்ந்த பிழைகள் விரவப்பெற்றதும் அழியும் நிலையிலுள்ளதுமான ஒரு நூலை ஆராய்ந்து ஆசிரியர் கருத்தை யுணர்ந்து திருத்தமாகவும் விளக்கமாகவும் பதிப்பித்தலரிதென்பதை அத்துறையில் உழலுவோரே உணரக்கூடும். எழுதியடங்கா அத்தகைய துன்பங்களுக்கு இடையில் என் ஆசிரியர், சங்கநூல்களிற் பெரும் பாலனவற்றைப் பேருழைப்பினலும் விடாமுயற்சியினலும் திருத்தமாகவும் விளக்கமாகவும் பதிப்பித்திருத்தல், தமிழர் வரலாற்றையும் நாகரிகச் சிறப்பையும் அறிதற்குக் கருவியாயிருப்பது உலகறியுண்மை. அவர்கள் பதிப்பித்தநூல்களை வாங்கிப் படித்தும், அச்சிடப்பெறுத நூல்களை அவர்களைக்கொண்டே வெளிவரச் செய்தும், அப்பெரியாருக்கு ஊக்கமளிப்பதே தமிழகத்தார் மேற்கொள்ளத்தக்க சிறந்த செயல் ஆகும்.

தமிழணங்கைச் சிங்காரிக்கும் அப்பெரியோர், நீண்டகாலம் வாழவேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை மனமொழி மெய்களால் வாழ்த்துவோமாக.

—P. S. H. School Magazine,
March, 1935.

உ. வே. சாமிநாத ஐயர்

மானிடவாழ்க்கையின் தன்மையை ஆழ்ந்தகன்று நோக்குவோமாயின் ஒரு பிறப்பின்கண் ஒருவர் அடையும் நன்மை தீமைகள் அப் பிறப்பால் மாத்திரம் ஏற்பட்டவை

யென்று எண்ணமுடியாது. இதற்கு ஸ்ரீமான் சாமிநாத ஐயர் அவர்களது வாழ்க்கையே போதுமான சான்றாகும்.

தமிழுலகிற்கு அப்பெரியார் செய்திருக்கும் பேருதவியானது ஒரு பிறப்பின்கண் செய்யவியலும் என்று கனவிலுங் கருதத்தக்கதன்று. முற்காலத்தில் வரையப்பட்டிருக்கும் ஏட்டுப் பிரதிகளைப் பார்வையிட்டு, வழுக்களைக் களைந்து, ஒவ்வொரு நூலிலும் வழங்கப்பெற்றிருக்கும் அரும்பதங்கட்குந் தொடர்கட்குந் அதே பொருளில் ஏனைய நூல்களினின்றும் இடங்களை எடுத்துக் காட்டுவதோடு ஆங்காங்கு மிளிரும் பொதுநீதிகளையும் அட்டவணையில் வரிசையாக எடுத்துக்காட்டி வாசிப்பவர்க்குச் செய்திருக்கும் வசதியை ஆயிரக்கணக்காக வெளிவந்திருக்கும் ஆங்கிலநூல்களிலும் இவ்வளவு விரிவாகவும் தெளிவாகவும் காண்பது அரிதென்று சொல்லச் சிறிதுந் தடையில்லை. அளவிறந்த பொறுமையும், தமிழுக்கு உண்மையான ஊழியம் செய்யவேண்டுமென்ற பேரன்பும் முற்பிறப்பின் புண்ணியத்தால் அமைந்திருந்தாலொழிய இவ்வரிய பெரிய தொண்டு எவராலும் செய்ய இயலாது.

அன்றியும் இதற்கு நோயற்ற வாழ்வு வேண்டும்; இடுக்கமற்ற மிக்க விரிவான மனம் வேண்டும்; இவை ஏற்படினும் இவ்வுலக நன்மையாகிய ஊழியம் செய்வதற்குக் குடும்ப நிலைமையால் யாதொரு இடையூறுமின்றி நிம்மதியாயிருக்கும் அருள்வலிவேண்டும். இவைகளெல்லாம் பொருந்திவருங்காலத்து ஆயுளில்லாமற் போகுமாயின் அதுபோல் கரைகாணுத் துயரத்திற்கிடமானது வேறு ஒன்றுமே யில்லை.

குடும்ப நன்மைக்காக வேறு தொழில் செய்துகொண்டே மூளையைக் கலங்கச்செய்யும் நூற்பரிசோதனையானது அது செய்பவர்க்கன்றி நம்போலியர்க்கறியவே முடியாது. "சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம், சொல்லிய வண்ணம் செயல்" என்ற வேதவாக்கு ஊன்றி யுணரற்பாலதேயாம்.

ஆங்கிலப்பயிற்சியாகிய வெள்ளப்பெருக்கில் இந்தியா அறவே முழுகி மெய் மறந்திருக்கும்போது (இங்கு மெய்யென்பது உண்மைக்கும் ஆகும்) இம்மஹான் தமது பெயருக்குரிய செயலையே செய்து தமிழகத்தைத் தலையெடுக்கச் செய்தது உலகமுள்ளவரையும் நம்மவரால் மறக்கத்தக்கதன்று; அதாவது சாமிநாதன் என்பது முருகப்பெருமானுக்குரிய திருநாமம். அமிழ்தினுமினிய தமிழ்மொழி அவரால் தோன்றலாயிற்றென்பது அனைவரும் அறிந்ததே.

கண் நோவ, கழுத்துக் கடுக்க, கங்குலும் பகலும் ஒரே நூலுக்குப் பல இடங்களினின்றும் ஏட்டுப்பிரதிகள் தருவித்துப் பாடபேதங்களை எடுத்துக்காட்டி, அடங்கியுள்ள சரித்திரங்களையும் கண்டுபிடித்து, அச்சோ நச்சோ என்பதை யறவே மறந்து, அன்புடையார் என்புமுரியார் பிறர்க்கு என்பதைக் கடைப்பிடித்து, நல்முத்துக்களைப் போல் அரிய பெரிய நூல்களை யெல்லாம் அச்சிற் பதிப்பித்துத் தமிழுலகத்திற்குச் செய்திருக்கும் மகோபகாரத்தைப் பாராட்டி மாட்சிமை தங்கிய அரசாங்கத்தார் இப்பெரியார்க்கு எவ்வாற்றானும் பெறுதற்குரிய 'மகாமகோபாத்தியாயர்' என்னும் கௌரவப்பட்டம் நல்கியிருப்பது அனைவரும் ஒரே மனதுடன் ஆமோதிக்கத்தக்கதன்றே?

சங்கநூல்களாகிய பெருங்கடலின் ஆழத்திற் புதைந்து கிடக்கும் அரும் பொருள்களாகிய மணிகளைத் தமிழர் இன்றைக்கும் என்றைக்கும் உரிமைபாராட்டிப் பெருமகிழ்ச்சியெய்துமாறு செய்து தந்தருளிய சாமிநாதனுக்கு நாம்செய்யும் கைம்மாறு யாது? 'கைம்மாறுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித் தம்மாலியலுதவி தாஞ் செய்வார்' என்றதைக் கடைப்பிடித்துத் தமிழாகிய அமுதை நமக்கு ஊட்டி இன்புறச்செய்த ஸ்ரீமான் சாமிநாத ஐயர் இன்னும் பல்லாண்டு நோயற்றவாழ்வும் குறைவற்றசெல்வமும் பெருகப் பெற்றுத் தமிழுக்கு ஓர் இணையற்ற அணிகலமாய் மிளிரும்வண்ணம் அடியார்க்கெளியஞ்சிய ஜகதீசன் திருவருள்புரிவாராக!

மே. சு. இராமசுவாமி.

—Magazine of the Science College—
Trivandrum, March—1935.

ட்ரைவர் செய்த உபகாரம்

ஸாஹித்திய சிரோமணி ப்ரம்மஸ்ரீ டி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள்

சிலவருஷங்களுக்கு முன் திருமெய்யம் என்னும் ஊரில் ஜகத்குரு ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள், திருவாளர் தீ. சொ. முத்தையா செட்டியார் என்ற பக்தரின் வேண்டுகோளின்படி, அவ்வூரைப் புனிதமாக்க எழுந்தருளி யிருக்குங்கால், ஒரு பண்டித ஸபை கூட்டவேண்டுமென்ற அவா அந்தத் தனவானுடைய உள்ளத்தே புகுந்தது. அந்த ஸமயம் நம் ஸ்ரீ மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்களையும் அச்சபைக்கு விஜயம் செய்யவேண்டுமென அவர் கோர, அதற்கிணங்கி ஐயரவர்களும் அவர் கோரிக்கையை ஏற்றார்கள். நம் ஸ்ரீ ஐயரவர்கட்குப் பண்டிதர்களிடத்து மதிப்பும், அவர்களின் குழாத்துடன் அளவளாவி அதிக இன்பந்துய்க்கும் இயல்பு முண்டென்பது வெளிப்படை யன்றே! எனவே, குறிப்பிட்ட தேதியில், சென்னையிலிருந்து தஞ்சாவூர்வரையில் புகைவண்டிவசதியிருப்பதால், தஞ்சையிலிருந்து ஸ்ரீ ஐயரவர்களை அழைத்துவரத் தாம்சொந்த மோட்டாரை மேற்கண்ட தனவான் அனுப்பியிருந்தார். ட்ரைவரின் அறியாமையால் அவன் ஐயரவர்களைச் சந்திக்காமல் ஊர் வந்து சேர்ந்துவிட்டான். ஐயரவர்கள் தஞ்சாவூரிலிருந்து புதுக்கோட்டைக்கு மோட்டார் பஸ்ஸில் ஏறிப் புதுக்கோட்டைக்கு 8-மணி சுமாருக்குவந்து, அங்கிருந்து திருமெய்யத்திற்குச் செல்லும் பஸ்ஸில் 8½-மணிக்கு ஏறினார்கள். அந்தப் பஸ்பிரயாணிகளைச் சேர்க்கப் புதுக்கோட்டையிலுள்ள ஒவ்வொரு தெருவிலும் சந்திலும் சென்று பிரயாணிகளைச் சேகரித்துக்கொண்டு நடுப்பகலில் 1-மணி சுமாருக்குத் திருமெய்யம் போய்ச் சேர்ந்தது. இவர்களின் வரவையே எதிர்பார்த்திருந்த தனிகர், பண்டிதர்களோடு பூமாலை முதலியவற்றுல் ஐயரவர்களை வரவேற்றுக் கௌரவித்தார்.

தனவான்:—நான் என் சொந்த மோட்டாரை யனுப்பியும் ஓட்டுபவனுடைய அஜாக்கிரதையால் தாங்கள் வண்டியைச் சந்திக்க முடியவில்லை.

ஐயரவர்கள்:—அவன் எனக்கு ஒரு பெரிய உபகாரமல்லவா செய்து விட்டு வந்தான்!

தனவான்:—என்ன? என்ன?

ஐயரவர்கள்—அவன் என்னைச் சந்தித்திருந்தால் அரசர்கள் வசிக்கும் புதுக்கோட்டை நகரை இவ்வளவு அவகாசத்தோடு ஒரு தெரு சந்து விடாமல் பார்த்திருக்க முடியாது!

கூடியிருந்த பண்டிதர் பலரும் ஐயரவர்களின் பேச்சின் திறமையைக் கண்டு வியப்புற்றார்கள். பாரதஜோதி—1-4-35.

MAHAMAHOPADHYAYA DAKSHINATHYAKALANIDHI DR. V. SWAMINATHA AYYAR, D. LITT.

By VIDWAN R. VISVANATHA AYYAR, B.A.,

A SHORT time ago when a friend called upon the Doctor and inquired of his health,—he was then suffering from a severe sprain in his leg and a big boil on his back—the learned Mahamahopadhyaya smilingly said that he feared neither death nor re-birth, but the only thing that troubled him most was that all the materials that he should have gathered during this life and the various works which he should have left unfinished would not be available to him again. Further such of us as were present at the Senate House the other day and heard him reply to the various addresses presented to him on his eighty-first birthday remember the opening song he recited to his Deity—the Mother Tamil—which ran as follows:—

இருந்தமிழே உன்னுல் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்—திருந்த
உதிப்பித்த பன்னூல் ஒளிர அடியேன்
பதிப்பித்த வேகடைக்கண் பார்.

These words give us a glimpse into the noble ideals which the great benefactor to Tamil has set before himself.

The Mahamahopadhyaya was born some eighty years ago in an obscure village in the Tanjore District. His father was a pious Brahman of great talents and learning and he was known in the country around his village as a good musician and scholar. He taught his young boy music and Tamil, but soon he found that the lad's instinct lay in learning the secrets of his language rather than the intricacies of the fine art. As a wise father, he allowed the boy to please himself and found good teachers for him to teach Tamil. But the boy was too ambitious and he was not satisfied with ordinary men as his teachers and his thirst for learning could not be quenched until he was taken to the presence of the greatest scholar of the times, Mahavidwan Minakshisundaram Pillai of the Thiruvavaduthurai Athinam who was then living at Mayavaram. Here he began his studies (in the year 1871) in right earnest. The teacher noting the zeal and earnestness of the young boy for classical learning and grammar, taught him with all his heart. Mr. Swaminatha Ayyar stayed with him for five years, *i.e.*, till the death of his master, and he learnt by that time all that was available in those days. He could compose songs and deliver lectures on abstruse points in Tamil classics. He has given a beautiful picture of his stay with his master in his account of the late Mahavidwan's life.

In 1876 he was called upon to occupy the place of Athina Vidwan of the Thiruvavaduthurai Mutt. There he was not only teaching many students but was himself learning under the Matathipathi Sri Subrahmanya Desikar. In four years his fame spread throughout the land and when in 1880 the renowned Tamil Pandit of the Government College, Kumbakonam retired, Mr. Swaminatha Ayyar was considered to be the fittest person to succeed him. He held the office till 1903 when he was transferred to the Presidency College, Madras.

His work as a teacher is even to-day spoken of very well by his students and colleagues. He had earned the approbation of all the Principals—Indian and European—of his time and the two Government Colleges cherish his memory to this day by preserving his enlarged photos in their Lecture halls.

He retired from the Presidency College in the year 1919 when he was sixty-four years of age on a pension of Rs. 50. It was during his period of life as a College Pandit (he was never given the name of Lecturer or Professor) that the world came to know him as a great Research Scholar. His first work was brought out in the year 1878 but his name became established in the field of Tamil research only in the year 1887 when he published the monumental work, *Jivaka Chintamani* with Nacchinarkkiniyar's Commentaries. From that date, almost every year saw one or more books coming out from the Pandit's pen. *Paththuppattu, Puranaanuru, Purapporul Venbamalai, Manimekhalai* with his own notes, *Aingurunuru,* Minakshisundaram Pillai's *Prabhanda Thirattu, Perunkathai, Nannul, Thakkayagaparani* and his master's life history in two volumes, and scores of other works such as *Ulas, Paranis* and other *Prabhandams* came out one after another and added to the glory of the motherland and of her noble son.

The great merit of the Pandit's work in the field of research is his search for materials which by long misuse and

neglect became totally unfit for study or for reference. Many years of the Pandit's life were spent in this search carried out in places far and near in the Tamil land and elsewhere. It would really be a very interesting chapter in the history of modern research in Tamil if the learned Pandit would only write his adventures in this wild jungle and of his various experiences therein. It can safely be said that but for him many hundreds of texts in manuscripts would have been lost to the Tamil world, and the Tamilians would never be able to discharge their obligations to him in full for all his trials and difficulties.

His editions are unique. They are, perhaps for the first time in the history of Tamil printing and editing, brought out in a methodical manner. He would not venture to bring out a book, unless he had worked at it for a number of years—in some cases the period ran to ten years or more. Every work of his has a critical preface, a list of contents, a prose summary of the work, if it allows it, a list of books consulted or quoted, a guide to abbreviations used, the text, foot-notes,—which include detailed lists of parallel passages in various other works—an index and an appendix or appendices containing hard words and their meanings. He bestows great attention and care on his publications both in the preparation of his MSS. and in seeing them through the press. Thoroughness is his motto. The great scholar and critic that he is, he has every right to criticise the work and commentaries of his poets and annotators but he only very rarely does it. His only aim is to bring out in print and in readable form what exactly the ancients felt and wrote and to leave things as they were with sufficient hints and parallels and meanings for posterity to read and understand and judge. His style is very simple and lucid. There is much truth in the saying that any work, whether trivial or great, acquired a magnitude and importance if it passed through his hands. Hundreds of such works are awaiting his attention and it is hoped that the Tamil country will be quite fortunate and get all of them edited and published by him.

We have already referred to the Pandit's work as a teacher. After his retirement he was prevailed upon to undertake the duties of the Principalship of the Tamil College, in the Annamalai University. He held the post with great distinction for three years, *i.e.*, till 1927. From that time he has spent all his time in doing research work and in editing rare works and in teaching Tamil scholars at his residence. His vast learning, his deep insight into the realities of men and things, his quick grasp of intricacies, his keen sense of humour, his strict but benevolent discipline and above all his unique kindness and his magnanimous personality have captured the minds of all those who came to him and heard him. His students are most of them occupying high positions in life and they bear ample testimony to his great influence on their lives.

The Government, Matathipathis, Academies and Universities vied with one another in honouring this noble and selfless worker of the modern age. He is now a Mahamahopadhyaya, a Dakshinathyakalanidhi, a Dravidavidyabhushanam and a Doctor of Literature. He was invited to deliver a series of ten lectures on Tamil of the Sangam Age and of later days by the University of Madras. He was the Chairman of the Reception Committee of the Tamil Lovers' Conference held

in Madras last year. He is also connected with many Universities in India and commands the friendship and admiration of a host of friends in India and in foreign countries. Wherever Tamil is known the learned Doctor's name also is known.

He is very simple in his habits. Modesty claims him as her child. He is generous and kind towards all. His piety and devotion to God are well-known to his close friends.

This great benefactor of Tamil, this modern Nachinarkkiniyar and this scholar of the Tamil land celebrated his eighty-first birthday only a short time ago and the whole Tamil land participated in it and celebrated it as a national festival. From far off Rangoon and Colombo messages of congratulations came to him. May he be spared to us for a very long time and may by his endeavours the noble Mother deck herself once more with her lost jewels!

—*The Educational Review, April*, 35.

DR. V. SWAMINATHA AIYAR

By Mr. P. N. Appuswami, B.A., B.L.

At maturity, the tree of Scholarship stands stately and umbrageous, laden with flowers and fruit. Generations of men look up in wonder at it and gather its fruit and inhale its fragrance. But as a tender plant it is difficult to rear, and needs careful tending to make it grow straight. Adversity dwarfs and stunts it, criticism warps and twists its trunk, and ill winds (of which there are a thousand) make it shrunken and shrivelled. And hence this tree occurs usually as a stunted, twisted, flowerless growth with gnarled stem and prickly branches and heavy with bitter fruit.

Rarely however—so very rarely—a plant comes out of a hardy stock, grows smooth and tall with leafy branches and fragrant fruit. It strikes its roots deeper and ever deeper and seeks and gains life-giving nourishment. It spreads its branches wider and higher and catches the glorious sunshine that warms all life. It takes years to grow and by a marvel it grows straight! Such a tree shady, fragrant and sweet—is Mahamahopadhyaya Dr. V. Swaminathier.

He comes of a family of Musicians —steeped in culture and still eager for knowledge. He was lucky enough to find a guru who was profoundly learned and sympathetic and friendly beyond measure. He had the strength to give up, early in life, the distracting charms of music and concentrate whole-heartedly on his one and only love—Tamil. Thenceforward with one aim, one object, one desire, he has marched ever forward, ceaselessly, laboriously, patiently. Is it a wonder then that his conquests have been final and manifold and honours have come to him unsought? His titles would fill a paragraph, and the names of his published works would fill a page.

No easy work was his. The works he has edited are over two thousand years old; and represent a state of society and a view of life and its purposes that are, even now, but vaguely understood by us. Out of this world, so remote from us, come local allusions, symbolisms, obsolete words and technical expressions that are well-nigh incomprehensible. The errors of

scribes, the animosities, personal and sectarian of scholars, the trickery of knaves, and the worm and the weevil and the white-ant, all these ravages of time have added greatly to the difficulties of the Editor. The writing is faded, the palm-leaf broken, the characters themselves often indistinguishable. One set of symbols may stand for as many as six different sounds, *e.g.*, ஒஙா, which may be read as ஒஙா, ஒஙா, ஙோ, ஙோ, ஒஙா, ஙோ. Verse was written continuously, with no spaces to mark off words or feet or even lines. The grammatical structure was highly involved, one sentence sometimes running into two hundred lines. A whole poem and a single sentence may thus be coterminous. Cadjan leaves often had wrong titles written on them and they were strung together anyhow. Recovering a single work from such lumber was like putting together a jig-saw puzzle.

The story of his recovering and editing some of the works reads like a romance.* In one instance he had to rescue and reconstruct letter after letter, the text of a poem, out of the debris of its commentary. No copy of the text was then available. Years after this reconstruction, when by a lucky accident he came across a bundle of cadjan leaves containing the text, what must have been his satisfaction and the world's surprise, to find that the old copy completely bore out his reconstruction? (*See* Introduction to Pattuppattu.)

The story of another MS. is even more wonderful. A vague condemnatory remark in somebody's commentary on a grammatical treatise, a casual reading of an incomplete, worm-eaten work with a recondite vocabulary, a passage or two therefrom quoted (though under a different title) by some other commentator on some other work, these were the slender clues which led to the discovery of the identity of the famous *Perungathai*, which tells the story of Udayana. An achievement as marvellous as the deciphering of the Rosetta Stone or that of the Rock of Behistun. Truly many treasures hidden by our ancestors have been recovered and made available to us by the lifelong labours of this literary detective. Mr. Aiyar began his labours as an editor in the year that Victoria assumed the title of Empress. Ten years later, he brought out *Jivaka Chintamani*, one of the five great Tamil classics, which he published with a critical text, elaborate commentary, notes and indexes in 1887. From that time onward he has been sending out into the Tamil World a long array of critically edited masterpieces.

He is now eighty, but neither looks nor feels that age. His memory is as unfailing as ever, vivid and accurate. His industry and energy put much younger men to shame. He has still in his hands critical editions of many works all ready for the Press. He is still working away at Manuscripts. In him we have a Grammarian with the breezy optimism of a Ben Ezra.

How, piling life on life of work, he keeps so young is a mystery. Can there be some preservative virtue in Old Tamil? Or could it be his sense of

*The manifesto issued by the Mahamahopadhyaya Dr. V. Swaminatha Ayyar's 81st Birthday Celebration Committee has the following :—

"He has accomplished, single-handed and at enormous personal sacrifice, the work of rescuing, deciphering, editing and publishing the great classics of the Golden Age of Tamil Literature, with the result that our conception of the culture of the ancient Tamils is very different to-day from what it was when he began his life's work. To him more than to any other single individual it is owing, that we have just historical grounds for taking high pride in our past."

humour which has saved him from the shocks and worries of life?

He has the Scholar's exquisite sensitiveness. An inappropriate word, a faulty idiom, an ungrammatical sentence cuts him to the quick.

He was once pressed to attend a discourse on some Purana. The pauranika spouted with fatal fluency words of little sense but thundering sound. His local fame, however, stood high and the organiser approached Swaminathier and said in a proud whisper: "All this is not the result of weary learning; it is a natural gift." Swaminathier smiled radiantly and said: "I thought so, too." The organiser swelled with pride that the great man agreed. But there were one or two near by who understood.

He is a charming talker, with an unfailing supply of fun and anecdote. He is a gentleman to his finger tips. His prose writing is daringly simple.

May he live long and be blessed with health and happiness and give us more and more of the fruits of his wisdom and learning!

—*Indian Review, April, '35.*

இலங்கைத் தமிழர்க்கோர் வேண்டுகோள்

* * * * * * *

இனி, நூல்கள் வெளியிடுதலைக் குறித்து இரண்டொரு வார்த்தை கூற விரும்புகின்றேன். டாக்டர். சாமிநாதையர் அவர்கள் எவ்வளவு காலம் குருகிஷ்ய முறையாகக் கல்வி பயின்று கஷ்டப்பட்டுக் குறிப்புக்கள் தேடி, தம் வயோதிகப் பருவத்தில் அன்றே நூல்களை வெளியிட முன்வந்துள்ளார்கள். அவர்கள் நூல்களை ஆராய்ந்து வெளியிடு முறையினை "தமிழ்விடுதூது" ஆராயும்பொழுது உடனிருந்த நண்பரொருவர் "கலை மகளில்" வெளியிட்ட கட்டுரையிற் கண்டு மகிழ்க. இக்கட்டுரையினை இக்காலப் போலி அறிஞர்கள் பன்முறை படித்துப் பாடமாக்கல் வேண்டும். இக்காலத்தில் தமிழில் இரண்டொரு நூலைக் கற்றுத் தமிழைப் பிழையற வாசிக்கப் பழகியதும் தமிழறிஞர்களாகிவிட்டோமெனத் தம்மைத் தாமே பாராட்டி நூல்கள் எழுதத் தொடங்கிவிடுகின்றார்கள். ஆங்கிலமுறையைத் தழுவித் தமிழிலும் நூல்கள் வெளிவருதல் சாலச் சிறப்புடைத்து. ஆனால் தமிழறிவில்லாதார் எழுதிய உரைகள் வெளிவருவதினும் உரையின்றியிருத்தல் பெருங்கேடன்று. கேடு விளைக்கும் சேரிமொழி நூல்கள் வெளிவருவதினும் நூல்கள் வெளிவராதிருத்தல் மிக நன்று. சிலருக்கு உரை யெழுதும் ஆற்றலும்; சிலருக்குக் கவிபாடும் ஆற்றலும், சிலருக்குக் குறைகூறும் ஆற்றலுமுண்டு. உரை யெழுதவேண்டிய நூல்கள் பலவிருப்பப் புதுக்கவிபாடுவது கூடாதெனச் சிலர் கூறல் எள்ளி நகையாடற்குரிய ஆராய்வற்ற கொள்கையெனத் தள்ளுக. ஒவ்வொருவரும் தத்தம் பயனுடை ஆற்றல் கொண்டு தமிழிற்காக உழைக்கலாம்.

இங்ஙனம் பலகாலம் தமிழ் பயின்ற அறிஞர்கள் எழுதும் நூல்களை அச்சிடற்குரிய செலவினைப் பொறுத்தற்குச் செல்வர்கள் முன்வரல்வேண்டும். அன்றேல் எழுதுதற்குரிய வழிவகைகளை அமைத்துக் கொடுத்து மனக்கவலையின்றி எழுதுதற்கு உதவி புரிதல் வேண்டும். சிறந்த ஓர் நூலினை எழுதுமாறு தூண்டுதற்கு 25 ரூபாவும், 50 ரூபாவும் பிச்சைச் சம்பளமாகக் கொடுத்தாற் போதுமா? ஒரு பக்கத்திற்கே இத்தொகை போதாது. இத்தொகைக்குச் சம்மதித்தெழுதப்பட்ட நூலின் தகைமையும் அதற்கேற்றதாகவே யிருக்கும். அண்ணாமலைச் சர்வகலாசாலை, "நவீன தர்க்கம்" எனும் ஒரு நூலுக்கே 1000 ரூபா வெகுமதி அளித்தது. அதுவன்றே சிறந்த முறை. வருங்காலத்தில் இக்கலாசாலையிலிருந்து வெளிவரும் நூல்களை தமிழகம் முழுதும் பரவியாவராலும் போற்றப்பட்டு

வருமென்பது திண்ணம். இச்சர்வகலாசாலை யொன்றே தமிழை வளர்த்தற்குரிய தொண்டினைப் புரிகின்றது. இலங்கையிலுள்ள குட்டிக் கழகங்கள் பலவும் ஒருங்கு சேர்ந்து உழைத்தால் ஒரு சமயம் சிறிதளவு தொண்டாற்றக்கூடும். இன்றேல் எமதூரிலுள்ள கழகங்கள் யாவும் பெயரளவோடும் ஆண்டுக் கொரு முறை அங்கத்தவரைத் தெரிவுசெய்து ஆகாயக்கோட்டைகள் கட்டுவதோடும் நின்று பட்டொழியுமன்றி வேறு பயனை யளியா.

தமிழுக்காக உழைப்பதற்கு முன்வருவோர் தமிழை ஒழுங்காகப் பத்தாண்டு வரையிலா யினும் கற்கவேண்டும். அதன் சுவையினைச் சிறிதளவாயினும் அறிந்திருத்தல் இன்றியமை யாததொன்று. தமிழறிவின்றித் தமிழுக்காக உழைக்க முடியாதோவெனின், அன்னவர் செயல் முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்ட செயலையே யொக்குமெனக் கூறி மறக்க. தமிழ்மொழி இறந்துபட்டொழியுமோவென ஒருவரும் அஞ்சவேண்டியதில்லை. இப்பொழுதுள்ள நிலைமையினும் கேவலமான நிலையிலிருந்த காலத்திற் கூடத் தமிழ்மங்கை தன் அழகிற் குறைபட்டிலள். சிறிது நலமற்றிருந்தாள். ஆனால் இப்பொழுது அவள் டாக்டர் சாமிநாதையர் அவர்களின் வைத்தியசாலையில் இருந்து குணமடைந்துவருகின்றாள். சிறிது நேரம் புன்முறுவலோடு "தியாகராச விலாசம்" எனும் முற்றத்தில் உலாவுகின்றாள். தமிழே உருவெடுத்தாற்போன்ற ஒளியுடைய ஐயர்வர்களின் உதவியால் அவளின் அணிகலன்களை மீளவும் பெற்றுவருகின்றாள். சென்னியிற் சூளாமணியும், காதிற் குண்டலகேசியும், கையில் வளையாபதியும், இடையில் மணிமேகலையும், காலில் சிலப்பதிகாரமும் அணிந்து செல்கின்றாள். இன்னும் பல அணிகலன்களை மீட்டுக் கொடுப்பதாக ஐயர் வாக்களித்தமையால் அவருடனேயே அல்லும் பகலும் திரிகின்றாள். இங்ஙனம் குணமடைந்து வரு பவளுக்குச் சங்கங்களும் கூட்டங்களும் மீட்டும் வருத்தத்தை யுண்டாக்குமோவென ஐயுறவேண்டி யிருக்கின்றது. அவளுடைய அணிகலன்களை இக்காலத்திற்கியையப் புதுமாதிரியாகச் செய்துகொடுப்பதாக ஆசை வார்த்தை கூறி அவற்றை முற்றுகக் கெடுத்து விடுவார்களோவென அஞ்ச வேண்டியிருக்கின்றது. அங்ஙனஞ்செய்யின் அவள் கண்ணீர் விடுவாள். அத்துளிகளை இக்கூட்டங்களையும் கழகங்களையும் உடைத்தெறியும் கொடிய கூரிய பாணங்களாக மாறிவிடும். ஆகையால் தமிழை அபிவிருத்திசெய்ய முன்வருவோர் தமிழ் கற்ற அறிஞர்களாயிருத்தல் நன்று. தமிழ்மொழி வளர்ச்சி விளையாட்டான செயலன்று என்பதைமட்டும் கூறி இக்கட்டுரையினை முடிக்கின்றேன். இதன்கண் கொள்ளக் கூடியன இரண்டொன்றிருப்பின் கொள்க.

"தமிழபிமானி"

—ஈழகேசரி—2-6-35.

வாழ்த்துப் பாடல்கள்

பல சங்கங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் வாசிக்கப்பெற்றனவும், பத்திரிகைகளில் வெளிவந்தனவும், ஐயரவர்களுக்கு அனுப்பப்பட்டனவுமாகிய வாழ்த்துப்பாடல்களிற் கிடைத்தவை தொகுத்துப் பின்னே வெளியிடப்படுகின்றன.

ரா. இராகவையங்கார்

(பாஷாகவிசேகர மகாவித்துவான்)

(கட்டளைக் கலிப்பா)

1. பத்துப் பாட்டுப் பதிற்றுப்பத் துப்புறப்
பாட்டொ டைங்குறு நூறுசிந் தாமணி
புத்தர் கொள்கை புகன்மணி மேகலை
பொற்சி லப்பதி காரம் பெருங்கதை
மெத்து நன்பரி பாடல் பரணிநூல்
வேம்பத் தூரர் திருவிளை யாடலோ
டித்த ரைக்கிற வாதுசெய் வள்ளன்மைக்
கியாது ளோஞ்சாமி நாதற் குதவற்கே !

2. ஏடு தேடி யலைந்தவு ரெத்தனை
எழுதி யாய்ந்த குறிப்புரை யெத்தனை
பாடு பட்ட பதத்தெளி வெத்தனை
பன்னெ றிக்கட் பொருட்டுணி வெத்தனை
நாடு மச்சிற் பதிப்பிக்கு நூலிக்கு
நாளும் விற்றபல் பண்டங்க ளெத்தனை
கூட நோக்கினர்க் காற்றின வெத்தனை
கோதி லாச்சாமி நாதன் றமிழ்க்கென்றே !

3. எத்து ணைப்பொன் னளிப்பர்சிந் தாமணிக்
கேற்ற நல்லுரை யென்மனி மேகலைக்
குய்த்தவண்சிலம் பின்செய்திக் கொத்ததொன்
றுண்டு கொல்லிவண் மண்டலந் தேடினும்
வைத்த செய்யுள் விளைந்த பொருண்முற்றும்
மாணு மோபத்துப் பாட்டுச்செய் யுட்பொருட்
கித்த ரைப்பதிற் றுப்பத்து நூறுபொன்
இன்ப திற்றுப்பத் துக்கெதிர் நிற்குமோ!
4. பிறந்த துத்தம தானமென் பாரிவன்
பெய்த துத்தம தானமென் பேனிவன்
கிறந்த தாயதெண் ணுயிர்ர் நன்குடி
தெளிந்த சொற்களெண் ணுயிர மேம்படும்
உறுந்த மிழ்ப்பர மாசாரி யன்னெனற்
கொத்த தேசாமி நாதப் பெரும்பெயர்
மறைந்த செந்தமிழ் தோற்றஞ்செய் வண்
[மையான்
மற்றிக் காலத் தகத்தியன் முனிவன்.
5. பொன்ப லாயிர மும்பொரு வாதுநீ
புரிந்த வண்டமிழ்த் தொண்டினுக் கொண்டுகில்
நின்ப லாயிர மான குறிப்புரை
நீடு செய்புகழ்ப் போர்வைக்கு நேருமோ
உன்ப ராவுமெய்ந் நூல்வடி வாகுநீ
ஊழி யூழியும் வாழ்கென வோதுமிவ்
அன்ப லாலெது வுந்தர வாய்ந்திலேன்
ஐய னேசாமி நாதனென் மெய்யவே!

(வேறு)

6. உச்சிமேற் கொளவல்ல நச்சினர்க் கினியர்
உயர்ந்தபரி மேலழக ரடியார்க்கு நல்லார்
மெச்சுமிளங் கோவடிகள் கொங்குவேள்
[சாத்தன்
வீறுதமிழ்ச் சங்கத்தைந் நூறுபுல வோர்
[கள்
அச்சயின நூலுதவு திருத்தக்க தேவர்
அம்மையிலை நாதர்புறப் பாட்டினுரை காரர்
நச்சுபதிற் றுப்பத்தி னுரையாளர் கூத்தர்
நவில்சாமி நாதனிசை நாம்புகல்வ தென்னே!

—கலைமகள்.

தஞ்சாவூர் ஜில்லா மாயூரந்தாலுக்கா திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரவாதீனம்

24-ஆவது மஹாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ ஷண்முகதேசிக ஞான சம்பந்த பண்டார சந்நிதிகள் சார்பாக
வைத்தீசுவரன்கோவில் கட்டளை விசாரணை சோமசுந்தரத்தம்பிரான் இயற்றியது.

(நீலமண்டில ஆசிரியப்பா)

பூமலி தடவையிற் பொலியுந் தடத்து
மாமலி வெண்டா மரைச்சொன் மடந்தையும்
மேவுறு புவியைக் காவல்செய் யண்ணல்
மார்பகந் தழீஇ யார்வங் கொள்ளும்
5. திருவின் செல்வியும் பொருந்துதல் சான்ற
திருவிட் டிசன் மருவோர்ப் பழம்பதி
எழில்பெற விளங்கிநல் வழிவரும் வேதிய!
மறைமுத லக்கரத் தறையு மந்தணம்
முனமுரை வகுத்த மூவிரு முகத்தோன்
10. தனதரு ளோங்குஞ் சாமிநா தைய!
தென்றமிழ்ப் புலமை திருந்திய வகத்திபன்
தன்புகழ் நிறுவிய சான்ற குணத்தவ!
திங்களங் கண்ணி திகழ்செஞ் சடைப்பரன்
சங்கத் தமிழைச் சமைத்ததுன் காதலம்;
15. ஆகம கலைக ளனையவை திறனே
யூகம தாக வுணர்த்துநின் னுவகம்;
பண்டையர் மாட்சிப் பரிமள மல்லக்
கொண்டதுன் புயத்துக் கொண்டவம் போருகம்;
அத்தநின் குறிப்பின் முத்தமிழ் வயங்கும்;
20. கலைமகள் புத்தகங் கைக்கொள லெங்ஙனம்
நிலைபுற வச்சினீ நிகழ்த்தா விடினே?
உத்தம தான புரமென வோங்கலின்
உத்தம தான புரத்தென வோர்ந்தனம்;
சென்னையுங் குடந்தையு முன்னுநின் னுமம்;
25. அருந்தமிழ் நலனே பெரும்பய னுகை
இதம்பெற விருத்தினை சிதம்பர மதன்கண்;
ஞானமா புரியின் ஞானபீ டத்துப்
பதினு ருவதாந் திதிசேர் பட்டத்
துச்சிமேற் புலவர்கொள் சச்சிதா னந்த
30. தேசிகர் மாலே பேசுநின் பெருமை;
அரசவைப் பட்டமுங் கரிசிலா துற்றனை;
இம்மையிற் பெறும்பய னிசைபுகழ்; அதனைச்
செம்மைபெத் துறையினுஞ் செய்தனை; நங்கள்
பரமசற் குருசம் பந்தரந்நங் கருணையிற்
35. கிரமநற் பேறுங் கிளந்த வாயுளும்
பாக்கிய வகையும் பல்கிய சுற்றமும்
தாழ்வுறு வூக்கமுஞ் சமைந்தனை, அதனுற்
சதாபி டேகத் திருநாள் சார்ந்தனை;
இந்நல மெய்துத லெவர்க்கு மியலா
40. தந்நல முறுமிந் நன்னு ளதனிற்
றருமையா தீனத் தொருசற் குரவர்
பெருமை யன்பிற் பிறங்குபு வாழ்நாள்
பற்பல வாண்டு பண்புறப் பெற்றுக்
குலநல னுற்றுக் குலவுங் கிளையுடன்
45. பார்ப்பதி கெழீஇய சீர்ப்பசு பதியென
நன்னர் வாழியர் மன்னியிந் நிலத்தே

வ. உ. சிதம்பரம் பிள்ளை

தூத்துக்குடி

(நீலமண்டில ஆசிரியப்பா)

உலகெலாம் புரக்கு மொருதனிக் கடவுளின்
நலனெலா நிறைந்துள நற்றமிழ் நாட்டில்
திருவா வடுதுறை மருவிவாழ்ந் திருந்த
தீரசிர புராகாப் பெரியநல் வித்வான்
மீனுட்சி சுந்தரம் பிள்ளைபால் மேவி
அமிழ்தினு மினியநற் தமிழிலக் கியமும்
தமிழிலக் கணமுந் தகவுறக் கற்றுச்
சென்னைமா காணக் கல்லூரி சேர்ந்து
தலைமைத் தமிழ்ப்பண் டிதராய் நின்று
தாழ்மா ணாக்கர்க்குத் தமிழ்நூ லுணர்த்தி
ஒப்புயர் வற்றநற் புகழினைப் படைத்தீர் !
தமிழ்நாட் டிற்பல இடங்களி லரங்குள்
ஒளிந்துசெல் லரித்து மறைந்திருள் கிடந்த
சங்க நூல்களைக் கண்டுடனெடுத்துச்
செல்லினை யகற்றி வல்லுரு டனிருந்
திரவு பகலாப் பரிசோ தித்துக்
குற்றந் களைந்து குறைபெய் தவற்றை
அழகிய காகிதத் தச்சிட் டளித்து
நமதுமுன் னோர்கள் தமதுயர் கல்வி
அறிவொழுக் கறமா சாட்சித் திறனெலாம்
நாமும் பிறரு நன்கறிந் தவக்கும்
படியருள் புரிந்த குலமுயர் பெரியீர் !
மகாமகோ பாத்தி யாயர், திராவிட
வித்தியா பூஷணம் தாகூர் ஞத்திய
கலாநிதி டாக்டர் எனும்பல பட்டம்
தாங்கி நிற்குஞ் சாமி நாத
அய்ய ரவர்களே ! அறிவுசால் நீங்கள்
எண்பது வருட மிருநிலத் தமர்ந்து
தமிழ்மக களுக்குந் தமிழ்மொழி தனக்கும்
இடைவிடா துழைத்திவ ணேற்ற மளித்த
நன்றியை யென்று காமற வோமே.
நீங்கள்
இன்னும் பல்லாண் டிவ்வுல கிருந்து
தமிழ்மக களுக்குந் தமிழ்மொழி தனக்கும்
உழைத்து மேன்மே லுதவி செய்து
வரும்படி யாக வலிமையு நலனும்
எல்லாம் வல்ல இறைவன்தங் கட்குத்
தரும்படி யவனருட் டாள்போற் றுவனே,
தூத்துக் குடிவாழ் ஓட்டப் பிடாரம்
சிதம்பரம் என்னுந் திருக்குற ளன்பனே.

பூர்ணலிங்கம் பிள்ளை

முன்னீர்ப் பள்ளம்

தமிழ்த்தாய் போற்றுந் தகைசால் நாதா
தமிழ்மொழி தழைக்கத் தமிழ்ப்பழ நூல்களைத்
தமிழகத் துணையொடு தளரா தாய்ந்து
தமிழர் சிறக்கத் தந்தவெந் தகையே
அரைச்சத காலம் அன்புட னமைந்து
நரைதீ யெய்தினும் நறுந்தமி ழீந்தோய்
கரையிலாக் கவியைக் கருணையி னளித்த
உரைச்சால் உத்தமன், உமையொரு பாகன்
அங்கயற் கண்ணி அழகன்றன் பெயரோன்
பங்கயன் மனைவிப் பதியருள் பெற்ற
நங்கயக் கவிஞன் நன்மீ னாட்சி
பங்கர னெப்ப வெங்கணும் பிறங்குஞ்
சுந்தரக் குரவனைச் சந்ததம் வழுத்தி
பந்த முற்ற புண்புடை இளவற்கும்
தொந்த முற்ற துதிகொள்தோன் றற்கும்
நந்தா வனபெயர் தந்து தலைக்க
மங்கள மோங்குமா கல்யாண சுந்தரா
திங்கட் பிறைபுரை தேம்படு சுந்தரா
எங்கள் கலாநிதி என்று மழைக்க
எங்கணு முலகின் மாமாத் தியாய,
மருவில் புகழுறுமா வித்யா பூஷண,
வருவது வருமெனும் வண்டமிழ் டாக்டரின்
திருவுறு சதாபி ஷேகத் திருநாள்
இருசுட ரருளால் இருநிதம் இயங்குக
பன்னுட் பழகிய பாவலர் நாயக,
நன்னு னதனில் நின்னடி போற்ற
என்னு லியல வில்லை யாயினுஞ்
சின்னுள் தன்னிலே சேர்ப்பரெம் பூரணர்*
புணர்ச்சி பழகுதல் வேண்டா, நட்புரிமை
உணர்ச்சியே தருமென வுரைத்திசி னோரே.

---

* பரிபூரண கிருபேசுரர் — முன்னீர்ப்பள்ளம் சிவன்கோவிலிலுள்ள ஈசன் பேயர்.

ஸ்ரீ அனந்தகிருஷ்ண ஐயங்கார்

ஸ்ரீ வானமாமலைமடம் ஆஸ்தான வித்வான் தென்திருப்பேரை

(பன்னிருசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

சீர்மேவு வேதியர் குலப்பரவை யிற்கலைத்
திங்களென வந்துதித்தோன்
செந்தமிழ்க் கலையினைக் கரைகண் டகத்தியன்
சேட*னிரு விசாகன்லெனன்
தார்மேவு தமிழணங் குக்குமணி மேகலைச்
சங்கநூ லணிதரித்தோன்
சாருமவ ளானனத் திலதமென வாய்ந்தவன்
தன்குருவின் மகிமைமொழிவோன்
பார்மேவு மரசராற் பெரியரால் விருதாய
பட்டங்க ளுற்றபுகழோன்
பதினெறு கலைமதியை யாயிரங் கண்டவன்
பரஞ்சுட ரிலங்குநெஞ்சன்
ஏர்மேவு சாமிநா தையரெனு மபிதானன்
எண்பதாம் பிராயநிறைவாம்
இன்றுநிறை மன்றுளினி லொன்றியா மின்பமுற்
றிறைஞ்சினம னடியையே.

* இருவிசாகர்:—முருகன், நம்மாழ்வார்.

சர்க்கரை இராமசாமிப்புலவர்

தமிழ்ப்பண்டிதர், அண்ணாமலைச் சர்வ கலாசாலை

(அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

அந்தணர்சி காமணியே கல்யாண சுந்தரப்பே
ரண்ண லேயுன்
தந்தையார் திருவடிக்குந் தங்களுக்கு நமஸ்காரஞ்
சதாபி டேகஞ்
சிந்தையார் வத்தொடுநீ செய்விப்ப தறிந்துவந்தேன்
செகத்தோர் போற்ற
வந்தநூற்றை நூறுண்டு வாழ்கவெனச் சிற்சபை
வணங்குவேனே. [யை

(வேறு)

முக்கனி ரசமோ தேவா
முதங்கொலோ தேனே பாலோ
இக்கினி லெடுத்த சாறே
வெனுஞ்சங்க நூல்க ளெல்லாம்
தக்கவா ரும்ந்தச் சேற்றித்
தருஞ்சாமி நாத வள்ளல்
இக்குவ லயத்திற் பல்லாண்
டினிதுவாழ்ந் திருக்க வன்றே.

(வேறு)

பூவார் சமலத் தடங்களெலாம்
பொறிவண் டிழுமுத் தமதான
புரஞ்செய் தவப்பே ரும்வருமூப்
புரிநூல் வாணர் குலதிலகன்
பொன்னி நாட்டில் மன்னியசீர்
பொலியுந் திருவா வடுதுறைவாழ்
பொருவில் பஞ்சாக் கரகுருவின்
பொற்ரு ள் போற்றுந் திருமரபிற்
போந்த பதினெ ரும்பட்டம்
பூனைந்தெம் போல்வார் பவமனைத்தும்
போக்கி யருள்சுப் பிரமணியப்
பூதி யணியு மெதிராஜன்
புகழ்தற் குரிய மதிபடைத்தும்
புராண வி திகா சங்களொடும்
புத்தி மிகுவிற் பத்திதரும்
பொருள்சேர் பிரபந் தங்களெலாம்
பாவார் கவிஞர் சிங்கமெனப்
பகர்மீ ஞட்சி சுந்தரப்பேர்
படைத்த பெரியோன் பாலிருந்து
பாடங் கேட்ட மாணவருள்
டண்பா லிசையாற் புலமையினுற்
பாவன் மையினுற் சீர்த்தியினுற்
படியி லுயர்வொப் பாருமிலாப்
படியாய் வாழும் புண்ணியவான்
பரிதி யொளிநீங் காதிலங்கும்
பாரைப் புரக்கு மரசர்பிரான்
பாலிக் குங்கா லேஜ களில்
படிப்பிக் குங்கால் விடுமுறையிற்
பத்துப் பாட்டெட் டுத்தொகைவெண்
பாமா லையுஞ்சிந் தாமணியும்
பாடும் புறநா னூறுசிலப்
பதிகா ரம்மும் பெருங்கதையும்,
தேவார் மணிமே கலைமுதலார்ச்
சிறந்த சங்க நூல்களையும்
தேன்போ லினிக்கு மூலாக்களையும்
தென்ற லாதி தூதினையும்
திரிடந் தாதி கழுக்குன்றச்
சிலேடை கோவை சிவக்கொழுந்து
தேசி கேசன் பிரபந்தத்
திரட்டும் பிள்ளை யவர்கள்முன்னுட்
செய்த புராணம் பிரபந்தத்
திரட்டு மினும்பன் னூலுடனே
தியாக ராசர் சொக்கேசர்
செய்த லீலை களும்பழனிச்
செவ்வேள் பிள்ளைத் தமிழ்தக்கன்

செய்த யாகப் பரணிகொடுந்
தீய பாச வதைப்பரணி
திறன்மே வியநன் னூலுரையும்
சேவார் பரம சிவனருளாற்
செகத்தி லுளபண் டிதர்வீடு
தேடித் தேடித் திரிந்தலைந்து
சேம நிதிபோ லவர்களெலாஞ்
சேர்த்து வைத்த வேடுகளிற்
சிதலுண் டவற்றி னுண்மையுருத்
தெரிந்தச் சேற்றித் தருமிய
செயலாற் கல்வி யுலகோரும்
செங்கோல் வேந்தர் வேந்தர்களுஞ்
சிந்தை மகிழ்ந்து தருப்பட்டஞ்
சிறக்கப் பெற்ற கண்ணியவான்
செய்ந்நன் றிகளே மறவாதா
தீனத் துடனெஞ் சேதுபதி
செங்கோல் செழிக்கச் சிந்தைசெயுஞ்
சீமான் சாமி நாதகுரு
செயம்பெற் றூழி வாழியவே.

கா. சுப்பிரமணிய பிள்ளை, M. A., M. L.

தலைவர் - மணிவாசக மன்றம் - திருநெல்வேலி

மாபெரும் போதக, மாண்நுண் புலவ,
தாவில் தமிழ்க்கலைக் களஞ்சியத் தலைவ
யாவரு மகிழ்தா இனியவை கூறலில்
தேவரு நிகரிலாச் சீர்நிலத் தேவே
ஆவியிற் சிறக்க அறநெறி போற்றும்
காவியப் பயன்றெரி கடவுள்நல் லன்ப,
அமைதிசால் வடிவ அழிவிலா உழைப்பினின்
தமிழ்ப்பெருந் தொண்டு தமிழ்ப்பே ருலகில்
அறியார் அறியா ராதலி னவைபல
அறைதல் மிகையாம் அமுத நம்மொழித்
தாயுள் ளளவுந் தயங்குக நின்புகழ்
ஆயுள் நீடுக அருந்தமிழ் நலம்பெற
வன்றிறல் மிக்கு வயங்குக மேனி
என்றிறை பணிதல் விழைந்தேன் யானே.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தார்

திருநாண் மங்கலம்

பூவிரி சோலைக் காவிரிப் புனலுள்
தோய்ந்துளங் குளிர்ந்து தோன்று குடமுனிப்
பொதியச் செந்தமிழ் மதியச் சந்தனம்
பூசிப் புனைந்து வீசிப் பரந்த
கலைதரு சீர்த்தி கவின வுடுத்து
மதியணி வேணீ மாபெருங் கடவுள்
துதியமு துண்டுவருந் தோலா நாவினே !
தமிழ்ப்பா லுண்ணலின் தமிழ்மக வாயினே !
தமிழ்நலன் நுகர்தலின் தலைவனு மாயினே !
தமிழ்தரு நலத்தால் தாயு மாயினே !
தமிழுட லாகி னீயுயி ராகுவை
தமிழுயி ராகி னீயுட லாகுவை
தமிழையா ழாக்கித் தமிழ்ப்பா வீசைக்குவை
நினையா ழாக்கித் தமிழுமிசை யெழுப்பும்
என்புநெக் குருக்குந் தென்கலைத் திருவினே !
சீரா னுயர்பெரும் பேரா சிரியனே !
பெரும்புகழ் படைத்து வரும்பே ரறிஞனே!
ஆனைப் புலமை மீளுட்சி சுந்தரப்
பாற்கட லிருந்து மேற்கலை முகந்து
சொல்லே ருழவ ரெல்லாரு மேத்தித்
தத்தம் புலங்களின் முத்தமிழ்ப் போகமும்
வருந்திமுயல் கிலரா யிருந்துவிளை வெய்த
மடியாக் குணமலை முடிமே லிருந்தே
ஆய்ந்தகரு முதலா வேய்ந்தவை முற்றி
முன்னு மின்னலால் துன்னு மிடியால்
துன்பிலா துலக மின்புற வொளிசெய்
தின்னுரை யியம்பி மன்பதை மகிழ்கொள
நூன்மழை பொழியுந் தேன்குரல் முகிலினே !
பொருந்துநின் குருவின் திருந்துவர லாறெனும்
விருந்தமு தூட்டிய பெருந்தமிழ் வள்ளலே !
கடல்புக் கொளித்த புடவிதரு மல்போற்
சிலந்தி வலைக்குட் சிதலுணுஞ் சங்கப்
பனுவற் கச்சிந்து பவனிவரச் செய்தனை !
மணிமே கலையணிந்து மாண்புறச் செய்து
சிலம்பணி யணிந்து சிந்தா மணிமுடிக்
காவிய வுலகெலாங் களிகொளப் புனைந்து
வருங்கவ லகலப் பெருங்கதை யுரைத்துப்
புறமெலாம் புதுக்கித் திறனெலாங் காட்டிப்
பதிற்றுப் பத்தெனு மன்னரும் பரவ
ஐங்குறு நூறு மகங்குழை யன்பரும்
மங்கலப் பாட்டு மனம்பரி பாடல்
அந்தா திகள்முத லாகிய சுற்றம்
வந்தடி போற்ற வயங்கு நன்னூல்
மங்கலம் புனைந்து மயின்மே லிருத்திப்
புத்தமு தொத்த முத்தமி ழரசிக்குச்
செய்யாச் சிறப்பெலாஞ்செய்துகண்டுவக்குநை!
நான்மறை ஞான தேன்மழைத் தாமரைத்

தாரினே ! காரினே பெள்ளுந் தமிழ்க்கலைக்
கொடையினே யொள்ளிய நடையினே வைதிகச்
சைவம் பழுக்குந் தெய்வத் தருவினே !
ஏமஞ் சான்ற இளந்தமிழ் புரந்துவரு
சேமஞ் சான்ற சரமி நாதனும்
ஒருபெயர்பூண்டமைக்கொப்பத்தமிழ்புரக்குநை!
நன்றுதரு மியற்றமிழ் நவின்றவ ரெல்லாம்
அன்றுதொல் காப்பிய ஞணைவழி நின்றதின்
இன்றுநின் ஞணைவழி யியங்குமா றியக்கினே !
ஒங்குது மெனத்தமி ழொருவினை ராகி
ஆங்கிலம் பயின்ற வறிஞரு நின்னருட்
பாங்கடைந் தய்வான் பணிந்துவரு சிறப்பினே !
காதுள் வெதுப்பினுங் தீதுநீ கொளாது
ஓதி யின்னுரை உவக்குநை ! இன்றுநீ
ஈண்டெண்ப தாவ தாண்டுநிறைந் தனையெனத்
தாண்டுமேலை யுடுத்த தமிழக மெல்லாம்
பெருகா ளாகப் பேணிப் புரியுநின்
திருநாண் மங்கலத் தொருமாண் சிறப்பும்
பூண்டு வேண்டிய வேண்டியாங் கெய்தினே !
ஐய !
நின்னுறு பிறப்பே நிறைதமிழ்ப் பிறப்பே;
நின்னுறு பேறே நிலவுதமிழ்ப் பேறே;
நின்னுறு வாழ்வே நெடுந்தமிழ் வாழ்வே; [சேட
நினக்குச்செய் தொண்டே நிலைதமிழ்த் தொண்
டீபுரி யருளே நிறைதமி ழருளே; ஆகவின்,
இருசுட ருலகுக் கொருநீ யாகி
ஒருபே ராற்றலும் போற்றி வருதூ(றை)
ஆயுளும் வேத வாசியு மடைந்து
நாவா லரனெழுத் தைந்தையும் நவின்று
பூவா லனடிப் போதினை புனைந்து
செந்தமிழ் வண்மையும் வந்தமை கண்மையும்
மறுது வழங்கி யறுது புரந்தே
இன்ன லின்றி யின்பெலா மெய்தி
மன்னுக பெரும வழிவழி
ஒன்றுங் கன்னித் தமிழுட னுவந்தே.

யாழ்ப்பாண ஆரிய த்ராவிட
சங்கத் தியலவைதீர்க்
கீழ்ப்பாலிற் ரோன்று தமிழா
தவனுக் கிளரொளியோன்
ஊழ்ப்பாலின் மேன்மை யுயர்சாமி
நாதைய வுத்தமற்கு
வாழ்த்தாகு மங்கலத் தோடுவெண்
பொன்னும் வழங்கியதே.

(நவநீத கிருஷ்ண பாரதியார் இயற்றியவை.)

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்

(கி. இராமாநுஜையங்கார் இயற்றியவை)

1. பூமடந்தை பொலிவுபெறப் புகழ்மடந்தை
களிகூரப் புலவர் போற்ற
நாமடந்தை நலஞ்சிறக்க நல்லவர்பல்
லாண்டிசைக்க நன்மை சான்ற
பாமடந்தை யுளங்குளிரப் பைந்தமிழ்செந்
தமிழாகும் பான்மை மேவ
நாமடைந்த பெரும்பேற்றுல் எல்லோருங்
கொண்டாடும் நன்னு ளிந்நாள்.

2. பல்லாண்டு பயின்றுலும் பொருளுணர்தற்
கரியதமிழ்ப் பனுவ லெல்லாம்
இல்லாண்டு பயில்பவருந் தெரிந்துரைக்கப்
பொறித்தளித்த தேசான் மிக்கோன்
சொல்லாண்ட தமிழ்ப்புலமைச் சாமிநா
தப்பெரியோன் தோன்றி நீண்ட
நல்லாண்டு நாலிருபா னெனநிகழா
நின்றதிந்த நன்னுண் மன்னே.

3. முதலேவாய்ப் படுகளிறு காத்தளித்த
முகில்போல முதுநூ லெல்லாம்
சிதலேவாய்ப் படுமளவி லிறவாது காத்தளித்த
செம்மல் அம்மா !
குதலேவாய்ப் படுமினிய தமிழ்மொழியின்
குற்றேவல் கொள்ளாற் கேற்ற [சொல்ல
மதலேயாய்ப் பணிபலவும் புரிந்தனனுல்; அவை
வல்லார் யாரே.

4. கற்பினுயர் கலைமகளுக் கினியபொரு
ளுரைபலவும் கற்பித் துள்ளோன்
அற்பினுயர் மாணவருக் கருந்தமிழ்நூற்
பொருளனைத்தும் அளிக்கும் நீரான்
பொற்பினுயர் கவிபாடும் புலமையினும்
தலைமையுளோன் புவியுள் ளோர்கள்
பிற்பினுயர் வடையும்வகை நூல்பொறித்தீந்
திடுதிறத்தும் பெரியோ னுமால்.

5. பாராரும் இறையருளி யிடும்பெருமே
ராசிரியப் பட்டம் பெற்றேன்
ஏராரும் உலகதரு வார்மதுரைத்
தமிழ்ச்சங்கத் தினிதின் ஈந்த
சீராரும் தாக்ஷிணத்தீ யகலா
நிதியெனும்பேர் சிறந்தோன் கென்னே
ஊராரப்பல் கலைகீசமும் உதவிய
டாசீடரீப் பெயர்பெற் றுயர்ந்தா னன்றே.

6. எக்காலத் தமிழ்ப்புலவர் சரிதமும்நன்
கறிந்துரைக்கும் இயல்பு வாய்ந்தோன்
தக்கார்கள் மதிக்கும்வகை யாசிரிய
னிடத்தன்பு சான்றோன் றன்பாற்
புக்கார்கள் தமிழறிவிற் சிறியரா
யினும்உதவி புரிந்து போற்றும்
மிக்கான்மற் றெவர்செய்த சிறுநன்றி
யையுமறவா மேன்மை யோனே.

7. இந்நாளி லிவன்பெருமை யியம்பலெளி
தோஅதனுள் ஏக தேசம்
சொன்னலும் அவைமுழுதும் உலகம்அறிந்
தனவாகும் தூலவே றில்லாத்
தன்னலும் சொலற்கருஞ்சீர்ச் சாமிநா
தேந்தலுக்குத் தமிழ்நா டெல்லாம்
எந்நாளும் நன்றிபுரிந் தினிதிருத்த
லன்றிமற்றொன் றியற்றற் பாற்றே.

8. தொதியவரை யிருந்ததமிழ் புரந்திருந்
தகத்தியனே புவியின் மீட்டும்
மதியினுயர் தமிழ்தழைய வந்ததித்தா
னெனப்புலவர் வழுத்து மாறு
புதியமுறை யினிற்பலசெந் தமிழ்நூல்கள்
ஆய்ந்தச்சிற் பொறித்து கல்கும்
நிதியனைய புலவர்பிரான் சாமிநா
தப்பெரியோன் நெடிது வாழி.

9. தென்மொழியாய் வடமொழியாய் நின்றருளும்
புல்லாணித் திருமால் பாதம்
இன்மொழியாற் றுதிநாக நாதனெனும்
சேதுபதி யினிது வாழி
பன்மொழிமாந் தரும்பரவ நிலவுலகம்
ஒருகுடைக்கீழ்ப் பரிபா லிக்கும்
மன்மொழிசேர் ஐந்தாம்ஜார்ஜ் ஜரசர்பிரான்
செங்கோல்எந் நாளும் வாழி.

பண்டித ஹரிஹரையர்

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையாசிரியர்

1. தண்டமிழ்க் கடலின் மூழ்கித்
தனிப்பெரு நிதிய மாகும்
பண்டைநூல் கொழித்தெ டுத்துப்
பயன்பெறச் செப்ப னிட்டே
ஒண்டமி ழுலகிற் கீந்த
வுத்தம தானம் வாய்ந்த
திண்டிறற் சாமி நாதன்
திருவளர் மாலே யாமால்.

2. சொன்னலம் பொருணு லங்கள்
தவன்றிய தமிழா ராய்ந்து
தன்னலங் கருதா தற்ற
தனிப்பெரு மிடர்கள் தாங்கிப்
பன்னுநூ லமுத மீந்த
பான்மையிற் சாமி நாதன்
தன்னிய கடுவை யேற்றுச்
சுதைசுரர்க் கீந்தோ னுவான்.

3. கலைவளந் தனக்கே யுள்ள
கலைமக ளுறைத லாலும்
நிலைபுள மறையோ னென்ன
நிகழ்த்திடும் பான்மை யாலும்
உலைவறத் தவஞ்செய் தோர்சட்
குணமைநூ லுரைத்த லாலும்
கலைநிதிச் சாமி நாதக்
கலைஞனும் பிரம னுமால்.

4. சொற்றவிந் நிலைமை யோர்ந்தே
தூரைத்தனத் தார்க ளீந்த
மற்றைய சிறப்பி னோடு
மஹாமஹோ பாத்தி யாய
நற்பெரு விருதும் ஏற்று
நாடெலாங் கலைச்சங் கத்தார்
பிற்பட வளித்த டாக்டர்
எனும்பெரு விருதும் பெற்றோன்.

5. நாடருங் கலைக ளாய்ந்த
நற்றவன் சாம கோடி
பீடமார் முனிவ னன்னோன்
பெருமைதேர்ந் தன்பி னீந்த
பாடமர் தாகூ ஜூத்ய
கலாநிதிப் பட்டம் வாய்ந்தோன்
நீடுறு மாயுள் பெற்று
நிலவுக புவியின் மாதோ !

வேறு.

6. பண்புறு மஹாமஹோ பாத்தியா யப்பெருமை
டாரித்த சாமி நாத
அண்ணலுக் கெண்பதாம் ஆண்டுநிறை
வுற்றவிவ் வரியதிரு நாளை யன்பர்
நண்பரொடு கூடியே கொண்டாடி மோக்கமும்
நன்குநிறை வுறுக வன்னோன்
சண்முகக் கடவுள்போ லென்றுமிளை யாஞைய்த்
தமிழ்ச்சுதை யருந்தி வாழி.

சு. நல்லசிவம் பிள்ளை

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலை

க. அருளொரு வடிவ மாகி
அவதரித் தெனவென் போல்வார்
பெருநல னடையத் தோன்றிப்
பிறைதவழ் சடிலத் தெம்மான்
திருவருள் பெரிதும் பெற்றுச்
சிறப்புறு சாமி நாத
குருவிவண் சதாபி டேகம்
கொண்டனன் வாழி மாதோ.

வேறு

உ. உத்தம தான புரம்புரி தவமும்
உலகினி லறிஞர்செய் தவமும்
முத்தமிழ்ப் புலவோர் புரிபெருந் தவமும்
முறைமுறை யொருங்கியைந் ததனால்
வித்தக மறையோர் மரபினி லுதித்து
வேந்தரும் விழைந்திட மேலாம்
புத்தமு தனைய சங்கதி லெளிதிற்
புவியிலென் போல்பவ ருணர.

ஊ. பற்பல தேயஞ் சென்றவை தேடிப்
பரிவுடன் கொணர்ந்துபன் னூலா
அற்புட னுய்ந்து மிகப்பரி சோதித்
தவனியோர்க் களித்திடுங் கருணை
விற்பன முகிலுக் கியாஞ்செய்கைம் மாறும்
வேறுள தோபல நூற்ருண்
டுற்பவ மொடுக்க மிலான்றிரு வருளால்
ஊழிதோ றூழிவா ழியவே.

வேறு

எ. சென்னையினிற் றிருவேட்டீ சுவரம்பேட் டைநிகழ்பிள்ளை யார்கோயிற் றெருவிலறு பானேழ்
என்னுநெம்பர் பெறுதியாக ராஜவிலா சத்தில்
இறைவர்மகிழ்ந் ததவுமகா மகோபாத்தியாயத்.
தன்னிகரில் பட்டமுடன் றிராவிடவித் யாபூ
ஷணதாகஞ் ஞத்யகலா நிதிடாக்ட ரென்ன
மன்னர்புகழ் பட்டமுமெய் தியசாமி நாத [வே.
வரதனெண்பான் வருடவிழா வாழியவா ழிய

ஏ. மங்களமாம் பவவருடம் மாசித்திங் களினில்
வாய்ந்தவிரு பானிரண்டு திகதிபுந்தி வாரம்
தங்குதிதி துதியையுத்த ரட்டாதி நாளிற்
சாரிடப வீலக்கினத்திற் றக்கசதா பிடேகம்
திங்களணி பரனருண்மிக் குறுசாமி நாதத்
திருப்பெயரா ரியனெய்திச் சிறந்தனனீ தே
[போற்
செங்கனக முடியரசர் புகழபிடே கங்கள்
செகத்திலினும் பலவடைந்து சிறப்புடன்வர
[ழியவே !

ந. பலராம ஐயர்

செந்தமிழ்த்தீம் பாற்கடலிற் றெள்ளித் தெளித்தபல
நந்தலிலா நன்மணிக ணல்கியசீர் - எந்தாய் ! நீ
நாழிநவை தீருலகில் நாலிருபா ஞண்டுங்கும்
வாழியநீ டூழி மகிழ்ந்து.

கே. ஜி. சேஷையர்

திருவனந்தபுரம்

சீர்மேவு தமிழ்ச்சங்க நூல்பலவிற்
நாளெங்குந் திகழ்ந்தோங்கிச் சிறக்கச் செய்து
பார்மேவு புகழடைந்தான் பண்டிதனும்
பாமானும் சாயல்கண் டொருங்கே போற்ற
நீர்மேவு நிறமடைந்தான் நற்குணத்தான்
நாவலரே ருஞ்சாமி நாத வள்ளல்
பேர்மேவு சதமானம் பெற்றோங்கும் [நானே.
புண்ணியன்றன் அடிபணிந்தேன் கடையன்

வே. முத்துஸ்வாமி ஐயர், எம். ஏ., எல். டி.

டிப்டி இன்ஸ்பெக்டர், முசிரி

(அறுசீர் விருத்தம்)

தூலமாட்சி குடிமாட்சி குணமாட்சி கொழுங்கலைச்சீர்
கூரும் சிந்தை
நலமாட்சி நாமாட்சி நயத்தகமா ணவர்தம்மை
நாளும் தேற்றும்
புலமாட்சி பலதமிழ்நூல் பொற்புறப்பே ராராய்ச்சி
புரிந்தச் சேற்றும்
வலமாட்சி வளர்சாமி நாதகுரு ! நின்மலர்த்தாள்.
வணங்கி யுய்வாம். (1)

தேனுட்சித் தமிழ்க்கடலின் செறிவுவிரி வாழமெலாம்
தேக்கி வீறும்
மீனுட்சி சுந்தரப்பேர் மிளிர்துறைசைக் கவியரசை
மேவி நெஞ்சம்
தானுட்சி கொண்டுசெவைத் தமிழ்மாந்திச் சிடர்குழாத்
தலைமை பூண்டு [ணல் !
வானுட்சி மீன்கணத்து மதியெனஅந் நாள்அண்
வயங்கி நின்ருய். (2)

சேணவிரும் நின்புலமை சிறவயது
முதற்சிறத்தல் தெரிந்தே கும்ப
கோணஅருங் கலாசாலைக் குலவுதமிழ்ப்
பண்டிதனைக் கொண்டார் ஆங்குத்

காணவரும் உரைநயங்கள் கணிப்பில்மா
ணாக்கர்க்குக் காட்டிச் சென்னே
மாணவர்செய் தவப்பயனு மாகாணக்
கல்லூரி மதிக்க வந்தாய். (3)

எந்தாய்! நின் புலமைவளத் தியல்செயலா
தியளவியேம் என்சொல் கிற்பேம்!
சிந்தாம ணித்தலைநூல் சிலப்பதிகா
ரப்பெருநூல் சிறக்கச் சொல்லும்;
நந்தாத உரைமணிமே கலைஎன்னூல்
பெருங்கதைநூல் நவிலும்; சங்கம்
மூந்தாரும் புறம்பதிற்றுப் பத்துப்பத்
துப்பாட்டு முழக்கம் செய்யும். (4)

பழையதிரு விளையாடல் தக்கயா
கப்பரணி பகரும்; கற்றோர்
விழைதியாகர் லீலைதிருக் காளத்திப்
புராணமிவை விரிக்கும்; செய்யுள்
மழைபொழிஆ சான்பிரபந் தத்திரட்டும்
அவன்சரிதை மாண்பும் சாற்றும்.
கழைவருசா றெனப்பலவாக் 'கலைமகள்' சார்
கட்டுரையும் கழறு நிற்கும். (5)

இவையன்றி இறையளித்த 'மகாமகோபாத்
தியாய'ப்போர் இசைந்த பட்டம்
சுவையறிசென் னைச்சருவ கலைச்சங்கம்
'டாக்ட'ரெனச் சூட்டும் பட்டம்
நவையறுசங் காகுரு 'தாக்ஷிணாத்யகலா
நிதி'யென்று நாட்டும் பட்டம்
குவையொன்றித் தமிழகத்தெம் ஐயரவர்
கள் பெருமை குறித்துக் காட்டும். (6)

சங்கமுறு புலவர்புர வலர்வீரர்
வள்ளன்மார் சரிதம் சான்ற
தங்கமுறு பலப்பலநற் றொகைநூல்கள்
அகம்புறமாந் திறைகள் ஆய்ந்து
பங்கமற வகுத்திலேயேற் பழந்தமிழர்
சரிதமெலாம் பார்க்கிற் பாரில்
எங்குமிருட் பிழம்பன்றே? இரவியெனக்
கலைக்கதிரால் இலக்கம் செய்தாய். (7)

பூமிநா டுஞ்சோணு டுன்னுடித்
தமதான புரமூர்; கீதத்
தோமிலு வேங்கடசப் பிரமணியர்
சரஸ்வதியார் துலங்கு பெற்றோர்;
தாமினார்க் கும்பொறைசூழ் சற்குருநின்
குருவானான்; தகைசால் நின்பேர்
சாமிநா தன்; பணிசெந் தமிழ்; சுற்றந்
தழுவிநின்போல் தழைத்தார் யாரோ? (8)

[தோமில்நா; தோம்—குற்றம், தாம் இனார்க்கும்—
இன்னார் தமக்கும், பகைவருக்கும்.]

தளர்ந்தனையால் நின்உடலம் தான்சிறிதென்
றுலுமுளம் சலியா வூக்கம்
தளர்ந்திலை;நூ லாராய்ச்சித் தளர்வின்மை
தனுவினலம் தாங்கி ஆயுள்
வளர்ந்திடக்கா ரணமென்று போப்பையர்
வகுத்ததிரு வாச கத்தால்
அளந்தனைநீ; அதனையுன துருநிலையிற்
கண்டவகை ஆர்கின் றோமால். (9)

உண்பதிலும் உடுப்பதிலும் உறக்கத்தும்
கனவினிலும் உலவா தென்றும்
பண்பிதுவென் றேதமிழின் பணியாற்றும்
பெரியோய்! நீ பல்லோர் போற்ற
எண்பதெனும் வயதுற்றாய்; திசைபோய
இசைமேவி இனிதுன் வாளுள்
வெண்பதும மாதருளால் வியன்மயிலைக்
கடல்மணலின் மிகுக மாதோ. (10)

(நேரிசை வெண்பா)

வாழி தமிழ்நாடு; வாழி தமிழ்நூல்கள்;
வாழி தமிழ்ப்புலவர் வையத்து;—வாழிதிரு
வேட்டீச் சுரனருளால் வே. சாமி நாதவள்ளல்
நாட்டார் பரவ நயந்து. (11)

ஊ. சா. வேங்கடராமையர்
கும்பகோணம்

சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியே
முந்துத வாதபன் னூற்றொகை முற்றும்
தந்துத வப்புரி தண்ணளி யதனால்
வந்தவ தரித்த மறையவ னுருவென்
நடியனேன் போற்று மாதருள் புரியும்
தண்டமிழ்த் தேவே மண்டலம் போற்றும்
கண்டுநேர் சொல்லால் பண்டுள புகழைத்
தந்தருள் சுரக்கும் சற்குரு மணியே!

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை
திருநெல்வேலி

செந்தமிழ்த் தாயேயுன் சீரார் திருவுருவின்
முந்தைப் பணிகளாம் முன்னூல்கள்—அந்த
கூடு புகழ்க்குரிய கோசாமி நாதையர்
நீடுழி வாழவருள் நீ.

கு. குமாரசாமிப் பிள்ளை

பவானி போர்டு ஹை ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

(நேரிசையாசிரியப்பா)

சீர்சால் வேத சிரத்துமெய் யடியார்
உளத்து மம்பலத் தலத்து நடிக்கும்
உமையொரு பாகன் எமையரு ணுதன்
ஆலவாய் மேய தூயவா லறிவன்

கழகத் தமர்ந்து திகழவா ராய்ந்த
செந்தமிழ் நூற்கட லினேத்தாடு புனித !
ஆவடு துறைசை மேவுமா தீன
மகாவித் வானெனு மகானிடத் தினிலும்
தியாக ராஜச் சீமா னிடத்தும்

தமிழறி வறிந்த தகைசால் பெரியோய் !
சாமிநா தப்பேர் சாரந்த ஞான !
ஆங்கில மன்னர் ஆய்ந்தளித் தருளும்
மஹாமஹோ பாத்யாய மல்பெய ருடனே
உயரிய டாக்டர்என் றுறுபெயர் தாங்கும்

உத்தம! சேரர்கோ வுரைமுத் தமிழ்செறி
சிலப்பதி காரமுஞ் சீர்மணி மேகலை
பத்துப் பாட்டொடு பகர்ந்நி தாமணி
ஐங்குறு நூறும் அணிபுறப் பாட்டும்
ஓங்குபரி பாடல் உயர்புற வெண்டா

ஆலவா யரன்புகழ் அறைவினை யாடலும்
இன்னும் பலப்பல விலக்கிய விலக்கணத்
தொன்மைநூல் யாவுமித் தொல்லுல கறியவும்
பண்டைப் பெருமை பசப்பினை யச்சில்
ஆதரிப் பவரிலா தயர்ந்த தமிழை

அமிழ்தினு மினியதாந் தமிழ்மொழி யதனைத்
திருவருள் பெறுநந் தெய்வத் தமிழை
ஓரா திகழு முயர்குண மிலிகளும்
தமிழும் உயர்ந்த தாமென மொழியவும்
செந்தமிழ் நாடே சீரிதென் றுரைக்கவும்

எம்மையு மொருவரென் றெண்ணவும் கருணை
புரிந்தபே ராண்மைப் புனித!நிற் கியாங்கள்
செய்கைம் மாறு தெரிகிலே முரைக்கில்
வானிற் குலகு வழங்கலொப் பைய !
எண்பத் தோராண் டிப்புவி வாழ்ந்தபோல்

இன்னும் பல்லாண் டின்பொடு முலகில்
மகாரின் மகாரின் மகாரின் மகாரொடும்
வாழ்ந்து தமிழெனு மங்கை யணிதற்
கணிகள் திருத்தி யணிந்து
தணிவில்சீர்ப் புகழொடுஞ் சார்ந்துவா ழியவே!

எல். ஸ்ரீ நிவாஸ ஐயர்

விக்டோரியா கலாசாலை, பாலக்காடு

1. செந்தமிழ் நூல்கள் சிதலைவாய்ச் சேராமே
வந்தெடுத்து வாழ்வளித்த வள்ளலாம்—மகார்
[தவிழ்தார்ப்
பூமிநா தர்சொல் புலவர் பெருந்தகையாம்
சாமிநா தையரென்பர் தாம்.

2. திருமுறைகண்டநஞ் சென்னியர்கோன் சங்கத்
தருமுறை நூல்களழி யாதோர்—உருவுறவே
சாமிநா தையனெனுந் தக்கோனாய் வந்தனன்
பூமிசெய்த புண்ணியமே போல். [காண்

3. சிந்தா மணியுஞ் சிலப்பதி காரமும்
நந்தா மணிமே கலையும்நம்—விந்தைதவழ்
கொங்குவேண் மாக்கதையுங் கூறுவதும் நா
இங்கிவன்றன் னின்னருளின் றேல். [மெங்கே

4. பத்துப்பாட் டோடு பரவுதொகை நூல்பலவும்
எத்திக்கி னுந்தேடி யேகொணர்ந்து - வித்தி
வினைத்தவா போல விளங்கவிரித் தாயுன்
வளமதை யென்சொல்வேன் மற்று.

5. கைம்மாறு நோக்காது கல்விக் கடல்குடித்து
மெய்யாங் கலைவளர்க்கும் மேன்மையினால்—
[வையகத்தே
சீர்மேவு சாமிநா தையபூ தேவவுனைக்
கார்மேக மென்றேன் களித்து.

6. சங்கத் திருப்பதனால் சற்குருவாய் வந்ததனால்
தங்கத் தமிழ்வளர்க்குந் தூய்மையினால்—
[பொங்குபுகழ்ச்
சாமிநா தப்பேரால் தக்கோ யுனைமுருக
னுமெனவே சொன்னே னறிந்து.

7. பொன்னே கொடுத்தாலும் பூமி கொடுத்தாலும்
என்ன கொடுத்தாலு மென்பயன்காண்—மன்
[னுந்
தமிழ்நூல்க ளென்னுந் தனியமுதந் தந்தாய்க்
கிமிழ்நீ ருலகில்நே ரில்.

8. கைம்மா றியற்றக் கடவேம்யா மல்லேங்காண்
மெய்யாய் முகில்நிகர்க்கும் மேலோய்நீ—
[வையகத்தில்
நாடோறு மாயு ணலம்வளர நற்றமிழ்க்காய்
நீடுழி வாழி நிலைத்து.

9. மூன்றை மறைவாழி மூன்னூன் முனிவாழி
செந்தமிழ் வாழி திருவாழி—சந்ததமும்
தாமரைப்பூந் தார்மார்ப சாமிநா தப்பேர்கொள்
மாமறையோய் வாழி மகிழ்ந்து.

சிவத்தியாகனந்த மஹர்ஷி

வாழ்த்துப் பஞ்சகம்

(அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம்)

1. தன்னெஞ்சத் தெரியோர்கள் பிறரில்லாப்
பெருமையினன் தன்மை யாளன்
என்னெஞ்சத் தார் இவன்நீலயே வேண்டுமென
ஈசனிடம் இரக்க நின்றோன்
மின்னெஞ்சத வாழ்வெனும்சொல் பொய்எனவே
வெளிப்படுத்தும் மேலோன் யோகி
பொன்னெஞ்சத பெருவாழ்விற் பொருந்திஇவண்
புகல்வதற்கோர் சுட்டாய் நிற்போன்.

2. நூல்வழியே புந்திதனே நுழையவிட்
டந்திபகல் நண்மை காணு
தேல்வழியே அதுதுலைக்குங் கேடமென
எக்காலும் என்று தன்சீர்
வேல்விழியார் காணுத படிமறைத்துக்
தன்னுழுக்கம் மேலே ஒங்கக்
கோல்வழியே செல்லும்அர சுவப்டனசெய்
தவற்கன்பிற் கூடி நின்றோன்.

3. நாவலரின் சிங்களதா மோதரத்தின்
நாடறிய நன்னூல் தம்மைப்
பாவலர்கள் புகழுமா றச்சுவா
கனமேற்றிப் பாந்த கேள்விக்
கோவலவர்[2] கோன்மொழியின் ஆணிஎனக்
கூறவல கூற்று வாய்ந்தோன்
மேவலர்க ளும்மதிக்கும் போராளன்
சற்குருவை மேவிக் கற்றோன்.

4. சாமிநா தப்பெயரோன் டாக்டரொடு
[3]பெருப்பெருத்த சாமி என்னும்
வாமமார் பட்டங்கள் மலிந்தவன்பல்
பெரியாரும் மகிழ வாழ்வோன்
சேமமா ரெண்பதிற்றியாண் டிவ்வுலகில்
வாழ்ந்துவளர் சீர்மை ஒன்றே
எமமாய் எல்லோரும் தொழுந்தகைமைக்
கேலும்என[4] இயம்பும் நூலே.

5. ஊர்கூடித் தள்ளும்சீர் செறிஉலகின்
அதுவிடுத்திங் கொருவனேநின்
றேர்கூடும் பன்னூல்கள் அச்சிட்டு
வாழ்நாளில் இன்னும் பல்ல
சீர்கூடும் பெருநூல்கள் வெளியாக்கும்
கங்கணக்கை செறிந்தோன் நூறு
பேர்கூடும் பெருமாரிக் காலங்கள்[5]
திடவாழ்விற் பிறங்க நன்றே.

1. சிங்களத்தை ஈடுநிலத் தீவகமாகக் கொள்க. சிங்கள [ஆறுமுக] நாவலர், சிங்கள தாமோதரம் பிள்ளை என இணைக்க.

2. கோவலவர் கோன் - இருட்டினன்; அவனது மொழி பகவற்கீதை.

3. பெருப் பெருத்தசாமி என்றது மஹாமஹோ பாத்தியாயர் என்ற பட்டத்தைக் குறித்தது; முருகனேத் தகப்பன்சாமி என்னும் வழக்கை நோக்குக

4. எழுபது வயதுக்கு மேற்பட்ட ஒருவனைச் சாதி மதம் முதலிய வேற்றுமைகள் பாராது தெய்வம்போல மரியாதை செய்யவேண்டும் என்பது ஸ்மிருதி வாக்கியம்.

5. பெருமாரிக் காலங்கள் என்பது சரதச்சதம் என்னும் வேதவழக்குப் போன்று வருடங்களை உணர்த்தி நின்றது.

—லோகோபகாரி, 7—3—35.

வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

நாகபட்டினம்

இமிழ்ப்பண் நிலைஇய தமிழ்ப்பெள வத்தின்
அமிழ்தினை யென்போல் அடைந்தவர்க் குதவிய
தோமில் சாமி நாத ஆரியன்
அடிமலர் மூடிக்கணி ஆக்குவன் மகிழ்ந்தே.

1. அக்கால உலகினகம் புறம்யாவும்
அறிவென்னும் அலத்தாற் கிண்டி
மிக்கான பொருண்மணிகள் புறம்போக்கி
அகங்கடொறு மிளிரச் செய்து
தக்கார்கள் கொண்டாடத் தமிழ்ச்சரிதப்
பயன்விளைக்குச் தகையோய்! நின்னின்
மிக்கான பேருழவன் உளனென்று
மிவ்வுலகம் விளம்ப வற்றே!

2. கறங்குதிரைக் கடல்ஞாலக் களிப்புறவைக்
குறுநூறும் கனிந்த செஞ்சொற்
புறங்குலவு நானூறும் பொருவின்மணி
மேகலையும் புனித மாய
திறங்குலவு பொருண்மையைத் தக்தருள்சிக்
தாமணியும் செம்மை யோடு
பிறங்கவளித் தனேயென்ற லுன்னேவிடப்
பெருவள்ளல் யார்தா னேயா!

3. பெருநூல மிகத்தேடி யலைதலினும்
பிழைதீக்கிப் பொருளின் பெற்றி
உருவாகச் செய்தலினும் உற்றபெரு
வருத்தமெலாம் உருகும் வண்ணம்

திருவாரும் பெருங்கதையின் முகவுரையிற்
செப்பியதாற் றெரிந்திந் நாட்டிங்
கொருவாறுங் கைம்மாறு காண்கிலதா
லொருவழிநீ யுரைத்தல் வேண்டும்.

4. தேனூட்சி பெறுநாவான் செவ்விதின்மா
ணவர்க்குரைக்குஞ் செம்மை யாளன்
மீனூட்சி சுந்தரவா சான்பெயரை
விளம்பல்பெருங் குற்ற மென்று
தானூட்சி பெறப்பிள்ளை யவர்கள்எனச்
சாற்றுமுரை யானுங் கேட்டு
யானூட்சி பெறவையர் அவர்களெனச்
சாற்றுவதே யானுங் கொண்டேன்.

5. என்னுசான் நின்னிடத்தே இனியகுரு
பத்திமிக இலங்கக் கண்டேன்
பொன்னுன சொற்செயலா லனைவரையும்
பரவசிக்கும் புனிதம் கண்டேன்
மூன்னுகுந் தமிழமுதை முச்சங்க
முகந்தூட்டும் முயற்சி கண்டேன்
என்னுகுங் காணுத தெனிற்பிறரை
எள்ளிநகும் இயல்பே யாகும்.

6. நற்சங்க நூலுருவம் நவிலுறுபல்
கலையுருவம் நண்பு மிக்க
பொற்சைவத் திருவுருவம் பழம்புலவர்ப்
போற்றுருவம் புனித மான
சிற்சாமி நாதவுரு சீர்ச்செண்ணப்
பல்கலைகள் சேர்ந்தே யோங்கு
நற்சங்க மண்டபத்தே நாட்டிவழி
பாடியற்றல் கலமே யாகும்.

வித்துவான் மா. ஞம்புலிங்கக் குருக்கள்

முகிரி

தமிழ்ச்சாமி நாதனடித் தாமரையைப் பேணில்
அமிழ்துகைக்கச் செந்தமிழை யார்ந்தே—இமிழ்
ஆடையாக்கொண்டவனிதலத்தெல்லீரும் [கடலை
சேடையா வாழ்வீர் செழித்து. (1)

மாகலையைக் குறுமுனிக்கு வகுத்தருளு மாதேவை
மாகலைகட் கொடிபலரும் வணங்கிடுதன் மைபோல
மாகலைநா யகமகா மகோபாத்தி யாயரையும்
மாகலைகள் வளம்பெறவே வணங்கியினை மொழிகு
[வமால். (2)

அவிழ்ச்சுவையை யல்லாதொன்
றறியாரு மமுதநிகர்
தமிழ்ச்சுவையை நன்கறிந்து
தனித்தனியே களிப்படையச்
சிமிழ்ப்பறியாத் தேவர்களுஞ்
சிறப்புறுமித் தமிழன்றி
இமிழ்ப்புதவா மருந்துண்ணே
மெனவியந்தே யெடுத்தியம்ப. (3)

சிந்தாத மணிநூலுஞ் சிலப்பதிகா ரம்மூமணி
முந்தார்மே கலைமுருகு முதற்பத்தும் புறப்பாட்டும்
நந்தாத பெருங்கலையைங் குறுந்தூறு கன்னூற்கே
எந்தாயீ ருரைபிறவு மெடுத்தச்சி லேற்றினையால். (4)

பிள்ளைத்த மிழ்முதலாம் பிரபந்தங் கண்முழுதும்
வள்ளைக்கு முழையாளன் வழுத்துபல புராணமும்
பிள்ளையவர் கள்சரிதம் பிள்ளையவர் கண்ணூல்கள்
எள்ளலிலா நீயின்றே லெங்குபெறு மிவ்வுலகம். (5)

திருவளரு மீனூட்சி சுந்தரனும்
பாற்கடலிற் றிருந்த மொண்டு
தருவளருத் தமதான புரமெனுநன்
னகரிடத்தே தமிழ்த்த வத்தால்
உருவளரு முதற்குலத்து வருசாமி
நாதப்பே ரொப்பில் கொண்மூ
பெருவளஞ்சால் சங்கநூன் மாரியக
விருள்கடிந்தே பெய்த தம்மா. (6)

வாழ்க தமிழகம் வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்ப்புலவர் வாழியவே—வாழ்கவெங்கள்
தாமரைத் தார்மாலைச் சாமிநா தக்கோமான்
பூமருவு மாதரருள் பூண்டு. (7)

சி. வீரபாகு

அர்ச்ய சிஷ்ட சவேரியார் கலாசாலை, பாளையங்கோட்டை

1. பூமாது புல்வேங் கடசுப்ப பூசரனுஞ்
சீமா னளித்த சிவசமயக்—கோமான்
உலகு புகழு முரவோன் புகழ்பரவல்
இலகு வலகா ணெமக்கு.

2. சிந்தா மணியுஞ் சிலப்பதிகா ரக்கதையும்
நந்தாப் பெருங்கதையு நாலூறும்—அந்த
வரமுடைய நூல்களோநாம் வாசிக்கத் தந்தான்
தரமுடைய சாமிநா தன்.

3. பொற்ரு மரைச்சங்கப் பொற்ரு மரைவிளைத்த
நற்ரு ரணிநயக்கு நற்றேனே—முற்றும்
அருந்திப்பி னந்த வரும்பொருளைக் கூட்டி
விருந்திடுவ னந்தணனும் வேந்து.

4. ஏணியே வைத்தாலு மெட்டாத கல்வியால்
வாணியே பென்ன வயங்குவான்—காணுமவர்
சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காக்கும்
பேராளன் வாழி பெரிது.

பெரியசாமி மூத்தையா உடையார்
பெரும்பன்றியூர்

தந்தையே நினது பாதத்
தரிசனம் வந்து காணச்
சிந்தையில் மிகவு மாசை
செனித்துமே வுடம்பின் செய்கை
முந்திட விடாத தாலே
மோனமா யிருக்க லானேன்
வந்துநான் ஆசி கேட்க
வகைசெய்வான் தேவன் ரூனே.

மு. கிருஷ்ண சர்மா
திருச்சேந்தூர்

1. ஊற்றேடை நீரென்ன முற்றத் தெளிந்த
உரையியற்றிப்
பாற்றேய்செந் தேனுத் தருசாமி நாதப்
பனவனெரு
நூற்றே டிருபஃ தெனும்ஆண்டு வாழ்ந்து
நுவல்பலபல்
பேற்றே டொளிரத் தமிழ்முரு கன்பதம்
பேணுதுமே.

2. ஜப்பான் முதலிய நம்புற நாட்டிச்
சனத்திரள்போல்
தப்பா தொருநூற் றுவர்க்கொரு நூற்றுவர்
தாமிருப்பார்
ஒப்பா ரிலாதொளிர் சாமிநா தப்பெயர்
உத்தமன்போன்
றிப்பா ரதத்தினிற் கல்விக் குழப்டார்
இருந்திடினே.

[இப்பாரதம் - இவ்விந்தியா.]

வேறு

3. எங்களுடைப் பிறப்புரிமைச் சுவராஜ்யம்
யாம் விரைவில் ஏற்ற பின்னர்த்
தங்குதமிழ்த் திருநாவோன் சாற்றரிய
குணக்குன்றும் சாமி நாதன்
டங்கமிலாத் திருவுருவம் வெண்கல்லால்
வெண்கலத்தாற் படைத்தூர் தோறும்
மங்கலஆ வணவீதி சந்திதெரு
மற்றெங்கும் மகிழ்ந்து வைப்பாம்.

4. பூவெனும் அன்னே யிட்ட
பொலிவுறு பைங்கூழ்ப் பிச்சை
ஆவலோ டுலக மக்கள்
அயிலுவார் மதியிற் பிச்சை
மேவிய சகோர முண்ணும்
மிகுபுகழ்ச் சாமி நாதன்
நாவுரை தமிழாம் பிச்சை
நன்கறி புலவர் துய்ப்டர்.

5. எம்மா புலவரும் சொல்சாமி நாதர்க்கி
யாமியற்றும்
கைம்மா றெமசெற் றறிவொடி கல்வியாக்
காணினவர்
தம்மாற் றரப்பெற் றவையே அவையெனும்
தன்மையுணர்ந்
தம்மா செயுமா றெதுபிறி தென்றுளத்
தாய்குவனே.

வசிஷ்ட பாரதியர்

1. பாரதனில் ஓங்குதமிழ்ப் பாவைபடித்
தேயுயர்ந்த
பேர்பெற்று வாழ்பவ ராரபேசிர்—சீர்பெற்ற
ஏசாமி நாதாஎன் றியாரும் பணிந்துநிற்கும்
வேசாமி நாதனலால் வேறு. (1)

2. இருபிறப் பாள ரெண்ணு
யிரர்என விசைத்த கம்பன்
ஒருமொழிக் கிலக்காச் சோணாட்
டுத்தம தானம் வந்தோன்
மருமலர் தூம ளும்வெங்
கடசுப்ப ம்றையோன் ஈன்ற
அருமைசேர் சுந்தரத்தோ
டுமைந்திடு சாமி நாதன். (2)

3. சிவனருள் பெற்ற சீரோன்
செகமெலாம் மதிக்கும் மேலோன்
நவமொரு மடங்கள் தோறும்
கல்லிசைப் பரிசு பெற்றோன்
புவனமூற் றொளிர்ந்த சங்க
நூலெலாம் புதுக்கி ஈந்தோன்
உவமையி றமிழ்ப்பே றுற்றோன்
உயர்மஹா மஹோபாத் யாயன். (3)

4. மீனாட்சி சுந்தரம் பொற் சொக்கலிங்க மெய்
[மொழிகள்
வானாட்சி யுற்றே வளர்தியாக ராஜன்இவர்
தேனாட்சி மொழியார்தம் திறம்பேணு தறம்
[பேணும்
மானாட்சி யுற்ற மனத்தனின் மற்றதென்
வாழி வேசாமி நாதன் வாழியே ! னே. (4)

5. வாழி ஆயிரம் வான்பிறை கண்டவன்
வாழி மைந்தனும் மக்களும் மற்றவும்
வாழி வாழி வையமும் வாழியே ! (5)

வித்துவான் மா. இராசமாணிக்கம்

தமிழ்ப்பண்டிதர்—சென்னை.

1. ஊசல் வரி

சிந்தா மணிதருவான் சிலப்பதிகா ரந்தருவான்
அந்தாதி பலதருவான் அருள்தமிழ்த்தா யருட்புதல்
சுந்தரத் தோன்றலெனும் சாமிநா தனைப்பாடி [வன்
சுந்தர முகந்திலங்க ஆடாமோ ஊசல்
'சுந்தரன்வாழ் கென்னப்பாடி ஆடாமோ ஊசல் (1)
மணிமே கலைதருவான் மானனைய தமிழ்த்தாய்க்கே
அணிதிகழப் பெருங்கதையொன் றன்றளித்த தவப்
[புதல்வன்
மணிமிடற்றுப் பெம்மான்முண் மலர்தொழுவான்
[புகழ்பாடி
அணியிழைக ளார்ப்பெடுக்க ஆடாமோ ஊசல் [(2)
'அருந்தமிழ்ச்சேய் வாழ்கென்றே ஆடாமோ ஊசல்
பத்துப்பாட் டெப்பரிபா டல்பதிற்றுப் பத்தென்னும்
இத்தகைய பன்னூல்கள் இனிதளித்தும் இலேயா
[மல்
புத்தகமாம் தூறுநீதோகையைப் பதிப்பான்றன்
[புகழ்பாடிச்
'சந்ததமும் வாழ்கென்றே ஆடாமோ ஊசல்
'சாமிநா தன்வாழ்கென்றே ஆடாமோ ஊசல் (3)

2. சந்துகவரி

எடுகொண்டி நூல்பதித்த எங்கள்சாமி நாதன்றன்
பாடுபட்டுழைத் துயர்ந்த பட்டங்கொண்ட வள்ளல்
[தன்
'நாடுவாழ்க வாழ்க'என்று சென்றுபந் தடித்துமே
'நாதன்வாழ்க வாழ்க'என்று சென்றுபந் தடித்துமே. (1)
தமிழினுக் குயிரளித்த தகைமைசான்ற பெரியனை
அமிழ்தினு மினியனை அண்ணல்சாமி நாதனைத்
'தமிழன்வாழ்க தமிழன்வாழ்க' என்றுபந் தடித்து
[மே
'தாயினுக் குகந்தோன்வாழ்க' என்றுபந் தடித்துமே. (2)
சங்கநூல்கள் வேறுநூல்கள் சலிப்புபெனைத் தின்
[றியே
'எங்கணூல்கள்' என்றளித்த எங்கள்சாமி நாதனை
'அங்குவாழ்க இங்குவாழ்க' என்றுபந் தடித்துமே
'சங்கச்சாமி நாதன்வாழ்க' என்றுபந் தடித்துமே. (3)

(நாருல் இஸ்லாம்)

1. தாயினு மினியாய்! தந்தையி னினியாய்!
தமிழ்தரு சுவையினு மினியாய்!
சேயெனு மெம்போல் பவர்மிகப் புகழுஞ்
செந்தமிழ் நூலருள் வள்ளால்!
பாயிரு ளதனிற் பழுதுறக் கிடந்த
பழந்தமிழ்ப் பனுவலாஞ் செல்வம்
மாய்ந்தொழி யாமே மல்கிடச் செய்தோய்!
மாண்புடைத் தனித்தமிழ்ப் பெரியோய்!

2. நாவல ரேறே! நற்றமி ழாசே!
நச்சினர்க் கினியனு நீயே;
யாவரு மேத்து நல்லிளங் கோவா
தியபல புலவரு நீயே;
பாவலர் புகழும் பரிபா டலைசெய்
பரிமே லழகனு நீயே
கர்வலர் பலருங் கருத்துடன் காத்த
கருதரு தூறரு முறையால்.

3. நின்னரு முழைப்பிங் கில்லெனி லென்னும்
நிலனிடைத் தமிழ்மொழி வள்ளால்!
அன்னைநற் றமிழா மணங்கெவ ணிருப்பாள்
அண்ணலே நின்னையீன் றிலளேல்?
நின்றனற் றமிழ்மீ ளுட்சுரந் தாளர்
நிறுத்தனர் புகழெனல் மிகையோ?
தென்றமி ழணங்கின் தீஞ்சுவை யமுதைத்
திறம்பட வுவந்தளி திறலோய்!

4. வாழ்கஎம் வள்ளால்! வாழ்கநின் முயற்சி
வான்தவ ழிமயம தூறழ
வாழ்கநற் றமிழ்த்தாய் வளமுற வீன்ற
வழக்கமை வுடையபைத் தமிழ்நூல்
வாழ்கநின் சுற்றம் வாழ்கநின் னுழையர்
வழிதொறும் வழிதொறும் சிறந்தே
வாழ்கநின் வாணுள் வளமுடைப் பொன்னி
வளர்மண லினுமிகப் பலவே!

(பாரதஜோதி)

பா. பக்கிரிசுவாமி

தமிழ்ப்பண்டிதர்—சென்னை

தமிழ்மொழி வளர்த்தோய்! தனித்தமிழ்ப் பெரி
தமிழினுக்கெவரா ளரினே யளித்தோய்! [யோய்!
அமிழ்தினு மினியநற் றமிழ்மொழி நூல்களே
அமிழ்தென நுகர்ந்தே யளித்திடு மண்ணல்!
நின்னரும் பதிப்பை நினைக்கவும் வியப்பே!
நின்னரு முழைப்பை ஏன்னனைப் புகழ்வேம்!
புறநா னூற்றினைப் புகழ்பெறச் செய்தோய்!
புறப்பொருள் வெண்பா மாலையை யளித்தோய்!
பத்துப் பாட்டினைப் பதமுறத் தந்தோய்!
வித்தகச் சிலப்பதி காரமளித்தோய்!
இம்முது மையிலும் இயம்பருங் தூறுநீதோகை
இனிதினு ராய்ந்தே இன்புறு வள்ளால்!

உச்சிமேற் புலவர்கொள் உரையா சிரியரும்
நச்சினர்க் கினியரும் நந்தமிழ்ப் புலவரும்
நின்னரு முழைப்பால் நிலவுறப் பெற்றனர்
என்னல் மிகையோ ? எழிலுடை யரசே !
தொன்மொழிப் புலவர் தொல்காப் பியமும்
நன்னூல் பல்வும் நலனுற வாய்ந்தே
வெளிப்படுத் திடுதல் வேண்டும் வேண்டும்
அளிப்பள் தமிழ்த்தாய் அளவிலா வூக்கம் ;
இளமையும் இன்பமும் எய்திநீ வாழ்க !
என்னுயி ரனையநங் காவிரி
தண்ணிய மணலினும் தளிர்க்கநின் குலே !

வை. சுந்தரேச வாண்டையார்

திருவையாறு

உலகம் புகழும் உயர்ச்சிசால் செம்மல்
நலமெலாஞ் சிவண நிலவுசீர்த் தமிழின்
பண்டார மாகக் கொண்டாடு பனுவற்
சங்கச் செய்யுளே மங்கிக் கிடந்த
5. எடுக டேடி எழுத்தக டுருவிப்
பதித்துத் தந்த மதிப்புடைப் பெரும !
அமிழ்துறு சுவைநிறை தமிழ்செய் தவமே !
"நரைமுதிர் யாக்கை நடுங்கா நாவின்
உரைமூ தாள "! கரையிலாக் கலைக்கடல்
10. நீந்தும் புலவரை ஏந்திய கலமே !
பட்டப் புலவனை ஒட்டக் கூத்தனை
யாண்டினும் அறிவினும் ஈண்டிய சிறப்பினும்
நினைப்பித் துவந்த தனைத்தா னெடுத்தோய் !
காமிய வினையிலாச் சாமி நாத !
15. அன்பெனும் இயவுள் அருளால்
இன்பஞ் சிறக்க ஈங்குவா ழியரே.

வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயர்

(கட்டளைக் கலித்துறை)

1. அருந்தமிழ் நூலெனக் கீந்த
பெரும்பெய ராசிரியன்
பொருந்துறு மேலோர் புகழ்சாமி
நாதமெய்ப் பூசுரன்றன்
திருந்துறு தாணிழற் சேர்ந்தநன்
னாளே சிறப்புறுநாள்
பெருந்துயர் நீங்கிய வந்தநன்
னாளினைப் பேணுவனே.
2. நல்லறி வில்லா வெனக்குந்
தமிழி னயந்தெரித்தோன்
தொல்லறி வாளர் புகழ்சாமி
நாத சுகுணவள்ளல்
இல்லையென் னுமற் பழந்தமிழ்
நூல்களே யீந்திலனேல்
வல்லுநர் யார்கொ றமிழின்
சிறப்டென்று மார்தட்டவே.

(வெண்பா)

3. கறையா னுணவாக் கழிநூல்கள் கற்கும்
முறையார்க் குணவா முயன்ற—மறையோன்
[சீர்ச்
சாமிநா தன்செய் தகவாற் றமிழென்னும்
கோமினு ளற்றுள் குறை.
4. நல்லறிஞர் சூழு நவையி லவைக்களத்துப்
புல்லறிவி னேனும் புகவைத்த—எல்லொளி
[யோன்
மன்சாமி நாத மறையோன்று ளென்னுளத்துப்
பொன்சேர் மலராப் புகும். [லும்
5. இன்னு மிவன்பதிக்க வெண்ணுறுமெல் லாநூ
என்னுந் தடையின்றி யீதற்கு—மன்னும்பல்
நூற்றாண்டு வாழ நுதற்கண்ணன் சேவடி
போற்றீண்டு நெஞ்சே புகழ். [யைப்

கே. பழனியாண்டிப் பிள்ளை கம்பெனியார்

(வித்துவான் கி. வா. ஜகந்நாதையர் இயற்றியவை)

1. வளர்சிந்தா மணிபுனைந்தாள்
மேகலையும் அணிந்தாள்
மலரடிமேற் சிலம்பணிந்தாள்
பரிபாடல் புறப்பா
டிளர்பதிற்றுப் பத்தைந்து
குறுநூறுந் தொகைகள்
கொழும்வளஞ் சிறந்தாளப்
பெருங்கதையுங் கேட்டான்
தளர்வில்லாப் பிரபந்தம்
பலசெறிந்து நின்றுள்
தண்டமிழ்த்தாய் நின்செயலால்
தாண்டவஞ்செய் கின்றுள்

உளர்பலர்நின் போலென்ன
உரைத்த லெளிதாமோ
உயர்சாமி நாதனெனும்
பெயர்சிறந்தாய் வாழி !

2. கருத்திடையே பலநூலின்
அறிவினையே பதித்தாய்
கலைநிரம்பு புலவர்நிலை
யாய்ந்தாய்ந்து துதித்தாய்
விருத்திபெறத் தமிழ்நூல்கள்
விளக்கச்சிற் பதித்தாய்
வியப்பெவருங் கொள்ளவுயர்
குணமிகுந்து கதித்தாய்
பெருத்ததமிழ் நாடுசெய்த
தவப்பயனுல் உதித்தாய்
பிறழாமற் பலசெய்தி
யாமறிய விதித்தாய்
அருத்தியுற வளர்சாமி
நாதனெனும் பெயரோய்
அறிவுக்கோ ராகரநீ
பல்லாண்டு வாழி !

சென்னைத் தமிழ்மாணவர்கள்

(வித்துவான் கி. வா. ஜகந்நாதையர் இயற்றியவை)

1. திருவார் சோழ நாட்டினிலே
சேருத் தமதா னப்பதியிற்
செனித்தே சாமி நாதப்பேர்
சிறக்க விளங்கும் பெருமானே !
உருவா ரெண்ப தாண்டுநிறைந்
தோங்கும் நின்னைத் தரிசனஞ்செய்
துயர்நின் ஆசி பெறும்பொருட்டா
உன்னி இங்கே கூடினின்றோம்
பெருவா ரிதியே அனையதமிழ்ப்
பிரசம் எங்கட் கூட்டியென்றும்
பிறழாச் சிறப்பை அளித்தாய்நின்
பெருமை பேசுந் தரத்ததுவோ ?
குருவார் நினது பெருஞ்செயலால்
கூறுந் தமிழ்ச்செம் மொழிபெற்றுக்
குலவுஞ் செல்வந் தனக்கெல்லை
குணிக்க வல்லார் யாருளரே ?

2. மூலக் கிடையே கிடந்துமங்கி
மூளுந் தீயால் உணப்பட்டும்
மொசியும் சிதலின் வாய்ப்பட்டும்
முறிந்தும் சிதைந்தும் உருக்குலைந்த
ஓலைப் பிரதி யெங்கெங்கே
உளவென் றுய்ந்து மெய்வருத்தம்
உன்னு துணவும் கொள்ளாமல்
உறங்கா தவற்றைக் கண்டபொழு
தாலைக் கரும்பு போல்உள்ளம்
அழுங்கி எடுத்துத் தொகுத்தாய்ந்தே
ஆரும் பொருளே உணர்ந்தச்சில்
அமைத்தே அழகிட் டரியபல
நூலைக் கொடுத்தாய் தமிழ்மகள்தான்
கோற்ற பயனைக் கொடுத்தாயால்
நுண்மாண் நுழைநற் புலஞ்சிறந்தோய்
நுனித்தற் கரிது நின்புகழே !

3. நின்ற னுருவந் தமிழுருவம்
நின்கை தமிழ்க்கு மூடிசூட்டும்
நீள்கை நின்றன் திருப்பதங்கள்
நித்தம் தமிழ்க்கா நடந்தபதம்
ஒன்றும் நின்றன் திருவிழிகள்
ஒவ்வோ ரெழுத்தாய் ஆராய்ந்தே
ஒருசெந் தமிழ்த்தாய் திருக்கோலம்
ஒளிபெற் றெளிரக் கண்டவிழி
துன்றும் நின்நா தமிழ்அமுதச்
சுவையே ஊறி விளைசெந்நா
சொல்லும் நின்றன் ஊக்கமெலாம்
தூய தமிழின் ஆக்கமன்றே ?
மன்றுள் இறைவன் அருளால்நீ
வண்ண மேனி நலஞ்சிறந்து
வாழ்க வாழ்க பல்லாண்டு
வாழ்க வாழ்க வாழியவே !

ரா. கோவிந்தராஜன்

'பிரணவ ஆசிரமம்', தியாகராய நகரம்

உலகம் உவப்ப உயர்ந்தவன்ருள் வாழ்க
பலகற் றளித்தான் பதமேற்—பலகாலும்
வாழ்க தமிழ்க்குரவன் சாமிநா தப்பெரியோன்
வாழ்க வளத்தான் மகிழ்ந்து.

வி. சுடலைமுத்துப்பிள்ளை

நாகர் கோயில்

இரதபந்தம்

கீழ்த்தட்டு

1. இன்னமுதாய் மேலோர்தா மேத்து தவமேந்தும்
பன்னிதத நன்னூல் பலவிற்குங்—கன்னஞ்செய்
நாமக்கண் செல்லொழித்த நாயகனர்? நாட்டு
சாமிநா தக்குரவர் தான். [தமிழ்

மேற்றட்டு

2. மலைவுறுபன் மாணவரின் மாசங்கை யோபல்
பலவிற்குங் கன்னஞ்செய் பாகா—நலமருவ
நேமதா னக்கலைவாய் நேர்பவனே ஒதேனு !
சாமிநா தப்புதனர் தான்.

வாழ்த்து

3. உத்தமதா னப்பலன்க ளுன்னுருவா யுற்றனவோ
உத்தமதா னப்பதிவா முத்தமனே !—நீத்தமுநீ
இத்தரையி லாதி யிறைவனரு ளால்வாழ்ந்து
புத்தமுதாச் செந்தமிழைப் போற்று.

பொன். சாமிநாத தேசிகர்

உடையார்பாளையம்

1. செந்திருவி னல்வளமும் செந்தமிழின்
பல்வளமும் செழித்தே யோங்கி
முந்துபுகழ் வில்வளமும் முறைக்கயலின்
தொல்வளமும் முழங்கி வீறி
வந்தபுலி வல்வளமும் மாறுத
சொல்வளமும் வாய்மூ வேந்தர்
சிந்தைமகிழ் கொடைவளத்தின் செந்தமிழ்ப்பா
வலர்வளமும் செறிவ தாகும்.

2. மூவேந்தர் முடிதாழ்த்து முனைந்ததவும்
பரிசிலெலாம் முன்றி லோங்கப்
பாவேந்தர் பெருமகிழ்வின் பாவளக்காண்
பைந்தமிழ்நா டதனில் முன்னுள்
நாவேந்து பெரும்புகழின் நற்றமிழ்முச்
சங்கம்வளர் நாவ லோர்தாம்
தேவேந்தும் சிரமசைக்கத் திகழ்ந்தபல
நூல்வளஞ்சால் சிறப்பிற் றோர்ந்தார்.

3. பேணரிய பெருஞ்சிறப்பிற் பெறலரிய
நூல்கள்பல பிறங்கித் தோன்றக்
காணரிய பெரும்புலவர் கருதரிய
போறிவின் காட்சி வாய்ந்த
பூணரிய தண்டமிழின் புகழ்விரிக்கும்
முச்சங்கம் பொலிவுற் றுர்ந்த
மாணருமை பற்பலவும் மாய்ந்தழிந்த
தமிழெலாம் மாழ்கி நின்றார்.

4. எசரிய முச்சங்க மிறந்ததெனு
தேபாண்டித் துரைத்தே வர்தாம்
ஆசரிய அம்மதுரை அணிநான்காஞ்
சங்கமுமே அடல்பெற் றோங்க
ஓசரிசென் றுவகைபெற ஒளிர்ராம
நாதபுரத் தமிழ்வேந் தாகும்
மாசரிய சேதுபதி மதிக்கரிய
தலைமையினில் வளர்த்துத் தந்தார்.

5. முத்தமிழாய் சங்கமுடன் மூதறிவின்
புலவர்களும் முடிந்தார் சங்கத்
தொத்தபெரு நூல்களுந்தாம் உருவழிந்த
வென்றுரைக்க வொட்டா தேதாம்
சித்தமகிழ் ஊக்கமுடன் சிறுதளர்வும்
கொள்ளாதே சிறக்கக் கண்ட
அத்தகைய பெருஞ்சீர்நம் ஐயாவர்
கள்புகழாய் அமைந்த தாகும்.

6. தாளுட்சி செயத்தகுந்த தனிப்புலவர்
தாரணியினிற் காணு ராகி
வாளுட்சி செயவிரும்பி வீண்புலவர்
மகிழ்ச்சியுற வாளு டுற்ற
மீளுட்சி சுந்தரனும் மெய்ப்புலவன்
மாணவரின் மேன்மை வாய்ந்த
கோளுட்சி யினிற்சங்கம் குலவியபன்
னூன்மணிகள் கொழித்துத் தந்தார்.

7. அருந்தமிழாம் பெருங்கடலின் அருமணிகள்
அகழ்ந்தெடுக்கு மறிவா ராய்ச்சி
திருந்துதமிழ்ப் புகழ்நிலையிற் றிகழரணுய்ச்
செறிதிறச்சீர் தோர்ந்து மன்னர்
பொருந்துமகா மகோபாத்தி யாயரெனப்
பொலிபட்டம் புனையத் தந்தார்
இருந்தவப்பே ருலகருரு இசைதாட்சி
ணுத்தியகலா நிதியென் றிட்டார்.

8. பின்னுமர சியலார்தாம் பெருங்கலையாய்
போறிவின் பெருமைக் காக
மன்னியசீர் டாக்டரென மாண்விருதும்
வழங்கினர்பல் கழகந் தோறும்
மின்னுமணி யாய்விளங்கு மேன்மையொன்றே
விந்நாளில் தமிழின் தொன்மை
உன்னிடவும் மேலுட்டார் உயர்முறையிற்
பலநூல்கள் ஒளிரக் கண்டார்.

9. கீதவுல கையரெனிற் கீர்த்தனத்யா
கப்பிரமக் கேடி லார்தாம்
வாதமறக் காந்தியெனில் வாழுமகான்
மோகனதாஸ் காந்தி யார்தாம்
மேதகவே பிள்ளையெனில் மீளுட்சி
சுந்தரன்ரூன் கவிஞர்க் குள்ளே
போதகலே யுலகையர் எனப்புகலின்
புகழ்ச்சாமி நாதை யர்தாம்.

10. நந்தமிழ்த்தாய் சிற்றடிக்கு நற்சிலம்பின்
அதிகாரம் நாடிக் கண்டார்
அந்தமிகு சிற்றிடைக்கும் அணிமணிமே
கலேதாளும் அணியச் செய்தார்
சிந்தைதனைப் பனவளிக்கும் சீரதுசிந்
தாமணிக்கே திகழ்வ தந்த
மூன்தெழிற்சிந் தாமணியும் மூதறிவின்
ஐயரவர் முயற்சி யாலாம்.

11. பற்பலநூ லச்சேறப் பலகழகம்
பயனேறப் பதிதா மாகிக்
கற்பனவாய்க் காதறிந்த கதைகளெல்லாம்
கலேமகட்குக் கவின்பெற் ரேங்கச்
சொற்பொழிவில் மீளுட்சி சுந்தரன்சீர்
சொல்லுவதே தொழில தாகப்
பொற்புறவே அன்புபொறை புனிதமொழி
சிவவேடப் பொலிவே பூண்டார்.

12. ஓதிடுநூற் குயிர்தருசீர் உத்தமதா
னப்பெருமை ஊர்ப்பேர் சொல்லும்
வேதியனர் தமிழ்க்கெல்லே வீளம்புதற்குத்
தந்தைபெயர் வேண்டிற் போதும்
கோதியலாத் தமிழினுக்குக் கொற்றவனுய்க்
குருவாகித் தலேமை யார்தல்
ஆதியரற் குபதேசம் அருள்சாமி
நாதனெனும் அப்பேர் காட்டும்.

13. அப்பெரியார்க் கெண்பதெனு மாண்டுநிறை
பவமாசி இருபான் மூன்ரூய்ச்
செப்பிடப்பீ. டீ. ராசன் திகழமைச்சன்
தலேமையினில் திருவி ழாத்தான்
ஒப்பறவே நடந்திடவும் உயர்தமிழ்நா
டொளிபெறவு முறுதி யாக
இப்புவியோர் தமிழ்க்களித்த ஈடில்புகழ்
நன்றியறி வெனலு மாகும்.

14. போறிவு பேரொழுக்கம் பெருந்தகைமை
பெருவயதும் பிறங்க நின்ரூன்
பாரமுதத் தீந்தமிழ்ச்சீர்ப் பயன்சுவைக்கப்
படைத்தளித்த பான்மை யாளன்
வீரமுத்த மிழ்வளர்க்கும் வீறுடையான்
பேறுடையான் வியன்பே ராளன்
ஈரமிகு தீந்தமிழி னெல்லையிவர்க்
கெத்தகையும் கைம்மா றின்றே.

15. சாமிநா தப்பெரியார் சாந்தவுரு
வப்படத்தைக் காசி வாசி
சாமிநா தப்பெரிய தனிமுனிவன்
தருங்கருணை வாழ்த்தி யேத்திச்
சாமிநா தப்பேரன் தமிழ்த்தாதா
தண்ணருளின் தகவே போற்றச்
சாமிநா தப்பெருமான் தண்ணருளுஞ்
சமைந்ததிறஞ் சாற்ற லாமோ !

16. அன்பர்தமக் கருள்செய்வே லணியழகன்
பச்சைமயி லமர்ந்த செவ்வேள்
இன்பருளால் நந்தமகா மகோபாத்தி
யாயரவர் இசையின் வாழ்க
மன்புரைசீ ருயர்தாட்சி ணுத்யகலா
நிதிவாழி மாண்பின் டாக்டர்
நன்புகழ் உ. வே. சாமி நாதையர்
நலங்களொடும் ஊழி வாழி.

ஸ்ரீ ஷண்முகநிலயத்தார்

திண்டிவனம்

1. பூமா தவளுக் கோர்விழி போலப்
பொலியுந் தமிழ்நாட்டில்
நாமா தவளருள் வடிவுகொண் டாங்கு
நாவலர் கொண்டாடச்
சீமா தவளுறை யுத்தம தானச்
செம்பதி வந்தானே
மாமா தவர்பணி மங்கை மணுளனே
மனத்திற் கொண்டானே.

2. மச்சி லுறைந்து மறைந்தொளி மங்கிய
மாண்பெரு நூலேயெலாம்
அச்சி லுறுத்தியம் மாட்சியை யான்ரோர்
ஆய்ந்திட அருள்பவனே
மெச்சி வழங்கு தமிழ்த்தாய்க் கொருமணி
மேகலே முதலான
உச்சி யணிந்திட வேற்ற தமிழ்க்கல
னுவக்க வளித்தானே.

3. மகாம கோபாத் யாயப் பட்டமு
மன்னிய தென்திசைசேர்
பகாத சீர்கெழு கலேநி தியென்றிடு
பட்டமும் பல்கலேசேர்
சிகாம ணிக்கழ கந்தரு டாக்டர்ச்
செவ்விய பட்டமொடும்
மகாத லத்தினு மண்ணினும் விண்ணினும்
வயங்கப் பெற்ரூனே.

4. சீரார் சுவாமி நாதப் பெயரிய
செந்தமிழ் மறையவனேப்
பாரா ராண்டுக ளெண்பதன் மேலும்
பண்பாய் வாழ்வானே
நேரா யிந்நில மக்கள் மதித்திடல்
நேர்மை நெறியாகும்
பேரார்ந் தன்னவன் நல்வாழ் வெய்தப்
பேரருள் பெருகுகவே.

(டை நிலயத்தின் தூணைத்தலைவர் வித்துவான் திரு. ஆ. பழநிஸ்வாமிசிவாசாரியரால் இயற்றப்பட்டுத் திண்டிவனம் ஸ்ரீ காமாகூவிலாஸப் பெண்கல்விச் சாலைச் சிறுமிகளாற் பாடப்பெற்றன.)

எம். எஸ். சுந்தரேச ஐயர்
உபகாரியதரிசி, ஷண்முகநிலயம், திண்டிவனம்

ஆரியந் தழைக்கு முன்பே
ஆழிசூ முலக மெல்லாம்
தூரிய முழக்கத் தோடு
தூவரி யாச னத்திற்
சீரியர் களிக்கு மாறு
சிறப்புட னிருந்து செங்கே
வீரியம் விளங்க ஆண்ட
அரசியைப் பரசி வாழ்வாம்.

1. தமிழரின் சிற்ப மாசிய லீகை
தாங்கமெறி
இமிழ்கட லோடி யியற்றிடும் வாணிப
மின்பமணம்
நமனகந் துண்ணென் றஞ்சிடும் வீரநன்
ஞகரிகம்
அமைவுடன் தோன்றுதற் காதர மாகிய
அந்தணனே.

2. தற்பர மாகிய பெம்மான் விரும்புந்
தமிழ்ச்சுவையை
விற்பனர் காளு நுகர்ந்திடச் செய்து
வியன்பொதிகை
வெற்புறு மாதவன் போலத் திகழ்ந்து
விளங்குறுநின்
அற்புதத் தன்மையா னெவ்வா றழகாய்
அறைகுவனே.

3. இச்சகத் தோருமவ் வானிலுள் ளோரு
மெழிற்சிரசாம்
உச்சியிற் சேர்க்க உடன்படுந் தூய
உரிமையதாய்
மச்சினில் தூங்குபல் ஓலைச் சுவடியை
மாண்புறவே
அச்சினி லாக்கிக் கொடுத்தவுன் சீரை
யளக்கரிதே.

4. பணிமுடி ஈச னருளா லிலங்குமிப்
பாரிலுள்ள
கணியுறும் பாவலர் வீடுகள் தோறுங்
கரந்திருந்த
மணியுஞ் சிலம்பணி மேகலை யுங்கொடு
வண்டமிழ்க்கே
அணியெனச் செய்தவுன் கைத்தொழில்
மேன்மை யரிதரிதே.

5. டண்டைய காவிய மைந்தி விரண்டெனப்
பார்புகழும்
குண்டலத் தோடு வளையலை யுஞ்செய்து
கோலமுடன்
மண்டலந் தன்னி லுனையன் றியாவர்
மனங்களிக்க
அண்டரும் போற்றுந் தமிழணங் கிற்கே
யணிபவரே.

6. உலகினிற் சைவப் பயிரதைப் போற்றிய
உத்தமருள்
பலர்புகழ் நாவுக் கரசரைப் போலவும்
பாருயிர்க்கண்
நலந்தயை போற்றிய புத்தரைப் போலவும்
நற்றமிழை
அலர்மக ளன்னையிற் போற்றினை நீயும்
அவனியிலே.

7. எத்திசை யோர்களு முத்தம தானமென்
றேயுரைக்கும்
உத்தம தான புரமாம் பதியி
லுதித்தருளி
இத்தரை மீதுநீ சோர்வின்றி யாக்கிய
இன்றமிழை
அத்த ! நீ வைச்சது பிச்சை யெனவே
யருந்துவமே.

8. எஞ்சலி லெண்பதாம் ஆண்டின் விழாவை
யினிதுறயாம்
விஞ்சிய அன்பா லியற்றியெங் நன்றி
விருப்புடனே
நெஞ்சினில் வைத்துக் கவியாற் புகழ்ந்துனை
நேர்மையொடே
அஞ்சலிக் கின்றோம் தமிழ்க்கட லான
அருந்தெய்வமே.

9. இன்னசொல் இவ்விடத் திப்பொரு ளேயென்
றியம்பிடற்கு
நன்னய மாகத்தொன் னூல்களிற் காட்டுநின்
ஞாபகத்தின்
தன்மையை என்னென் றிசைத்திடு
வோம்நற் றமிழரெலாம்
அன்னையைப் போல வணங்கற்
குரிமைகொள் ஆரியனே !

10. திராவிட வித்தியா பூஷண மாகச்
சிறந்தொளிர்வோய்!
பராவிடு முன்றன் புலமையைப் பாவலர்
பற்பலநாள்
தாராதல மீது புகழ்ந்திடக் கன்னித்
தமிழறிவை
அராவணி செஞ்சடை முக்கட் பகவன்
அருளுகவே !

வாழி விருத்தம்

இந்தியா தேசம் வாழ்க !
இனிமையாந் தமிழும் வாழ்க !
புந்திசேர் தமிழர் வாழ்க !
புராதன நூல்கள் வாழ்க !
அந்தமா யவற்றை யெல்லாம்
அச்சிடு வித்தோ னென
எந்தையாம் சாமி நாதன்
என்றென்றும் வாழ்க மாதோ !

எம். சோமசுந்தரன்

ஆனைமலை

(நேரிசையாசிரியப்பா)

நானிலத் தெவரும் நனிவியர் துரைக்கும்
மேனிலத் தவரும் விரும்பிடும் பாரத
தேயந் தன்னிற் றெக்கண மதனில்
மேவிய தமிழ்நா டென்னும் பகுதி
மூவர சாண்டு முறையற நிறுவிப்
பாவந் தேய்த்துப் பகைமை யொழித்து
விளங்கிய மெய்த்தமிழ் மேனிவா டினள்போல்
உணங்கிய சிந்தையள் ஒருவகை காணுள்
மயங்கினள் மக்கள் மனம்வே றுயதால்
எந்தம் அன்னை இடுக்கண் நீங்கவும்
மூன்றைநாள் இளமை மூன்றுறக் காமர்
அணிகலந் திருத்தி அழகுசெய் தகலாப்
பணிபுரிந் தொழுகும் பான்மை யாளன்
வீழ்கதிர் மண்டில மெய்யொளி யிழந்த
பான்மைபோற் றுழ்துயர் மிடிபல வெய்திட
அழற்புகும் புழுவென உழக்கும் துயரற
சிந்தைநோய் தீர்ந்து செல்ல லகற்றிடும்
சந்தமார் நெறியுடைத் தமிழீ தொன்றே
வேற்றுமை களைந்து மெய்ந்நலி வகற்றி
யாவருந் தமிழர் அனைத்துநம் உரிமை
தீவினை களைதும் சேர்தும்நா மொன்றாய்
பல்லாண் டாகப் பணிசெய மறந்த
தெல்லாம் சேர்த்திங் கெழுந்திடும் மெய்த்தவன்
வாழ்க பல்லாண் டென்றுவாழ்த் துதுமால்
தந்தையாய்த் தமிழைத் தந்தசற் குரவன்
இந்தநா ளுந்தன் இயற்பெயர்க் கேற்பக்
கன்னித் தமிழைக் காத்திடு கின்றான்
பன்னுதற் கென்னுள பணிசிறந் தோங்குக
நன்னுத லன்னை நனிமகிழ் வெய்துக
மனத்தது முடிக வாய்மை சிறக்க
எங்கோ வாழி ! இன்ப மோங்குக
வாழிய பெரும ! வளர்கநின் ஞயுள்
வாழிய தமிழ்நல வண்மைவா ழியவே
சாமிநா தப்பெயர்ச் சதுர
பூமிமேல் யாவும் பொருந்திவா ழியவே !

அ. மு. பரமசிவானந்தம்

வாலாஜாபாத்

கடலாடை யுடுத்தோங்கு கவின்வாய்ந்த குவலயத் [தில்
நடமாடு மிறைவனடி நனிபோற்றி நலஞ்சிறந்தே
தடமான தண்டமிழின் தனித்துறையை வளம் [படுத்தி
இடமான இந்நிலத்தி லிரும்பணிகள் பலபுரிந்தே. (1)

ஆவுதென் றையதனில் அருமையுடன் மிளிர்ந்தொ [ளிரும்
சேவுடையான் திருத்தொண்ட ராதீனத் தினிற்றி [கழ்ந்து
நாவுடைய புலவரென நானிலமே மகிழ்ந்தேத்தப்
பாவலரும் பல்லோரும் பயனடைய வுடனிருந்தே.(2)

தமிழன்னை யணிகளெல்லாம் சங்கமதில் தோற் [றியநல்
அமிழ்தென்னப் புகழ்ந்தேத்து மருநூல்க ளத்தனை [யும்
தமிழன்பர் எல்லோரும் தனிப்பெருமை யுடனே [கொண்
டெமதென்றே கலைக்கடலுள் இறங்கிடவே பதித்த [ளித்தே. (3)

கண்வருத்தக் காலமது கடந்திடவே கற்றறிய [களை
உண்மையென மூன்னோர்க ளுவந்தெழுத்தார் ஓலை
அண்மையினி லனைவோரு மரும்பொருளை மிக [அறிந்து

எண்ணரிய நலம்பலவும் எய்திடவும் அருள்புரிந்து.
(4)

நந்தமது தமிழன்னை நலம்பெற்று நிறைந்திடவும்
இந்தநிலமெப்பொழுது மின்றமிழை யேத்திடவும்
கந்தமெனப் பல்கலைகள் கணக்கில்லா தோங்கிடவும்
எந்தவகை யினும்பெருமை எல்லையிலா வளமுறவும்.
(5)

அருள்புரிந்து டாக்டர்முதல் அரும்பெயர்கள் மிகப்
[படைத்தே
இருள்மறையத் தமிழகத்திற் கின்னொளியை மிகப்
[பெருக்கும்
மருளகன்ற மனத்தினனும் மாசாமி நாதனெனும்
திருநிறைந்த நம்பெருமான் சிறந்தோங்கி வாழியவே!
(6)

பெரியோன்இப் பேருலகிற் பேறெல்லாம் பெறச்
[சிறந்தே
உரிமைமிகத் தமிழன்னை உற்றிடமேல் உற்றுதவிப்
பெருமையுடன் பல்லாண்டு பேருலகிற் பெரும்புகழ்
[கொண்
டருமையுடன் அமர்ந்திடவே யாறணிந்தோ னடி
[பணிவாம். (7)

டி. ஆர். பத்மநாபையர்
கீதாநிலயம், மதுரை

பண்புயர்ந்த வேதியராம் பண்டிதரே இன்றமக்கு
எண்பதா மாண்டுநிறை வெய்தியதால்—கண்பரந்த
வையகத்தி லுன்புகழோ மாமலையின் மேல்விளக்
செய்யவொளி வீசிடுக சென்று. [காய்ச் (1)

ஆயிரத்தெண் ணூறுகழிந் தைம்பத்தைந் தாண்டினி
[லே
மாயிரு ஞாலத்தே வந்துதித்தோய்—தூயதமிழ்த்
தொண்டிற் சிறந்த சுவாமிநா தப்பெரியோய்
எண்டிசையு முன்புகழ்காண் இன்று. (2)

உத்தம தானபுர மூர்ப்பெயரைக் கேட்டக்கால்
உத்தமரை யீன்றெடுக்கு மூரதுவே—உத்தமராம்
தந்தைக் குகந்த தனயனுய் வந்தனையால்
வந்தித்துக் கூறுதுமே வாழ்த்து. (3)

வேங்கடசுப் பையரெனும் வேதியர்செய் நற்றவத்
[தால்
பாங்குடனே வந்துதித்த பண்பனே—ஈங்குதமிழ்
நாட்டிற்கு நீபுரிந்த நற்பணியைத் தான்வரைய
ஏட்டிலுங் காணு திடம். (4)

மணிமே கலைபதிற்றுப் பத்துயர்ந்த சிந்தா
மணியுஞ் சிலப்பதிகா ரத்தோ—டணிவித்தாய்
ஐங்குறு நூறும் புறப்பொருளும் பத்துப்பாட்
டிங்கிதமாய்த் தான்பதிப்பித் தின்று. (5)

பற்பலவாம் பட்டங்கள் பாரிற் பலர்வழங்க
நற்புலமை யோடிருக்குநாதனே—சொற்புலமை
மிக்கவா மேதினியில் வேறொருவ ரொப்பில்லாத்
தக்கவா வாழியநீ தான். (6)

வித்துவசி ரோமணியாம் மீனுட்சி சுந்தரன்பால்
உத்தம சீடனு வுற்றிருந்து—வித்தையெலாம்
பற்றுடனே கற்றிருந்த பாவலா நாவலா
மற்றுயா ருன்னைநிகர் வார். (7)

அ. நாராயணபிள்ளை
பண்ணைவீடு - இறைச்சகுளம்

கற்றோர்வாழ் சென்னைதனில் கனிந்துறையுஞ் சாமி
[நாதர்
நற்றமிழாம் மரமதிலோர் நற்கனியே யம்மானே
நற்றமிழாம் மரமதிலோர் நற்கனியே யாமாகில்
கெற்றுநகர்[1] பிள்ளையும் நேடிடுமோ வம்மானே
தமிழ்ப்பிள்ளை[2] சந்தசமும் நேடிடுமே யம்மானே. (1)

வேட்டார் குலக்கொழுந்து வேங்கடசுப் பர்மைந்தர்
வேட்டார் மறைக்கொழுந்து வாசகனே[3] யம்மானே
வேட்டார் மறைக்கொழுந்து வாசகனே யாமாகில்
கேட்டபடி குருசரிதம் கழறுவரோ வம்மானே
கேட்காதே குருசரிதம்[4] கழறினரே யம்மானே. (2)

உத்தமதா னபுரத்தில் உதித்தசாமி நாதையர்
எத்தாதே மிகவீயும் வள்ளல்கா ணம்மானே
எத்தாதே மிகவீயும் வள்ளலே யாமாகில்
மெத்தபொருள் வழங்கும் மேன்மையரோ வம்மானே
கல்விப் பொருள்கணமா வழங்குவரே யம்மானே. (3)

தொல்லைத் தமிழளந்த மன்னுசாமி நாதையர்
அல்லற்பிணி ஆய்ந்தகற்றும் வயித்தியரே யம்மானே
அல்லற்பிணி ஆய்ந்தகற்றும் வயித்தியரே யாமாகில்
பல்லுயிரைப் புரந்ததவும் பண்பினரோ வம்மானே
பன்னூலைப் புரந்ததவும் பண்புடையோ ரம்மானே.
(4)

இருந்தமிழர் எத்துமிச் சாமிநா தர்வாய்ச்சொல்
மருந்தறியா மதலையும் மேவுங்கா ணம்மானே
மருந்தறியா மதலையும் மேவுமே யாமாகில்
அருந்தற்கு கனிவிரும்பும் பண்டமோ வம்மானே
நாவலர் கனிவிரும்பும் பண்டமே யம்மானே. (5)

1. நெற்றுநகர் பிள்ளை = அணில்.
2. தமிழ்ப்பிள்ளை = தமிழ்மகன்.
3. வாசகன் = மாணிக்கவாசகர்.
4. சரிதம் = இயல்பு (நடக்கை), கதை.

பந்தலகுடி மாடபூசி திருமலை ஐயங்கார்

1. உலகெலாந் தொழுதேத்தும் உத்தமனை
உயர்கலத்தை உடைமை கொண்டான்
அலகிலாத் தமிழ்நூல்கள் அனைத்தையுமே
அறிந்துணர்ந்த அன்பன் காண்மின்
சலமெலா மறுத்தவன்தா ளிணைகளையே
சந்ததமும் சலியா துன்னும்
நலமெலாம் தனக்கேயாய் நண்ணுதலான்
நற்றமிழை நடத்தி னனே.

2. பூமிதனில் புண்ணியத்தோர் புகழும் பூண்டோன்
காமியர்க்குக் காருத்தன் போல்கறக்கும் கண்
நாமியற்றும் நாமத்தை நவிலா நண்பன் [ணன்
சாமியான சாமிநாதச் சான்றோன் தானே.

3. முத்தமிழ் முதல்வன் முக்கனி போல்வான்
உத்தமர் தங்கட் குறைவிட மமைப்பான்
பத்தர்க ளானோர் பரவிய பண்பன்
பத்தியோ டவன்றாள் பணிகுதும் யாமே.

சை. கிருஷ்ணமாச்சாரி
சைதாப்பேட்டை
(கலிவிருத்தம்)

1. திங்க ளாயிரந் தித்தித்த தேகத்த
சங்க நூல்களிற் சாலப் பயின்றிட்ட
தங்க மாய தமிழ்மொழித் தாதையே !
உங்க ளுக்குச் சுகமிக மேவுக.

2. சிந்தா நூன்மணி மேசலை சீவக
சிந்தா நூன்மணி சொல்லிலப் பாதிய
இந்தா இந்தா எனப்பதித் தீந்தருள்
தந்தாய் உன்சுகந் தாழா துயருக !

3. சேம மாயவை செய்யா ளுகந்திடக்
காம மாயவை காமாட்சி தந்திடச்
சாமி நாதையர் சான்றாய் இருந்திட
நேமி நாதனும் நீடிக்க வாயுளே.

4. மகாம கோபாத்தி யாய மகிமைய
சிகாம ணீயுன தாயிர ஜீவிய
சிகாம திதினம் சீரிய சேர்தினம்;
மகாம கிழ்தினம் மன்னர் விழாத்தினம் !

5. கல்லாண்ட கல்விக் கற்சிலைச் சாசனத்
தொல்லாண் டதமிழ்த் தூய வாசியல்
எல்லா வற்றையும் எம்மோ ரறிந்திடச் [மே.
சொல்லாண் டாய் ! உனைப் பல்லாண் டெனுது

வாழ்த்துரை

தமிழிற்சிறந்த ஐயன்மீர், இன்றைக்கு நீவிர் எண்பதாம் ஆண்டு நிறைவுற்றது எமக்குச் சாலக் களிப்பைக் கொடுக்கின்றது. தாம் தமிழுலகிற்குப் புரிந்துகொண்டிருக்கும் அரும் பெருந் தொண்டைக் கலைமகளில் படித்தும், எமது ஆசான் சொல்லக் கேட்டும், அறிவிலும் வயதிலும் சிறிய யாம் தமது தேன்மொழியை நேரில் கேட்டுத் தாம் வெளியிட்ட சங்கநூல்களோத் தாமே எமக்குக் கற்பித்து மிகக் களிப்புற ஆவலுற்றிருக்கின்றனம்.

அந்தணர்குலம் தமது பிறவியால் மிகவும் உய்யப்பெற்றது. தாம் மாசற்ற குணத்தோடு மேன்மேலும் தமது சிரமத்தைப் பொருட்படுத்தாமல், தொல்லாசிரியர் நூலை வெளியிடுவதற்குத் தமிழ் நாடு தனது நன்றியைக் காட்டுவது எவ்வாறு?

காத்தற்குரிய திருமால் தம் நற்றொழில் இனிதோங்கத் தாமும் தமது கலைவாசமும் தீதுறுவண்ணம் தமது இல்லத்திற்கு ஏகித் தம்மைக் காப்பாராக!

இங்ஙனம்,
தங்கள் அன்பார்ந்த,
மகாஜன பாடசாலை மாணவர்கள்,
மேட்டுப்பாளையம்
6—3—1935.

An Address of Congratulation presented by
SRIMATH SOMASUNDARA THAMBIRAN SWAMIGAL,
Kattalai Vicharanai, Vaitheeswarankoil, Dharmapuram Atheenam.

Most Beloved and Esteemed Sir,

As the devoted son of a Mutt that has been for long ages responsible for the dissemination of spiritual learning and for the development of Tamil culture in South India, we deem it our highest duty and pleasure to convey our hearty and sincere felicitations just on the happy celebration of your 81st Birthday.

Your contribution to Tamil Literature is no doubt immense and you have certainly brought to bear all the salutary influences of your intimate discipleship under that talented scholar Sriman Minakshisundaram Pillai. Imbued with a high sense of duty so as to regard that there is a perennial nobleness and sacredness in work, you have, Sir, brought to light a number of those Sangam works that were fast extinct and have thereby opened the eyes of all to that Augustan Age of Tamil Literature when society and Kingship were what they ought to be. Your brilliant footnotes and elaborate commentaries on abstruse passages of poetry belonging to the golden era of the Sangam period have thrown a flood of light over the dark recesses in those realms of culture and have enabled the votaries of Tamil to enjoy and appreciate those precious thoughts with an unusual facility and ease.

You have, Sir, made yourself worthy of a special remembrance by our Mutt by publishing the 'Sachithanantha Desikarmalai' which not only celebrates the glory of the 16th Mahasannidhanam of our Atheenam but has expounded clearly the essentials of our doctrines as well. Your brilliant 'Kumara Gurupara Charitra' showing an inimitable way how the great poet received the divine illumination from the 4th Mahasannidhanam of our Atheenam and your reference also to our Shiyali Kattali Chidambaranatha Munivar's great powers in your edition of 'Dakshayaka Parani' have entitled you to our highest esteem and immense love for ever.

It is to your untiring labours also that works on Saiva Siddhantha cult have become more popular and better understood and we have every reason to hope that if God be pleased to spare you long amidst us, many more lasting works would see the light of day. We pray Sri Guru Gnanasambandha to bless you with a long lease of brighter, more peaceful and prosperous life, so that the genius of your master-mind may confer on Tamil Literature and the Tamils, boons that would immortalise you and earn you the infinite love and gratitude of the millions of the Tamil world.

Panditharaja, R. V. KRISHNAMACHARIAR,
Abhinava Bhatta Bana, Sri Munitraya Mandiram, Kumbhakonam.

சுஸீ கிவ தனொ ஹாத
ஸஸீவ ஸகுலொ ஸவாநு ।

விஸீ திர ஹி தஜூ நந
வஸீ கூ தவொ யாவயிஃ ॥

श्री हरी राव् अवर्कள् இயற்றியவை

(மகாராஷ்டிரம்)

सुक्षेत्र कुंभघोणीं नदी पुराण प्रसिद्धकावेरी ।
बाहे तरुसस्यें वृद्धिकरी सकल जन पाप ताप हरी ॥ १
तीच्या उत्तर तीरीं इंग्रज विद्यालय प्रसिद्ध असे ।
रम्य विविक्त स्थळिं अतिसुंदर गंभीर थोर तें विलसे ॥
हे प्रख्यात पुरातन विद्यालयिं सकलशास्त्र निष्णात ।
पंडित शिक्षेनें यशपावे शिष्यें असंख्य पृथिवींत ॥३
त्या विद्यालयिं पूर्वी तामिल भाषेंत बोध उत्कृष्ट ।
श्रीस्वामिनाथ शर्मा करि विद्यार्थीसपंडितश्रेष्ठ ॥ ४
अतिशांत मृदुमित सरस भाषी सर्वांकडेहि समदर्शी ।
सुप्रेम दया विनयें पूरित तद्हृदय कोप नस्पर्शी ॥ ५
मंदस्मितमुख सुभ्रुकुटि सौम्य नेत्रें कपाल सुविशाल ।
सामुद्रिक मंगळ लक्षण मंडित तो असे महाशील ॥६
अतिकुशलबुद्धियोगें तामिल भाषा समुद्रतो ममुनी ।
प्रकटी पुरातन बहुग्रंथें काव्यें अपूर्वशोधूनी ॥ ७
जैसें पुण्यश्लोक भगीरथ उद्धरि तदीय पितरांला ।
हें मेधावी तामिल नष्टग्रंथें तसेंचि वांचविला ॥ ८
पाजउनीया तामिल भाषामृत द्विव्य सर्वलोकांस ।
लावी तो भव मोहार्दित त्यां पुरुषार्थ लाभमार्गास ॥९
तदपरिमित कीर्तीतें अवकाश नसे स्वदेशि वाढाया ।
पावे पश्चिम खंडाहिं ती महासागरें हि लंघुनिया ॥
त्याची उत्तमबोधें तामिल इतिहास काव्यरसगोड ।
सेवी सुशास्त्रवेत्ते बहुजर्मन फ्रेंच इंग्रज नथोड ॥ ११
ऐकुनि याचे सुंदर तामिल भाषा प्रवचन अतिमधुर ।
संस्कृत विद्यार्थी मीहीं पावे मोह तामिलींफार ॥१२
साखरिच्या बाहोल्या नानाकृतिच्या असून ही त्यांची
बाह्यगुणांताचि भेद परंतु नसे काहिं तारतम्यरुचीं ॥
वाल्मीकि कालिदास तुका मोरोपंत षेक्स्पियर्कंबर् ।
वेमनहाफस् पुरंदरदास कबीर तिरुवल्लुवरहोमर् ॥
या ज्ञानींचें काव्यांतर गोड सुवाक्य सत्यधर्मपर ।
भाषादितारतम्य असतां हि समचि सुखदायक इहपर
मत्प्रीति मातृ भाषा अतिमधुर मराटिंत सुदृढराहे ।
तरि तामिल मदति प्रियकरकीं अभिमान माय ती आहे
श्रीस्वामिनाथ शर्मा तें यास्तव पूज्य मद्गुरुमानी ।
कालेजिं कुंभघोणीं मत्शिक्षारंभ काल पासूनी ॥ १७
श्रीहिंदु चक्रवर्ती श्लाघुनि तज्ज्ञान शांति अतिविनय ।
आदरिदेऊनि तयासि किताब महामहा उपाध्याय ॥
या लोक वंदिताचे करि उत्सव अशिति अब्दपूर्ती चें ।
परमोत्साहें चन्नपुरस्य सकलशिष्य मित्रजन याचें ॥
या शांत महात्म्या तें पूर्णायुष्य बल सौख्य यशद्यावी ।
त्या च्या बोधें जन भवतरावया ईश्वरास मी विनवी ॥
हें सुज्ञ श्रेष्ठ हि मीं असतां कालेजिं कुंभघोणांत ।
थोडी पद्यरचाया प्रवृत्ति मजला असे मराटींत ॥२१
या पुण्यात्मावरि मी ही, आर्या तें यथामती रचीलों ।
तत्श्लाघ्यगुणें वर्णाया करितां खतचिधन्य मीझालों ॥
योरांचें गुणकीर्ती वर्णन मज अल्पमतिस न च युक्त ।
न गृही थोरचि दोषें चित्त जयांचें सदा गुणासक्त ॥
प्रेमें रचिली ही आर्या अर्पुनि या सुशील आर्या तें
तें स्वीकारावि सविनयमी विनवि जसेंचि पुष्पमाला तें

பத்திரிகைகள்

Educational Review, page, 168.
Hindu, 4, 57, 87, 111.
Hindu organ, 118.
Hindu Theological High School Magazine, 114.
Indian Express, 61.
Indian Review, 170.
Madras Mail, 89.
Magazine of the Science College, Trivandrum, 164.
Merry Magazine, 159.
P. S. High School Magazine, 116, 163.

ஆரியதர்மம், பக்கம், 29.
ஆனந்தவிகடன், 13, 40, 42-3, 46, 48, 51, 53, 141.
இந்துசாதனம், 5.
இந்துநேசன், 8, 24, 38-9, 112, 119.
சுழகேசரி, 5, 20, 103-4, 162, 171.
கலைமகள், 20, 84, 113, 120-23, 125-6, 129, 131-2, 134-5, 137-9, 142, 144-5, 148 - 9, 155, 172.
குமாரவிகடன், 16.
கொங்குமலர், 19.
சித்தாந்ததீபிகை, 139.
சிவநேசன், 19.
சுதந்திரச்சங்கு, 4, 110.

சுதேசமித்திரன், 3, 22, 60, 65, 85, 92, 94-7,101,111.
செந்தமிழ், 19, 100.
செந்தமிழ்ச் செல்வி, 116.
தமிழன், 97.
தனவணிகன், 15, 21-2, 26-7, 106, 109, 113.
தாருல்இஸ்லாம், 14, 69, 98, 184.
தினமணி, 5, 23, 101.
பாரதஜோதி, 18, 31, 33-4, 165, 184.
பிரசண்டவிகடன், 157.
மதுரமித்திரன், 13, 54, 95.
லோகோபகாரி, 14, 111, 181.
ஜனமித்திரன், 7.
ஜெயபாரதி, 110.
ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம், 115.
ஹரிசமயதிவாகரம், 18.

கடிதம் கட்டுரை முதலியவை எழுதிய அன்பர்கள்

அப்புஸ்வாமி ஐயர், பெ. நா. 1, 2, 46, 122, 168.
அம்பலவாண தேசிகர், 155.
அமிர்தகணேச முதலியார், 89.
அரசர், இராமநாதபுரம், 89.
அனந்த கிருஷ்ணையங்கார், 174.
ஆவுடையப்ப பிள்ளை, 89.
இரத்தினேசுவரையர், வ. மு. 24, 79, 89.
இராகவையங்கார், மு. 148.
இராகவையங்கார், ரா. 70, 171.
இராசமாணிக்கம் பிள்ளை, மா. 21, 140, 184.
இராமசாமி, மே. சு. 164.
இராமசாமிப் புலவர், ச. 174.
இராமசாமி முதலியார், சே. 150.
இராமாநுஜாசாரியர், ம. வீ. 70, 139, 151.
இராமானுஜையங்கார், டி. கே. 100, 176.
இலக்ஷ்மண பிள்ளை, தி. 89.
உமாமகேசுவரம் பிள்ளை, த. வே. 71, 89,
உலகநாத பிள்ளை, எல். 78.
எஸ். வி. 26.
ஐஸக் தம்பையா, டி. 116.
கண்ணன் மேனன், கே. 72.
கணபதி ஐயர், ச. சு. 29, 66, 127.
கதிரேசச் செட்டியார், மு. 71-2, 137.
கந்தசாமி தேசிகர், சு. 22.
கந்தசாமி பிள்ளை, ப. சி. 79.
கருப்பன் செட்டியார், அ. 21, 89.
கார்மேக்க் கோனர், ஆ. 78.
கார்லி, எப். இ. (Corley, F. E.), 71,
கிராம்பி, ஏ. டி., (Crombie, A. D.), 69.
கிருஷ்ண சர்மா, மு. 183.
கிருஷ்ணசாமி ஐயர், கே. வி. 1, 2, 43.
கிருஷ்ணமாச்சாரி, சை. 192.
கிருஷ்ணமாச்சாரியார், ஆர். வி. 193.
கிருஷ்ணமூர்த்தி ஐயர், 89.
கிருஷ்ணன், கே. ஜி. 21.
கிருஷ்ணஸ்வாமி, என். 76.
கிருஷ்ணையர், இ. 73.
குமாரசாமிப் பிள்ளை, கு. 180.
கோதண்டராமையர், சு. 142.
கோதண்டராமையர், டி. எஸ். 57.
கோவிந்த ராஜன், ரா. 186.
சண்முக தேசிக ஞானசம்பந்தபண்டார சந்நிதி, 73.
சண்முகம் பிள்ளை, அ. 154.
சத்தியமூர்த்தி, எஸ். 42, 90.
சதாசிவப்பண்டாரத்தார், டி. வி. 78.
சம்பந்த முதலியார், ப. 120.
சம்ஸ்தானாதிபதி, உடையார்பாளையம், 74.
சாம்பியன், ஹெச். (Champion, H.), 72.
சாமி ஐயர், அ. 21, 90.
சாமிநாத சர்மா, வெ. 21, 90.
சாமிநாத தேசிகர், பொன். 189.
சாரநாதையங்கார், வி. 90.
சாஸ்திரி, டி. வி. எஸ். 79.
சிதம்பரநாத செட்டியார், அ. 76.
சிதம்பரநாத முதலியார், டி. கே. 145.
சிதம்பரம் பிள்ளை, வ. உ. 173.
சிவத்தியாஞானந்தமஹரிஷி, 181.
சிவராமசேதுப் பிள்ளை, தி. 1, 2.
சிவோகம், ஆர். 73.
சின்னப்பாபிள்ளை, கா. மு. 59.
சீதாராமையர், 90.
சுடலைமுத்துப் பிள்ளை, வி. 187.
சுந்தரம், 90.
சுந்தரம் பிள்ளை, பி. 154
சுந்தரேச வாண்டையார், வை. 185.
சுந்தரேசையர், எம். எஸ். 189.
சுப்பிரமணிய ஐயர், கே. வி. 74.
சுப்பிரமணிய ஐயர், வி. மு., 183.
சுப்பிரமணிய சாஸ்திரிகள், ச. 70.
சுப்பிரமணிய சாஸ்திரிகள், டி. எஸ். 165.
சுப்பிரமணிய பிள்ளை, இ. மு. 80, 179.
சுப்பிரமணிய பிள்ளை, கா. 175.
சுப்பிரமணிய முதலியார், வெ. ப. 76, 128.
சுப்பையா முதலியார், பி. 78.
சூரியநாராயண சாஸ்திரியார், வி. கோ. 123.
சேஷ ஐயர், பி. வி. 75.

சேஷையர், கே. ஜி. 75, 125, 178.
சோமசுந்தரஞ் செட்டியார், மு. 21.
சோமசுந்தரத் தம்பிரான், 172, 193.
சோமசுந்தர பாரதியார், சே. 90, 135.
சோமசுந்தரன், எம். 190.
ஞானகுருபரன், ஆ. 21.
டேவிட் தேவதாஸ், 72.
தண்டபாணி தேசிகர், ச. 181.
தமிழ்ச்சேய், 159.
தமிழபிமானி, 170.
தமிழன், 23-4, 35.
தலைவர், ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ்ச்சங்கம், திருவனந்தபுரம், 90.
தலைவர், காசிமடம், திருப்பனந்தாள், 90.
தலைவர், சதாபிஷேகக் கொண்டாட்டக் கழகம், உத்தமதானபுரம், 90.
தலைவர், சதாபிஷேகக்கொண்டாட்டக் கழகம் திருவிடைமருதூர், 90.
தலைவர், சதாபிஷேகக்கொண்டாட்டம், பாபநாசம், 90.
தலைவர், ச. கொ. கழகம், ரங்கூன், 90.
தலைவர், சன்மார்க்கசபை, மேலைச்சிவபுரி, 90,
தலைவர், தமிழ்ச்சங்கம், மதுரை, 90.
தலைவர், மாணவர்கழகம், திருவெவ்வுளூர், 90.
திம்மப்பையர், ரா. 78.
திருகூடசுந்தரம், பொ. 21.
திருமலை ஐயங்கார், மாடபூசி, 38, 192.
திருவரங்க நீலாம்பிகை, 81.
திருவேங்கடாசாரி, என். டி. 79.
துரைசாமி ஐயர், வே. 162.
தேசிகாசாரியார், டி. 90.
நடேசையர், எப். ஜி. 71.
நாவலிம்ஹ ஐயர், எஸ். 81.
நல்லசிவன் பிள்ளை, சு. 177.
நவநீதகிருஷ்ண பாரதியார், 175.
நாராயண பிள்ளை, அ. 191.
நாராயணையங்கார், திரு. 19.
நாராயணையர், என். 71.
நாராயணையர், வே. 134.
பக்கிரிசுவாமி, பா. 184.
பஞ்சாபகேசன், தி. கி. கொ. 80, 118.
பத்மநாப ஐயர், டி. ஆர். 191.
பரமசிவ ஐயர், என். 79.
பரமசிவானந்தம், அ. மு. 160.
பலராமையர், ந. 178.
பழனியாண்டி பிள்ளை, கே. 65.
பழனிஸ்வாமி சிவாசாரியார், ஆ. 188.
பன்னிருகைப் பெருமாள் முதலியார், வி. 70, 90.
பாப்லி, ஹெச். (Popley, H.), 80.
பாலசுப்பிரமணிய முதலியார், ம. 123.
பூர்ணலிங்கம் பிள்ளை, 173.
பெரியசாமி முத்தையவுடையார், 183.
பொண்டேனியோ (Fontanieu), 152.
போப். ஜி. யூ. (The Rev. G. U. Pope), 152.
மாணவர்கள், மஹாஜன பாடசாலை, மேட்டுப்பாளையம், 192.
முத்துசாமி ஐயர், வே. 178.
முத்தைய முதலியார், எ. எஸ். 75.
முருகப்ப செட்டியார், அ. மு. ப. அ. மு. 76.
மோஸஸ், பி. எஸ். 21.
ரங்கநாத முதலியார், பூண்டி. 150.
ரமண சாஸ்திரிகள், வி. வி. 144.
ராகவன், கே. எஸ். 61.
ராமலிங்கம் செட்டியார், டி. எ. 75.
ராமஸ்வாமி சாஸ்திரி, கே. எஸ். 157.
ராஜகோபாலாசாரியார், சக்கரவர்த்தி. 39.
ராஜராஜேசுவரசேதுபதி, பா. 153.
ராஜன், பி. டி. 1, 2.
ராஜாங்கம் ஐயர், 90.
ராஜாராம் பாண்டியன், 90.
லேடி ராமநாதன் (Lady Ramanathan), 77.
வலிஷ்ட பாரதியார், 183.
வழிப்போக்கன், 32.
விசுவநாதையர், ஆர். 831, 165.
வியாச ராவ், கே. 54.
வின்ஸன், ஜே. 151.
வீரபாகு, சி. 182.
வேங்கடசாமி நாட்டார், ந. மு. 77, 132.
வேங்கடரத்னம், ஆர். 77, 81, 90.
வேங்கடராமன், எஸ். ஆர். 34.
வேங்கடராமையர், ஊ. சா. 27, 179.
வேதாசலம், சுவாமி, 69.
வையாபுரிப் பிள்ளை, எஸ். 1, 2, 51, 148.
ஜகந்நாத ஐயர், கி. வா. 33, 48, 185-6.
ஜம்புலிங்கக் குருக்கள், மா. 182.
ஜமீன்தார், பாளையம்பட்டி, 71.
ஸ்ரீநிவாச ராவ், எஸ். பி. 80.
ஸ்ரீநிவாசையங்கார், கே. ஆர். 74.
ஸ்ரீநிவாசையங்கார், டி. வி. 90.
ஸ்ரீநிவாசையங்கார், வி. வி. 40.
ஸ்ரீநிவாசையர், எல். 180.
ஷண்முக ராஜேசுவர சேதுபதி, 90.
ஸ்வாமிநாதன், கே. 132.
ஸ்வாமிநாதையர், டி. எஸ். 73.
ஸ்வாமிநாதையர், ஆர். 69.
ஹரி ராவ், 194.
ஹரிஹரையர் சு. 80, 177.
ஹென்ஸ்மன், ஜே. எம். 145.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

ஊ

திருத்தணிகேசன் துணை

பிரம்மஶ்ரீ

மகாமகோபாத்தியாய திராவிட வித்யா பூஷண

தாக்ஷிணாத்ய கலாநிதி

டாக்டர்

உ. வே. சாமிநாதையரவர்களது

சதாபிஷேக முகூர்த்தத்தில்

சென்னை, ரிஜிஸ்ட்ரார் ஜெனரல் ஆபீஸ் பர்ஸனல் அஸிஸ்டண்டு,

ஶ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை யவர்கள், எம்.ஏ., பாடியது

6—3—1935

I

முன்னமோர் சாமி நாதர் முன்னுறு பொடியி னின்றும்
பன்னரும் நலங்கள் கொள்பூம் பாவையொன் றெழுப்ப இந்நாள்
பொன்னிகர் சாமி நாதர் புல்லேட்டுப் பொடியி னின்றும்
கன்னலஞ் சுவைத்தேம் பாவை கணக்கில எழுப்பி னரே.

II

பாமிளட் குகந்த சங்கப் பாடல்நூல் எங்கே? இந்தப்
பூமிசேர் சிவனூர் கோயிற் புராணநூல் வகைகள் எங்கே?
தோமிலாச் சொன்மீ னுகூஷி சுந்தரன் சரிதம் எங்கே?
சாமிநா தப்பேர்ச் செம்மல் தரணியிற் ரோன்றி லாரேல்.

III

வர்நிறை சங்கநூ லாதிய நூல்பல இங்குதவிப்
பேர்நிறை நம்பி தமிழ்த்தொண்ட ராணி பிறங்குபுகழ்த்
தார்நிறை டாக்டர் மஹாமஹோ பாத்திய சாமிநாதர்
பார்நிறை வாழ்வுபல் லாண்டிற ஈசற் பணிகுவமே.

292, லிங்கசெட்டித் தெரு,
சென்னை,
6—3—1935.

வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம்.ஏ.

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி

டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களுடைய

பதிப்புக்கள்

		ரூ.	அ.	பை.
	வசனபுத்தகங்கள்			
1.	ஸ்ரீமீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் முதற் பாகம் ...	2	0	0
2.	ஷ இரண்டாம் பாகம் ...	2	0	0
3.	புத்தசரித்திரம், பௌத்ததருமம், பௌத்தசங்கம் ...	0	12	0
4.	மணிமேகலைக் கதைச் சுருக்கம் ...	0	10	0
5.	உதயணன் சரித்திரம் ...	1	0	0
6.	நான் கண்டதும் கேட்டதும் ...	0	6	0
	பரணிகள்			
1.	தக்கயாகப்பரணி-பழைய உரையுடன் ...	4	0	0
2.	பாசவதைப்பரணி-குறிப்புரையுடன் ...	0	12	0
	உலாக்கள்			
1.	திருக்காளத்திநாதருலா ..	0	5	0
2.	திருப்பூவணநாதருலா ..	0	5	0
3.	தேவையுலா ...	0	4	0
4.	சங்கரலிங்க உலா	0	6	0
5.	மதுரைச் சொக்கநாதருலா ...	0	6	0
6.	கடம்பர் கோயில் உலா ...	0	6	0
7.	திருஇலஞ்சி முருகன் உலா ...	0	5	0
	கோவைகள்			
1.	திருவாவடுதுறைக் கோவை ...	0	10	0
2.	பழமலைக் கோவை ...	0	10	0
3.	கலைசைக் கோவை ...	0	12	0
	மும்மணிக் கோவைகள்			
1.	மதுரைச் சொக்கநாதர் மும்மணிக் கோவை ...	0	5	0
2.	வலிவல மும்மணிக்கோவை ...	0	5	0
	தூதுகள்			
1.	மதுரைச் சொக்கநாதர் தமிழ்விடுதூது ...	0	5	0
2.	கச்சி ஆனந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது ...	0	8	0
3.	பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது	0	4	0
4.	மான்விடுதூது ...	0	6	0
	அந்தாதிகள்			
1.	திருமயிலைத்திரிபந்தாதி ...	0	5	0
2.	திருமயிலையமக அந்தாதி (பழைய உரையுடன்) ...	0	6	0
3.	சங்கரநயினார் கோயில் அந்தாதி ...	0	6	0
	மற்றப்பிரபந்தங்கள்			
1.	திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் ...	0	4	0
2.	திருக்கழுக்குன்றச் சிலேடைவெண்பா ...	0	4	0
3.	பழனிப்பின்னைத்தமிழ் ..	0	3	0
4.	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தத்திரட்டு ...	2	8	0
5.	ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு ...	5	10	0

இடைக்குமிடம் :—

'தியாகராஜவிலாஸம்', திருவல்லிக்கேணி.